ஜெயமோகன்



# வெள்ளையானை



# வெள்ளையானை

# வெள்ளையானை

ஜெயமோகன்

EBOOK BY BIBLIOPHILE

எழுத்து
2014

E Z H U T H U
Siron Cottage # 1, Jonespuram 1st Street, Pasumalai, Madurai - 625 004.
Cell : +91 90479 20190 E-mail : ezhuthu2006@gmail.com
Website : www.ezhuthu.net

ezhuthu 2014

Vellai Yaanai
(A Novel in Tamil)

by
Jeyamohan

Wrapper Painting and Side-paper Drawing
Ramachandran.P

Illustrated by
Ismena R.Warren
(The Story of Fort St. George by Col. D.M.Reid )

Great famine photograph by
W. W. Hooper

First Published 2013
Reprint 2014

©Author

Printed in India at
Golden Lotus - 600 001

ISBN : 81-904254-7-1

₹ 400 /- US $ 20

பி. கெ. பாலகிருஷ்ணன்
அவர்களுக்கு

## பதிப்புரை

"இதுவரை சொல்லப்படாத தமிழகத்தின் மற்றுமொரு வரலாறு" என்ற அறிமுகத்துடன் 'தலித் வரலாற்று நூல் வரிசை' நூல்களை 2009ஆம் ஆண்டில் வெளியிட்டோம். இதன் தொடர்ச்சியாக வெள்ளையானை நாவல் வெளிவருவது தற்செயலான நிகழ்வுதான். மதராசப்பட்டினத்தைப் பற்றி வெளிவந்துள்ள நாவல்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு சொற்பமானவைதான். அப்படைப்புகளும் மதராசப்பட்டினத்தைப் பற்றிய வழமையான சார்புநிலை கொண்ட ஒற்றைச் சித்திரத்தையே முன்வைத்துள்ளன. மதராசப்பட்டினத்தைப் பற்றி இதுவரை சொல்லப்படாத இருண்ட பகுதிகளைப் படம்பிடித்து முதன்முறையாக வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது வெள்ளையானை. வாசகர்களுக்கு இது முற்றிலும் புதியதொரு அனுபவத்தை அளிக்கும்.

மதராசப்பட்டினத்தின் ஆன்மாவாகத் திகழும் அடித்தட்டு உழைக்கும் மக்களைப் பற்றியும் அவர்களது வாழ்விடமான கருப்பர் நகரம் என்றழைக்கப்படும் பிளாக்டவுன் பற்றியும் பேசும் முதல் படைப்பிலக்கியம் வெள்ளையானை. செயின்ட் ஜார்ஜ் கோட்டை அன்றைய சென்னையை வெள்ளையர் நகரம் என்றும் கருப்பர் நகரம் என்றும் இரண்டு பகுதியாகப் பிரித்தது. கோட்டைக்குள்ளும் கோட்டைக்கு வெளியிலும் வெள்ளையர்கள் மட்டும் வாழ்ந்த பகுதி வெள்ளையர் நகரம் (Whites Town) என அழைக்கப்பட்டது. வெள்ளையர்களுக்கு வீட்டுவேலை, தோட்ட வேலை, பட்லர், குதிரை பராமரிப்பு, துணிவெளுப்பது, துப்புரவுப்பணி இன்னபிற குற்றேவல் பணிபுரிந்த வேலையாட்கள், படையணி

காவலர்கள் போன்றோரும் டச்சு, போர்ச்சுகீசிய, வேலையாட்களும் குடியிருந்த பகுதியே கருப்பர் நகரம் (Black Town) இது 'பெரும் பறச்சேரி' எனவும் அழைக்கப்பட்டது. இன்றைய சென்னை நகரின் ஜார்ஜ் டவுன், உயர்நீதிமன்றம், பிராட்வே போன்ற பகுதிகளே அன்றைய பிளாக்டவுன்.

தமிழக வரலாறு குறித்த பதிவுகளைக் கண்டடைவதில் பாதுகாப்பதில் அக்கறை அதிகரித்துவரும் இந்நாட்களில் 1876-1878 ஆண்டைய மதராஸ் பெரும் பஞ்சத்தைப் பற்றி அப்பஞ்சத்தில் இறந்துபோன பல இலட்சம் மக்களைப்பற்றிய வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்கு இந்நாவல் ஒரு தூண்டு தலாக அமையும். 135 ஆண்டுகளே கடந்து போன நிலையில் இறந்துபோன மக்களைப் பற்றியோ அல்லது பெரும் பஞ்சத்தின் தாக்கத்தைப் பற்றியோ எந்த நினைவுகளும் எம்மிடம் இல்லை. இந்தக் கொடும்பஞ்சத்தைப் பற்றி வெளி வந்துள்ள பதிவுகளும் அடித்தட்டு மக்களால் பாடல்களாக எழுதப்பட்டு பின்னர் பெரிய எழுத்து நூல்களாக வெளிவந்த 'குஜிலி பாடல்கள்' மட்டுமே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கொடும் பஞ்சங்களில், கொள்ளை நோய்களில் அழிந்து போன மக்களில் பெரும்பகுதியினர் ஒடுக்கப்பட்ட மக்கள் என்பதனாலேயே இவற்றைப் பற்றிய பதிவுகள் இல்லாமலாகி விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. நம் எழுத்தாளர் களிடம் ஆழமாகப் பதிந்துள்ள சுயசாதி விருப்பு, சுயசாதி பெருமிதம் காரணமாக இருக்கலாம். தமிழில் ஆகச்சிறந்த படைப்புகள் அனைத்தும் ஒரு வகையில் சுயசாதி பெருமிதத்தை வியந்தோதும் படைப்புகளாகவே உள்ளன. இதைக் குறித்த குறைந்த அளவிலான கூச்ச உணர்வின்றியே நம் படைப்பாளிகள் வாழ்ந்து வருகின்றனர். சக மனிதனைக் குறித்த அக்கறையின்மை யின் வெளிப்பாடாகவே அன்றிலிருந்து அண்மை நிகழ்வுகள் வரை இது நீடித்து வருகின்றது. இச்சூழலில் *வெள்ளையானை* ஏகாதிபத்திய சுரண்டலை ஒடுக்கப்பட்டவர் நிலையிலிருந்து வரைந்து காட்டுகிறது.

ஏய்டனிடம் காத்தவராயன் பேசும்போது, "ஆமாம் சார். நீங்கள் அளித்த வேலைகளுக்காக நாங்கள் நன்றியுடன்

இருக்கிறோம். உங்கள் செருப்புகளைத் தைக்கவும் உங்கள் வார்களைப் பாலீஷ் போடவும் கொடுக்கப்பட்ட வாய்ப்பு களுக்காக நன்றியுடன் இருக்கிறோம். உங்களுக்காக போர்க் களங்களில் சாகும் வாய்ப்பை அளித்தமைக்காகவும் உங்களுடைய ரகசிய நோய்களை எங்கள் உடலில் சுமக்கச் செய்தமைக்காகவும் நன்றியுடன் இருக்கிறோம். அதேபோல நீங்கள் எங்களுக்கு அளித்த இந்தப் பஞ்சங்களுக்காகவும் உங்களுக்கு நன்றி சொல்கிறோம். ஏனென்றால், அத்தனைக்கும் மேலாக நீங்கள் எங்களுக்கு உங்களுடைய கல்வியில் ஒரு துளியை கொடுத்தீர்கள். உங்களுடைய மொழியில் ஒரு வாசலைத் திறந்து வெளியுலகத்தைக் காட்டினீர்கள். எங்களுக்கும் மானுடநீதி கிடைக்க வாய்ப்புண்டு என்று எங்களிடம் முதன்முதலாகச் சொன்னீர்கள். நாங்களும் மனிதர்களே என்று உங்களில் சிலரேனும் நடந்து கொண் டீர்கள். ஆகவே, உங்களுடைய எல்லா சுயநல நோக்கங்க ளுடனும், அயோக்கியத்தனங்களுடனும், தந்திரங்களுடனும், கொடுமைகளுடனும்கூட நீங்கள் மானுடதெய்வங்கள்தான். அதற்காக எங்கள் தலைமுறைகள் உங்களுக்கு நன்றியுடன் இருக்கும்." என்று குறிப்பிடுகிற இதே கூற்றுப்படியேதான் இன்றும் எம்மக்கள் உள்ளனர். எங்களை இந்த இழிநிலையி லிருந்து மீட்பதற்கு ஒரு இரட்சகன் வரமாட்டானா என்ற ஏக்கப்பெருமூச்சு இத்தேசத்தின் சேரி எங்கும் நிறைந்து கிடக்கிறது. 'எங்களுடன் வாழும் சகமனிதர்கள் எங்களை மனிதர்களாகவே மதிப்பதில்லை' என்ற காத்தவராயனின் கூற்று இன்றும் உண்மையாகவே நிலைத்திருக்கிறது.

*வெள்ளையானையின்* கதை மாந்தர்களான கருப்பர்கள் வரலாற்றில் முதல்முறையாக ஆதிக்க சக்திகளுக்கு எதிராக உயர்த்திய உரிமைக்குரல் இன்றும் இத்தேசமெங்கும் பல்வேறு ஒடுக்குமுறைக்கு ஆட்பட்டு அடிமைப்பட்டு வாழும் ஒவ்வொரு வருக்கும் தங்கள் விடுதலைக்கான குரலை ஓங்கி ஒலிப்பதற்கு உந்துசக்தியை அளிக்கும் என உறுதியாக நம்புகின்றேன்.

மதராஸ் பெரும் பஞ்சத்தைப் பற்றி அதன் தாக்கத்தைப் பற்றி உணர்ந்து கொள்வதற்கு 1878ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட

புகைப்படங்களும் ஓவியங்களும் சாட்சியாகத் திகழ்கின்றன. முகம் தெரியாத அந்த பிரிட்டிஷ் கலைஞர்களை நன்றியுடன் நினைவுகூர்கின்றோம்.

இந்நூலுக்கு மெய்ப்பு திருத்திய அண்மையில் மறைந்த அய்யா பரம்பை அறிவன், நண்பர் ராஜகோபாலன், பேராசிரியர் ராஜ் கௌதமன், முகப்போவியம் மற்றும் உள் அட்டை ஓவியங்கள் தீட்டிய ஓவியர் இராமச்சந்திரன், அழகுற அச்சிட்ட அச்சகத்தினர் அனைவருக்கும் நன்றி.

ஜெயமோகனின் 'நூறுநாற்காலிகள்' நெடுங்கதையை 2011ஆம் ஆண்டு வெளியிட்டோம். இதனைத் தொடர்ந்து *வெள்ளையானை* நாவலை வெளியிடுகின்றோம்.

*வெள்ளையானை* நாவலை வெளியிட வாய்ப்பளித்த எழுத்தாளர் ஜெயமோகன் அவர்களுக்கு எம் நன்றி.

பசுமலை

மதுரை

அன்புடன்

வே. அலெக்ஸ்.

## முதல் எதிர்க்குரல்

இந்த நாவலுக்கான கருவை அளித்தவர் இருவர். முதல்வர், திரு.வி. கல்யாணசுந்தரனார். அவரது சுயசரிதையில் இந்தியாவில் நடந்த முதல் தொழிலாளர் வேலைநிறுத்தமான பின்னி ஆலை வேலைநிறுத்தம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகமெங்கும் தொழிற்சங்க இயக்கம் ஆரம்பித்தது. இந்தியாவில் அமைந்த முதல் தொழிற்சங்கம் 1890ல் அமைந்த மும்பை மில்ஹண்ட்'ஸ் தொழிலாளர் அமைப்பு (Bombay Millhand's Association). 1905ல் கல்கத்தா அச்சகத் தொழிலாளர் சங்கம் அமைந்தது (Printers' Union formed in Calcutta). 1907ல் மும்பை தபால் ஊழியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து பல தொழிற்சங்கங்கள் அங்கிங்காக உருப்பெற்றன. அவற்றின் ஒட்டுமொத்த விளைவாக அகில இந்தியத் தொழிற் சங்கக் கூட்டமைப்பு (All India Trade Union Congress) உருப்பெற்றதுடன் இந்திய அளவில் தொழிற்சங்க இயக்கம் உருவாகியது.

மும்பைத் தொழிற்சங்க இயக்கத்தால் தூண்டப்பட்ட பி.பி.வாடியா சென்னைவந்து இங்கே தொழிற்சங்க இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க முயன்றார். சென்னையின் முக்கியமான சைவப்பேச்சாளரும் சீர்திருத்தவாதியுமான திரு. வி. கல்யாண சுந்தரனார் அவருடன் இணைந்தார். அன்றைய தலித் இயக்கத் திலும் நவபௌத்த இயக்கத்திலும் தீவிரமாகச் செயல்பட்டுவந்த சிங்காரவேலு செட்டியார் அவருடன் சேர்ந்தார். இவர்களுடன் சர்க்கரைச் செட்டியாரும் இணைந்து கொள்ள சென்னையில் 1918ல் சென்னைத் தொழிலாளர் சங்கம் (Madras Workers Union) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின்கீழ்

திரட்டப்பட்டவர்கள் அன்று சென்னையை மையமாகக் கொண்டு இயங்கிய இருபெரும் நூற்பு மற்றும் நெசவாலைத் தொழிலாளர்கள்.

ஜான் டெஃப் பின்னி (John Deaf Binny) என்கிற ஆங்கிலேயர், ராபர்ட் டென்னிஸன் (Robert Dennison) என்ற பங்குதாரருடன் சேர்ந்து 1799 இல் பின்னி அன்ட் டென்னிஸன் கம்பெனி என்ற பெயரில் ஒரு நூற்பாலையை ஆரம்பித்தார். 1812 ல் இது பின்னி அன்ட் கோ வாக மாறியது. தொடக்கத்தில் சிறிய ஆலையாகவே இது இருந்தது. 1870களின் பெரும்பஞ்சகாலத்தில் பல்லாயிரம் பட்டினி அகதிகள் சென்னைநகரை முற்றுகையிட்டபோது மிகமிகக்குறைந்த கூலிக்கு ஏராளமான தொழிலாளர் கிடைத்தனர். அவர்களைக்கொண்டு தொழில் நடத்துவது லண்டனில் ஆலை நடத்துவதை விட பலமடங்கு லாபம் அளித்தது. விளைவாக பின்னி மில் நிறுவனம் சட்டென்று பிரம்மாண்டமாக வளர்ந்தது. 1870யில் பக்கிங்ஹாம் (Buckingham), கர்நாடிக் (Carnatic) என்ற பெயர்களில் இரு பஞ்சாலைகள் பெரம்பூரில் நிறுவப்பட்டன.

இந்த நூற்பு நெசவு ஆலைகளில் பணிச்சூழல் கற்பனைக் கும் அப்பாற்பட்டதாக இருந்தது. கங்காணி அடிமைமுறை நிலவியது. மிகமிகக் குறைந்த ஊதியம். சிறுவர்கள், பெண் களுடன் குடும்பமே ஆலைகளில் வேலைசெய்தால்கூட பட்டினி நீங்காத நிலை. மிக மோசமான பணிச்சூழலில் தொழிலாளர் இறப்புவிகிதமும் அதிகம். இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர் களைக் கொஞ்சம் கொஞ்சமாக அணிதிரட்டிய சென்னை தொழிலாளர் சங்கம் அவர்களின் உரிமைக்காகப் போராட ஆரம்பித்தது.

இந்திய அளவில் பிற தொழிற்சங்கங்கள் சிறிய அளவி லான உரிமைகளுக்காக முதலாளிகளுடன் பேரம் பேசுவதி லேயே குறியாக இருந்தபோது சென்னைத் தொழிளாளர் சங்கம் 1921ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் தேதி வேலைநிறுத்தம் ஒன்றை அறிவித்தது. இந்தியாவின் முதல் தொழிற்சங்க வேலை நிறுத்தம் என்று இந்தப் போராட்டம் கருதப்படுகிறது.

தமிழக அரசியலில் உள்ள முக்கியமான அரசியல் முரண்பாடு ஒன்று வெளித்தெரிந்த ஒரு சந்தர்ப்பம் இந்தப்

போராட்டம். அதைப்பற்றி இங்கே அதிகம் பேசப்பட்டதில்லை, அல்லது ஒருதலைபட்சமாக, வரலாற்றுப் புரிதலின்மையுடன் பேசப்பட்டுள்ளது. பின்னி ஆலை வேலை நிறுத்தத்தை அன்றைய காங்கிரசும், நீதிக்கட்சியும், இடதுசாரிகளும் ஆதரித்தார்கள். ஆனால் தலித் தலைவராக இருந்த எம்.சி.ராஜா தலித்மக்கள் அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று அறிவித்தார். பிரிட்டிஷ் அரசின் கோரிக்கைக்கு ஏற்பவே எம்.சி.ராஜா அப்படி அறிவித்ததாகச் சொல்லப்பட்டது.

பின்னி ஆலைத் தொழிலாளர்களில் பாதிக்கும் மேலானவர்கள் தலித்மக்கள். பிறர் இடைநிலைச்சாதியினரும் முஸ்லீம்களும். போராட்டத்தில் தலித்மக்கள் வேலைக்குச் செல்ல அதை பிற ஊழியர்கள் தடுத்தனர். தலித்மக்களுக்கு போலீஸ் காவல் அளிக்கப்பட்டது. இடைநிலைச்சாதியினர் கல்வீசி கலவரத்தில் இறங்கினர். போலீஸ் அவர்களைத் தாக்கியதில் இடைநிலைச் சாதியைச்சேர்ந்த ஏழுபேர் இறந்தனர்.

சென்னைத் தொழிலாளர் நடுவே ஏற்கெனவே கடுமையான தீண்டாமையும் சாதிய ஒதுக்குதலும் இருந்தது. இந்த நிகழ்வு அவ்வெறுப்பைப் பற்றவைத்தது. பின்னி ஆலைத் தொழிலாளர் களில் உள்ள தலித்மக்கள் பிறரிடமிருந்து ஒதுக்கப்பட்டதால் தனியாகவே குடியிருப்புகள் அமைத்திருந்தனர். அப்படிப்பட்ட குடியிருப்புகளில் ஒன்று புளியந்தோப்பு. அது 1870களின் பெரும்பஞ்சத்தில் குடிபெயர்ந்து வந்த தலித் மக்கள் கூட்டம் கூட்டமாகக் குடியேறிய இடம். இடைநிலைச்சாதியினர் புளியந்தோப்பு குடியிருப்பு மீது தாக்குதல் தொடுத்தனர். நூற்றுக்குமேல் குடிசைகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. ஏராளமானவர்கள் இறந்தனர். அவர்களின் எண்ணிக்கை கடைசிவரை உறுதிப்படுத்தப்படவில்லை. 'புளியந்தோப்புக் கலவரம்' என்று அதற்குப்பெயர். அதைப்பற்றி திரு.வி.க. விரிவாக அவரது சுயசரிதையில் எழுதியிருக்கிறார்.

இந்திய வரலாற்றில் முதல்முறையாக, தலித் மக்கள் திருப்பித் தாக்கினர். பெரம்பூரில் உள்ள பின்னி ஆலை ஊழியர் களின் குடியிருப்புகள் மீது தலித் குழுக்கள் பதில்தாக்குதல்

நடத்தினர். புளியந்தோப்பிலும் சுற்றுப் பகுதிகளிலும் கடுமையான காவல் போடப்பட்டது.

காங்கிரஸும் நீதிக்கட்சியும் பின்னி ஆலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தைத் தீவிரமாக ஆதரித்தனர். நீதிக்கட்சியின் தலைவர் பிட்டி தியாகராயச் செட்டியார் சென்னை தலித் குடியேறிகளால் சூழப்பட்டு விட்டது என்றும் அவர்களைச் சென்னை மாநகர எல்லைக்கு வெளியே குடியமர்த்த வேண்டுமென்றும் கோரினார். தலித்மக்கள் ஒரே இடத்தில் திரளாக வசிக்க அனுமதிக்கக் கூடாது என்றும் அவர்களைப் பிரித்து சிறுசிறு சேரிகளாகக் குடியமர்த்த வேண்டும் என்றும் ஆலோசனை சொன்னார். எல்லா நீதிக் கட்சியினரும் தலித்மக்களுக்கு எதிராக கடுமையான கருத்துச் சொன்னார்கள்.

காங்கிரஸ் தலைவர்கள் பொதுவாக தலித்விரோத உணர்ச்சிகள் கொண்டிருந்தார்கள் என்று ஊகிக்க இடமுள்ளது. ஆனால் காந்தி பின்னி ஆலைத் தொழிலாளர் நடுவே ஆற்றிய உரையில் (The Hindu, 17-9-1921)

"தங்கள் சகோதரர்களில் ஒரே ஒருவருக்கு எதிராகவும் தாமே வன்முறையைப் பயன்படுத்துவதைவிட தொழிலாளர்களின் முனைப்பில் தொய்வு ஏற்படுத்தும் நடவடிக்கை வேறு எதுவும் கிடையாது. ஒரு சிலர் தவறான முடிவெடுக்கிறார்கள் என்பது உங்கள் கருத்தாக இருந்தாலும், நம்மில் தாழ்ந்தவனுக்கும், குறைவான எண்ணிக்கையில் இருப்பவர்களுக்கும் கூட சுதந்திரமாக முடிவெடுத்து செயல்படுத்தும் உரிமை அளிக்கப்பட வேண்டும்.

இந்த 3000 சகோதரர்களுக்கும் நீங்கள் எந்த இடையூறும் செய்யக் கூடாது, அவர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களிடம் நீங்கள் அன்பு காட்ட வேண்டும் என்றும்கூட நான் வலியுறுத்துகிறேன். எப்படியானாலும் அவர்களைக் கடுஞ்சொற்களால் வையக் கூடாது. அவர்களிடம் சென்று பணியில் சேரக்கூடாது என்று வற்புறுத்தவும் வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்." என்று அழுத்தமாக வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோள் செவிகொள்ளப்படவில்லை. அன்று தமிழக அரசியலில் நீதிக்கட்சியே வலுவாக இருந்தது. இந்திய அரசியலில் காந்தியின் இடம் அன்று வலுவாக உறுதிப்படுத்தப் படவில்லை என்பதையும் பின்னாளில் அவரது ஆயுதமாக விளங்கிய அகிம்சைப் போராளிகளான சத்யாக்கிரகத் தொண்டர்களின் அணி அப்போது உருவாக்கப்படவில்லை என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

ஆங்கில ஆட்சிதான் சென்னையில் நீடித்தது என்றாலும் நீதிக்கட்சியினர் தலித்மக்களைப் பெரும்பாலும் சென்னையின் மையத்தில் இருந்து வெளியேற்றுவதில் வெற்றிபெற்றார்கள். புளியந்தோப்பு தலித் குடியிருப்பு முழுமையாகவே காலி செய்யப்பட்டது. அங்கே முஸ்லீம்களைக் குடியேற்றுவது வழியாக இது நிகழ்த்தப்பட்டது. இன்று அது ஒரு முஸ்லீம் குடியிருப்பு.

இந்தத் தகவல்களை விரிவாக யூஜின் இர்ஷிக் (Eugene F. Irshick) எழுதிய 'தென்னிந்தியாவில் அரசியல், சமூக மோதல்: பிராமணர் அல்லாதார் இயக்கமும் தமிழ் பிரிவினை வாதமும் *1916-1929* (Politics and Social Conflict: in South India: Non Brahmin Movement and Tamil Separatism 1916-1929, University of California )' என்ற புகழ்பெற்ற நூலிலும் அதையொட்டி ஆ. சிவசுப்ரமணியம் - ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதிய 'பின்னி ஆலை வேலைநிறுத்தம் *1921*'(பொன்னி, சென்னை : *1990*) என்ற நூலிலும் காணலாம்.

தலித் அரசியலும் தமிழ்த்தேசியம் அல்லது திராவிடத் தேசிய அரசியலும் கொள்ளும் முரண்பாடு அதன் ஆரம்பப் புள்ளியிலேயே இவ்வாறு வலுவாக வெளிப்பட்டுவிட்ட போதிலும் பிற்காலத்தில் இச்செய்திகள் பலவாறாகத் திரிக்கப்பட்டும் மறுவிளக்கம் அளிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் அம் முரண்பாடு மழுங்கடிக்கப்பட்டது.

இந்த விஷயத்தில் எம்.சி.ராஜா ஆங்கிலேயரின் அடிவருடியாகவும் துரோகியாகவும் சித்திரிக்கப்பட்டார். ஆனால் அன்று வரையிலும் பிறகும்கூட நீதிக்கட்சியினர் உறுதியான பிரிட்டிஷ் ஆதரவாளர்கள் என்பதையும், எம்.சி.ராஜாவேகூட நீதிக்

கட்சியில் பணியாற்றியவர் என்பதையும் கருத்தில் கொண்டால் பல குழப்பங்கள் வருகின்றன. அன்றைய அரசியல்சூழலில் மறைக்கப்பட்ட சில விஷயங்களைக் கருத்தில்கொண்டால் மட்டுமே நாம் எம்.சி.ராஜாவைப் புரிந்துகொள்ளமுடியும்.

தொண்ணூறுகளில் வெளியான ஆ. சிவசுப்ரமணியம் - ஆ.இரா. வேங்கடாசலபதி ஆகியோரின் நூல் என் கவனத்திற்கு வந்தது. காலச்சுவடு இதழில் சுந்தர ராமசாமி அதற்கு எழுதிய ஒரு பாராட்டு மதிப்புரையே காரணம். அந்நூலை வாசித்தபின் நானும் எம்.சி.ராஜா பற்றிப் பரவலாக இருந்த எதிர்மறை எண்ணத்தையே கொண்டிருந்தேன். அப்போதுதான் 1997ல் சென்னையில் தலித் ஆய்வாளரான அன்பு பொன்னோவியம் அவர்களைச் சந்தித்தேன். உண்மையில் சென்னையில் அன்றிருந்த அரசியல் சூழலைப் பற்றிய உண்மையான, அனேகமாக மறைக்கப்பட்ட ஒரு சித்திரத்தை அவர் வழியாக அறிந்தேன். என்னைப் பொறுத்தவரை அது ஒரு பெரிய திறப்பு.

சென்னையை மையமாகக் கொண்டு உருவான முதல் அரசியலியக்கம் என்பது உண்மையில் தலித் அரசியலே. கர்னல் ஆல்காட்டின் முயற்சியால் தலித் கல்விக்கான இயக்கமாக அது ஆரம்பித்தது. ஆல்காட் தலித் சிந்தனையாளர்களை ஒருங்கிணைக்கவும் அது ஒரு சீர்திருத்த - போராட்ட இயக்கமாக மாறவும் முன்முயற்சி எடுத்தார். இரட்டைமலை சீனிவாசன், அயோத்திதாசர் போன்றவர்கள் தலித் அரசியலின் முகங்களாகப் பிற்பாடு உருவாகி வந்தனர்.

ஆனால் ஆல்காட்டின் வருகைக்கு முன்னதாகவே, 1870களின் தொடக்கத்திலேயே, தலித் உரிமைக்கான குரல் சென்னையில் ஆங்காங்கே உருவாக ஆரம்பித்திருந்தது என்றார் அன்பு பொன்னோவியம். அதற்கான அடிப்படைச் சிந்தனை களை உருவாக்கியவர்கள் என பதினைந்துக்கும் மேற்பட்ட வர்களை அன்பு பொன்னோவியம் குறிப்பிட்டார். இரட்டைமலை சீனிவாசன், அயோத்திதாசர் போன்றவர் களுக்கே அவர்கள்தான் வழிகாட்டிகள்.

அந்த அரசியல் உருவாவதற்கான சூழல் சென்னையில் அமைந்தது. கூட்டம் கூட்டமாகத் தலித்மக்கள் சென்னையில்

குடியேறி சேரிகளில் வாழ ஆரம்பித்தனர். அவர்களுக்கு பிரிட்டிஷ் அரசு சார்ந்த அமைப்புகளில் பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. விளைவாகக் கல்வியும் கிடைத்தது. ஆகவே உரிமை களைப் பற்றிய விழிப்புணர்வு உருவானது. கூடவே இன்னொன்றும் உண்டு. 1870களின் பெரும் பஞ்சங்களில் தலித் மக்கள் லட்சக்கணக்கில் செத்துக்குவிந்தபோது ஒட்டுமொத்த இந்திய சமூகமே அவர்களைக் கைவிட்டது என்ற கோபமும் ஆத்திரமும் அவர்களிடம் இருந்தது.

பின்னர் காங்கிரஸ், நீதிக்கட்சி அரசியல்கள் உருவாகி வந்தன. தலித் அரசியல் சென்னைக்கு வெளியே செல்ல முடிய வில்லை. ஆகவே அது மெல்ல பின்னடைவுபெற்றுப் படிப்படியாகத் தனியடையாளத்தை இழந்து பிற அரசியல்களுடன் இணைந்து கொண்டது. காலப்போக்கில் அப்படி ஒரு அரசியலியக்கம் இருந்ததே மறக்கப்பட்டது. கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டு கழித்து மீண்டும் தமிழகத்தில் தலித் அரசியல் தலையெடுத்த போதுதான் அவ்வரசியலின் முன்னோடிகள் மீண்டும் சமூகநினைவுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

தலித் அரசியல் பிறசாதியினரின் அரசியலுக்கு எதிரான தாகவே இருந்தது. காங்கிரஸிலும் நீதிக்கட்சியிலும் பின்னர் திராவிட இயக்கத்திலும் அது முற்பட்டோர் பிற்படுத்தப் பட்டோர் அரசியலை விட்டு வெளியேதான் இருந்தது. பின்னி ஆலை வேலை நிறுத்தம் முழுக்க முழுக்க இடைநிலைச்சாதி அரசியலின் விளைவு. அந்த இடைநிலைச்சாதியினராலும் ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கு அவர்களைவிடப் பிரிட்டிஷாரே மேல் என்ற எண்ணம் இருந்தது. பின்னி மில்லின் வேலைச் சூழல் மிக மோசமாக இருந்தது, ஆனால் கிராமங்களில் இருந்த தலித்மக்களின் நிலை அதைவிட மோசமாக இருந்தது என்றார் தலித் ஆய்வாளரான அன்பு பொன்னோவியம்.

இந்நாவலுக்குக் கருவை அளித்த இரண்டாமவர் அவரே. இதற்கு விதையாக அமைந்த ஒரு விஷயத்தை அவர் இந்தவிவாதத்தின்போதுதான் சொன்னார். இந்தியாவின் முதல் தொழிற்சங்கப் போராட்டம் சென்னை ஐஸ்ஹவுஸ் தொழிலாளர்கள் நடத்தியதுதான் என்றார். 1878ல் ஐஸ் ஹவுஸின் கடைசி நாட்களில் நடந்த போராட்டம் முழுக்க

முழுக்க தலித்துக்களால் நடத்தப்பட்டது. அது இடைநிலைச் சாதி கங்காணிகளாலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களாலும் உயர்சாதி குத்தகைதாரர்களாலும் நசுக்கப்பட்டது என்றார். அதைப்பற்றி திரு. வி.க. ஓரிரு வரிகள் செவிவழிச்செய்தியாகக் கேட்டதைச் சொல்லியிருக்கிறார். மேலும் ஆவணங்களுக்காகத் தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னார் அன்பு பொன்னோவியம்.

அந்தப் போராட்டம் பற்றிய கசப்பான நினைவுகள்தான் எம்.சி.ராஜா போன்றவர்களை இடைநிலைச்சாதிகளின் போராட்டங்களில் இருந்து விலகி நிற்கச்செய்தது என்றார். பிரிட்டிஷ் ஆதரவாளர்களான ஜஸ்டிஸ் கட்சியினர் பின்னி ஆலை வேலை நிறுத்தத்தை ஆதரித்தது அவர்களின் சாதியடையாள அரசியலின் அடித்தளமான இடைநிலைச் சாதியினரின் போராட்டம் அது என்பதனால்தான்.

அதைப் புரிந்துகொள்ளாமல் எம்.சி.ராஜா தொழிலாளர் துரோகி என இடதுசாரிகள் குத்திய முத்திரை நீடித்துவருகிறது என்றார். அதை நீக்கும்படியாகத் தனது நூல் இருக்கும் என்றார். அயோத்திதாசர் உள்ளிட்ட தலித் தலைவர்கள் சிலர் அந்தப் போராட்டத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டிருக்கலாம் என்றும் சொன்னார். அந்நூல் எழுதப்பட்டதா என்று தெரியவில்லை.

அந்த முதல் உரிமைப் போராட்டத்தைக் கற்பனையில் விரிவாகச் சித்திரிக்கும் மன எழுச்சி ஒருமுறை நண்பர் வே. அலெக்ஸிடம் பேசிக்கொண்டிருக்கையில் எழுந்தது. அந்தக் காலகட்டத்தைக் கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்திருக்கிறேன். அந்த மனநிலைகளையும் அக்கால அரசியலையும் புனைவால் சென்று தொட்டிருக்கிறேன்.

உலகவரலாற்றின் மாபெரும் பஞ்சங்களில் ஒன்றால் இந்தியாவின் கால்வாசிப்பேர் செத்தொழிந்த காலம். ஏகாதிபத்தியத்தால் அம்மக்கள் அழித்தொழிக்கப்பட்டார்கள். மறுபக்கம் நம்முடைய நீதியுணர்ச்சியும் அவர்களைக் கைவிட்டதென்பதும் வரலாறே. நாம் அத்தனைபேரும் ஏதோ ஒருவகை

யில் அந்த அழிவுக்குக் கூட்டுப்பொறுப்பேற்றாக வேண்டும். இந்நாவல் ஒருவகையில் அனைவரையும் அந்தக் கூண்டில் நிறுத்துகிறது. எங்கே நம் நீதியுணர்ச்சியை நாம் இழந்தோம் என இன்றாவது மறுபரிசீலனைச் செய்துகொள்ள வேண்டும். வரலாற்றில் அணையாது கிடக்கும் அந்த அனல்மீது நம் சமாளிப்புகளையும் வெட்டித்தர்க்கங்களையும் அள்ளிப் போட்டு மூடிவிடக்கூடாது.

அதற்கு அப்பால் இது முதல் உரிமைக்குரலின், ஒடுக்கும் வரலாற்றுக்கு எதிராக எழுந்த அடிமையின் முதல் முஷ்டியின் கதையும் கூட..

இதை வெளியிடும் வே. அலெக்ஸ் அவர்களுக்கு நன்றி.

அடித்தள மக்கள் எழுச்சியின்மீது பெரும்காதல் கொண்டிருந்த, வாழ்நாளெல்லாம் அதையே எழுதிய என் ஆசான் பி.கெ.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு இந்நாவலை சமர்ப்பணம் செய்வதில் பெருமிதம் கொள்கிறேன்.

- ஜெயமோகன்

*93, சாரதா நகர்*
*பார்வதிபுரம்*
*நாகர்கோயில் - 629 003*

jeyamohan.writer@gmail.com
www.jeyamohan.in




Shopping in Blacktown 1814



Tower of St. Mary's Church






Madras Infantry (Officers in Full Dress)





Sunset Alley—1860



தூரத்தில் ஓர் அசைவைக் கண்டதும் ஏய்டன் பைர்ன் அனிச்சையாக எச்சரிக்கை கொண்டான். ஒரு கணத்தில் வலக்கை துப்பாக்கியை நாட இடக்கை சேணத்தை இழுக்க, கால்கள் குதிரையின் விலாவில் அணைந்தன. மறுகணம் அவன் இருக்குமிடத்தை உணர்ந்து இலகுவாகி புன்னகை புரிந்தான். 1878-ல் மாட்சிமை தங்கிய விக்டோரியா ராணியின் முடியரசில் மதராசப்பட்டனத்தின் வெள்ளை நகரத்தில் புனித ஜார்ஜ் கோட்டைக்கு அருகே அவன் எதிர்பார்க்கக்கூடிய அபாயம் ஏதுமில்லை.

ஏய்டன் தொப்பியைத் தூக்கி செம்பட்டை தலைமயிரைக் கையால் நீவிவிட்டு மீண்டும் வைத்துக்கொண்டான் காலைச்சூரியன் இன்னும் எழவில்லை என்றாலும் தலைமுடி வியர்வையில் நனைந்திருந்தது. அவன் அணிந்திருந்த வெள்ளைச்சட்டை முதுகுவியர்வையில் நனைந்து ஒட்டியிருக்க அதன் மீது கடற்காற்று படும் குளிரை உணர்ந்தான். இரவெல்லாம் அடித்த தெற்குக்காற்று கடற்கரைமணலை அள்ளிச் சாலையின் கடப்பைக்கற்கள் மேல் பரப்பியிருந்தது. கரிய கற்பரப்பில் காற்றின் சுழிப்பில் மென்மணல் ஆவிப்படலம் போல நெளிந்து சல்லாத்துணிபோல இழுபட்டுச் சென்றது.

ஏய்டன் குதிரையைத் தளர்நடை போடச்செய்தபடி மரத்தடியில் அந்த அசைவைக் கவனித்தான். இரு கரிய மனித உருவங்கள் ஒரு மரத்தின் மறைவில் அமர்ந்திருந்தன. அழுக்கு வெள்ளைநிறத்தில் ஆடை அணிந்த இரு இந்தியத் தொழிலாளர்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் அமர்ந்திருந்த இடத்தில் வளர்ந் திருந்த செடி காற்றின் அசைவில் ஆடி அவர்களை மறைத்தது. ஓட விரும்பிய குதிரையின் கழுத்தை மெல்லத் தடவி அதை அமைதிப்படுத்தினான். அது கடிவாளத்தை மென்றபடி செருக்கடித்து மூச்சுசீறி முன்காலால் சாலையின் கல்பரப்பைத் தட்டியது. நீராவி கனத்த காற்று அவனுக்கு வலப்பக்கமிருந்த கடலில் இருந்து பெரிய அலைகளாக பெருக்கெடுத்து வந்து தாண்டி நகருக்குள் பொழிந்து கொண்டிருந்தது.

தூரத்தில் தெரிந்த தென்னை மரங்களும் சவுக்குக் கூட்டங்களும் காற்றால் அழுந்த சீவப்பட்டு வளைந்து நின்றன. காற்றின் அலைகளுக்கேற்ப அவையும் கொந்தளித்தன. அந்நேரத்தில் எப்போதாவது கடந்து செல்லும் திறந்த குதிரை வண்டிகளும் காவலர்களின் குதிரைகளும் அல்லாமல் மெரினாவில் நடமாட்டமே இருப்பதில்லை.

தன்னுள் இருக்கும் எச்சரிக்கையைப்பற்றி ஏய்டன் ஆச்சரியத்துடன் நினைத்துக்கொண்டான். ஏழு வயதில் அப்பாவுடன் மலைகளில் வேட்டைக்குப் போக ஆரம்பித்த போது வளர்த்து எடுத்துக்கொண்ட நுண்ணுணர்வு அது. அயர்லாந்தில் கெர்ரி பகுதியில் தூமிஷ் மலையடிவாரத்தில் இருந்தது அவனுடைய வீடு. அப்பா அங்கே ஒரு மாட்டுப் பண்ணை வைத்திருந்தார். நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள் இருந்தன. அவற்றை மேய்த்தபடி மலையடிவாரத்து மேய்ச்சல் வெளிகளில் அலைவதே அவரது வாழ்க்கையாக இருந்தது. வேட்டைக்குப் போவதைத் தவிர அந்த கிராமப்பகுதியில் கேளிக்கை என ஏதுமில்லை. மாலையானால் மரக்கொட்டில்கள் போன்ற மதுக்கடைகளில் மூக்குமுட்ட குடித்துவிட்டு கட்டிப்புரள்வதைக் கேளிக்கை என்று சொல்ல முடியாது.

அப்பா மிகச்சிறந்த வேட்டைக்காரர். எல்லா வேட்டைக் காரர்களையும் போல மிகமிகத்தனிமையானவர் அவர். வேட்டையினால் அந்தத் தனிமை கைவருகிறதா, இல்லை தனிமை காரணமாக வேட்டையைத் தேர்ந்தெடுக்கிறார்களா? அனேகமாக, அவர் பேசுவதேயில்லை. அம்மா அவரைத் தூண் என்றுதான் சாதாரணமாகச் சொல்லுவாள். அவர் காதுபடவே சொன்னாலும் அவருக்குப் பிரச்சினை இல்லை. அவர் கண்ணாடியால் தடுக்கப்பட்ட வேறு ஒரு உலகில் அவர்களிடையே வாழ்ந்தார்.

விடியற்காலை முதல் தொடங்கும் மேய்ச்சல் வேலையும் மதியம் தாண்டியதும் நடக்கும் வேட்டைப்பயணங்களும் முடிந்து மாலை இருள ஆரம்பித்ததும் சேற்றுவாடை அடிக்கும் சப்பாத்துகளும் வியர்வை ஆவி எழும் உடலுமாக அவர் வீட்டுக்குள் கனமாக நுழைவார். தொப்பியைக் கழற்றிமாட்டும்போது 'ஜீஸஸ்' என்று முனகுவார். அத்தோடு அவரது குரல் நின்றுவிடும். அம்மா அவர் வருவதையும் போவதையும் அறியாதவள் போலிருப்பாள். அன்யாவும் அய்லீனும்தான் அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்பார்கள்.

இரவுணவு, பக்கவாட்டில் இருந்த தாழ்வான கூரை கொண்ட கூடத்தில் போடப்பட்ட மரமேஜையில். அந்த மேஜை அப்பாவே செய்தது. எப்போதுமே முட்டைக்கோஸ் சூப்தான். அப்பா, சூப் தன் முன்னால் வந்ததும் ஒரு நிமிடம் கண்மூடி மௌனமாக இருப்பார். மற்றவர்கள் ஜெபம் செய்யும் பாவனையில் அவரது ஒலிகளை செவிகூர்ந்துகொண் டிருப்பார்கள். அவர் ஆழமான பெருமூச்சுடன் "ஆமென்" சொல்லியதும் லியாம் சூப்பில் கரண்டியைப் போடும் ஒலி கேட்கும். அவன் உறிஞ்சும் ஒலியை சிலசமயம் அப்பா சுருங்கிய கண்களுடன் ஏறிட்டுப் பார்ப்பார். ஆனால், ஒன்றும் சொல்வதில்லை. மொத்த உணவு நேரத்திலும் அவர் எதையுமே பேசுவதில்லை.

அப்பா அபூர்வமாகவே வீட்டில் இருப்பார். பெரும்பாலும் மோசமான வானிலை காரணமாக மாடுகளை

வெளியே கொண்டுபோகமுடியாத நாட்களில். முழுநேரமும் எதையாவது செய்துகொண்டிருப்பார். மாடுகளின் கழுத்தில் மாட்டும் குச்சிகள் செதுக்குவார். தோல் வார்களைக் கீறி நீவுவார். குதிரைச்சேணங்களை இறுக்குவார். மரப்பலகைகளைச் சேர்த்துப் பெட்டிகளாக்குவார். இரவில் கையில் ரம்முடன் குளிர்ந்த வானத்தைப் பார்த்தபடி சிறிதுநேரம் அமர்ந்திருப்பார். ஊரில் அவருக்கு எல்லாருமே தெரிந்தவர்கள். நண்பர்கள் என எவரும் இல்லை. அவர் துயரமானவரா மகிழ்ச்சியானவரா என்றுகூட ஏய்டனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஆனால், அவருடனிருக்கும்போதெல்லாம் ஏய்டன் உள்ளம் நிறையும் மகிழ்ச்சியையே உணர்ந்தான். ஆகவே, அவர் மகிழ்ச்சியானவராகத்தான் அவன் மனதில் பதிந்திருந்தார். அவர் பேசுவதெல்லாம் வேட்டைக்குப்போகும்போது மட்டும்தான். அதுவும் ஓரிரு சொற்களில். ஆனால், அவரது கனத்த குரல் தன் காதில் விழுவது ஏய்டனுக்குப் பிடிக்கும். அதைவிட அவரது காய்த்துப்போன பெரிய கை தன் தோள்களில் அபூர்வமாக அழுந்தியமரும் கணங்கள் பிடிக்கும். இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னாலும் அந்த தொடுகையை அவனால் தனிமையில் துல்லியமாக உணர முடியும். அப்பா பற்களைக் கடித்து 'பிடி' என்றோ 'தடு' என்றோ சொல்லும் ஒற்றை வார்த்தை ஆணைகளை அவன் கனவுகளில் பெறுவான்.

அப்பாவிடமிருந்து எதைக்கற்றுக்கொண்டோம் என்று ஏய்டன் நினைப்பதுண்டு. அவரது இயல்புகள் எதுவுமே அவனிடமில்லை. அவனுக்கு மலைகளிலும் புல்வெளிகளிலும் ஆர்வமிருந்தது. ஆனால், மேய்ச்சலும் வேட்டையும் ஓர் எல்லைக்குமேல் உவக்கவில்லை. சமவெளியின் புல்படர்ந்த குன்றலைகள் அவனுக்குப் படிக்கப்படாத மர்மமான நூல் ஒன்றின் பக்கங்களைப் போலிருந்தன. மலைகளின் சிகர வளைவுகள் யாரோ பேசாமல் குனிந்து அமர்ந்திருப்பதுபோல தோன்றின. அவன் அறிய விரும்பினான். சிந்திக்க விரும்பினான். தனிமையில் அந்த புல்வெளிகளையும் மலைகளையும் வார்த்தைகளாக ஆக்கிக்கொள்ள முடியுமா என்று முயன்றான்.

அவனை எழுத்துக்கள் ஈர்த்துக்கொண்டன. அவன் வீட்டில் இரண்டே நூல்கள்தான் இருந்தன. மெல்லிய பிர்ச் மரப்பிளாச்சால் அட்டை போடப்பட்ட பைபிள். மிகப் புராதனமானது. கையால் செய்யப்பட்ட கனத்த காகிதங்களில் பெரிய எழுத்துக்களால் அச்சிடப்பட்ட புதிய ஏற்பாடு. அதன் எடை காரணமாக மேஜையில் வைத்துத்தான் புரட்டமுடியும். அதை அவனன்றி வீட்டில் யாருமே படிப்பதில்லை. அவன் தாத்தா அதில் குறித்துப்போட்ட தேதிகளும் உதிரிச் சொற்களும் பைபிளின் வரிகளுடன் கலந்து சிறுவயதிலேயே மனதில் பதிந்து பைபிள் என்பதே தன் குடும்பத்துக்கு மட்டும் உரியது என்ற பிரமை அவனுக்கிருந்தது. இன்னொன்று ஷேக்ஸ்பியரின் நான்கு நாடகங்கள். வாசிக்கக் கற்றுக்கொண்ட நாள்முதல் அதை அவன் வாசித்தான். ஒன்றுமே புரியாமல் மாக்பெத்தையும் கிங் லியரையும் ஓதெல்லோவையும் டெம்பெஸ்டையும் மனப்பாடமாக்கிக் கொண்டான்.

அவன் பைபிளை மனப்பாடமாகச் சொல்வதைக் கேட்ட பாதிரியார் இயான் திருச்சபை பள்ளியில் சேர்ந்து படிக்கச்செய்தார். அப்பா அவன் படிப்பதை எதிர்க்கவுமில்லை, ஆதரிக்கவுமில்லை. அதைப்பற்றி கவலைப்படவுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். படிப்பது அவனுக்கு விடுதலை என்றே பொருள்பட்டது. நாட்கணக்கில் இருண்டு மூடிக் கிடந்த வானம் தெளிந்து ஒளியுடன் மின்னும்போது வீட்டுக் கதவைத் திறந்து புல்வெளியில் ஓடுவதுபோல அவன் படிப்பை உணர்ந்தான். பிரம்மாண்டமான தேவாலயத்தில் தன்னந் தனியாக அமர்ந்து ஜெபிக்கும் மன உச்சங்களை அடைந்தான்.

மேல்படிப்புக்குப் பல்கலைக்கழகம் செல்ல ஏய்டன் ஆசைப்பட்டான். ஆனால், அதற்கான பணம் அப்பாவிடம் இருக்காது என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. அப்போது அயர்லாந்து முழுக்க நோய்களால் மாடுகள் இறந்து கொண்டிருந்தன. கொஞ்சம் கொஞ்சமாகக் கிராமங்களில் பஞ்சம் விரிய ஆரம்பித்தது. பண்ணைகள் கைவிடப்பட்டு மக்கள் கூட்டம் கூட்டமாகக் கிளம்பிச் சென்றனர். அமெரிக்கா செல்லும் கனவு அயர்லாந்தை ஆட்டிப்படைத்தது.

அப்பா மேலும் அதிகத் தனிமை கொண்டவராக ஆனார். முன்பு அவர் டப்ளினில் இருந்து வரவழைத்த 'இரட்டைத் துப்பாக்கி மார்க்' சுருட்டுகள் மட்டுமே பிடித்துக் கொண்டிருந்தார். இப்போது தாழ்ந்த தரமுள்ள புகையிலையை உள்ளூர் சந்தையில் வாங்கி, அவரே வாட்டி சுருட்டிக் கொண்டார். மட்கிய மலை விறகு போல நாற்றமடிக்கும் பெரிய சுருட்டு அது. புகையும்போது அப்பாவின் நெஞ்சுக்குள் இருந்து புகை வருவது போலிருக்கும், வெந்து தீயும் நாற்றத்துடன்.

ஏய்டன் ராணுவப்பள்ளியில்சேர முடிவெடுத்ததை அப்பாவிடம் சொன்னபோது அவர் சுருட்டை எடுத்து விட்டு ஏதோ சொல்ல வாயெடுத்தார். பிறகு மீண்டும் சுருட்டை வாயில் கவ்வியபடி குதிரைச்சேணத்தை இறுக்க ஆரம்பித்தார். "எனக்கு அவர்கள் நிர்வாகக் கல்வி அளிப்பார்கள். உயர் கல்விக்குப் போக என்னைப் போன்றவர்களுக்கு வேறுவழியே இல்லை." என்றான் ஏய்டன்.

அப்பா அவனைப் பார்க்காமல் "அப்படியானால் நீ இந்தியாவுக்குப் போகவேண்டியிருக்குமா?" என்றார்.

ஏய்டன் "ஆமாம், படிப்பு முடிந்ததும் ஏதாவது காலனிநாட்டில்தான் பணியாற்றவேண்டும். ஆப்ரிக்காவாகக் கூட இருக்கலாம்" என்றான்.

அப்பா ஒன்றும் சொல்லவில்லை. சேணத்தை ஒருமுறை இழுத்துப்பார்த்துவிட்டு குதிரையில் ஏறிக்கொண்டார். 'கட் கட் கட்' என்று பெருநடையிட்டு குதிரை உருளைக்கற்கள் பாவப்பட்ட சாலையில் இறங்கிச்சென்றது. கல்லிடுக்குகளில் அதன் குளம்புகள் இறங்கும்போது சேறு சிதறித்தெறிப்பதைப் பார்த்தபடி ஏய்டன் அங்கேயே நின்றான்.

ராணுவப்பள்ளியில் படிப்பை முடிக்கும்வரை அவன் கெர்ரிக்கு வரவேயில்லை. அம்மாவுக்கு மட்டும் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தான். நான்கு வருடங்கள் கழித்து அவன் வீட்டுக்கு வந்தபோது வீட்டுக்குப்பின்னால் துணிகாயப் போட்டுக் கொண்டிருந்த அம்மா சுருட்டி விட்டிருந்த சட்டையின் கைகளைக் கீழே இழுத்துவிட்டபடி ஏறிட்டுப்

பார்த்தாள். கண்களைச்சுற்றி மெல்லிய சுருக்கம் இறுகியடாரச் சிலநிமிடங்கள் பார்த்துக்கொண்டிருந்தாள். அனிச்சையாகத் தலைக்குட்டையை நெற்றிநோக்கி இழுத்துவிட்டவள், சட்டென்று அவனை அடையாளம் கண்டுகொண்டு "ஏய்டி!" என்று கத்திக்கொண்டு வந்த அந்த முகத்தை ஏய்டன் என்றுமே மறந்ததில்லை.

கத்திக்கொண்டே ஓடிவந்தாள். பரவசத்தில் உறைந்து காற்றில் மிதந்து வருவதுபோல.

"ஏய்டி. ஏய்மூ" என்று கூச்சலிட்டபடி மூச்சுவாங்க அவனை இறுகக் கட்டிக்கொண்டு மாறிமாறி முத்தமிட்டாள். அவள் உடைகளில் சலவைச் சோடாவின் வெம்மை நெடியும் வெங்காயத்தின் பச்சை நெடியும் அடுப்புப் புகை வாசனையும் கலந்திருந்தன. சட்டென்று அவள் உடைந்துபோய் அழ ஆரம்பித்தாள். ஏய்டன் தன் வலுவான கைகளால் அவளைப் பிடித்து இறுக்கி கண்ணீரைத் துடைத்தான். "ஓ ஏய்டி. அன்பே. நீ எவ்வளவு பெரியவனாகி விட்டாய். உன் கையெல்லாம் எவ்வளவு வலுவாக இருக்கிறது" அவள் அவன் கைகளைப் பிடித்துப் பார்த்தாள். அவன் உள்ளங்கைகளைத் தன்னுடைய கன்னத்தில் வைத்துக்கொண்டாள் சட்டென்று சிரிக்க ஆரம்பித்தாள் 'ஏய்டி நீ பெரிய ஆண்மகனாக ஆகிவிட்டாய். உன் குரல்வளையைப் பார்க்க வேடிக்கையாக இருக்கிறது உன் கிருதாவைப் பார்த்தால் இந்த ஊர்ப்பெண்கள் உன்னுடன் அப்படியே இறங்கி வந்து விடுவார்கள்.'

ஏய்டன் அவள் தலைமயிரைப் பிடித்து உலுக்கி 'பசிக்கிறது. எனக்கு ஏதாவது கொடு' என்றான்

"நீ வரும்போது சமைப்பதற்காகவே ஒரு பன்றியை வைத்திருக்கிறேன். வா" என்று அவனை இழுத்துச்சென்றாள். உள்ளிருந்து அய்லீனும் அன்யாவும் எட்டிப்பார்த்தார்கள். இருவருமே சட்டென்று வளர்ந்துவிட்டிருந்தார்கள் சிறுமிகளாக இருந்தபோது அவர்களுக்குத் தனியான முகங்களும் தனித்தன்மை கொண்ட தோற்றங்களும் இருந்தன என்றும் இப்போது அவர்கள் அப்பகுதிக் கிராமங்களில்

காணப்படும் எல்லாச் சாதாரண விவசாயப் பெண்களைப் போலவும் ஆகிவிட்டதாகவும் ஏய்டன் நினைத்துக் கொண்டான். அவனை அவர்கள் வந்து வரவேற்றதும் சிரித்தபடி அவன் கைகளைப் பற்றிக்கொண்டதும் எல்லாமே எவ்வளவோ முறை யார் யாரிலோ பார்த்தது போலத்தான் இருந்தது.

மாலையில் அப்பாவும் லியாமும் வந்தார்கள். லியாமும் எந்த ஒரு கிராமத்து மாட்டுப்பண்ணை இளைஞனைப் போலத்தான் இருந்தான். அவன் முன்பெல்லாம் வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருப்பான். இப்போது அப்பாவைப் போலவே அமைதியாக ஆகிவிட்டான். தொப்பியை மாட்டியபடி "ஜீஸஸ்" என முனகினான். கோட்டைக் கழற்றியபடி அவனைப் பார்த்து மெல்லியதாகப் புன்னகைத்தான். அவன் கைகளும் மரக்கட்டையாலானவைபோல ஆகிவிட்டிருந்தன. ஒரு நிமிடம் கழித்து அப்பா உள்ளே வந்தார். அதேபோல தொப்பியைக் கழற்றி மாட்டியபடி "ஜீஸஸ்!" என்றார். அதேபோல கோட்டைக் கழற்றியபடி அவனை நோக்கி மெல்லிய புன்னகை செய்தார். லியாம் அப்படியே முதிர்ந்துவிட்டதைப் போலிருந்தார் அப்பா. இந்தக் கிராமம் அத்தனை பேரையும் ஒரே அச்சில் அழுத்தி வார்த்துக்கொண்டிருக்கிறது என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான். ஆனால் அது அப்போது தான் அவன் கண்களுக்குத் தெரிகிறது.

நான்கு நாட்களிலேயே அவனுக்குக் கிராமம் சலித்து விட்டது. பர்மாவுக்குக் கிளம்புவதற்கு முன்பு ஒருமாதம் ஊரில் பெற்றோருடன் இருந்துவிட்டு வரலாமென்றுதான் நினைத்திருந்தான். ஆனால் அந்த ஊரில் மட்டுமல்ல, அயர்லாந்திலேயே தான் ஓர் அன்னியன் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. அவனுடைய உடைகளும் பேச்சும் மட்டுமல்ல, பார்வையும் அசைவுகளும் கூட மாறிவிட்டிருந்தன. அவனை அவனுடைய குடும்பமும் அன்னியமாகவே உணர்ந்தது என அறிந்தான். அவர்கள் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது அவனுடைய காலடி ஓசை கேட்டால் உற்சாகம் அப்படியே உறைந்து மெல்லக்கரைந்து வெளிறிய

புன்னகைகளாக மாறியது. அம்மா மட்டும் அவனிடம் வலிய வரவழைத்துக்கொண்ட ஒரு சகஜத்தன்மையைக் காட்டினாள். மற்றவர்களின் கண்கள் முற்றிலும் அன்னியனுக்குரிய மரியாதையான விலகலைத்தான் அவனுக்கு அளித்தன.

ஒரு வாரத்திலேயே அவன் கிளம்பியபோது அம்மா மட்டும் கொஞ்சம் எதிர்த்தாள். "இங்கே உனக்கு என்ன குறை? கொஞ்சநாள் என்னுடன் இருக்கமாட்டாயா?" என்றாள்.

"நான் பயணத்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். என்னுடன் வரும் மற்ற நண்பர்களைச் சந்தித்துப் பேசவேண்டும்" என்றான்.

அம்மா அதற்குமேல் எதுவும் சொல்லவில்லை. அவளுக்குள் பெரிய துக்கமேதும் இல்லை என்பது அவனுக்கு ஆழமான ஏமாற்றத்தை அளித்தது. அவள் அவனுக்காகக் கண்ணீர்விட வேண்டும் என்று அவன் எதிர்பார்த்தானா என்று கேட்டுக்கொண்டான். அவன் செல்லும் தூரம் மிக அதிகம். வெப்பநோய்களும் போர்களும் பாம்புகளும் பூச்சிகளும் நிறைந்த தொலைதூர நாடுகள். மரணம் அளவுக்குத் தூரம் கொண்ட நாடுகள். அம்மாவுக்கும் அதெல்லாம் தெரியும். பழுத்த ஆப்பிள்கள் உதிர்வதுபோல அயர்லாந்தி லிருந்து இளைஞர்கள் அந்த விரிந்த மரணவெளிநோக்கி உதிர்ந்து சென்றுகொண்டிருந்தார்கள். மேய்ச்சல்வெளி அளிக்கும் முகத்தையும் உடம்பையும் விரும்பாத ஒவ்வொரு இளைஞனும் வேறுவழியில்லாமல் அங்குதான் சென்றாக வேண்டும். சண்டிக்குதிரை போல அயர்லாந்து அவர்களை உலுக்கி கீழே தள்ளிவிடுகிறது. நெடுநாட்களுக்குப் பின்னால் அவன் முற்றிலும் புதியவனாகத் திரும்பி வருவான். விசித்திரமான நோய்களும் பணமும் கொண்டவனாக. அல்லது அவனைப் பற்றிய ராணுவத் தகவல் ஒன்று பழுப்புக்காகித உறையில் ஏராளமான அஞ்சல் முத்திரைகளுடன் வந்துசேரும். தபால்காரனின் குதிரை குளம்படி கேட்கும் ஒவ்வொருமுறையும் அவன் குடும்பத்தினர் அந்தச்செய்தியை ஒரு கணம் எதிர்பார்ப்பார்கள்.

அவன் கிளம்பும்போது அப்பாவும் லியாமும் கூடவே வந்தார்கள். ஆனால், ஒரு வார்த்தைகூடப் பேசிக்கொள்ள வில்லை. குதிரைப்பாதை சென்றுசேரும் பெரியசாலையில் அவன் ஏற்பாடு செய்திருந்த படுக்கைக்கூண்டு வண்டி நின்றிருந்தது. அதன் கூண்டின் மேல் இருந்த காற்றுத் திசைகாட்டிச் சேவல் கிழக்கு தெற்கு என மாறி மாறி ஆடிக்கொண்டிருப்பதை அவன் ஏனென்று தெரியாமல் கவனித்தான். குதிரைச்சேணத்தை லியாமிடம் ஒப்படைத்து விட்டு அவன் உயரமான வண்டிமுகப்பில் அமர்ந்திருந்த வண்டியோட்டியை நோக்கி கையசைத்தான். "சுழற்காற்று இருக்கும்போலத் தெரிகிறது" என்றான் வண்டியோட்டி. ஏய்டன் புன்னகைத்தான். அப்பாவிடம் எப்படி விடைபெறுவ தென்று அவனுக்குத் தெரியவில்லை. லியாமின் தோள்களில் லேசாகத் தட்டினான். அப்பாவின் கைகளை முத்தமிட வேண்டுமென நினைத்தான். ஆனால் அதெல்லாம் நாகரீகப் பாசாங்காகத் தோன்றும் என்றும் பட்டது.

அப்பா தொப்பியை எடுத்து தலைமயிரை நீவிவிட்டுக் கொண்டார். அவன் அப்பாவை வழக்கத்துக்கு மாறாகக் கூர்ந்து பார்த்தான். அவரது நீண்ட செம்பட்டைமயிர் பெரும்பாலும் உதிர்ந்துவிட்டிருந்தது. ஆழமான கலப்பைத்தடங்கள் போல நெற்றிவரிகள். வெந்து சிவந்தது போன்ற தோலில் இருந்த மச்சங்களெல்லாமே கொஞ்சம் கனத்துப் பரந்து விட்டன போலிருந்தது. கன்னத்திலும் தாடையிலும் ஆழமான வெட்டுக்கள் போல மடிப்புகள். தாடைக்குக் கீழே தசை தளர்ந்து நீர் நிரம்பிய மென்தோல் பை போலத் தொங்கியது. ஒருகணம் அவன் மனம் நடுங்கியது, ஒருவேளை அவன் அப்பாவை மீண்டும் பார்க்கப் போவதேயில்லை. ஆம், அதுதான். அதுதான் கடைசிச் சந்திப்பு. அவனுக்கு ஏனோ அப்பாவைத் தொடவேண்டும் போலிருந்தது. அப்பா என்னை மன்னியுங்கள் என்று சொல்லவேண்டும் போலிருந்தது.

எதற்காக? அவன் எந்தத் தவறும் செய்யவில்லை. ஆனால் மழையிலும் வெயிலிலும் பனியிலும் அடிபட்டுச் சிதைந்த காட்டுப்பாறை போன்ற அந்த மனிதருக்கு அவன் ஏதோ அநீதி

இழைத்தவனாக உணர்ந்தான். அவருக்கு மகனாகப் பிறந்தத னாலேயே, அவர் புரிந்துகொள்ளமுடியாத ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்ததனாலேயே. இல்லை, அதில்லை. அவருடைய மடியிலிருந்து இறங்கி அவன் ஓடினான். அவர் பிடிக்க முடியாத தூரத்துக்கு. அவரது நம்பிக்கைகள், ஆசாரங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவருக்கு ஒரு அன்னியனாகத் தன்னை ஆக்கிக் கொண்டான்.

அவனுக்குள் இருக்கும் நூற்றுக்கணக்கான புத்தகங் களுடன் அவனால் அவர் கைகளைத் தொடமுடியாது.

அப்பா பழுத்த கண்களால் லியாமைப் பார்த்து, "இந்தக் குதிரையுடன் நீ போ. நான் வருகிறேன்" என்றார். லியாம் ஏய்டன் வந்த குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு மெல்லத் தலைதாழ்த்தி விடைபெற்றுத் திரும்பிச்சென்றான். இரு குதிரைகளும் வால்சுழல நடந்துசென்றன. அவற்றின் குளம்பொலிகள் தேய்ந்தன. ஏய்டன் என்ன சொல்வதென்று தெரியாமல் வண்டியின் கூண்டுமுகப்பைப் பார்த்தான். சேவல் சட்டென்று கிழக்கை நோக்கித் திரும்பியது. ஏய்டன் கால்சட்டைப்பைக்குள் கையை விட்டுக்கொண்டான்.

அப்பா எதையோ சொல்ல விரும்புகிறார் என்று ஏய்டன் புரிந்துகொண்டான். ஆனால், அவரால் பேசமுடிய வில்லை. சொற்கள் அவருக்கு எப்போதுமே சிக்கலானவை. "நான் போனதும் அம்மாவுக்கு எழுதுகிறேன்" என்றான். "அனேகமாக ஐந்து வருடங்களில் திரும்பி வரமுடியும்".

அப்பா அதைக் கேட்டதுபோலத் தோன்றவில்லை. "பர்மாவில் எனக்குக் காவல்துறை அதிகாரி வேலை. அங்கே வெப்பமும் நீராவியும் அதிகம் என்பதைத்தவிர எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்கள்" என்றான். அப்பா தொப்பியை எடுத்து மீண்டும் தலையைக் கோதிக்கொண்டார். என்ன சொல்லவருகிறார். அவர் அகத்தில் இறுகிவிட்ட சொற்களை எப்படி அசைப்பது?

"உன் பெயர்க்காரணம் உனக்குத் தெரியுமா?" என்றார் அப்பா. ஏய்டன் சட்டென்று அதிர்ந்தான். அப்பா அவன்

நினைத்திருப்பதைவிட மிகப்பெரிய விஷயமொன்றைச் சொல்லப்போகிறார் என்று தோன்றியது. அவர் சொல்லப் போவது அவன் வாழ்க்கையை ஒட்டுமொத்தமாகவே மாற்றியமைக்கப் போகிறது. ஆமாம், கதைகளில் நடப்பதுபோல. ஏய்டன் பேசாமல் நின்றான். அப்பா என்ன உத்தேசிக்கிறார் என்று அவனுக்குப் புரியவில்லை.

"பைர்ன் என்ற சொல் ஓ பிராய்ன் என்பதன் உள்ளூர் உச்சரிப்பு. ஓ-பிராய்ன் என்றால் பிரானின் வம்சம் என்று பொருள். நாம் லெய்ன்ஸ்டெரின் மன்னர் ப்ரான் மக் மேக்ல்மோர்டாவின் வாரிசுகள். நம்முடைய நாடு இதுதான். இந்த அயர்லாந்து." அப்பா சொல்லவருவது அவனுக்குப் புரிவதுபோல் இருந்தது. "ஆனால், நீ பிரிட்டனுக்காகப் போர் செய்யப் போகிறாய்." அவர் சொன்னதும் அவன் கண்களைத் தாழ்த்திக் கொண்டான்.

சில கணங்கள் இருவரும் ஆழ்ந்த அமைதியில் நின்றனர். வண்டிக்குதிரைகளில் ஒன்று 'பர்ர்..' என்று சீறி காதுகளைப் படபடவென அடித்துக் கால்களை மாற்றிக்கொண்டபோது அதிர்ந்து ஏய்டன் நினைவுக்கு வந்தான். சங்கடமான குரலில் "நான் பணம் அனுப்புகிறேன். வங்கி வழியாக" என்றான்.

அப்பா திடமான மெல்லிய குரலில் "வேண்டாம்" என்றார். உடனே குதிரையைத் திருப்பிக்கொண்டு குளம்படி ஒலிக்க விரைந்து சென்றார். அவரது கனத்த உடல் காற்றில் துள்ளித்துள்ளி விலகிச்சென்றது.

குளிர்ந்த காற்று அடித்தபோதுதான் தன் உடல் வியர்த்திருப்பதை ஏய்டன் உணர்ந்தான். ஆழமான பெருமூச்சு விட்டாலும் மனத்தின் எடை குறையவில்லை. வண்டியில் ஏறிக்கொண்டு கதவைச்சாற்றிக்கொண்டான். தோலுறை போடப்பட்ட இருக்கையில் அமர்ந்து கால்களை நீட்டிக் கொண்டான். கண்களை மூடிக்கொண்டு காற்றை முகமெங்கும் வாங்கினான். வண்டிக்காரன் மணியை இருமுறை ஒலித்தபின் "ஹேய் ஹேய்" என்று குதிரையை அதட்டினான். சவுக்கைச் சும்மா காற்றில் சுண்டியதும் குதிரைகள் ஓடத்தொடங்கின.

வண்டி ஓர் உலுக்கலுடன் கிளம்பி சகதிப்பாதையில் அதிர்ந்தும் குலுங்கியும் சென்றது. கூழாங்கற்கள் கலந்த சேற்றில் ஓடிய சக்கரங்கள் கரகரவென ஒலிக்க, அச்சு கட கடவென குடத்தில் முட்ட வேகம் கொண்டது. ஏய்டன் சன்னலைத் திறந்தான். குதிரைச்சாண வாசனையுடன் குளிர்காற்று உள்ளே பெய்யத்தொடங்கியதும்தான் அவன் மனம் மெல்ல மெல்ல அமைதி அடைந்தது. மனத்தின்மீது கனத்த அழுக்குத்துணிகளைக் குவித்துக் கனக்க மூடியிருந்தது போலவும் காற்றுவேகத்தில் அவை பறந்து பறந்து விலகிச்செல்ல மனம் எடையிழந்து சகஜமாவதுபோலவும் தோன்றியது.

அடையாற்றின் கரையில் இருந்த தன் பங்களாவிலிருந்து காலை ஏழுமணிக்குக் கிளம்பி மெரினாவை ஒட்டிச்சென்ற வண்டிப்பாதையில் அயோத்தியாகுப்பம் வழியாக கடலோர மிருந்த தலைமைக் காவல்நிலையத்துக்குச் செல்வது ஏய்டனின் வழக்கம். இரவில் ஒன்பது மணி அளவில் அதேபோலக் குதிரையில் தனியாகத் திரும்பி வருவான். அவனுக்கிருந்த ஒரே உடற்பயிற்சி அதுதான். அலுவலகம் சென்றபின் அனேகமாக அவனுக்கு வெளியே வர நேரமிருக்காது. ஞாயிற்றுக்கிழமையும் ஓய்வில்லை. அந்தப்பயணத்தை அவன் மிக அந்தரங்கமான ஓர் அனுபவமாக வைத்திருந்தான். வலப்பக்கம் வந்துகொண்டே இருக்கும் நீலமான கடல் அவனுடைய அன்றாட எரிச்சல்களை, சங்கடங்களை எல்லாம் சிறியதாக்கி விடும். அதன் விளிம்பில் ஒரு சிறிய நுரைக்கொப்புளம் போல நகர்ந்து கொண்டிருக் கிறோம் என்ற எண்ணம்போல விடுதலை அளிப்பது ஏதுமில்லை.

அபாரமான கடல். மதராசப்பட்டினத்தில் ஏய்டன் மிக விரும்பியதே அந்தக்கடலைத்தான். துல்லியமான நீலம். வளைவுகளற்ற நீளமான மணற்கரைமீது பட்டுத்துணியை விரித்து விரித்து காட்டிக்கொண்டே இருப்பது போல அலைநுரை பரவியபடியே இருக்கும். ஒளி தளதளக்கும் நீலப்பரப்பில் செம்படவர்களின் கட்டுமரங்கள் வெண்ணிறமான பாய்கள் புடைத்து அசைய ஒற்றைச்சிறகுள்ள

பறவைகள் போலச் செல்லும். அப்பால் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் கப்பல்கள் கரிய சிறுமேடுகள்போலத் தெரியும். ஏய்டன் தன் அலுவலக அறையை கடலைப் பார்ப்பதுபோல வைத்துக் கொண்டிருந்தான். சட்டச் சிக்கல்களும் நடைமுறைச் சிக்கல்களும் நடத்தை விதிகளும் சம்பிரதாயங்களும் மண்டிய காகிதங்களில் இருந்து தலையைத்தூக்கும்போது சன்னலுக்கு வெளியே நீலக்கடல் விரிந்திருப்பது அவனை அங்கிருந்து தூக்கி வானில் நிறுத்திவைப்பது போலிருக்கும்.

என்ன ஒரு கடல்! நீலநிற ஒளியாலானதுபோல. இங்கிலாந்தில் அவன் கண்ட கடல் வேறு. இருண்ட அடர்ந்த மர்மமான திரவம் கருநீலப்பளிங்குப்பரப்பு போல விரிந்திருக்கும் கடல் அது. மொரோக்கோ கடல் எல்லைக்குள் நுழைந்தபோதுதான் அவன் வெப்பநாட்டுக்கடலை முதன்முறையாகப்பார்த்தான். இங்கிலாந்தில் சவுத்ஹாம்டன் துறைமுகத்தில் இருந்து கிளம்பியபோது வானம் இருண்டிருந்தது. கப்பலின் இயந்திரங்கள் பேரொலி எழுப்பியபோது இடியோசை போலவே ஒலித்தது. கப்பல் கிளம்பியபோது அத்தனைபேரும் கலவிளிம்பில் நின்று கரையைப்பார்த்தார்கள். உயர்ந்து கூம்பிய ஓட்டுக்கூரைகளும் புகைபோக்கிகளுமாக சவுத்ஹாம்டன் மிதந்து மிதந்து விலகிச்சென்றது. வானக்கடலில் மூழ்கும் ஒரு பெரும் கப்பலைப்போலத் தோன்றியது மறையும் நகரம். அருகே நின்ற கப்பல்கள் நீரில் பொறுமையிழந்து அலைபாய்ந்தன.

நிலம் மறைந்ததும், அத்தனைபேரும் அவரவர் படுக்கைகளுக்குச் சென்றார்கள். கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்க முயன்றார்கள். ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு உணர்ச்சியைக் காட்டுவதுபோல ஏய்டன் நினைத்தான். ஆனால், அவற்றுக்குள் உள்ள எண்ணங்கள் ஒன்றே என்று தோன்றியது. இந்த மண்ணை இனிமேல் காண்போமா என்ற ஒற்றைவரி. அதைத்தவிர வேறெதை நினைக்க முடியும்? பெரும்பாலானவர்கள் இரவும் பகலும் படுக்கையிலேயே படுத்திருந்தார்கள். உணவுக்கூடத்திற்கு

மட்டும் சென்று வந்தார்கள். பலநூறுபேர் இருந்தாலும்கூட உணவுக்கூடம் அமைதியாக நிகழ்ந்தது. கரண்டிகளும் பாத்திரங்களும் மோதிக்கொள்ளும் ஒலி. உடைகள் சரசரக்கும் ஒலி. சப்பாத்துகள் மரத்தரையில் உரசும், மோதும் ஒலி. அபூர்வமாக ஆழ்ந்த குரலில் அந்தரங்கமான பேச்சொலிகள்.

லங்காஷயரில் இருந்து வந்த ஒருவன் ஏய்டனுடன் இருந்தான். ஆனால், அவனும் தனக்குள் ஆழ்ந்தவனாக ஒதுங்கியவனாக இருந்தான். அவனுடன் முதல் பத்து நாட்கள் ஏய்டன் ஓரிரு சொற்களைக்கூட பேசிக்கொள்ளவில்லை. பதினைந்து நாட்களுக்குப் பின்னர் மெல்லமெல்ல சோம்பலுக்கு உடல் பழகிவிட்டது. நாளில் இருபது மணிநேரம்கூட படுத்திருக்கமுடிந்தது. தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட நிலையில் நாளும் இரவும் ஓட கப்பலின் யந்திர ஒலி அவற்றை மணிமாலையின் சரடு போலக் கோர்த்திருந்தது.

காஸாபிளாங்கா மறுநாள் வரும் என்ற பேச்சு உணவுக்கூடத்திலே இருந்தது. ஏய்டன் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. மழை கப்பலை வீசி வீசி அறைந்து கொண்டிருக்க சாளர இடுக்குகள் வழியாகத் தண்ணீர் கசிந்து துளிப்பிசிறுகள் படுக்கையின் கம்பளிகள் மேல் கண்ணாடித் துருவல்கள் போலப் படிந்திருந்தன. அவன் போர்வைக்குள் நுழைந்து கண்களை மூடிக்கொண்டு தன் ஊரின் பசுமைநிறைந்த புல்வெளிகளை நினைத்துக் கொண்டான். காலையில் கப்பலின் கொம்பொலி கேட்டு எழுந்து கொண்டு பெருங்கோட்டை எடுத்து அணிந்து சிறிய கதவு வழியாகக் குனிந்து வெளியே வந்தான். ஒருகணம் கண்ணுக்குள் ஒளியை உருக்கி ஊற்றியது போல உணர்ந்தான்.

கண்களைக் கைகளால் மூடிச் சிறிது நேரம் நின்றபின் மெல்லக் கைகளை எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வையைப் பழக்கித் தன்முன் விரிந்த துல்லியமான நீலவானத்தையும் ஒளிப்பெருவெளியாக அலையடித்த கடலையும் பார்த்தான். அங்கே எப்போதுமே இருள் என ஒன்று இருந்திருக்காது என்று தோன்றியது. வெண்ணிறமான பறவைக்கூட்டம் வானில் வழுக்கியதுபோலச் சென்றது

'நீலக்கடல் நீலக்கடல்' என்று சொல்லிக்கொண்டே இருந்தான். 'To mingle with the universe and feel what I can never express, yet can not at all conceal' என்ற வரிகள் நாவில் வந்தன. எந்தக் கவிதை?

அவன் மீண்டும் மீண்டும் அச்சொற்களையே சொல்லிக்கொண்டிருந்தான். சட்டென்று அடுத்த வரி நாவில் வந்தது "Roll on, Thou deep and dark blue ocean! Roll ! Ten thousand fleets sweep over thee in vain" பைரனின் கவிதை. எப்படிச் சரியாக அந்த வரியைத் தன் அந்தரங்கம் நினைவுகூர்கிறது என்று எண்ணி வியந்து கொண்டான். 'in vain' என்ற சொல்லாட்சி அவனை மாறி மாறி அறைந்தது, அன்று முழுக்க. கப்பல் விலாவில் அறையும் அலைகளைப்போல. வீணாக! வீணாக! வீணாக! அன்று பகல் அவன் சாப்பிடச் செல்லவில்லை. மிதமான வெயிலில் ஒளிவிட்ட கடலையே பார்த்துக் கொண்டிருந்தான். மாலையில் கப்பல் காஸாபிளாங்காவை அடைந்தது. தூசிமண்டிய மண்நிறமான கட்டிடங்களுடன் அந்தப் புராதன துறைமுக நகரம் அவனைநோக்கி வந்தது. அதற்கு அப்பால் தூசியால் ஆனதுபோன்ற வானம். கடலில் இருந்து மீனெண்ணெய் கருகுவதுபோல ஒரு வாடை. மெல்லிய மனிதக்குரல் ஒலி. பலநூறு தொண்டைகள் சேர்ந்து ஒரு தேனீ ரீங்காரம் அளவுக்கு ஒலியெழுப்பின.

கப்பலில் அனைவருமே அன்று தங்கள் கூட்டுப்புழுத் தன்மையிலிருந்து மீண்டுவிட்டார்கள் என்பதை ஏய்டன் கவனித்தான். எங்கும் உற்சாகக்குரல்கள் ஒலித்தன. ஆட்கள் அங்குமிங்கும் ஓடினார்கள். கப்பல் எட்டு நாட்கள் காஸாபிளாங்காவில் தங்கியிருக்கும் என்றார்கள். அந்த விசித்திரமான நகரம் வானத்தின் ஒளியில் அபத்தமாகத் திறந்து கிடந்தது. உரக்கக் கூச்சலிடும் கரிய நிற மக்கள். எங்கும் எதுவோ அழுகும் நாற்றம். சாக்கடையின் நீராவி எழும் குறுகிய சாலைகள். பயணிகளுக்கு அவர்கள் இறங்கிய முதல்நிலம் என்ற வகையில் அந்நகரம் போதையூட்டியது. போதையூட்டும் எல்லாமே அங்கே கிடைத்தன. அந்நகரத்தின் விசித்திரமே அங்குள்ள எல்லாவற்றையும் கனவுபோல ஆக்கியது.

அவனுக்கு அந்நகரம் மீது பெரிய ஈடுபாடு வரவில்லை. நகரத்தின் ஓரமாக கடலைநோக்கிய விடுதி ஒன்றை எடுத்துக்கொண்டான். போர்வைகள் அழுக்காக, அசைத்தால் தூசு பறக்க இருந்தன. சுவர்களின் இடுக்குகளில் இருந்து செம்புத்துருவல் போல மூட்டைப்பூச்சிகள் கலைந்தோடின. சன்னல் விளிம்பில் அமர்ந்த மாடப்புறாக்கள் எந்நேரமும் 'குர்ர் குர்ர்.' எனக் குறுகிக் கொண்டே இருந்தன. பால் கறக்கும் ஒலி போல. குதிரைப்பட்டையை பாலீஷ் போடும் ஒலி போல. தச்சன் தன் சிறிய ரம்பத்தை இழுப்பதுபோல. கீழே கல்பாவிய முற்றத்தில் அவற்றின் எச்சம் வெள்ளையாகப் பரவிக்கிடந்தது. சாலையில் இருந்து சக்கரஒலியும் சவுக்கொலியும் குளம்பொலியும் இணைந்த முழக்கம் கேட்டுக்கொண்டிருந்தது. நாள் முழுக்க அவன் கடலையே பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது ஒருநாள் அவன் உணர்ந்தான், அந்தக்கடலில் இருந்து தனக்கு விடுதலை இல்லை என. ஒருபோதும் ஒளிமிக்க அக்கடலை விட்டு அவன் பிரிந்துபோகப்போவதில்லை என்று.

ஏய்டன் கடலோரமாக நின்று அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். துல்லியமான மணலில் காற்றின் வடிவம் படிந்திருந்தது. மாபெரும் வெள்ளைத்துணி ஒன்று வானில் இருந்து பறந்து வந்திறங்கிப் படிந்ததுபோலக் கிடந்தது கடற்கரை. ஏய்டன் மெல்ல மெல்லக் கடல் அவனுக்களிக்கும் அற்புதமான தனிமையையும் நிறைவையும் அடைந்தான். சட்டென்று, சவுக்கடியின் ஒலியும் குழறும் குரல்களையும் கேட்டுத் திடுக்கிட்டான். திரும்பிப் பார்த்தபோது கடற்கரைச் சாலை ஆளில்லாமல் மணல்பறக்க கிடப்பதையே கண்டான். சட்டென்று பெண்குரல் வீறிட்டது. மீண்டும் அடியின் ஓசை.

ஏய்டன் தன் குதிரையைத் திருப்பி வந்தவழியே சற்றுதூரம் திரும்பினான். அவன் முதலில் கண்ட அந்த மரத்தடியில் ஏதோ நிகழ்ந்துகொண்டிருந்தது. இரு மனிதர்கள் தரையில் கிடக்க, ஒருவன் சாட்டையால் அடிக்கிறான். ஏய்டன் நாலைந்து தாவல்களில் அருகே சென்றுவிட்டான். அவனைக் கண்டதும் அடித்தவன் சாட்டையைச் சுருட்டியபடி வந்து வணங்கி நின்றான். கரிய மனிதன். உயரமான திடமான உடல்.

பெரிய தலைப்பாகை வைத்துக் காக்கி நிறமான கோட்டு அணிந்திருந்தான். இந்தியர்களின் கண்களைப்பற்றிய வியப்பு ஏய்டனுக்கு எப்போதும் உண்டு. சிப்பிகள் போல வெண்மையாகப் புடைத்த கண்கள். தெறித்து வெளியே விழுந்துவிடுபவை போன்ற பார்வை.

"என்ன?" என்றான் ஏய்டன் கீழே கிடந்த இருவரையும் பார்த்தபடி. அவர்களில் ஒருவர் பெண் என்பதை அப்போதுதான் கவனித்தான். மெலிந்த கரிய உருவங்கள். கன்ன எலும்புகளும் கழுத்தெலும்புகளும் புடைத்திருந்தன. எலும்பாலான மெலிந்த தோள்கள். ஆண் இடுப்பில் அழுக்கு வேட்டியை சுருட்டிச் செருகி கட்டியிருந்தான். பெண் அணிந்திருந்த சேலையும் மண்ணின் நிறம்தான். அவள் தன் மெலிந்த முலைகள் மேல் முந்தானையை அழுத்திப் பிடித்திருந்தாள். அவள் தோள்களில் சவுக்கு வீறிய தடத்தில் ரத்தம் கசிய ஆரம்பித்திருந்தது. ஆணின் தோளிலும் கழுத்திலும் இருந்து ரத்தம் வழிந்தது. சாட்டையுடன் நின்றவன் மீண்டும் தலைவணங்கி ஏதோ சொன்னான். ஆங்கிலம்தான். ஆனால், ஏய்டனுக்குப் புரியவில்லை.

"மெல்ல மெல்ல" என்றான் ஏய்டன்.

சாட்டைக்காரன் "எஸ் சர்" என்றபின் "இவர்கள் ஐஸ்ஹவுஸ் தொழிலாளர்கள்" என்றான். "வேலை செய்ய வில்லை. ஒளிந்திருக்கிறார்கள்."

கீழே கிடந்தவன் உரத்தகுரலில் ஏதோ கூத்தியபடி ஏய்டன் காலைப்பிடிக்க வந்தான். சாட்டைக்காரன் சாட்டையை சுழற்றி அவனை ஓங்கி அடிக்க, சாட்டை நாக்கு அவன் கரிய முதுகை நக்கிச் சுருண்டது. அவன் அலறி நெளிந்தபடி மண்ணிலேயே விழுந்துவிட்டான். அந்தப் பெண் அலறியபடி அவனைப் பிடித்தாள்.

"வேண்டாம்." என்று ஏய்டன் சாட்டைக்காரனைத் தடுத்தான்.

அவன் மீண்டும் தலைவணங்கினான். "இவர்கள் குற்றவாளிகள்." என்றான்.

“உன்பெயர் என்ன?” என்றான் ஏய்டன்.

“நீலமேகம். நான் ஐஸ்ஹவுஸில் மேஸ்திரியாக இருக்கிறேன்” என்றான். சற்று அப்பால் தெரிந்த ஐஸ்ஹவுஸை சுட்டிக்காட்டியபடி.

“நீலமேகம், நீ இவர்களைத் தண்டிக்க அதிகாரம் உள்ளவன் இல்லை. தெரிகிறதா?”

அவனுக்குப் புரியவில்லை. ஏய்டன் ஒவ்வொரு சொல்லாக மீண்டும் சொன்னான்.

நீலமேகம் பயத்துடன் கைகூப்பினான். கூப்பிய கை நடுவே சாட்டை இருந்தது. “இவர்கள் குற்றவாளிகள். குற்றவாளிகள்” என்றான்.

“இருக்கலாம். நீ இவர்களைப் பிடித்துக்கொண்டு போய் இவர்களின் பொறுப்பாளரிடம் ஒப்படை. அவர் இவர்களுக்கு சட்டப்படி என்ன தண்டனையோ அதைக் கொடுக்கட்டும்.” நீலமேகம் தலைவணங்கினான்.

“இவர்கள் ஊழியர்கள். அடிமைகள் இல்லை. பிரிட்டிஷ் முடியரசின் சட்டப்படி தன் ஊழியர்களைச் சாட்டையால் அடிக்க எந்தக் குடிமகனுக்கும் அதிகாரம் இல்லை. புரிகிறதா?”

அவன் கண்கள் வெண்மையாக இரு முட்டைகள் போல விழித்தன. “நீ இவர்களை சாட்டையால் அடித்தது குற்றம். உன் மேலதிகாரியிடம் நான் விசாரிக்கிறேன். அதற்கான தண்டனையை உனக்குத் தரவேண்டும் என்று அவருக்கு உத்தரவிடுகிறேன்.”

அவன் அதே போல விழித்துப் பார்த்தபடி நின்றான்.

“அவர்களைத் தூக்கி எழுப்பு” என்றான் ஏய்டன்.

நீலமேகம் உரக்கக் கூவி எதையோ சொன்னான். அவர்கள் கைகூப்பியபடி எழ முயன்றனர். அந்த ஆண் எழ முயன்றவன் தள்ளாடி மீண்டும் விழுந்துவிட்டான். “பிடி அவனை.” என்று ஏய்டன் கைசுட்டி ஆணையிட்டான். நீலமேகம் பேசாமல் நின்றான். அந்தப்பெண் அவன் காலைச்

சுட்டிக்காட்டி ஏதோ சொன்னாள். அவன் மீண்டும் எழ முயன்றான். அவனுடைய வலதுகால் சுரணையில்லாமல் இருப்பது தெரிந்தது. அது மரக்கால் என்றுதான் முதலில் ஏய்டனுக்குத் தோன்றியது. கறுத்து உலர்ந்த ஏதோ நாட்டுமரத்தின் குச்சி போல. அதை அவன் தன் கையால் தூக்கி வைத்துத்தான் அசைந்தான்.

ஏய்டன் அந்தப்பெண்ணை பார்த்து "அவனுக்கு என்ன?" என்றான்.

அவள் காலைச் சுட்டிக்காட்டி மீண்டும் ஏதோ சொன்னாள்.

"நீலமேகம், அவள் என்ன சொல்கிறாள்?" என்றான் ஏய்டன்.

"அவன் நடிக்கிறான் சார்."

ஏய்டன் சட்டென்று தலைக்குள் குருதி ஏறுவதை உணர்ந்தான். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நாளும் அவன் சந்திக்கும் மனிதர்களில் ஒருவன். ரத்தம் குடிக்கும் வௌவால்களைப் போன்றவர்கள். ஆங்கில அதிகாரத்தின் கோபுரத்தில் தலைகீழாகத் தொங்கும் பட்டாளம். இரவில் ஊரெல்லாம் சென்று குருதியை உறிஞ்சுவார்கள். "நான் உன்னிடம் உன் கருத்தைக் கேட்கவில்லை. அவள் சொல்வதை மொழிபெயர்க்கச் சொன்னேன்" என்றான்.

நீலமேகம் "பனிக்கட்டியால் கால் மரத்துவிட்டது என்கிறாள்" என்றான்.

"ஓ" என்றான் ஏய்டன். "சரி, நான் உன் மேலாளரிடம் பேசுகிறேன். இவனைத் தூக்கி உன் கம்பெனிக்குக் கொண்டு போ. இவனுக்கு என்ன மருத்துவம் செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள்." என்றபின் அந்தக் கரிய மனிதனிடம் குனிந்து "கம்பெனி. போ. மெடிசின். மர்ந்து. மர்ந்து. உண்டு" என்றான் ஏய்டன்.

அவனுக்கு என்ன புரிந்தது என்று தெரியவில்லை. கண்களில் கண்ணீருடன் கைக்கூப்பினான். அந்தப்பெண் அவன்

தோளைப்பிடிக்க அவன் எழ முயன்று வலி முனகலுடன் மீண்டும் விழுந்துவிட்டான்.

"பிடி" என்றான் ஏய்டன் நீலமேகத்திடம்.

நீலமேகம் "அவன் எழுந்து நடப்பான் சார்" என்றான்.

அப்போதுதான் நீலமேகத்திடம் இருந்த அந்த முரண்டல் ஏய்டனுக்கு உறைத்தது. சேவகம் செய்யும் கறுப்பர்கள் அவர்களின் சுயநலம் பாதிக்கப்படும்போது மாறாத பணிவுக்குள் காட்டும் உறுதியான எதிர்ப்பு. வெண்ணைக்குள் ஒளிந்திருக்கும் மீன்முள் போல தொண்டையில் குத்துவது. ஏய்டன் கறாரான குரலில் "நான் சொன்னதைச் செய். பிடி அவனை" என்றான். நீலமேகம் தலைகுனிந்து, உடலை இறுக்கி, பேசாமல் நின்றான்.

ஏய்டனுக்குப் புரிந்தது. இந்த உள்ளூர் மக்கள் பலர் ஒருவரை ஒருவர் தொடுவதில்லை. கீழிருக்கும் குலத்தைச் சேர்ந்த ஒருவனைத்தொட்டால் தாங்கள் அசுத்தமாகி விடுவோம் என நம்புகிறார்கள். சிலசமயம் குளித்தால்கூட அந்த அசுத்தம் நீங்குவதில்லை. பசுவின் சாணியைக் கரைத்து குடிக்கவேண்டும். அவர்களின் கோயில்களுக்குச் சென்று பிராயச்சித்தம் செய்யவேண்டும். சில சாதிகளில் தீண்டிய பாவம் போகத் தீயில் கையைத் தொட்டு தண்டனை அனுபவிக்கக் கூட வேண்டும்.

ஏய்டன் எரிச்சலுடன் "முட்டாள், இது என் ஆணை. அவனைத் தூக்கு" என்றான். அவன் முகம் சிவந்து மூச்சு இரைக்க ஆரம்பித்தது.

"மன்னிக்கவேண்டும். என்னால் முடியாது" என்றான் நீலமேகம்.

"தூக்கப் போகிறாயா இல்லையா?" என்று குரல் உடைய குழறியபடி சவுக்கை விரித்தான்.

"மன்னிக்கவேண்டும்" என்றான் நீலமேகம், அவன் பேசுவதுபோலவேத் தெரியவில்லை. கண்கள் உலோக உருளைகள் போல உயிரற்றிருந்தன.

ஏய்டன் "முட்டாள்" என்று கூவியபடி எருமைத்தோல் சவுக்கைத் தூக்கினான். அதன் நாக்கு ஏய்டனின் முகத்தில் உரசிச்சென்றது.

நீலமேகம் அப்படியே அசையாமல் நின்றான். ஏய்டன் சவுக்கை தாழ்த்தினான். மூச்சிரைக்க "நான் உன்னை சிறையில் தள்ளுவேன். நீ ஆறுமாதம் வெளியேவர முடியாது" என்றான். நீலமேகம் அசையாமல் அப்படியே நின்றான். அவன் உடலே ஒரு இறுகிய முஷ்டி போல அவனுக்கெதிராக நின்றது.

சில கணங்கள் எதுவுமே நிகழாமல் சென்றன. கீழே அந்த இருவரும் பிரமித்த விழிகளுடன் அசையாமல் பார்த்தனர். நீலமேகம் உறைந்து குளிர்ந்து அப்படியே நின்றதுபோலத் தெரிந்தான். பனிக்கட்டியால் ஆனவனைப்போல. அவனைத் தொட்டால் கைகள் குளிர்ந்து மரத்துப்போகும் என்ற பிரமை ஏய்டனுக்கு எழுந்தது. அவன் உடம்பெங்கும் ஒரு பதறல் பரவியது. அவன் கால்கள் தன்னிச்சையாகத் துடித்தன. "ஜீஸஸ்" என்றபடி தொப்பியை எடுத்துத் தலையைத் துடைத்தான். கைக்குட்டையால் முகத்தை அழுத்தி, கீழ்நோக்கி இழுத்து துடைத்தான்.

"சரி, நான் உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்" என்றபின் ஏய்டன் குதிரையின் விலாவைக் குதிமுள்ளால் குத்தினான். அது சற்று எம்பி முன்னால் பாய்ந்து கரிய கல்பாவிய பாதையில் சடசடவென ஓடியது.



# 2

ஏய்டன் தன் அலுவலக முற்றத்தில் குதிரையில் நுழைந்ததுமே துரைசாமியும் கண்ணனும் ஓடிவந்தார்கள். துரைசாமி கடிவாளத்தை அவன் கையிலிருந்து வாங்கிக் கொள்ள கண்ணன் குதிரையின் விலாவில் தொங்கிய தோல்பையை எடுத்துக்கொண்டான். ஏய்டன் சவுக்கைத் துரைசாமியை நோக்கி வீசிவிட்டு பூட்ஸ் கல்பரப்பில் ஒலிக்க வேகமாக நடந்து படிகளில் பாய்ந்தேறி, எதிரே வந்த சிப்பாய் சாமிக்கண்ணுவிடம் "சாம், உடனே நார்-ஐ என்னை வந்து பார்க்கச்சொல்." என்றான்.

அவன் தன் அறைக்குள் சென்று அமர்ந்துகொண்டதும் வெளியே குந்தியிருந்த அம்மாசிக் கிழவன் பங்காவை இழுக்க ஆரம்பித்தான். அறைக்குள் சாளரம் வழியாகவே காற்று பீரிட்டுக்கொண்டிருந்தது என்றாலும் பங்கா ஒரு அதிகார மரியாதை. பனைநார் வரிந்து செய்த நாற்காலியில் 'கிரீச்'சிட்டு அமர்ந்தபின் ஏய்டன் ஒருகணம் கண்களை மூடி அமர்ந்திருந்தான்.

தள்ளுகதவு 'கிரீச்'சிட்டதும் கண்களைத் திறந்து பார்த்தான். நாராயணன் உள்ளே வந்து விரைப்பாகச் சல்யூட் அடித்தான். ஏய்டன் அவனை அர்த்தமற்ற வெறிப்பு தோன்ற சில கணங்கள் பார்த்தான். தலைப்பாகை போன்ற நீலநிறமான

தொப்பி. அடர்சிவப்பு நிறமான லினன் மேல்கோட்டுக்குக் குறுக்காக ஓடிய தோல்பட்டையில் குண்டுச்சிமிழ்கள் வரிசையாகக் கோர்க்கப்பட்டிருந்தன. வயிற்றுப்பக்கம் திறந்திருந்த கோட்டுக்குள் வெள்ளைப் பருத்திச்சட்டையும் இடையில் கட்டப்பட்டிருந்த தோல்பட்டையும் தெரிந்தன. அதில் ஒருபக்கம் குத்துக்கத்தி, இன்னொருபக்கம் வெண்கலப்பிடி கொண்ட துப்பாக்கி. முட்டுவரை வரும் காக்கி நிறமான கால்சட்டை. காக்கி நிறமான கால்பட்டிகள். உள்ளூரிலேயே நயமில்லாமல் தைக்கப்பட்ட முரட்டுத் தோல் பூட்ஸுகள்.

இந்தியாவிலும் பர்மாவிலும் மலேசியாவிலும் எல்லாம் உள்ள பிரிட்டிஷ் சிப்பாயின் உடை ஒன்றுதான். ஆனால், ஒவ்வொரு இடத்திலும் உள்ளே இருப்பவர்கள் வேறு வேறு மனிதர்கள். எந்த அடையாளமும் அவர்களை ஒன்றுசேர்க்க முடியவில்லை. அவர்கள் அடையாளமென நினைப்பதே தங்களைப் பிரித்துக்கொள்வதற்காகத்தான். இந்த மனிதன் நெற்றியில் மெல்லிய செங்குத்தான சிவப்புக்கோடு ஒன்றைப் போட்டிருக்கிறான். அவன் மற்றவர்களில் ஒருவனல்ல என்று காட்ட விரும்புகிறான்.

"சர்" என்று நாராயணன் சொன்னதும் சம்பந்தமில்லாமல் ஏய்டன் "அது என்ன?" என்று அவன் நெற்றியைச் சுட்டிக்காட்டி கேட்டான்.

ஒரு கணம் திகைத்தபின் நாராயணன் "என்னுடைய மத அடையாளம் சர்" என்றான்.

அந்த வார்த்தையை இவர்கள் சரியாகவே கற்று வைத்திருக்கிறார்கள். சிப்பாய்களின் மத அடையாளங்களில் தலையிடக்கூடாதென்பது 'சிப்பாய் கலகத்து'க்குப் பின் ஆட்சியைக் கம்பெனியிடமிருந்து எடுத்துக்கொண்ட பிரிட்டிஷ் முடியரசின் கறாரான ஆணைகளில் ஒன்று. உடனே மிக நுட்பமாக எல்லாச் சாதியடையாளங்களையும் மத அடையாளங்களாக மாற்றிக்கொண்டுவிட்டார்கள். எப்படி அதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள் என்பதை பிரிட்டிஷார் புரிந்துகொள்ளவே முடிந்ததில்லை.

"ஓ" என்றான் ஏய்டன். "நீ மற்றவர்களைத் தொடுவாயா?"

நாராயணன் பேசாமல் நின்றான்.

"சொல்லு" என்றான் ஏய்டன்.

"தொடக்கூடாதவர்கள் உண்டு சார்" என்றான் நாராயணன்.

இவனை மட்டும் அனுப்புவதில் பயனில்லை என்று ஏய்டன் சட்டென்று முடிவெடுத்தான். லெஃப்டினென்ட் மக்கின்ஸி தேனாம்பேட்டைக்குச் சென்றிருக்கிறான். இங்கே இப்போது இருக்கும் வெள்ளையர்களில் அவனுக்கு மட்டும் தான் கையாளும் அளவுக்கு உள்ளூர் மொழி புரியும். இந்த கருப்புச்சிப்பாய்கள் எத்தனை உயர்பதவியில் இருந்தாலும், எத்தனை நீண்ட பணிவரலாறு கொண்டிருந்தாலும் நம்ப முடியாதவர்கள்.

"என்னுடன் வா." என்றபடி ஏய்டன் எழுந்துகொண்டான். "நம்முடைய படைவீரர்கள் இருபது பேரை அழைத்துக்கொள்" என்றபடி வெளியே நடந்தான்.

"ஆயுதங்களுடனா சார்?" என்றான் நாராயணன்.

"சாதாரண ஆயுதங்கள் போதும்." என்றான் ஏய்டன். படிகளில் விரைந்திறங்கி மீண்டும் முற்றத்திற்கு வந்தான். அதற்குள் மூத்துவிட்டிருந்த வெயில் கண்ணாடியை உருக்கி ஊற்றியதுபோல முற்றத்தில் விரிந்து கிடந்தது. கட்டிடங்களின் வெண்ணிறமான சுவர்கள் கண்கூச ஒளிவிட்டன. அப்பகுதி யெங்கும் நிறைந்திருந்த அலுவலகங்களின் தாழ்வான சிவந்த ஓட்டுக்கூரைகள் மீது வேப்பமரத்தின் மஞ்சள்நிற சருகுகள் பரவியிருந்தன. குயில் ஒன்று திரும்பத்திரும்ப ஒரே போலக் கூவிக்கொண்டிருந்தது. அது 'ஹலோ' என்று கூவுவது போல ஒரு பிரமை ஏய்டனுக்கு எழும்.

அலுவலக முகப்பில் ஏதோ கப்பலில் இருந்து எடுத்துக்கொண்டுவந்து நடப்பட்ட உயர்ந்த கொடிமரத்தை நட்டு இழுத்துக்கட்டிய கம்பிவடங்கள் காற்றைக்கிழிக்கும் ஒலி மெலிதாகக் கேட்டது. கொடிக்கம்பம் மீது 'யூனியன் ஜாக்'

கொடி கடற்காற்றில் படபடத்தது. அந்தக் கட்டிடமே கரையில் நிற்கும் ஒரு கப்பல் என்று ஏய்டன் நினைப்பதுண்டு. பல்லாயிரம் மைல் தாண்டி வந்து அது கரையேறி நின்று விட்டது. காலப்போக்கில் அதன் நங்கூரம் வேராக மாறி அது ஒரு பெரும் மரமாக வளரும். ஒரு காலத்தில் அது பாறையாகி, பின்பு மலையாகவும் கூடும்.

ஏய்டன் வெளியே வந்ததுமே துரைசாமி அவன் குதிரையுடன் ஓடிவந்தான். குதிரை தலையைத் திருப்பி ஏய்டன் மீது தன் பெரிய தலையை வைத்தது. அதன் எச்சில் கோழை தன் முழங்கைமேல் வழிய ஏய்டன் அதை உதறினான். சேணத்தை துரைசாமி இறுக்கிக்கொண்டிருக்கையிலேயே ஏய்டன் ஏறி அமர்ந்துவிட்டான். குதிரை காலைத் தூக்கிவைத்து சற்றே சுழன்று அவன் கடிவாளத்தை இழுக்கவும் தலைகுறுக்கி செருக்கடித்தது. நாராயணன் ஓடிச்சென்று கட்டிடத்தின் வலதுபக்கமிருந்த மரத்தாலான சிறிய மேடையில் ஏறிநின்று பியூகிளை ஊதினான். அதன் கனத்த பறவைக்குரல் கடற்காற்றில் ஏறி நீரில் வண்ணம் போல பிரிந்து கரைந்தது. அந்த ஓசையில் கட்டிடத்தின் பின்பக்கமிருந்த வீரர்கள் எழுந்து அணிவகுப்பதன் ஓசைகள் கேட்டன. ஏய்டன் சாலைக்குச் செல்லும்போது பின்னால் நாராயணனின் குரல் “கம்பெனி ஃபால் இன்” என உரக்க ஒலித்தது.

குதிரை சாலைக்கு வந்தபோது பின்பக்கம் இருபதுபேர் கொண்ட பிளட்டூன் ஓட்டநடையில் வரும் ஒலி கேட்டது. ஏய்டன் திரும்பிப்பார்க்கவில்லை. படைகள் போகும் ஒலியைக்கேட்டு கடலோரத்தின் இரு பண்டகசாலை அலுவலகங்களில் வெட்டிவேர்த் தட்டியைத் தூக்கிச் சிலர் எட்டிப்பார்த்தார்கள். எதிரே வந்த இரட்டைக்குதிரை ஃபீட்டன் வண்டி தயங்கியது. கடிவாளம் இழுக்கப்பட்ட குதிரைகள் தலையைக் குறுக்கி மெல்ல செருக்கடித்தபடி குச்சிக்கால்களைத் தூக்கின. இடப்பக்க வண்டிச்சக்கரம் அதிர வண்டி குடைசாய்வது போலச் சரிந்து ஒதுங்கியது. அதிலிருந்த வண்டிக்காரன் சாட்டையுடன் இறங்கி குதிரைகளைப் பிடித்தபடி நின்றான். வண்டிக்குள்ளிருந்து அலங்காரமான

சிவப்புநிற மும்முனைத்தொப்பி அணிந்த ஒரு வெள்ளைப் பெண்மணி எட்டிப்பார்த்தாள். பவுடர் பூசப்பட்ட வெளிறிய முகமெங்கும் சுருக்கங்கள் அடர்ந்திருந்தன. நீலநிறக்கண்கள் எந்த உணர்ச்சியுமில்லாமல் மாறிமாறி பார்வையில் அசைந்தன.

வண்டியைத்தாண்டிச் செல்லும்போது ஏய்டன் தனக்குப் பின்னால் பத்தடி தூரத்தில் நாராயணனின் தலைமையில் பிளட்டூன் வந்துகொண்டிருப்பதை உணர்ந்தான். பக்கவாட்டில் இருந்து ஒரு நிழல் அசைந்து வருவதுபோலக் கரிய யானை வந்து சாலையருகே நின்றது. அதன் கையில் மரத்தாலான பெரிய பெட்டி ஒன்று இருந்தது. அதன்மீது ஒருவன் நிர்வாணமாக அமர்ந்திருப்பது போலத் தெரிந்தது. அவன் உடுத்திருந்த அழுக்குக் கோவணம் யானையின் உடலுடன் மறைந்து விட்டதனால் எழுந்த பிரமை. கீழே ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன் கோவணம் மட்டும் அணிந்து கையில் குச்சிகளுடன் நின்றான். யானையைக்கண்டு குதிரை மெல்ல வெருண்டு பின்கால் வைக்க ஏய்டன் அதன் கழுத்தைத் தட்டி ஆறுதல் படுத்தினான்.

யானையின் மின்னும் சிறியகண்களை ஏய்டன் அரைக்கணம் சந்தித்தான். ஆழமான பாறையிடுக்குக்குள் தேங்கிய துளிநீர் போல. கரும்பாறையின் ஆன்மாவில் என்ன உறைகிறது? யானையைச் சிறிய குச்சியால் பழக்கி ஆட்டி வைக்கிறான் இந்த சிறிய மனிதன். அதன் கால்கள், அதன் தந்தங்கள், அதன் துதிக்கை, அதன் செவிகள் எல்லாமே அவனுக்குக் கட்டுப்பட்டுவிட்டன. ஆனால் இன்னும் அந்தக் கண்கள் அவனை ஏற்கவில்லை. யானையின் கண்களை மனிதர்கள் புரிந்துகொள்ளவே முடியாது. இருளுக்குள் உறையும் நெருப்பு போல ஏதோ ஒன்று அங்கே இருக்கிறது.

ஐஸ்ஹவுஸ் அருகே சென்றதும் நின்றான். அவன் சவுக்கடிபட்டவர்களைப் பார்த்த இடத்தில் யாருமில்லை. சற்று அப்பால் ஐஸ்ஹவுஸ் ஒரு கோட்டை போல உருளையான முகப்புடன் செந்நிறத்தில் எழுந்து நின்றது. வளைந்த முகடுகொண்ட ஏராளமான சன்னல்கள். அவற்றில் ஆம்பர்

கண்ணாடி பதிக்கப்பட்ட கதவுகள் எல்லாமே மூடப்பட்டிருந்தன. மேலே வட்ட வடிவமான முகப்பின் மீது இரு கொடிகள். 'யூனியன் ஜாக்' உயரமாகப் பறந்தது. அதனருகே 'ஃப்ரெடெரிக் டியூடர் அண்ட் கம்பெனி'யின் கொடி. நியூ இங்கிலாந்தின் வெள்ளையில் சிவப்புப்பட்டைகள் போட்ட கொடிதான். ஓரமாக நீலநிறச் சதுரத்துக்குள் வெண்ணிற விண்மீன்களாலான வட்டம்தான் வேறுபாடு.

பக்கவாட்டில் உள்ள வாயில்முகப்பில் உயர்தரமான ஃபீட்டன் கோச்வண்டி ஒன்று நின்றது. லண்டனில் இருந்து கொண்டு வரப்பட்டது. தோலா மெழுகா என மின்னும் மகோகனி மரத்தாலும் பொன்னிறம் மிளிர்ந்த வெண்கலத்தாலும் ஆனது. அதன் கதவில் வெள்ளியாலான அலங்காரங்கள். நான்கு அழகிய கருங்குதிரைகள் அருகே தனியாகக் கட்டப்பட்டிருந்தன. முகத்திலிருந்து தொங்கிய பையிலிருந்து கொள்ளு தின்றுகொண்டிருந்தவை அவர்களின் ஓசை கேட்டுத் திரும்பிப்பார்த்து சருமம் விதிர்த்தன. ஒரு குதிரை 'பர்ர்' என்றதும் மற்ற மூன்று குதிரைகளும் லேசாகச் சுழன்று தலையைத் தாழ்த்தியபின் குஞ்சிரோமம் சிலிர்க்க கழுத்தை ஆட்டி, தாடை தொங்கும் முகவாயை மேலே தூக்கின.

நாராயணனிடம் படைகளை நிற்கச் சொல்லிவிட்டு ஏய்டன் உள்ளே நுழைந்தான். உள்ளிருந்து 'டியூடர் அண்ட் கம்பெனி'யின் நிர்வாகி அமெரிக்கபாணி உயரத்தொப்பியைக் கடற்காற்று அசைக்காமல் கையால் பற்றிக்கொண்டு குட்டையான கோட்டும் இறுக்கமற்ற கால்சட்டையும் உயரமான சப்பாத்துகளுமாகச் செயற்கையான நிதானத்துடன் வெளியே வருவதைக் கண்டதுமே ஏய்டன் புரிந்துகொண்டான். அங்கே எல்லாமே ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன.

நிர்வாகி அவன் முன்னால் வந்து மிகச்சம்பிரதாயமாக வணங்கினார். கிழவர். தாடை இரண்டு மடிப்பாகத் தொங்கியது. பெரிய பரு பழுத்து நின்ற சிவந்த பெரிய மூக்கும் தொங்கிய கன்னங்களுமாகக் கனத்த வெண்பன்றியைப் போலிருந்தார்.

ஏய்டன் குதிரையிலிருந்து இறங்கி கடிவாளத்தைச் சிப்பாயை நோக்கி வீசிவிட்டு "நான் காப்டன் ஏய்டன் பைர்ன். உங்கள் நிறுவனம் பற்றிய சில விசாரணைகளைச் செய்வதற்காக வந்தேன்" என்றான்.

"தாராளமாக. நாங்கள் இங்கே முற்றிலும் சட்டபூர்வமான வியாபாரத்தை மட்டுமே செய்கிறோம்" என்றார் நிர்வாகி. "என் பெயர் நிக் பார்மர். நான் உங்களை அனேகமாகத் தினமும் பார்ப்பதுண்டு. உங்களை அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்பு அமையவில்லை. உள்ளே வாருங்கள்" அவரது வணக்கம் நாடகப்பாங்கானதாக இருந்தது. தீட்டப்பட்ட சிறிய இரும்பு உருளைகள் போன்ற அந்தக் கண்களை ஏய்டன் சந்தித்தான்.

ஏய்டன் படிகளில் ஏறியபடி "இங்கே வேலைசெய்யும் தொழிலாளி ஒருவனை உங்கள் கண்காணிப்பாளன் சாட்டையால் அடிப்பதை இன்று காலை பார்த்தேன். பிரிட்டிஷ் அரசின் எல்லைக்குள் ஊழியர்களை எஜமானர்கள் சாட்டையாலடிப்பது குற்றம். அந்தக் கண்காணிப்பாளனை நான் விசாரிக்க விரும்புகிறேன்" என்றான்.

பார்மர் கண்களில் கவனத்துடன் "மன்னிக்கவும். அது எங்கள் கண்காணிப்பாளராக இருக்காது. நாங்கள் இங்கே எவரையுமே அடிப்பதில்லை. முழுக்க முழுக்க சட்டபூர்வமான தொழிலையே செய்கிறோம். நீங்கள் எங்கள் எல்லா ஆவணங்களையும் கணக்குகளையும் சரிபார்க்கலாம்." என்றார்.

ஏய்டன் அவரது கண்களைப்பார்த்தான். "நான் ஆவணங்களைச் சரிபார்க்க இங்கே வரவில்லை. அந்த கண்காணிப்பாளரை விசாரிக்கத்தான் வந்தேன்"

பார்மர் பணிவாக "நான் எல்லாக் கண்காணிப்பாளர்களையும் வரச்சொல்கிறேன். நீங்கள் விரிவாக விசாரிக்கலாம். அந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்க வாய்ப்பே இல்லை. எங்கள் சட்டங்களும் அதை அனுமதிப்பதில்லை" என்றார்.

சில கணங்கள் இருவர் கண்களும் உரசிக்கொண்டு நிலைத்து நின்றன. பின்பு ஏய்டன் பெருமூச்சுடன் "நான் உங்கள் பண்டகசாலைக்குள் சென்று பார்க்கலாமா?" என்றான்.

பார்மர் "அதற்கான அனுமதி." என இழுக்க ஏய்டன் "அனுமதி ஏதும் எனக்குத் தேவையில்லை. நான் பிரிட்டிஷ் அரசின் காவல்துறை மேலாளர்" என்றான்.

"ஆனால், நாங்கள் அமெரிக்கர்கள். பிரிட்டிஷ் அரசுடன் முறையான வணிக ஒப்பந்தம் போட்டிருக்கிறோம்" என்றார் பார்மர்.

"உண்மைதான். ஆனால் உங்கள் பண்டகசாலை இருப்பது எங்களுடைய மண்ணில். மாட்சிமைதங்கிய அரசியின் மணிமுடிக்குக் கீழே எங்கள் சட்டத்துக்கு மாறான ஒன்று நடப்பதை நான் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது"

பார்மர் "நான் அனுமதித்து நீங்கள் உள்ளே சென்றால் என்னிடம்தான் கேட்பார்கள்" என்றார்.

"சரி நானே உள்ளே சென்றேன் என்று உங்கள் மேலிடத்துக்குச் சொல்லுங்கள்" என்றபின் ஏய்டன் சடசடவென காலணியின் லாடம் கல்படிகளில் ஒலிக்க ஏறி உள்ளே சென்றான். பார்மர் அவனைத் தொடர்ந்து வந்தார். ஏய்டன் நாராயணனிடம் வாசலில் நிற்கும்படி சைகை காட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். கனத்த உயரமான கதவு அரைவாசி திறந்திருந்தது. அதற்கு அப்பால் கரியநிறத்திலான கனத்த திரை தொங்கியது. திரைக்கு அப்பால் சென்றதும் ஏய்டன் கண்ணுக்கு ஒன்றுமே தெரியவில்லை. வெயிலில் வந்த கண்கள் அங்கிருந்த முக்காலிருட்டில் முற்றிலுமாகப் பார்வை இழந்தன.

"சன்னல்களைத் திறங்கள்" என்றான் ஏய்டன்.

"இல்லை. உள்ளே வெளிச்சம் அனுமதிக்கப் படுவதில்லை." என்றார் பார்மர்.

"ஏன்?"

"வெளிச்சமும் வெப்பமும் ஒன்றுதான். இது வெப்ப மண்டல நாடு." பார்மர் சொன்னார்.

ஏய்டன் "ஓ" என்றபடி கண்களைக் கொட்டிக் கொட்டி இருட்டுக்குப் பழக்கினான். மெல்ல மெல்ல நிழல்களாகச்

சுவர்களும் வாசல்களும் தெரிய ஆரம்பித்தன. சில கணங்களில் அவை முப்பரிமாணம் கொண்டன. உள்ளே ஆட்கள் வேலைசெய்யும் பேச்சொலிகள் கேட்டன. ஆனால், மிக மெல்லிய ஒலிகள். நீருக்குள் மூழ்கும்போது மேலே கேட்கும் ஒலிகளைப்போன்றவை. முனகல்கள், மூச்சொலிகள், எடைதூக்கும் ஒலிகள்.

பெரிய நீள்அரைவட்டக் கூடத்தைச் சுற்றி நீள் அரைவட்டமான வராந்தா. அதன் எல்லாக் கதவுகளும் மூடப்பட்டு உள்ளே கனத்த கரிய கம்பளித்திரைகள் போடப்பட்டிருந்தன. உள்ளே கூடத்துக்குச் செல்லும் வாசல்களிலும் கனமான கம்பளி பனித்திரைகள் தொங்கின. ஏய்டன் ஒரு திரையை விலக்கி உள்ளே சென்றான். இருட்டுக்குப் பழகிய கண்ணுக்கு முன் தெரிந்ததை மத்தியகால ஐரோப்பிய ஓவியங்களில் ஒன்றாகவே அவன் பிறகு எப்போதும் நினைவுகூர்ந்தான். தாந்தேயின் நரகச் சித்திரிப்பைக் கரியால் ஓவியமாக வரைந்ததுபோல. நரகத்தின் கடுங்குளிர் அலைபோல எழுந்து காதுமடல்களையும் கைவிரல்களையும் தாக்கியது.

நான்கு பக்கமும் படிகள் இறங்கிச்சென்ற ஐந்தடிப் பள்ளத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மனித உருவங்கள் வேலைபார்த்துக் கொண்டிருந்தன. கரிய நிழல்கள் போன்ற வடிவங்கள். அவர்கள் மூச்சுப்பிடிக்கும் ஒலிகளும் முனகலாக பேசும் ஒலிகளும் கேட்டன. ஆனால், என்ன செய்கிறார்கள் என்பது புரியவில்லை. கரியசேற்றில் புழுக்கள் நெளிவதுபோல அவர்கள் இருளுக்குள் அசைந்தார்கள். அவர்கள் இருட்டை உந்தித்தள்ளுகிறார்கள் என்ற எண்ணம் வந்தது. இல்லை, இருட்டை அள்ளிப் பற்றுகிறார்கள், அல்லது இருட்டில் தொற்றி ஏறமுயல்கிறார்களா? காக்கி கால்சட்டையும் கம்பளிக்கோட்டும் அணிந்து வெண்ணிறமான தலைப்பாகை வைத்த கண்காணிப்பாளன் ஒருவன் கைநீட்டி உள்ளூர் மொழியில் ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

"என்ன செய்கிறார்கள்?" என்றான் ஏய்டன்.

"காட்டுகிறேன்." என்ற பார்மர் "வெளிச்சம்." என்று ஆணையிட்டார். அந்தக்கூடத்தின் மேலே இருந்த சிறிய

சாளரத்திறப்பு ஒன்றை நோக்கி இரும்பு ஏணியில் ஏறிச்சென்ற ஒருவன் அதன் சிறிய கதவைத் திறந்தான். வெளியே இருந்து வெயிலொளி ஒரு கண்ணாடிப்பட்டைத்தூண் போல உள்ளே சரிந்தது. அது வந்து தொட்ட இடத்தில் ஒரு பிரம்மாண்டமான பனிக்கட்டி இருந்தது. ஒளி பட்டதுமே அதன் மேல்பரப்பு மென்மையான வெண்ணிறம் கொண்டது. அதைப் போர்த்தியிருந்த வெண்ணிறத்திரைகள் ஒவ்வொன்றாக உரிந்து விழுவது போல, இன்னும் அதிக வெண்ணிறமான திரைகள் உரிய ஆரம்பிப்பதுபோல அது துல்லியமடைந்து சென்று கண்ணெதிரே ஓர் ஒளிதேங்கிய கண்ணாடித்தொட்டியாக மாறியது.

பனிக்கட்டியிலிருந்து எழுந்த ஒளியை வாங்கி அறையின் சாம்பல்நிறமான சுவர்கள் உருவாகிவந்தன. ஒளியின் பின்னணியில் கரிய மெல்லிய மனித உருவங்களைக் கண்டான். அவர்கள் அந்த பனிக்கட்டியைச் சுற்றி இருந்த மரப்பட்டைகளை விலக்கிக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட ஆறடி உயரமும் ஆறடி அகலமும் எட்டடி நீளமும் கொண்ட பனிக்கட்டியில் இருந்து கடப்பாரைகளால் நெம்பி விலக்கப்பட்ட மரப்பட்டைகளை அள்ளி ஓரமாக குவித்தார்கள். முற்றிலுமாக வெளிப்பட்ட பனிக்கட்டி நன்றாகவே ஒளியை வாங்கி சுடர்விட்டது. அதன் உள்ளே குமிழ்களும் விரிசல்களும் தெரிந்தன.

"இது எங்கிருந்து வருகிறது?" என்றான் ஏய்டன், அவனால் அதிலிருந்து கண்களை விலக்கவே முடியவில்லை.

"வட அமெரிக்காவில் இருந்து. எங்களுடைய பனிக்கட்டி அறுவடை முழுக்க நியூஇங்கிலாந்தின் ஏரிகளில்தான். அங்குள்ள அளவுக்குத் துல்லியமான நீர் வேறெங்கும் இல்லை. எங்கள் பனிக்கட்டியைப்போல சுவையான பனிக்கட்டி உலகில் எங்குமே கிடைக்காது" ஏய்டன் அந்த பனிக்கட்டியையே பார்த்தான். எட்டாயிரம் மைல் தூரத்தை ஆறுமாதகாலத்தில் தாண்டி வந்து சேர்ந்திருக்கிறது.

ஏய்டன் "எப்படி இது உருகாமல் வந்தது?" என்றான்.

"பனிக்கட்டி எவ்வளவு பெரிதோ அந்த அளவுக்கு அது உருகுவது குறையும். அந்த பனிக்கட்டி உருவாக்கும் குளிரே அது உருகுவதைத் தடுத்துவிடும். நியூ இங்கிலாந்தின் ஏரிகள் குளிர்காலத்தில் உறையும்போது ரம்பங்களால் வெட்டி எடுத்து ஏரிகள் மேலேயே சறுக்கவைத்து இழுத்துக்கொண்டுபோய் வண்டிகளில் ஏற்றுவார்கள். அங்கிருந்து கப்பல்களுக்கு வரும். பெரிய பெட்டிகளில் மரத்தூளும் உப்பும் கலந்து செய்த பாளங்கள் நடுவே பனிக்கட்டியை வைத்து எடுத்து வருவோம். கப்பலின் அடித்தட்டில் இவை ஏற்றப்படுவதனால் வெளியிலிருந்து வெப்பம் உள்ளே போவதில்லை. ஆறுமாதத்தில் ஐந்துசதவீதம்வரை உருகும். அது பெரிய விஷயமல்ல"

"இது எவ்வளவு எடை இருக்கும்."என்றான் ஏய்டன்.

"முப்பது டன். கிட்டத்தட்ட பத்து யானையின் எடை" பார்மர் சொன்னார். ஏய்டன் பனிக்கட்டியையே பார்த்துக் கொண்டிருந்தான். அதன் விளிம்புகள் உருகி மழுங்கி மொண்ணையான சதுரவடிவில் இருந்தது. சதுர வடிவில் ஒரு யானை. வெண்ணிறமான யானை. அதன் பார்வையே அதன் உடலாக ஆகி ஒளிவிட்டுக்கொண்டிருந்தது போலத் தோன்றியது. 'Still, snowy and serene - its subject mountains their unearthly forms. Pile around it, ice and rock' அர்த்தமற்ற அல்லது அறியாத அர்த்தமுள்ள வரிகள். அனேகமாக ஷெல்லியுடைய கவிதை.

சட்டென்று 'கீரீக்' என்ற ஒலி அவனை அதிரச்செய்தது. பார்மரின் பேச்சும் அச்சூழலும் சேர்ந்து தொடர்பற்ற சொல்லோட்டமாக ஆகிவிட்டிருந்த அவன் பிரக்ஞை அதிர்ந்து வெருண்டது. பனிக்கட்டி ஒருபக்கம் அதன் மீது அளிக்கப்பட்ட ஏதோ அழுத்தத்தால் சறுக்கிக் கிளம்பி தரையில் உரசியபடி நகர்ந்தது. வெள்ளையானை உறுமியபடி மத்தகம் தாழ்த்திக் கொலைவெறியுடன் முன்னகர்ந்தது. வேலையாட்கள் பதறி உரக்கக் கூச்சலிட்டார்கள். கண்காணிப்பாளன் கைகளை வீசி ஆவேசமாகக் குரலெழுப்பியபடி மேலே விளிம்பில் ஓடினான். அதற்கும் அவன் சவுக்கால்தான் சுண்டி சுண்டி ஒலியெழுப்பினான்.

இன்னொரு கண்காணிப்பாளன் மறுபக்கவாசல்வழியாக உள்ளே வந்து கூச்சலிட்டான். வெள்ளையானை தன் மத்தகத்தால் நாலைந்துபேரைச் சுவரில் வைத்து நசுக்க முற்பட்டது. அவர்களில் இருவர் கீழே கிடந்த மரப் பட்டைகளை அதற்கும் சுவருக்கும் நடுவே கொடுத்தார்கள். சடசடவென இரு மரப்பட்டைகள் மரண முனகலுடன் முறிந்தன. அதற்குள் அவர்கள் விலகிக்கொண்டார்கள். 'மரப்பட்டைகளை உடைத்து நெரித்தபடி பனிக்கட்டி இறுகிச்சென்று சுவரில் மோதி நின்றது.

"அதன் எடை அதிகம்." என்றார் பார்மர். "ஆனால் சமதளமான எந்தப்பரப்பிலும் அது எளிதாக வழுக்கி நகரும். அதன் அடிப்பகுதி எடைகாரணமாக நொறுங்கி உருகிக் கொண்டே இருப்பதனால் அது எப்போதும் நிலை கொள்ளாமல்தான் அமர்ந்திருக்கும். ஆகவே கொஞ்சம் ஆபத்தானது."

ஏய்டன் தன் உடலின் நடுக்கம் மெல்ல அடங்கும் வரை காத்திருந்தான். பின்பு "இங்கே உயிராபத்துகள் உண்டா?" என்றான்.

"அடிக்கடி இல்லை" என்றார் பார்மர். "அவர்கள் பழகியவர்கள்"

அவர்கள் அந்தப்பனிக்கட்டியை நடுப்பகுதிக்குக் கொண்டு வர முயல்வதை ஏய்டன் கவனித்தான். வெள்ளையானை மீது வடங்கள் போடப்பட்டுக் கட்டி மெல்ல இழுத்து நிறுத்துவது போலத்தான் இருந்தது. உயிர்ப்பலி எடுக்காமல் அது அடங்காது என்று தோன்றியது.

பனிக்கட்டியின் அடியில் ஆப்புகள் வைத்து இறுக்கி அதை உறுதியாக நிலைநிறுத்திவிட்டு அவர்கள் மேலேறினார்கள். அவர்கள் மேலே வந்தபோது கன்னங்கரிய உடல்கள் கடற்காற்றில் துணிகளும் பாய்களும் படபடப்பது போல நடுங்கி அதிர்ந்து கொண்டிருப்பதை ஏய்டன் கவனித்தான். அவர்கள் நீரில் இருந்து எழுவதுபோலச் சொட்டிக் கொண்டிருந்தார்கள். கரிய உடல்களில் வெள்ளைநிறமான

பெரிய பற்களும் சிப்பிகள் போன்ற வெண்ணிறமான கண்களும் மட்டும் தெரிந்தன. வெளியே கறுப்பர்நகர் முழுக்க அவன் பார்க்கும் அதே ஊமைச்சனங்கள். எந்நேரமும் முழு உடலாலும் வணங்கி ஒடுங்கும் நிலையில் நிற்பவர்கள். அந்தக் கண்களுக்கு அப்பால் என்ன இருக்கிறது? அவர்கள் பேசிக்கொள்ளும் மெல்லிய குரலில் ஒளிந்திருக்கும் பொருள் என்ன?

அவர்கள் தங்களுக்குள் கூவிப்பேசிக் கொண்டார்கள். பனிக்கட்டிக்கு இரு பக்கங்களிலும் நால்வர் ஏறி அமர்ந்தார்கள். பனிக்கட்டி மேல் நீளமான இரும்பு ரம்பங்கள் இரண்டு வைக்கப்பட்டன. ரம்பத்தின் இருமுனைகளையும் இரண்டிரண்டு பேராகப் பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் மரத்தை அறுப்பதுபோலப் பனிக்கட்டியை அறுப்பதை ஏய்டன் பார்த்தான். பனிக்கட்டி எதிர்த்து உறுமுவது போல 'உர்ர் உர்ர்' என ஒலி எழுந்தது. உதிரும் பனித்துகள்கள் வெண்ணிறமாகக் கீழேக் குவிந்தன.

"இங்கே நாங்கள் பனிக்கட்டியைத் துண்டுகளாக ஆக்குகிறோம். மீண்டும் மரத்தூள்பெட்டிகளில் வைத்துத் தேவைப்படும் இடங்களுக்கு வண்டிகளில் ஏற்றி அனுப்புகிறோம். வடக்கே செகந்திராபாதில் இருந்து தெற்கே தென்காசி வரை எங்கள் பனிக்கட்டிகள் போகின்றன. எங்கள் பனிக்கட்டிகள் இல்லாமல் இங்கே கலெக்டர்களின் மது விருந்துகள் நடப்பதில்லை. உண்மையில் நல்ல மதுவைவிடவும் எங்கள் பனிக்கட்டி விலை அதிகமானது." பார்மர் சுட்டிக் காட்டினார் "அந்த பனித்தூளை உப்புடனும் மரத்தூளுடனும் கலந்து கட்டிகளாக்கி சுற்றிலும் வைத்தால் பனிக்கட்டிகள் உருகாமல் போய்ச்சேரும்."

தன் உடல் நடுங்கிக்கொண்டிருப்பதை ஏய்டன் அப்போதுதான் உணர்ந்தான். கைகளைக் கோட்டுப் பைக்குள் விட்டுக்கொண்டு மெல்ல வெளியே நடந்தான். வெளியே வந்ததும் காதுமடல்களும் கன்னங்களும் அடுப்புக்கனல் பட்டதுபோல வெம்மை கொண்டன. அப்போதுதான் உள்ளே எத்தனை குளிர் இருந்திருக்கிறது என்று அவன் உணர்ந்தான்.

வெற்றுடலுடன் அங்கே வேலைசெய்கிறார்கள். நாள்முழுக்க. அதிலும் இந்த மக்கள் வெப்பமண்டலத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். பனிக்கட்டியை வேறெங்காவது அவர்கள் பார்த்திருப்பார்களா?

அங்கே அவன் தேடிவந்த இருவரும் கண்டிப்பாக இருக்கமாட்டார்கள் என்று அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது. அவன் மனம் பொருள்தெரியாத கனவொன்றைக் கண்டு கலைந்து விழித்தது போல மங்கலான எண்ணங்களுடன் அழிந்து அழிந்து மீண்டது. "மிஸ்டர் பார்மர், இந்த வேலையாட்கள் ஏன் குளிருக்கான ஆடை அணியக்கூடாது?" என்றான்.

பார்மரின் முகத்தில் மெல்லிய புன்னகை வந்தது. "இந்த ஈரத்தில் கம்பளி ஆடைகள் அணிந்தால் அவை நனைந்து மிகவும் கனமானவையாக ஆகிவிடும்." என்றார்.

சட்டென்று எல்லா மயங்கலும் மறைந்து ஏய்டன் தன்னுடைய மொத்தக்குருதியும் தலைக்கு ஏறுவதை உணர்ந்தான். "மிஸ்டர் பார்மர், ஈரம் புகாத உடைகள் அமெரிக்காவில் உண்டு என்று நினைக்கிறேன்" என்றான்.

பார்மர் தலைவணங்கி கண்களில் எஞ்சிய சிரிப்புடன் "ஆமாம். ஆனால், இந்த மக்கள் பொதுவாக உடைகள் அணிவதையே விரும்புவதில்லை. வெளியே கருப்புநகரத்திற்குப் போனால் நீங்களே பார்க்கலாம். பெரும்பாலானவர்கள் முக்கால் நிர்வாணமாகத்தான் வாழ்கிறார்கள்"

ஏய்டன் தன்னுடைய கோபத்தை அடக்கிக் கொண்டான். இந்தக் கிழட்டுநரியுடன் விவாதிப்பது வீண் என்ற எண்ணம் ஏற்பட்டது. பெருமூச்சுடன் "சரி, மிஸ்டர் பார்மர், உங்களுடைய கங்காணிகளை எல்லாம் என் அலுவலகத்துக்கு அனுப்பி வையுங்கள்" என்றான்.

"கண்டிப்பாக" என்று பார்மர் தலைவணங்கினார்.

கடலோரமாகச் செல்ல ஆரம்பித்தபோது ஏய்டன் நன்றாகக் குனிந்து நிலத்தையே பார்த்தான். கண்கள் கூசி

மூடிக்கொள்ள கண்ணீர் பொங்கி கன்னங்களில் வழிந்தது. பட்டுக் கைக்குட்டையால் கண்களைத் துடைத்தான்.

நாராயணன் "செர்?" என்றான்.

"பிளட்டூனைக் காம்புக்கு திரும்பச்சொல்லு" என்றான்.

நாராயணன் பியூகிளை ஊதி ஆணைகளைக் கூவியதும் பிளட்டூன் அப்படியே கப்பலின்பாய் காற்றில் திரும்புவதுபோல மறுபக்கமாகத் திரும்பி ஆயிரங்காலட்டையைப்போல வரிசையான காலசைவுகளுடன் நடக்க ஆரம்பித்தது.

கடற்கரைச்சாலையில் பிளட்டூன் சென்று கொண்டிருந்தபோது ஏய்டன் நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தான். சரியாக ஐநூறடி தூரம் சென்றதும் தன் இடுப்பிலிருந்த விசிலை உருவி ஊதினான். பிளட்டூன் அப்படியே நிலைத்தது. "கம்பெனி ரிவர்ஸ் சார்ஜ்." எனக் கூவிவிட்டு குதிரையைத் திருப்பி வேகமாக ஐஸ்ஹவுஸ் நோக்கிப் பாய்ந்துசென்றான். நாராயணன் அந்த ஆணையைக் கூவ அவனுக்குப் பின்னால் உருளும் பாறைக்கூட்டங்கள் போல படை பொங்கி வந்தது. கடலலை போல அவர்கள் பொங்கிச் சென்றார்கள்.

சில நிமிடங்களிலேயே அவன் ஐஸ்ஹவுஸை அடைந்துவிட்டான். வாளை உருவியபடி குதிரையிலிருந்து பாய்ந்து ஐஸ்ஹவுஸுக்குள் தடதடவென நுழைந்தான். உள்ளிருந்து பார்மர் ஓடிவந்தார். கைகளை விரித்தபடி ஏதோ சொல்ல முயன்றார். உறைந்த முகம் காற்றில் மெல்ல உச்சரிப்பொன்றை நோக்கி குவிவதை நெருக்கமாக அரைக்கணம் கண்டான். ஏய்டன் தன் காலால் ஓங்கி அவர் மார்பை மிதித்தான். மூச்சடைக்கும் ஒலியுடன் பார்மர் அப்படியே தரையில் மல்லாந்து விழுந்தார்.

நாராயணன் தலைமையில் படை உள்ளே புகுந்து புதுவெள்ளம் போல நிரப்பியது. "இங்கிருக்கும் அத்தனை பேரையும் இழுத்துக்கொண்டுவந்து முற்றத்தில் நிறுத்துங்கள்" என்றான் ஏய்டன். தரையில் கிடந்த பார்மரின் ஒற்றைக் கண்ணாடியை காலால் உதைத்துத் தள்ளியபடி ஐஸ்ஹவுஸின்

அரை இருட்டான அறைக்குள் நுழைந்தான். சுற்றிவந்த வராண்டா வழியாக பூட்ஸ் ஒலிக்க உருவிய கத்தியுடன் நடந்தான். வீரர்கள் அங்கிருக்கும் அனைவரையும் பிடித்து முன்னால் உந்தினர். ஏய்டன் அறைகள் தோறும் சுற்றிவந்தான். அது வெறும் பண்டகசாலைதான், அலுவலகம் அல்ல என்று தெரிந்தது.

ஏய்டன் முகப்புக்கு வந்தபோது இருநூற்றுக்கும் மேற்பட்ட கன்னங்கரிய அரைநிர்வாண மானுட உடல்கள் முற்றத்தில் நின்றிருந்தன. அவர்களின் உடலிருளில் அப்பகுதியே ஒளிகுறைந்தது போலிருந்தது. அவன் படிகளில் இறங்கி அவர்களை நோக்கி வந்தான். அவனுடைய வருகையை அவர்களின் கண்கள் மட்டும் அசைந்து வந்து பீதியுடன் கவனித்தன.

நாராயணன் இறுக்கமாகி சல்யூட் அடித்தான். "எல்லாரும் வந்துவிட்டார்கள் சார்."

ஏய்டன் "எல்லா இடங்களையும் பார்த்துவிட்டாயா?" என்றான்.

"ஆமாம் சார். அவர்களின் பாதுகாப்பறைகளைக் கூட சோதனையிட்டு எல்லாரையும் இழுத்துவரச் சொல்லி விட்டேன்" நாராயணன் சொன்னான்.

ஏய்டன் அவர்கள் முன் வந்து நின்றான். அவனுடைய சட்டை கடல்காற்றில் பின்பக்கம் உப்பி படபடத்த ஒலி மட்டும் கேட்டது. அவன் தன் குதிரை அருகே வந்ததும் அது 'பர்ர்' என ஒலியெழுப்பி தலைகுனிந்து அவன் மேல் கன்னத்தை உரசியது. தன் முன்னால் நின்றவர்களை ஏய்டன் உற்றுப் பார்த்தான். பன்னிரண்டு கண்காணிப்பாளர்கள். அவர்கள் எல்லாருமே காக்கி கால்சட்டையும் காக்கிநிற கம்பளி மேல்சட்டையும் போட்டு கால்களில் பெரியபூட்ஸுகளும் கால்பட்டிகளும் அணிந்திருந்தார்கள். தலையில் வைத்திருந்த கம்பளித்தொப்பியைக் கைகளிலோ அக்குளிலோ வைத்து அச்சம் நிறைந்த கண்களால் பார்த்தபடி நின்றனர். அவர்களுக்குப் பின்னால் ஈரம்சொட்டும் அழுக்குக்

கோவணங்கள் மட்டும் அணிந்த மனிதர்கள். விறகுக்கட்டை காட்டுக்கொடியால் கட்டிவைத்ததுபோல எலும்புகள் மீது நரம்புகள் சுற்றிய உடல்கள்.

ஏய்டன் அவர்கள் முன் வந்து நின்றான். கங்காணிகளைப் பார்க்காமல் அவன் கவனம் முழுக்க அந்தத் தொழிலாளர்கள் மீதே நிலைத்து விட்டது. நெஞ்சு 'தம் தம்' என அடிப்பதைக் கேட்டபடி அவன் கண்களும் பிரக்ஞையும் மட்டுமாக நின்றான். அத்தனை தொழிலாளர்களுக்கும் சருமம் முழுக்க பாறையில் பாசிபடர்ந்தது போல சாம்பல் பூச்சாகத் தேமல். அக்குள்களிலும் கழுத்திலுமெல்லாம் செவ்வெண்ணிறமான புண்கள். சில புண்கள் சிறு மீன்களின் வாய்கள் போலத் திறந்திருந்தன. தோண்டப்பட்ட கண்கள் போலச் சில விழித்திருந்தன. கைகளிலும் கால்களிலும் விரல்கள் அழுகிய நீர்ப்பாம்புக்குஞ்சுகள் போலத் தோல் உரிந்து சதை வெளுத்து விரைத்திருப்பதைக் கண்டான்.

சில கணங்களுக்குப்பின்னர் பிடரியில் ஓர் அறை விழுந்ததைப்போல ஒன்றைக் கவனித்தான். அத்தனை பேருடைய கால்களும் விதவிதமாக வளைந்தும் கோணியும் நிலத்தில் ஊன்றியிருந்தன. விசித்திரமான ஏதோ முட்புதர்க் கூட்டம் போல. அவன் "ஜீஸஸ்!" என்று பெருமூச்சு விட்டான். பிரக்ஞையைப் பிடுங்கி மீட்டு தொலைவில் அலையடிக்கும் கடலைப் பார்த்தான். சட்டென்று அந்த மனிதர்கள் எல்லாம் கடலில் இருந்து அள்ளிக் கரைக்கு வைக்கப்பட்டவர்கள் என்று தோன்றியது. திரும்பியபோது அவர்களின் கண்களைப் பார்த்தான். அழுகி மட்கிய திராட்சை விழிகள். அர்த்தமற்ற வெறிப்பு மட்டுமேயான பார்வைகள். அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

மேலே என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. அத்தனைபேரும் அவன் உதடுகளைப் பார்த்தபடி நின்றிருந்தார்கள். சமநிலைக்கு வந்து அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தபோதுதான் அவர்களிடமிருந்து வந்த நெடியை அவன் நாசி அறிந்தது. புண்களின் நாற்றம். அழுகும் சதையின் நாற்றம். குமட்டுவது போல உடல் உலுக்கியதைக் கட்டுப்படுத்திக்

கொண்டான். கங்காணிகளை ஒவ்வொருவராகப் பார்த்தான். சில நிமிடங்களுக்குள் அவன் நீலமேகத்தை அடையாளம் கண்டுகொண்டான். ஆனால் தொழிலாளர் கும்பலில் அடிபட்டவர்களைப் பார்க்க முடியவில்லை. எல்லா முகங்களும் ஒன்றுபோலிருப்பதாகப் பிரமை எழுந்தது.

நீலமேகம் அஞ்சி நடுங்கி நிற்கவில்லை என்பதை ஏய்டன் கவனித்தான். மாறாக அவன் எல்லா போதங்களையும் உள்ளிழுத்துக்கொண்டு உறைந்து நின்றான். தலை கீழிறங்கவில்லை, கண்கள் சரியவில்லை. கடற்சிப்பிகள் போல இரு கண்களும் அவனையே பார்த்து நின்றன. "நீலமேகம். முன்னால் வா" என்று ஏய்டன் கூப்பிட்டான்.

நீலமேகம் முறையாக நடந்து முன்னால் வந்து நின்றான்.

"இன்று காலையில் நீ சாட்டையாலடித்த அந்த வேலையாட்கள் எங்கே?" என்றான் ஏய்டன்.

நீலமேகம் "அவர்கள் இங்கே இல்லை" என்றான்.

"எங்கே போனார்கள்?" என்றான் ஏய்டன்.

"அவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது சார்"

"தெரியாதா? அவர்கள் இங்கேதானே வேலை செய்தார்கள்?"

"அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் இங்கே வேலை செய்யவில்லை. ஏனென்றால் அவர்கள் இங்கே வரவில்லை." என்றான் நீலமேகம்.

ஏய்டன் பொறுமையை வரவழைத்தபடி "அவர்கள் உன்னுடன் வரவில்லையா?" என்றான்.

"இல்லை. என் பின்னால் வரச்சொல்லிவிட்டு நான் இங்கே வந்தேன். அவர்கள் என் பின்னால் வரவில்லை. அவர்கள் ஐஸ்ஹவுஸ் வேலையாட்கள் இல்லை."

ஏய்டன் சட்டென்று கோபம் பீரிட கிரீச்சிட்ட குரலில் "உன் ஊழியர்கள் என்று நீதான் சொன்னாய். அவர்கள் வேலைசெய்யாததனால் சாட்டையால் அடிப்பதாகச் சொன்னாய்."

அவன் "ஆமாம், நான் அப்படித்தான் நினைத்தேன். ஆனால், அவர்கள் இங்கே வரவில்லை." என்றான்.

தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள ஏய்டன் அருகில் நின்ற குதிரையைத் தடவினான். பின் மூச்சை மெதுவாக விட்டபடி "அவர்கள் உண்மையில் எங்கே?" என்றான்.

"அவர்கள் கருப்பு நகரத்துக்குள் தங்கள் குடியிருப்புக்குச் சென்றிருப்பார்கள்."

"அந்த இடம் எது என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியாது. நாங்கள் அங்கெல்லாம் போவதில்லை"

ஏய்டன் இமைக்காமல் பார்த்தான். அவனுக்கு நீலமேகம் சொல்வதென்ன என்று நன்றாகவே புரிந்தது. "அவர்கள் இருவரையும் உடனடியாக என் முன் கொண்டுவந்து நிறுத்தவேண்டும். நீ செய்த குற்றத்துக்கு முதல் ஆதாரமே அவர்கள்தான். புரிகிறதா?"

நீலமேகம் பேசாமல் நின்றான் ஏய்டன் குரலை உயர்த்தி "எனக்கு அவர்கள் தேவை. உடனடியாக. புரிகிறதா?" என்றான்.

தொப்பியைத் தலைமேல் அழுத்திப் பிடித்தபடி பார்மர் உள்ளிருந்து ஓடிவந்தார். விந்திவிந்தி வந்து நின்று மூச்சிரைத்தபடி "காப்டன், நீங்கள் செய்வது சட்டவிரோதம். எங்கள் நிறுவனத்துக்குள் நீங்கள் அத்துமீறி நுழைந்திருக்கிறீர்கள். நான் இதை." என ஆரம்பித்து, ஏய்டன் கோபமாக திரும்பியதும் அவன் கண்களைக் கண்டு தயங்கினார். "இது நியாயமல்ல. நாங்கள் செய்வது முற்றிலும் சட்டபூர்வமான தொழில்" என இழுத்தார்.

தன் முன் அழுகிய உடல்களுடன் நின்ற மனிதர்களை நோக்கி கைசுட்டி ஏய்டன் கேட்டான் "எது, இதுவா? இவர்களை இப்படிச் சாகவிடுவதா?"

பார்மர் தன் தொப்பியை விட்டுக் கையை எடுக்க கடற்காற்றில் அது பறந்தது. அதைப் பிடித்து அழுத்தியபடி "ஆனால், அவர்கள் எங்களிடம் வேலைக்குச்சேரும்போதே இதையெல்லாம் சொல்லியிருக்கிறோம். அவர்கள் ஒப்புக்

கொண்டுதான் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். யாரும் கட்டாயப்படுத்தவில்லை. அவர்கள் விரும்பும்போது வேலையைவிட்டுப் போகவும் செய்யலாம். இது ஒரு முறையான வணிக ஒப்பந்தம்மட்டும்தான். அவர்களில் எவரேனும் வேலையை விட்டுச் செல்வதாக இருந்தால் இப்போதே அவர்களுக்கு மிஞ்சிய கூலியைக் கொடுத்து அனுப்பிவிடுகிறேன்'' என்றான்.

ஏய்டன் நன்றாகவே உணர்ந்திருந்தான், அவர்கள் எவரும் அந்த வேலையைவிட்டுச் செல்லப்போவதில்லை என்று. மாபெரும் வங்கப்பஞ்சம் தக்காணத்தையும் மதராஸையும் பரவி மூடிவிட்டிருந்த காலகட்டம். இப்போது அதை மாபெரும் தக்காணப்பஞ்சம் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இந்த வேலைக்காகவே பல்லாயிரம் பேர் முண்டியடிக்கக்கூடும். அவன் பெருமூச்சுவிட்டான். "நான் விவாதிக்க விரும்பவில்லை. இங்கே வேலைசெய்த இருவரை உன் கண்காணிப்பாளன் சாட்டையாலடிப்பதை நான் என் கண்களால் பார்த்தேன். அந்த இரு ஊழியர்களும் இப்போது இங்கே இல்லை.''

"உங்கள் கோரிக்கை எனக்குப் புரிகிறது. இவன் எவரை ஏன் சாட்டையாலடித்தான் என்று எனக்குப்புரியவில்லை. இங்கே அந்தப் பழக்கமே இல்லை. எங்கள் கம்பெனிச் சட்டங்கள் அதை அனுமதிப்பதில்லை. மேலும் சாட்டையா லடிக்க வேண்டிய தேவையே இல்லை. எப்போது வேண்டு மென்றாலும் எத்தனை ஊழியர்கள் வேண்டுமென்றாலும் எங்களுக்கு கிடைக்கிறார்கள். சொல்லப்போனால் தினம் நூறுபேரை 'வேலை இல்லை' என்று திருப்பியனுப்புகிறோம். ஒருவேளை இவன் தனிப்பட்ட விரோதத்தால் செய்திருக்கலாம்.'' என்றார் பார்மர்.

"அவர்கள் எங்கே?'' என்றான் ஏய்டன்.

பார்மர் "நீங்கள் இங்கே வேலைபார்க்கும் அத்தனை பேரையும் இங்கே பார்க்கிறீர்கள். இவர்களைத்தவிர வேறு வேலையாட்கள் எவரும் இங்கே இல்லை''

ஏய்டன் உரக்க இடைமறித்து "நான் அவர்களைப் பார்த்தேன். இங்கே வேலைபார்க்கிறார்கள் என்று அவர்களே என்னிடம் சொன்னார்கள்" என்றான்.

பார்மர் "அப்படியா? ஏன் சொன்னார்கள் என்று தெரியவில்லை. தப்பிப்பதற்காகச் சொல்லியிருக்கலாம். இங்கே வெள்ளையர் பகுதியில் குப்பையில் வீசப்படும் உணவைப் பொறுக்கி உண்பதற்காகக்கூட ஏராளமான கருப்பர்கள் வருகிறார்கள். அவர்கள் எந்தக் காவலரைக் கண்டாலும் இங்கே ஐஸ்ஹவுஸில் வேலைபார்ப்பதாகச் சொல்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஏனென்றால், மற்ற பங்களாக்களில் வேலைபார்த்தால் முறையான சீருடை இருக்கும். நாங்கள் சீருடை கொடுப்பதில்லை."என்றார்.

ஏய்டன் பார்மரின் சிறிய உலோகக் கண்களை சில கணங்கள் பார்த்தான். இந்த மனிதன் நான் எளிதாகக் கையாளக்கூடியவனல்ல என நினைத்துக்கொண்டான்."உங்கள் ஊழியர்களின் பெயர்ப் பட்டியல், அவர்களின் விலாசங்கள் கைவசமிருக்கிறதா? பதிவேடுகள் எங்கே?" என்றான்.

"மன்னிக்கவும். நீங்கள் இந்தியச் சூழலைப் புரிந்துகொள்ள வேண்டும். இங்கே நாங்கள் ஊழியர்களின் பெயர்களைக் கூட பதிவுசெய்வதில்லை. ஏனென்றால், பெரும்பாலானவர்களின் பெயர்கள் கருப்பன் என்றோ சங்கிலி என்றோதான் இருக்கின்றன. நாங்கள் எண்களைத்தான் கொடுக்கிறோம். அந்த எண்களை அவர்கள்தான் நினைவில் வைத்திருக்கவேண்டும். விலாசங்களைப் பொறுத்தவரை. உங்களுக்கே தெரியும். அதாவது இந்த நாட்டில் சொந்தமாக நிலமுள்ளவர்களுக்கு மட்டும்தான் விலாசமிருக்கிறது. பிறருக்கு எப்போதுமே விலாசமென்பது இருந்ததில்லை. அதிலும் இந்தப் பஞ்ச காலத்தில் மக்கள் நிலங்களை விட்டுக் கூட்டம்கூட்டமாக இடம்பெயர்கிறார்கள். எந்த அடையாளமும் எவருக்கும் இல்லை."

"உங்கள் கண்காணிகளுக்குத் தெரியாதா?" என்றான் ஏய்டன்.

"எப்படித் தெரியும்? இந்த ஊழியர்கள் இங்கே தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் வாழும் இடங்களுக்கு எங்கள் கண்காணிகள் போவதே இல்லை. இங்கே வந்தால்தான் அவர்களுக்கும் எங்களுக்கும் தொடர்பு."

ஏய்டன் பார்மரை உற்றுப்பார்த்தான். அச்சுறுத்தவே முடியாத மனிதன் இவன் என நினைத்தபடி "அப்படி யென்றால் நான் என்ன செய்வது மிஸ்டர் பார்மர்?" என்றான்.

"உங்களுக்குப் படைபலம் இருக்கிறது. இந்த பிரம்மாண்டமான நாட்டை ஆள்கிறீர்கள்" என்றார் பார்மர். "நீங்கள் உங்கள் ஆட்களை அனுப்பிக் கருப்பர் வாழ்விடங்களில் விரிவாகத் தேடி அவர்களைக் கண்டுபிடிக்கலாம். சாட்டையாலடிப்பது உங்கள் நீதியுணர்ச்சியைப் புண்படுத்தியிருப்பது எனக்குப் புரிகிறது. மன்னிக்கவும் காப்டன், எனக்கும் அந்த நீதியுணர்ச்சி உண்டு. நான் இந்த நாட்டின் உள்ளூர்ப் பகுதிகளுக்குச் செல்லும்போது மக்கள் கூட்டம் கூட்டமாக ஒரு வாய் உணவுக்காகப் பிச்சை எடுத்து அலைவதைக் காண்கிறேன். சாலையோரங்களில் மட்கிய சடலங்களாகச் செத்துக்குவிந்து கிடப்பதை நிறையத் தடவை பார்த்திருக்கிறேன். என்னுடைய நீதியுணர்ச்சி புண்பட்டதனால்தான் இந்த ஊழியர்களுக்கு தினம் அரையணா கூலி கொடுக்கிறேன். இவர்கள் முன்னர் வேலைசெய்த இடங்களில் கூலி என்பதையே இவர்கள் கண்டதில்லை. அரையணா இவர்களுக்கு மிகப்பெரிய தொகை. இவர்கள்தான் இவர்களுடைய கூட்டத்திலேயே பெரும் பணக்காரர்கள் என்று சொல்லலாம்."

'கிழட்டு நரி' என ஏய்டன் பல்லைக் கடித்தான். அந்தச் சொற்க்ளின் உள்ளே ஓடிய எல்லா விஷ அர்த்தங்களையும் அவன் மனம் உள்வாங்கிக்கொண்டது. இந்தியமண்ணில் ஆதிக்கம்செலுத்திய ஒரு நூற்றாண்டுக்குள் தங்கள் ஈவிரக்கமற்ற சுரண்டல் மூலம் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி உருவாக்கிய செயற்கைப் பஞ்சங்களில் இந்திய மக்கள்தொகையில் நாலில் ஒருபங்கினர் செத்து அழிந்தார்கள். அந்த குற்றத்துக்காக

கம்பெனி ஆட்சி ஒழிக்கப்பட்டு பிரிட்டிஷ் அரசியின் நேரடி ஆட்சி கொண்டுவரப்பட்டதும் அதுவரை வந்தவற்றைவிடப் பெரிய பஞ்சங்கள் உருவாயின. இந்தியா பட்டினியால் அழிந்துகொண்டிருந்தது.

"நீங்கள் எளிதாக அந்த ஊழியர்களைக் கண்டுபிடிக்க முடியும் மிஸ்டர் பார்மர்" என்றான் ஏய்டன். "அதே பகுதியிலிருந்து இங்கே வந்திருக்கும் பிற ஊழியர்கள் உங்களிடமிருப்பார்கள். அவர்களிடம் சொன்னால் கூட்டிக்கொண்டு வந்து சேர்ப்பார்கள். அவர்கள் வந்ததும் என்னிடம் அழைத்து வாருங்கள். அதுவரை இவன் என்னுடைய பாதுகாப்பில் இருப்பான்"

பார்மர் திடுக்கிட்டு "அதெப்படி? இவன் மீது எந்தக் குற்றமும் இன்னும் திட்டவட்டமாக முன்வைக்கப் படவில்லையே." என்றார்.

"ஆமாம். அதை விசாரிக்கத்தான் கூட்டிச்செல்கிறேன். கைதுசெய்யவில்லை" புன்னகையுடன் பார்மரைப் பார்த்து தலையைக் குனிந்துவிட்டு ஏய்டன் சைகை காட்டினான். நாராயணன் நீலமேகத்தைப் பற்றிக் கைகளில் விலங்கிட்டுத் தள்ளிக்கொண்டு முன்னால் செல்ல ஏய்டன் பின்னால் சென்றான்.

சாலையை அடைவது வரை அவனுக்கு எண்ணங்கள் இல்லாமல் மனம் பாறைப்படுகையாகக் கிடந்தது. சாலையைத் தொட்டதுமே பாறைகள் சலனம்பெற்று அலைக் கொந்தளிப்புகளாயின. எதற்காக இந்த கண்காணிப்பாளனை இழுத்துக்கொண்டு செல்கிறேன்? என் சொற்களை மதிக்காமலிருந்தமைக்காக இவனை நான் சாட்டையால் அடிக்கச் செய்யலாம். ஆனால், அதனால் எனக்கு ஒருவகையான திருப்தியைப் பெறமுடியுமேயல்லாமல் எந்தப்பயனும் இல்லை. இல்லை, அந்த திருப்திகூட கிடைக்கப்போவதில்லை. இவன் உறைந்துக் குளிர்ந்த பிணம்போலக்கிடந்து அடிகளை வாங்கிக்கொள்வான். அவனைத் தண்டித்த உணர்வைக்கூட

எனக்கு அளிக்க மாட்டான். அவனை ஒரு தாழ்ந்த சாதியினனைத் தொடவைத்தேன் என்றால் நான் வெற்றிபெற்றவனாவேன். அல்லது குறைந்தபட்சம் மனமுடைந்து அழவைத்தாலாவது வெற்றி என உணரமுடியும். ஒருபோதும் அதற்கான வாய்ப்பை இவன் எனக்கு அளிக்கப்போவதில்லை.

ஆம், இவன் மௌனமாக இறப்பான். தன்னுடைய நம்பிக்கைகளுக்காக உறுதியாக வதைபட்டு அமைதியாக உயிர்துறக்கிற ஒரு புனிதரைப் போல. புனிதரா? என்ன வேறுபாடு? எல்லாம் நம்பிக்கைதான். புனிதரின் நம்பிக்கை எனக்கு உவப்பானதாக இருக்கிறது. அந்தத் தியாகம் மகத்தானதாக ஆகிறது. இவன் மிக முட்டாள்தனமான ஒன்றுக்காக, மனித ஆன்மாவுக்கே எதிரான ஒன்றுக்காக இறக்கிறான். ஆனால், இவன் இப்போதிருக்கும் மனநிலைக்கும் அந்தப்புனிதரின் மனநிலைக்கும் வேறுபாடில்லை. என்ன அபத்தம்! ஆனால், இப்படித்தான் எல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தூரக்கிழக்கு நாடொன்றில் அந்த நாட்டு மக்களை ஒடுக்கி, அவர்களை ஒட்டுமொத்தப் பட்டினிச் சாவுகளுக்கு ஆளாக்கி, சில வணிக நிறுவனங்களுக்குக் கொழுத்த லாபத்தை உருவாக்கியளிக்கும் பொருட்டு போர்முனையில் உயிர்துறக்கும் பிரிட்டிஷ் வீரனுக்கு அவனுடைய மரணம் ஒரு பெரும் தியாகம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. மாபெரும் வீரச்செயலொன்றைச் செய்து மூதாதையருக்குப் பெருமை சேர்ப்பதாக எண்ணித்தான் அவன் துப்பாக்கியுடன் கிளம்பிச்செல்கிறான். சென்ற காலங்களில் தங்கள் மண்ணையும் மானத்தையும் காப்பாற்றும் பொருட்டு வாளுடன் கிளம்பிய பெருவீரர்களுக்கும் அவனுக்கும் மனநிலையில் என்ன வேறுபாடு? ஒன்றுமில்லை. வேடிக்கைதான். அயர்லாந்துக்காகப் பலியாகும் புரட்சியாளனும் அவனைக் கொல்லும் பிரிட்டனின் படைவீரனும் ஒரே மனநிலையில் ஒருவரோடொருவர் போராடிக் கொண்டிருக் கிறார்கள். துப்பாக்கி பேதமில்லாமல் சுட்டுத்தள்ளுகிறது. மண் பேதமில்லாமல் உள்ளே வாங்கிச் செரித்துக்கொள்கிறது.

விசித்திரம்! உலகம் முழுக்க அலைந்து பன்னிரு ஆண்டுகளில் அவன் கண்டுகொண்ட ஓர் உண்மை மனிதனைப் போல விசித்திரமான உயிர் பிறிதில்லை என்பதே. நம்பமுடியாத மகத்துவங்களும் நம்பவே முடியாத கீழ்மைகளும் பீரிட்டுக் கொண்டிருக்கும். இந்தப் புரிந்துகொள்ளமுடியாத உயிர்த் தொகை மண்ணில் நீடித்து வாழ என்ன காரணம் இருக்க முடியும்? கடவுள் -- அப்படி ஒருவர் இருந்தாகவேண்டும், இல்லையேல் இவற்றைத் தொகுத்துப்பார்க்கக்கூட ஒரு மையப்புள்ளி இல்லை -- இந்த ஜீவராசியைக்கொண்டு என்ன உத்தேசித்திருக்கிறார்?

அலுவலகத்தை அடைந்ததும் சிந்தனையிலிருந்து ஏய்டன் விடுபட்டான். சில கணங்கள் எங்கே வந்திருக்கிறோம் என்றே அவனுக்குப்புரியவில்லை. நாராயணன் அவனருகே வந்து நின்றதும் விழித்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். இனம்புரியாத ஒரு படபடப்பு உருவாயிற்று. முற்றிலும் புதியவர்களின் நடுவே நின்றிருப்பதுபோல, அல்லது முற்றிலும் தெரியாத நிலமொன்றில் தனித்து நிற்பதுபோல. அக்கணத்தில் அனைத்தையும் ஒத்திப்போடவே தோன்றியது. "அவனை அடைத்து வையுங்கள்" என்றபின் குதிரையிலிருந்து குதித்துத் தன் அறைக்குச் சென்று அமர்ந்துகொண்டான். முதல்முறை யாக பங்கா அசைந்து வந்த காற்று இதமாக இருந்தது. மெல்லத் தளர்த்திக்கொண்டு சில கணங்கள் பங்காவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பின்பு மேஜையிலிருந்த மணியை அடித்தான். ஆர்டர்லி வந்து பணிந்து நின்றதும் விஸ்கிக்கு உத்தரவிட்டான். ஆர்டர்லி திரும்பிய அக்கணத்தில் கூரிய ஈட்டியால் முதுகில் குத்தப்பட்ட வனைப்போல திடுக்கிட்டு "சாம்" என்றான். அவனை மீறி கூக்குரல்போலவே அந்தக் குரல் எழுந்துவிட்டது. "ஐஸ் தேவையில்லை."

சாமுவேல் "எஸ் சார்" என்றான். மீண்டும் தலைவணங்கி வெளியே சென்றான். விஸ்கியை முதல்முறையாகச் சூடாக அருந்துகிறோம் என்று நினைத்துக்கொண்டான். அதன்

ஆவியை உடலெங்கும் உணர்ந்தபடி இருந்தபோது காற்று அடங்கி படகின் பாய் தொய்வதைப்போல உடலும் உள்ளமும் அமைதிகொண்டன.

சட்டென்று வெயிலில் கண்களை மின்னிச்செல்லும் ஓர் வாள்வீச்சு போல அந்த எண்ணம் அவனுக்குள் வந்தது. அவனுடைய படைவீரர்களின் கண்கள். அத்தனை கண்களிலும் ஒரே உணர்ச்சிதான் இருந்தது. அது நீலமேகத்தின் கண்களின் அதே உணர்ச்சி. சிப்பித்துண்டுகள் போல வெளுத்த கண்கள். அவை அனைத்தும் ஒன்றையே சொல்லின. அவன் குளிர்போலத் தன்னுள் ஓர் அச்சத்தை உணர்ந்தான். ஐம்பத்தேழில் நடந்த சிப்பாய்கலகத்தின் நினைவுகளை மீண்டும் மீண்டும் கேட்காமல் எவரும் பிரிட்டிஷ் படைகளில் பணியாற்றமுடியாது. தெருக்களில் இழுத்துப் போடப்பட்டுத் தலை கொய்யப்பட்ட வெள்ளையர்கள். வெட்டிக் குவிக்கப்பட்ட உடல்கள். கிணற்றை நிரப்பிய பெண்கள், குழந்தைகளின் சடலங்கள்.

“இதோபார் ஏய்டன், அந்த பேரழிவின் மிக மோசமான விளைவு என்றால் நம் அனைவருக்குள்ளும் குடியேறிய அச்சம்தான். நாம் போரிட்டுத்தான் இந்த நாட்டைக் கைப்பற்றினோம். நம்மைச்சுற்றி எதிரிகள் இருக்கிறார்கள் என்று நாம் நன்றாகவே அறிவோம். ஆனால், சிப்பாய்க்கலகம் காட்டிய உண்மை இன்னொன்று. நாம் இந்த நாட்டில் உருவாக்கி வைத்திருக்கும் அதிகாரம் நம்முடைய விசுவாசிகளான இந்தக் கருப்பர்கள் மீது கட்டப்பட்டது. இவர்களின் பயத்தையும் சுயநலத்தையும் அற்பத்தனத்தையும் கொண்டு அதை நாம் இணைத்துக் கட்டியிருக்கிறோம். அந்தக்கட்டுமானத்தின் அடியில் நாமறியாத இன்னொன்றும் உள்ளது” ஓய்வுபெற்ற காப்டன் ஜே. ஏ. ரைட் கல்கத்தா இங்கிலீஷ் கிளப்பில் போதையில் அவனிடம் சொன்னார். “என்ன தெரியுமா?”

“வெறுப்பு. நம் மீது இந்தக் கருப்பர்களுக்கிருக்கும் உக்கிரமான வெறுப்பு. அந்த வெறுப்பு அவர்களின் கண்களுக்கு வெகுவாக அப்பால் மிக ஆழத்தில் இருக்கிறது. அது நம்மைக் கூண்டோடு அழிக்கும் நஞ்சு போன்றது. அதைத்தான் நாம்

அந்தக் கலகத்தில் கண்டோம். அதை நம்மவர்களால் மனைவிமக்கள் கழுத்தறுபட்டு சாகும்போதும் தங்கள் முகத்தில் பூட்ஸுகள் எட்டி உதைக்கும்போதும் கூட நம்பமுடியவில்லை. தங்கள் முன் நாய்போல வாலாட்டி பூட்ஸுகளை நக்கியவர்கள், தங்கள் சேவைக்காக வாளேந்தி நின்றவர்கள் அதைச் செய்வார்கள் என்பது தங்களுக்கு நிகழும் ஒரு கெட்ட கனவென்றே நினைத்தார்கள். செத்துக்கிடந்த சடலங்களைப் பார்த்துக்கொண்டே நடந்தேன். பெரும்பாலான முகங்களில் அந்த நம்பமுடியாமை அப்படியே வெறிப்பாக உறைந்திருந்தது என்று தோன்றியது"

"அன்று முதல் நம்முடைய அகம் மாறிவிட்டது. அது இன்னமும் இந்தக் கருப்பர்களுக்குத் தெரியவில்லை என்பது நம் அதிருஷ்டம். நாம் அதன் பின் செய்ததெல்லாமே அந்த அச்சத்தினால்தான். இந்த கருப்பர் நாட்டை தாஜா செய்துகொண்டே இருக்கிறோம். இதன் கோபத்தை இதனிடமிருந்தே மறைக்கவும், திசைதிருப்பவும் முயல்கிறோம். விக்டோரியா அரசி கிழக்கிந்தியக் கம்பெனியைக் கலைத்து நாட்டைத் தானே எடுத்துக்கொண்டது அந்த அச்சத்தால்தான். நம்முடைய அச்சத்தை நாம் இவர்களிடமிருந்து மறைத்துக் கொள்வது வரை நாம் இவர்களை ஆள்வோம்.என்றாவது ஒரே ஒருவர் நம்முடைய அச்சத்தை புரிந்துகொண்டாரென்றால் அதோடு நம் ஆட்சி சரிய ஆரம்பிக்கும். நம்மால் இந்நாட்டை தாஜா செய்ய முடியாத ஒரு கட்டம் வரும்போது நாம் அழிவோம்."

போதையில் சிவந்த கண்களுடன் காப்டன் சொன்னார், "அழிவு! உனக்கோ எனக்கோ அல்லது நம் வாரிசுகளுக்கோ பெரிய அழிவு காத்திருக்கிறது. யானை வஞ்சங்களை மறப்பதே இல்லை என்கிறார்கள். இந்தக் கரிய யானை உள்ளூர என்ன நினைக்கிறதென நாம் அறிவதில்லை" திரும்பத் திரும்ப யானைதான் இந்தியாவுக்கான உவமையாக இருக்கிறது. அது ஏன் மனிதனுக்குப் பணிந்து போகிறது என்ற தீராத வியப்பு வெள்ளையனை விட்டு நீங்குவதே இல்லை.

காலையில் நீலமேகத்தை விட்டுவிடவேண்டியதுதான் என்று ஏய்டன் முடிவுசெய்தான். அவனால் நீலமேகத்தை ஒன்றுமே செய்யமுடியாது. யானையை அடிக்கலாம், வசைபாடலாம், துரத்தலாம். அது எந்த எல்லை வரை என்பதை எப்போதும் யானைதான் தீர்மானிக்கிறது.



# 3

காலையில் கடற்கரைச்சாலை வழியாகக்குதிரையில் வரும்போதே ஏய்டன் அந்தக் கருப்பு மனிதன் தூரத்தில் அவனுக்காகத்தான் காத்துநிற்கிறான் என்று உணர்ந்து கொண்டான். அதற்கான காரணமேதுமில்லையென்றாலும் அப்படித் தோன்றியது. அருகே நெருங்க நெருங்க அவனையே கூர்ந்து நோக்கினான். கன்னஎலும்புகள் சற்றுப்புடைத்த மீசையற்ற கரிய முகம். பெரிய கண்கள். தலைப்பாகை போல ஒரு துணியைச் சுற்றிக்கட்டியிருந்தான். வெள்ளைச்சட்டை தெரியும்படியாக காக்கி நிறமான கோட்டு முன்பக்கம் திறந்திருந்தது. கீழே தட்டுச்சுற்றாகக் கட்டப்பட்ட வேட்டி கரண்டைக்கால்களுக்கு மேலாக நின்றது. கனமான உள்ளூர்ச் செருப்பு. ஒரு கையில் துணிப்பை ஒன்றிருந்தது.

அருகே நெருங்கியதும் ஏய்டனின் குதிரை அவன் மனதை அறிந்ததைப்போல நின்று விட்டது. அந்த மனிதனின் சட்டைப்பை அசாதாரணமாகப் பெரிதாக இருந்தது. அதற்குள் ஒரு கனத்த குறிப்பேடும் நிறைய காகிதங்களும் இருந்தன. நெற்றியில் நீளமாக அவனுடைய மதச்சின்னம். ஏய்டனைக் கண்டதும் அவன் தலைவணங்கினான். அந்தச்சிறு அசைவிலேயே ஏய்டன் ஒன்றை உணர்ந்தான், 'இந்த மனிதன் அஞ்சியோ காரியசாத்தியத்துக்காகவோ தலைவணங்கக்

கூடியவனல்லன். சகமனிதனுக்குரிய இயல்பான மரியாதைக்கு அப்பால் ஒரு துளி மேலதிகப்பணிவைக்கூட அளிக்க அவன் விரும்பவில்லை' ஏய்டன் புன்னகைசெய்தான்.

"என் பெயர் காத்தவராயன்" என்றான் அவன். "நான் பிரிட்டிஷ் அரசின் ஒரு பிரஜை. தங்களைச் சந்திக்கவேண்டும் என்று இங்கே காத்து நிற்கிறேன்" அவனுடைய ஆங்கிலம் பிழையற்றதாக, சகஜமாக புரிந்துகொள்ளுமளவுக்கு உச்சரிப்பு நேர்த்தி கொண்டதாக இருந்தது.

"அலுவலக விஷயமென்றால் அதை விரிவாக எழுதி அந்த மனுவுடன் அலுவலகத்துக்கு வா. காலை பதினொருமணி முதல் ஒருமணி நேரம் நான் பொதுமக்களைச் சந்திப்பேன்"

"அலுவலக விஷயம்தான். ஆனால், நான் உங்களை அலுவலகத்தில் சந்திப்பது எளிய விஷயமல்ல"

ஏய்டன் கண்களைச் சுருக்கி "ஏன்?" என்றான்.

"நான் தீண்டப்படாத சாதியைச் சேர்ந்தவன்" என்றான் காத்தவராயன்.

ஏய்டன் கோபத்துடன் "என் அலுவலகத்தில் அந்தத் தடைகள் இல்லை. நீ தாராளமாக வரலாம். உன்னை எவரேனும் தடுத்தார்கள் என்றால் நாளை இதே இடத்துக்கு வந்து என்னிடம் சொல். நான் அவர்களைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிக் குதிரையின் விலாவைக் காலால் அணைந்தான். குதிகால்முள் உரசியக் குதிரை முன்னால் காலெடுத்து வைத்தது.

"மன்னிக்க வேண்டும்" என்று சொன்னபடி காத்தவராயன் பின்னால் ஓடிவந்தான். "நான் உங்களிடம் பேசவந்தது என்னுடைய விஷயத்தைப்பற்றி அல்ல. நான் நீலமேகம் பற்றிப் பேச வந்தேன்"

ஏய்டன் குதிரையை இழுத்துப்பிடித்தான். "நீ அவனுக்கு யார்?" என்றான்.

"அவனை எனக்குத் தெரியாது. ஆனால், அவனால் அடிக்கப்பட்டவர்களை எனக்குத் தெரியும். என்னுடைய ஆட்கள்"

ஏய்டன் குதிரையைத் திருப்பிக் காத்தவராயனைக் கூர்ந்து பார்த்தான். "உன் உறவினர்களா அவர்கள்?"

காத்தவராயன் புன்னகையுடன் "அப்படிக் கேட்டால் ஆமாம் என்றுதான் சொல்வேன். நாங்கள் ஒரு பெரிய குலம். ஆனால், இதிலுள்ள அனைவரும் ஒரே ரத்தம்தான். எங்களைப் பறையர்கள் என்கிறார்கள். அடிபட்டவனும் என்னுடைய சாதியைச் சேர்ந்தவன்தான்"

ஏய்டன் அவனைப் புதிய கண்களுடன் பார்த்தான். முப்பத்தைந்து வயதிருக்கும். அல்லது குறைவாகக்கூட இருக்கலாம். குறுகிய மெலிந்த உடல். இந்தியர்கள் மிகக்குறைவாகவே உணவுண்ணுகிறார்கள். இளமையில் பல்வேறு நோய்கள் வழியாக வளர்கிறார்கள். விசித்திரமான காரணங்களால் பலர் அசைவ உணவை உண்ணுவதுமில்லை. ஆகவே, ஒரு இந்தியன் சராசரி வெள்ளையனுக்குப் பாதியளவே இருக்கிறான். முகத்தைப் பார்க்காவிட்டால் இந்தியர்களை சிறுவர்கள் என்றே எண்ணிவிட வாய்ப்புண்டு. ஏய்டன் "நீ பொதுநல ஊழியனா?" என்றான். இன்னும் கூர்ந்து நோக்கி "கிறித்தவனா?" என்றான்.

காத்தவராயன் "இல்லை. நான் வைணவன். பொதுநலச் செயல்பாடுகள் என்று எதையும் பெரிதாகச் செய்யவில்லை. என் கண்ணுக்கு முன்னால் வருபவர்களுக்கு உதவாமலிருக்க என்னால் முடியவில்லை. அதைச்செய்கிறேன்." என்றான்.

"ஓ" என்றபின் "என்னுடன் வா" என்று சொல்லிவிட்டு ஏய்டன் குதிரையைத் தட்டினான். அவனருகே மெல்லிய ஓட்டமாகக் காத்தவராயன் வந்துகொண்டிருந்தான். ஏய்டன் சில கணங்களில் அவனை மறந்து கடலைப்பார்த்து அலைகளைக் கவனித்தபடி குதிரைமேல் அமர்ந்திருந்தான். அலுவலக முகப்பின் வாசலை அடைந்ததும்தான் நினைவுக்கு மீண்டான். காத்தவராயன் வியர்த்து உடைகள் உடலோடு ஒட்ட மூச்சிரைத்துக்கொண்டிருந்தான். காவலன் சல்யூட் அடித்தபின் காத்தவராயனைப் பார்த்தான். ஏய்டன் காத்தவராயனிடம் "வா" என்று சொல்லி முன்னால் நடந்தான்.

காத்தவராயன் அவனை ஒட்டியபடி கூடவே நடந்து வந்தான். கட்டிடத்தின் வலப்பக்கமிருந்த லாயத்தில் இருந்து படை வீரர்கள் எழுந்து நின்று நிலைகுத்திய விழிகளுடன் பார்த்துக் கொண்டிருப்பதை ஏய்டன் உணர்ந்தான். 'இத்தனை தூரத்தில் இருந்தும் கூட இத்தனை ஆடைகள் அணிந்திருந்தும்கூட இவன் தீண்டப்படாத சாதியினன் என்று இவர்களுக்கு எப்படித் தெரிகிறது' என எண்ணிக்கொண்டான்.

உள்ளே சென்று அமர்ந்துகொண்டதும் ஏய்டன் "உள்ளே வா" எனக் காத்தவராயனை அழைத்தான். காத்தவராயன் உள்ளே வந்து நின்று கொண்டான். "உட்கார்" என்று கைகாட்டியதும் "நன்றி" என அமர்ந்துகொண்டான். பொதுவாக பிராமணர்கள் அல்லாத இந்தியர்கள் அப்படி அமர மாட்டார்கள் என ஏய்டன் அறிவான். அது ஒரு மாபாதகம்போல பாவனை காட்டுவார்கள். கூச்சப்படுவார்கள், நெளிவார்கள். வற்புறுத்தப்பட வேண்டுமென ஆசைப்படு வார்கள். ஒரு பெரும் கௌரவத்தை அடைந்தது போல நன்றி சொல்லிக் குழைவார்கள். இந்த மனிதன் ஆச்சரியமானவன், ஏதோ ஒரு வகையில் அசாதாரணமானவன். இன்னும் இவனை இளைஞன் என்றுதான் சொல்லவேண்டும். ஒருவேளை வாழ்க்கையின் போக்கில் எங்கோ தன்னை நிரூபித்து முக்கியமான ஓர் ஆளுமையாகக்கூட இவன் ஆகக்கூடும்'.

"காத்தவராயன், மற்ற விஷயங்களைச் சொல்வதற்கு முன்னால் உன்னைப்பற்றி முதலில் சுருக்கமாகச் சொல். அப்படி ஆரம்பித்தால்தான் சரியாக இருக்குமென்று தோன்றுகிறது" என்றான் ஏய்டன்.

"ஆமாம் சார். என்னைப்பற்றித் தெரியாமல் நான் சொல்லக்கூடியவற்றை நீங்கள் நம்பமுடியாது என்று எனக்கும் தெரியும்" என்றான் காத்தவராயன்.

ஏய்டன் புன்னகைத்தான். 'இந்த இளைஞன் முறையான கல்வி கற்றிருந்தால் ஒரு ராஜதந்திரியாகியிருக்கக் கூடும்' என நினைத்துக்கொண்டான். "சொல்" என்றான்.

"நான் சென்னையில்தான் பிறந்தேன். பறையர் சாதியைச் சேர்ந்தவன். என் தந்தை கோட்டையில் பட்லராக வேலை பார்த்தவர். என் ஏழு வயது வரை ராயபுரத்தில் பட்லர்களின் சேரியில் வாழ்ந்தேன். அப்போதுதான் ஆங்கில அரிச்சுவடி கற்றேன். என் தந்தை அதன்பின் நீலகிரிக்குச் சென்று அங்கே பட்லராக பணியாற்றினார். நான் நீலகிரியில்தான் வளர்ந்தேன். அங்கே இந்தியமுறைப்படி கல்வி கற்றேன்"

ஏய்டன் "இந்தியமுறைப்படி என்றால்?" என்றான்.

"எங்கள் சாதிக்குள் நெடுங்காலமாகவே கல்வி மரபு ஒன்று இருந்து வருகிறது. மூத்தவர்களை குருவாகக் கொண்டு அதைக் நாங்கள் கற்று வருகிறோம். என் தந்தை ஓர் அறிஞர். என் பாட்டாவும் மரபான நூல்களில் அறிஞர்தான். இங்கே வெள்ளையர் அச்சுக்குக்கொண்டு வந்த பல முக்கியமான நூல்கள் எங்கள் குடும்பத்தில் பாரம்பரியமாகப் பேணப் பட்டவை".

"ஓ" என்றான் ஏய்டன். அவனுக்குச் சில கணங்கள் சிந்தனையே ஓடவில்லை. பின்பு "நான் அறிந்தவரை இந்த நாட்டிலேயே மிகக்கீழ்நிலையில் இருக்கும் மக்கள் நீங்கள். மனிதர்களாக வாழும் உரிமைகூட மறுக்கப்பட்டு மிருகங்கள் போல வாழ்பவர்கள். இன்னும் நாகரீகத்துக்குள் நுழையாத மானுட இனம் என உங்களைப்பற்றிப் பதிவு செய்யப்பட் டிருக்கிறது. பிரிட்டிஷ் கல்வியால் நீங்கள் மெல்ல மெல்ல நாகரீகமடைந்து வருகிறீர்கள்."

காத்தவராயன் உடனே எதிர்வினையாற்றவில்லை. பின்பு தொண்டையைச் செருமிவிட்டு "ஒருவேளை ஆங்கிலேயர் ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் அயர்லாந்தினரை முழுக்கத் தோற்கடித்து அடிமைகளாக ஆக்கியிருந்தார்கள் என்றால் உங்களிடம் நான் இதைக் கேட்டிருக்கவேண்டியிருக்கும் சார்" என்றான்.

சுளீரென்று சாட்டைநாக்கு சுழன்றுவந்து மெல்லிய சதையை நக்கிச் சென்றதுபோல உணர்ந்தான் ஏய்டன். முதல்கணம் குபீரெனப் பொங்கியது கடும் கோபம்தான்.

அந்தக்கோபத்துடன் கண்களைத் தூக்கியபோது அதை எதிர்பார்த்தவன்போல நிதானமான கண்களுடன் அமர்ந் திருந்த இளைஞனைப் பார்த்தான். மெல்ல நிதானமடைந்து "ஓ" என்றான்.

"ஆமாம். நாங்கள் தோற்கடிக்கப்பட்டவர்கள். அடிமைகளாக்கப்பட்டவர்கள். பிரிட்டிஷ்நிலம் நாகரீகத்தை அறிவதற்கு முந்தைய காலத்தில் இந்த நாட்டின் அறிவார்ந்த சமூகமாக நாங்கள்தான் இருந்தோம். சொல்லப்போனால் இந்த நாட்டிலுள்ள கோயில்களில் நாங்கள்தான் பூஜை செய்தோம். ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முந்தைய கல்வெட்டு ஒன்றில் அது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள்தான் நூல்களைக் கற்றோம், பிறருக்கும் கற்பித்தோம். அந்நூல்களை நாங்கள் இன்றும் பேணுகிறோம். வரலாற்றில் எங்கோ நாங்கள் அடிமைகளானோம். கடைசிப்பருக்கைச் சோறுவரை எங்களிடமிருந்து பறிக்கப்பட்டது."

ஏய்டன் சட்டென்று சிரித்து "சரி மிஸ்டர் காத்தவராயன். நாம் வரலாற்றைப்பற்றிப் பேசுவதற்காக இங்கே சந்திக்கவில்லை என்று நினைக்கிறேன். சொல், நீ என்ன கல்வி கற்றாய்? என்ன தொழில் செய்கிறாய்?" என்றான்.

"இங்கே பொதுமரபாக நிறைய நூல்கள் கற்கப்படு கின்றன. அவையெல்லாம் சென்ற ஆயிரம் வருடங்களாக முக்கியத்துவம் பெற்றவை. அந்த நூல்கள் இங்கே உருவாவதற்கு முன்னதாக இருந்த நூல்களை எழுதியவர்களும் கற்பித்தவர் களும் நாங்கள்தான். நாங்கள் அந்த நூல்களை இன்றும் கற்கிறோம். அந்நூல்களை நான் முழுமையாகவே கற்றிருக் கிறேன். பொதுமரபில் உள்ள நூல்களையும் கற்றிருக்கிறேன். அத்துடன் சித்தவைத்தியத்தையும் முறையாகக் கற்றிருக்கிறேன். அதைத்தான் தொழிலாகச் செய்துவருகிறேன்"

"நீலகிரியில்தான் வேலைசெய்கிறாயா?" என்றான் ஏய்டன்.

"இல்லை. நான் சென்னைக்கு வந்து ஓர்ஆண்டுதான் ஆகிறது. ஆயிரம்விளக்குப் பகுதியில் குடியிருக்கிறேன்.

என்னுடைய சாதி தீண்டப்படாத சாதியாகையால் நீலகிரியில் நான் அதிக நோயாளிகளைப் பெறமுடியாது. என்னுடைய சாதியினர் மட்டும்தான் வருவார்கள். அவர்களிடம் பணம் இருப்பதில்லை. மேலும் இந்தப்பஞ்சத்தில் நீலகிரியிலிருந்து எங்கள் மக்கள் இடம்பெயர்ந்துகொண்டே இருக்கிறார்கள். ஆகவே, நானும் என் மக்களுடன் சேர்ந்து பர்மா சென்றேன். ரங்கூனில் கொஞ்சநாள் வேலைபார்த்தேன். அதன்பின் இப்போது சென்னைக்கு வந்து இங்கே வைத்தியத்தொழில் பார்க்கிறேன். இங்கே எங்கள் மக்களிடம் கொஞ்சம் பணமிருக்கிறது, மேலும் என்னிடம் ஆங்கிலஇந்தியர்களும் சிகிச்சை எடுத்துக்கொள்கிறார்கள்."

"நீ வைணவன் என்று சொன்னாய். ஆனால் காத்தவராயன் என்றால் சைவப்பெயர் இல்லையா?" என்றான் ஏய்டன்.

"ஆமாம். நான் வைணவத்துக்குச் சென்றது என்னுடைய ஆசிரியரின் தூண்டுதலினால்தான். அவர் தீவிரவைணவர். அவர் நடத்திய சுத்தாத்வைத ஆசிரமத்தில் நான் மருத்துவம் கற்றேன். அங்கே வரும் ஏழைகளுக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பித்தேன். என் குருநாதர் நீலகிரியில் எங்கள் மக்கள் கிறித்தவ மதத்துக்கு மாற்றப்பட்டதற்கு எதிராக கடுமையாகப் போராடினார். நானும் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டேன். கிறித்தவ மதப்பிரச்சாரத்துக்கு எதிராக நிறையத் துண்டுப் பிரசுரங்களை எழுதியிருக்கிறேன்"

ஏய்டன் "ஓகோ" என்றான். அவன் நினைத்தது போலவே பல அடுக்குகள் கொண்ட ஒரு வாழ்க்கை அந்த இளைஞனுக்கிருப்பதை எண்ணிக்கொண்டான்.

"நான் நீலகிரியில் தோடர் இனத்தைச்சேர்ந்த ஒரு பெண்ணைத்தான் மணந்துகொண்டேன். அவள் இறந்து விட்டாள். இப்போது இன்னொரு மணம்புரிந்து கொண்டிருக்கிறேன். இரு குழந்தைகள் உள்ளன."

ஏய்டன் புன்னகைசெய்து "சரி, இப்போது இந்த விஷயத்தில் நீ சொல்ல வருவது என்ன?" என்றான்.

"இந்த ஐஸ்ஹவுஸ் விவகாரத்தில் நான் ஈடுபடக்காரணம் அடிபட்ட அந்த நோயாளிதான். அவன் நான்காண்டுக்காலம் அங்கே வேலைபார்த்திருக்கிறான். குளிரில் அவனுடைய நரம்புகள் கெட்டுப்போய் கால் செயலிழந்துவிட்டது. அவனுக்கு எட்டுக் குழந்தைகள் இருந்தன. பட்டினியால் அவற்றில் ஆறுகுழந்தைகள் இறந்துவிட்டன. அவன் என்னிடம் வைத்தியத்துக்கு வந்தான். என் சொந்தச்செலவில்தான் நான் அவனுக்கு வைத்தியம்பார்க்க வேண்டியிருந்தது."

"அவன் பெயரென்ன?" என்றான் ஏய்டன்.

"சவரிராயன்" என்றான் காத்தவராயன். "சேவியர் என்ற பெயரின் தமிழ்வடிவம். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவன். அவன் ஐஸ்ஹவுஸில் வேலைபார்க்கிறான் என்று சொன்ன போது நான் அவனுக்கு ஓர் ஆலோசனை சொன்னேன். ஏன் அவன் ஐஸ்ஹவுஸுக்குச் சென்று சிகிழ்ச்சைக்கான செலவுக்கு கொஞ்சம் பணம் கேட்கக்கூடாது? அவனுடைய பாதிரியாரிடம் ஒரு பரிந்துரைகடிதம் பெற்றுவரச்சொன்னேன். ரெவெரெண்ட் ஜான் பிரண்ணன் ராயபுரம் செயிண்ட் பீட்டர்ஸ் சர்ச்சில் இருக்கிறார். நல்ல மனிதர். அவர் பரிந்துரை செய்து கடிதம் கொடுத்தார். நானும் நோயின் இயல்பை விவரித்து ஒரு கடிதம் கொடுத்தேன்."

பிரச்சினை கொஞ்சம் கொஞ்சமாக தெளிவாகிவருவது போலிருந்தது ஏய்டனுக்கு.

"அந்தக் கடிதங்களுடன் சவரியும் அவன் மனைவியும் வந்து ஐஸ்ஹவுஸ் நிர்வாகிகளைப் பார்த்திருக்கிறார்கள். கடிதங்களைப் பிடுங்கிக்கொண்டு அடித்துத் துரத்தி விட்டார்கள். அங்கிருந்து கிளம்பி நொண்டி நொண்டி நடந்துவந்து ஒரு மரத்தடியில் முடங்கிக் கிடந்திருக்கிறார்கள். ஃபாதர் பிரெண்ணன் அவ்வழியாகச்செல்வார். அவரைப் பார்க்கவேண்டுமென்று நினைத்திருக்கிறார்கள். ஆனால், பின்னாலேயே கண்காணியை அனுப்பி சாட்டையால் அடித்து விரட்டிக்கொண்டிருக்கும் போதுதான் நீங்கள் பார்த்திருக் கிறீர்கள். நீங்கள் பார்த்ததையும் அவர்களைக் கண்டித்ததையும்

பிறகு நடந்ததையும் எல்லாம் ஐஸ்ஹவுஸில் இருக்கும் எங்கள் இனத்தவர்கள் வந்துசொன்னார்கள்''

"எனக்கு அவர்கள் உடனடியாகத் தேவை. எங்கே இருக்கிறார்கள்?'' என்றான் ஏய்டன்.

"அதைச் சொல்லத்தான் நான் வந்தேன். அந்த இருவரும் திரும்பி வரவேயில்லை. அந்த இரு குழந்தைகளும் குடிசைகளில் அனாதையாகப் பட்டினி கிடக்கிறார்கள். அவர்கள் அச்சுறுத்தப்பட்டுத் துரத்தப்பட்டிருக்கலாம். அல்லது ஆனால் . . . அந்த அளவுக்குச் செல்லவேண்டிய அவசியமே இல்லை. இந்த ஏழை மக்கள் எவருக்கும் எந்தப் பிரச்சினையையும் உருவாக்கும் திராணி இல்லாதவர்கள்.''

ஏய்டன் தலையை அசைத்தான். 'ஒருவேளை அவர்களுக்கு ஆபத்தை விளைவித்ததே நான்தானோ' என எண்ணிக்கொண்டான்.

"இந்த நீலமேகமும் அவன் ஆட்களும் கண்டிப்பாக அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று அறிந்திருப்பார்கள். அவனிடம் விசாரித்தால் தெரியும். அவர்கள் கொல்லப் பட்டார்களா என்று மட்டும் கேட்டுச்சொல்லுங்கள். கொல்லப்படவில்லை என்றால் பிரச்சினை இல்லை, திரும்பி வந்துவிடுவார்கள்''

"நான் விசாரிக்கிறேன்'' என்றான் ஏய்டன்.

"நன்றி சார்'' என காத்தவராயன் எழுந்துகொண்டான். "நீங்கள் நீதியுணர்ச்சி கொண்டவர்கள் என்றார்கள். மத்தியகாலத்து ஞானிகள் கடவுளைத்தேடியதுபோல நாங்கள் நீதியுணர்ச்சிகொண்ட மனிதர்களைத் தேடிக்கொண்டே இருக்கிறோம். மிகமிகக் குறைவாகவே அவர்கள் கண்ணுக்குப் படுகிறார்கள். அவர்கள் அனேகமாக வெள்ளைத்தோல் கொண்டவர்கள். அந்த நம்பிக்கைதான் இந்த மண்ணில் எங்களுக்கு இப்போது கொஞ்சமேனும் மிச்சமிருக்கிறது'' முதன்முறையாகக் காத்தவராயன் குரலில் அதுவரை இருந்துவந்த உலோகக் கம்பியின் இறுக்கம் இல்லாமலாகி நெகிழ்வு தென்பட்டது.

ஏய்டன் எழுந்து தன் கையை நீட்டியபடி "நான் விசாரிக்கிறேன்" என்றான்.

சற்றும் தயக்கமில்லாமல் ஏய்டனின் கையைப் பற்றிக் குலுக்கி "உங்களை நம்புகிறேன் சார்" என்றபின் காத்தவராயன் திரும்பி நடந்தான்.

"மிஸ்டர் காத்தவராயன்" என ஏய்டன் அழைத்தான்.

அதைக்கேட்டுக் காத்தவராயன் திரும்பி "சொல்லுங்கள் சார்" என்றான்.

"வெள்ளைத்தோல் பற்றிச் சொன்னீர்கள். நாங்கள் இங்கே நூறாண்டுக்காலம் செய்த ஆட்சியால்தான் இத்தனை பெரிய பஞ்சங்கள் இங்கே உருவாகியிருக்கின்றன. இன்று இந்தியாவே பஞ்சத்தில் அழிந்துகொண்டிருக்கிறது. மதராஸ் மாகாணத்தில் மட்டும் லட்சக்கணக்கானவர்கள் செத்திருக்கலாம் என்கிறார்கள். ஒருவேளை உலக வரலாற்றிலேயே அதிகமான மக்கள் பஞ்சத்தில் சாவது இப்போதுதான்." என்றான்.

"ஆமாம் சார். இந்தியா முழுக்க பிணங்கள் குவிகின்றன. பஞ்சம் பிழைப்பதற்காக பர்மாவுக்கும் இலங்கைக்கும் மலாயாவுக்கும் கூட்டம் கூட்டமாகப் போய் அங்கேயும் சாகிறார்கள். இங்கு சாகிறவர்களை விட அங்கே சாகிறவர்களே அதிகம். ரங்கூனில் அதையும் நானே பார்த்தேன்"

ஏய்டன் சூடான தரையில் நிற்பவன் போலக் கால் மாற்றிக்கொண்டான். காத்தவராயனின் கண்கள் லேசாக இடுங்கி தீவிரம் கொண்டன. "சார், அப்படிச் சாவதில் பெரும்பகுதி எங்கள் மக்கள்தான். இந்தநாட்டில் எத்தனையோ தலைமுறைகளாகத் தீண்டப்படாத மக்களாகிய நாங்கள்தான் பெரும்பான்மையினராக இருந்தோம். இந்த நாடே எங்களுடையது. இந்த ஆணவம் பிடித்த சமூகத்துக்கு உணவு உற்பத்திசெய்து கொடுத்தோம். இதன் ராணுவங்களைப் பேணினோம். இதன் கோட்டைகளையும் கோயில்களையும் எங்கள் குருதியைக்கொண்டுதான் கட்டினார்கள். இதன் காவியங்களிலும் கலைகளிலும் எங்கள் ரத்தம் படிந்திருக்கிறது.

இன்று நீங்களும் எங்கள் உழைப்பைத்தான் ஒட்டச்சுரண்டி கப்பல் கப்பலாகக் கொண்டுசெல்கிறீர்கள். லண்டனிலும் யார்க்ஷயரிலும் அதைக் கொண்டு மாளிகைகள் கட்டுகிறீர்கள். நாங்கள் இந்த நாட்டில் மனிதர்களாக வாழவில்லை. ஆனால், இந்தநாடே எங்களுடையதாக இருந்தது. நீங்கள் வந்த பிறகு நூறாண்டுக்காலத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பஞ்சங்கள். 1770களில் வந்த முதல் தக்காணப்பஞ்சம் முடிந்தபோது இந்நாட்டில் எங்கள் மக்கள்தொகை பாதியாகியது. இதோ இந்த இரண்டாவது தக்காணப்பஞ்சம் முடியும்போது நாங்கள் இங்கே மிகச்சிறுபான்மையினராக இருப்போம்."

"ஆனால், ஒன்று நிகழும். நாங்கள் அழியும்போது இந்த நாட்டின் விவசாயம் நிரந்தரமாக அழியும். இயந்திரங்களைக் கொண்டு கொஞ்சநாள் சமாளிக்கப் பார்ப்பார்கள். ஆனால், ஒருபோதும் இந்தநாட்டின் மண் முன்புபோல சோறு போடாது" காத்தவராயன் முகம் எந்த உணர்ச்சியைக் காட்டுகிறதென ஊகிக்க முடியவில்லை. "சாவு உண்மைதான். ஆனால், நாங்கள் எப்போது வாழ்ந்தோம்? அப்படி வாழ்வதை விட இந்தச்சாவு எந்த வகையில் குறைந்து போய்விட்டது? பஞ்சம் நல்லதுதான் சார். ஆமாம், உண்மையாகத்தான் சொல்கிறேன். ஒருவேளை இந்தப் பஞ்சம் எங்கள் இனத்துக்கு இறைவன் அளித்த நல்ல வாய்ப்போ என்னவோ. நிலங்கள் தரிசாக ஆகவில்லை என்றால் இந்தச் சமூகம் எங்களை ஊரைவிட்டு வெளியேற அனுமதித்திருக்காது. இந்த இடப்பெயர்வு இல்லாவிட்டால் நாங்கள் எங்கள் நிலைமையை மாற்றிக்கொள்வதைப்பற்றி நினைத்தே பார்த்திருக்க மாட்டோம். நிலத்துடனும் ஆசாரங்களுடனும் நம்பிக்கைகளுடனும் கட்டுண்டு கிடந்து இன்னும் ஆயிரம் வருடம் புழுக்களைப்போல உழன்று கொண்டிருப்போம்"

ஏய்டன் பேச்சிழந்து பார்த்துக்கொண்டே நின்றான். சில சமயங்களில் தனிமனிதர்கள் வழியாக அவர்களை மீறிய ஒன்று பேசுகிறது என்று அவனுடைய ஆசிரியர் ஒருமுறை சொன்னதை நினைவுகூர்ந்தான்.

“எங்கள் மக்கள் உலகமெங்கும் ஈசல்கள் போலச் செத்து உதிர்கிறார்கள். பிள்ளைகுட்டிகளுடன் அறியாத நாடுகளின் காடுகளில் வதைபடுகிறார்கள். நோயிலும் பசியிலும் துடித்துக் கதறிச் சாகிறார்கள். சாகட்டும். அப்படி எங்கள் இனத்தில் தொண்ணூறு சதவீதம்பேர் செத்துக் குவிந்தால்கூட மிச்சமிருப்பவர்களில் சிலருக்கு மனிதர்களுக்கான வாழ்க்கையை வாழ வாய்ப்பு கிடைக்கிறது என்றால் அதுவே நல்லது. சோற்றுக்கான போராட்டம் வழியாக தன்மானத்துக்கான போராட்டத்துக்கும் ஒரு வழி திறக்கிறது என்றால் அது நடக்கட்டும். மனிதவாழ்க்கையை வாழும் வாய்ப்பு கிடைத்த அந்த ஒருசிலரில் இருந்து புதியதலைமுறை பிறந்து வரட்டும். மரத்தின் நோய்பிடித்த கிளைகளையும் பட்டையையும் சீவி எறிவது போல இந்தப்பஞ்சம் எங்களை வதைக்கட்டும். ரத்தம் கொட்டக்கொட்டச் செதுக்கட்டும். உயிர் மிச்சமிருக்கும் இடத்திலிருந்து புதிய முளை வரட்டும். அதுதான் பரம்பொருளின் விதி என்றால் அதை வணங்கி ஏற்கிறோம்.” காத்தவராயன் மூச்சிரைத்தான்.

ஏய்டன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். தொண்டையை ஏதோ அடைத்துக்கொண்டது போலிருந்தது.

“உண்மை சார், பஞ்சத்தைக் கொண்டுவந்தது நீங்கள்தான். இப்போதுள்ள இந்தப்பஞ்சம் மழை பொய்த்ததனால் மட்டும் வரவில்லை. மண் பொய்த்ததனால் மட்டும் வரவில்லை. வேறு இடங்களிலிருந்து வரவேண்டிய விளைச்சலை முழுக்க நீங்கள் அள்ளிக்கொண்டு செல்வதனால் வந்தது. உங்கள் துறைமுகங்கள்முழுக்க எங்கள் உணவு மலையாகக் குவிந்துக்கிடக்கிறது. அங்கே எலிகள் உண்ணும் தானியம் கிடைத்தால்கூட எங்கள் பிள்ளைகளில் பாதியைச் சாகாமல் காத்துக்கொள்வோம். ஆனால், எங்களுக்கு என்ன வேறுபாடு? நேற்று நாங்கள் விளைவித்ததை வேறுசிலர் உண்டார்கள். இன்று அவர்களிடம் பிடுங்கி நீங்கள் உண்கிறீர்கள்.”

அவனுடைய ஆங்கிலம் அத்தனை கூர்மையும் கனமும் கொண்டிருப்பதை ஏய்டனால் நம்பமுடியவில்லை.

"ஆமாம் சார். நீங்கள் அளித்த வேலைகளுக்காக நாங்கள் நன்றியுடன் இருக்கிறோம். உங்கள் செருப்புகளைத் தைக்கவும் உங்கள் வார்களைப் பாலீஷ் போடவும் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளுக்காக நன்றியுடன் இருக்கிறோம். உங்களுக்காக போர்க்களங்களில் சாகும் வாய்ப்பை அளித்தமைக்காகவும் உங்களுடைய ரகசியநோய்களை எங்கள் உடலில் சுமக்கச் செய்தமைக்காகவும் நன்றியுடன் இருக்கிறோம். அதேபோல நீங்கள் எங்களுக்கு அளித்த இந்தப் பஞ்சங்களுக்காகவும் உங்களுக்கு நன்றி சொல்கிறோம். ஏனென்றால், அத்தனைக்கும் மேலாக நீங்கள் எங்களுக்கு உங்களுடைய கல்வியில் ஒரு துளியைக் கொடுத்தீர்கள். உங்களுடைய மொழியில் ஒரு வாசலைத் திறந்து வெளியுலகத்தைக் காட்டினீர்கள். எங்களுக்கும் மானுட நீதி கிடைக்க வாய்ப்புண்டு என்று எங்களிடம் முதன்முதலாகச் சொன்னீர்கள். நாங்களும் மனிதர்களே என்று உங்களில் சிலரேனும் நடந்து கொண்டீர்கள். ஆகவே, உங்களுடைய எல்லாச் சுயநல நோக்கங் களுடனும், அயோக்கியத்தனங் களுடனும், தந்திரங்களுடனும், கொடுமைகளுடனும்கூட நீங்கள் மானுடதெய்வங்கள்தான். அதற்காக எங்கள் தலைமுறைகள் உங்களுக்கு நன்றியுடன் இருக்கும்." தலைவணங்கி "நான் வருகிறேன். வணக்கம்" என்று சொல்லி காத்தவராயன் வெளியே சென்றான்.

அந்த இளைஞனின் பாதுகாப்பைப்பற்றி ஏய்டன் சட்டென்று ஒரு பதற்றத்தை அடைந்தான். ஆனால், மறுகணமே அவனைப் பாதுகாத்துக்கொள்ள அவனுக்குத் தெரிந்திருக்கும் என்றும் தோன்றியது. அவனுடைய மனவலிமை அவனுக்கான பாதையை எந்தப்புதர் நடுவிலும் உருவாக்கிக் கொடுக்கும். இத்தகைய மனிதர்கள் ஒருபோதும் தோற்ப தில்லை. அவர்களை இயக்கும் சரடுகள் மண்ணில் பிணைந் திருப்பவை அல்ல. அறியமுடியாத பேரொளியுடன் தலைக்கு மேல் விரிந்துள்ள வானத்திலிருந்து வருபவை அவை.

'எங்கே மொழி மனதைச் சரியாக பிரதிபலிக்கிறது எங்கே உணர்ச்சியும் மொழியும் ஒன்றாகின்றன எங்கே ரத்தமும் கண்ணீரும் ஒன்றேயாக மாறுகின்றனவோ அங்கா?' ஏய்டன்

உதிரி எண்ணங்களில் அலைந்தபடி அமர்ந்திருந்தான். பின்பு எழுந்து கைகளை மேலே தூக்கிச் சோம்பல் முறித்தான். பின்பு பெல்லை அடித்தான். சாம் வருவதற்குள்ளாகவே வாசலில் மக்கின்ஸியின் பூட்ஸ் ஒலி கேட்டது. "உள்ளே வா" என்றான் ஏய்டன்.

மக்கின்ஸி உள்ளே வந்து "நான் நீங்கள் அந்த இந்தியனிடம் பேசி முடிப்பதற்காகக் காத்திருந்தேன். அவன் யார்? புதிதாக மதம்மாறிய கிறித்தவனா?" என்றான்.

"இல்லை. ஏன் கேட்கிறாய்?"

"இல்லை, வெள்ளைச்சட்டையும் மீசையில்லா முகமும் மதம் மாறிய கிறித்தவர்களின் அடையாளம் அல்லவா?"

"ஓ" என்றான் ஏய்டன்.

"காப்டன் நீங்கள் எனக்கு ஒரு மெல்லிய விஸ்கிக்குச் சொல்லலாம். இவ்வேளைக்குப் பொருத்தமானதாக இருக்கும்."

"வெயில் ஏறிவிட்டது" என்றான் ஏய்டன்.

"ஆம். வெயிலுக்கும் விஸ்கி இணைந்துபோகும்" கண்களைச் சிமிட்டி "என்னிடம் கேளுங்கள்" என்றான்.

ஏய்டன் பெல்லை அடித்து சாமிடம் விஸ்கிக்குச் சொன்னான்.

மக்கின்ஸி "இந்த நகரத்தில் நம்மை வாழ வைப்பது விஸ்கி வடிவில் வரக்கூடிய தெய்வங்கள் அல்லவா?" என்றான்.

"சொல்லு, என்ன விஷயம்?" என்று ஏய்டன் கேட்டான்.

"விஷயமிருக்கிறது. சொல்கிறேன்." சாம் கொண்டு வந்த கோப்பையை எடுத்துக்கொண்டு "ச்சியர்ஸ்" என்றான். மெல்ல முட்டியபின் ஒரே மிடறில் விழுங்கி கோப்பையைக் கீழே வைத்தான்.

ஏய்டன் கோப்பையை உருட்டியபடி "இப்படித்தான் எப்போதும் குடிக்கிறாய்" என்றான்.

"இதோபார் ஆடன், நான் இன்னும் மாலுமிதான். கரையில் கொஞ்சகாலம் வாழ்ந்ததுமே நம்மவர்களுக்கு இந்த

ஊர்த் தெய்வங்களைப்போல ஏழெட்டுக் கைகள் முளைத்து விடுகின்றன. நூற்றுக்கணக்கான சட்டைப்பைகள் நிறைய ஆரம்பிக்கின்றன. உடனே தன்னைப் பிரபுக்கள் என்று நினைத்துக்கொள்கிறார்கள். ஷேக்ஸ்பியர் படிக்கிறார்கள். வைனைத் துளித்துளியாக உறிஞ்சுகிறார்கள்."

ஏய்டன் சிரித்துவிட்டான் "இரண்டும் ஒன்றா?" என்றான்.

"என் பார்வையில் இரண்டும் ஒன்றுதான். செங்கல்பட்டில் ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் மனைவியைச் சந்தித்தேன். இங்கிலாந்தில் ஏதோ கரித்தொழிலாளப்பெண். அவள் கால்நகங்களில் இன்னும்கூட கரி இருக்கும். இங்கே வந்ததும் சீமாட்டி ஆகிவிட்டாள். கையுறையைக் கழற்றப் பதினைந்து நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறாள். மென்மையாகச் சிரிக்கிறாள். ஃப்ளெமிங்கோ பறவையைப்போல நடக்கிறாள். வேசி."

ஏய்டன் உறிஞ்சிவிட்டு "சரி. அதனாலென்ன? நல்ல பெண்தானே?" என்றான்.

"கண்டிப்பாக. நீ சீமாட்டியைப்போல இருக்கிறாய் என்றதுமே வந்துவிட்டாளே." மக்கின்ஸி கண்ணடித்தான். "சும்மா சொல்லக்கூடாது. படுக்கையில் நிலக்கரித் தொழிலாளப்பெண் மாதிரியே இருக்கிறாள். உச்சகட்டத்தில் சில நல்ல சொற்கள் சொன்னாள். கரித்தொழிலாளர்கள் மட்டுமே சொல்லக்கூடிய வார்த்தைகள். மறந்துவிட்டேன். அருமையான வார்த்தைகள். அப்போது குறித்துப்போட வசதிப்படவில்லை"

ஏய்டன் புன்னகையுடன் "சொல்லு. எதற்காக வந்தாய்?" என்றான்.

மக்கின்ஸி சட்டென்று முகம் தீவிரமடைய "நேற்று மாலை என்னை லெப்டினென்ட் கர்னல் ஆளனுப்பி அழைத்தார்" ஏய்டன் தன் நெஞ்சின் படபடப்பை உணர்ந்தான். மக்கின்ஸி லேசாக சப்புகொட்டி "உன் விஷயமாகப் பேசத்தான். என்ன என்று உனக்கே தெரிந்திருக்கும்." என்றான்.

"இஸ்ஹவுஸ் விவகாரமா?" என்றான் ஏய்டன். 'மெட்ராஸ் ஸ்டாஃப் கார்ப்ஸி'ன் லெப்டினெண்ட் கர்னல் ராபர்ட் கிரிஃபித் லூயிஸ் எந்நிலையிலும் கடுமையானவர். பழைய பிரிட்டிஷ் போர்வீரர்களின் சரியான வார்ப்பு. அவர் ஒரு நிர்வாக இயந்திரம் என்று ஏய்டன் பலமுறை நினைத்திருக்கிறான். அத்துடன் அவருக்கும் ஐரிஷ்காரர்களைச் சுத்தமாகப் பிடிக்காது.

"ஆமாம். நேற்றுமாலையே ஐஸ்ஹவுஸில் இருந்து கர்னலைச் சென்று சந்தித்துப் புகார் செய்துவிட்டார்கள். அமெரிக்க நிறுவனத்தின் விஷயத்தில் நாம் இன்னும் கவனமாக இருந்திருக்கவேண்டுமென்பது லெப். கர்னலின் கருத்து. கவர்னர் வரை போகாமல் விஷயங்களை முடித்துவிடலாமென்று நினைக்கிறார்"

"ஆனால்." என ஏய்டன் ஆரம்பித்தான்.

"நாம் எதுவும் பேசுவதில் அர்த்தமில்லை என்று நினைக்கிறேன். எல்லாமே கர்னலுக்கும் தெரியும். ஆனால், அமெரிக்க நிறுவனம் செய்வதை நாம் தட்டிக்கேட்க முடியாது. நமக்கு உண்மையில் அந்த அளவுக்கு அதிகாரம் இல்லை" என மக்கின்ஸி இடைமறித்தான்.

ஏய்டன் கூர்ந்து நோக்கி "நமக்கு என்றால்?" என்றான்.

மக்கின்ஸி தயக்கமில்லாமல் அவன் கண்களைச் சந்தித்தான். "உனக்கும் எனக்கும் நம்மைக் காத்துரட்சிக்கும் கவர்னருக்கும். நாம் பிரிட்டிஷ் பேரரசின் அடித்தளத்தில் உள்ள கூழாங்கற்கள்"

ஏய்டன் கோப்பையைப் பார்த்தான். விஸ்கியைச் சுழற்றினான். சட்டென்று விழுங்கிவிட்டு "அதாவது அமெரிக்க நிறுவனத்தின் லஞ்சப் பட்டியலில் கவர்னரும் உண்டு என்பதனால் கர்னல் எதுவும் சொல்லமுடியாது, இல்லையா?" என்றான்.

மக்கின்ஸி சற்றும் கூசவில்லை. சிரித்தபடி "கண்டிப்பாக. அந்தப்பட்டியலில் லெப். கர்னலும் பிஷப்பும் தலைமை நீதிபதியும்கூட இருக்கலாம். வைஸ்ராய் கண்டிப்பாக

இல்லாமலிருக்க மாட்டார். இந்தப் புனித பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் லஞ்சமில்லாமல் வணிகம்செய்ய முடியுமா என்ன?" கண்களைச் சிமிட்டியபடி "வணிகன் அரசாங்கத்துக்கு லஞ்சம் கொடுப்பது விபச்சாரிக்கு அவளுடைய வாடிக்கையாளன் கூலி கொடுப்பதைப் போன்றது" என்றான்.

ஏய்டன் மெல்லத் தளர்ந்தான். மக்கின்ஸி அவனை நோக்கியபடி "லெப். கர்னல் கிரிஃபித் அவரே பேசிவிட்டார். நாம் நீலமேகத்தை விட்டுவிட்டு மேற்கொண்டு ஐஸ் ஹவுஸ் பக்கம் போகாமலிருப்போமென்றால் அவர்கள் இதை விட்டுவிடத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, நான் காலையிலேயே நீலமேகத்தை விட்டுவிட்டேன்" என்றான்.

"என்ன சொல்கிறாய்?" என ஏய்டன் எழுந்தான் "என்னிடம் கேட்காமலா?"

மக்கின்ஸி கையை அசைத்துக்காட்டி "கேட்டு விடுவதற்குள் தாமதமாகிவிடும். நீ இன்று வந்தது மிகத் தாமதமாக. இவ்வளவு நேரம் அந்த இளைஞனிடம் பேசிக் கொண்டிருந்தாய்."

"நீ என்னிடம் கேட்டிருக்கவேண்டும். அவன் என் கைதி" என்று ஏய்டன் கத்தினான்.

"கேட்டிருந்தால்? உனக்கு வேறு வழி இருக்கிறது என்கிறாயா? இது கர்னலின் உத்தரவு."

அந்த உண்மை ஏய்டனைப் படபடப்படைய வைத்தது. அவன் விரல்கள் நடுங்கின. தொண்டை வறண்டு இன்னொரு குவளை மதுவுக்காக ஏங்கியது. "மாக், அவன் ஒரு கொலைகாரன், தெரியுமா? ஒரு இரட்டைக்கொலையை அவன் செய்திருக்கக்கூடும். அவனை விசாரிக்கவேண்டு மென்றிருந்தேன். ஒருவேளை அவனை இனிமேல் நம்மால் பிடிக்கமுடியாமல் போகலாம்"

"ஓ" என்றான் மக்கின்ஸி சாதாரணமாக. "அவன் கொலைசெய்தது ஒரு வெள்ளையனை அல்ல என்றால் அது ஒன்றும் உனக்குப் பிரச்சினையாகப் போவதில்லை."

ஏய்டன் எரிச்சலுடன் "அவன் கொன்றது இரண்டு ஏழைத் தொழிலாளர்களை."

மக்கின்ஸி "வலுவான சாதியைச் சேர்ந்தவர்களா?" என்றான்.

"இல்லை. பறையர்கள்" என்றான் ஏய்டன்.

"அவ்வளவுதானே? இந்நாட்களில் எல்லாரும்தான் அவர்களைக் கொல்கிறார்கள். கொல்லாவிட்டால் அவர்களே பட்டினி கிடந்து சாகிறார்கள். இதையா ஒரு விஷயமென்று சொல்கிறாய்? இதற்காகவா அவனை அழைத்து வந்தாய்?" மக்கின்ஸி நாற்காலி 'கிரீச்'சிட முன்னகர்ந்தான் "நீலமேகம் இங்கே வலுவாக இருக்கும் சாதியைச் சேர்ந்தவன். நாராயணன்கூட அவனுடைய சாதிதான். நம் படைகளிலேயே கூட அவர்கள்தான் அதிகம்."

"மாக், ஒன்றுகேட்கிறேன்." என்றான் ஏய்டன். "உன் குடும்பப்பின்னணி எனக்கும் தெரியும். நம் கிராமங்களில் நாம் இதைப்போல வறுமையில்தான் வாழ்ந்தோம். கூட்டம் கூட்டமாக அமெரிக்காவுக்குப் பஞ்சம் பிழைக்கச் சென்று கொண்டிருந்தோம். அங்கே அடிபட்டும் நோயில் சிக்கியும் செத்தோம். நாம் இந்த மனிதர்களை நம்மவர்களுடன் கொஞ்சமேனும் ஒப்பிட்டுக்கொள்ள வேண்டாமா?"

சட்டென்று முகம் சிவக்க நாற்காலியை ஓசையுடன் உந்தியபடி மக்கின்ஸி எழுந்தான் "தேவை இல்லை. நாம் ஒன்றும் பண்பாடில்லாத காட்டுமிராண்டிக்கூட்டம் இல்லை. சுரண்டலினால் நமக்குப் பஞ்சம் வந்திருக்கலாம். ஆனால், நாம் உயர்குடி மனிதர்கள். இவர்களைப்போல மனிதமிருகங்கள் இல்லை" என்றான்.

ஏய்டன் "மாக்" என்று சொல்ல மக்கின்ஸி "வேண்டாம்." என்று கை நீட்டி திடமாகச் சொன்னான். "நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். நீ செய்வதற்கு வேறேது மில்லை. உனக்கு ஏதாவது மாற்றுக்கருத்து இருந்தால் நீயே நேரில் சென்று கர்னலிடம் பேசலாம்"

அவன் இறங்கிச் செல்வதைச் செயலற்றவனாக ஏய்டன் பார்த்துக்கொண்டிருந்தான். சட்டை கடற்காற்றில் படபடக்க அவன் மறையும் வரை பார்த்தபின் சோர்வுடன் நாற்காலியில் தளர்ந்துகொண்டான். கடற்காற்றில் மரக்கிளையில் மாட்டிய சீலைக்கிழிசல் போலப் பிரக்ஞை படபடத்தபடியே இருந்தது. ஒரு கட்டத்தில் அவன் உடலே அந்த படபடப்பை வாங்கிக் கொண்டது. "சாம்" என்று மணியை அடித்தான். விஸ்கி கொண்டுவரச்சொல்லி தாகநீர் குடிப்பவனைப்போல மடமடவென்று குடித்தான். சட்டைப்பித்தான்களைத் திறந்து விட்டுக்கொண்டு மேலும் குடித்தான். வியர்வை முதுகில் வழிந்தது. நெஞ்சுக்குள் இருந்து அமிலம் வெளிவருவதுபோல தொண்டை கரித்தது. வெறிகொண்டவனைப்போல மேலும் மேலும் குடித்தான்.

தலை கனத்து கழுத்தால் அந்த எடையைத் தாங்க முடியவில்லை. வாள் நுனி மேல் வைக்கப்பட்ட கவசத்தொப்பி போல தலை பலபக்கங்களாகச் சரிந்தது. காற்று போதாதது போலிருந்தது. "டேய் அம்மாசி. பங்காவை இழு. சுட்டுவிடுவேன். இழுடா பங்காவை" என்று கூச்சலிட்டான். பங்கா இழுபடும் ஒலி மிக உரக்கக் கேட்டது. "சத்தமில்லாமல் இழுடா. சுட்டுவிடுவேன். கண்டிப்பாகச் சுடுவேன். துப்பாக்கி இருக்கிறது. ஆமாம், என்னிடம் துப்பாக்கி இருக்கிறது. சுட்டுவிடுவேன்." என்றான். அவன் குரல் அவனுக்கே சம்பந்தமில்லாததாக ஒலித்தது. பங்கா ஒலியைக் கேட்டுக்கொண்டிருந்தான். பங்காவுடன் சேர்ந்து அந்த அறையும் ஊசலாடியது. பின் தன் குறட்டை ஒலியைத் தானே கேட்டுத் திடுக்கிட்டான். எச்சில் தோளில் வழிந்திருந்தது. அதைத் தொட்டுத் துடைத்தவன் சம்பந்தமில்லாமல் ஒரு வெள்ளையானையை நினைவு கூர்ந்தான். அதை எங்கே பார்த்தேன் என பிரக்ஞையைத் துழாவியபடி இருந்தவன் மீண்டும் புதைந்து போனான்.

கண்விழித்தபோது பின்மதிய வெயில் சாய்ந்து அறைக்குள் கிடந்தது. அது அறையை வெப்பம் நிறைந்ததாக ஆக்கிவிட்டிருந்தது. வெயில்பட்டைகளைப் பார்த்துக்கொண்டு சற்றுநேரம் அமர்ந்திருந்தான். வியர்வை முதுகில் கசகசத்தது.

மொத்த உடம்பே உருகி வழிவதுபோலக் கொதித்தது. எழுந்து சென்று வெளியே இருந்த தகரத்தொட்டியில் நீர் நிறைத்து அதில் முகத்தைத் தாழ்த்திக்கொண்டான். காதுமடல்களையும் பின்னங்கழுத்தையும் நனைத்தான். ஈரத்தைத் துடைக்காமலேயே வந்து அமர்ந்துகொண்டான். சாம் எட்டிப்பார்த்து அவன் எழுந்ததை உணர்ந்து பேசாமல் நின்றான். ஏய்டன் உணவைக் கொண்டுவரும்படிச் சைகை செய்தான்.

வழக்கமான ரொட்டியும் இறைச்சியும் பழச்சாறும். அதை உண்டு முடித்தபின் கோப்புகளை எடுத்துப் பதில் எழுதவேண்டிய கடிதங்களின் கீழே குறிப்புகள் எழுதினான். அதற்காகப் பழைய கோப்புகளைப் பரிசோதனைசெய்தான். அருணாச்சலத்தை வரவழைத்துக் கடிதங்களை எழுதச்சொல்லிக் கொடுத்தபோது மாலை ஐந்துமணி ஆகிவிட்டிருந்தது. சாம் கொண்டுவந்த டீயைச் சாப்பிட்டுவிட்டுத் தன்னுடைய கோட்டை அணிந்து வெளியே இறங்கினான். அவன் வருவதைப் பார்த்த துரைசாமி குதிரையை அழைத்துவந்தான். மௌனமாகக் குதிரையில் ஏறிக்கொண்டு மெதுவாகக் கடற்கரைச்சாலைக்குச் சென்றான்.

வழக்கமாக மாலை நன்றாகச்சிவந்த பின்னர்தான் அவன் செல்வது. கணிசமான நாட்களில் இருட்டிவிட்டிருக்கும். அவ்வளவு சீக்கிரமாக ஏன் கிளம்பினோம் என்று அவனுக்குப் புரியவில்லை. அலுவலகத்தில் இருக்கப்பிடிக்கவில்லை. கடலைப்பார்க்க மனம் ஆசைப்பட்டது. ஆனால், கடல் அலைகளைப் பார்த்தபோது கூடவே மனமும் அலையடித்தது. அந்த நிகழ்ச்சிகளை முழுக்க மனதிலிருந்து தவிர்க்க நினைத்தான். துரைச்சாமி, கண்ணன், நாராயணன் என முகங்கள் அவன் முன் ஓடின. எல்லாக் கண்களுக்குள்ளும் ஒரு சிரிப்பு இருப்பதை அவனால் உணர முடிந்தது. அவர்கள் அவனை முழுமையாகத் தோற்கடித்துவிட்டிருக்கிறார்கள். அவனை அவமதித்திருக்கிறார்கள். அந்த அவமதிப்பை அவன் அந்தரங்கமான ஓர் வலியாக மட்டுமே அறியுமளவுக்கு நுட்பமாக அதைச் செய்திருக்கிறார்கள்.

காலையில் கொட்டடியில் இருந்து நீலமேகத்தை விடுவிக்கும்போது அவன் முகத்தில் என்ன பாவனை இருந்திருக்கும்? வேறென்ன, அதே உறைந்த பாவனை. புனிதர்களுக்குரிய நிறைவுடன் பணிந்து வணங்கி நடந்து சென்றிருப்பான். ஒருவேளை தன் ஆட்களுடன் இருக்கும்போது அவன் சிரிக்கக்கூடும். இன்னும் நெடுங்காலம் இதைச்சொல்லி அவர்கள் மகிழ்ந்து கொண்டாடக்கூடும். தவறுசெய்து விட்டேன். அவனைப்பிடித்ததுமே அவன் தலையைச் சீவியிருக்க வேண்டும். அதைச் சட்டபூர்வமாக காட்ட ஆயிரம் வழிகளிருக் கின்றன. மாக்கிடம் கேட்டால் அவனே எல்லாவற்றையும் செய்து தருவான். ஆனால், அதை என்னால் செய்யமுடியாது. செய்தபின் என்னை என்னால் மதிக்கமுடியாது. அத்துடன் அப்படிச் செய்தாலும் எந்தப்பயனும் இல்லை. அந்தப் புனிதரின் முகபாவத்துடன் அவன் செத்துக்கிடப்பானென்றால் என்னை அவன் நிரந்தரமாக வென்றுவிடுவான்.

தூரத்தில் நின்றவனின் வெள்ளை ஆடை வெயிலில் கண்ணில் அடித்தது. அவனைப் பார்த்ததுமே ஏய்டன் அவன் அக்கணம் வரை எதை எண்ணி தத்தளித்துக்கொண்டிருந்தான் என்பதைத் தெளிவாக உணர்ந்தான். அவனைச் சந்திக்க வேண்டும் என்றுதான். அவன் அப்படி விட்டுவிடக்கூடியவ னல்ல என்பதைத் தன் அகம் நன்றாகவே அறிந்திருந்தது' என உணர்ந்தான். அருகே நெருங்க நெருங்க அவன் தயக்கத்தை உணர்ந்ததுபோலக் குதிரை வேகமிழந்து நின்றது.

காத்தவராயன் "மாலை வணக்கம் சார்" என்றான்.

ஏய்டன் மெல்லிய குரலில் "மாலை வணக்கம்" என்றான்.

மேற்கொண்டு என்ன பேசுவதென்று ஏய்டனுக்குப் புரியவில்லை. அவன் தொப்பியைத் தூக்கி தலையைக்கோதிக் கொண்டு மூச்சுக்குள் "ஜீஸஸ்" என்றான்.

"நீங்கள் சங்கடப்படவேண்டியதில்லை சார். அதைச் சொல்லிவிட்டுப்போகத்தான் வந்தேன். நீங்கள் உங்கள் அளவில் நீதியுணர்ச்சியுடன் இருந்தீர்கள். எங்கள் மீது பரிவுடன்

இருந்தீர்கள். அதற்காக நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்." என்றான் காத்தவராயன்.

ஏய்டன் திடுக்கிட்டு ஏறிட்டுப்பார்த்தான்.

"எங்கள் ஆட்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். எனக்குத்தெரியும்." என்றான் காத்தவராயன்.

ஏய்டன் பெருமூச்சுடன் "நீ நினைப்பதுபோலப் பிரிட்டிஷார் இங்கே நீதியைக் கொண்டு வர விரும்பவில்லை." என்றான் "எங்களுக்குத் தேவை அமைதி. நாங்கள் எங்கள் வியாபாரத்தைச் செய்வதற்குத் தேவையான பதற்றமில்லாத நிலை. அந்த நிலை இங்குள்ள பறையர்களை ஒட்டுமொத்த மாகக் கொன்றால்தான் வருமென்றால் நாங்கள் அதைத்தான் செய்வோம்" என்றான்.

காத்தவராயன் கசப்புடன் சிரித்து "அது எங்களுக்கும் தெரியும் சார். அதை உங்களுக்குப் பரிந்துரைக்க எங்கள் புனிதமான மண்ணில் நிறையக் கற்றறிந்த பண்டிதர்களும் இருப்பார்கள். ஆனாலும்கூட வெள்ளையர் ஒரு படிமேல்தான்"

"ஏன் உங்களில் கருணைகொண்ட ஒருவர்கூடவா இல்லை?" என்றான் ஏய்டன்.

காத்தவராயன் சட்டென்று சீறிய சினத்துடன் "கருணை கேட்க நாங்கள் நரகத்தில் உழலும் பாவிகளும் அல்ல, இங்குள்ள மற்றமனிதர்கள் கடவுள்களும் அல்ல. நாங்கள் மனிதர்கள். எங்களுக்குத்தேவை நீதி. சமத்துவம். இன்று நீங்கள் என்னுடன் கைகுலுக்கிச் சமானமாக அமரச்செய்தீர்களல்லவா அந்த மனநிலை. உங்கள் இனத்தவர் நேற்று எப்படி இருந்திருந்தாலும் இன்று அதை அடைந்துவிட்டீர்கள். தனிமனிதர்கள் எப்படி இருந்தாலும் உங்கள் மொழியும் சட்டமும் நீதியையும் சமத்துவத்தையும் சொல்கிறது. ஆனால், எங்கள் மொழிமீது மலநாற்றம் அடிக்கிறது. எங்கள் நீதிமீது நிரபராதிகளின் ரத்தம் வழிகிறது."

'இந்தமனிதன் ஒரு கவிஞன்' என்று ஏய்டன் நினைத்துக் கொண்டான். 'வாழும்காலத்தின் எல்லைகளை அவர்களால் தான் தாண்டமுடிகிறது'.

"மீண்டும் உங்களுக்கு நன்றி சார்" என்று காத்தவராயன் கிளம்பினான்.

ஏய்டன் சட்டென்று எழுந்த எண்ணத்துடன் "ஒரு நிமிடம் மிஸ்டர் காத்தவராயன்" என்றான் அவன் நின்றதும் "நாம் ஏன் உங்கள் ஆட்களின் குடியிருப்புகளுக்குச் சென்று அந்த அடிபட்ட மனிதர்களைப்பற்றிக் கேட்கக்கூடாது? அவர்களைக் கண்டடைந்தால் நான் கொண்டுசென்று கவர்னர் முன் நிறுத்தமுடியும். அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் ஒரு பிரிட்டிஷ்காரர். கண்ணெதிரே நிற்கும் ஒரு சாட்சியத்தைப் புறக்கணிக்க அவரால் முடியாது"

காத்தவராயன் அவனைக் கூர்ந்து நோக்கி ஒரு கணம் நின்றான். பின்பு, "உண்மையைச் சொல்லப்போனால் அதனால் பயனில்லை என்றுதான் நினைக்கிறேன். ஆனால், எங்கள் குடியிருப்புகளுக்கு நீங்கள் வருவதை நான் ஊக்குவிக்கிறேன். கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ இன்றுவரை எந்த ஆட்சியாளரும் எட்டிப்பார்க்காத இடங்கள் அவை. மனிதர்கள் எத்தனைக் கீழ்மையில் வாழமுடியுமென நீங்கள் அங்கே பார்ப்பீர்கள்."

ஏய்டன் தன் குதிரையைத் திருப்பினான். காத்தவராயன் அவனை வழிநடத்தி அழைத்துச்சென்றான்.

சில கணங்களுக்குள் விசித்திரமான ஒரு படபடப்பை தன்னுடைய நரம்புகளில் ஏய்டன் உணர ஆரம்பித்தான். காற்றில் படபடக்கும் துணியைக் கைகளில் பிடித்துக் கொண்டிருப்பதுபோலிருந்தது உடம்பின்மீது பிரக்ஞை. செய்வது சரிதானா என்ற எண்ணம் வரவில்லை. ஆனால், ஒரு போர்க்களத்தில் நுழைவதுபோன்றிருந்தது. தனக்கு நிகழ்வதைத் தானே விலகி நின்றுபார்ப்பது போன்று. வெள்ளையர் பகுதியெங்கும் அனேகமாக மனித நடமாட்டமே இல்லாமலிருந்தது மண்சாலையின் இருபக்கமும் உதிரித் தென்னை மரங்கள் நிற்கும் சிறிய தோப்புகள். அவற்றுக்குள் வெள்ளைச் சுவர்களும் சிவந்த ஓடு வேய்ந்த கூரையும் கொண்ட தாழ்வான பங்களாக்கள். ஒரே ஒரு கருப்பு தாதி வெண்ணிறமான அங்கி

அணிந்து தொப்பியுடன் சென்றாள். குதிரை ஒலி கேட்டதுமே பக்கவாட்டில் பாய்ந்து வேலிமேல் ஒண்டிக்கொண்டாள்.

வெள்ளையர்நகருக்கும் கறுப்புப்பட்டினத்துக்கும் நடுவே ஒரு மூங்கில் தடுப்பு வைக்கப்பட்டு இரண்டு சிப்பாய்கள் காவலிருந்தனர். குதிரையைக் கண்டதும் ஒருவன் இறங்கி ஓடி மூங்கிலை எடுத்தான். இன்னொருவன் விரைப்பாக நின்று சல்யூட் அடித்தான். குதிரை கடந்துசென்றதும் மூங்கிலைத் தாழ்த்தும்போது ஒருவன் இன்னொருவனிடம் ஏதோ சொல்வது கேட்டது. சாலையின் இருபக்கமும் தென்னந் தோப்புகள் அடர்வின்றி இருக்க ஊடே முட்புதர்கள் வளர்ந்திருந்தன. களர்மண்ணாகையால் தென்னைகள் குறுகி வளைந்து ஓலைகள் வெளிறி நின்றன. தேங்கிய நீரின் பாசிவாடை வீசியது. தோப்புகளுக்குள் ஓலைவேய்ந்த சிறிய குடிசைகள் தென்பட்டன. அவற்றில் ஒன்றிலிருந்து ஒரு செந்நிறமான நாட்டுநாய் குரைப்பும் ஊளையுமாக ஒலியெழுப்பியபடி ஓடிவந்து தூரத்தில் நின்று கொண்டு எம்பி எம்பிக் குதித்தது.

கறுப்பர்நகருக்குள் நுழைந்த சில கணங்களுக்குள் விசித்திரமான ஓர் விடுதலையுணர்ச்சியை ஏய்டன் அடைந்தான். அவன் மூச்சுக்குள் சீட்டியடித்துக் கொண்டிருப்பதை அவனே கேட்டபோதுதான் அதை உணரமுடிந்தது. அந்த உற்சாகத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. பின்னர் நினைத்துக்கொண்டான், அங்கே இருக்கும் ஓசைகள்தான் அந்த விடுதலையுணர்ச்சியை அளிக்கிறதா என. எந்த ஒழுங்குமில்லாத கலவையான சத்தங்கள். யாரோ எதையோ அடிக்கிறார்கள். நீர் இறைக்கும் சகடை 'கிரீச் கிரீச்' என்கிறது. யாரோ வசைபாடுகிறார்கள். யாரோ பாத்திரங்களை நகர்த்துகிறார்கள், நாய்கள் குரைக்கின்றன, பிள்ளைகள் வீறிடுகின்றன.

இரு குழந்தைகள் ஒன்றை ஒன்று துரத்தியபடி சாலைக்கு வந்து திகைத்து பின்பு திரும்பி ஓடின. முழு நிர்வாணமான கறுப்புக்குழந்தைகள். நீண்ட தலைமுடியை நாரால் கட்டியிருந்தன. நான்கு எருமைகள் கழுத்தில் போட்ட கொட்டாங்கச்சிகள் ஓசையிட எதிரே வந்தன. அவற்றை

ஓட்டிவந்தவன் "ட்ரீ டிரீ" என்று கத்தியபடி சாட்டைக் குச்சியால் அவற்றைத் தட்டி ஒதுக்கினான். குதிரை வெருண்டு 'பரீஸ்' என்றது. சாலையிலேயே சில குழந்தைகள் மலம் கழித்தன. காத்தவராயன் "ஏ எந்திரி. தள்ளு" என்று ஓசை யிட்டான். ஏய்டன் புன்னகைசெய்துகொண்டான். தன்னுடைய மனம் களித்திருக்கும் என அவன் நினைக்கிறான் என்று புரிந்தது. ஆனால், அவன் மனம் விரிந்து கொண்டேதான் சென்றது.

ஏன் என எண்ணிக்கொண்டான். இங்கே இருக்கும் ஒழுங்கின்மைதான் காரணமா? அதைக் கட்டற்ற தன்மை என்றுதான் சொல்லவேண்டும். அது அவனுடைய அயர்லாந்தை நினைவூட்டியது. புலர்காலையில் இமைசரியக் குடித்துவிட்டு குதிரையில் திரும்பி அமர்ந்து பாடிக்கொண்டே செல்பவர்களுடைய கிராமங்கள். எவரும் எங்கும் எப்படியும் இருக்கும் மண். முதன்முதலாக லண்டன் அவனுக்களித்த திகைப்பை நினைவுகூர்ந்தான். 'அது கச்சிதமாகச் செலுத்தப் பட்ட யந்திரம் போலிருந்தது. ஒவ்வொரு மனிதர்களும் இயந்திரப்பகுதிகள் போலிருந்தனர். அதில் அவன் மட்டும் பொருந்தாமலிருப்பதுபோல, இயந்திரத்தின் பிற உறுப்புகள் ஒவ்வொன்றும் அவனை நசுக்க வருவதுபோலத் தோன்றியது.

பின்னர், பதினாறாண்டுகாலம் அவன் செய்ததெல்லாம் தன்னை இன்னொரு யந்திரப்பகுதியாக மாற்றிக் கொள்வதைத் தான். மெல்லமெல்ல அவன் தன்னை உருக்கி வடிவமைத்தான். ராணுவக்கட்டுப்பாடுகளுக்குப் பழகினான். தேர்ந்த மொழியைக் கற்றுக்கொண்டான். உணவுமேஜை நடத்தைகள், வரவேற்பறை பாவனைகளைப் பயின்றான். உடைகளில், அணிகளில் ஒவ்வொன்றிலும் எது உகந்தது என்பதைக் கூர்ந்து கவனித்து ஏற்றுக்கொண்டான். இசையை ரசிக்கவும் நடனமாடவும் ஆரம்பித்தான். முழுக்க முழுக்கத் தன்னை மாற்றிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தான். பின்னர் அயர்லாந்துக்குச் சென்றபோது அயர்லாந்து அன்னியமான மண்ணாக இருந்தது.

அப்படி இல்லை என்று அப்போது உணர்ந்தான். உள்ளே எங்கோ அவனுடைய அப்பாவின் நினைவு எஞ்சியிருந்தது.

மாவுப்பானையின் விளிம்பிலோ மடிப்பிலோ எஞ்சும் ஈஸ்ட் போல. அவனை மெல்லமெல்ல புளிக்கவைத்து அப்பாவைப் போலவே ஆக்கிவிட்டது அது. இல்லையேல் இந்த அழுக்கை இந்த ஒழுங்கின்மையை அவன் ரசிக்கக்கூடாது. இப்போது ஒரு சுருட்டு கிடைத்தால் அவன் புகைக்கக்கூடும். ரம் குடிக்கக்கூடும். குதிரையை அடித்து சாக்கடைகள் தெறிக்க கூச்சலிட்டபடி பாய்ந்தோடக்கூடும். பிரிட்டிஷ் கனவானின் தோலையும் தசையையும் பிய்த்தபடி உள்ளிருந்து ஓர் அயர்லாந்துக்காரன் பீறிட்டுக்கிளம்பக்கூடும்.



# 4

மதராசப்பட்டினம் என்று ஏய்டன் நினைத்திருந்த ஊர் அதிகபட்சம் இருபது ஃபர்லாங் நீளமும் பத்து ஃபர்லாங் அகலமும் கொண்ட ஒரு நிலப்பரப்புதான் என்பது அவனுக்கும் தெரிந்திருந்தது. உண்மையான மதராசப்பட்டினம் அவனுடைய கண்ணுக்கு அப்பால் பல திசைகளிலாகப் பெருகி விரிந்து கிடந்தது தீப்பற்றி விரிந்து செல்லும் புல் வெளி போல என்று ஏய்டன் நினைத்துக் கொண்டான். நாலா பக்கமும் அது எரிந்து எரிந்து அகன்றது. பெரும்பாலான வெள்ளையர்களைப் போல ஏய்டனும் அவனுடைய அன்றாடப் புழக்கத்துக்குள் இருந்த வெள்ளை மதராசுக்கு அப்பால் சென்றதில்லை. அவனுக்கு முன்னாலிருந்த காப்டன் ஆரோன் அவனுக்களித்த முக்கியமான உபதேசமே அதுதான்.

“இந்த விசித்திரமான தேசத்தைப் புரிந்துகொள்ள முயலாதே. அது நேரம் பார்ப்பதற்காகக் கடிகாரத்தைச்1 கழற்றி உள்ளே பார்ப்பது போல. ஒருபோதும் இதன் சிக்கலை உன்னால் புரிந்துகொள்ளமுடியாது. உன் முன் என்ன பிரச்சினை வருகிறதோ அது மட்டுமே உனக்கான வேலை என்று வரையறுத்துக்கொள். அந்தப்பிரச்சினையை உன்னுடைய எல்லைக்குள் வைத்து உடனடியாகத் தீர்ப்பதைப்பற்றி மட்டுமே யோசி. ஆமாம், அது உடம்பின்மீது

வரும் கொப்புளங்களுக்கும் வலிக்கும் மருந்து போடுவதைப் போன்றதுதான். ஆனால், இந்த உடலை நம்மால் கொஞ்சம்கூட புரிந்துகொள்ளமுடியாது என்னும்போது வேறு வழியே இல்லை. உடலுக்கு அதற்கான வழிமுறைகள் இருக்கலாம். அது தன்னைப்பார்த்துக்கொள்ளும். ஆடன், நாம் இந்த நாட்டை ஆளவந்திருக்கிறோம். ஆராய்வதற்காக அல்ல." ஆரோன் சொன்னான்.

ஏய்டன் புன்னகைத்ததும் "நான் வந்தபோது காப்டன் அடிஸன் இந்தக் காகிதங்களை எனக்குக் காட்டினார். செங்கல்பட்டு பகுதியில் ஒரு நில உரிமை விஷயமாக அவர் செய்த விசாரணையின் ஆவணங்கள் இவை. எட்டு வெவ்வேறு நபர்கள் அதை ஆராய நியமிக்கப்பட்டார்கள். அதில் மூவர் வெள்ளையர். ஒரு காவலதிகாரி, ஒரு நில அளவையாளர், ஒரு நிர்வாக அதிகாரி. எட்டு அறிக்கைகளுக்கும் நடுவே எந்தத் தொடர்பும் இல்லை. இதுதான் எல்லா விஷயங்களிலும். ஆகவே, கண்ணைமூடிச் சுக்கானைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துகொள். கடலும் காற்றும் உன் பயணத்தைத் தீர்மானிக்கட்டும்." என்று சொல்லிக் கோப்பை எடுத்து முன்னால் போட்டான். அப்போது ஏய்டன் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. ஆனால், சிலநாட்களிலேயே தெரிந்து விட்டது, அதைத்தவிர எதையுமே செய்யமுடியாது என்று.

அத்துடன் ஒவ்வொரு பிரிட்டிஷ் அதிகாரிக்கும் தெரிந்த நுட்பமான உண்மை ஒன்றுண்டு. இந்தியா மீதான பிரிட்டிஷ் முற்றதிகாரம் என்பது உண்மையில் ஒரு பாவனைதான். பிரிட்டிஷ் ராணுவமும், காவல்துறையும், நீதிமன்றங்களும், நிர்வாக அமைப்பும் எல்லாமே இந்தியாவை உண்மையில் ஆளும் ஒரு பெரும் மேல்மட்டச் சமூகத்திடம் பேரம்பேசி உருவாக்கிக்கொண்டவை மட்டுமே. ராணுவமும் போரும் எல்லாம் அந்தவர்க்கத்தைப் பேச்சுவார்த்தைக்கு வரச் செய்வதற்கான மிரட்டலுக்காகத்தான். அந்த வர்க்கம்தான் பலநூற்றாண்டுகளாகப் பல்லாயிரம் கிளைகளாக வேர்களை விரித்து இந்தியாவை உண்மையில் ஆண்டுகொண்டிருக்கிறது. தங்களுக்குக் கீழே இருந்த மண்ணில் இருந்து கடைசிச்சொட்டு

குருதி வரை உறிஞ்சிக் கொழுத்து கிளைவிட்டு நிழல்விட்டு பரவியிருக்கிறார்கள். அவர்களுடையது இந்த நாடு. எந்த நாட்டையும்போல இங்கும் அரசாங்கமென்பது உண்மையான ஆதிக்கத்தின் ஒரு வகை மேடை நடிப்பு மட்டுமே.

"பிரிட்டிஷ் அதிகாரம் பிரபுக்களாலும் வணிகர்களாலும் ஆனது. அதைப்போல இந்திய அதிகாரம் இங்குள்ள உயர் சாதிகளாலானது" ஆரோன் சொன்னான். "இந்த மண்ணில் கால்வைக்கும்போது நமக்குத்தோன்றும் இங்குள்ள ஒட்டு மொத்த அதிகாரத்தின் உச்சியில் பிராமணர்கள் இருக்கிறார்கள் என்று. இந்நாட்டை ஆள ஆரம்பிக்கும்போது தெரியும் அவர்கள் அங்கே அமர அனுமதிக்கப்பட்டிருக் கிறார்கள், அவ்வளவுதான். உண்மையான அதிகாரம் எங்கு மிருப்பது போல எவரிடம் வாளும் நிலமும் பணமும் இருக்கிறதோ அவர்களிடம்தான். இந்த நாடெங்கும் பரவி யிருக்கும் சாதியமைப்பைக் கொள்கையளவில் நியாயப்படுத்தி நிலைநிறுத்தும்பொருட்டு பிராமணர்களுக்கு அந்த இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் அவர்களுக்கு உச்சகட்ட மரியாதையும் காணிக்கையும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அதைச்செய்யாவிட்டால் அவர்கள் அமர்ந்திருக்கும் கோபுரம் அவர்களுடன் சேர்ந்து சரிந்துவிழும்"

"இந்த தேசத்தின் அதிகாரத்தை இங்குள்ள போர்ச் சாதிகளும், நிலவுடைமைச்சாதிகளும், வணிகச் சாதிகளும் பகிர்ந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் சிதறிப் பரந்து கிடக்கிறார்கள். அதிகாரத்துக்காக ஒருவரோடொருவர் போட்டியிடுகிறார்கள். யார் அவர்களுக்குள் ஒரு சமரசத்தை உருவாக்கி, அவர்கள் லாபங்களைப் பகிர்ந்துகொள்ள அனுமதித்து, ஓர் ஒழுங்கை நிலைநாட்டுகிறார்களோ அவர்கள் இந்நாட்டின் உச்சியில் அமர்ந்திருக்க முடியும். நேற்றுவரை நாயக்கர்களும், மராட்டியர்களும், சுல்தான்களும், முகலாயர்களும் அதைச்செய்தார்கள். அவர்கள் தங்களுக்குள் போரிட்டு அழிந்த இடைவெளியில் நாம் வந்து அந்த இடத்தை நிரப்பினோம். இன்றும் இந்தமண்ணில் பெரும்பகுதி இங்குள்ள ஆளும்சாதிகளின் நேரடியான கட்டுப்பாட்டில் தான் உள்ளது.

அவர்களைப் பிரித்தும் அச்சுறுத்தியும் ஆசைகாட்டியும் நாம் அவர்கள் மேலிருந்து நம்முடைய பெரிய பங்கைப் பெற்றுக் கொள்கிறோம்"

ஆரோன் தன் கொள்கைகளைச் சொல்வதற்கு எப்போதுமே இங்கிலீஷ்கிளப்பின் கடலோரப் பங்களாவில் கடலைநோக்கித் திறந்திருக்கும் உப்பரிகையைத் தேர்ந் தெடுப்பது வழக்கம். கையில் ஐஸ் துண்டுகள் உருகிக்கொண்டு மிதக்கும் பிராந்தி. வறுத்த பன்றி ஈரல். "இங்கே நாம் வாழும் வாழ்க்கையை லண்டனில் ஒரு பிரபுகூட கற்பனை செய்ய முடியாது. நான் என் மனைவியை இங்கே கூட்டிவரும்போது அவள் மிகவும் தயங்கினாள். நான் சொன்னேன், இந்தியாவில் உன் கைகளுக்குச் சொடக்கு எடுக்கவேண்டுமென்றால் பத்துவிரல்களுக்கும் பத்து சேடிப்பெண்கள் கிடைப்பார்கள் என்று. அவளால் நம்ப முடியவில்லை. ஆனால், இன்று தன் உடைகளைத் தைக்க மட்டும் நான்கு தையல்காரிகளை வைத்திருக்கிறாள். இனிமேல் அவளால் இங்கிலாந்தில் வாழமுடியுமென்று தோன்றவில்லை" ஆரோன் சிரித்தான். பிராந்தியை மெல்ல சப்பியபின் "அதற்கு நாம் கொடுக்கும் விலை இதுதான். நீதியுணர்ச்சி மீது ஒரு கை மண்ணை அள்ளிப்போடுவது"

ஏய்டன் எப்போதும் உணர்ந்த ஒன்றுண்டு. பிரிட்டிஷ் அதிகாரிகள் அவர்கள் ஆளும் நாட்டைப் புரிந்துகொள்ள முயல்கிறார்கள். படிப்பதும் பேசுவதும் எதுவும் அவர்களுக்குள் நுழைவதில்லை. பின்னர் அவர்களுக்கு நிகழும் சொந்த வாழ்க்கையனுபவங்களைக் கொண்டு ஒரு கொள்கையை உருவாக்கிக்கொள்கிறார்கள். அதைப்பற்றி வாழ்நாள் முழுக்கப் பேசுகிறார்கள். பேசிப்பேசி அதை நிறுவிக்கொள்கிறார்கள். அதற்கான ஆதாரங்களை மட்டும் திரட்டிக்கொள்கிறார்கள். கிழக்காசியாவில் ஒருலட்சம் பிரிட்டிஷ் அதிகாரிகள் இருப்பார்களென்றால் ஒருலட்சம் கொள்கைகளும் உள்ளன என்றுதான் அர்த்தம். அந்தக்கொள்கையுடன் பிரிட்டிஷ் அதிகாரி வைசூரியிலோ, காலராவிலோ, மலேரியாவிலோ, போரிலோ, முதுமையிலோ செத்துக் கல்லறைக்குச் செல்கிறான்.

அந்தக்கொள்கையும் இந்த மண்ணில் மட்கி மறைகிறது. மனிதவாழ்க்கை பற்றியும் பிரபஞ்சம் பற்றியும் கடவுள் பற்றியும் பல்லாயிரம் கொள்கைகளும் பல லட்சம் ஞானிகளும் வாழ்ந்து மறைந்த மண் என்கிறார்கள். எல்லாம் ஒன்றாக மண்ணில் கூடிக்கலக்கிறது போலும்.

ஆனால், ஆரோன் அதற்கு அப்பாலும் கொஞ்சம் செல்லக்கூடியவன். அவன் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் குறிப்புகளை மட்டுமல்லாது தூரக்கிழக்கின் மூலநூல்களையும் படிக்கும் வழக்கம் கொண்டவன். ஒருவேளை அவன் ஒரு நல்ல பாதிரியாராகவோ நல்ல பேராசிரியராகவோ இருந்திருக்கக் கூடும். அவனை ஏய்டனுடன் நெருங்கிவரச்செய்தது அந்த வாசிப்புதான். யார்க்ஷயரின் ஒரு தொழிலாளியின் மகன். பிளேகில் இறந்துபோன ஏழுபிள்ளைகளில் கடைசியானவன். "என் அப்பா சொன்னார், உன் மார்பில் ஒரு குண்டு பாய்ந்து சாவாயென்றால் நிலக்கரி படிந்து சாவதைவிட அது நல்ல சாவுதான் என்று" ஆரோன் கசப்புடன் சொன்னான். போதையின் அடுத்த கட்டம். எல்லா பாவனைகளும் உதிர வெறும் மனிதனாகத் தன்னிரக்கம் கொண்டு நிற்கும் தருணம். மது ஏசுகிறிஸ்துவைப்போல. ஆன்மாக்களை மண்டியிடச் செய்கிறது அது.

"இதோபார், இங்கே நாம் உருவாக்க விரும்புவது நமக்கான ஓர் இடத்தை. அதை நமக்களிக்கும் இரு சக்திகளில் ஒன்று பிராமணர்கள். இன்னொன்று பிற ஆதிக்கசாதிகள். பிராமணர்களை ஆசைகாட்டிக் கூடவைத்துக்கொள். மற்றவர் களுக்குக் கொஞ்சம் அச்சத்தையும் காட்டு. பிராமணர்களை ஒருபோதும் பகைத்துக்கொள்ளாதே. பிறரை அடக்கிவைக்க அவர்கள் நமக்கு வழிகாட்டுவார்கள்." அந்த ஆலோசனையை மீண்டும் மீண்டும் எல்லா அதிகாரிகளும் அவனிடம் சொல்லி யிருக்கிறார்கள். "பிராமணர்களின் வழியாக இந்த நாடு ஆளப்படுகிறது. நேற்று மன்னர்களால் இன்று நம்மால்" கர்னல் ஸ்மித் எப்போதும் சொல்லும் ஆப்த வாக்கியம் அது. "பிராமணர்களைக் கையாளும்போது கவனமாக இரு. எங்கோ ஓர் இடத்தில் அவர்களின் உலோகம் நம் கடப்பாரையில்

தட்டும் ஒலி கேட்கும். அங்கே நிறுத்திக்கொள். அதற்கப்பால் ஒருபோதும் போகாதே"

ஏய்டன் அந்த இடத்தைத் தன் கவனத்தில் வாங்கிக் கொள்ள முயன்றபடியே வந்தான். ஆனால், அந்த இடத்தின் கட்டற்ற தன்மை அவனுடைய நினைவுகளைச் சிதறடித்துக் கொண்டே இருந்தது.

"இந்த இடத்துக்கு அப்பால்தான் பட்லர்களின் குடியிருப்புகள்" என்றான் காத்தவராயன். "அவர்களும் எங்கள் ஆட்கள்தான். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி உருவான ஆரம்ப காலத்திலேயே இங்கே குடியேறிவிட்டவர்கள் அவர்கள்".

ஏய்டன் நிமிர்ந்து பார்த்தான், பெரிய சுவர்களும் உயர்ந்த கூரைகளும் கொண்ட வீடுகள் "பணக்காரர்கள் போலத் தெரிகிறதே" என்றான்.

"பணக்காரர்கள்தான். . . அவர்களில் பலர் பிரிட்டிஷ் கம்பெனியுடன் வியாபாரம் செய்தவர்கள். . . இப்போது மாட்சிமைதங்கிய மகாராணியின் அரசிடமும் வணிகம் செய்கிறார்கள்".

'ஓ' என்றான் ஏய்டன் அர்த்தமில்லாமல்.

"அவர்கள் இங்கே குடியேற்றப்பட்டதே மாட்டிறைச்சி சமைப்பதற்காகத்தான். அவர்களில் பலர் மாட்டிறைச்சி விற்பவர்களாக ஆனார்கள். சிப்பாய் கலகம் வந்தபோது இங்கே பெரிய ராணுவ முகாம்கள் அமைந்தன. உடனே அவர்களெல்லாரும் மாட்டிறைச்சி குத்தகைக்காரர் ஆனார்கள். இப்போது பல்வேறு தொழில்களைச் செய்பவர்கள் இருக்கிறார்கள். துறைமுகத்துக்கான வைக்கோலை சேகரித்துக் கொடுக்கும் குத்தகைதாரர்கள் மட்டும் ஏழு எட்டுபேர் இருக்கிறார்கள். இந்த நகரின் பெரும் செல்வந்தர்களில் அவர்களும் உண்டு".

அது ஏய்டனுக்கு புதிய செய்தியாக இருந்தது "அவர்கள் உங்களுடன் தொடர்பில் இல்லையா?"

"பெரும்பாலும் இல்லை" என்றான் காத்தவராயன் "இந்த தேசத்தின் எழுதப்படாத நியதிகளில் ஒன்று அது. செல்வமும்

பதவியும் வரும் போது ஒவ்வொரு தாழ்ந்தசாதிக்காரனும் தன்னைத் தன் சாதியில் இருந்து முற்றிலும் விடுவித்துக் கொண்டாக வேண்டும். உயர்சாதியினரைப் போல வேடம் போட வேண்டும். அவர்களின் வழக்கங்களையும் மனநிலைகளையும் அவர்களைவிட மேலாக நகல் செய்ய வேண்டும். சொந்த சகோதரர்களையும் தாய் தந்தையரையும் துறந்து விட வேண்டும்".

ஏய்டன் பெருமூச்சுடன் "எங்கள் நாட்டிலும் அப்படித் தான். இங்கே இருந்து இங்கிலாந்துத் திரும்பும் எந்த அதிகாரியும் தன் பழைய கூட்டத்துடன் சேர்ந்து கொள்வதில்லை. ஒவ்வொருவரும் பிரபுக்களாக மாறவே முயல்கிறார்கள்" என்றான்.

"ஆனால், எல்லாரும் அல்ல" என்றான் காத்தவராயன். "எங்களவர்களில் கல்விகற்ற சிலர் வேறு மாதிரி இருக்கிறார்கள். அவர்கள் சகமனிதர்களுக்காகக் குரல் கொடுக்கிறார்கள். எங்களை ஒருங்கிணைக்கவும் எங்கள் வாழும் உரிமைக்காகப் போராடவும் முயல்கிறார்கள். இல்லையேல் நான் உங்கள் முன் வந்திருக்கவே மாட்டேன்".

"ஆம். அது ஒரு நல்ல தொடக்கம்தான்" என்றான் ஏய்டன்.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிறிய வீடுகள் கொண்ட அந்தப் பகுதியின் எல்லையில் அகலமான சாலை சட்டென்று முடிந்தது. அங்கிருந்து நீர் ஓடிய பள்ளமான ஓடை போல ஒரு இடுங்கலான வழித்தடம் ஆரம்பித்தது.

"இதற்கு அப்பாலுள்ள இடம்தான் புதுப்பேட்டை. நாம் போக வேண்டியது அங்கே தான்" என்றான் காத்தவராயன்

"இங்கேயும் பட்லர்கள் இருக்கிறார்களா?"

"இல்லை பெரும்பாலானவர்கள் துப்புரவு வேலையும் தோல் வேலையும் செய்பவர்கள். பட்லர்கள் எங்களவர்களின் உயர்குடிகள்".

ஏய்டன் அந்த இடத்தை அப்போதும் சரியாகப் பார்க்கவில்லை. கப்பிக்கற்கள் பாவப்பட்ட குதிரைவண்டிச்

சாலையில் இருந்து காலால் நடந்து உருவான மண் பாதை பக்கவாட்டில் கிளைபிரிந்து இறங்கிச்சென்றது. சாலையோர மாகக் கோரைப்புல்லால் கூரை வேயப்பட்ட தென்னங்கீற்றால் மறைக்கப்பட்ட சுவர்கள் கொண்ட சிறிய குடிசைகள் வரிசையாக இருந்தன.

"நீங்கள் உள்ளே வரலாம் இல்லையா?" என்றான் காத்தவராயன்.

ஏய்டன் "ஆம். கண்டிப்பாக" என்றான்.

"இது உண்மையில் மழைக்காலத்தில் தண்ணீர் தேங்கும் ஒரு பெரிய சதுப்புப்பள்ளம். பத்து வருடங்களுக்கு முன்னால்கூட இங்கே சேற்றுப்பரப்பில் கோரைப்புல் வளர்ந்து மண்டிக்கிடக்கும். முதலைகள் நிறைய இருந்தன. ஆகவே, இங்கெல்லாம் மனிதநடமாட்டமே இருக்காது. கோரைப்புல் அறுத்துக் கொண்டுசென்று பாய்முடையக்கூடிய முஸ்லீம்கள் ராயபுரத்தில் இருந்து கூட்டமாக வருவார்கள். மரப்பலகைகளை சேற்றின்மீது போட்டு அதன்மேல் நடந்துசென்று கோரைப்புல் அறுப்பார்கள். சட்டென்று இத்தனை பேர் வந்து குடியேறிவிட்டார்கள்."

ஏய்டன் "பஞ்சத்தினாலா?" என்றான்.

"ஆமாம். கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். இங்கே ஏற்கனவே மக்கள் தங்கியிருக்கும் எந்த இடத்திலும் அவர்களை உள்ளே விடுவதில்லை. அத்துடன் இங்கிருந்து வெள்ளை நகருக்கு வேலைக்குச் செல்வதற்கும் வசதி. இதைவிடப்பெரிய கூட்டம் துறைமுகப்பகுதிகளில் குடியிருக்கிறது. அங்கும் உப்புச்சதுப்புகளில்தான் அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கிறது"

அந்த மண்பாதை சில அடிகள் வைப்பதற்குள் இடுங்கிய வழியாக மாறியது. தரை ஈரமானதாக, குதிரைக்குளம்பு அழுந்தும்போது நொதிக்கும் வீச்சம் கொண்ட கரிய சேற்றுநீர் ஊறக் கிடந்தது. கால் புதையாமல் நடக்கும் வசதிக்காக தரை முழுக்க கோரைப்புற்களை போட்டிருந்தார்கள். அவை அழுகி அழுகி அழுந்திப் படிந்து ஆவியெழும் துர்நாற்றத்துடன்

குதிரைக்கால்களால் கிளறப்பட்டன. சட்டென்று ஒரு பிரம்மாண்டமான குப்பைக்குவியலுக்குள் நுழைந்துவிட்ட பிரமை ஏய்டனுக்கு ஏற்பட்டது. குப்பையாலானவை போன்ற குடில்கள் இடைவெளியே இல்லாமல் செறிந்திருக்க அவற்றினூடாகக் கோரைப்புற்கள் வளர்ந்து நின்றன. பலகுடில்கள் சற்றே பெரிய கூடை என்று தோன்றின. அவற்றுக்குள் மனிதர்கள் எப்படி கால்நீட்டி படுத்திருக்கமுடியும் என்று அவனுக்குப் புரியவில்லை.

கோரைப்புற்கள் நடுவே பரட்டைத்தலையில் பேன் கூட்டம் போல கரிய வளர்ப்புப் பன்றிகள் உறுமியபடி முட்டிமோதின. பன்றிகளுடன் சேர்ந்து விளையாடிய கரிய நிர்வாணக் குழந்தைகள் அழுக்கும் புண்ணும் நிறைந்த உடல்களுடன் குதிரையொலி கேட்டு அதிர்ந்து அசைவிழந்து விரைத்து நின்றபின் எலிகளைப்போல 'கிரீச்'சிட்டு ஓடி ஒளிந்துகொண்டு எட்டிப்பார்த்தன. எலிப்பேச்சு போல அவை முட்டிமோதி கிசுகிசுக்கும் ஒலி கேட்டது. பின்னாலிருந்து உந்தப்பட்டதுபோல வழியில் வந்த ஒரு பெண்குழந்தையை நோக்கி ஏய்டன் புன்னகை புரிந்தான். குழந்தை பீதியுடன் வாய்கோணி அழ ஆரம்பித்தது. பல குடில்களுக்குள் இருந்து தலைகள் எட்டிப்பார்த்தபின் உள்ளே இழுக்கப்பட்டன. அந்த குடிசைப்பகுதியே வேட்டையாடப்படும் முயல்போல உடல் அதிரப் பதுங்கிக் குறுகி அமர்ந்திருப்பதுபோல, அதில் எங்காவது தொட்டால் விதிர்விதிர்த்து 'கிரீச்'சிடும் என்பதுபோலத் தோன்றியது.

"நீங்கள் சிரமப்படவில்லை என்று நினைக்கிறேன்" என்றான் காத்தவராயன்.

"விசித்திரம்!" என்று ஏய்டன் சொன்னான். "மிக விசித்திரம். இப்படிப்பட்ட நிலையில் மனிதர்கள் வாழமுடியுமென்பதே ஆச்சரியம். காட்டுவிலங்குகள்கூட இன்னும் சுத்தமான இடங்களில் வாழ்கின்றன"

காத்தவராயன் புன்னகைசெய்து "காட்டுமிருகங்கள் அவற்றுக்கு வசதியான இடங்களைத் தேர்ந்தெடுத்துக்

கொள்கின்றன. நாங்கள் எங்களுக்குக் கிடைக்கக்கூடிய இடங்களில் வாழ்கிறோம்."

ஏய்டன் பெருமூச்சு விட்டான். 'நரகம் என்பது ஓர் இடுங்கிய இடம்' என்ற வரி மனதுக்குள் வந்தது. ஆம், நரகத்தின் தனி இயல்பு என்பது இடுங்கல் என்பதாகவே இருக்கமுடியும். வானமற்ற, பக்கவாட்டில் திசைகள் அற்ற இடுங்கல். எங்கும் செல்லமுடியாத எதையும் செய்யமுடியாத இடுங்கல். அந்த இடுங்கலில் அவனுக்குள் இருந்தே எல்லா அசிங்கங்களும் வெளிவந்து அவனைச் சூழ்கின்றன.

அப்படியென்றால் இருட்டு நரகம் என்றால் இருட்டு என்றே எப்போதும் சொல்லப்பட்டுள்ளது. இருட்டு என்பதுகூட ஓர் இடுங்கல் அல்லவா? வெளிச்சம் என்பது திறப்பு. வெளிச்சம் என்பது சுதந்திரம். வெளிச்சம் என்பது முடிவின்மை. இருட்டு என்பது ஒரு சிறை. இருட்டு கண்களைச் சிறையிடுகிறது. கண்கள் ஆன்மாவின் வாசல்கள். கண்கள் வழியாகத்தான் அலகிலாப் பிரபஞ்சவெளி ஓர் தசைப் பிண்டத்துக்குள் சிறையுண்டிருக்கும் ஆன்மாவை எட்டிப் பார்க்கிறது. இருட்டு கண்களை மூடித்தாழிட்டு விடுகிறது. அந்தக்கதவில் முட்டி முட்டிக் கதறுகிறது ஆன்மா. மண்டை சிதற குருதி பீரிட மோதுகிறது, இருட்டால் சிறையிடப்பட்டுக் காற்றால் சிறையிடப்பட்டு, காலடி மண்ணால் சிறையிடப்பட்டுத் தன் சொற்களால், தன் மூச்சுக்காற்றால் சிறையிடப்பட்டு.

ஒரு கணம் பனிக்கட்டியால் முதுகெலும்பை கீறியது போல ஒரு விதிர்ப்பு. 'என் பிரபுவே, மானுடமென்பதன் சாத்தியங்களை இத்தனைக் கீழாக இன்னும் கீழாகக் கீழினும் கீழாக எப்படி வைக்கமுடிந்தது உன்னால்!'. போர்களில் குண்டுபட்டுச் சிதைந்து துடிக்கும் மனிதர்களை அவன் பார்த்திருக்கிறான். ரத்தக் காயத்துடன் நாள்கணக்கில் பட்டினியால் துடித்துச்சாகும் வீரர்களை அவன் கண்டிருக்கிறான். கைவிடப்பட்டு குரூரமாக வதைக்கப்பட்டு முழுத்தனிமையில் கதறிக் கதறிச் சாவது போரின் அன்றாட நிகழ்வு. ஆனால், அங்கே செத்தவன் மனிதன். தான் மனிதன் என்றறிந்தவன். மனிதன் என்றறியாத வாழ்க்கையை விட அந்த

மரணம் மேலானதா? உண்மையா? அப்படி மரணத்தைவிடக் கீழான ஒரு வாழ்க்கை இருக்கமுடியுமா? இதோ கண்ணெதிரில். மலம்நாறும் இந்தச்சேற்றுக்குழியில் நோயும் பட்டினியும் அச்சமும் துயரமுமாக வாழ்ந்து.

இந்தக் கரிய இளைஞனின் சொற்கள். "*சாவதற்கு நாங்கள் எப்போது வாழ்ந்தோம்?*" 'என் மெய்யான மீட்பரே, வாழ்க்கை என்பதே இல்லாமல் ஒரு இருப்பு இருக்க முடியுமா? மனிதனை வைத்து நீ செய்துகொண்டிருக்கும் சோதனைதான் என்ன? எதை நிரூபிக்க விரும்புகிறாய்? மானுடனின் எல்லையையா? இல்லை உன்னுடைய எல்லையையா? ஒரு கணம் குனிந்து இங்கே பார்த்தால் நீ வெட்கப்பட மாட்டாயா? உன்னுடைய விண்ணுலகப் பீடத்தை விட்டுப் பழுத்துக்கனிந்த பழம்போல இந்த நரகக்குழியில் வந்து விழமாட்டாயா? வா, ஆனால், இன்னொருமுறை முடிவிலா மன்னிப்பின் சிலுவையுடன் வராதே. குருதிவெறி கொண்ட வாளுடன் வா. இந்தப்பூமியை ஒரு சீழ்க்கட்டி போல உடைத்துத்திறக்கும் பிரம்மாண்டமான வெடிமருந்து மலையுடன் வா'.

"இங்கேதான் அவர்கள் இருந்தார்கள்" என்றான் காத்தவராயன்.

ஏய்டன் தன் கண்களில் இருந்து வெம்மையாகக் கண்ணீர் வழிந்துகொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்தான். "ஏன் இவ்வளவு வெக்கையாக இருக்கிறது இங்கே?" என்றான் கண்களைக் கைக்குட்டையால் ஒற்றியபடி.

"இது சதுப்பு என்று சொன்னேன் அல்லவா? கோடையில் இது நீராவிப்பானைபோலத்தான் இருக்கும். ஆனால், இங்கே கோடைக்காலத்தில்தான் கொஞ்சமாவது வாழமுடியும். மழைக்காலத்தில் இடுப்பளவுச் சேற்று நீரில் நடந்துதான் இங்கே வரமுடியும். குடிசைக்குள் இரவெல்லாம் ஈரத்தில் குந்தி அமர்ந்துதான் உறங்க முடியும். ஒரு மழைக்காலம் முடிந்ததும் இங்கே மக்கள்தொகை மூன்றில் ஒரு பங்கு குறைந்துவிடும். அந்த இடங்களுக்குப் புதிய மனிதர்கள் அடுத்த கோடையில் வந்துசேர்வார்கள்." காத்தவராயன் சற்றே

கோணலான சிரிப்புடன். "இதோ இந்தக்குழந்தைகளில் முக்கால்வாசி இன்னும் இரண்டு மாதத்தில் இறந்துவிடும்."

அந்த உணர்ச்சியற்ற சொல்லாட்சியால் திகைத்து ஏய்டன் திரும்பிப் பார்த்தான்.

காத்தவராயன் அதே புன்னகையுடன் "கடவுளுக்குக் கருணை இருந்து அப்படி எஞ்சும் குழந்தைகள் எவை என்று மட்டும் இப்போதே காட்டிவிட்டால் அவற்றுக்கு மட்டும் சோறுபோட்டு வளர்க்கலாம். எஞ்சியவற்றைப் பட்டினி போட்டே சாக விட்டுவிடலாம். தங்குபவை வலுவான குழந்தைகளாக இருக்கும் இல்லையா?"

ஏய்டன் சட்டென்று அந்தக் கண்களைச் சந்தித்தான். அவன் முதுகில் மீண்டும் அந்தப்பனிக்கட்டிக் கீறல். அந்த கண்களின் புன்னகை முகத்தில் இருக்கவில்லை. அவை வேறெங்கோ இருந்தன. அப்புன்னகையின், அச்சொற்களின், அம்மனிதனின் இடத்தில் இருந்து வெகுதொலைவில் எங்கோ. கல்கத்தாவில் அறுந்த மனிதத் தலைகளை குருதிவழிய மாலையாகப் போட்டு நூறு கைகளில் ஆயுதங்களுடன் வெறிகொண்டு நிற்கும் காளியின் கண்களைப் போலிருந்தன அவை.

"இங்கே அவர்களின் குடில் எது?" என்றான் ஏய்டன்.

"அவர்கள் இருந்த குடிலில் வேறு ஆட்கள் வந்து தங்கிவிட்டார்கள். கிராமங்களில் கடுமையான பஞ்சம் பரவியிருப்பதனால் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டே இருக்கிறார்கள். ஆரம்பத்தில் அடிநிலையில் இருந்த எங்கள் சாதிகள் வந்தார்கள். இப்போது மற்ற விவசாயச்சாதிகளும் வர ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு கூரை என்பது இந்நகரத்தில் அத்தனை மதிப்புள்ளது. இன்னும் ஒருமாதத்தில் கூரை என ஒன்றைக் கண்டடையாதவர்கள் சாகவேண்டியதுதான்."

ஏய்டன் பெருமூச்சு விட்டான்.

காத்தவராயன் "இங்கே இருந்தவர்களின் குழந்தைகளை நான் அருகே உள்ள குடிசையில் உள்ள கிழவனிடம் ஒப்படைத்திருக்கிறேன்." என்றான்.

குடிசையின் கதவு கோரைப்புல்லைக் கொண்டு செய்யப்பட்டது. அதை மெல்லத் தள்ளித்திறந்தபோது இருண்ட குழிக்குள் பெருச்சாளிகள் தெரிவதுபோல, பல மனிதமுகங்கள் மின்னும் கண்களுடன் தெரிந்தன. தாழ்ந்த ஆனால் அதிகாரமான குரலில் காத்தவராயன் விசாரித்தான். அவர்களில் ஒருவன் உடலில் கோவணம் மட்டும் அணிந்து கைகூப்பியபடி வெளியே வந்தான். கிழவன். நடமாடும் எலும்புக்கூடு. நரம்புகளால் கட்டப்பட்ட எலும்புகள் புண்படிந்த சாம்பல்நிறத் தோலுக்குள் அசைந்தன. சீழ்க்கட்டிகள் போல பழுத்த கண்கள். காத்தவராயனிடம் வரச்சொல்லிவிட்டு அவன் முன்னால் நடந்தான். அடுத்த குடிசைக்குள் அதேபோல இன்னும் நிறையபேர் இருந்தார்கள். காலிடுக்குகளில் குழந்தைகளின் முகங்கள் தெரிந்தன.

"இத்தனைபேர் இங்கே இருக்கிறார்களா?" என்றான் ஏய்டன் குதிரையில் இருந்து இறங்கியபடி.

"இந்த எல்லாக் குடில்களுக்குள்ளும் நெருக்கியடித்துக் கொண்டு மனிதர்கள் நிறைந்திருக்கிறார்கள். இன்னும் இருட்டவில்லை. இருட்டும்வரை வேலைசெய்துவிட்டு ஆட்கள் வர ஆரம்பித்தால் இங்கே நடமாடவே முடியாது."

ஏய்டன் பெருமூச்சுடன் "ஜீஸஸ்!" என்றான். கிழவன் உள்ளிருந்து இரு குழந்தைகளை அழைத்து வந்தான். அவற்றில் மூத்தகுழந்தை ஏதோ சருகாலான கோவணம் அணிந்திருந்தது. இன்னொரு குழந்தை முழு நிர்வாணம். உடம்பெங்கும் சொறி அடர்ந்து சாம்பல்நிறமாக இருந்தன. கைவிரல்களும் காதுமடல்களும் மூக்கும் பழுத்துப்பெருகி ரணமாக இருந்தன. அவை கிழவனை இறுகப்பிடித்தபடி கண்களை மூடி நடுங்கிக்கொண்டிருந்தன. புண்கள் அழுகும் மனித உடலின் நெடி போர்க்களங்களை அவனுக்கு நினைவூட்டியது.

"இவைதான்." என்றான் காத்தவராயன். "நான் கொஞ்சம் பணம் கொடுத்து இவர்களைப் பார்த்துக் கொள்ளும்படிச் சொல்லியிருக்கிறேன்."

ஏய்டன் "கொஞ்சம் கந்தகம் கொண்டு இவற்றை கழுவக்கூடாதா?" என்றான்.

"கழுவலாம். டன்கணக்கில் கந்தகம் தேவைப்படும். ஒட்டுமொத்தமாக இந்த நகரத்தில் உள்ள அத்தனைபேரையும் கழுவவேண்டும். ஆனால், அதிலும் பயனில்லை. இவர்களுக்கு ஈரமில்லாத வாழ்விடங்கள் கொடுக்கவேண்டும். கொஞ்சமாவது உயிர்ச்சத்துள்ள உணவு கொடுக்கவேண்டும்."

ஏய்டன் திரும்பிப்பார்த்தான். முதல்முறையாக காத்தவராயன் தன்னைக் கிண்டல் செய்கிறான் என்ற எண்ணம் எழுந்தது. அவனுக்குத் தன் மீது எந்த மரியாதையும் இல்லை. தன்னை அவமதிப்பதற்காக மட்டுமே இங்கே கொண்டு வந்திருக்கிறான். ஆனால், அந்தக் கண்களைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. இந்த இடத்துக்கு ஒரு சில முறை வந்தால் என் மனதில் இதைவிடக் கடும் கசப்பு நொதித்து நிறையக்கூடும்.

ஏய்டன் "அவர்களிடம் விசாரித்துச் சொல். அவர்களின் பெற்றோர் எங்கே என்று கேட்டுச்சொல்" என்றான்.

காத்தவராயன் அக்குழந்தைகளிடமும் கிழவனிடமும் விசாரித்தான். கிழவன் கைகூப்பியதை பிரிக்கவே இல்லை. காத்தவராயன் "அவர்கள் வரவே இல்லை. அன்று ஐஸ்ஹவுஸுக்குப் போனபிறகு அவர்களைப்பற்றிய எந்தத் தகவலும் இல்லை" என்றான்.

"அவர்களுடன் வேலைசெய்யும் பிறர் இங்கே இருக்கிறார்களா?" என்றான் ஏய்டன்.

"இருக்கிறார்கள். அவர்களை வரச்சொல்லியிருந்தேன்" என்று சொன்னபின் காத்தவராயன் உரக்க ஏதோ சொன்னான். கிழவன் பயந்து பின்வாங்கி குடிசையின் மரக்கழியில் இறுகப்பற்றி நின்றான். காத்தவராயன் உரக்கக் கைநீட்டி ஆணையிட்டான்.

"என்ன சொல்கிறான்?" என்றான் ஏய்டன்.

“ஐஸ்ஹவுஸ் தொழிலாளர்கள் வரமாட்டார்களாம். பயப்படுகிறார்களாம்”

ஏய்டன் கோபத்துடன் “அவர்கள் இப்போது இங்கே வந்தாக வேண்டும். என் ஆணை” என்றான்.

காத்தவராயன் திரும்பி உரக்கச் சொல்ல கிழவன் உடைந்த குரலில் ஓலமாக ஏதோ சொன்னான். அவன் தலை நடுநடுங்க ஒரு கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்தது. குழந்தைகள் அப்படியே தரையில் அமர்ந்து கோரைப்புல் சுவரோரமாக ஒண்டிக்கொண்டன.

சில நிமிடங்களில் வெவ்வேறு குடிசைகளில் இருந்து பத்துப்பதினைந்து மனிதர்கள் வெளிவந்தார்கள். அந்தக் குடிசைகள் பெரும் வலியுடன் அவர்களைப் பிதுக்கிப் பிரசவித்து வெளியேத் தள்ளுவது போலிருந்தது. அவர்கள் அனைவருமே கும்பிட்ட கைகளுடன் நடந்துவந்தனர். பேயுருவங்கள் போன்ற மனிதர்கள். கல்லறை திறந்து கிளம்பிவருபவர்கள் போல பாதிமட்கிய உடல்கள்.

“அவர்களிடம் நான் கேட்கும் கேள்விகளைக் கேட்டு பதில்களை வாங்கிச்சொல்” என்றான் ஏய்டன்.

“எஸ் சார்!” என்றான் காத்தவராயன்.

ஏய்டன் “இந்த மனிதர்கள் ஐஸ்ஹவுஸில் வேலைசெய்கிறார்களா?” என்றான்.

அவர்கள் “ஆம்” என்றார்கள்.

“அங்கே இவர்களை வழக்கமாக சாட்டையால் அடிக்கிறார்களா?”

காத்தவராயன் சட்டென்று புன்னகைசெய்தான். புன்னகையுடன் கேட்டுப் பதில்பெற்று “அனேகமாக தினமும் அடிக்கிறார்கள் சார்” என்றான்.

“ஓ” என்றான் ஏய்டன். “காணாமலான அந்த இரு தொழிலாளர்களும் எதற்காக அடிக்கப்பட்டார்கள் என்று தெரியுமா?”

அவர்கள் இருவரும் காலை விடிந்ததும் ஐஸ்ஹவுஸுக்கு வந்திருக்கிறார்கள். கங்காணிகள் பார்க்காமல் கூட்டத்தோடு வந்து குதிரை நிறுத்தப்படும் லாயத்தில் புல்போடும் மரப்பெட்டிக்குள் பதுங்கி இருந்திருக்கிறார்கள். காலையில் பார்மர் தன் கூண்டுவண்டியில் இருந்து இறங்கியதும் இருவரும் எழுந்து கைகூப்பி அழுதபடி சென்று அவர் காலில் விழ முயல அவர் அருவருப்புடன் அவர்களைத் தன் பிரம்பால் அடிக்க ஓங்கியபபடி திரும்ப கூண்டுவண்டிக்குள் ஏறிவிட்டார். சவரி அவர் சப்பாத்துக்களைப் பிடித்துக்கொண்டு கதறியிருக்கிறான். பார்மர் சப்பாத்தால் அவனை உதைத்து வெளியே தள்ளிவிட்டு காலை இழுத்துக்கொண்டார்.

அதற்குள் நீலமேகம் ஓடிவந்துவிட்டான். சவரியை அவன் சாட்டையால் அடிக்கப்போக பார்மர் வேண்டாம் என்று கைநீட்டித் தடுத்தார். சவரி அந்த காகிதத்தை நீட்ட பார்மர் அதை வாங்கும்படி நீலமேகத்திடம் சொன்னார். நீலமேகம் காகிதத்தை வாங்கிக்கொண்டு சவரியை விலகி நிற்கச்சொல்லி வண்டியின் கதவைத் திறந்தான். பார்மர் நேராக உள்ளே செல்ல நீலமேகம் பின்னால் ஓடினான். பார்மர் நீலமேகத்தை வசைபாடி கையை ஓங்கி அடிக்கப்போனார். நீலமேகம் குழைந்து குழைந்து மன்னிப்பு கோரியபடியே பின்னால் ஓடினான்.

வெளியே நின்றிருந்த சவரியையும் மனைவியையும் ஓடிவிடும்படி குதிரைக்காரன் சொன்னான். அவர்கள் தயங்கினார்கள். சவரி "இல்லை, பதில் என்ன என்று கேட்டு வரும்படி பாதிரியார் சொன்னார்" என்றான். தண்டுக்காரன் "டேய் முட்டாள். முதுகுத்தோல் உரிந்துவிடும். அழுகிச்சாவாய். ஓடு. ஓடினால் தப்பினாய்" என்று விரட்டினான். சவரி தத்தளித்தான். அவன் மனைவி சட்டென்று முடிவெடுத்து அவனைக் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே ஓடினாள். அவன் கால் விளங்காமல் இருமுறை கீழே விழுந்து எழுந்து கூடச் சென்றான்.

கொஞ்ச நேரத்தில் நீலமேகம் வெளியே வந்தான். கடும் கோபத்துடன் மூச்சு இரைக்க சாட்டையைக் காற்றில் சொடுக்கி

"அவர்கள் எங்கே?" என்று கத்தினான். குதிரைக்காரன் அவன் பார்க்கவில்லை என்று சொன்னபோது அவனை நோக்கிச் சாட்டையால் சொடுக்கினான். அடி அவன் மீதும் கூண்டுவண்டியின் நுகம் மீதுமாக விழுந்தது. சாட்டையுடன் நீலமேகம் வெளியே போய் கடற்கரைச்சாலை வழியாக ஓடினான்.

"அதன்பின்?" என்று ஏய்டன் கேட்டான். அதன்பின் நீலமேகம் மட்டும் சாட்டையைச் சுருட்டிக்கொண்டு மூச்சுவாங்க ஓடிவந்தான். அவன் உள்ளே போனதும் எல்லாக் கங்காணிகளும் அவனைச் சுற்றிக்கொண்டார்கள். அவர்கள் பார்மரின் அறைக்குள் சென்றார்கள். நீலமேகத்தை உடனடியாக உள்ளே பணம் வைக்கும் அறைக்குள் கொண்டு சென்று மூடினார்கள். கொஞ்சநேரத்தில் படையுடன் ஏய்டன் வந்துவிட்டான்.

ஏய்டன் சில கணங்கள் யோசித்துவிட்டு "நான் வருவதற்கு முன் பார்மர் யாரையாவது வெளியே அனுப்பினானா? யாராவது ஐஸ்ஹவுசைவிட்டு வெளியே சென்றார்களா?" என்றான்.

அவர்கள் எவரும் அப்படி எதையும் பார்க்கவில்லை. ஐஸ்ஹவுஸின் பணம் வைக்கும் அறை மிக ரகசியமானது. அதன் சாவியைக் கொண்டுவந்து உள்ளறையைத் திறந்து நீலமேகத்தை வைத்துப்பூட்டுவதுதான் நடந்தது.

நீலமேகத்தைக் கைதுசெய்து கொண்டு சென்றதும் பார்மர் உரக்கக் கூச்சலிட்டுக்கொண்டே ஓடிவந்து தன் வண்டியில் ஏறிக் கிளம்பிச்சென்றார். சாரட் விலகிச்சென்றதும் கங்காணிகள் சாட்டையைச் சுழற்றி, கண்மூடித்தனமாக எல்லாரையும் அடிக்க ஆரம்பித்தார்கள். கெட்டவார்த்தைகளைச் சொல்லி கூச்சலிட்டபடி ஐஸ்ஹவுஸ் முழுக்கச் சுற்றிவந்து அடித்தார்கள். பின்னர் அவர்களில் வயது முதிர்ந்தவரான வரதராஜு அவர்களை அதட்டி அமைதிப்படுத்தினார். அனைவரும் போய் ஒரு சின்ன சந்துக்குள் நின்று பேசிக்கொண்டார்கள். வரதராஜுவும் எத்திராஜுவும் கிளம்பிச்சென்றார்கள்.

அதன்பின் ஐஸ்ஹவுஸில் வேலை ஏதும் நடக்கவில்லை. பனிக்கட்டிகளை அப்படியே மூடி பாதுகாப்பாக வைத்துவிட்டு கூடிப்பேசிக் கொண்டிருந்தார்கள். பின்னர் ஒவ்வொருவராகக் கிளம்பிச் சென்றார்கள்.

குடிலுக்குத் திரும்பி வந்தபின்னர்தான் சவரியும் மனைவியும் திரும்பி வரவில்லை என்ற தகவல் தெரிந்தது. இரவெல்லாம் காத்திருந்தார்கள். காலையிலும் அவர்கள் வரவில்லை என்று கண்டதும் என்னசெய்வதென்று யோசித்தார்கள். பாதிரியாரிடம் சொல்லலாமா என்று முதலில் தோன்றியது. அவர் வெள்ளைக்காரர், அவரிடம் சரியாக மற்ற கறுப்புப்பாதிரிமார்கள் சொல்லாமல் விட்டுவிடுவார்கள் என்று தோன்றியதனால் நேரடியாகச் சென்று வைத்தியரிடமே விஷயத்தைச் சொன்னார்கள்.

"அதன்பின் சவரியைத்தேடி இங்கே எவராவது வந்தார்களா?"

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு "இல்லை" என்றார்கள்.

"சவரியைப்பற்றி ஐஸ்ஹவுஸில் உங்களிடம் யாராவது ஏதாவது கேட்டார்களா?"

அவர்கள் தயங்கினார்கள். "சொல்லுங்கள்" என ஏய்டன் அதட்டினான்.

"வரதராஜு எங்களிடம் சாட்டையைத் தூக்கிக்காட்டி சவரி என்று எவரும் இங்கே வேலை பார்க்கவில்லை. அப்படி ஒரு பெயரோ, ஆளோ எங்களில் எவருக்கும் தெரியாது. இனிமேல் இதுதான் உண்மை. இதைமீறி ஒரு சொல் பேசியவன் உயிர்வாழமாட்டான், தெரிகிறதா? என்று சொன்னார்" என்றான் தொழிலாளர்களில் வயதில் இளையவனாக இருந்தவன் அவன் முதன்முதலாக வாய் திறந்திருந்தான். திடமான கரிய உடலுடன் குள்ளமாக இருந்த அவனை மற்றவர்களுக்கு அச்சம் என்று தெரிந்தது. அவர்கள் அவனைப் பார்ப்பதையே தவிர்த்தார்கள்.

"உன் பெயர் என்ன?" என்றான் ஏய்டன்.

காத்தவராயன் அதை மொழியாக்கம் செய்வதற் குள்ளாகவே அவன் "கருப்பன்." என்றான்.

"உனக்கு ஆங்கிலம் புரியுமா?" என்று ஏய்டன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஒரு சில வார்த்தைகள் புரியும்"என்றான் கருப்பன்.

ஏய்டன் "கருப்பன், நான் கேட்கும் கேள்வியைக் கவனி. சவரியை கொல்வதைப்பற்றி அவர்கள் ஏதாவது சொன்னார்களா?"

கருப்பன் "நான் கேட்கவில்லை சார்" என்றான்.

"சரி, சவரியைப்பற்றி வாய்திறந்தால் கொன்றுவிடுவோம் என்று சொன்னார்களா?"

கருப்பன் "அவர்கள் சொன்னதற்கு அதுதான் அர்த்தம்" என்றான்.

ஏய்டன் அவனைக்கூர்ந்து நோக்கி "கருப்பன், நான் கேட்கும் கேள்விக்குத் தெளிவான பதிலைச் சொல். அவர்கள் சவரியைக் கொன்றிருக்க வாய்ப்பிருக்கிறதா?"

சில கணங்கள் கருப்பன் பேசாமல் நின்றான்.

"சொல், பயப்படாதே" என்றான் ஏய்டன்.

"இதில் உங்களுக்கு என்ன சந்தேகம் சார்? அவர்கள் அன்றைக்கே கொல்லப்பட்டிருப்பார்கள்.".

ஏய்டன் அந்த அப்பட்டமான சொற்களை எதிர்பார்த் திருக்கவில்லை. முகம் சிவக்க "ஆதாரமில்லாமல் பேசக்கூடாது" என்றான்.

"ஆதாரமில்லாமல் கொல்லப்பட்டிருப்பார்கள் சார்" என்றான் கருப்பன்.

"முட்டாள்தனம்!" என்றான் ஏய்டன்.

காத்தவராயன் அவனுக்கே உரிய கறாரான குரலில் "ஒட்டுமொத்தமாகவே எல்லாம் முட்டாள்தனமாகத்தான்

இருக்கிறது. இங்கே மக்கள் செத்துக்குவிந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் செய்தித்தாள்களில் 'மாபெரும் டெக்கான் பஞ்சம்' என்று நீங்கள் அழகான பெயரையும் போட்டுவிட்டீர்கள். ஒன்றரை வருடத்தில் இதுவரைக்கும் இருபத்தைந்து லட்சம்பேர் செத்திருப்பார்கள் என்பது உங்கள் கணக்கு. இன்னும் ஒரு ஐம்பது லட்சம்பேர் சாவதற்கான வாய்ப்பிருக்கிறது. பசியில் சாகப்போகிற கோடிப்பேரில் இரண்டுபேர் கத்தியால் செத்தால் அது என்ன பெரியவிஷயம்?"

ஏய்டன் அந்தப் பேச்சைத் தவிர்க்க விரும்பினான். "அவர்களைப்பற்றி எந்தத் தகவல் கிடைத்தாலும் இவரிடமோ அல்லது ஏதாவது தாணாக்காரரிடமோ தெரிவிக்கவேண்டும். புரிகிறதா?" அதை மொழியாக்கம் செய்தபோது அவர்கள் பிரமைபிடித்தவர்கள் போலத் தலையசைத்தார்கள்.

காத்தவராயன் "நாம் திரும்புவோம் சார். இருட்டி வருகிறது. இப்பகுதியில் எங்கும் விளக்கொளி கிடையாது" என்றான்.

ஏய்டன் ஒன்றும் பேசாமல் குதிரைமேல் ஏறிக்கொண்டான். அதை மெல்ல உதைத்ததும் குதிரை திரும்பி சிறிதளவு கனைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தது. கருப்பனும் காத்தவராயனும் கூடவே வந்தார்கள். எதிரே ஒரு கிழவி கைகளை அசைத்தபடி மூச்சுவாங்க ஓடி வந்து காத்தவராயனிடம் ஏதோ சொன்னாள். இரு முலைகளும் கரிய தோல்பைகள் போலத் தொங்க உடம்பு புகையிலைச்சுருள் போல வற்றிப்போன கரிய கிழவி.

"என்ன சொல்கிறாள்?" என்றான் ஏய்டன்.

"முதன்முதலாக இங்கே அவளுக்கும் அவள் கூட்டத்திற்கும் விருந்தினராக வந்திருக்கிறீர்களாம். ஏதாவது சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும் என்கிறாள்" என்றான் காத்தவராயன்.

ஏய்டன் சிலகணங்கள் அச்சொற்களின் அர்த்தமே புரியாதவன்போல அமர்ந்திருந்தான். கிழவி நுங்கு ஒன்றை

எடுத்துவந்தாள். கையில் ஒரு கத்தியுடன் நின்றாள். அவனை நோக்கி மிகப்பணிவுடன் ஏதோ சொன்னாள்.

"அவள் அதை தூரத்தில் கடலோரமாக ஓடிப்போய் எங்கிருந்தோ கொண்டுவந்திருக்கிறாள். இங்கே நீங்கள் சாப்பிடக்கூடியதாக இது ஒன்றுதான் இருக்கிறது, மன்னிக்க வேண்டும் என்கிறாள். அதை பெரியமனதுகொண்டு ஏற்றுக் கொண்டு கௌரவிக்கவேண்டும் என்று கோருகிறாள்"

ஏய்டன் அவன் உடல் நடுங்கியதில் குதிரையிலிருந்து விழப்போவதாக உணர்ந்தான். தொண்டை இறுக அடைத்துக் கொண்டு ஒலி எழவில்லை. கைகளை நீட்டினான்.

"அதை உங்கள் வாளால் சீவிக்குடித்தால் ஒன்றும் ஆகாது. சுத்தமானதுதான்" என்றான் காத்தவராயன்.

ஏய்டன் கைகளை நீட்டினான். ஏய்டன் அதைச் சீவாமல் அப்படியே கொடுக்கும்படிச் சொல்ல கிழவி இரு கைகளாலும் நுங்கைப் பவ்யமாக நீட்டினாள். ஏய்டன் அதை வாங்கிக் கொண்டான். அவன் கைகள் அதைப் பிடிக்க முடியாதபடி நடுங்கின.

கருப்பன் "அந்த வாளைக் கொடுங்கள் சார்" என்று சொல்லி கைநீட்டினான். ஏய்டன் கொடுத்த வாளால் நுங்கைத் திறமையாகச் சீவி ஏய்டனிடம் நீட்டினான்.

அதை எப்படிக் குடிக்கவேண்டுமென்று ஏய்டனுக்குத் தெரியவில்லை. "அப்படியே உறிஞ்சிக் குடியுங்கள். உள்ளே கைபடவேண்டாம்." என்றான் காத்தவராயன்.

ஏய்டன் வாயை மேலே தூக்கிக் குடித்தான் சில துளிகள் இனிப்பான திரவம் அதிலிருந்தது. அந்தக் காயை என்ன செய்வதென்று தெரியவில்லை. "கொடுங்கள்" என்று வாங்கி தள்ளி கோரைப்புதருக்குள் நின்ற குழந்தைகளில் ஒன்றை நோக்கி நீட்டினான். தயங்கி ஒருவரை ஒருவர் பற்றிக்கொண்டு அலைமோதியபின் அவர்களில் ஒரு பெண்குழந்தை பாய்ந்து வந்து அதை வாங்கிக் கொண்டு ஓடியது. மற்ற குழந்தைகள் எல்லாம் ஆவேசமாக அதைத்தொடர்ந்து ஓடின

கிழவி கைகூப்பி ஏதோ சொன்னாள். காத்தவராயன், "முந்தைய ஏதோ பிறவியின் தொடர்பு மீண்டும் நிகழ்ந்திருக்கிறது. நீங்கள் அவளைக் கௌரவித்துவிட்டீர்கள் என்று சொல்கிறாள்" என்றான். தான் அப்படியே பனிக்கட்டியாக ஆகி நெஞ்சை நிறைப்பதாகத் தோன்றியது ஏய்டனுக்கு. அவன் மூளைக்குள் சொற்கள் ஒன்றுடன் ஒன்று சிக்கிக்கொண்டு ஒரு அர்த்தமில்லாத உலோகக்குவியல் போலிருந்தன. "போகலாம்" என்று சொல்லி குதிரையைக் காலால் தட்டினான். குதிரை முன்னகர்ந்ததும் அப்படியே கடிவாளத்தைப்பிடித்து திருப்பி "நன்றி. மிகமிக நன்றி" என்றான்.

அதை காத்தவராயன் சொன்னதும் கிழவி புன்னகையுடன் கும்பிட்டாள். அவளுக்குப் பின்னால் பல குடிசைகளில் இருந்து பலர் எட்டிப் பார்த்தார்கள். சுருங்கிய கண்களின் பார்வைகள் அவனைச்சூழ்ந்தன. குதிரை இன்னும் சில எட்டு எடுத்து வைத்ததும் ஏய்டன் நின்றான். "அவளிடம் சொல். என்னை ஆசீர்வதிக்கும்படி சொல். அவள் என் தாய் காஸிடிதான் என்று நான் நினைப்பதாகச் சொல்" ஆனால், அந்தச் சொற்களை அவனால் தொண்டைக்கு வெளியே எடுக்க முடியவில்லை. அவனுடைய குதிரை சென்று கொண்டே இருந்தது.

மெல்ல அது கற்சாலைக்கு ஏறியதும் ஏய்டன் பெருமூச்சு விட்டான். ஒரு இருண்ட கனவிலிருந்து விழித்தெழுந்தது போலிருந்தது. சாலை ஒளியுடன் திறந்து பரந்து கிடந்தது. தலையை ஆட்டிக்கொண்டு, கண்களைக் கொட்டி, அந்த இடத்தில் தான் இருப்பதை தன் மூளைக்குள் செலுத்திக் கொண்டான். பறக்கத்துடித்த தொப்பியை அழுத்தியபடி நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். மேற்கே வானத்தில் செந்நிறம் பரவி இருண்டு கொண்டிருந்தது. மேகங்களின் மேற்குப் பக்கங்கள் எல்லாம் தீப்பிழம்பு போலிருந்தன. கிழக்கில் இருந்து பறவைக் கூட்டங்கள் கரைக்கு வந்துகொண்டிருந்தன. அப்பாலிருந்த கடலில் இருந்து குளிர்ந்த காற்று சமவாக்கில் ஓர் அருவி கொட்டுவதுபோலப் பொங்கிவந்து அனைத்தையும் தழுவிமூடிக் கடந்துசெல்ல உடைகள் உப்பிப்படபடத்தன.

அக்காற்றின் மீது பறவைகள் கோணலாக மிதந்து செல்ல, தென்னைமரங்கள் ஓலைகளை மேற்குநோக்கி நீட்டிப் படபடக்க, அடிமரம் ஆட பறந்தெழத் துடிப்பவைபோல நின்றன.

ஏய்டன் "மிஸ்டர் காத்தவராயன்" என்று அழைத்தான். "அந்தப்பெண்மணி, முந்தைய ஏதோ பிறவி என்றாளே. அது அவர்களின் நம்பிக்கையா?" என்றான்.

"இருக்கலாம். இந்தச்சொற்களை வெவ்வேறுபேர் சொல்லி நான் கேட்டிருக்கிறேன். எங்கள் சாதியில் ஆசாரச் சொற்கள் நிறைய உள்ளன. தலைமுறை தலைமுறையாக அவற்றைச் சொல்கிறார்கள்" என்றான் காத்தவராயன். சட்டென்று சிரித்தபடி "உங்கள் முன் வந்து நடுங்கி நின்ற அந்தத் தொழிலாளர் முதலில் சொன்ன சொல்லையும் அப்படி விரிவாக அர்த்தப்படுத்தலாம். முற்பிறவிகளில் செய்த நல்லசெயல்களின் விளைவாக சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது என்று அந்த ஒற்றைச்சொல்லுக்குப் பொருள்"

ஏய்டன் "என்ன வார்த்தை அது?" என்றான்.

"புண்ணியம். புண்ணியமுண்டு என்று அவர் சொன்னார்" என்றான் காத்தவராயன்.

"ஓ" என்று ஏய்டன் முனகிக்கொண்டான்.

Man, who man would be, must rule the empire of himself; in it must be supreme, establishing his throne. இயல்பாக அவன் மனம் அந்த வரிகளைத் தொட்டு எடுத்தது. திகைப்புடன் என்ன இது என்ன இது எனத் திருப்பித் திருப்பிப் பார்த்தது. ஷெல்லி! முட்டாள். குடிகாரன். கனவுஜீவி. மனிதகுலத்தின் மிடிமையை யும் கீழ்மையையும் தாளமுடியாமல் துடித்தவன். எரியும் நெஞ்சுடன் தன் கொந்தளிக்கும் சொற்களைப் போலவே புயல்பட்ட கடலில் இறங்கி மூழ்கிச் செத்தவன். ஏய்டன் அப்போது விரும்பியதெல்லாம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகத் தன் பங்களாவுக்குச் செல்வதையும் மூக்குமுட்டக் குடிப்பதையும்தான். தொப்பியை எடுத்துத் தலையை நீவிக்கொண்டான். "ஜீஸஸ். ஓ ஜீஸஸ்!" என்று

முனகினான். "Man, who man would be!" என மாபெரும் சர்ச் ஆர்கன் போல பிரக்ஞைப் பேரொலியுடன் முழங்கியது. "ஓ ஜீஸஸ்!" என்று அவன் தலையை ஆட்டினான்.

"நாங்கள் இதற்குமேல் வெள்ளைநகருக்குள் நுழைய முடியாது சார்." என்றான் காத்தவராயன்.

"நல்லது. நான் இதை மேலும் விசாரிக்கிறேன். பார்ப்போம்" என்றபின் ஏய்டன் குதிரையைத் தட்டி பெரு நடையாக ஓடவிட்டான். குதிரை ஓட ஓட அந்தத் தாளத்துடன் அச்சொற்கள் இணைந்துகொண்டன. "Man, who man would be!" குதிரையைச் சவுக்காலடித்தும் முள்ளால் குத்தியும் வேகமூட்டினான். அது வாலைச்சுழற்றிக் கனைத்துக்கொண்டு கால்களைக் காற்றில் தூக்கிச் சுழற்றி மண்ணிலறைந்து பீரிட்டோடியது. மரங்களுடன் நிலங்களும் சதுப்புகளும் பின்னால் சென்று மறைந்தன. காற்று அழுத்தம் பெற்றுக் கனமான குளிர்ந்த பட்டுபோல முகத்தை அழுத்தித் தடுத்தது. அதைக்கிழித்துக் கிழித்துச் சென்றுகொண்டே இருந்தான்.

அவனுடைய பங்களாவில் பட்லர் டேவிட் மட்டும்தானிருந்தான். குதிரை அதே வேகத்தில் தடதடத்து வந்து நின்றபோது டேவிட் ஓடிவந்து முகப்புவாசலில் பிரமித்து நின்றான். கடிவாளமிழுக்கப்பட்டு முற்றத்தில் நின்ற குதிரை நீராவிமூச்சுடன் சுற்றிச்சுற்றி வந்தது. அதிலிருந்து இறங்கிச் சாட்டையைக் கீழே வீசி பூட்ஸுகளைக் கழற்றிக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு அவன் உள்ளே நுழைந்தான். நேராக அவனே வைப்பறை நோக்கிச் சென்றான்.

பின்னால் டேவிட் ஓடிவந்தான்." மாலை வணக்கம் சார்" என்றான். ஏய்டன் வைப்பறைக்கதவை இழுத்துத் திறந்தான். உள்ளே பலவகையான பெட்டிகள் நடுவே நீர் நிறைந்த மரத்தொட்டிக்குள் பெரிய செம்பழுப்பு நிற ரம் புட்டி கிடந்தது. அதை எடுத்துக்கொண்டு அனிச்சையாகத் திரும்பியவன் கையருகே பனிக்கட்டிப் பெட்டியைப் பார்த்தான். உப்புமரத்தூளுக்குள் பனித்துண்டுகள் உறைந்திருந்த பெட்டி திடீரென்று வந்த வெறியுடன் அதைக் காலால் மாறி மாறி உதைத்தான்.

மூச்சிரைத்து ஏறிட்டுப் பார்த்தபோது டேவிட் திகைப்புடன் பெரிய வெண்விழிகளை அகலவிரித்துப் பார்த்து நிற்பதைக் கண்டான். "இந்தப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய் வீசு." என்று கூச்சலிட்டான்.

"சார்." என்றான் டேவிட்.

"சொன்னதைச் செய். போ. இதைக் கொண்டுபோய் குப்பையில் வீசு. இனிமேல் இங்கே பனிக்கட்டி நுழையக் கூடாது. புரிகிறதா? டேய் முட்டாள். புரிகிறதா?" என்று கத்தியபடி திறந்திருந்த கதவை ஓங்கி மிதித்தான். அது படாலெனச் சுவரை மோதியது.

"புரிகிறது சார்"

ஏய்டன் புட்டியுடன் சென்று தன் அறைக்குள் அமர்ந்து கொண்டான். கரையிறங்கிய மாலுமிபோல குடித்துக் கொண்டே இருந்தான். இருமுறை உடல் உலுக்கக் கொஞ்சம் வாந்தி எடுத்தான். பின்பு நாற்காலியிலேயே தலையைப் பின்னுக்குச் சரித்துச் சற்றுத் தூங்கினான்.

பேச்சொலி கேட்டு அவன் விழித்துக்கொண்டான். மரிஸா வாசலில் நின்று புன்னகையுடன் கதவைத்தட்டிக் கொண்டிருந்தாள். அவன் அவளை அர்த்தமில்லாமல் சில கணங்கள் பார்த்துக்கொண்டிருந்தான்.

"உள்ளே வரலாமா?" என்றாள் மரிஸா.

நிமிர்ந்து அமர்ந்து "ம்" என்று அவன் சொன்னான்.

அவள் உள்ளே வந்து அவனை நெருங்கி மெல்ல அவன் தோளில் கை வைத்தாள். ஆங்கில இந்தியர்களுக்குரிய இரண்டுமற்ற உச்சரிப்பில் "டேவிட் ஆளனுப்பினார். நீங்கள் இன்றைக்கு விரும்புவீர்கள் என்று சொன்னார்"

ஏய்டன் சட்டென்று எழுந்த கடும் சினத்துடன் "போ. தேவை இல்லை. இனி இந்தப்பக்கம் வராதே." என்று கத்தினான்.

மரிஸா அந்தக்கோபத்தைக் குண்டுகளை வாங்கிக் கொள்ளும் மணல்மூட்டை போல ஏற்றுக்கொண்டு "சரி

போகிறேன். ஆனால், இந்த இரவில் எப்படிப்போவேன். நாளைக்குப் போகிறேன்'' என்றாள்.

"எங்காவது போ.'' என்றான் ஏய்டன்.

"நான் அடுத்த படுக்கையறையில் இருக்கிறேன்'' என்றபடி அவள் நடந்துசென்று வாசலருகே நின்றாள். ஒரு கணம் பார்த்துவிட்டுச் சென்றாள்.

அவனுக்காக வந்துசெல்லும் ஆங்கில இந்தியப் பெண்களில் அவள்மீது மட்டும் அவனுக்கு ஒரு தனிப் பிரியம் உருவாகியது. தொடர்ச்சியாக அவள் வர ஆரம்பித்த பின்னால் அனேகமாக வேறுபெண்கள் வருவதில்லை. மற்ற அத்தனை ஆங்கில இந்தியப்பெண்களும் ஒரேவகையானவர்கள். அவர்களின் பேச்சுக்கள், கொஞ்சல்கள், சிரிப்புகள் மட்டு மல்லாது அந்தரங்கக் கணங்களில் அவர்களின் முனகல்கள்கூட ஒரே ஒன்றேதான். அதற்காகவே உருவாக்கப்பட்ட மாமிசப் பொம்மைகள். இந்த வெப்பமண்டல நாட்டை ஆக்ரமித்த வெள்ளையன் அவனுடைய காமத்தையும் ஆதிக்கமன நிலையையும் இங்குள்ள தசைகளில் செலுத்தி தனக்கெனச் செதுக்கி எடுத்த மனித உடல்கள். பெட்டிக்குள் துப்பாக்கியை வைப்பதற்காகச் செய்யப்படும் வெண்களிமண் அச்சு வடிவங்கள்போல. வெள்ளையனைக் கச்சிதமாக வாங்கி வைத்துக்கொள்பவர்கள். அவனுடைய புடைப்புகளைச் சரியாகப் பொருத்திக்கொள்ளும் பள்ளச்செதுக்குகள்.

மரிஸா அப்படி அல்ல. அதை அவன் கொஞ்சம் தாமதமாகவே அறிந்தான். அப்பெண்களை ஒருபோதும் அவன் கவனிப்பதில்லை. அவர்களின் பெயர்களைக்கூட நினைவில் வைத்திருப்பதில்லை. அவர்களிடம் சாதாரணச் சொற்களுக்கு அப்பால் எதையும் பேசுவதில்லை. அவளும் பிற எந்த ஆங்கில இந்தியப் பெண்களையும் போலத்தான் இருந்தாள். ஒருமுறை அவன் நள்ளிரவில் அரைவிழிப்பில் தோன்றிய ஒரு வரியை எழுதுவதற்காக எழுந்து மெழுகு வர்த்தியை ஏற்றியபோது அவள் விழித்துக் கொண்டாள். "என்ன?'' என்றாள்.

அவன் "நீ தூங்கு" என்றபின் காகிதங்களை எடுத்து எழுத்து மேஜைமேல் வைத்தான்.

அவள் "விஸ்கி இல்லை. நான் டேவிட்டிடம் கேட்டு வாங்கி வருகிறேன்" என்றாள்.

ஏய்டன் "தேவை இல்லை" என்றபின் தொடுபேனாவை எடுத்து அதன் நுனியில் உறைந்திருந்த மையை மெல்லத் தட்டி உதிர்த்தான். அவள் அவனையே பார்க்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் மைக்கட்டியைப் புட்டிக்குள் போட்டபின் நீருக்காகக் கூஜாவைத் தூக்கினான்.

மரிஸா எழுந்து வந்து அந்தக் கூஜாவைத் தூக்கி மிகச்சரியாக நீர்விட்டு மைவில்லையைக் கலக்கினாள். அவன் அவளை வியப்புடன் பார்த்தான். அவன் எழுத ஆரம்பித்து முப்பது வருடங்கள் ஆகியிருக்கும். ஒருபோதும் சரியாக மைவில்லையைக் கலக்கியதில்லை. ஒரு சொட்டுகூட நீர் சிந்தவில்லை. அவள் புட்டியைக் குலுக்கியபின் திரும்ப வைத்தாள். அவள் திரும்பியதும் அவன் அவள் கையைப் பிடித்து "நீ எழுதுவாயா?" என்றான்.

அவள் "ம்" என்றாள்.

"என்ன படித்திருக்கிறாய்?"

அவள் "கொஞ்சம்தான்" என்றாள். அவள் பேசவிரும்பவில்லை என்று அவன் புரிந்துகொண்டான். அதுவே ஆச்சரியமாக இருந்தது. அவளைப்போன்ற பெண்கள் அவர்களின் வாழ்க்கையைப்பற்றிக் கேட்டால் உடனே வறுமையின் கதைகளை ஆரம்பித்துவிடுவார்கள்.

அவன் எழுதியபோது அந்த வரி கலைந்துவிட்டிருந்தது. வெட்டி வெட்டித் திரும்ப எழுதினான். ஏமாற்றத்துடன் அமர்ந்து வெளியே சாளரத்துக்கு அப்பால் இருட்டில் கலைந்து அசைந்த வேப்ப மரத்தைப் பார்த்தான். பின்பு மீண்டும் எழுதினான். காகிதத்தைக் கசக்கிப் போட்டுவிட்டுத் தொடுபேனாவை நன்றாக உதறி வைத்து விட்டு வந்து படுத்துக்கொண்டான். வேப்பமரக் காற்று அறைக்குள் சுழன்றடித்தது. கடலின் ஈரம் அதில் இருந்தது. சிறுதுநேரத்தில்

அவன் கடல் அலைகளைக் கேட்க ஆரம்பித்தான். தூக்கம் கனமான கம்பளிபோல மேலே விழுந்து அழுத்தியபோது பிரக்ஞையின் கடைசிக்கணத்தில் ஒரு வரி புதியதாக எழுந்தது. நீருக்குள்ளிருந்து எழும் வெள்ளி மீன்போல.

எழுந்துசென்று அதை எழுதினான். எழுதியதும் தெரிந்தது, முன்னால் வந்த வரியின் இன்னொரு வடிவம் அது என. இப்போது சரியானபடி ஒளியை நோக்கித் திரும்பியிருந்தது அந்த வரி. அந்த ஒளியில் அவனுடைய அகம் முழுக்கப் பிரகாசிப்பதுபோல உணர்ந்தான். அதையே மனதுக்குள் மீளமீளச் சொல்லிக்கொண்டு விழித்துக்கிடந்தான். அயர்லாந்தின் வசந்தங்களுக்கு அவனைக் கொண்டுசென்றது அந்த வரி. மலைச்சரிவில் விரிந்த பசும்புல்வெளிகளுக்கும் ஒளி பரவி அலையடிக்கும் ஏரிநீர்ப்பரப்புக்கும் மேலே ஒரு சிறிய பறவை போல மிதந்து மிதந்து தூங்கிவிட்டான்.

கண் விழித்தபோது அறைக்குள் வெயில் சரிந்து கிடந்தது. காலைவெயில் வந்து விழும் அறையில்தான் அவன் எப்போதும் தூங்கவிரும்புவான். முதல்முறையாக வெப்பமண்டல நாட்டில் அப்படி ஒரு அறையில் தூங்கி எழுந்தபோது இருந்த அந்தப் பரவசம் ஏதோ வடிவில் அன்று வரை நீடித்தது. சோம்பல் முறித்தபடி எழுந்து நின்று அந்த காகிதத்தைப் பார்த்ததும் ஒன்று தெரிந்தது, அதை அவள் எடுத்து வாசித்திருக்கிறாள். அவன் கூடத்துக்கு வந்தபோது அவள் பகலுக்கான இளநீலநிறமான கவுன் அணிந்து நீண்ட கரிய தலைமுடியைத் தோள்களில் சீவி விரித்துப் போட்டுக்கொண்டு உள்ளிருந்து வந்தாள். "காலை வணக்கம்" என்று புன்னகை செய்தாள். இந்தியர்களுக்கே உரிய பனிக்கட்டி போன்ற பற்களின் சிரிப்பு.

"நீ அதை வாசித்தாயா?" என்ற கேள்வியைக் கேட்டதுமே அவள் கண்கள் மாறியவிதம் 'ஆம்' என்று சொல்லிவிட்டது.

"இல்லை நான் மேஜையை--" என ஆரம்பித்தவள் தயங்கி "சும்மா; பார்த்தேன்" என்றாள். அவள் முகம் வெளிறிப்போய் கண்கள் பீதியுடன் விரிந்திருந்தன.

"எப்படி இருந்தது?"

அவள் அந்த கேள்வியைப் புரிந்துகொள்ளவில்லை. "நான்." என்றாள்.

"உனக்குப் பிடித்திருந்ததா என்று கேட்டேன்" என்றான்.

அவள் தலையைத் தாழ்த்திப் பார்வையை விலக்கி "ம்" என்றாள்.

"என்ன புரிந்தது?"

அவள் "நிலக்காட்சி வர்ணனைதான். ஆனால்-" என்று மீண்டும் தயங்கினாள்.

"சொல்"

அவள் தலைநிமிர்த்து அவன் கண்களைப்பார்த்து "மலைகளைப்பற்றிச் சொல்லும்போது அவற்றைச் சொற்களாக வும் கருத்துக்களாகவும் உருவகிக்கிறீர்கள். சொற்களுக்கும் கருத்துக்களுக்கும் கீழே அண்ணாந்து பார்த்துக்கொண்டு நிற்பவரைப்போல இருக்கிறீர்கள்." என்றாள்.

ஏய்டன் சில கணங்கள் அவளைப்பார்த்தான். பின்பு அவளை நோக்கிச்சென்று இழுத்து அணைத்துக்கொண்டு "நன்றி. இந்த நாட்டில் நான் கவிதை எழுதுகிறேன் என்று புரிந்துகொண்ட முதல் மனித ஆன்மா நீதான்" என்றான். பின் அவளை முத்தமிட்டான்.

அவள் சிரித்தபடி "ஆனால் சரியான முதிரா இளைஞனின் வரிகள்" என்றாள்.

"உண்மை. நான் முதிரா இளமையில் நீடிப்பதற்காகவே எழுதுகிறேன்" என்றான். "நீ கவிதைகள் வாசிப்பாயா?" என்றான்.

"வாசிப்பேன்."

"உனக்கு நூல்கள் எங்கே கிடைக்கின்றன?"

"எங்கள் சர்ச்சில் சிறிய நூலகம் இருக்கிறது. அதிகமும் பேரிலக்கியங்கள் மட்டும்தான். ஃபாதர் நன்றாக வாசிப்பார்"

அவன் "நீ கத்தோலிக்கப் பெண்ணா?" என்றான்.

“ஆமாம். நாங்கள் பெரும்பாலும் எல்லாருமே கத்தோலிக்கர்கள்தான்.” என்றாள்.

“ஏன்?”

அவள் சிரித்து “ஆங்கிலிகன் சர்ச்சுகள் ஆங்கிலேயர்களை மட்டுமே விரும்புகின்றன” என்றாள்.

ஏய்டன் பெருமூச்சுடன் எழுந்தான். மரிஸா இல்லாமல் இந்த இரவைக் கழிப்பது சாத்தியமல்ல என்று உறுதியாகத் தோன்றியது. அவளுடைய அறைக்கதவைத் தாழிட்டிருக்க மாட்டாள். அவனுக்காகக் காத்திருப்பாள். அவன் எழுந்து கதவருகே வந்ததுமே புரிந்துகொண்டான். அவள் கதவுக்கு அப்பால் நின்றிருந்தாள். அவன் அவளை நோக்கியபடி பேசாமல் நின்றான்.

அவள் மிக மெல்ல, அன்னை குழந்தையை அழைப்பது போல, பாலுறவின் உச்சியில் முனுமுனுப்பதுபோல “வா” என்றாள். அவன் அவளைப் பாய்ந்து அணைத்துக்கொண்டு அவள் தோளிலும் கழுத்திலும் இறுக முத்தமிட்டு முகத்தை மென்மையான அவள் சருமத்தில் புதைத்துக்கொண்டான். அப்போதும் அதே வரி அவனுக்குள் ஓடியது “Man, who man would be!” ஆம் ஷெல்லி உயிர்வாழ்ந்திருக்க முடியாது. இந்த உலகில் அவன் காலூன்றி நிற்கும் தகுதிகொண்ட ஒரு பிடி மண் கிடையாது.



# 5

காலையில் ஏய்டன் கண்விழித்து எழுந்ததும் முதலில் எழுந்த எண்ணம் இரவில் அவன் ஏதோ எழுதியது தான். மேஜையருகே சென்றபோதுதான் எழுதவில்லை, எழுதியதாக ஒரு கனவுதான் வந்தது என்று நினைவுவந்தது. கனவில் எழுதியவரிகள் துல்லியமாக நினைவுக்கு வந்தன. ஆனால், அவை மிகச்சாதாரணமாக இருந்தன. மானுடத்தின் குரலாக ஒலிக்கும் ஒரு மகத்தான கவிதையின் தொடக்கத்தை எழுதிவிட்டதாகக் கனவில் அவனைப்பூரிக்கச்செய்த வரிகள் அவை. அப்போது சர்வசாதாரணமான ஒரு நேரடி வெளிப்பாடாக சிறகுதிர்ந்த வண்ணத்துப்பூச்சிபோலக் கிடந்தன. சலிப்புடன் தலையை அசைத்துக்கொண்டு கூடத்துக்கு வந்தான். அங்கே மரிஸா நாற்காலியில் அமர்ந்திருந்தாள். அவனைப் பார்த்ததும் எழுந்தபடி "நான் காபிக்குச் சொல்லவா?" என்றாள்.

"இரு" என்றபடி அவன் அமர்ந்துகொண்டான். இந்தியர்களுக்குரிய உப்புப்பரல் போன்ற பற்களால் சிரித்தபடி "நீங்கள் இன்று தாமதம் என்று டேவிட் சொன்னார்" என்றாள்.

ஏய்டன் "ஆமாம்" என்றான்.

"நான் இன்று ஆபீஸ்போகவில்லை. ராயபுரத்தில்-- இரு, ராயபுரத்தில்தானே நீ இருக்கிறாய்?"

அவள் "ஆமாம்" என்றாள்.

"நீ கத்தோலிக்கப்பெண் அல்லவா? ராயபுரம் செயிண்ட் பீட்டர்ஸ் சர்ச்சில்தான் இருக்கிறாயா?"

அவள் கண்கள் சுருங்கின. "ஆமாம். ஆனால், நான் அங்கே எவரையும் உங்களுக்கு அறிமுகம்செய்து வைக்கமுடியாது"

"ஏன்?"

"என்னைப்போன்ற பெண்களுக்கு அங்கே என்ன இடமிருக்கும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்"

"ஓ" என்றபின் ஏய்டன் "ஃபாதர் ஜான் பிரண்ணன் அங்கேதான் இருக்கிறாரா?" என்றான்.

"ஆமாம்" என்றவளின் முகம் மலர்ந்தது. "அவரை எனக்குத்தெரியும். அவர்தான் எனக்குப் புத்தகங்கள் கொடுப்பவர்"

"நான் அவரைத்தான் பார்க்கவேண்டும்"

அவள் முகத்தில் கவலையுடன் "ஏன் ஏதாவது பிரச்சினையா?" என்றாள்.

"ஏன்? அவருக்கு என்ன பிரச்சினை வரமுடியும்? அவரும் வெள்ளையர்தானே?"

"ஆமாம், ஆனால் அவர் ஆங்கிலேயர் இல்லை. ஆஸ்திரியர்."

ஏய்டன் புன்னகையுடன் "ஓகோ, அந்த அளவுக்கு விஷயமறிந்தவளா நீ?" என்றான்.

"சிலதடவை ஆங்கிலச் சிப்பாய்கள் வந்து அவரிடம் பிரச்சினை செய்திருக்கிறார்கள். அவரை ஒற்றன் என்று சொல்லிக் கூச்சலிட்டார்கள். நான் பார்த்தேன்."

அது மாக் என்று உடனே ஏய்டன் புரிந்துகொண்டான். "நீ இன்று என்னுடன் வா." என்றான்.

மரிஸா வியப்புடன் "நான் சிறிய வண்டியில் வந்தேன். அது சாரட்டுடன் சேர்ந்து வராது" என்றாள்.

“வண்டி இங்கே இருக்கட்டும். சாரட்டில் வா”

மரிஸாவின் உதடுகள் ஏதோ சொல்ல வருபவைபோல மெல்லப் பிரிந்தன. அவற்றின் மென்சருமம் லேசாக உலர்ந்திருந்ததனால் அதன் ஒட்டுதல் பிரிவதைக்கூட அவனால் கேட்க முடிந்தது. தேன் நிறமான அவளுடைய கழுத்தில் சிறிய அசைவு. குருவியின் சிறகுகள் சரிவதுபோல அவளுடைய கனத்த இமைகள் சரிய கண்கள் ஓரமாகச் சென்றன.

“ஏன் என்ன பிரச்சினை உனக்கு?”

“ஒன்றுமில்லை”

“என்னுடன் சாரட்டில் வருவது பற்றியா?”

அவள் தன் தெளிந்த நீலக்கண்களால் அவன் கண்களை ஏறெடுத்துநோக்கி “ஆமாம். அப்படி யாரும் செய்வதில்லை” என்றாள்.

“நான் செய்கிறேன். இதில் என்ன இருக்கிறது?”

அவள் மெல்லிய புன்னகையில் உதடுகள் சுழித்து ஒதுங்க “உங்களுக்கு ஒன்றுமில்லை என்றால் எனக்கென்ன?” என்றாள்.

ஆனால், கிளம்பும்போது மெல்லமெல்ல அவள் சிறுமித்தனமான உற்சாகத்தை அடைவதைக்கவனித்தான். தன்னுடைய மரப்பெட்டியைத் தூக்கிக்கொண்டுவந்த டேவிட்டிடம் சிறிய துள்ளலுடன் “சாரட்டில் சாரட்டிலே வையுங்கள்” என்றாள். அவளே ஓடிப்போய் வாங்கிச் சாரட்டில் வைத்தாள். குதிரை வாலைச்சுழற்றியபோது “ஆவ்” என்று சிரித்து துள்ளிக்குதித்து விலகினாள்.

அவன் தன்னுடைய சவுக்குடன் நிற்க மாடசாமி அவன் கால்களில் பூட்ஸுகளைப் போட்டுவிட்டான். அவனுடைய அரைப்பட்டையை இறுக்கினான். குதிரை பொறுமையிழந்து காலால் தரையை அடித்தது. வண்டிக்காரன் மரத்தாலான படிமேடையை எடுத்து வண்டி அருகே போட்டான். ஏய்டன் வந்து கதவைத்திறந்து நின்று அவளிடம் ஏறிக்கொள்ளும்படி கைகாட்டினான். சீமாட்டிகளுக்குக் காட்டுவது போன்ற பாவனையுடன்.

அவள் "அய்யோ" துள்ளிப் பின்னால் நகர்ந்தாள். "எனக்குத் தெரியாது. நான் இதுவரைக்கும் ஏறியதே இல்லை. எங்கே கால்வைக்க வேண்டும்?"

ஏய்டன் "இங்கே" என்றான். அவன் சுட்டிக்காட்டிய மரப்படியில் அவள் வலக்காலை வைத்து ஏறியபின் சாரட்டின் பித்தளைக் கைப்பிடியைப்பற்றி எம்ப முயன்றாள். சமநிலை இழந்து அவள் பின்னால் சாய அவன் அவள் இடுப்பைப் பிடித்து உந்தி மேலே ஏற்றி விட்டான். அவள் தொப்பியைச் சரியாகப்பிடித்தபடி ரத்தச்சிவப்பான மொராக்கோ தோலுறை போடப்பட்ட இருக்கையில் அமர்ந்தாள். சிட்டுக்குருவி போலப் பதறிக்கொண்டே இருந்தாள். அதே ஒலியுடன் சின்னச்சிரிப்பு. கைகளால் இருக்கையைத் தட்டி அழுத்தினாள். மெருகிடப்பட்ட மகோகனிமரத்தாலான பக்கவாட்டுச் சட்டங்களைக் கைகளால் வருடிப்பார்த்தாள். பித்தளைக் குமிழ்களைத் தொட்டுப் பார்த்தபின் அவற்றில் தெரிந்த அவள் முகத்தைப் பார்த்துக் கூந்தலைச் சரிசெய்தாள்.

ஏய்டன் "ராயபுரம் பீட்டர் சர்ச்சுக்கு போ" என்று வண்டிக்காரனிடம் சொல்லிவிட்டு உள்ளே ஏறி அமர்ந்து கொண்டான்.

அவள் அவனுடைய கைகளைப் பற்றியபடி "ஆடன், ஒன்று சொல்லவா? நான் இதுவரை சாரட் வண்டியில் ஏறியதே இல்லை"

அவன் "தெரிகிறது" என்றான்.

"இது மிகவும் விலையா?"

"இருக்கலாம். இங்கே இருந்த போலீஸ் காப்டன் வைத்திருந்தது."

"ஓ." என்று முகம் ஒருகணம் மாறியபின் "அழகான வண்டி." என்றாள்.

ஏய்டன் "ஆரோனைத் தெரியுமா?" என்றான்.

"ஆமாம்." என்றபின் பேசாமலிருந்தாள்.

"அவரும் வாசிக்கக்கூடியவர்"

அவள் உதட்டை சுழித்து பக்கவாட்டில் பார்த்து "அடிப்பார்" என்றாள். வண்டி திடுக்கிட்டு ஏய்டன் அவள் மேல் மோதிக்கொண்டான். வண்டிச்சக்கரத்தின் தாளம் மாறுபட்டது. வேகமான அதிர்வுகளுடன் வண்டி உலுக்க குதிரைகள் பெருநடையில் செல்ல ஆரம்பித்தன.

ஏய்டன் பேச்சை மாற்ற விரும்பினான். "உன் தொப்பி அழகாக இருக்கிறது" என்றான்.

அவள் மகிழ்ந்து அனிச்சையாகத் தொப்பியைத் தொட்டுப்பார்த்தபின் "உண்மையாகவா? உண்மையாகவா ஆடன்?" என்றாள். உடனே முகம் மாறி "இல்லை. என் கவுனுக்கும் இந்தத் தொப்பிக்கும் சம்பந்தமே இல்லை. நான் நேற்று வீட்டுவேலைசெய்துகொண்டிருந்தபோதுதான் அருமைநாயகம் வந்தார். நான் அப்படியே கைக்குச் சிக்குவதைப்போட்டுக்கொண்டு கிளம்பி வந்தேன்" என்றாள்.

"கையில் அப்படி சாதாரணமாகச் சிக்காது தெரியுமா? அழகுணர்ச்சியுள்ள ஒரு பெண் அவசரமாக அள்ளிப் போட்டுக்கொண்ட உடைகள்தான் அவளுக்குச் சரியான பொருத்தத்துடன் இருக்கும்."

அவள் முகம் மலர்ந்தது. ஆனால், அவன் கையை அடித்து "பொய் சொல்கிறீர்கள்" என்றாள்.

"பொய்யா?" என்றான் ஏய்டன்.

"ஆமாம் பொய்"

"என் கண்ணைப்பார்த்துச் சொல் நான் பொய்தான் சொல்கிறேன் என்று."

அவள் விளையாட்டாக அவன் கண்களுக்குள் விழித்துப்பார்த்தாள். உடனே வாயை பொத்திக்கொண்டு சிரித்தாள்.

"ஏன் இந்தியப் பெண்களெல்லாம் வாயைப் பொத்திக் கொண்டுச் சிரிக்கிறீர்கள்?" என்றான் ஏய்டன்.

"தெரியவில்லை. பழக்கமாக வந்தது. உங்களுக்கு பிரிட்டிஷ் பெண்கள் போலச் சிரித்தால்தான் பிடிக்குமா?"

ஏய்டன் "இல்லை. எனக்கு அவர்கள் அண்ணாந்து சிரிக்கும்போது குரல்வளை அசைவதைப் பார்த்தால் அசிங்கமாகத் தெரியும்"

அவள் கிளுகிளுத்துச் சிரித்து "மீன்விழுங்கி" என்றாள்.

"என்ன?"

"இங்கே உள்ள மீன்விழுங்கிப்பறவைகள் அப்படித்தான் அண்ணாந்து மீனை விழுங்கும்"

அவன் சிரித்தபோது அவள் அவன் தோளில் மெல்லச் சாய்ந்து "ஆடன், ஒன்று கேட்கிறேன். உண்மையைச் சொல்லவேண்டும்" என்றாள்.

"சொல்லு" என்றான் ஏய்டன்.

"கோபித்துக்கொள்ளக்கூடாது" என்று அவள் அவன் மேல் கன்னத்தை உரசினாள். பூனைக்குட்டி உரசிச்செல்வது போல இருந்தது.

"ஏய் சொல்லு" என்றான் அவன் அவள் தொடையைத் தட்டி

"உங்களுக்கு உண்மையிலேயே மாநிறத்தோல் பிடிக்குமா?"

ஏய்டன் "இது என்ன கேள்வி?" என்றான்.

"பெரும்பாலான வெள்ளைக்காரர்களுக்குப் பிடிக்காது. உறவு முடிந்ததுமே வையவும் அடிக்கவும் ஆரம்பிப்பார்கள். ஊரில் இருக்கும் அவர்களின் மனைவிகளுக்கோ காதலி களுக்கோ அல்லது அம்மாவுக்கோ துரோகம் செய்வதுபோல உணர்வார்கள் என்று நினைக்கிறேன். எங்கள் மீது காறித்துப்புவார்கள். சிலர் பூட்ஸ்களைத் தூக்கி எங்கள் மீது வீசுவார்கள். பெரும்பாலும் எங்களை அவர்கள் படுக்கை யறைகளில் தூங்க விடுவதில்லை. துரத்திவிட்டுத் தனிமையில் அமர்ந்து குடித்துக்கொண்டே இருப்பார்கள். நிறைய புலம்புவார்கள்"

"நானும் உன்னை அடித்திருக்கிறேன்" என்றான் ஏய்டன்.

"ஆமாம். ஆனால் நீங்கள் என்னை இழிவு செய்ததில்லை"

ஏய்டன் புன்னகைசெய்தான்.

"என்ன?" என்றாள் அவள்.

"இழிவுபடுத்தாமல் இங்கே அதிகாரியாக வேலை பார்க்கமுடியாது. கீழே இருப்பவர்களை இழிவுபடுத்தும் மேட்டிமை உணர்ச்சியைத்தான் எங்களுக்குத் திட்டமிட்டு முறையாகக் கற்பிக்கிறார்கள்."

மரிஸா. நம்பமுடியாதவளாக பொதுவாகச் சிரித்தாள்.

ஏய்டன் "உண்மையாகத்தான்" என்றான். "இங்கே வரும் அதிகாரிகளில் பெரும்பாலும் எல்லாருமே எங்கள்நாடுகளில் சாதாரண தொழிலாளர்களின் பிள்ளைகள். குதிரை ஓட்டியும் மண்சுமந்தும் கரிவெட்டியும் வாழ்ந்தவர்கள். அந்த பாவனைகளையும் மனநிலைகளையும் கழுவிக்களைந்து அவன் தன்னை ஒரு பிரபுவாக உணரச்செய்வதற்குத்தான் பயிற்சி கொடுக்கிறார்கள். பயிற்சியின் முதல்வரியே 'நாம் வெள்ளையர்' என்றுதான். பின்னர் பல்லாயிரம் முறை அது சொல்லப்படும். அந்த வரி மூச்சுக்காற்றில் கலந்துவிடும். அது உள்ளே ஓடிக்கொண்டே இருக்கும்"

"ஏன்? அதனால் என்ன லாபம்?" என்றாள் அவள்.

"மரிஸா, மனிதனுக்கு மேல் மனிதனுக்கு உண்மையில் என்ன அதிகாரம்? இந்த மக்களில் ஒருவருக்கும் எனக்கும் என்ன வேறுபாடு? ஒன்றுமில்லை. அதிகாரம் நான் உருவாக்கிக் கொள்வது. அதிகாரத்தை உருவாக்கிக்கொள்ள இவர்களை விட நான் மேலானவன் என்று கற்பித்துக்கொள்ளவேண்டும். அதை அவர்களை நம்பவைக்கவேண்டுமென்றால் அதை நானே உள்ளூர நம்பவேண்டும். நான் இவர்களை விட மேன்மை யானவன் என்ற எண்ணமிருந்தால்தான் இவர்களுக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்ற எண்ணம் வரும். அந்த எண்ணத்தில் இருந்துதான் நான் இவர்கள் மீது கருணையோ டிருக்கிறேன் என்ற பெருந்தன்மை உருவாகிறது. அந்த மேட்டிமையுணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியும், கருணையும்

கலந்த ஒருவன்தான் சரியான ஆட்சியாளன். நீ எங்கள் கர்னலைப்பார்க்கவேண்டும். அவர் ஒரு முன்னுதாரணமான பிரிட்டிஷ் ஆட்சியாளர்''

தொப்பியை எடுத்து தலையை நீவி விட்டு ஏய்டன் சொன்னான் "நான் எளிய பிரிட்டிஷ்வீரன் அதிகாரியாக மாறும் ரசாயன மாற்றத்தை இருபதாண்டுகாலமாக கவனித்துக்கொண்டிருக்கிறேன். வரலாறு முழுக்க ஆதிக்கம் எப்படி உருவாகியிருக்கிறது என்பதைப்புரிந்து கொள்வதற்கான மிகச்சிறந்த வழி என்று நினைப்பேன். அங்கிருந்து வரும்போது தாழ்வுணர்ச்சியும் பணிவும் மிரட்சியும் நேர்மையும் கொண்ட எளிமையான கிராமத்து இளைஞனாக இருப்பான். மெல்ல மெல்ல அவன் உடலிலேயே மாற்றம் தெரியும். அவன் தோள்கள் பின்னுக்குச்செல்லும். முகவாயை மேலே தூக்கிக் கொள்வான். ஒன்று தெரியுமா? எங்கள் ராணுவப்பயிற்சியில் முதலில் சொல்லிக்கொடுப்பதே தோளைத்தள்ளி முகவாயை மேலே தூக்கிக் கொள்வதற்குத்தான். அந்த உடல் மாற்றம் மனதிலும் மாற்றத்தை உருவாக்குகிறது. மிகச்சிறந்த உடைகள், மிகச்சிறந்த உணவு, ஏராளமான வேலையாட்கள். நாலைந்து மாதத்தில் சிரிப்பு மாறிவிடும். பணிவான ஓசையற்ற சிரிப்புக்குப் பதிலாகத் தலையை அண்ணாந்து கடகடவென்று சிரிப்பார்கள். அறியாத புதிய மண்ணின் புரிந்துகொள்ளமுடியாத மக்களைப் பார்த்து வந்திருக்கும் அச்சமும் தயக்கமும் எல்லாம் நீங்கி விடும். எல்லாவற்றையும் எளிதாகச் சரிசெய்துவிடலாம் என்று தோன்றும். சொல்லப்போனால் ஒரு பிரிட்டிஷ் வீரன் இந்தியாவை ஆளும் அதிகாரியாகத் தகுதிபடைத்தவன் என்று எப்படித்தெரியும் என்றால் அவன் இந்தியாவைப்பற்றிய தன்னுடைய கோட்பாடுகளைத் தன்னம்பிக்கையுடன் விளக்க ஆரம்பிப்பான். எல்லாவற்றுக்கும் மிக எளிய சூத்திரங்களைச் சொல்வான். ஆச்சரியம் என்னவென்றால் அப்படிப்பட்டவர்கள் தான் நல்ல நிர்வாகிகள். அவர்கள் உண்மையிலேயே எல்லா பிரச்சினைகளையும் தீர்க்கிறார்கள்''

மரிஸா சிரித்து "யாருடைய பிரச்சினைகள்?" என்றாள்

ஏய்டன் உரக்கச்சிரித்து "எங்கள் பிரச்சினைகளைத் தான். இந்த மக்களின் பிரச்சினைகள் என்னவென்று கடவுளுக்கே தெரியாது" என்றான்.

மரிஸா "ஆனால் பெரும்பாலான பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்தியர்களை வெறுக்கிறார்கள்" என்றாள்.

"உண்மைதான். மக்களை மனமார வெறுக்காமல் ஒருவன் அவர்களை ஆட்சிசெய்ய முடியாது"

மரிஸா "புதியகோட்பாடாக இருக்கிறதே" என்றாள்.

"ஆமாம் எனக்கும்தான் கோட்பாடுகள் இருக்கின்றன" என்று சொல்லி ஏய்டன் முகத்தைக் கைகளால் தேய்த்தான். "ஆனால் இது ஓர் உண்மை. இந்த உண்மையைக்கொண்டு நம்மால் உலகம் முழுக்க இருக்கும் எல்லா அதிகாரங்களையும் புரிந்துகொள்ளமுடியும். ஆட்சி என்பது என்ன? அது மேலோட்டமாக எவ்வளவுதான் சமத்துவம், நீதி, கருணை என்றெல்லாம் பேசினாலும் உள்ளே இருப்பது சுரண்டல்தான். அப்பட்டமான நேரடியான சுர்ண்டல். அந்தச்சுரண்டலைக் குற்றவுணர்ச்சியே இல்லாமல் செய்தால்மட்டும்தான் நான் நல்ல ஆட்சியாளனாக முடியும். மக்களுக்கு நான் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிறேன், அவர்களை நான் காக்கிறேன், அவர்களிடம் கருணையோடிருக்கிறேன் என்று நானே உண்மையில் நம்பவேண்டும்."

ஏய்டன் அவளை அகவயமாகத் திரும்பியமையால் மங்கலடைந்த விழிகளால் நோக்கினான். "அப்படி நம்புவதற் கான வழி என்பது மக்கள் கீழ்த்தரமான, அறிவற்ற, நாகரீகமற்ற மிருகங்கள் என்று நினைப்பதுதான். அவர்களை நாம் வெறுக்கும்போது அவர்களுக்கு நாம் செய்யும் எந்த அநீதியும் நமக்குத் தவறாகத் தோன்றுவதில்லை. அவர்களை நாம் சுரண்டுவது அவர்களுக்கு ஒரு நிலையான நிர்வாக அமைப்பை உருவாக்கிக் கொடுப்பதற்காகத்தான் என்று நம்புவோம். அவர்களை நான் கொடுமைப்படுத்துவது அவர்களுக்குக் கட்டுப்பாட்டையும் கடமையையும் கற்பிக்கத்தான் என்று நினைப்போம். நாம் அவர்கள் மீது காட்டும் கருணைக்காக

அவர்கள் நம் மீது விசுவாசமாகவும் நன்றியுடனும் இருக்க வேண்டும் என்று விரும்புவோம். நம்முடைய சுரண்டலால் அவர்கள் கூட்டம்கூட்டமாகச் செத்துக் குவியும்போது அதுவும் அவர்களின் கீழ்மையின் விளைவே என விளக்குவோம்."

"உலகம் முழுக்க இப்படித்தான். சுரண்டப்படும் மக்கள்தான் இழிவுபடுத்தப்பட்டு வெறுக்கவும்படுகிறார்கள். அது நிகழாத தேசமே இல்லை. அது நிகழவில்லை என்றால் ஒருவேளை தேசங்களே உருவாகியிருக்காது. இந்த தேசத்தில் தீண்டப்படாத மக்கள் இத்தனை தூரம் வெறுக்கப்படுகிறார்கள் என்றால் அதற்குக்காரணம் அவர்கள்தான் இங்கே மிகப்பெரும் பான்மையினராக இருந்தார்கள் என்பதுதான். இந்த மண்ணே அவர்களுக்குத்தான் சொந்தம். அவர்களை அடக்கிச் சுரண்டித் தான் இந்த நாடு உருவாகியிருக்கிறது. ஆகவே அவர்களை இவர்கள் மனமார வெறுத்தாகவேண்டும். வேறுவழியே இல்லை."

மரிஸா அவன் கண்களைக் கூர்ந்து பார்த்தாள். மெல்ல அவன் தலைக்குப்பின் கையை வைத்து அவனைத் தன் தோளுடன் அணைத்தாள். அவன் லேசாக முரண்டியபோது இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

அவன் தன் எண்ணங்களில் மூழ்கிப் பேசாமலிருந்தான். வண்டியின் 'சசக் சடக் சசக்' என்ற ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. ஏதோ நாய் குரைத்தபடி வண்டியைத் தொடர்ந்து வந்து பின்பு நின்றது. அவன் பெருமூச்சுடன் எழுந்தான். அவளுடைய முகத்தைப் பக்கவாட்டில் பார்த்தான். இமைகள் சரிந்து ஏதோ நினைவில் மூழ்கி அவள் இருந்தாள். அவள் முகத்தின் கனத்த அமைதி அவனுக்குத் தேவமைந்தனை மடியில் போட்ட வியாகூல அன்னையின் முகம்போலத் தோன்றியது. தேக்குமரத்தில் இழைத்ததுபோன்று இளமை பளபளக்கும் கன்னங்கள். இளமையின் மென்மை படிந்த கழுத்து. அவன் சட்டென்று அவளை இழுத்து கன்னங்களிலும் கழுத்திலும் முத்தமிட்டான். சில முத்தங்களை அவள் உடல் பெற்றபின்னர் தான் உள்ளம் அறிந்தது. அவள் பெருமூச்சுடன் திரும்பிவந்தாள். அவனை இறுக அணைத்து ஆழமாக அவன் உதடுகளில் முத்தமிட்டாள்.

"ராயபுரம் வந்துவிட்டதா?" என்றான்.

"ஆமாம், கிட்டத்தட்ட" என்றாள். சட்டென்று சிரித்து "முதல்முறையாக சாரட்டில் ஏறிய சந்தோஷத்தை முழுக்க பேசியே அழித்துவிட்டீர்கள்" என்றாள்.

"அப்படியா?" என்று அர்த்தமில்லாமல் கேட்டு அவன் சிரித்தான்.

"நான் என்ன நினைத்தேன் தெரியுமா? எங்களைப் போன்ற பெண்கள் சீமாட்டிகளைப்போலத் தொப்பி வைத்துக் கொள்கிறோம். கவுன்போட்டு ஆங்கிலம் பேசுகிறோம். ஆனால், இதெல்லாம் வெளியேகாட்டும் நடிப்பு. எங்கள் வீட்டில் நாங்கள் உலர்ந்த தென்னைமட்டை வைத்து அடுப்பெரித்து மண்சட்டிகளில் மீன்குழம்பும் சோறும் சமைக்கும் பெண்கள் தான். அது எல்லா வெள்ளைக்காரர்களுக்கும் தெரியும். ஆகவேதான் எங்களுக்கு அடிவிழுகிறது."

ஏய்டன் "நான் ஒருநாள் உன் வீட்டுக்கு வருகிறேன். எனக்கு மீன்குழம்புடன் சோறு கொடு" என்றான்.

"நாங்கள் காரமாகச் சாப்பிடுவோம்" என்றாள்.

"மது அருந்துவீர்களா?" என்றான் ஏய்டன்.

"இல்லை. வெளியே போகும்போது குடிப்பதுதான். வீட்டிலே குடிப்பது எங்களுக்குப் பாவம். ஆனால் கிறிஸ்துமஸுக்கு ஒயின் குடிப்போம்."

"இந்த சாரட் வண்டி எது தெரியுமா?" என்றான் ஏய்டன், பேச்சை மாற்ற. அவனுக்கு அவள் தன்னிரக்கம் நோக்கிச் சென்றுவிடுவாளா என்ற சந்தேகம் வந்தது.

"காப்டன் ஆரோன் வைத்திருந்தது என்றீர்கள்" என்றாள்.

"ஆரோனுக்கு இது எப்படி வந்தது தெரியுமா?"

அவள் பேசாமல் பார்த்தாள்.

"இது ஜோசஃப் கோல்லெட் வைத்திருந்த சாரட்" என்றான் ஏய்டன்.

அவள் புரியாமல் பார்த்தாள்.

ஏய்டன் "ஜோஸப் கோல்லெட் 1717 முதல் மூன்று வருடம் இங்கே சென்னை ராஜதானியின் தலைவராக இருந்தார். ஆடம்பரங்களில் மோகம் உடையவர். அவர் லண்டனில் இருந்து வரவழைத்த வண்டி இது. இது ஒரு பெரிய சரித்திரச்சின்னம்." என்றான்.

மரிஸா ஆச்சரியத்துடன் விழிகளை விரித்துப் பார்த்தாள்.

"இதைச்செய்தவர் வில்லியம் ஃபெல்ட்டன் என்ற கோச்சுவண்டி நிபுணர். அவர் முதலில்செய்த எட்டு வண்டிகளில் இரண்டு அரண்மனைக்கு அளிக்கப்பட்டது. இது மட்டும்தான் கப்பலேறியது. ஃபெல்ட்டன் பிற்பாடு வயதான காலத்தில் 'Treatise on Carriages' என்று ஒரு பெரிய புத்தகம்கூட எழுதியிருக்கிறார். இந்த வண்டியின் சிறப்பம்சம் என்னவென்றால் இதன் ஓட்டுநர் இருக்கையும் நுகமும் வண்டியுடன் ஒரு கீல்வைத்த குடத்தால்தான் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே வண்டிக்காரன் வண்டியை எளிதாகத் திருப்பலாம். வண்டி மென்மையாகத் திரும்பும். மொத்த வண்டியும் இரும்பு வில்லடுக்குகள் மீது அமைந்திருப்பதனால் குலுக்கம் மிகவும் குறைவு. அப்போது இது முழுக்கமுழுக்க வெள்ளியால் இழைக்கப்பட்டிருந்தது."

மரிஸா பிரமித்துப்போய்விட்டாள் என்று தெரிந்தது. அவள் கன்னங்களும் கழுத்தும் புல்லரித்திருந்தன.

"1718 நவம்பர் ஏழாம் தேதி இந்த கோச் சென்னப்பட்டினம் துறைமுகத்தில் வந்து இறங்கியபோது மதராஸ் ராஜதானியில் உள்ள அனேகமாக அத்தனை சீமாட்டிகளும் அதைப்பார்க்க வந்து குழுமியிருந்தார்களாம். அவர்களின் விசிறிகள் வீசிக்கொண்டே இருந்த காட்சி யானைக்கூட்டங்கள் காதுகளை ஆட்டுவதுபோலிருந்தது என்று அக்காலத்தில் ஒருவர் 'ஆக்ஸ்போர்ட் கெசெட்' செய்தித்தாளில் எழுதியிருக்கிறார். ஒரு வைஸ்ராய்க்குரிய வரவேற்பு இந்த வண்டிக்குக் கொடுக்கப் பட்டது. அந்த வருடம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்துக்குக் கோட்டையில் செயிண்ட் மேரிஸ் சர்ச்சுக்கு இந்த கோச்சில்

தான் கவர்னரும் சீமாட்டியும் வந்தார்கள். அப்போது இரு பக்கமும் ஆயிரம்பேர் வரை கூடி நின்று வேடிக்கை பார்த்தார்களாம்"

மரிஸா இருகைகளாலும் கன்னங்களை அழுத்திக் கொண்டாள்.

"கோல்லெட் இதை அடுத்துவந்த ஹேஸ்டிங்ஸுக்கு கொடுத்துவிட்டு போனார். அடுத்தடுத்து வந்த மாற்றங் களுக்குப் பின்னர் இதைத் தூக்கிப்போட்டுவிட்டார்கள். குடம் உடைந்து கொட்டகையில் கிடந்தது. ஆரோன், ஃபெல்ட்டன் எழுதிய புத்தகத்தை வாசித்தபிறகுதான் இதைக் கண்டு பிடித்தார். உள்ளூர் தச்சர்களைக் கொண்டு செப்பனிட்டு எடுத்துத் தனக்காக வைத்துக்கொண்டார். இதன் குடத்திற்கு இந்த ஊர் தச்சர்கள் புதுவிதமான சில அமைப்புகளைச் சேர்த் தார்கள். அதன்பின்பு இருபது வருடங்களாகப் பிரச்சினையே இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது." அவளை மெல்ல அணைத்துக் கொண்டு வேடிக்கையாக "ஆகவே சீமாட்டி மரிஸா அவர்களே நீங்கள் இப்போது சீமாட்டி மேரி ரோஸ் கோல்லெட் அவர்கள் அமர்ந்துசென்ற அதே வண்டியில் சென்று கொண்டிருக்கிறீர்கள்."

மரிஸா சட்டென்று விசும்பியபடி முகத்தைப்பொத்திக் கொண்டாள்.

"ஏய் என்ன இது. முட்டாள்தனம். சும்மா இரு" என்று ஏய்டன் அவள் கைகளைப்பிடித்து விலக்கினான். விரலிடுக்கு களில் கண்ணீர் வழிந்தது. "முட்டாள். என்ன இது. நிறுத்து" என்று அவன் அதட்டியதும் அவள் பட்டுக் கைக்குட்டையால் கண்களைத் துடைத்தாள். மூக்கு சிவந்திருந்தது. மீறி மீறி வந்த கண்ணீரை ஒற்றிக்கொண்டு குனிந்து அமர்ந்திருந்தபின் மெல்ல எழுந்து அவனைப்பார்த்து சீரான வெண்பல்வரிசை மின்ன சிரித்தாள். "என்ன இது. உன்னைப் புத்திசாலி என்று நினைத்தேன்." என்றான்.

"நான் அப்படிச் சொன்னேனா?" என்றாள் சிரித்துக்கொண்டே

“அதனால்தான் அப்படி நினைத்தேன்.” என்றான். அவள் சிரித்தாள்.

“ஏன் அழுதாய்?” என்றான் அவன் கொஞ்சநேரம் கழித்து.

“இல்லை. நீங்கள் அதைக் கிண்டலாகவே சொன்னீர்கள். ஆனால். ஆனால் எனக்கு அப்படி இல்லை. நான் இந்த தோல்மெத்தையில் அமர்வது என்றால்” என்றாள்.

“பெரிய அதிருஷ்டம் இல்லையா?”

அவள் அவனை நேருக்குநேராகப் பார்த்து “ஆமாம். மிகபெரிய அதிருஷ்டம்தான். கௌரவம்தான்” என்றாள்.

“வெள்ளைத்தோல் எஜமானர்களின் இருக்கை.” என்றான். அவள் சீண்டப்படுவாள் என்று தெரிந்தே.

“ஆமாம். அப்படித்தான். வெள்ளைத்தோல் எஜமானர்கள் எனக்குக் கண்கண்ட தெய்வங்கள்தான். அவர்களின் கால்பட்ட மண் எனக்குப் புனிதமானதுதான். இதில் கோல்லெட் சாஹிப் அமர்ந்திருக்கிறார் என்பதை நீங்கள் சொன்னபோது எனக்குப் புல்லரித்துவிட்டது. என் அம்மாவிடம் சொன்னால் அப்படியே ஓடிப்போய் சிலுவைமுன் மண்டியிட்டுக் கதறிவிடுவாள்”

“கோல்லெட் இங்கே மூன்றுவருடம்தான் இருந்தார். அந்த மூன்று வருடத்தில் அவர் சம்பாதித்த பணம் இந்தியாவின் பல மகாராஜாக்கள் பத்துப்பதினைந்து தலைமுறைகளாகச் சம்பாதித்ததைவிட அதிகம். மொத்தப் பணத்துடன் இங்கிலாந்துக்குப்போய் அரசியலில் ஈடுபட்டார். பாராளுமன்றத்துக்குத் தேர்தலில் போட்டியிட்டார். அவரது பரம்பரைகள் இன்றுகூட பெரும் செல்வந்தர்கள். எல்லாம் இந்த மண்ணின் பணம். லஞ்சமும் ஊழலும்செய்து சேர்த்தது” என்றான் ஏய்டன்.

“சேர்க்கட்டுமே. இந்த, கறுப்புத்தோல் நாய்களை விட அவர் எவ்வளவோ மேலானவராகத்தான் இருந்திருப்பார்”

ஏய்டன் "ஓ" என்றான். அர்த்தமற்ற ஓசை என்று உடனே நினைத்துக்கொண்டான்.

"நான் சொல்வதைப் புரிந்துகொள்ளவேண்டுமென்றால் நீங்களும் ஐம்பது தலைமுறைகளாகச் சேற்றுக்குழியில் அடிமைகளாக வாழவேண்டும். சந்தைகளில் ஏலம் போட்டு விற்கப்படவேண்டும். எங்கோ புரியாதநாடுகளில் அனாதையாகப் பிறக்கவேண்டும்." ஏதோ சொல்லவந்தவள் அடக்கிக் கொண்டு எச்சில் விழுங்கினாள். தொண்டைக்குழி ஏறி இறங்கியது. அதன்பின் "என் அம்மா இலங்கையில் பிறந்தாள். அங்கிருந்து ஒரு மாலுமி அம்மாவை விலைக்கு வாங்கிக் கொண்டுபோய் கொஞ்சநாள் அனுபவித்துவிட்டு சுமத்ராவில் விற்றான். அங்கிருந்து பல கைமாறி மலாயாவில்இருந்தபோது ஒரு செட்டி அவன் கொடுத்த கடனுக்கு ஈடாக அம்மாவையும் ஜப்திசெய்துகொண்டு ரங்கூனுக்குக் கொண்டு போனான். அங்கே அம்மாவை ஒரு விபச்சார விடுதியிலே விற்றான். அங்கேதான் அம்மா என்னைப் பெற்றாள்".

அவள் கண்களில் தெரிவது என்ன உணர்ச்சி என்று அவனுக்குப்புரியவில்லை. "அம்மா கொஞ்சம் ஆங்கிலம் கற்றுக்கொண்டாள். என் கண்கள் நீலமாக இருந்தன. அந்த ஒரே காரணத்தால்தான் நான் கல்விகற்க முடிந்தது. சவுக்கடி படாமல் வாழமுடிகிறது. எங்கும் சோறுக்காக கையேந்தாமல் என் அம்மா இன்றைக்கு ஒரு நல்ல வீட்டில் மூன்றுவேளை உணவு உண்டு வாழ்கிறாள். கமுகுப்பாளையால் உடல் மறைத்து வாழ்வதற்குப் பதிலாக தூய வெள்ளைநிற ஆடை அணிந்துகொண்டு தினமும் சர்ச்சுக்குப்போய் ஜெபிக்கிறாள். அவளைக் கண்டால் எவரும் ஒதுங்கிப் போகச்சொல்லி கத்துவதில்லை. கல்லால் அடிக்க வருவதில்லை. எச்சிலைக் காறி மேலே துப்புவதில்லை. பிராமணர்கள் அவளைக் கண்டால் தலைகுனிந்து மௌனமாகச் செல்கிறார்கள். பிறர் அவளைத் துரைச்சானி என்று கூப்பிடுகிறார்கள். என் தம்பிகள் இருவர் இன்று கப்பல்களில் கௌரவமான ஊழியர்களாக வேலை பழகிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில வருடங்களில் அவர்கள் சிறந்த மாலுமிகளாக ஆவார்கள். அவர்களுக்குப்பிறக்கும்

பிள்ளைகள் சுதந்திரமானவர்களாக வளர்வார்கள். நல்ல சாப்பாடும் வீடும் கல்வியும் அவர்களுக்குக் கிடைக்கும். அவர்கள் நல்ல அறிஞர்களாகவும் கவிஞர்களாகவும் வரலாம். வியாபாரம்செய்து பணம் ஈட்டிப் பங்களாக்களில் வாழலாம். இந்த பூமியில் உள்ள மற்ற மனிதர்களைப்போல எங்களுக்கும் எதிர்காலம் என்று ஒன்று இருக்கிறது"

ஏய்டன் அவளைக் கூர்ந்து பார்ப்பதைக் கண்டு அவள் பேச்சை அப்படியே நிறுத்திக்கொண்டாள். அதன்பின் அவள் அவனை நோக்கித் திரும்பவேயில்லை. அவளுடைய உணர்ச்சிகளைப்புரிந்துகொண்டவன் போல அவனும் மேலே எதுவும் பேசவில்லை. வண்டி அதிர்ந்து அதிர்ந்து சென்று கொண்டிருந்தது. அவள் பெருமூச்சுடன் சற்றே அசைந்து அமர்ந்து "சர்ச் வந்துவிட்டது." என்றாள்.

"நீயும் வா." என்றான் ஏய்டன்.

"இல்லை நான்." என்று அவள் ஏதோ சொல்ல "நீயும் வருகிறாய்" என்று சொன்னபடி அவன் தன் தொப்பியை எடுத்துக்கொண்டான்.

அவள் "சர்ச்சில் இந்நேரம் நிறையபேர் இருப்பார்கள்" என்றாள்.

"ஆமாம். நீ மேரிரோஸ் சீமாட்டியாக வருவதை அவர்கள் பார்க்கட்டுமே" என்றான். அவள் வெறுமே புன்னகை செய்தாள்.

வண்டிக்காரன் வந்து கதவைத்திறந்து "ராயபுரம் செண்ட் பீட்டர்ஸ் சர்ச் சார்" என்றான். சம்பிரதாயமாக தலைவணங்கினான். சர்ச்சின் மூங்கில் கதவைத் திறந்து விட்டபின் கரிய மெலிந்த உடல்கொண்ட காவலன் கச்சமாக உடுத்திய அழுக்கு வேட்டியும் தலையில் சுற்றிக்கட்டிய தலைப்பாகையுமாக ஓடிவந்தான். வியர்வை வழியும் கரிய உடலை வளைத்து வண்டிக்குக் கீழே மண்டியிட்டு அமர்ந்தான். ஏய்டன் அவன் முதுகில் மிதித்து கீழே இறங்கினான். திரும்பி மரிஸாயிடம் "இறங்கிக்கொள்" என்றான். அவள் தன் வெண்பட்டுக் கையுறைகளை இழுத்துவிட்டுக்கொண்டு

விரல்களை விரித்துக்குவித்தபடி இறங்கப்போனவள் கீழே இருந்த முதுகைக்கண்டு அதிர்ந்து பின்வாங்கினாள். மார்பில் கையை வைத்துக்கொண்டாள்.

"ஏன், இறங்கு" என்றான் ஏய்டன்.

அவள் வாயை மட்டும் மெல்லத் திறந்து மூடினாள்.

"இதுவா, இது ராணுவ வழக்கம். இறங்கு" என்றான் ஏய்டன்.

அவள் வெடவெடவென்று நடுங்கியபடி மெல்லப் பின்னால் சரிந்து கோச்சின் விளிம்பைப்பற்றியபடி தள்ளாடினாள். விழுந்துவிடுவாள் போலிருந்தது.

ஏய்டன் அந்த வேலைக்காரனிடம் "போ" என்று தமிழில் சொன்னபின் அவள் இடுப்பில் கைவைத்து தூக்கிச்சுழற்றி தரையில் விட்டான். "நீ இன்னும் சீமாட்டி ஆகவில்லை. வா" என்றபடி முன்னால் நடந்தான்.

அவள் அவன் தோளைப்பற்றிக் கொண்டாள். மறுகணம் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு விசும்பி அழுதாள்.

எரிச்சலுடன் ஏய்டன் நின்றான். "நீ என்ன நினைத் திருக்கிறாய்? உன்னை நான் ஆறுதல்படுத்தியபடியே இருக்க வேண்டுமா? நிறுத்து. ஆட்களெல்லாம் பார்க்கிறார்கள்"

மரிஸா கைக்குட்டையால் முகத்தை அழுத்தி அழுத்தித் துடைத்தாள். அடக்கப்பட்ட விசும்பல்கள் அவளுடைய கழுத்துக் குழாய்களில் புடைத்தன. மிகச்சீக்கிரத்திலேயே அவள் தன்னை அடக்கிக்கொண்டாள்.

"பேசாமல் வா." என்றான் ஏய்டன் பல்லைக்கடித்தபடி.

அவள் சட்டென்று நின்று "நான் போகிறேன்" என்றாள்

"ஏன்?"

"நான் போகிறேன்." என்று அவள் பிடிவாதமான குரலில் சொன்னாள்.

"இதற்காகவா? இது அவனுடைய வேலை. ராணுவத்தில் மேஜை நாற்காலி எல்லாமே மனித உடல்கள்தான். அங்கிருந்து

வந்த பழக்கம். இதை எந்த ராணுவவீரனும் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டான்''

அவள் இன்னும் உறுதியான குரலில் ''நான் என் வீட்டுக்குப்போகிறேன். பக்கம்தான். நடந்தே போய்விடுவேன்'' என்றாள்.

''இதோபார்.'' அவன் ஆரம்பிக்கவும் அவள் ''என்னை இழுத்துக்கொண்டு செல்வதாக இருந்தால் செய்யுங்கள்'' என்றாள்.

''சரி சரி'' என்றான் ஏய்டன் ''ஏய்'' என்று வேலையாளை அழைத்தான். அவன் ''சர்'' என்றதும் ''சீமாட்டியை அவள் வீட்டில் கொண்டுசென்று விடு. வண்டி இருக்கிறதா?'' என்றான்.

''சாதாரண குதிரைவண்டிதான் இருக்கிறது''

''சரி அதுபோதும்.'' என்றபின் அவள் கையை அழுத்தி ''போ. நாம் மறுபடியும் சந்திப்போம்'' என்றான் ஏய்டன்.

''கண்டிப்பாகச் சந்திப்போம்'' என்று மிகமெல்லிய குரலில் சொன்னபின் தலைகுனிந்து விலகிச்சென்றாள்.

சர்ச்சில் இருந்து சாதாரண வெண்அங்கி அணிந்த பயிற்சிப் பாதிரியார் ஒருவர் வேகமாக வந்தார். ''நல்வரவு. காப்டன் உங்கள் வரவு மகிழ்ச்சியளிப்பது'' என்று சம்பிரதாயமாக முகமன் சொன்னான்.

''ஃபாதர் இருக்கிறாரா?'' என்றான் ஏய்டன்.

''இருக்கிறார். சில முக்கியமானவர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் உங்களுக்காக எல்லாவற்றையும் தவிர்த்துவிட்டு வரத்தயங்கமாட்டார். நான் உங்கள் வருகையை அறிவிக்கிறேன்''

இளம்பாதிரியார் அவனை உள்ளே அழைத்துச் சென்றார். ஏய்டன் ராயபுரம் சர்ச்சுக்கு அதுவரை வந்ததில்லை. கத்தோலிக்கர்களின் தேவாலயத்துக்குள் அவன் போனது ஒரேஒருமுறை சுமத்ராவில் போரின்போது மட்டும்தான். அங்கிருக்கும் சிலைகளின் விழித்த கண்கள் அப்போது ஓர்

அசௌகரியத்தை உருவாக்கின. ராயபுரம் தேவாலயத்தைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறான். நூறாண்டுகளுக்கு முன்னால் அடையாறுவழியாகக் கடலுக்குள் வரும் சரக்குப் படகுகளை ஓட்டிவந்த கோமுட்டிகளுக்குள் சண்டை ஏற்பட்டது. அவர்களில் பலவீனமான பிரிவினர் கத்தோலிக்கர் களாக மதம்மாறினார்கள். அப்படி மதம் மாறியவர்களுக்கு போர்ச்சுக்கல் கப்பல்காரர்களின் ஆயுத உதவியைக் கத்தோலிக்கத் திருச்சபை பெற்றுக்கொடுத்தது. பெருவணிகர் களான கோமுட்டிகளின் கட்டுப்பாட்டில் அஞ்சிக்கிடந்த மீனவர்களில் ஒருசாராரும் மதம் மாறியதும் அவர்கள் வலுவான ஒரு தரப்பாக ஆனார்கள். அவர்கள் உருவாக்கிக் கொண்ட முதல் தேவாலயம் அது.

செங்கற்களால் கட்டப்பட்ட தாழ்ந்த கட்டிடம். கத்தோலிக்க மாதாகோயில்களைப்போல கோபுரமேதும் இல்லை. பதிலுக்கு முகப்பில் இரு செங்கல்லால் கட்டப்பட்ட சதுரத்தூண்கள் மீது மரத்தாலான கூம்புவடிவக்கூரை எழுந்து நின்றது. கூம்பின்மீது மரச்சிலுவை. அதற்கு அணிவிக்கப்பட்ட துணி காற்றில் பறந்து சுற்றிக்கிடந்தது. நாட்டுமரத்தாலான நயமற்ற பெரிய கதவுகள் கொண்ட வாசல் திறந்துகிடந்தது. தென்னைஓலைக்கூரை சரிந்து வந்து மூங்கில் நுனிகளைக் காட்டி முடிந்தது. இருபக்கமும் இருந்த அகன்ற தோப்பில் சரியாகப் பேணப்படாத தென்னைமரங்கள் வளமற்ற ஓலைகளுடன் காற்றிலாடி நின்றன. தேவாலயத்தின் முகப்பில் சிறிய மீன்பிடிக்கப்பலில் இருந்து கொண்டுவரப்பட்ட கொடிமரம் நிறுத்தப்பட்டு கம்பிகளால் இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. அதன் மீது கொடி என ஏதும் இல்லை. திருவிழாவிற்குத்தான் கொடிஏற்றுவார்கள்போல.

தேவாலயத்தைச்சுற்றிக்கிடந்த பல பொருட்கள் கப்பல்கள் படகுகள் சார்ந்தவை என்பதை ஏய்டன் கவனித்தான். அங்கே வந்திறங்கியதுமே இருந்த அன்னியத்தன்மைக்கான காரணம் அதுதான் என்று தோன்றியது. இரு துருப்பிடித்த நங்கூரங்கள், உடைந்த துடுப்புகள், துருப்பிடித்த ஆவியந்திரங் களின் உதிரி பகுதிகள். ஒரு பழைய கோச்வண்டி குதிரைகள்

இல்லாமல் கிடந்தது. தோப்புக்குள் தென்னை ஓலை வேயப்பட்ட நாலைந்து சிறிய குடில்களும் ஒரு பெரிய கொட்டகையும் தெரிந்தன. அங்கே சில பசுக்கள் கட்டப்பட்டிருந்தன. தோப்புக்குள்ளும் உடைந்த கப்பல்பொருட்கள் மண்ணில் மூழ்கிக் கிடந்தன. ஒரு நங்கூரத்தில் குதிரை கட்டப்பட்டு புல்லைத் தின்றுகொண்டிருந்தது.

நிறையபேர் அங்கே இருப்பதைப்போலக் கலைசலான ஓசை எழுந்தது. இளம்பாதிரியார் அவனைப் பக்கவாட்டில் அழைத்துச்சென்றார். அங்கே மண்ணாலான சுவர் கொண்ட ஒரு சிறிய அறை இணைப்பு இருந்தது. சுவர்கள் சாம்பல் பச்சை நிறமாகத் தலைகீழ்த் திரைச்சீலை போன்ற வளைவுகள் வரையப்பட்டு விசித்திரமாக இருந்தன.

"உள்ளே அமருங்கள்" என்றார் இளம்பாதிரி. ஏய்டன் சப்பாத்துக்களைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தான். சிறிய இடத்தில் வசதியான நான்கு தாழ்வான நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நேர்த்தியாக மரத்தில் செய்யப்பட்டவை. நடுவே ஒரு மர மேடை. அதில் புதிய மலர்கள் இருந்தன. ஏய்டன் அமர்ந்துகொண்டு அந்த அறையைப்பார்த்தான். மேலே ஓலைக்கூரைக்கு அடியில் தார் பூசப்பட்ட கோரைப்பாயாலான தட்டி பதிக்கப்பட்டிருந்தது. பின்பக்கத்தில் இருந்த ஜன்னலில் இருந்து காற்று திரைச்சீலைகளைத் தூக்கி பறக்கச்செய்தபடி மென்மையான பட்டுத்தழுவலாக வந்து சென்றது.

"மன்னிக்கவேண்டும்" என்ற குரலுடன் ஃபாதர் பிரண்ணன் உள்ளே வந்தார். அவரை ஏன் ஆங்கிலேயர்களுக்குப் பிடிக்கவில்லை என்பது பார்த்ததுமே தெரிந்தது. முற்றிலும் ஜெர்மானியமுகம். நெற்றிக்கு கீழே வளைவே இல்லாத பெரிய மூக்கு. கத்திக்கீறல் போன்ற உதடுகள். பச்சைநிறமான சிறிய கண்கள். அடர்த்தியில்லாத வெண்ணிறமான தலைமுடியை இடப்பக்கமாகச் சீவியிருந்தார். இடக்கண்ணில் ஒற்றைக்கண்ணாடி வைத்து உருவான தழும்பு இரு அரைவட்டங்களாக இருந்தது. எழுபது வயதிருக்கும். சிவந்த சிறிய பருக்களும் மச்சங்களும் நிறைந்த கன்னங்கள் தொய்ந்து இறங்கியிருந்தன. கழுத்தின் தசைகள் காளை

மாட்டின் கழுத்து போல இரு வரம்புகளாக இழுபட்டுத் தொங்கின. வெள்ளைப் பருத்திச்சட்டையைக் கழுத்துவரை பித்தானிட்டு அணிந்திருந்தார்.

"உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. உங்கள் நண்பர் மாக் எனக்குத் தெரிந்தவர்" என்றார் பாதர் பிரண்ணன்.

"அப்படி என்றால் அவனுக்காக நான் மன்னிப்புக் கோருகிறேன்" என்றான் ஏய்டன்.

பாதர் பிரண்ணன் சட்டென்று வாய்விட்டுச் சிரித்தார். "எனக்கு அது பிடித்திருக்கிறது. நல்ல நயமான நகைச்சுவையை இங்கே நான் அதிகமாகக் கேட்கமுடிவதில்லை. நன்றி" என்றபடி அமர்ந்தார். "நீங்கள் வந்தது எனக்கு கௌரவம். ஒயின் சாப்பிடுகிறீர்களா?"

"இல்லை. நான் காலையில் ஒயின் சாப்பிடுவதில்லை"

"இங்கே வேறு மது எதுவும் இல்லை" என்றார் பாதர் பிரண்ணன்.

"பரவாயில்லை. நன்றி" என்று ஏய்டன் சொன்னான்.

"சற்று நேரம் கழித்து நான் உங்களுக்கு உயர்தரமான சீனத்து டீ தருகிறேன். என் சமையற்காரர் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்"

"நன்றி" என்றான் ஏய்டன். "சிறிய இடமானாலும் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கிறது. ஓர் ஆஸ்திரியர் வாழும் இடம் என்று தெரிகிறது"

பாதர் பிரண்ணன் சிரித்து "நிறங்களைப்பற்றிச் சொல்கிறீர்களா? சிவப்பும் கறுப்பும். ஆம், பொன்னிறம்கூட இருக்கிறது." என்று கொக்கியில் தொங்கிய அவரது ஸ்டோலைப் பார்த்தார்.

"இங்கே இது தேவைப்படுகிறது. நீங்கள் கோவாவில் போர்ச்சுக்கல் தேவாலயங்களின் பொன்னிற அலங்காரத்தைப் பார்த்தால் பத்துப் பதினைந்து நாட்களுக்குக் கனவில் புதையல்களாக வந்துகொண்டிருக்கும். கிறிஸ்துவே வந்தாலும்

பொன்னிறமாக இருந்தால்தான் ஏற்றுக்கொள்வார்கள்."

ஃபாதர் பிரண்ணன் கால்களை வசதியாக நீட்டிக்கொண்டு "பாவம் ஏழை மக்கள். அவர்களுக்குக் கடவுள் என்பது செல்வம்தான். இங்குள்ள இந்துக்கோயில்கள் எல்லாமே செல்வக்குவியல்களாக இருந்திருக்கின்றன. ஆயிரம் ஆண்டுக்காலமாகக் கொள்ளையடிக்கப்பட்டபிறகும் அவை பூதம் காக்கும் புதையல்களாகவே இருக்கின்றன. இங்கே எங்களுக்கு வரும் காணிக்கை என்றால் உடைந்த படகின் உறுப்புகள்தான். அவற்றை ஏலம்விட்டுப் பணம் சேர்ப்போம்."

"ஆர்மீனியன் தேவாலயத்துக்கு ஒருமுறை சென்றிருக்கிறேன். அங்குள்ள பாதிரியார்கள் பொன்வண்டுகள் போல இருப்பார்கள்" என்றான் ஏய்டன்.

பாதர் பிரண்ணன் வாய்விட்டுச் சிரித்தார். "ஆமாம். ஆனால், வேடங்களுக்கு அதற்கான பங்களிப்பு இருக்கிறது. ஒரு வேடத்தை அணிந்ததுமே நாம் அதுவாக ஆக ஆரம்பிக்கிறோம். இங்கே இந்துக்களின் நம்பிக்கையின்படி கடவுள் பிரபஞ்சம் என்ற வேடத்தை அணிந்திருக்கிறார். அதை அணிந்ததுமே அவர் பிரபஞ்சமாக ஆகிவிடுகிறார்."

ஏய்டன் ஆச்சரியத்துடன் "என்ன கொள்கை அது? எந்த மதம்?" என்றான்.

"இந்துமதம்தான். இதை வைணவர்கள் விசிஷ்டாத்வைதம் என்கிறார்கள்"

"இவர்கள் கற்களையும் மிருகங்களையும் வணங்கக் கூடியவர்கள் அல்லவா?"

பாதர் பிரண்ணன் சிரித்துக்கொண்டு "அப்படி நாம் சொல்கிறோம். நாம் மரணபயத்தையும் பாவத்தையும் வணங்குவதாக அவர்கள் சொல்கிறார்கள். மதநம்பிக்கை மனிதனுக்கு மிக நல்லது. அது மற்றமதங்களைப் பார்க்காமற் செய்து நம் விசுவாசத்தைக் காப்பாற்றிக் கொள்ளும்" மீண்டும் சிரித்தார். உடனே சிரிப்பை நிறுத்தி, "நான் கொஞ்சம் அதிகமாகவே சிரிப்பேன். இங்கே சிரிக்காமலிருந்தால் நான் வாழமுடியாது" என்றார்.

"பிரிட்டிஷ் சட்டங்கள் எல்லாவற்றிலும் அவர்கள் இந்தியர்களைப்பார்த்து சிரித்த ஒரு ரகசியச் சிரிப்பு இருக்கிறது என்று கர்னல் சொல்வதுண்டு" என்றான் ஏய்டன்.

"ஆமாம். ஆனால், உண்மையில் இந்தியர்கள் என்றால் கொஞ்சம் நிறம்பூசப்பட்ட பிரிட்டிஷார்தான். மனிதர்கள் எங்கும் ஒன்றுதான்" பெருமூச்சுடன் "அங்கே ஒரே கூட்டம். சபைவிசுவாசிகள் வந்து அமர்ந்திருக்கிறார்கள். காலையிலேயே பெரிய கொள்கைவிவாதம். களைத்துப் போய்விட்டேன்" என்றார்.

"சாதிச்சண்டையா?" என்றான் ஏய்டன்.

"சேச்சே. இது அதுபோல அன்றாட விஷயம் இல்லை. இது இறையியல் சார்ந்தது." என்றார் பாதர் பிரண்ணன்.

"அப்படியா?" என்று ஏய்டன் அவரது தீவிரமான முகத்தைக் கண்டும் முழுக்க நம்பாமல் கேட்டான்.

"அதாவது வறுமையும் நோயும் சாவும் எல்லாம் இறைவனின் கட்டளையா இல்லையா என்பதுதான் விஷயம். ஆமாம், அதெல்லாம் பாவத்தின் சம்பளம் என்று உபதேசிகள் சொல்லியிருக்கிறார்கள். நம்மவர் அதை ஆழமாக நம்பவும் செய்கிறார்கள்".

"ஓகோ" என்றான் ஏய்டன், பாதர் பிரண்ணன் எங்கோ செல்கிறார் என்று தெரிந்தது.

"ஆகவே பஞ்சத்தில் செத்துக்கொண்டிருப்பவர்களுக்கு எந்த உதவி செய்தாலும் அது கடவுளின் இச்சைக்கு எதிரானது என்று கண்ணீர் மல்க வாதிடுகிறார்கள். ஒரு குற்றவாளியைப் போலீஸ்காரர் தண்டிக்கும்போது நாம் போலீஸ் காரருக்குத்தானே உதவவேண்டும், குற்றவாளிக்கு உதவினால் அது சட்டவிரோதம் அல்லவா என்று ஒரு செட்டி ஆவேச மாகக் கேட்கிறார். என்னால் பதில் சொல்ல முடியவில்லை"

"பஞ்ச விஷயமாகவா?" என்றான் ஏய்டன்.

"ஆமாம். நான் பஞ்சத்தில் கஷ்டப்பட்டு வரக்கூடிய மக்களுக்காக எதாவது செய்யலாமே என்று இங்குள்ள

செட்டிகளிடம் கேட்டேன். ஒரு கஞ்சித்தொட்டி திறக்கலாம் என்று சொன்னேன். என்னை அடிக்கவே வந்துவிட்டார்கள். இந்த ஆலயவளைப்பில் ஒரு பரதேசிகூட வரக்கூடாதாம். நான் என் பாதிரியார் வேலையை விட்டுவிட்டு அவர்களுக்கு உதவிசெய்யப் போகக்கூடாதாம். போனால் சர்ச்சைவிட்டே போய்விடுவோம் என்கிறார்கள்."

ஏய்டன் "செட்டிகள் சொல்வார்கள். மீனவர்களும் அதையா சொல்கிறார்கள்?" என்றான்.

"இந்தப்பஞ்சத்தில் பாதிக்கப்படாதவர்கள் அவர்கள் தான். பஞ்சகாலம் அவர்களுக்கு அறுவடைக்காலமும் கூட. படகுகளில் ஆட்களைக் கொண்டு சென்று கப்பலில் ஏற்றுவதில் நல்ல பணம் வருகிறது. மூழ்கும் கப்பலைக் கயிறு கட்டி பிடித்தால் பிடிக்கும் கப்பலும் மூழ்கிப்போகும் என்று அவர்கள் சொல்கிறார்கள்"

"ஆச்சரியமே இல்லை" என்றான் ஏய்டன். "உலகம் முழுக்க நான் பஞ்சங்களைப் பார்த்துவிட்டேன். எந்தப் பஞ்சத்திலும் சாகும் மனிதனுக்கு வாழும் மனிதன் உதவி செய்வதில்லை. பஞ்சத்தில் ஒருவன் சாவதைக் கண்டதும் மற்ற அத்தனைபேரும் பதற்றமாகிவிடுகிறார்கள். அந்த நிலை தங்களுக்கு வந்துவிடக்கூடாது என்று நினைக்க ஆரம்பிக்கிறார்கள். அதுவரை கொஞ்சமேனும் இருந்த கொடைப் பண்பும் மறைந்துவிடும். மனிதர்களின் இயல்பான சுயநலம் கிளம்பிவரும். கொஞ்சநஞ்சம் கிடைத்துக் கொண்டிருக்கும் உணவு முழுக்க களஞ்சியங்களில் பதுங்கும். அவற்றில் பெரும்பகுதி எலிகள் தின்றும் மட்கியும் வீணாகும். எங்கும் எப்போதும் மனிதர்கள் இப்படித்தான்"

"ஆமாம், உண்மைதான். கோடிக்கணக்கில் இந்தியாவில் இந்துக்கள் சாகிறார்கள். ஆனால், இந்துக்கோயில்களில் உணவுப்பொருட்களைக் கடவுள்மீது கொட்டுகிறார்கள். பிராமணர்களும் பிரபுக்களும் பந்திபந்தியாக அமர்ந்து விருந்து உண்கிறார்கள். கோயில்பக்கமே வரக்கூடாதென்று ஏழைமக்களை விரட்டி அடிக்கிறார்கள். எச்சில்களைக்கூடத்

தின்ன விடுவதில்லை. நம்மவர்களும் அதேமனநிலையில்தான் இருக்கிறார்கள். அடுத்தவருடம் இந்த தேவாலயம் உருவாக்கப் பட்டு நூறாண்டு ஆகிறது. அதை பிரம்மாண்டமாகக் கொண்டாட வேண்டும் என்றும் புதிய தேவாலயம் கட்டவேண்டும் என்றும் சொல்கிறார்கள். அதற்குப் பணம் தரத் தயாராக இருக்கிறார்கள். அந்தப்பணத்தை நான் பஞ்சப்பராரி களுக்குச் செலவழித்துவிடுவேனோ என்று பயந்து என்னிடம் தரமாட்டேன் என்கிறார்கள்."

பிரண்ணன் தலையை அசைத்தார் "சரியான முரட்டு மனிதர்கள். மொழியும் சரியாகத் தெரியாது. ஆகவே ஒன்றையே சொல்லிக் கொண்டிருப்பார்கள். பேச்சுமுடிவடையவில்லை. நான் என்னுடைய சேவைகளைச் செய்ய அவர்களிடம் அனுமதி கேட்டேன். குழப்பியடித்துக் கொண்டிருந்தார்கள். சட்டென்று நீங்கள் வந்த தகவலை வந்து சொன்னான் ஆரோக்கியம். உடனே ஒரு யோசனை வந்தது. பஞ்சநிவாரணத்துக்கு நான் சேவை செய்யவேண்டும் என்று கட்டாயப்படுத்த பிரிட்டிஷ் காப்டனே நேரில் வந்திருக்கிறார் என்று சொல்லி தப்பி வந்துவிட்டேன். இதையே சொல்லி மீண்டுவிடுவேன்" பாதர் பிரண்ணன் சொன்னார். "முக்கியமான பிரச்சினை சாதிதான். சென்ற பிறவிகளில் செய்த பெரும் பாவங்களால்தான் மனிதர்கள் இழிந்த விலங்குகளாகவும் தீண்டப்படாத மனிதர்களாகவும் பிறக்கிறார்கள் என்று இந்தக் கும்பல் நம்புகிறது. ஆகவே அவர்களுக்கு எந்த உதவிசெய்தாலும் உதவிசெய்வதைப்பற்றி நினைத்தாலும் அது பெரும் பாவம் என்கிறது."

ஏய்டன் ஆச்சரியத்துடன் "அவர்கள் கிறித்தவர்கள் என்று நாம் சொல்கிறோம்" என்றான்.

"ஏன், ஆங்கிலிகன் சபைகளில் மட்டும் தீண்டப்படாத வர்கள் இருக்கிறார்களா என்ன?" என்றார் பிரண்ணன்.

ஏய்டன் "எங்கள் தேவாலயத்தில் இல்லை." என்று இழுக்க "அதேதான். இங்கும் அவர்களுக்குத் தனி வழிபாட் டிடங்கள் உள்ளன. இந்த நகரத்தில் இன்னும் அவை உருவாக ஆரம்பிக்கவில்லை" என்றார்.".

"அப்படியென்றால் நாம் இந்த இந்தியச்சாதிகளை எதற்காகத்தான் மதம் மாற்றுகிறோம்?" என்றான் ஏய்டன் சலிப்புடன்.

"நம்பிக்கைக்காக. நாம் நம்பும் ஒன்றை அவர்களுக்குக் கொடுக்கிறோம். கிறிஸ்துவின் மன்னிப்பையும் கருணையையும்" என்றார் பிரண்ணன்.

"கிறிஸ்துவிடமிருந்து அவர்கள் அதைப்பெற்றுக் கொள்கிறார்களா என்ன?" என்றான் ஏய்டன்.

பிரண்ணன் சட்டென்று கண்களில் வேறு ஒரு பாவனையுடன் "காப்டன், உலகத்தில் உண்மையிலேயே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர் இருப்பார்கள் என்கிறீர்கள்?" என்றார்.

ஏய்டன் பார்வையை விலக்கிக்கொண்டான். "உங்களுக்கே தெரியும், பிரிட்டனில் மட்டும் துணி துவைப்பவனும் கரியள்ளுபவனும் மற்றவர்களுடன் ஒன்றாகவா இருக்கிறார்கள்? ஒரு பிரபுவை நிலக்கரிச் சுரங்கத்தின் சர்ச்சில் அமரச்செய்ய கிறிஸ்துவே வந்து சொன்னாலும் நடக்குமா? இங்கு வரும் கிறித்துவப் போதகர்களையே எடுங்கள். எத்தனைபேருக்கு கிறிஸ்துவின் கருணை தெரிந்திருக்கிறது? நேற்று ஒரு பாதிரியார் என்னிடம் சொன்னார், இந்தப்பஞ்சம் கடவுளின் அருள் என்று. இங்குள்ள மக்களை கிறிஸ்துவை நோக்கி இழுக்க ஒரு வழி திறந்திருக்கிறதாம். பஞ்சம் மூலம் இங்குள்ள மூடியவாயில்கள் எல்லாம் திறந்திருக்கின்றனவாம். நான் சொன்னேன், இப்படித்தான் கடவுள் அவருக்கு ஆள் சேர்க்கிறார் என்றால் அவர் கடவுள் அல்ல, சாத்தான் என்று. அவர் கோபித்துக் கொண்டு கிளம்பிச்சென்றார்"

ஃபாதர் பிரண்ணன் பெருமூச்சுவிட்டார் "மனிதர்கள் எங்கும் அப்படித்தான். அவர்களின் அகங்காரம் கரும்பாறைகளைப்போல. பல்லாயிரமாண்டுகளாக மழைபோல அவர்கள் மீது கிறிஸ்துவின் கருணை கொட்டிக்கொண்டிருக்கிறது. அவர்கள் எங்கோ கொஞ்சம் கரையத்தான் வேண்டும். ஒருநாள்

கரைந்து அழியத்தான் வேண்டும். அதற்குமேல் நாம் யோசிக்கக் கூடாது. அதற்கான உரிமை நமக்கு அளிக்கப்படவில்லை"

"ஜெசூட்களின் (சேசு சபையார்களின்) நம்பிக்கையை நான் எப்போதும் ஆச்சரியத்துடன் மட்டுமே பார்க்கிறேன்" என்றான் ஏய்டன். "ஆனால், நீங்கள் ஏன் இந்த இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு உங்கள் சிலுவையைக்கொண்டு ஆணையிடக்கூடாது? ஏன் இவர்களைச் சாதியை உதறிவிட்டு வரும்படி சொல்லக்கூடாது?"

பிரண்ணன் சிரித்துக்கொண்டு "காப்டன், நூறுவருடம் முன்பு சென்னையை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னராக ஆண்டவர் ஜோசஃப் கோல்லெட், கேள்விப்பட்டிருப்பீர்கள்"

ஏய்டன் சட்டென்று ஓர் ஆச்சரியத்துடன் "ஆமாம்" என்றான்

"அவரது காலகட்டத்தில் இங்கே பெரிய சாதிக்கலவரம் ஏற்பட்டது. அனேகமாக தென்னிந்தியாவில் பிரிட்டிஷார் சந்தித்த முதல் பெரிய சாதிப்பிரச்சினை அதுதான்" என்றார் பிரண்ணன். "அந்தச் சாதிச்சண்டையைச் சாதாரணமாக புரிந்துகொள்ள முடியாது. கோல்லெட் திகைத்துத் தடுமாறியிருக்கிறார். அவரது குறிப்புகளை நீங்கள் பின்னாளில் அவர் எழுதிய அனுபவக்கட்டுரைகளில் வாசிக்கலாம். அந்த சாதிக்கலவரம் எந்தெந்த சாதிகளுக்கு நடுவே நடந்தது தெரியுமா?"

ஏய்டன் இல்லை என்று தலையசைத்தான்.

"அது செட்டியார்களுக்குள் நடந்தது"

ஏய்டன் உண்மையிலேயே வியந்துபோய்விட்டான். "உண்மையாகவா? ஏன்?" என்றான்.

"இங்கே ஒவ்வொரு சாதியும் நூற்றுக்கணக்கான உட்சாதிகளாகப் பிரிந்திருக்கிறது. நாம் செட்டியார்கள் என்று சொல்பவர்கள் வணிகம் செய்பவர்கள். ஆனால், அவர்கள் என்ன வணிகம் செய்கிறார்கள் என்பது அவர்களின் சாதியைத் தீர்மானிக்கிறது. நகைகளும் தானியங்களும் விற்பவர்கள் உயர்ந்த செட்டிகள். சாதாரண மளிகைச்சாமான்களை



EZHUTHU BOOK FORM 6

விற்பவர்கள் கோமுட்டிச் செட்டிகள். இங்கே ஏற்கனவே சரக்குகளைப் போர்ச்சுக்கல் கப்பல்களுக்குப் படகுகளில் கொண்டு சென்று விற்றவர்கள் கோமுட்டிச்செட்டிகள்தான். மதராசப் பட்டினம் உருவானதும் அவர்களுடைய குடியிருப்புகள்தான் ஆரம்பத்தில் அமைந்தன. ஆனால் கொஞ்சநாளிலேயே மற்ற செட்டிகள் வந்தார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைவு. ஆனால், மன்னர்களிடம் வியாபாரம் செய்து சம்பாதித்த பெரிய மூலதனம் அவர்களிடமிருந்தது. அந்த மூலதனம் வெளியே வருவதற்காகக் கிழக்கிந்தியக் கம்பெனி அவர்களை ஊக்குவித்தது."

பிரண்ணன் தொடர்ந்தார் "கொஞ்சநாளிலேயே இந்த செட்டிகள் இங்கே பெரிய வணிகர்களாக ஆனார்கள். அவர்கள் இங்கே பல கோயில்களைக் கட்டினார்கள். அந்தக் கோயில்களுக்குக் கோமுட்டிகள் போக ஆரம்பித்தார்கள். அது செட்டிகளுக்குப் பிடிக்கவில்லை"

ஏய்டன் "அவர்கள் வேறு மதமா?" என்றான்.

"இல்லை. அதெல்லாம்தான் கொல்லெட்டுக்கு பித்துப் பிடிக்கச்செய்த விஷயங்கள். இருசாராருமே ஒரே மதம்தான். ஒரே தெய்வங்கள்தான். ஆனால், செட்டிகள் வலங்கைச் சாதிகள். கோமுட்டிகள் இடங்கைச்சாதிகள். இங்குள்ள மொத்தச்சாதியையும் அப்படி இரண்டாகப் பிரித்திருக் கிறார்கள். எந்த அடிப்படையில் என்று எவருக்கும் தெரியாது. ஆயிரம் வருடம் முன்னால் மன்னர்கள் காலத்தைய ஏற்பாடு. வலங்கையினர் உயர்ந்தவர்கள். அவர்களின் கோயில்களில் இடங்கையினர் நுழைந்தது தீட்டு என்று அவர்கள் சொன் னார்கள். கோயிலுக்குப்போன கோமுட்டிகளை அவர்கள் ஆள்வைத்துத் தாக்கினார்கள். கோயிலைக் கங்கையில் இருந்து கொண்டுவந்த தண்ணீரால் கழுவினார்கள். கோமுட்டிகள் எண்ணிக்கையில் அதிகம். அவர்கள் நேரடியாகப் படகை ஓட்டக்கூடியவர்களும்கூட. அவர்கள் செட்டிகளைத் திருப்பித் தாக்கினார்கள். மாதக்கணக்கில் கொலையும் கொள்ளையும் நடந்தது. செட்டிகள் அவர்களின் வீடுகளையும் பண்டக

சாலைகளையும் பூட்டிப்போட்டுக் கொண்டு தென்பாண்டி நாட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள்"

"அதுவரை கோல்லெட் இதில் தலையிடவே இல்லை. ஆனால் வியாபாரம் நின்றதும் அவருக்கு வேறுவழியில்லை. ஆளனுப்பி செட்டிகளைக் கூப்பிட்டார். அவர்கள் வர மறுத்தார்கள் ஓர் உத்தரவின்படி அவர்களின் எல்லாச் சொத்துக்களையும் அவர் ஜப்தி செய்தார். கோமுட்டிகளின் தலைவர்கள் என இருபதுபேரைக் கைதுசெய்து அடையாறு கரையில் மரங்களில் தூக்கில் போட்டார். கலவரம் அடங்கியது. கொஞ்சநாளில் செட்டிகளும் திரும்பி வந்தார்கள். கோல்லெட் ஓர் ஆணையைப் பிறப்பித்தார். அதுதான் இன்று வரை பிரிட்டிஷாரின் சாதிபற்றிய கொள்கையாக இருந்துவருகிறது. 1719ல் வெளிவந்த அந்த ஆணையின்படி இந்துக்களில் ஒவ்வொரு சாதியும் அவர்களுக்குரிய ஆசாரங்களை மட்டுமே கடைப்பிடிக்கவேண்டும். இன்னொரு சாதியின் ஆசாரங்களுக்குள் நுழையக்கூடாது. வலங்கைச் சாதிகளின் கோயில்களில் இடங்கையர்கள் நுழையக்கூடாது."

"விசித்திரம்தான்" என்று ஏய்டன் முனகிக்கொண்டான். "ஆனால் நீங்கள் சொல்வதுபோல அதுதான் இன்றுவரை எங்களுடைய கொள்கை."

பிரண்ணன் "சொல்லப்போனால் இந்த நாட்டில் சாதிகளை இந்த அளவுக்கு உறுதியாக நிலைநாட்டியது பிரிட்டிஷ் ஆட்சிதான். கோல்லெட் அன்று நினைத்திருந்தால் ஒருவேளை இங்கே சாதிபேதங்களைத் தடைசெய்திருக்கலாம். ஆனால், அவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் லாபத்தையும் தன்னுடைய சொந்த நலனையும் மட்டும்தான் யோசித்தார். இந்தியாவின் சாதிச்சச்சரவுகளில் தலையிடக்கூடாது என்றும் சாதிநிலை அப்போது இருப்பதுபோல அப்படியே இருந்தாகவேண்டும் என்றும் அவர் ஆணையிட்டார்." என்றார்.

"உண்மையில் இங்கே சாதியமைப்பு சேற்றால் கட்டப் பட்டதுபோலக் குழைந்து குழைந்து உருமாறிக் கொண்டேதான் இருந்தது."பிரண்ணன் தொடர்ந்தார், "எங்கேனும் ஓர் இடத்தில்

ஒரு சாதியினர் சண்டைபோட்டுத் தங்களை நிலைநிறுத்திக் கொண்டு நிலத்தையும் கைப்பற்றிக்கொண்டார்கள் என்றால் அவர்கள் சிலதலைமுறைக்குள் உயர்ந்த சாதிகளாக ஆகிவிட முடியும். அப்படிச் சாதிகள் முன்னால் வந்துகொண்டே தான் இருந்தன. இந்தத் தென்னிந்தியாவையே ஆண்ட நாயக்கர்கள் அப்படி மேலே வந்த இடையச்சாதிகள்தான். அதைப்பற்றிப் பலர் எழுதியிருக்கிறார்கள், படித்திருப்பீர்கள். ஆனால், கோல்லெட்டின் ஆணை 1719ல் இருந்த சாதிநிலையை அப்படியே கற்பாறை போல நிரந்தரமாக உறையச்செய்தது.

சாதியமைப்பில் உருவாகிவரும் எந்த மாற்றத்தையும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் மாபெரும் ராணுவ வலிமை எதிர்த்து அழிக்கும் என்ற நிலை வந்தது. இங்கே நிலம் எந்த மனிதருக்கும் நிலையான உரிமையுடன் இருக்கவில்லை. பலம் உடையவர்கள் அதைக் கைப்பற்றிக்கொள்ள முடியும். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி நில உரிமையை நிரந்தரமாக ஆக்கியது. யோசித்துப் பாருங்கள், இங்கே உள்ள ஒவ்வொரு துண்டு நிலத்தையும் அப்பகுதியில் ஏற்கனவே சாதியதிகாரத் துடன் இருக்கும் ஒருசாராருக்கு அளித்திருக்கிறது பிரிட்டிஷ் கம்பெனி. அவர்களிடமிருந்து அது வரியும் கப்பமும் வசூலிக்கிறது. அவர்களுடைய அதிகாரத்தை எவர் எதிர்த்தாலும் ஒட்டுமொத்த பிரிட்டிஷ் கம்பெனியின் ராணுவ ஆற்றலும் அதைக் காப்பாற்ற வந்துசேரும். ஆகவே, இங்கே ஒவ்வொரு நாளும் தங்கள் அதிகாரத்தைத் தக்கவைக்க மற்றவர்களுடன் போராடிக்கொண்டிருந்த எல்லாச் சிற்றரசர் களும் நிலப்பிரபுக்களும் இன்று சக்கரவர்த்திகள் போல மாறிவிட்டார்கள். எங்கே கொலைசெய்து கொள்ளை யடித்தாலும் சரி, கப்பத்தைக் கட்டிவிட்டால் அவர்களின் அதிகாரத்தை பிரிட்டிஷ் அரசு கவனித்துக் கொள்ளும். எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை.”

அவர் சொல்லும் ஒவ்வொரு வரியையும் தானே முன்னர் யோசித்திருக்கிறோம் என ஏய்டன் நினைத்துக்கொண்டான். ஆனால், அவர் சொல்வதுபோல அத்தனை கச்சிதமான சொற்களில் அவற்றைச் சொல்ல முடிவதில்லை. அவர்

அவற்றைப் பலமுறை அவருக்குள்ளேயே சொல்லிக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

"நான் சொற்பொழிவு ஆற்றுகிறேனோ?" என்றார் ஃபாதர் பிரண்ணன் சிரித்தபடி.

"இல்லை, நான் யோசித்த விஷயங்கள்தான் இவை" என்றான் ஏய்டன்.

பிரண்ணன் சொன்னார் "நான் தெற்கே பயணம் செய்திருக்கிறேன். இந்த மதராஸ் ராஜதானி முழுக்க நூற்றுக்கணக்கான கொடுங்கோலர்களால் ஆளப்படுகிறது. நாடு பஞ்சத்தில் அழிகிறது. ஆனால், அவர்கள் தங்கள் அந்தப்புரங்களைப் பெண்களால் நிரப்பி வைத்திருக்கிறார்கள். பொன்னும் மணியுமாக அணிந்துகொண்டு செரிமானத்துக்கு மருந்து சாப்பிட்டுக்கொண்டு பாட்டும் நடனமும் பார்த்துக் கொண்டு நரகலில் பன்றிகள் வாழ்வதுபோல வாழ்கிறார்கள். அவர்கள் அரண்மனைகளில் ஒவ்வொருநாளும் விருந்துதான். பிரிட்டிஷ் அதிகாரிகளும் நீதிபதிகளும் பாதிரிமார்களும் சென்று தின்றும் குடித்தும் ஆபாசமாகப் பேசிச் சிரித்தும் காலம் தள்ளுகிறார்கள். அவர்கள் நரகத்தைப்பற்றிக் கவலைப்படுவ தில்லை. ஏன் அவர்கள் வாழ்வதே ஒரு நரகத்தில்தான்" சிவந்து ரத்தம் குழம்பிய முகத்துடன், ஈரம்படிந்த கண்களுடன் பிரண்ணன் தலையை ஆட்டினார். "ஏசுவே, என் மீட்பரே." என்று மூச்சுக்குள் முனகிக்கொண்டார்.

"நீங்கள் கவர்னர் விருந்துகளில் ஒருமுறை கலந்து கொண்டால் இதெல்லாம் சாதாரணம் என்று தெரிந்துவிடும்" என்றான் ஏய்டன். "பஞ்சத்தில் சாகும் மக்களின் தானியம் இங்கிருந்து கப்பலில் மூட்டை மூட்டையாகச் சென்று கொண்டிருக்கிறது. அங்கிருந்து உறைந்த தண்ணீர் உருகாமல் பொத்தி பொத்தி இங்கே கொண்டு வரப்படுகிறது. ஒரு கப்பல் நிறையப் பனிக்கட்டி எட்டு கப்பல் நிறைய தானியத்துக்குச் சமம்." என்றான் ஏய்டன்.

பாதர் பிரண்ணன் பெருமூச்சு விட்டார். "அதைப்பற்றிப் பேசத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று நான் ஊகித்தேன்." என்றார்.

"ஆமாம். நேற்று நான் அந்த மக்களின் சேரிக்குச் சென்றிருந்தேன். அங்கே அவர்கள் வாழும் வாழ்க்கையைப் பார்த்தபோது இதெல்லாம் அற்ப விஷயம் என்று தோன்றியது. ஆனால், நான் இந்த விஷயத்தைப்பற்றிக் கவர்னரிடம் பேச விரும்புகிறேன்"

"என்ன பேசமுடியும்?" என்றார் பாதர் பிரண்ணன் சலிப்புடன் "இங்கே என்ன நடக்கிறதென்று டியூக்குக்கு உண்மையிலேயே தெரியாதா என்ன? அதற்கான காரணம் அவருக்குத் தெரியாதா? அவரிடம் நீங்கள் என்ன சொல்லமுடியும்?"

ஏய்டன் "ஃபாதர், நீங்கள் இன்னும் பிரிட்டிஷ் நிர்வாகத்தைப் புரிந்து கொள்ளவில்லை. விலகியிருப்பதைத் தான் நாங்கள் எங்கள் நிர்வாகத்தின் வழியாகக் கொண்டிருக் கிறோம். உண்மையிலேயே எங்களுக்கு இந்தியா எப்படி இருக்கிறது என்று தெரியாது. அப்பட்டமாகச் சொல்கிறேனே, எனக்குக்கூட நேற்றுவரை தெரியாது. நான் டியூக்கின் மனசாட்சியை நம்புகிறேன். அவர் எதையாவது செய்ய முடியும். அவர் என்ன செய்தாலும் அது பெரியதுதான். 'யானை உண்ணும் கவளத்தில் ஒரு துண்டு விழுந்தால்கூட அது லட்சக்கணக்கான எறும்புகளை வாழவைக்கும்' என்று ஒரு பழமொழி பர்மாவில் உண்டு"

"இங்கேயும் உண்டு" என்றார் பாதர் பிரண்ணன். "ஆனால், இந்த ஐஸ்ஹவுஸ் விவகாரத்தை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்யப்போகிறோம்?"

"தெரியவில்லை. ஆனால் அதில் ஒரு தொடக்கம் இருக்கிறது. சொல்லப்போனால் அதுதான் என்னுடைய தொடக்கப்புள்ளி. அதை நான் அப்படியே டியூக்கிடம் எடுத்துச்செல்கிறேன். எப்படி அங்கே தொழிலாளர்கள் வதைக்கப்படுகிறார்கள் என்று சொல்கிறேன். அந்த விஷயத்தில் நான் தலையிட்டது ஏற்கனவே அவருக்குச் சொல்லப்பட் டிருக்கிறது. அதையே காரணமாகக் காட்டி நான் அவரைப் போய்ப் பார்க்க முடியும். நான் கைதுசெய்த ஒருவனை என்

அனுமதியில்லாமல் விடுவித்திருக்கிறார்கள் என்று சொல்வேன். அதைப்பற்றி ஒரு விளக்கம் கொடுப்பேன்."

"நீங்கள் கவிதைகள் எழுதுவீர்களா?" என்றார் பாதர் பிரண்ணன். ஏய்டன் பேசாமலிருந்தான். "உங்கள் வார்த்தை களில் கனவு இருக்கிறது" என்றார். சற்று முன்னால் சாய்ந்து "இந்தக் காலகட்டத்தில் மனிதாபிமானம் நீதியுணர்ச்சி எல்லாமே வெறும் கனவு. ஷெல்லி அப்படிச் சில பிரிட்டிஷாரை கனவுஜீவிகளாக்கிவிட்டுச் செத்தான். அவர்கள் பெரும்பாலும் குடித்துச் சாகிறார்கள்."

ஏய்டன் கடும்கோபம் கொண்டாலும் மெல்ல அடக்கிக் கொண்டான். "நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்யலாம். டியூக்கிடம் விஷயத்தைச் சொல்வது நல்லதுதான். கண்துடைப்புக்காகச் செய்தாலும்கூட அவர் என்ன செய்தாலும் பெரிய விஷயம்தான்." என்றார் பிரண்ணன்.

"அவரை நான் நம்புகிறேன்" ஏய்டன் சொன்னான்.

"டியூக் ஆஃப் பக்கிங்ஹாம் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?" என்றார் பாதர் பிரண்ணன்.

ஏய்டன் பேசாமலிருந்தான்.

"நீங்கள் அயர்லாந்துக்காரர் என்று நினைக்கிறேன். உங்களுக்கு இங்கிலாந்தின் பிரபுக்களைப்பற்றித் தெரியாது. டியூக் இன்று பிரிட்டனிலேயே பெரிய கடன்காரர் என்று சொன்னால் நம்புவீர்களா?"

ஏய்டன் அதை எதிர்பார்க்கவில்லை. அவன் 'இல்லை' எனத் தலையசைத்தான்.

"பாராளுமன்ற அரசியலுக்காக அவரது அப்பா செல வழித்த தொகை அது. அவரது அரண்மனையும் சொத்துக்களும் எல்லாமே மூழ்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால், டியூக் பிரிட்டிஷ் மணிமுடிக்கு விசுவாசமாகப் பல இடங்களில் பணியாற்றினார். இதுவரை அவர் செய்தவேலைகளுக்கான பரிசாக அவரை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். ஐந்துவருடம் இங்கே இருக்கும்போது அவர் தன் தந்தையின் மொத்தக்

கடனையும் அடைக்கவேண்டும். அது ஒரு பெரிய விஷயமே இல்லை. இந்தியாவின் கவர்னர்கள் எல்லாருமே புதையல்களை எடுப்பதற்காகத்தான் வருகிறார்கள். ஆனால், இவர் டியூக் ஆஃப் பக்கிங்ஹாம். அதுதான் பிரச்சினை. இவரால் இறங்கிவந்து வணிகர்களிடமும் மகாராஜாக்களிடமும் பேரம் பேச முடியாது. சில்லறை நிலப்பிரபுக்களை மிரட்டி பணம் பெற முடியாது. அதற்கு இவர் முகவர்களை நியமிக்கவேண்டும். அவர்கள் கையில் கரைந்ததுபோக எஞ்சிய பனிக்கட்டிதான் அவரிடம் வந்துசேரும்.''

அப்பட்டமான உண்மையைக் கேட்பது என்பது எவ்வளவு தூரம் கடினமானது என ஏய்டன் உணர்ந்தான்.

''அவர் வந்து ஒருவருடம் தாண்டிவிட்டது. இன்னும் அவருக்குப் பெரிதாக எதுவும் சேரவில்லை என்று சொல்கிறார்கள். அவர் பெயரைச் சொல்லி எப்படியும் இருபது முப்பதுபேர் பணம் அள்ளிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் அவர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் வாங்கப்போகும் கடன்களை அடைத்துக்கொண்டிருக்கிறார்கள். டியூக் பணம்சேராத பதற்றத்தில் இருக்கிறார். பொதுவாக இம்மாதிரி வசூல்களை எல்லாம் சீமாட்டிகள்தான் செய்வது வழக்கம். டியூக்கின் மனைவி இறந்தபின் அவர் தனிமையில் இருக்கிறார். அவரது பெண்களுக்கு இன்னும் சீமாட்டிகளுக்குரிய பேராசை பற்றிக்கொள்ளவில்லை. இங்கே டியூக்கின் மூத்தமகள் மேரி மட்டும்தான் இருக்கிறாள். அவளுக்கு இசையில் மட்டும்தான் ஆர்வம். விருந்தினர்களுக்கு பியானோ வாசித்துக்காட்டுவதில் நிபுணர். ஆனால், உண்மையான சீமாட்டியின் வேலை அது இல்லையே. அவள் பணப்பெட்டி மீதல்லவா அமர்ந்திருக்க வேண்டும்!'' பாதர் பிரண்ணன் சொன்னார்.

ஏய்டன் சோர்வுடன் மெல்ல அசைந்து அமர்ந்தான். ''நான் எங்கிருந்தாவது தொடங்கவேண்டும் என்று நினைக்கிறேன். எதையாவது செய்யவேண்டும் என்று தோன்றுகிறது'' என்றான்.

"அது உன்னதமான உணர்வு. இந்த மண்ணில் மிகமிகச் சிலருக்கு மட்டுமே அப்படித் தோன்றுகிறது. மீதி அனைவருமே நாற்றம் வரும் திசைக்கு சன்னலை மூடிக்கொண்டு தங்கள் அறைகளுக்குள் நறும்புகை போட்டுக்கொண்டு வாழ்கிறார்கள். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?"

ஏய்டன் கனைத்துக்கொண்டு "நீங்கள் அந்த இரு தொழிலாளர்களுக்கும் ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்தனுப்பிய தாகச் சொன்னார்கள். அந்த விஷயத்தை எனக்கு ஒரு கடிதமாகக் கொடுக்க முடியுமா?"

"அதற்கென்ன. கண்டிப்பாக. அது என் கடமை" என்றார் பாதர் பிரண்ணன். "பட்டினியால் செத்துக் கொண்டிருந் தார்கள். நான் என்னால் முடிந்ததைச் செய்யலாமென்று நினைத்தேன். பாவம்" என்றார்.

"அவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை. கொல்லப்பட் டிருக்கலாமென்று சொல்கிறார்கள்"

பிரண்ணன் சிரித்து "இப்போது இந்த நாட்டில் சாகிற எல்லாருமே கொலை செய்யப்பட்டவர்கள்தான்" என்றார்.

"டியூக்கிடம் இந்த விஷயத்தை நான் சொல்கிறேன். என்ன நடந்தது என்று விளக்குகிறேன். இன்று பஞ்சம் காரணமாக லட்சக்கணக்கானவர்கள் நகரத்துக்கு வந்துகொண்டிருக் கிறார்கள். நகரம் மழைபெருகிய ஏரி போல நாலாபக்கமும் விரிந்து பரவி வெடிக்கும் நிலையில் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களின் கையறுநிலையைப் பயன்படுத்திக் கொண்டு பெரும் கொள்ளை போடுகிறார்கள் நம்மவர்கள். சாகும்வரை வேலைவாங்கிக்கொண்டு குப்பைகளாகத் தூக்கிப் போடுகிறார்கள். ஐஸ்ஹவுஸும் அதையே செய்கிறது. நாம் இப்போது அவர்களிடமிருந்து தொடங்கலாம். அவர்கள் அந்த மக்களுக்கு முறையான ஊதியமும் பாதுகாப்பும் கொடுக்க வேண்டும் என்று டியூக் வழிகாட்டலாம். அவர்கள் அதைக் கடைப்பிடிப்பார்கள் என்றால் அதே நடைமுறையைச் செட்டிகள் நடத்தும் எல்லாத் தொழில்களுக்கும் கொண்டு

செல்லமுடியும். கூடவே இந்த மக்களுக்காக அரசாங்கம் எதையாவது செய்யவேண்டும் என்று டியூக்கிடம் மன்றாடவும் செய்வேன்'' என்றான் ஏய்டன்.

"உங்கள் திட்டத்தில் உள்ள மிகச்சிறந்த சாதக அம்சம் என்றால் ஐஸ்ஹவுஸ் ஓர் அமெரிக்க நிறுவனம் என்பதுதான்'' என்றார் பாதர் பிரண்ணன் சிரித்தபடி. "அது டியூக்கின் அலுவலகத்தில் உள்ள முதலைகளுக்கும் காண்டாமிருகங் களுக்கும் பெருச்சாளிகளுக்கும் பிடித்திருக்கும். அந்த ஆணையின்படி அவர்கள் அமெரிக்க நிறுவனத்தை மிரட்டலாம். பஞ்சகாலத்தில் நியாயமாக நடந்துகொண்டதாக ஒரு வரலாற்றையும் உருவாக்கிக் கொள்ளலாம். அந்த ஆயுதம் அவர்கள் மீது திரும்பும் என்று அவர்களின் கொழுப்பு படிந்த மூளையில் உதிக்கவில்லை என்றால் பெரும்பாலும் நடவடிக்கை இருக்கும். அந்நடவடிக்கைக்காக டியூக் வெளியிடும் ஆணையை நீங்கள் ஒரு பொது அறிவிப்பாக ஆக்கமுடியும்.''

ஏய்டன் பெருமூச்சுடன் "அதில் பாதி நடந்தால்கூட நல்லதுதான்'' என்றான்.

பிரண்ணனின் சமையற்காரன் நிழல் உள்ளே வருவது போல வந்தான். "மரியான், டீ போடுகிறாயா?'' என்றார். அவன் தலையசைத்தான்.

"டீ போடச் சொல்லிக் கொடுத்தீர்களா?'' என்றான் ஏய்டன்.

"எல்லாமே நான் சொல்லிக்கொடுத்ததுதான். நன்றாகவே சமைப்பான். ஆனால் நல்ல சாப்பாடு சமைக்க வாய்ப்பே இல்லை என்ற மனக்குறை இருக்கிறது அவனுக்கு'' என்றார் ஃபாதர் பிரண்ணன். மரியான் உள்ளே பாத்திரங்கள் ஒலி எழுப்ப வேலை செய்ய ஆரம்பித்தான்.

ஏய்டன் "இங்கே வரும்போது மரிஸாவுடன் வந்தேன்.''

"மரிஸா. ஓ'' என்றார் பிரண்ணன் "நல்ல பெண். நிறையப் படிப்பாள்''

ஏய்டன் "ஆமாம். ஆகவேதான் எனக்குத் தோழி" என்றான்.

பிரண்ணன் அவளைப்பற்றி மேலே பேசவிரும்பவில்லை. "நான் உங்களுக்கான கடிதத்தை எழுதுகிறேன். யாருக்கு எழுதவேண்டும்?" என்றார்.

"எனக்கு உங்கள் சபையைச்சேர்ந்த இருவர்--"

பிரண்ணன் "இருங்கள்." என்றார். "அவர்கள் என் சபையைச் சேர்ந்தவர்கள் இல்லை"

ஏய்டன் ஆச்சரியத்துடன் "அப்படியா?" என்றான்.

"ஆமாம். இங்கே கோமுட்டிகளும் மீனவர்களும் ஆங்கில இந்தியர்களும் மட்டும்தான் இருக்கிறார்கள். அவர்கள் அந்த மக்களை உள்ளேயே விடமாட்டார்கள். என்னுடைய பாரிஷில் ஒரு தீண்டப்படாதவன்கூட இல்லை."

"நான் இந்த ஆலயத்தில்மட்டும்தான் என்று நினைத்தேன்"

"எங்கும்தான். அவர்களை உள்ளே விட்டால் நான் இங்கே சபையைக் கலைத்துவிடவேண்டியதுதான்"

ஏய்டன் "ஆனால் காத்தவராயன் சொன்னான்." என ஆரம்பித்தான்.

"அவன் உற்சாகமான இளைஞன்" என்றார் பிரண்ணன். "அவனுடைய மக்களுக்காக வாழ்க்கையை அர்ப்பணிக்கிறான். அவர்கள் ஏன் அப்படி ஆனார்கள் என்று சிந்திக்கிறான். அவனைப்போன்ற மனிதர்கள் நூற்றாண்டுகளுக்கு ஓரிருவரே பிறக்கிறார்கள். வாழும்காலத்தில் அவர்கள் புரிந்துகொள்ளப் படுவதேயில்லை"

ஏய்டன் "இந்த இருவரும் கத்தோலிக்கர்கள் என்றார்களே" என்றான்.

பிரண்ணன் புன்னகைசெய்து "கத்தோலிக்கர்களை மாதிரி என்று சொல்லலாம். ஆன்ம அறுவடைக்காக இறங்கும் சில அசட்டுப்பாதிரிகள் இவர்களை ஏதாவது சொல்லி மதம்

மாற்றிச் சிலுவை போட்டுவிட்டுச் செல்கிறார்கள். அதன்பின் திரும்பியே பார்ப்பதில்லை. அவர்களுக்கும் பெயர்கள் மாறுவதோடு சரி வேறெந்த மாற்றமும் நிகழ்வதில்லை. அதே கடவுளற்ற வாழ்க்கை. எப்போதாவது பிரச்சினைகள் என்றால் ஏதாவது ஒரு பாதிரியாரை அணுகுவார்கள்.'' என்றார். ''இந்த இருவரையும் காத்தவராயன்தான் என்னிடம் அனுப்பி வைத்தான். அவனுக்கு இவர்கள் கத்தோலிக்கர்கள் என்று தோன்றியிருக்கிறது''

ஏய்டன் யோசித்து ''உங்கள் பாரிஷ் பதிவேட்டில் அவர்கள் பெயர் இல்லையென்றால் நீங்கள் சட்டபூர்வமாக அவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாதே'' என்றான்.

பிரண்ணன் ''நீங்கள் கேட்பது என்ன?'' என்றார். ''இப்படி இரண்டுபேர் இருந்தார்கள் என்பதற்கே ஆதாரம் தேவை என்கிறீர்கள் இல்லையா?'' என்றார்.

''உண்மையைச் சொன்னால் ஆம். அதற்காகத்தான்''

பிரண்ணன் ''நான் எனக்கு அவர்களைத் தெரியும் என்றால் அது போதாதா?''

ஏய்டன் ''ஒருவேளை அதை கம்பெனி மறுத்தால்?'' என்றான்.

''இளைஞனே, கம்பெனி அவர்கள் இருவரின் சடலத்தை நீங்கள் அவர்களின் முற்றத்திலேயே கண்டெடுத்தால்கூட ஒன்றும் செய்யப்போவதில்லை'' என்றார். பின்பு மையைத் தொட்டு எழுத ஆரம்பித்தார்.

மரியான் டீ கொண்டுவந்து வைத்தான். ''நான் அதில் உள்ளூரில் கிடைக்கும் பனங்கற்கண்டு போடுவேன். உங்களுக்கு பிடித்திருந்தால் போடலாம்'' என்றார் பிரண்ணன் எழுதியபடி

''நான் இனிப்புப் போட்டுக்கொள்வதில்லை'' என்று ஏய்டன் மெல்லக் குடித்தான்.



# 6

காலை வெயில் முதிர்ந்தபோதுதான் ஏய்டன் தன் அலுவலகத்துக்கு வந்தான். வந்ததுமே அவனே அமர்ந்து ஒரு கடிதத்தை எழுதினான். நேரடியாகவே மதராஸ் ராஜதானியின் ஆளுநர் டியூக் ஆஃப் பக்கிங்ஹாமுக்கு எழுதப்பட்ட கடிதத்தை உறையில்போட்டு ஒட்டி அரக்குமுத்திரை போட்டான். பின்பு சாமை அழைத்து தூதனை வரச் சொன்னான். தூதன் உள்ளே வந்து சல்யூட் அடித்ததும் "இந்தக்கடிதம் கவர்னரின் கைகளுக்கே போகவேண்டும். தெரிகிறதா?" என்றான்.

தூதன் "எஸ். சார்" என்றான்.

ஏய்டன் சற்று யோசித்துவிட்டு உறையின் மீது மீண்டும் "அசாதாரணம், அவசரம்" என்று சிவப்பு மையால் எழுதினான். "இதை யார் பெற்றுக்கொள்கிறார்களோ அவரிடமிருந்து முறையான ரசீதும் வாங்கிக்கொண்டு வரவேண்டும்"

தூதன் "எஸ் சார்" என்றபின் சல்யூட் அடித்துக் கிளம்பிச் சென்றான்.

ஏய்டன் கலைந்த மனநிலையிலேயே இருந்தான். கோர்வையாக யோசிக்கமுடியாமல் ஒரு கலவரம் அவன் வயிற்றுக்குள் ஓடிக்கொண்டே இருந்தது. அவனுடைய செய்கை பிரிட்டிஷ் நிர்வாகமரபில் பெரிய அத்துமீறல். அது

தண்டனைக்குரிய குற்றமும்கூட. ஆனால், அதில் இருந்த சிறிய சாகசமே தன்னை அதைச்செய்யவைக்கிறது என்று தோன்றியது. அவன் சொல்லப்போகும் விவகாரம் நேரடியாகப் பார்த்தால் கர்னல் வரைக்கும்கூடப் போக வேண்டியது அல்ல. ஓர் இந்தியக் கங்காணி கைதுசெய்யப்பட்டது என்ன, கொல்லப்பட்டால்கூட அது ஒரு டாணா சிப்பாய் அளவிலேயே தீர்ந்துபோகக்கூடிய விஷயம்தான். அதற்குமேல் அவன் சொல்லப்போகும் விஷயம் டியூக்கால் மனிதாபிமான அடிப்படையில் எடுத்துக் கொள்ளப் பட்டால் அவன் மன்னிக்கப்படுவான்.

அந்த அர்த்தம் வருமளவுக்குத் தன் கடிதம் எழுதப்பட்டுள்ளதா என்ற ஐயம் அவனுக்கு ஏற்பட்டது. அதில் அவன் அந்த ஐஸ்ஹவுஸ் நிகழ்ச்சியின் பின்னணியை நேரில்வந்து விளக்குவதாக மட்டுமே எழுதியிருந்தான். கடிதத்தை டியூக் நேராக கர்னலுக்கே திருப்பி அனுப்பினாரென்றால், அதை அவர் உடனே அவனை வரச்சொல்வார். அவனிடம் அவருக்குப் பேச ஒரே விஷயம்தான் இருக்கும். அவனுடைய மீறல், அதிலுள்ள சவால். அது ஒரு ஐரிஷ் திமிர் என்று மட்டும்தான் அவனுக்குத் தோன்றும்.

அவன் நிலைகொள்ளாமல் எழுந்தான். கடிதத்தைத் திரும்ப வாங்கி இன்னொரு முறை படித்துப்பார்த்தாலென்ன என்று தோன்றியது. ஆனால் தூதன் வெகுதூரம் சென்றிருப்பான். உடனே சென்று தூதனைக் கூட்டிவரச் சொன்னால் என்ன? அவன் வேகமாக வெளியே வந்தான். வெளியே நின்றிருந்த நாராயணன் அவனை நோக்கி வந்தான். "சர்?" என்றான். ஏய்டன் ஒன்றுமில்லை என்று தலையசைத்துவிட்டு திரும்பி உள்ளே வந்தான்.

என்ன செய்வது? எது வேண்டுமானாலும் நடக்கட்டும். யோசிக்க யோசிக்க ஒருபோதும் நல்லதாக எதுவும் நடக்கப்போவதில்லை என்று புரிந்தது. பிரிட்டிஷ் நிர்வாகமே அந்தவகையான தடைகளைக்கொண்டுதான் கட்டமைக்கப் பட்டிருக்கிறது. மிகக்கீழ்மட்டத்தில் உள்ள கிராமக்காவலர்கள் அவர்கள் அறிந்த பிரச்சினைகள் எதையும் மேலே சொல்லாமல்

நிறுத்தி அவர்களே முடித்துவிடுவார்கள். கொலைகளைக்கூட அவர்களை மீறித்தான் ஒரு விவகாரம் கீழ்மட்ட பிரிட்டிஷ் சிப்பாய்களுக்கு வந்துசேரும். சிப்பாய்களை மீறித்தான் அதிகாரிகளிடம். ஒவ்வொரு தளத்திலும் உள்ள பிரிட்டிஷ் ஊழியன் பிரச்சினைகள் அவனைவிட மேலதிகாரி யிடம் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிரச்சினைகள் அவனைத்தாண்டி மேலே செல்லுமென்றால் அவன் திறமையற்றவன், தண்டிக்கப்பட வேண்டியவன் என்றே பொருள்.

அப்படி நூற்றுக்கணக்கான தடைகளைத் தாண்டித்தான் ஒரு பிரச்சினை கவர்னர் வரைக்கும் செல்லவேண்டும். அப்போதுதான் அவரால் அதைக் கையாளமுடியும். அந்தப் பிரச்சனை அவர் வரைக்கும் வந்தாகவேண்டிய அதீத முக்கியத்துவம் கொண்டிருக்கும். அவர் முடிவெடுக்கத் தேவையான அளவுக்கு அதில் பல்வேறு தரப்புகள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கும். தாமதமாகி கிட்டத்தட்ட காலாவதி யான நிலையிலும் இருக்கும். பிரிட்டிஷ் நடைமுறையில் கவர்னர் என்பவர் மேலதிகாரிகளை நிர்வாகம் செய்யவேண்டியவர் மட்டுமே. அவர் நிர்வாகம் செய்யவேண்டியது தன்னுடைய நிர்வாக அமைப்பை மட்டும்தான், அந்நிர்வாக அமைப்பால் நிர்வகிக்கப்படும் நாட்டையும் மக்களையும் அல்ல. மொத்த மூச்சுக்காற்றும் வெளியேறி உடல் தளர்ந்தது. நாற்காலியில் அமர்ந்தான். "சாம்" என்று அழைத்தான்.

வயிற்றுக்குள் தீப் போல அமிலம் கொந்தளிக்குமளவுக்குக் குடித்து, வியர்த்து, சட்டைப்பித்தான்களைக் கழற்றிப் பின்னால் தள்ளிவிட்டுக்கொண்டு நாற்காலியில் மல்லாந்தபோது 'இந்தச் சிலநாட்களாக மிக அதிகமாகக் குடிக்கிறோம்' என்று நினைத்துக்கொண்டான். இரவிலும் பகலிலும் குடி. 'Almighty Tyrant! And give thanks to Thee!. Drink deeply—drain the cup of hate; remit this—I may die! ஆம் ஷெல்லியின் வரியாகத்தான் இருக்கவேண்டும். Drink deeply—drain the cup of hate! இன்றைக்கு இதுதான் என் பேரழிவின் மந்திரம். இன்று என்னைக் கொத்திக் கொத்தித் துளைத்துச் செல்லும்

மரங்கொத்தி. இன்று என் மூளைப்பரப்பில் சொட்டிச் சொட்டி விடியச்செய்யும் அமிலத்துளி. Drink deeply—drain the cup of hate! எல்லாக் குடியும் வெறுப்பின் கோப்பையில் நிரப்பப் பட்டதல்லவா? நான் செத்தொழிகிறேன். அனைத்து வல்லமையே, கீழே பார். கொடுங்கோலனே கீழே பார். இங்கே ஒருவன் தன் மனதை மெழுகுவர்த்தியின் தீச்சுடர் போல ஏந்திக்கொண்டு உருகிவழிகிறான். பார், இங்கே ஒருவன் பழக்கொட்டைக்குள் குடியேறிய புழுவைப்போல ஓர் எண்ணத்தைச் சுரந்துகொண்டிருக்கிறான்'.

'O, drain the cup of hate! இந்தக் கணத்தில் நான் செத்தொழியக்கூடும். வெறுப்பின் மது நிறைந்த இந்த மெல்லிய கோப்பை. ஷெல்லி நீ என்னையும் கொல்லப்போகிறாய். இந்நூற்றாண்டின் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்றவன் நீ. முன்னோடியாகக் கொந்தளிக்கும் கடலில் ஓட்டைப்படகுடன் இறங்கிச்சென்றவன். எதற்காக அதைச்செய்தாய்? நீ செய்தவற்றையெல்லாம் குறியீடாக மீண்டும் வலியுறுத்த எண்ணினாயா? ஓர் அழியாத உவமையாக உன்னைச் சரித்திரத்தில் விட்டுவிட்டுச்செல்ல விரும்பினாயா? தனக்கான கொந்தளிப்பு வெளிகளை நோக்கிச் செல்லும் அறைகூவலுடன் நீ உன்னை முடித்துக்கொண்டாய். நான் அறிவேன், அந்தப்புயலிலும் நீ உன் பாய்களைத் தாழ்த்தியிருக்க மாட்டாய்!.

ஆனால் ஷெல்லி, நீ சென்ற அந்த ஆழம் என்ன? நீ பறந்திறங்கியபோது அந்த வானம் இருண்டு இருண்டு விரிந்து கிடந்தது. ஷெல்லி, முட்டாளே குடிகாரனே கிறுக்கனே. அங்கே இந்த பூமி உருவான நாள் முதலாக மூழ்கிய அனைத்துமே சேற்றில் பதிந்து அசைவற்றுக் காத்துக்கிடந்தன உனக்காக. நீ வரும்போது அவற்றினூடாக ஓர் ஒளிநிழலசை வென மெல்லிய வரவேற்பொன்று ஓடிச்சென்றது. இனி நீயும் அவற்றில் ஒருவனல்லவா? மூழ்கிக் கிட. சேற்றில். நூற்றாண்டு களின் சேற்றில். வரலாற்றின் வண்டலில். ஆனால், நீ மட்க மாட்டாய். கடலின் பேரழுத்தத்தால் இறுக அணைக்கப்பட்டு நீ அங்கே அசையாமல் கிடப்பாய். யுக யுகமாக. என்றாவது மானுடம்

உன்னை மூழ்கியெடுக்கும். ஒரு முத்துப்போல் குறுகி இறுகி ஒளிவிட்டுக்கிடப்பாயா அங்கே?

Drink deeply—drain the cup of hate! ஷெல்லி நீ நிறைத்து வைத்துவிட்டுப்போனவை கசக்கும் விஷக்கோப்பைகள்! கொடுங்கோலனே, சர்வசக்தனே, உனக்கு நன்றி. கிறுக்கனே, கவிஞனே, குடிகாரனே உனக்கும் நன்றி. இந்த நேரம் நான் இங்கே மௌனமாகச் செத்துக்கொண்டிருக்கிறேன். என் எண்ணங்கள் செத்துக்கொண்டிருக்கின்றன. என் கைகால்கள் செத்துக்கொண்டிருக்கின்றன. என்னைச்சுற்றி இச்சுவர்களும் கூரையும் செத்துக்கொண்டிருக்கின்றன. என் இதயம் ஒரு கனலாக ஒரு தழல்குவையாகத் தகதகக்கிறது. ஷெல்லி, இதோ நான் முற்றாக எரித்துச்சாம்பலாக்கப்படுகிறேன். அதற்காக உனக்கு நன்றி'.

ஏய்டன் கண் விழித்தபோது தூதன் திரும்பி வந்திருந்தான். ஏய்டன் எழுந்து வாயைத்துடைத்துக்கொண்டு நேராக நடந்து கழுவுதொட்டியில் நீர் நிறைத்து முகத்தை அதில் மூழ்கடித்தான். நீரை அள்ளித் தலையிலும் கழுத்திலும் விட்டுக்கொண்டான். தூதன் சொல்லப் போவதைக் கேட்பதை முடிந்தவரை ஒத்திப்போட்டான். அவன் உகக்காத எதையோதான் சொல்லப் போகிறான். ஆமாம், அதுதான். வேறென்ன? வேறெதுவும் இல்லை. அதேதான். கொந்தளிப்புடன் தன் தலையின் இரு பகுதிகளையும் கைகளால் அழுத்திக்கொண்டான். முகத்தைத் துடைத்தபின் திரும்பிப் பேசாமல் நின்றான்.

தூதன் வணங்கி ஒரு உறையை நீட்டினான். டியூக்குக்காகக் கடிதத்தை அவரது தனிச்செயலர் வில்லியம் ரஸ்ஸல் பெற்றுக்கொண்டிருந்தார். கிறுக்கலாக "டியூக்கின் தனிப்பார்வைக்கு வைக்கப்படும்" என்று சொல்லியிருந்தார்.

ஏய்டன் பெருமூச்சு விட்டான். உடலில் பளுசுமந்து புடைத்திருந்த தசைகளெல்லாம் மெல்ல இளகின. குறிப்பை மேலும் இருதடவை வாசித்தான். கரிய மையில் சாய்வாகக் கூட்டி எழுதப்பட்ட சொற்கள். அலட்சியமாக ஆனால் மிகக்கச்சிதமாக விசிறியெறியப்பட்ட எழுத்துக்கள். அதிலுள்ள

தன்னம்பிக்கை, அதிகாரம், அலட்சியம். 'வாள்களும் துப்பாக்கிகளும் உலகையாளும் காலம் முடிந்துவிட்டது. இனிமேல் ஆளப்போகின்றவை இந்த எழுத்துக்கள்'.

தூதன் சென்றதும் ஏய்டன் ஒரு டீக்கு உத்தரவிட்டான். ரசீதை அவனே தன் அந்தரங்கக் கோப்பில் இணைத்துத் தைத்தான். கைகளைத் தூக்கிக் கால்களை ஆட்டியபடி கண்மூடி அமர்ந்து டியூக்கைச் சந்திக்கும்போது பேசவேண்டிய சொற்களைக் கோக்க ஆரம்பித்தான். டீ வந்ததும் அதை மெல்ல உறிஞ்சியபடி எழுந்து சென்று கடலைப்பார்த்தான். ஒளியே கடலாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மெல்ல மெல்ல மனம் ஐயங்களால் இருள ஆரம்பித்தது. டீயுக்கிடம் இன்னும் கடிதம் சென்றுசேரவில்லை. அந்தக்கடிதத்துடன் ரஸ்ஸல் எழுதிவைக்கும் குறிப்புதான் அவர் என்ன செய்யப்போகிறார் என்பதைத் தீர்மானிக்கப்போகிறது. ரஸ்ஸல் ஒரு சரியான ஆங்கிலோ சாக்ஸன். அவர் முன் எந்நிலையிலும் ஏய்டன் ஒரு ஐரிஷ்காரன் மட்டுமே.

கோப்பையைத் திரும்ப வைக்கும்போது ஏய்டன் முடிவுக்கு வந்திருந்தான். சந்திப்பு மிக எதிர்மறையானதாகவே இருக்கப்போகிறது. முற்றிலும் மனச்சோர்வூட்டக்கூடியதாக. நிதானத்தை இழக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டான். உணர்ச்சிகளைக் கொட்டக்கூடாது. டியூக் போன்ற ஒரு தூய ஆங்கிலப்பிரபுவுக்கு உணர்ச்சிகள் என்பவை உடலில் இருந்து வெளியேறும் மலம், மூத்திரம் போன்றவை.

அவனுக்குச் சிலகணங்கள் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த விவகாரத்தை முன்வைப்பதற்கான எல்லாத் திட்டங்களும் சட்டென்று அபத்தமாக மாறி முன்னால் கிடந்தன. ஆனால், அவன் எதிர்கொண்டாக வேண்டிய சந்தர்ப்பம். ஒருவேளை, அவன் வாழ்க்கையிலேயே பெரிய தருணம்.

சட்டென்று ஒரு எண்ணம் வந்தது. அவன் ஃபாதர் பிரண்ணனிடம் பேசும்போது சொன்ன சொற்கள். இந்த விவகாரம் அவனுக்கு ஒரு சாக்குதான். அவன் டியூக்கிடம்

சொல்லப்போவது இங்கே மனிதர்கள் வாழும் விதத்தைப்பற்றி. அல்ல, சாகும் விதத்தைப்பற்றி. அப்படியென்றால் ஏன் இதில் ஆரம்பிக்கவேண்டும்? நேரடியாக அதிலேயே தொடங்கினா லென்ன? அப்பட்டமாகத் தெளிவாக அதையே சொன்னா லென்ன? இந்த விஷயத்தைப்பற்றி அவர் கேட்கும் கேள்விகளுக்குப்பதிலாக அதைப்பற்றிச் சொன்னாலென்ன ஆகும்? ரஸ்ஸல் மரியாதையே கண்டிப்பாக உருமாறிய பாவனையில் "மன்னிக்கவும், நீங்கள் டியூக்கின் நேரத்தை உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்று ஐயப்படுகிறேன்" என்று சொல்லி அக்கணமே பேச்சைத் துண்டிப்பார். ஆனால் சொல்லவேண்டியதை யெல்லாம் சொல்லிவிட்ட நிறைவு அவனுக்கு எஞ்சும். அதன்பொருட்டுத் தண்டிக்கப்பட்டானென்றால்கூட அதற்கொரு அர்த்தமிருக்கும்.

ஆனால், அவனிடம் என்ன இருக்கிறது சொல்ல? அவனுடைய ஆளுகைக்கு உட்பட்ட ஒரு சிறிய சேரிக்குள் சென்று அங்கே மக்கள் வாழ்வதைக் கண்டுவந்திருக்கிறான். "ஆவன செய்யப்படும்" என்று சொல்லி டியூக் புன்னகையுடன் பட்டு உறையிட்ட கையை நீட்டித் தலையசைப்பதற்குரிய சில வரிகளை மட்டுமே அவன் சொல்லமுடியும். 'இல்லை, நான் இன்னும் புயலின் கண்ணை நெருங்கவில்லை. நான் பார்த்தது கரையின் அலைகளை மட்டுமே'. ஏய்டன் தலையை ஆட்டினான். 'ஆம், அதுதான் ஒரே வழி'. அவன் அதற்குள் இருந்தாகவேண்டும்.

ஏய்டன் எழுந்து தொப்பியை வைத்துக்கொண்டு வெளியே வந்தான். அவனுடைய குதிரையைக் கொண்டு வந்திருந்தார்கள். அது மெல்லச் செருக்கடித்து அவனை வரவேற்றது. முன்னங்கால்களால் தரையைத்தட்டி மூச்சு சீறியது.

ஏய்டன் "டொர்ஸாமி" என்று அழைத்தான். துரைசாமியிடம் வண்டியைப்பூட்டும்படி சொன்னான். அதில் ஏறிக்கொண்டு மீண்டும் ராயபுரம் செயிண்ட் பீட்டர்ஸ் சர்ச்சுக்கே போகும்படி சொன்னான். அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை அவனுடைய மனம் தீர்மானித்து விட்டிருந்தது என்பதை அவன் உணர்ந்தான். பெருமூச்சு

விட்டுக்கொண்டு தொப்பியை எடுத்துத் தலையை நீவிக் கொண்டான். தொப்பியை முட்டின்மீது வைத்துக்கொண்டு பதற்றமாக முன்னால் சாய்ந்து அமர்ந்து ஓடிச்செல்லும் சதுப்புப் பின்நீர்க் கதுப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மதிய வெயில் தென்னைமரங்களின் நிழல்களை அவற்றின் காலடிகளிலேயே சிந்திவைத்திருந்தது. பறவைகள் எல்லாம் புதர்களுக்குள் ஒடுங்கியிருந்தன. பறவையொலிகள் இல்லாதது மொத்த நிலமே தூங்கிக்கொண்டிருந்த உணர்வை அளித்தது. ஒரு நாய் வண்டியைத் துரத்தி வந்து குரைக்க, பல இடங்களில் நாய்கள் எதிர்க்குரைப்பு எழுப்பின. 'இந்த ஊர் நாய்கள் ஐரோப்பிய நாய்களைப் போன்றவையல்ல. இவை மனிதனை அண்டி ஆனால், மனிதனுக்கு இணையான ஒரு தனி சமூக அமைப்பாக வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்தியாவில் உள்ள பெரும் உயிர்ச்சமூகங்கள் மூன்று. மனிதர்களும், நாய்களும், காகங்களும். அவை ஒன்றை ஒன்று அண்டி வாழ்ந்துகொண் டிருக்கின்றன. இந்த மக்கள் அவற்றைக் கடவுள் வடிவாக வணங்குகிறார்கள். தன்னிடம் எஞ்சும் ஒருதுண்டு உணவில் பாதியை இந்த எளிய செந்நிற நாய்க்குப்பகிர இவர்கள் தயங்குவதில்லை. அதிகாலையில் முதல் உணவைக் காகத்துக்கு வைத்தபின் உண்ணும்பலர் உண்டு. ஆனால். ஏன் இதை நினைக்கிறேன்? என்ன எண்ணங்கள் இவை ?' ஏய்டன் தனக்குத்தானே புன்னகைசெய்துகொண்டான்.

சர்ச்சில் பிரண்ணன் இருந்தார். அவனைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவன் துதி சொன்னதும் சம்பிரதாயமாகச் சிலுவை போட்டார். "வாருங்கள்" என்று உள்ளே அழைத்துச்சென்றார். உள்ளே அவரது குடிசையின் தாழ்வான இருக்கையில் அமர்ந்ததும் ஒருவிதமான அந்தரங்கத்தன்மை வந்தது. "சொல்லுங்கள்" என்றார் பிரண்ணன் அங்கியைக் கழற்றி மாட்டிவிட்டு வந்து அமர்ந்தபடி

"நான் அனேகமாக நாளை டியூக்கைச் சந்திப்பேன். நாளை இரவு" என்றான் ஏய்டன்.

“ஓ.”என்றார் பிரண்ணன் “என் கணிப்பு கொஞ்சம் தவறிவிட்டது. அவர் உங்கள் கடிதத்தைக் கர்னலுக்கு அனுப்புவார் என்று நினைத்தேன்”

“அதற்கான வாய்ப்புகளும் இல்லாமலில்லை. ஆனால் சந்திப்பு நிகழத்தான் வாய்ப்பு அதிகம்” என்றான் ஏய்டன்.

“டியூக் நேரம் கொடுத்துவிட்டாரா?”

“அவர் பகலில் விழித்திருப்பதில்லை. மாலைதான் விழிப்பார். முக்கியமான சந்திப்புகள் முடிந்து பிற விவகாரங்களுக்கு வர விடியற்காலை ஆகிவிடும். அதாவது நான் நாளைமறுநாள் அதிகாலையில்தான் அவரைச் சந்திக்கமுடியும். அதற்குள் நான் இன்னும் கொஞ்சம் கனமாக ஆகவேண்டும். எனக்கு இன்னும் கொஞ்சம் தகவல்கள் தேவை. நேரடி அனுபவம் தேவை”

“நேரடி அனுபவமா? குதிரையை எடுத்துக்கொண்டு நகரில் ஒருமுறை சுற்றிவந்தாலே போதுமே”

“நான் இன்னும் விரிவாகவும் குறிப்பாகவும் பார்க்க விரும்புகிறேன். ஒரு நல்ல அறிக்கை என்னிடமிருக்க வேண்டும்”

“நாளைக்காலை நீங்கள் நாங்கள் நடத்தும் இரு ஆஸ்பத்திரிகளையும் அனாதைவிடுதிகளையும் வேண்டுமென்றால் பார்க்கலாம். சின்ன அளவில்தான் ஏதோ செய்கிறோம். ஆனாலும், அது உங்களுக்குப் போதுமானதாக இருக்கும். டேனிஷ்மிஷன் ஆஸ்பத்திரிக்கு வேண்டுமென்றாலும் போய்ப் பார்க்கலாம்”

“நான் பஞ்சத்தை நேரடியாகப் பார்க்க விரும்புகிறேன்”

“அதற்கு நீங்கள் செங்கல்பட்டுக்குத்தான் போக வேண்டும்.”

“ஏன், பஞ்சம்பிழைக்க இங்கேதானே வருவார்கள்?”

“உழைக்குமளவுக்கு உடல்நலமில்லாதவர்கள் இங்கே வருவதில்லை”

"அப்படியா? ஏன்?"

பிரண்ணன் பேசாமல் கூர்ந்து பார்த்தார்.

"நான் உண்மையிலேயே கேட்கிறேன்"

"அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை."

"அப்படியா? யாருடைய உத்தரவு இது?"

"அதை நான் எப்படிச் சொல்லமுடியும்? ஒருவேளை உலகை ஆளும் பேரரசியின் ஆணையாகக்கூட இருக்கலாம்."

ஏய்டன் மௌனமானான்.

"நான் ராஜதுரோகமாக பேசியிருந்தால் நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும்"

ஏய்டன் பலவீனமாகப் புன்னகை செய்தான்.

"நீங்கள் நாளைக்காலை செங்கல்பட்டுக்குச் சென்றால் பஞ்சத்தை முழுமையாகப் பார்க்கலாம். இங்கிருந்து போகும் எல்லாப் பாதைகளும் பஞ்சத்தின் நடன அரங்குகள்தான். ஆனால் நீங்கள் நாளை மாலைக்குள் வரமுடியாது."

"இப்போதே கிளம்புகிறேன். நாளை மதியம் கிளம்பினால்கூட இரவுக்குள் வந்துவிடுவேன்"

"நான் என்ன செய்யவேண்டும்?"

"உங்கள் ஊழியர்களில் ஒருவரை என்னுடன் அனுப்ப வேண்டும்"

"என்னுடைய இந்திய ஊழியர்களில் ஒருவரை உங்களுடன் அனுப்புவதில் எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால்-"

"சொல்லுங்கள்"

"இல்லை. நீங்கள் அவருக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டால் போதும். அவர் நலமாக திரும்பிவர வேண்டும்."

"கண்டிப்பாக."

பிரண்ணன் எழுந்து உள்ளே சென்றார். மரியான் உடனே கையில் ஒரு கோலுடன் கிளம்பிச்சென்றான்.

"தோப்பைக் கடந்து செல்லவேண்டும். தோப்பில் பாம்புகள் அதிகம்" என்றார் பிரண்ணன் "மரியான் டீ போட தண்ணீர் வைத்தான். நான் உங்களுக்கும் டீ போடலா மில்லையா?"

"கண்டிப்பாக"

பிரண்ணன் டீ போட ஆரம்பித்தார். அங்கிருந்தே பேசினார். "இந்த தேசம் இதன் பிரம்மாண்டமான அளவு காரணமாகவே விசித்திரமான ஓர் இயங்குமுறையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. வெளியே இருந்து வந்த நமக்குத்தான் இது ஒரு பிரம்மாண்டமான அமைப்பு. இங்கிருப்பவர்களுக்கு ஒருபோதும் இது ஒட்டுமொத்தமாகக் கண்ணில்படுவதேயில்லை. இவர்கள் தங்கள் நிலப்பகுதி சார்ந்து, வாழ்விடம்சார்ந்து, மொழிசார்ந்து, இனம்சார்ந்து, சாதிசார்ந்து பல்லாயிரக்கணக்கான சிறிய குழுக்களாகப் பிரிந்து வாழ்கிறார்கள். குழுவுக்குள் குழுக்கள். அந்தக்குழுக்களுக்குள் மேலும் சிறு குழுக்கள். ஒருவன் தான் வாழும் சிறு குழுவுக்கு அப்பால் எதையுமே தெரிந்துகொள்வதில்லை. தெரிந்து கொள்ள ஆர்வமிருப்பதுமில்லை. நூற்றாண்டுகளாக அப்படி எதையும் தெரிந்துகொள்ளாமல் வாழ்ந்ததன் காரணமாகவே அவர்களுக்கு வெளிவிஷயங்களைப் புரிந்துகொள்ளும் திராணி இருப்பதுமில்லை"

"ஆமாம்" என்றான் ஏய்டன். "மேஜர் கார்டான் அதைச் சொல்லிக் கேட்டிருந்தேன். இந்த மண்ணின் சிறிய ஆட்சியாளர்களில் நூறுபேர் தங்கள் வட்டத்துக்கு வெளியே பார்த்திருந்தால்கூட இதை ஐரோப்பியர் வென்றிருக்க முடியாது என்று."

"ஆமாம். ஐரோப்பியர்களான நம்மைச் சிலசமயம் மொழி ஒன்றுபடுத்துகிறது. சிலசமயம் இனம் ஒன்றுபடுத்துகிறது. இவர்களை எதுவுமே ஒன்றுபடுத்துவதில்லை. சாதிகூட. இங்குள்ள தீண்டப்படாத மக்களிடம் பேசிப்பாருங்கள். அவர்களுள்ளேயே அவ்வளவு பேதங்கள். ஆச்சரியம்தான்"

கொதிக்கும் நீரை மெல்ல மரக்கிடுக்கியால் எடுத்து கீழே வைத்தார் பிரண்ணன் "இந்தக்குழுக்களை அள்ளி ஒருகூடையில் போட்டு முகலாயர் ஆண்டனர். இப்போது நாம் ஆள்கிறோம்"

"உங்களுக்கு கற்கண்டு போடலாம்தானே?" என்றார் பிரண்ணன்.

"ஆமாம்" என்று ஏய்டன் சொன்னான்.

"தன் வால் தீப்பற்றி எரியும்போது தூங்கும் மலைப்பாம்பு என்று இந்நாட்டை வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு வர்ணித்திருக்கிறார். உண்மைதான்" என்றார் பிரண்ணன். "மர அடுக்கில் இருந்து கண்ணாடிப்புட்டியை எடுத்தபடி "பொதுவாக ஊர்வனவற்றுக்கு ஆயுள் மிக அதிகம். ஏனென்றால் அவற்றின் உடலியக்கம் மிக மிக மெதுவானது. அவை எப்போதாவதுதான் உண்ணும். மாதக்கணக்கில் அசையாமலிருக்கும். இந்த தேசமும் ஒரு ஊரும்வகை உயிரினம். இப்படியே அசையாமல் பல்லாயிரம் வருடங்களாக இது கிடந்துகொண்டிருக்கிறது" பிரண்ணன் சொன்னார்.

இருகைகளிலும் கோப்பையுடன் வந்து அமர்ந்தபடி பிரண்ணன் சொன்னார் "ஊர்வனவற்றுக்கு வலியுணரும் சக்தி மிகக் குறைவு. முதலைகளை நான் கூர்ந்து கவனித்திருக்கிறேன். இங்கே உப்புநீர் முதலைகள் நிறைய உண்டு. அவை பசிக்கும்போது தன்னுடைய குட்டிகளையே பிடித்துத் தின்றுவிடும். ஏன், வாயருகே இருந்தால் தன் சொந்தக் கையையே கடித்துத்தின்னும். எடுத்துக்கொள்ளுங்கள்"

அவர் சொல்லவருவதை ஏய்டன் புரிந்துகொண்டான். பிரண்ணன் கனமாக அமர்ந்துகொண்டார் "என் மீட்பரே" என்றார்.

பிரண்ணன் ஒரு மிடறு குடித்தபின் "இந்த மாபெரும் மானுட அழிவு இங்கே நடக்கும்போது இந்த நாட்டின் கோடிக்கணக்கான மக்கள் ஏன் எந்த எதிர்வினையும் ஆற்றவில்லை என்று நான் யோசித்திருக்கிறேன். ஆயிரத்து

எழுநூறுகளின் மாபெரும் பஞ்சத்தில் இங்கே ஒரு எதிர்ப்புக்குரல்கூட எழவில்லை. பின்பு பலவகையான இந்துக்களிடம் பேசும்போது அது ஏன் என்று புரிந்து கொண்டேன். அவர்களுக்கு எதுவுமே தெரியாது. மதராஸில் வாழும் ஒருவனுக்குத் தக்காணத்தைப்பற்றி எந்த பிரக்ஞையும் இல்லை. ஏன் அவனுக்கு மதுரைகூட வெறும் வார்த்தைதான். ஏன் செங்கல்பட்டைப்பற்றி அவன் ஓரிரு சொற்கள்தான் கேள்விப்பட்டிருப்பான். விசாரித்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். பஞ்சத்தால் இறக்காதவர்களுக்கு இங்கே பஞ்சத்தைப்பற்றி எதுவுமே தெரியாது. அரிசிவிலை அதிகரித்திருக்கிறது என்றுமட்டும்தான் தெரியும். தன் தெருவுக்கு அப்பால் பிரக்ஞை நீண்டுசெல்லும் மக்களே இங்கே இல்லை. முதலைகள். தங்கள் தேங்கிய சேற்றுக்குட்டையில் கண்மூடி காலத்தை மறந்து அசையாமல் கிடக்கிறார்கள். வலியறியாத உயிர்கள்.''

"ஆனால் வங்காளத்தில் இந்துக்களின் எதிர்ப்பு இருக்கிறது'' என்றான் ஏய்டன். "பல இடங்களில் அவர்கள் கூட்டம் கூட்டமாக நம் பண்டகசாலைகளைக் கொள்ளையிட்டு தானியங்களை அள்ளி ஏழைகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். சென்ற மூன்றுமாதங்களில் மட்டும் நாற்பதுக்கும் மேற்பட்ட கொள்ளைகள் நிகழ்ந்திருக்கின்றன. அக்கொள்ளைகளைச் செய்தவர்கள் இந்துத்துறவிகளின் குழுக்கள் என்று சொல்கிறார்கள்''

"இங்கும் சிலர் இருக்கிறார்கள்'' என்றார் பிரண்ணன். "ஆனால் அவர்களை நம்முடைய ஆங்கிலக் கல்விதான் உருவாக்கியது. நம்முடைய நாளிதழ்கள் வழியாகத்தான் அவர்கள் இந்த நாட்டைப்பற்றிய சித்திரத்தைப் பெறுகிறார்கள். இன்று இந்த மதராஸ் மாகாணத்தில் பிரிட்டிஷ் அரசுக்கு மிகப்பெரிய சவாலாக இருப்பது இங்கே 'மதராஸ் மெயில்' பத்திரிகைதான். அதன் தலையங்கங்கள்தான் இங்கே ஒரு பிரம்மாண்டமான பஞ்சம் நிகழ்ந்து கொண்டிருப்பதை, இங்கே மக்கள் லட்சக்கணக்கில் செத்துக் கொண்டிருப்பதை உலகுக்கு அறிவிக்கின்றன.''

"ஆம், ஆனால் நான் அதை அதிகமும் வாசிப்பதில்லை" என்றான் ஏய்டன்.

"ஆவேசமான தலையங்கங்கள். நிருபர்களை நேரில் பஞ்சப்பகுதிகளுக்கு அனுப்பி விரிவான சித்திரங்களை எழுதுகிறார்கள். ஆனால் அவர்களின் குரலை இந்த நாடு கவனிப்பதில்லை. இந்த நாட்டிடம் பேச அவர்களிடம் மொழியே இல்லை. அவர்கள் பேசுவது லண்டனை நோக்கி. அங்குள்ள பிரிட்டிஷ் மனசாட்சியை நோக்கி மன்றாடுவதை மட்டும்தான் அவர்களின் கட்டுரைகளும் செய்கின்றன. அது நானும் நீங்களும் செய்வதுதான்."

"அவர்கள் ஏன் ஒடுக்கப்படவில்லை?" என்றான் ஏய்டன்.

"ஏன் நாங்கள் இன்னும் ஒடுக்கப்படவில்லை? அதே காரணம்தான். அவர்களும் நாங்களும் இங்கே பஞ்சத்தில் சேவை செய்யும் எல்லாரும் சேர்ந்து ஒரே தரப்புதான். மிகமிகச்சிறிய தரப்பு. கப்பலைத் தள்ளிக்கொண்டு செல்ல முயலும் கடற்பறவை போன்றவர்கள் நாங்கள். கப்பலுக்கு அதன் வலிமை தெரியும், திசையும் தெரியும்."

கோப்பைகளைக் கொண்டுசென்று மரத்தொட்டியில் போட்டுவிட்டு பிரண்ணன் திரும்பிவந்தார்.

"இந்தப் பஞ்ச விவரங்கள் லண்டனுக்குச் செல்கின்றனவா?" என்றான் ஏய்டன்.

"ஆம். மெயிலின் தலையங்கங்கள் உலகமெங்கும் அச்சாகின்றன. அதைத் தூக்கிக்காட்டி பாராளுமன்றக் கீழ்சபையில் உறுப்பினர்கள் கூச்சலிடுகிறார்கள். அதனாலென்ன பயன்?" ஏய்டனின் முகத்தைப் பார்த்துவிட்டு பிரண்ணன் புன்னகை செய்தார் "நான் உங்களைச் சோர்வுறச்செய்ய விரும்பவில்லை. நீங்கள் செய்யவிருப்பது மிகமிகத் தேவையானது. முற்றிலும் ஆத்மார்த்தமானது. கிறிஸ்துவுக்கு நெருக்கமானது"

"நன்றி" என்றான் ஏய்டன்.

"நீங்கள் போகும்போது உலர்ந்த உணவு எடுத்துப் போகவேண்டும். திரும்பிவரும் வரைக்கும் தேவையான உணவும். குடிநீரும் இருக்க வேண்டும். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். பஞ்சத்தைப் பார்வையிடச் செல்பவர்களுக்கு இது ஒரு விதி போல." திட்டவட்டமான முகபாவனையுடன் பிரண்ணன் சொன்னார் "ஒருபோதும் உங்கள் சொந்த உணவைத் தானம் செய்யாதீர்கள். பசித்து சாகும் ஒரு குழந்தையைக் கண்டால்கூட அதைக் கொடுக்காதீர்கள்."

"எனக்குப் புரியவில்லை." என்றான் ஏய்டன். அவன் மனம் படபடத்தது.

"ஏனென்றால் அது ஒரு அப்பட்டமான யதார்த்தம். இந்தப்பஞ்சம் ஒரு காட்டுத்தீ போல. மலைமலையாக உணவைக்கொட்டினால்மட்டும்தான் அணையும். உங்கள் கையில் உள்ள கொஞ்சம் உணவை இந்த தீயில் போடுவதனால் எந்தப்பயனும் இல்லை. அதைப்பெறுபவர் எப்படியும் உயிர்பிழைக்கப் போவதில்லை. ஆனால், நீங்கள் உயிரோடிருக்க வேண்டும். உயிரோடிருந்தால் நீங்கள் நிறைய செயலாற்ற முடியும். பல நூறு உயிர்களைக் காப்பாற்ற முடியும்."

ஏய்டன் பெருமூச்சு விட்டான்.

"பஞ்சத்தைப் பார்க்கச் செல்வதில் உள்ள மிகப்பெரிய சவாலே இதுதான். அது ஒரு பிரம்மாண்டமான சாத்தான். உங்கள் கண்களுக்குள் ஊடுருவி ஆன்மாவுடன் பேச அதனால் முடியும். பெரும் தீயைப் பார்த்திருப்பீர்கள். தீ உங்களை இழுப்பதைக் கவனித்திருக்கிறீர்களா? 'வா வா' என்று அது அழைக்கும். கொஞ்சநேரம் தீயை உற்றுப்பார்த்தால் நீங்கள் அதை நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிடுவீர்கள்."

"ஆமாம்" என்றான் ஏய்டன்.

"பஞ்சமும் அதைப்போலத்தான். அது நம் சிந்தனைகளை உருகி வழியச்செய்யும். நம் தர்க்கபுத்தியை அழிக்கும். நம்மை அழச்செய்யும். வாழ்க்கையின் எல்லா அடிப்படைகளையும் நிராகரிக்க வைக்கும். சாவதே மேல் என்று நம்பச்செய்யும். ஆம், நம்மை வெறும் முட்டாள்களாக்கிக் கனவில் நடந்து சென்று

அதன் வாயில் விழச்செய்யும். எங்கள் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த சேவைப் பணியாளர்களில் எனக்குத் தெரிந்து இருபது பேராவது அப்படிப் பஞ்சத்திற்குத் தங்களைப் பலிகொடுத் திருக்கிறார்கள். பஞ்சம் என்பது சாத்தானின் அரங்கம். அதிலிருந்து உங்களைநோக்கி வரும் ஒவ்வொரு சிந்தனையும் சாத்தானால் உருவாக்கப்படுபவை. ஏசுகிறிஸ்துவை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். இங்கிருந்து கிளம்பும்போது கிறிஸ்து உங்களுக்குள் உருவாக்கும் இந்த நல்ல சிந்தனைகளே உண்மையானவை. இவற்றைச் சிலுவைபோலப் பற்றிக் கொள்ளுங்கள். இந்தச் சிந்தனை களிலேயே நின்றீர்கள் என்றால் நீங்கள் மீண்டு வரமுடியும்."

அவர் என்ன சொல்கிறார் என்று ஏய்டனுக்குப் புரியவில்லை. ஆனால் அவரது மனம் பஞ்சத்தில் இருந்து தீவிரமான எதையோ அறிந்திருக்கிறது என்று மட்டும் புரிந்தது. மறுபடியும் பிரண்ணன் மெல்லிய நீர் ஒலியுடன் டீயை வெண்களிமண் கோப்பைகளில் விட்டார். டீ ஆவி எழுந்தபோது மணமாக இருந்தது. அவர் கோப்பைகளைக் கொண்டு வந்து அவர்கள் முன்வைத்தார். "உங்கள் டீ"

"நன்றி" என ஏய்டன் எடுத்துக்கொண்டான். அவர்கள் மௌனமாகக் குடித்தார்கள்.

வெளியே மரியான் வந்து "சாமீ" என்றான். வெளியே இன்னொருவன் நின்றிருந்தான். கரிய குள்ளமான மனிதன். ஆப்ரிக்கனைப்போலச் சுருட்டையான முடியும், பெரிய வெண்ணிற முன்பற்கள் நடுவே இடைவெளியும், வலுவான தாடைகளும் கொண்டிருந்தான். தெளிவான கண்ணாடிக் கண்கள். மிஷனரிகளால் தைக்கப்படும் சட்டை அணிந் திருந்தான். பெரிய கைகளும், காலர் இல்லாத வட்டக் கழுத்துக்குக் கீழே நாடா முடிச்சும் கொண்ட தொள தொளப்பான சட்டை. தூய்மை செய்யப்படாத பருத்தியாலான துணி வைக்கோல் நிறமாக இருந்தது.

"வா ஜோசப்" என்றார் பிரண்ணன். "ஜோசப் செங்கல்பட்டில் நிறைய வேலைசெய்திருக்கிறான். இந்த

நிலப்பகுதிகளை நன்றாக அறிந்தவன். உச்சரிப்பை நீங்கள் மன்னிக்கமுடியுமென்றால் ஆங்கிலத்தில் அவனிடம் உரையாடலாம். நான் செல்லும் பயணங்களில் இவன் என்னுடைய துணை"

"உங்கள் சபையா?" என்றான் ஏய்டன்.

"எப்படி? கோமுட்டிகள் உள்ளேயே விடமாட்டார்கள். அதனால்தான் பின்பக்கத் தோப்பு வழியாக அழைத்துவரச் சொன்னேன். இவனை நீங்கள் வண்டியில் ஏற்றிக்கொள்ள முடியும் அல்லவா?"

"கண்டிப்பாக"

"உங்களிடம் ஆயுதங்களும் இருக்கும் என நினைக்கிறேன்"

"வழியில் வழிப்பறிகள் இருக்குமா?"

"பஞ்சகாலத்தில் எல்லாம்தான் இருக்கும்."என்றார் பிரண்ணன் "உங்கள் வண்டிக்காரன் பெயர் என்ன?"

"துரைசாமி"

"ஓ." என்றார் பிரண்ணன் "அப்படியென்றால் அவன் இவனை வண்டியில் ஏற்றிக்கொள்ளமாட்டான்"

ஏய்டன் "நான் உத்தரவிடுகிறேன்"

"நீங்கள் உத்தரவிட முடியாது" என்று பிரண்ணன் திட்டவட்டமான குரலில் சொன்னார். அவர் கண்கள் அவனைப்பார்த்தன, அவற்றை எதிர்கொள்ள அவனால் முடியவில்லை.

ஏய்டன் தணிந்தான். 'அது உண்மை' என அவனுக்குத் தெரியும்.

"ஜோசப் நன்றாகவே வண்டியை ஓட்டுவான். அவனைக் கூட்டிச்செல்லுங்கள்." என்றார் ஃபாதர் பிரண்ணன்.

கிளம்பும்போது ஃபாதர் பிரண்ணனின் வேலைக்காரன் ஒரு பழைய ஆவணப்பெட்டியைக் கொண்டு வந்து ஏய்டன் காலடியில் வைத்தான். தேக்குமரத்தாலான கனமான பெட்டி. சிறிய நான்கு கால்களும் வெண்கல முனைகளும் சித்திரக் கைப்பிடிகளும் கொண்டது.

"இது என்ன?" என்றான் ஏய்டன்.

"உலர்ந்த ரொட்டி, நாட்டுச் சர்க்கரை" என்றான் மரியான்.

"ஏன் இதில்?" என்று ஏய்டன் கேட்டான்.

ஜோசப், "உணவை யாரும் ஊகிக்க முடியாமல் மறைத்துத்தான் இங்கெல்லாம் கொண்டுபோகமுடியும். நாங்கள் பைபிளின் அட்டைக்குள் உலர்ந்த ரொட்டியை வைத்துக்கொண்டு போவோம்." என்றான்.

ஏய்டன் புரியாதவனாகப் பார்த்து நின்றான். மரியான் தோல்பை நிறைய தண்ணீரைக் கொண்டு வந்து கட்டினான். அதன்மீது ஒரு அலங்காரத்துணியைப் போட்டு மூடினான்.

ஜோசப் "சர், கிளம்பலாமா?" என்றான். ஏய்டன் கைகாட்டியது "ஹெ ஹெ" என கடிவாளங்களைத் தழைத்து இழுத்தான். குதிரைகள் 'சடசட'வென குளம்பொலிக்க தாவி கல்பாவப்பட்ட சாலைக்கு வந்தன. சக்கரங்கள் சீராக உருள ஆரம்பித்ததும் கூடவே எண்ணங்களும் இயல்பாக ஓடத் தொடங்கின.

இருபக்கமும் தாழ்ந்த ஓலைக்கூரைகள் கொண்ட வீடுகள் வந்துகொண்டே இருந்தன. மண்ணைக் குழைத்துக்கட்டி மேலே சுண்ணாம்பு பூசப்பட்டவை. படிகளுக்குக் கருங்கற்கள் போட்டிருந்தார்கள். கருகிய ஓலைக்கூரை சிலசமயம் காய்ந்த புல்மண்டிய குன்றுபோல சிலசமயம் கரும்பாறைபோல சிலசம யானைபோல சிலசமயம் குவிக்கப்பட்ட சாணிபோலத் தோன்றிக் கொண்டே இருந்தது.

இன்னொரு தெரு முழுக்க வளைந்த ஓடுகள் வேய்ந்த தாழ்ந்த கூரைகொண்ட வீடுகள். லினன் நூலால் ஆன பொய்முடிச்சுருள் போன்ற சிவந்த கூரை. கூரைக்கும் வராந்தா விளிம்புக்கும் இடையே மூன்றடிகூட இடைவெளி இல்லை. வராந்தாக்கள் சாணிமெழுகப்பட்டுச் சேற்றுமேடுகள் போல இருந்தன. இருண்டு, குளிர்ந்து. அதன்மீது முழங்கால்வரை குட்டைவேட்டி மட்டும் அணிந்த, குடுமி வைத்த, பாதித்தாடி பரவிய, ஒட்டிய கன்னம் கொண்ட மெலிந்த மனிதர்கள்

அமர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். குதிரைக் குளம்படிச் சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்து மௌன மானார்கள். கண்கள் மட்டும் கூடவே வந்தன. இவர்கள் மெல்லும் ஏதோ இலையும் கொட்டையும் சேர்ந்து வாயை புண்ணைப்போல ஆக்கிவிட்டிருக்கிறது. ரத்தத்துக்குள் எலும்புகள் போல பற்கள். இவர்களின் கண்கள் தாவரங்களை மட்டும் உண்ணும் விலங்குகளுக்குரியவை. இவர்கள் அசைவுகளில் எப்போதும் ஒரு மந்தத்தன்மை. காற்று வேகமிழக்கையில் விசையை இழந்து அசையும் காற்றாடி யந்திரங்களைப்போல.

ஒவ்வொரு முறையும் ஏய்டன் மனதில் எழும் எண்ணம் அப்போதும் வந்தது, 'இவர்களுக்கெல்லாம் வேலை என எதுவும் இல்லையா? எப்படி நாள் முழுக்க சும்மாவே இருக்கிறார்கள்? சும்மா இருப்பதைப் பற்றி எந்த உணர்ச்சியும் இல்லை. மிக இயல்பாக மிகச்சாதாரணமாக இந்த மாறாத தன்மையில் மிதந்து கிடக்கிறார்கள். சிற்றலைகளில் ஆடியபடி ஏரிப்பரப்பில் மிதந்துகிடக்கும் மரக்கட்டை போல காலத்தில் இருக்கிறார்கள்'.

எப்போதுமே ஏய்டன் நகரை ஒரு ஒட்டுமொத்த திரளாகவே உணர்வான். ஒரு பெரும் குப்பைக் குவியல்போல. ஆனால், கொஞ்ச நேரத்தில் அதற்குள் பலவிதமான வடிவங்கள் தெரிய ஆரம்பிக்கும். ஒரு பிராமணத்தெருவுக்குள் சென்ற போதுதான் அந்த வேறுபாடு முதலில் உறைத்தது. வீடுகளின் அடித்தளங்கள் உயரமான கருங்கல்லால் கட்டப்பட்டிருந்தன. சுவர்களில் காவி நிறமான பட்டைகள் செங்குத்தாக நின்றன. வரிசையாக மேலாடைகளை அல்லது அரைப்பட்டைகளை அவற்றில் தொங்கவிட்டதுபோல. முற்றங்களில் வெண்ணிற மாவால் வரையப்பட்ட சிக்கலான கோடுகளாலான அலங்காரவடிவங்கள். திண்ணைகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவர்கள் கண்களைச் சுருக்கி வண்டியைப் பார்த்தார்கள். அவர்கள் நெற்றிகளின் மதச்சின்னங்கள் மட்டும் (இருளில்) தெளிவாகத் தெரிந்தன. அந்த மதச்சின்னங்கள்தான் உண்மையில் இங்கே வாழ்கின்றன. இந்த உடல்கள் அவற்றின்

வாகனங்கள். இவை பிறந்து பிறந்து வந்து அவற்றை ஏந்திக் கொண்டுச் செல்கின்றன.

அடுத்த தெரு எண்ணெய்க்காரர்களுக்குரியது என்று புரிந்தது. பல திண்ணைகளின் வெண்கலப் பானைகளில் எண்ணையுடன் ஆட்கள் அமர்ந்திருந்தார்கள். வீடுகளுக்குப் பக்கவாட்டில் எண்ணெய்ச்செக்குகள் ஓடிக்கொண்டிருந்தன கழுத்தில் கட்டப்பட்ட பையில் இருந்து புளியங் கொட்டை களை அள்ளி மென்றபடி குட்டை எருதுகள் மெதுவாகச் சுற்றிவந்து நடக்கும், கழுத்துமணி ஓசை. ஒரு நுகத்தின்மீது நான்கு வயதான பையன் அமர்ந்திருந்தான். அவனுடைய திகிலான கண்கள் வண்டியை வந்து தொட்டு உடனே மீண்டன.

'சாலைகளில் எங்கும் பெண்களே இல்லை' என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான். இவர்களின் பெண்கள் அதிகாலை இருளில் குளிக்க நதிக்குச் செல்கிறார்கள். அதன்பின் பகல் முழுக்க வெளிவருவதே இல்லை. அவர்கள் வெளியே செல்லவும் வரவும் வீடுகளுக்குப் பின்பக்கம் வழியாக இடுங்கிய வழிகள் உள்ளன. அந்த வழியாகத்தான் வீடுகளின் சாக்கடைகளும் வழிந்தோடிச் செல்கின்றன. வீடுகள் அந்தப்பெண்களையும் கழிவுகளாகத்தான் உள்ளே தேக்கி வைத்திருக்கின்றன. காலையில் அவர்களை வெளியே விடுவதுகூட ஒருவகை கழிவகற்றல்தான். இங்கே பெண்க ளெல்லாமே இரண்டு தோற்றங்கள் கொண்டவர்கள். மிரண்ட கண்களும் குழந்தைக் கன்னங்களும் குறுகிய உடலும் கொண்ட சிறுமிகள். கன்ன எலும்புகள் புடைத்த, தோள்கள் வற்றிய, தொங்கிய முலைகள் கொண்ட கிழவிகள்.

"ஜோசப், இங்கே பெண்களே ஏன் வெளியே தென்படுவ தில்லை?" முன்னால் இருந்த சன்னலின் சிறு கதவைத் திறந்து ஏய்டன் கேட்டான்.

"அவர்களும் எங்களைப் போலவே தீண்டப்படாதவர்கள் சர்" திரும்பாமலேயே ஜோசப் உரக்க பதில் சொன்னான்.

"உண்மையாகவா" உடனே அவன் வேடிக்கையாகச் சொல்கிறான் என்று புரிந்தது. புன்னகையுடன் "ஓ?" என்றான் ஏய்டன்.

"ஆம், நாங்கள் வெளியே நிறுத்தப்படுகிறோம். அவர்கள் உள்ளே அடைக்கப்படுகிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம்"

'இந்தமனிதன் அசாதாரணமானவன்' என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான். 'இங்கே நான் சந்திப்பவர்கள் எல்லாருமே ஒரு செவ்வியல் நாடகத்தின் மகத்தான கதாபாத்திரங்கள் போலிருக்கிறார்கள்'.

"எங்களுக்காவது வெயிலும் காற்றும் கிடைக்கிறது. அவர்களுக்கு அதுவுமில்லை. அவர்கள் வெளியே போக அனுமதியே இல்லை. இருட்டறையில் பிறந்து அங்கேயே சாகவேண்டும். எல்லாரும் உண்டதுபோக எஞ்சியதை உண்ணவேண்டும். இரவும்பகலும் பசியுடன் சமைத்துக் கொண்டே இருக்கவேண்டும். தங்களை அடிமைப்படுத்தப் போகும் பிள்ளைகளைப் பெற்று மார்பின் ரத்தத்தைக் கொடுத்து வளர்க்கவேண்டும்"

"துயரமானது" என்றான் ஏய்டன்.

சுண்ணாம்புக்காரத் தெருவைக் கடந்து சென்றபோது ஏய்டன் கைக்குட்டையால் மூக்கை மூடிக்கொண்டான். வறுக்கப்படும் கிளிஞ்சல்களின் வெம்மைநெடி தெருவெங்கும் நிறைந்திருந்தது. இது ஒரு முக்கியமான தொழில் இங்கே. இந்தச் சுண்ணாம்பில் பெரும்பகுதி இந்த மக்களால் வாயில் போட்டு குதப்பி உமிழப்படுகிறது என்று முதன்முதலாக மாக் சொன்னபோது ஏய்டன் "உளறாதே" என்று கத்தியிருக்கிறான். இந்தச் சின்னத் தொழிலும் அதற்கான மக்களால்தான் செய்யப் படுகிறது. இங்கே ஒவ்வொன்றுக்கும் சாதிகள் இருக்கின்றன.

ஏய்டன் "இந்த சுண்ணாம்புக்காரர்கள் என்ன சாதி?" என்றான்.

"சர், இவர்கள் பரவர்கள்"

"இவர்கள் உயர்சாதியா?"

"சர், இங்கே எல்லாருமே யாருக்காவது உயர்சாதிதான். எல்லாருமே யாருக்காவது தீண்டப்படாத சாதியும்கூட"

ஏய்டன் சிரித்துவிட்டான். 'இந்த ஆசாமியிடம் மிக நுட்பமாக மட்டுமே பேசமுடியும்' என்று நினைத்துக் கொண்டான். "இந்தப் பரவர்கள் பறையர்களைப் போலவா?"

"ஒலியில்கூட அந்த ஒற்றுமை வந்துவிடக்கூடாதே என்று அவர்கள் எப்போதும் சுண்ணாம்புப்பரவர்கள் என்றுதான் சொல்வார்கள். எங்களைவிட ஏழுஎட்டுப் படி மேல். பிராமணர்களை விடப் பத்துப் பதினைந்து படி கீழே."

"ஜோசப், இங்கே மொத்தம் எத்தனை படிகள் இருக்கின்றன?"

"ஆலிவர் ஸ்மிட் என்று ஒரு பழைய செங்கல்பட்டு ஆட்சியாளர் கணக்கெடுக்க ஆரம்பித்தார் சார்"

"பிறகு?"

"அவரை லண்டனுக்கு அனுப்பி விட்டார்கள்."

"ஏன்?"

"நாலைந்து வருடத்தில் உள்ளாடைகளைத் தொப்பி மாதிரி போட்டுக்கொள்ள ஆரம்பித்துவிட்டார். கடைசியில் உடை ஏதும் அணியாமல் தொப்பியால் இடுப்பை மறைத்துக் கொண்டு அலுவலகம் வந்தபோது கவர்னர் நடவடிக்கை எடுத்தார்"

ஏய்டன் தன்னை மறந்து சிரித்துவிட்டான்.

"இங்கே ஒவ்வொரு படியிலும் பல படிகள் உள்ளன சார். படிகளைக் கணக்கிட்டால் சிலசமயம் மொத்த மக்கள் தொகையை விடவும் அதிகமாக வருகிறது, இன்றுவரை ஆங்கில ஆட்சியாளர்களுக்கு அந்த மர்மம் பிடிகிடைக்க வில்லை"

ஏய்டன் சிரித்துக்கொண்டு "நீ இங்கே சர்ச்சில் என்ன வேலை பார்க்கிறாய்?" என்றான்.

"கிறித்தவனாக ".

"என்ன சொல்கிறாய்?"

"சர், உண்மையான கிறித்தவனாக இருப்பது ஒரு கடமை. ஒரு பெரிய வேலை. அதைச் செய்து கொண்டிருக்கிறேன்"

"கிறிஸ்துவுக்கு உன்னைப் பிடிக்கும்"

"கண்டிப்பாக. சர், அவரும் என்னைப்போல இதற்கு முயற்சிசெய்து கொண்டிருந்தவர்தான். நாங்கள் சக ஊழியர்கள்"

ஏய்டன் கொஞ்ச நேரம் பேசாமல் அமர்ந்துவிட்டான். என்றாவது 'இவனிடம் என் கவிதைகளைக் கொடுத்து வாசிக்கச் சொல்ல வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான்.

வண்டி நின்றது. ஏய்டன் எட்டிப் பார்த்தான். வழியில் ஒரு வெள்ளை இளைஞன் நின்றுகொண்டிருந்தான். முன்வழுக்கை ஆரம்பித்திருந்த நெற்றியில் வைக்கோல் நிறமான சிகை காற்றிலாடியது. காக்கித் துணியாலான அரைக்கால்சட்டையும் வெண்ணிறமான சட்டையும் அணிந்திருந்தான். கழுத்துவரை பித்தான் போடப்பட்ட முழுக்கைச் சட்டை. கையில் ஒரு பெரிய துணிப்பை.

"மன்னிக்க வேண்டும், நான் அவசரமாக செங்கல்பட்டுக்குப் போகவேண்டும். என்னைக் கூட்டிச்செல்ல முடியுமா?" என்று சற்று திக்கிய குரலில் கேட்டான். "நான் நீண்டநேரமாக இங்கே நிற்கிறேன். நான் நம்பி வந்த வண்டிக்காரன் என்னை ஏமாற்றிவிட்டான்."

ஏய்டன் "நான் அரசாங்க வேலையாகப் போகிறேன்" என்றான்.

"தெரிகிறது. எனக்கு வேறுவழி இல்லை. முடிந்தவரை என்னைக் கொண்டு செல்லுங்கள். நீங்கள் சொல்லும் இடத்தில் இறங்கிக்கொள்கிறேன். எனக்கான பொறுப்பு எதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை"

ஏய்டன் சிலகணங்கள் அவனையே பார்த்தான். கல்லூரியில் இருந்து குழப்பமும் தயக்கமுமாக நாகரீகத்துக்குள் காலெடுத்து வைக்கும் இளைஞன் என்று தெரிந்தது. எனக்கான நாற்காலி எது என்பதை மட்டுமே தன் வாழ்க்கைக் கேள்வியாகக் கொண்டவன் ஏய்டன் தலையசைத்து "ஏறிக்கொள்" என்றான்.

இளைஞன் ஏறி அவனருகே அமர்ந்துகொண்டான். "நான் இரவுக்குள் செங்கல்பட்டில் இருந்தாகவேண்டும்."

"ஏன்?"

"என் தாய்வழி மாமா அங்கே இறந்து கொண்டிருக் கிறார்"

"இறக்கிறாரா?"

"ஒரு வேளை இறந்திருக்கலாம். நான் லண்டனில் இருந்து வந்து மதராசப்பட்டினத்தில் இறங்கியதுமே கேட்டசெய்தி இதுதான். என் அம்மா அவரை நான் சென்று பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். நான் கல்கத்தா போகாமல் மதராசப் பட்டினம் வந்ததே இதற்காகத்தான்." அவன் புன்னகைத்து "மன்னிக்கவேண்டும். என் பெயர் ஆதம் ஆண்ட்ரூ. நான் பிரிட்டிஷ் கணக்கியல்துறை ஊழியனாவதற்காக வந்திருக்கிறேன்."

"ஆக்ஸ்போர்ட்?" என்றான் ஏய்டன் ஆர்வமில்லாமல்.

"ஆமாம். நீங்கள் ஆக்ஸ்போர்டா?"

"இல்லை" என்று ஏய்டன் சுருக்கமாகச் சொல்லிவிட்டு "சென்னைக்கு என்றைக்கு வந்தாய்?" என்றான்.

"மூன்றுநாள் ஆகிறது. நான் ஒரு ஸ்காட்."

"தெரிகிறது"

"நன்றி. நான் இங்கே வரவேண்டியதில்லை. இங்கே எனக்கு யாரையுமே தெரியாது. எங்களுடைய 'ஃப்ரீ சர்ச் ஆஃப் ஸ்காட்லாந்து' இங்கே சில வழிபாட்டிடங்களை அமைத் திருக்கிறது. இங்கே எழும்பூரில் ஒரு சர்ச் இருக்கிறது. செயிண்ட் ஆண்ட்ரூஸ் சர்ச்."

"தெரியும்"

"அங்கே உள்ள ஒரு பாதிரியாருக்கு எங்கள் சர்ச் நிர்வாகி கடிதம் கொடுத்து அனுப்பினார். நான் முன்னரே கடிதமும் அனுப்பியிருந்தேன். நான் கப்பலில் வந்திறங்கியதும் என்னை

வரவேற்க யாராவது வருவார்கள் என எதிர்பார்த்தேன். யாரும் வரவில்லை. சர்ச்சுக்குப் போனால் அங்கே நான் கடிதம்போட்ட பாதிரியார் இல்லை. அவர் ஒரு வருடம் முன்னரே வயிற்றுப் போக்கால் இறந்துபோய்விட்டார் என்றார்கள். அதன்பின் எல்லா ஏற்பாடுகளையும் நானே செய்ய வேண்டியிருந்தது. வண்டிக்கு ஏற்பாடு செய்ய இரண்டு நாட்களாகிவிட்டன."

"உங்கள் மாமாவுக்கே எழுதியிருக்கலாமே"

"அவர் எங்கள் குடும்பத்திடம் பூசலிட்டு எட்டு வருடம் முன்பு கிளம்பி பர்மா போனார். அங்கிருந்து இங்கே வந்தார். கடிதம் போடுவதில்லை. போனவருடம்தான் அவர் செங்கல்பட்டில் நீதிபதியாக இருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது. 'பார்த்துவிட்டு வா' என்று அம்மா சொன்னாள். வேறுவழி இல்லாமல் வந்தேன். வந்து விசாரித்ததுமே சொன்னார்கள் அவர் ஒரு மாதமாக மலேரியா காய்ச்சலால் அவதிப்படுவதாகவும் ஒரு வாரமாக நினைவே இல்லை என்றும். சாவதற்குள் அவரைப் பார்த்துவிடவேண்டும் என நினைக்கிறேன்."

"நல்ல விஷயம்தான்" என்றான் ஏய்டன் தொப்பியை எடுத்து தலையை நீவியபடி. "மலேரியா சாவதற்குத் தர்க்கபூர்வமான காரணத்தை அளிக்கிறது"

"நான் போனமாதமே கல்கத்தாவில் என் வேலையை ஒப்புக்கொண்டிருக்க வேண்டும்" என்று அவன் சொன்னான். கசப்பான நகைச்சுவைகளுக்கு அவன் இன்னும் பழகவில்லை. "என் கப்பல் ஒரு மாதம் தாமதமாகியது. அதைப் புரிந்து கொள்வார்கள். ஆனால், நான் மதராஸப்பட்டினத்தில் இறங்கியதை அவர்கள் ஒரு மீறலாகவே பார்ப்பார்கள்."

ஏய்டன் ஒன்றும் சொல்லவில்லை. வண்டியின் குலுங்கலுக்கு அவன் உடல் இயல்பாகவே தன்னை ஒத்திசைத்துக்கொண்டுவிட்டது. ஆனால் ஆண்ட்ரூவின் தோள் அவன்மேல் வந்து முட்டி முட்டிச் சென்றது. ஏனோ அந்த மனநிலையில் ஒரு புதியவன் கூடவே இருப்பதை ஏய்டன்

விரும்பவில்லை. ஆண்ட்ரூ இனிமையான எளிய இளைஞன் என்று தோன்றினாலும்கூட.

“இங்கே பெரும் பஞ்சம் நிலவுவதாகச் சொன்னார்கள். உலக வரலாற்றிலேயே பெரிய பஞ்சம் என்று கேள்விப் பட்டேன். அங்கே தொழிலாளர் தரப்புச் செய்தித்தாள்களில் நிறையச்செய்திகள்.”

“ஆமாம்.”

“இதுவரைக்கும் இரண்டுகோடி பேருக்கு மேல் செத்துவிட்டார்களாமே”

“மேலேயே இருக்கும்”

“பிரிட்டிஷ் தீவுகளில் உள்ள அனைவரும் ஒட்டு மொத்தமாக சாவதற்குச் சமம்”

ஏய்டன் தன் நெஞ்சில் ஓர் உதையை உணர்ந்தான். அப்படி ஓர் ஒப்பீட்டை அவன் நடத்தியதே இல்லை. இங்கே இந்த கரிய மக்கள் சாவதை வேறு ஒரு வகை இயற்கைப் பேரழிவாகவே பார்த்திருந்தான். அந்த அழிவு அவன் கருணையைத் தூண்டியிருக்கிறது. மனசாட்சியை வீறியிருக்கிறது. ஆவேசமாக அவர்களுக்காக வாதாடச் செய்திருக்கிறது. ஆனால், அவர்களைத் தன்னைப்போல தன் மக்களைப்போல உணர நேரிட்டதில்லை. அவர்கள் மௌனமாகச் செத்தழியும்போது ஒரு பெரும் பிரபஞ்ச நாடகமாகவே தெரிகிறது. இந்தோனேசியாவில் ஒரு தீவில் கூட்டம் கூட்டமாகக் கடற்பறவைகள் செத்து சதுப்பு நிலமெங்கும் குவிந்துகிடந்தன. வெண்பனி பெய்து கனத்ததுபோல ஒன்றுக்குமேல் ஒன்றாக விழுந்து பரவியிருந்தன. அப்போது வந்த அதே துயரம்தான். ‘இவர்கள் உயிர்கள், நான் மனிதன். நாங்கள் மனிதர்கள்’. இந்த வேறுபாடு எனக்குள் இருந்துகொண்டே இருந்தது.

‘இரண்டுகோடி வெள்ளையர்கள் செத்தழிவதைக் கற்பனையில்கூட நிகழ்த்திப்பார்க்க முடியவில்லை. எந்த வெள்ளையனுக்கும் அது சாத்தியம் இல்லை’ என்று தோன்றியது ‘அந்த ஒப்பீடு ஏன் தன் மனதில் இதுவரை

உருவாகவில்லை? சர்வ சாதாரணமாக இந்த இளைஞன் மனதில் அதுதான் முதலில் தோன்றுகிறது. இன்னொருவரின் துயரத்தைத் தன் துயரமாகக் காண்பதே ஆன்மீகத்தின் தொடக்கம் என்பார்கள். ஒரு கிறித்தவன் அப்படித்தான் சிந்திக்கவேண்டும். ஆனால் இந்தியாவில் இருக்கும் ஆயிரக்கணக்கான வெள்ளையர்களில் எத்தனைபேர் அப்படி ஒரு கணமேனும் உணர்ந்திருப்பார்கள்?'

'இவன் இயல்பான ஆன்மீக விரிவுகொண்ட இளைஞன்' என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான் 'இல்லை, இவன் இன்னும் உலகத்தைப்பார்க்க ஆரம்பிக்கவில்லை. போர்களையும், போருக்குப் பிந்தைய பெரும் பஞ்சங்களையும், கொள்ளை நோய்களையும் பார்க்கவில்லை. நிர்வாகக் கோட்பாடுகளில் மனம் ஊறவில்லை. நிர்வாகத்தின் அன்றாடச் சலிப்பில் மனம் இறுகவுமில்லை. நானும் இவனைப்போலப் புத்தம் புதியவனாக வந்திறங்கியிருந்தால் இப்படித்தான் நினைத்திருப்பேன்'.

அது உண்மை அல்ல என்று உடனே மனம் அறிந்தது. வேறு என்ன தெரிகிறதோ எந்த ஒரு வெள்ளை இளைஞனுக்கும் தெரிவது அவன் ஒருபடி மேலானவன் என்பதுதான். ஐந்துவயதுக்குள் அவனுக்குள் அது உறுதிப்பட்டுவிடுகிறது. அவன் ஆசீர்வதிக்கப்பட்ட இனம். வல்லமை வாய்ந்த இனம். உலகின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளப் பணிக்கப்பட்ட தேசத்தினன். அந்தக் கண் வழியாகவே எந்த இளைஞனும் பார்க்கிறான். இவனுடன் கப்பலில் வந்திறங்கிய இளைஞர்களில் மற்ற அத்தனைபேரும் இந்த எளிய மனிதர்களைக் கண்டு கருணையும், அருவெறுப்பும் ஒரே சமயம் கொள்வார்கள். இவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணும்போதே இவர்கள் செத்தழிவது இயல்பானதென்றும் நினைப்பார்கள். காலப்போக்கில் கருணை வரண்டு அருவெறுப்பு மட்டும் எஞ்சும். அருவெறுப்பு ஒரு நல்ல உணர்வு. இங்கே வாழ அது தேவை. கொசுவலைபோன்றது அது. மலேரியாவையும் மற்ற நோய்களை யும் அது அப்பால் நிறுத்துகிறது. பாதுகாக்கப்பட்ட ஒரு வாழ்விடத்தை உருவாக்கியளிக்கிறது.

'இந்த இளைஞன் மிகச் சிலநாட்களிலேயே பெரும் உடைவைச் சந்திக்கப் போகிறான்' என்று ஏய்டன் நினைத்துக் கொண்டான். 'இவனுக்கான சிலுவை எங்கோ தயாராகி விட்டது. கிறிஸ்துவின் சகபயணி'. ஏய்டன் புன்னகை புரிந்தான். 'வெளியே இன்னொரு சகபயணி. கிறிஸ்து ஒரு போதும் தனியாக இல்லை'.

நகர எல்லை தாண்டிச்சென்றதை ஏய்டன் உணரவில்லை. வண்டிப்பாதை நன்றாக இறுகியிருந்தமையால் குதிரைகள் சுலபமாக இழுத்துச்சென்றன. சக்கரங்களின் 'கிருகிரு'ப் போசையும் குளம்புகளின் ஓசையும் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தன. ஓசை மாறுபாட்டை உணர்ந்தபின் வண்டியின் சிறிய சாளரத்தின் திரைச்சீலையை விலக்கி வெளியே பார்த்தான். இருபக்கமும் அடர்ந்தகாடுகள் மண்டிய சிறு குன்றுகள் வந்துகொண்டிருந்தன. கோடையிலும் கருகாத பசுமை கொண்ட மரங்கள் அவை. பச்சைநிறமான பெரிய காளான் போன்ற முள்மரங்கள். ஒன்றோடொன்று உரசி நிற்கும் பிரம்மாண்டமான மிருகங்கள் போன்ற குன்றுகள். அவற்றின் முதுகில் மயிர்க்கால்கள் போலக் குட்டை மரங்கள். காற்று அந்த மரங்களின் வழியாக இறங்கி அலையாகப்பரவி வந்து சாலையைக் குறுக்காகக் கடந்துசென்றது. வெந்த செம் மண்ணின் வாசம்.

மதியவெயில் இறங்க ஆரம்பித்திருந்தது. நிழல்கள் தென்கிழக்காகச் சாய்ந்து விழுந்து கிடந்தன. நின்றுகொண் டிருக்கும் காட்டுக்கு அடியில் படுத்துக்கிடக்கும் ஒரு காடு. காகங்கள் ஓய்வை முடித்துக்கொண்டு பறக்க ஆரம்பித்திருந்தன. கரிய சிறகுகளால் வெயிலை அளைந்தபடி மிதந்து சென்றன. ஏய்டன் சோர்வாக உணர்ந்தான். 'திரும்பிச் சென்றுவிடலாமா' என்ற எண்ணம் எழுந்தது. 'ஒருவேளை இந்தப்பொழுது எனக்குள் எழுப்பும் இந்த இனிய சோர்வும் பழைய நினைவுகளும் மீண்டும் வராமலேயே போய்விடலாம். நான் என்றென்றைக்குமாக இன்னொருவனாக மாறிவிடலாம்'.

வண்டி 'கிரீச்' சிட்டபடி நின்றது. குதிரைகள் செருக்கடித்தன. "செர்" என்றான் ஜோசப்.

“என்ன?”

“பஞ்சத்தின் முதல்காட்சியை நீங்கள் காணலாம்” என்றான். சாதாரணமாக ஒருவரை அறிமுகம் செய்யும் பாவனை.

“என்ன சொல்கிறாய்?”

“வலப்பக்கம் அந்த ஆலமரத்தடியைப் பாருங்கள்”

ஏய்டன் கதவைச் சற்றே திறந்து எட்டிப்பார்த்தான். ஒரு கணத்துக்குப்பின் அமிலத்துளி விழுந்த புழுபோல அவன் பிரக்ஞை துள்ளித்துடித்து தாளமுடியாத உயிர்வாதையுடன் நெளிந்து முறுக்கி உதறிச் சொடுக்கி விதிர்த்தது. பெரிய ஆலமரத்தின் அடியில் பிணங்கள் அள்ளிக்கொட்டியவை போலக் கிடந்தன. பாதிக்குமேல் குழந்தைகள். நாலைந்து நாய்கள் பிணங்களைக் கிழித்து குடலைக்கவ்வி இழுத்து வெளியே எடுத்து தின்றுகொண்டிருந்தன. அவற்றின் உறுமல்களும் கடித்து சப்புக்கொட்டி இழுக்கும் முனகல்களும் உரக்கக் கேட்டன. மரக்கிளைகளில் காகங்களும் பிற பறவைகளும் பெரிய சந்தைபோல இரைச்சலிட்டன. காகங்கள் துணிந்து கீழே இறங்க நாய்கள் உறுமியபடி அவற்றைத் துரத்தின. அவை பறந்தெழுந்து மீண்டும் அமர்ந்தன.

இருநாய்கள் தலைதூக்கிக் காதுகளை முன்னால் குவித்து வண்டியை ஏறிட்டுப்பார்த்தன. ஏய்டன் கதவைத் திறந்ததும் அவை உடலைக்குறுக்கி முன்காலை தூக்கிப் பின்வைத்து பின்னகர்ந்தபின் எச்சரிக்கையுடன் மூக்கைத் தாழ்த்தின. அவை எழுப்பிய ஒலிகேட்டு மற்ற நாய்களும் திரும்பிப்பார்த்தன. ஏய்டன் கால்கள் நடுங்க வண்டியைப் பிடித்துக்கொண்டான். நாய்கள் அவனை மதிப்பிட்ட பின்னர் காதுகள் எச்சரிக்கை யுடன் நிற்க, மீண்டும் கடித்து இழுக்க ஆரம்பித்தன. அவற்றால் கடிபட்ட குழந்தைச் சடலத்தின் கால்கள் அசைய அது உயிருடன் இருப்பதுபோலப்பிரமை எழுந்தது.

குழந்தைகளின் கைகள். கால்கள். மெலிந்து உலர்ந்து விட்டிருந்தாலும் அவற்றில் குழந்தைத்தன்மை மிச்சமிருந்தது.

அவற்றின் கால்கட்டைவிரல் நெளிந்து விலகியிருந்தது, தொட்டிலில் தூங்குவதுபோல. உதடு உரிக்கப்பட்ட குழந்தை முகம் உரக்கச்சிரிப்பதுபோல ஆடியது. தன் வயிற்றிலிருந்து நீண்டுசென்ற குடலைப் பிடிக்க முனைவதுபோலக் குப்புறச் சரிந்து அசைந்தது ஒன்று. அதை இழுத்த நாய் அதை முன்கையால் பற்றியபடி அமர்ந்து மெல்ல ஆரம்பித்தது. அப்பகுதியெங்கும் அழுகிய சதைவாடை மண்டியிருந்தது. ஏய்டன் குமட்டல் வந்து உடலை உலுக்கிக் கொண்டான்.

"ஏறுங்கள் சார்" என்று ஜோசப் கடிவாளத்தை இழுத்தான். ஏய்டன் கதவைப் பற்றிக்கொண்டான். உள்ளே ஆண்ட்ரூ வெள்ளைக் கைக்குட்டையால் முகத்தை மூடி மௌனமாகக் குலுங்கி அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தான். ஏய்டன் படியில் காலைத் தூக்கி வைத்தகணம் ஒரு மெல்லிய முனகலைக் கேட்டான். நாய்கள், காகங்களின் ஒலிகள் நடுவே அவனால் அதைப்பிரித்துக் கேட்க முடிந்தது.

"இரு" என்றபின் அவன் திரும்பிப்பார்த்தான். அந்த தீனமான முனகல் அவனை அழைப்பது போலவே ஒலித்தது. 'பிரமையா?' சடலங்களில் சில உதடுகள் பிய்த்து உரிக்கப்பட்டு சிரித்துக்கிடந்தன. 'அவற்றின் அழைப்பா?' சட்டென்று பிரண்ணன் சொன்னது நினைவுக்கு வந்தது. 'மரணத்தின் அழைப்பா? சாத்தானா?' பற்கள் கிட்டித்துக்கொண்டன. கைகால்கள் எல்லாமே கருங்கல்லாலானவையாக மாறி அவனை விட்டு எங்கோ இருந்தன. மீண்டும் அந்த தீனமான அழைப்பு. 'ஆம், மனிதக்குரல்தான்'.

"வேண்டாம்! வேண்டாம் காப்டன்" என்று ஆண்ட்ரூ பின்னால் உடைந்த குரலில் அழைத்தான். ஏய்டன் தன் துப்பாக்கியை நுனிவிரலால் தொட்டபடி புதர்களைத்தாண்டி காலெடுத்துவைத்தான். நாய்களில் ஒன்று எழுந்து சிவந்த ஊன் படிந்த வாயில் பீங்கான் முட்கள் போன்ற பற்களுடன் 'ர்ர்ர்..' என்றது. ஏய்டன் கையைத் தூக்கி வீசி "போ. போ." என்றபடி முன்னகர்ந்தான். ஆனால் நாய் அஞ்சுவதாகத் தெரியவில்லை. அவன் மேலும் முன்னகர்ந்தபோது அது எழுந்து வயிற்றை நிலம்

நோக்கித் தாழ்த்தியபடி அவனை நோக்கித் தாழ்ந்த தொனியில் உறுமியது.

பின்பக்கம் ஆண்ட்ரூ "காப்டன். கவனம்!" என்று கூச்சலிட்டான். ஏய்டன் திரும்பிப் பார்த்தான். புதர்களுக்குள் இருந்து பல நாய்களின் தலைகள் விடைத்த காதுகளுடன் எழுந்தன. நூறுநாய்களாவது இருக்கும். அவை தாக்குவதற்குச் சிலகணங்கள் போதுமென்று உணர்ந்தான். சட்டென்று துப்பாக்கியை எடுத்து முதல் நாயைச் சுட்டான். 'ஹீக்' என்ற ஒலியுடன் அது சரிய மலைகள் அந்த வெடியோசையைப் பலமுறை முழங்கின. நாய்கள் ஊளையிட்டபடி நான்கு பக்கமும் பாய்ந்து விலகியோடின. கல்விழுந்த இடத்தில் இருந்து நீரலை விலகுவதுபோல.

ஏய்டன் நிதானப்படுத்திக்கொண்டபின் முன்னால் சென்றான். கிழிபட்ட, குதறப்பட்ட சடலங்கள். எல்லா வயதிலும் ஆண்கள் பெண்கள். அவர்களின் கந்தலாடைகளும் குடல்களும் பின்னிக்குழம்பி மண்ணில் இழுபட்டுக்கிடந்தன. கைகால்கள் பிய்ந்து பரவிக்கிடந்தன. புதர்களுக்குள் ஏராளமான சடலங்கள். மண்ணைக் குப்புற அணைத்தவை போல. ஒருவரை ஒருவர் இறுகப்பற்றிக்கொண்டது போல. ஆழ்ந்த சுகமான உறக்கம் போல. வெள்ளெலும்புகள் கால்களில் மிதிபட்டன. பழைய பீங்கான் ஓடுகள் போல மண்டை ஓடுகள். சதை இன்னும் மிஞ்சியிருக்கும் இடுப்பெலும்புகள். மண்ணில் கலந்து மண்ணால் செய்யப்பட்டவை போன்ற எலும்புகள். எத்தனைபேர்!.

ஏய்டன் காலெடுத்து வைத்து முன் சென்றபோது அந்த அசைவைப்பார்த்தான். ஆலமரத்தின் பொந்துக்குள் இருந்து ஒரு கை அசைந்தது. முனகல் ஒலி அங்குதான் கேட்டது. 'ஆம், அது உயிரசைவு. இல்லை. அது ஒரு மாயம். சாத்தானின் மாயம். என் கண்களின் மாயம்'. அந்தக்குரல் மீண்டும் எழுந்தது. ஆம், அது அவனைத்தான் அழைக்கிறது. சந்தேகமே இல்லை.

ஏய்டன் தன் தொடைகள் தடதடவென்று ஆடுவதை உணர்ந்தான். விழுந்துவிடக்கூடும் என்று தோன்றியது. மெல்ல அந்த மரப்பொந்தை அணுகினான். மரணத்தருணத்தில்

ஒலிப்பதுபோன்ற குரல். "தொர தொர" அவன் அந்த முகத்தைக் கண்டான். அது ஒரு பையன். எட்டு வயதிருக்கும். உடலின் ஒட்டுமொத்த திரவத்தையும் சதையையும் பிரம்மாண்டமான ஊசி ஒன்றால் உறிஞ்சி எடுத்துவிட்டதைப் போன்ற உருவம். எலும்புகள் மீது ஓடும் நரம்புகள் புடைத்து தெரிந்தன. ஒவ்வொரு எலும்பு முட்டும் கனத்து அந்தக்கனத்தை உடல் தாளமுடியாததுபோலத் தெரிந்தது. காய்ச்சல் கண்டவை போல வெறிக்கும் கண்கள். உலர்ந்து சேற்றுத்தடம் போல ஆன வாய்க்குள் சேற்றுக்கற்கள் போன்ற பற்கள். புழுப்போலத் தொங்கிக் கிடக்கும் உலர்ந்த நாக்கு.

ஏய்டன் அந்த உடல் ஒன்றல்ல என்று கண்டான் நான்கு குழந்தைகள். ஒரு பெண்குழந்தைக்கு இரண்டு வயதிருக்கலாம். நான்கும் சேர்ந்து ஒரு உடலளவுக்கே இருந்தன. ஒன்றுடன் ஒன்று புழுக்களைப்போல ஒட்டியிருந்தன. கால - இடத்துக்கு அப்பால் சென்றுவிட்ட விழிகளில் விபரீதமான ஒரு வெறிப்பு தான் இருந்தது. அவை அவனை நோக்கிப் புன்னகைப்பது போலத் தோன்றியது. அவை தங்கள் உடல்களில் அசையக் கூடிய கைகளையும் கால்களையும் ஆட்டின. "தொர தொர."

"ஒன்றும் செய்யமுடியாது." என்றான் ஜோசப் பின்னாலிருந்து. "இவை பிழைப்பதற்கான வாய்ப்பே இல்லை. கண்ணில் இருப்பது கடைசி ஜன்னி"

ஏய்டன் அவற்றைப் பார்த்து எந்த எண்ணமும் இல்லாமல் அப்படியே நின்றான்.

குழந்தைகளின் உடல்களில் இருந்து கைகள் நீண்டு விரல்கள் அசைந்து யாசித்தன.

"சர், திரும்பிவிடுங்கள். அவர்களைப் பிழைக்கவைக்க முடியாது. இந்தக் குழந்தைகள் நெடுநாள் முன்னரே கைவிடப் பட்டவை"

"என்னிடம் உணவு இருக்கிறது." என்று ஏய்டன் திரும்பினான்.

“ஃபாதர் உங்களிடம் சொல்லியிருப்பார். உணர்ச்சிவசப் படுவதில் அர்த்தமே இல்லை. இவற்றின் கைகால்களைப் பாருங்கள். ஏற்கனவே நாய்கள் கடித்துக் குதறிவிட்டன. அந்தப்புண்ணை ஆற்றிக்கொள்ளும் சக்தி உடலில் இருக்காது. இவற்றை என்ன செய்தாலும் மீட்க முடியாது.”

“அப்படியென்றால் என்ன செய்வது? இப்படியே விட்டுவிட்டுச் செல்வதா?”

“அதை மட்டும்தான் செய்யமுடியும். இவர்களைவிட நம் உதவி தேவைப்படுபவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் உண்டு. நம் உதவியால் உண்மையிலேயே பிழைத்துக்கொள்ளக் கூடியவர்கள் அவர்கள். நாம் இவர்களுக்கு அந்த உதவியைக் கொடுத்து வீணாக்கிவிட்டு அவர்களைக் கைவிடுவதுதான் பாவம். வாருங்கள்”

ஏய்டன் அந்தக்கண்களைப் பார்த்தபடி நின்றிருந்தான். சின்னப்பெண்குழந்தை புழுப்போல நெளிந்து கால்கள் கைகளுக்கிடையே இருந்து வெளிவந்தது. நூற்றுக்கிழவியின் கை போல மெலிந்து தோல்சுருங்கி நரம்பெடுத்த கையை நீட்டி “தொர! தொர!” என்றது. ஒரு புழு முனகுவதுபோல.

“அதிகபட்சம் இன்னும் ஒருநாள் உயிரோடிருக்கும். இதைப்பிழைக்கச் செய்ய உங்களால் முடியாது. வாருங்கள்” என்றான் ஜோசப்.

ஏய்டனுக்குத் தன் கால்கள் தரையுடன் உருகியிணைந் திருப்பதாகத் தோன்றியது. அதுவரை அக்குழந்தைகளின் கண்களில் இருந்த வெறுமை அந்த விழிகளில் இருக்கவில்லை. அவை இறைஞ்சின. அவனை நம்பிக்கையுடன், எதிர்பார்ப்புடன் பார்த்தன. சற்றே பின்திரும்புவதுபோல மெல்லிய அசைவு அவனுடலில் கூடியபோது சட்டென்று உக்கிரமான தவிப்பை அடைந்தன. அவன் மீண்டும் அவற்றைச் சந்தித்ததும் புதுநம்பிக்கை கொண்டன. அந்தச்சில கணங்களில் ஓர் ஆன்மா இன்னொரு ஆன்மாவிடம் இறைஞ்சக்கூடிய அனைத்தையும் அவை சொல்லிவிட்டன.

'சாத்தான்' ஏய்டன் பிரண்ணனின் சொற்களை நினைவுகூர்ந்தான். 'மிக உன்னதமான உணர்ச்சிகளே அவன் ஆயுதம். கிறிஸ்துவின் அங்கியே அவனுக்குப் பிரியமான உடை. ஆனால். அவன் கிறிஸ்துவின் சேவகர்களைத் தன் இருண்ட ஆழத்திற்குள் இழுத்துப்போட்டுக்கொண்டே இருக்கிறான்'. ஏய்டனின் உடல் நடுநடுங்கிக் கொண்டிருந்தது. சற்றுமுன்புவரை காலியாக இருந்த இந்தக்கண்களுக்கு அப்பால் இப்போது வந்து குடியேறியிருப்பது யார்? சாத்தானா? மானுடத்தைப் பசியிலும் பிணியிலுமாழ்த்தும் பெருவல்லமையா? இருத்தலின் கடைசி முனகலாக, வாழ்வாசையின் உச்சகட்ட பேரோலமாக அவனிடம் பேசுவது சாத்தானின் ஜாலமா? ஆம் அவனை அது அழைக்கிறது. அவனைத் தன் அடியற்ற ஆழம் மின்னும் வாய்க்குள் அள்ளிப்போட முயல்கிறது.

"சார், கிறிஸ்துவை நினைத்துக்கொள்ளுங்கள். பின்னால் நகர்ந்து வந்து விடுங்கள்." ஜோசப் சொன்னான்.

ஆர்ட்டிக் பனிமலைகளில் பனிப்பாறைச் சரிந்து கால்கள் மாட்டிக்கொள்ள பனிக்கோடரியால் தன் காலை வெட்டி தன்னை விடுவித்துக்கொண்டு தப்பும் மாலுமிகளைப்பற்றிய கதைகளை ஏய்டன் வாசித்ததுண்டு. அக்கணத்தில் தானும் அதைத்தான் செய்கிறோம் என்று பட்டது. தன் உடலையே அவன் வெட்டி குருதி வழிய வலி துடிக்க துண்டாக்குகிறான். கால்களைத் தூக்கி வைத்து அணுவணுவாக நகர்ந்தான். பல நாள் பயணத்துக்கு அப்பால் எங்கோ நின்று கொண்டிருந்தது அவனுடைய வண்டி. காற்றே இல்லை. வானமும் பூமியும் உறைந்து நின்றிருந்தன.

பின்பக்கம் புழுவின் மென்குரல் மன்றாடியது. மீண்டும் மீண்டும். ஒரு சக மனித உயிரின் அழைப்பு. அதில் இன்னும் எஞ்சும் நம்பிக்கை. இந்த மனிதகுலத்தை இதுகாறும் நிலை நிறுத்திவரும் பெருவல்லமையே அதுதான். மனிதன் மனிதனிடம் கொண்டிருக்கும் ஆதார உறவு. தன்னைப்போன்ற ஒருவனிடம் பசிக்காக கைநீட்டும்போது, முன்பின் தெரியாத ஒருவனிடம் அடைக்கலம் கோரும்போது மனிதனில் உருவாகும் எதிர்பார்ப்பு. எத்தனை ஆயிரம் நூற்றாண்டுகளாக மானுட

இனம் அந்த உணர்ச்சியைக் கொஞ்சம் கொஞ்சமாக உருவாக்கியிருக்கும். எத்தனை கோடி இக்கட்டுகளில் அதை பொத்திப்பேணி எடுத்திருக்கும்!.

'எங்கிருந்து? இந்த கீழ்த்தரமான குரங்குக்கூட்டம் எங்கிருந்து அந்த மேன்மையைப் பெற்றுக்கொண்டிருக்கும்? மின்னலில் தீ வந்து மண்ணில் விழுந்தது போல அதுவும் வானத்திலிருந்து வந்ததா? அதனால்தான் ஒவ்வொரு பெருந் துயரிலும் அது வானைநோக்கி ஏறிடுகிறதா? விளங்கிக் கொள்ளமுடியாத, மகத்தான, ஆனால் மிகமிக மென்மையான ஒன்று தன்னிடமிருப்பதை அது அறிந்திருக்கிறது. ஒவ்வொரு உச்சகட்ட அபாயத்தையும் அதைக்கொண்டுதான் மனிதன் தாண்டிவந்திருக்கிறான். அது கடவுளின் கண்ணீர்த்துளி. இதோ நான் அதன்மேல் கால்வைத்து நடந்து விலகுகிறேன். கடவுளின் முகத்தில் இதயத்தில் அடிவயிற்றில் என்னுடைய கனத்த சப்பாத்துக்கள் பதிந்து நசுக்கிச் செல்கின்றன'.

ஏய்டன் கண்கள் இருட்டி வந்தன. மண் அவனை நோக்கி எழுவது போலத் தோன்ற அனிச்சையாகக் கையை நீட்டியபடி தள்ளாடி விழப்போனான். ஜோசப் அவன் தோளைப்பற்றிக் கொண்டான். "நன்றி" என்று ஏய்டன் சிலகணங்கள் மண் ஆட அப்படியே நின்றான்.

பின்பு, தன்னை விடுவித்துக்கொண்டு கால்களைத் தூக்கி வைத்து நடந்தான். ஒவ்வொரு காலடியிலும் மண்ணை ஓங்கி மிதித்தான். ஓர் எலும்பு மண்பாண்டம் போல நொறுங்கியது. பின்பக்கம் அந்த முனகல்கள் இப்போது உரக்கவே கேட்டன "தொர தொர"

அவனுக்குத்தெரிந்த ஒலி அது. அவனுக்குச் சேவை செய்பவர்கள் அவன் முன் பணியும் ஒலி. சாட்டையடி படும் கருப்பன் அடிப்பவனின் காலைப்பற்றிக் கொள்ளும்போது எழுப்பும் ஒலி. இந்த நாட்டின் ஒவ்வொரு குழந்தையும் இந்தக்கெஞ்சலுடன் பிறந்து வெளிவருகிறது. அதன் நாவில் மூச்சில் அந்தக் கெஞ்சல் நிரந்தரமாகப் படிந்து விடுகிறது. ஆம், ஒரு தேசமே கோடானுகோடி கைகளைத் தூக்கி வாய் நோக்கிக்

குவித்து, மரணக்காய்ச்சலடித்த கண்களுடன், உலர்ந்து எரியும் வாயுடன், அப்படிக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறது.

அவன் வண்டியை நெருங்குவதற்குள் ஆண்ட்ரூ அங்கிருந்து கையில் பெட்டியுடன் ஓடிவந்தான். ஜோசப் ஓடிப்போய் ஆண்ட்ரூவைப் பிடித்தான். "நில்லுங்கள். என்ன செய்கிறீர்கள். நில்லுங்கள்" என்று கூவினான்.

"இதற்குள் உணவு இருக்கிறது. உணவு." என ஆண்ட்ரூ திமிறினான்.

"அந்த உணவை அவர்களால் சாப்பிட முடியாது. தொண்டைக்குள் அதை இறக்க அவர்களால் முடியாது. மூச்சடைத்து நம் கண்முன்னாலேயே சாவார்கள்" ஜோசப் கத்தினான்.

"நம்மிடம் நெருப்பிருக்கிறது. இதை நீரில் காய்ச்சிக் கொடுப்போம்"

"அவர்கள் குடல்கள் உணவைச் செரிக்கக்கூடியவை அல்ல. இவர்களுக்கு மாவுச்சர்க்கரை மட்டும்தான் கொடுக்க முடியும். கொடுத்தாலும் கண்டிப்பாகப் பிழைக்க மாட்டார்கள். ஊன் தின்ற வாயுடன் நாய்களால் கடித்துக் குதறப்பட்டிருக்கிறார்கள்."

"சாகட்டும். அவர்கள் இங்கேயே சாகட்டும். ஆனால், இவர்களைப்பார்த்தபின் இந்த உணவுடன் இங்கிருந்து போக என்னால் முடியாது. இதில் ஒரு துண்டு உணவைக்கூட என்னால் வாயில் வைக்க முடியாது. இந்த உணவின் மீது கடவுளின் சாபம் விழுந்துவிட்டது." ஆண்ட்ரூ ஜோசப்பை உதறிவிட்டு முன்னால் செல்லமுயன்றான். ஜோசப் தடுத்த போது பெட்டியாலேயே அவனை உதறி வீழ்த்தினான். மூச்சு சீற, தலை கலைய, பித்தன் போல முன்னால் சென்றான்.

ஏய்டன் கையை நீட்டி "நில்!" என்றான்.

ஆண்ட்ரூ "இல்லை. நான்." என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்க ஏய்டன் 'பளீர்' என்று ஓங்கி அவன் கன்னத்தில் லறைந்தான். ஆண்ட்ரூ திகைத்து உறைந்து கலங்கிய கண்கள்

விழிக்க திறந்த உதடுகளுடன் பார்த்து நின்றான். ஏய்டன் அந்தப்பெட்டியை வாங்கிக்கொண்டான். ஆண்ட்ரூவின் பிடி இயல்பாக நெகிழ்ந்தது. அவன் கை வியர்வையில் ஊறியிருந்தது. பெட்டியின்பிடி ஈரமும் வெம்மையுமாக ஏய்டனின் கையில் வழுக்கியது.

"நீங்கள் மனிதர்களல்ல. மிருகங்கள். அந்த உணவு பாவத்தில் முக்கப்பட்டது. அதில் ஒரு துளியை நீங்கள் உண்டால் கூடப் பத்துத் தலைமுறைகள் மீது அதன் சாபம் விழும்." ஆண்ட்ரூ உணர்ச்சி வேகத்தால் 'கீச்' சிட்ட குரலில் கத்தினான்.

ஏய்டன் "வண்டியில் ஏறிக்கொள்" என்றான். "நான் செங்கல்பட்டு போயாக வேண்டும். எனக்காக இல்லை. இவர்களைப் போன்றவர்களுக்காக"

ஆண்ட்ரூ உடைந்த குரலில் "நான் வரமாட்டேன். இங்கேயே சாகிறேன். நான் வரமாட்டேன்" என்று கூச்சலிட்டான். தன் முகத்தை கைகளால் ஓங்கி அறைந்தபடி "ஏசுவே. கர்த்தரே, நான் சாகிறேன். சாகிறேன். ஏசுவே, என் மீட்பரே" என்று கதறினான்.

"வா!" என்று ஏய்டன் திடமான குரலில் சொன்னான். ஜோசப் வண்டியில் ஏறிக்கொண்டான் அவர்கள் வண்டியுடன் அப்படியே நின்றார்கள்.

விசும்பியபடி அப்படியே ஆண்ட்ரூ குந்தி அமர்ந்தான். சில கணங்களுக்குப்பின் கண் திறந்து சுற்றும் பார்த்தான். சட்டென்று துரத்தப்பட்டவன் போல வண்டியை நோக்கி ஓடி வந்தான். கைப்பிடியை ஆவேசமாகப் பற்றி உள்ளே வந்து இருக்கையில் அமர்ந்து அப்படியே குனிந்து இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு நடுநடுங்க ஆரம்பித்தான்.

வண்டி நகர்ந்ததும் ஏய்டன் திரும்பிப் பார்த்தான். அந்தக்குழந்தை அவ்வளவு தூரம் முன்னால் நகர்ந்து வந்திருந்தது அவனைத் துணுக்குறச் செய்தது. புதர்களுக்குள் நாய்க்கூட்டம் நெருங்கிவரும் அசைவுகள். அந்தக்குழந்தை மேலும் முன்னால் நகர்ந்துகொண்டே இருந்தது, வண்டியைத்

தொடர்ந்து வருவதுபோல. 'எங்கிருந்து வருகிறது அந்த ஆற்றல்?' அது உயிரின் ஆற்றல். மண்ணிலுள்ள ஒவ்வொரு உயிரிலும் நிறைந்திருக்கும் வாழ்வின் விசை.

'அதுதான் சாத்தானா' என்று ஏய்டன் நினைத்துக் கொண்டான். 'மண்ணில் மனிதனைக் கட்டிப்போடுவது அதுதானா? பற்றாக, பாசமாக, ஆணவமாக உருமாறுவது அதுதானா? அதைத்தான் மானுட ஆன்மா அவ்வளவுதூரம் அஞ்சுகிறதா?' ஏய்டன் கண்களை மூடிக்கொண்டு சாய்ந்து அமர்ந்தான். கடும் காய்ச்சலால் உடல் தசைகள் சோர்ந்து உளைவது போல இருந்தது. வாய் கசக்க, கண்கள் எரிய, வியர்வை உடலெங்கும் ஆவியாகிக்குளிர, எடையில்லாமல் மிதந்து செல்வது போலிருந்தது.





















# 7

வண்டியின் சக்கரங்களின் ஒலி தன் பிரக்ஞையைப் பந்துபோல எற்றி எற்றி விளையாடுவதை ஏய்டன் உணர்ந்தான். அதன்மேல் பாறாங்கல் மழைபோலக் கொட்டின குளம்படிகள். ஒரு சவுக்கு எங்கோ அதை ரத்தம் தெறிக்க வீறியது. ஒரு சுத்தியல் எங்கோ அதை ஓங்கி ஓங்கி அடித்தது. ஒரு பெரும் தேம்பல் எங்கோ மழையாகப்பெய்தது. ஒரு பேரலறல் எங்கோ இடிமின்னலாகக் கீழ்வானை அதிரச்செய்தது. ஒரு சொல் உருகிக் கடலாகிக் கொந்தளித்துக் கரையோரப்பாறைகளில் தலையை அறைந்து அறைந்து உடைத்தது. ஒருவன் எங்கோ மண்ணில் துளையிட்டு ஆழத்துக்குள் ஆழத்துக்குள் ஆழம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

வண்டி நின்றதும் ஏய்டன் விழித்துக்கொண்டான். “நம்முடைய காவலர்கள் சார்” என்றான் ஜோசப்.

ஏய்டன் கதவைத்திறந்தான். வெளியே நின்றிருந்த குதிரைவீரன் கீழே தாவி இறங்கி சல்யூட் அடித்தான். விடைப்பான இருபத்தைந்து வயது இளைஞன். “சார்ஜண்ட் கூப்பர் சர். மூன்றாவது நகர் காவல் படைப்பிரிவு” என்றான். அப்பால் இருபதுபேர்கொண்ட குதிரைப்படை நின்றிருந்தது. எல்லாரும் இந்தியர்கள். கூரியநாசியும் கன்னங்கரிய முள்செண்டு போன்ற அடர்தாடியும் கொண்ட பட்டாணியர்.

"இங்கே சட்டம் ஒழுங்குப் பிரச்சினை உள்ளதா என்ன?" என்றான் ஏய்டன்.

"நகரத்துக்குள் அகதிகள் பிரவேசிக்கக்கூடாது சர். அதற்கான காவல். வயிற்றுப்போக்குள்ள, நோயாளிகள் உள்ளே புகுந்தால் நகரத்தில் நோய்பரவி பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும்."

அற்புதமான விளக்கம் என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான். தன் செயல்களைத் தனக்காக விளக்கிக்கொள்வதில் ஆங்கிலேயருக்கு நிகர் எவருமில்லை. அந்தத்திறனால்தான் அவர்கள் உலகப்பேராற்றலாக ஆகியிருக்கிறார்கள்.

"உங்களுக்கு என்ன உத்தரவு?" என்றான் ஏய்டன்.

"திடமாக நடந்துசெல்லக்கூடிய நோயில்லாத மனிதர்கள் மட்டுமே நகரை நோக்கிச் செல்லமுடியும். சுமந்துகொண்டு செல்லப்படுபவர்களுக்கும் வண்டிகளுக்கும் இதற்கு அப்பால் அனுமதி இல்லை" சார்ஜென்ட் கூப்பர் சொன்னான்.

"சரி" என்றான் ஏய்டன் திரும்ப வண்டியின் படியில் கால்வைத்தபடி.

"இந்தவழியைவிட வேலூர் சாலையில்தான் அதிகமான அகதிகள்கூட்டம் இருக்கிறது. தொண்ணூறுசதம் மக்களை ஸ்ரீபெரும்புதூரிலேயே நிறுத்திவிடுகிறோம். ஆனாலும் அங்கே கட்டுப்பாட்டைக் கொண்டுவர முடியவில்லை" கூப்பர் சொன்னான் "ஒருநாளுக்குச் சராசரியாக இருபதாயிரம் பிணங்கள் விழுகின்றன என்று அடக்கம்செய்யும் ஸ்காட் மிஷனரிகள் சொல்கிறார்கள்"

"இங்கே தடுப்புகள் வைத்திருக்கிறீர்களா?" ஏய்டன் கேட்டான்.

"இல்லை சார். சாலையில் வண்டிகளில் நோயாளிகள் எவரும் வராதபடி பார்க்கிறோம். ஆனால் இந்தப் பஞ்சத்து மக்களில் வண்டிகளில் வருபவர்கள் மிகவும் குறைவு. பெரும்பாலும் கால்நடையாகவே வருகிறார்கள். இந்தப் பெரிய காட்டை அவர்கள் எந்த வழியில் வேண்டுமானாலும் கடந்துபோகலாம். ஆனால் இந்தக்காடே பெரிய காவல் அரண்.

இவ்வளவுதூரம் நடந்து இதைக் கடக்கமுடியாமல் பெரும்பாலானவர்கள் அவர்களே விழுந்துவிடுகிறார்கள். நாங்கள் சிறுசிறு குழுக்களாகச் சென்று நகருக்குள் நோயாளிகள் நுழையமுடியாது என்ற அச்சத்தை மட்டும்தான் அவர்களிடம் உண்டுபண்ணுகிறோம். அச்சம்தான் இங்கே கட்டுப்படுத்தும் சக்தியாக இருக்கிறது"

ஏய்டன் புன்னகையுடன் "அவர்கள் இனி எதை அஞ்சவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?"

சார்ஜண்ட் கூப்பர் புன்னகையுடன் "சர், பலவீனர்கள் அஞ்சுவது காரணத்துடன் அல்ல. அவர்கள் அஞ்சுவது அவர்களின் பலவீனத்தைத்தான்" என்றான்.

ஏய்டன் மேலே ஏறி, கதவை மூடிக்கொண்டு "போகலாம்" என்றான். வண்டி அதிர்ந்து முன்னகர்ந்தது.

"மிருகங்கள். நரகப்பிறவிகள்" என்றான் ஆண்ட்ரூ. அவன் முகம் பீட்கிழங்கு போலச் சிவந்திருந்தது. இறுகக்கடித்த உதடுகள் புண் போலிருந்தன.

"அவனிடம் நீ பேசிப்பார்க்கலாம். மனிதகுலத்துக்கு இன்றியமையாத சேவை ஒன்றைச் செய்வதாக அவன் நம்பிக்கொண்டிருப்பான். நோயுற்ற பிச்சைக்காரர்கள் நகரில் நுழைந்து அங்குள்ளவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படாமல் அவன் காப்பாற்றிக்கொண்டிருப்பதாகச் சொல்வான். தங்கள் வாழ்க்கையை நியாயப்படுத்தாத மனிதர்கள் எவரும் இந்த மண்ணில் வாழமுடியாது" ஏய்டன் சொன்னான்.

ஆண்ட்ரூ 'இல்லை இல்லை' என்பதுபோலத் தலையை ஆட்டினான். உள்ளூர நெருப்பு எரியும் உலோகச்சிலை போலிருந்தது அவன் உடம்பு. வண்டிக்குள் அவன் உடலில் இருந்து வெப்பம் பரவுவது போலத் தோன்றியது.

இருபக்கமும் பார்க்கக்கூடாது என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான். ஆனால், பார்வை அனிச்சையாக அதையே தேடியது. சாலையோரத்து மரத்தடிகளில் எல்லாம் பிணங்கள் நாய்நரிகளால் குதறப்பட்டுக்கிடந்தன. மிகப்பெரும் பாலானவை குழந்தைகள். அங்கே எத்தனை குழந்தைகள்

சாகாமலிருக்கின்றன? "தொர தொர" அந்தக்காடே மெல்லிய குழந்தைக்குரலில் மன்றாடிக் கொண்டிருந்தது. "தொர தொர"

'ஏசுவே. என் தேவனே. என் மீட்பனே.' சன்னல் திரைகளை இழுத்துவிட்டுக் கொண்டான். நெற்றிப்பொட்டைச் சுட்டுவிரலால் இறுக அழுத்திக்கொண்டான். உதடுகளை மட்டும் அசைத்து வாயில் வந்த பழைய பிரார்த்தனை ஒன்றைச் சொல்ல ஆரம்பித்தான். பின்பு திடுக்கிட்டு உணர்ந்தான். அது அவனும் குடும்பமும் உணவுமேஜையில் சொல்லும் பிரார்த்தனை. குமட்டுவதுபோல உடல் உலுக்கிக்கொண்டது. 'ஏசுவே, என் தேவனே. என் மெய்யான மீட்பரே.'

எதிர் பக்கமிருந்து மாட்டுவண்டி வரிசை ஒன்று வந்தது. துப்பாக்கி ஏந்திய இரு பட்டாணிவீரர்கள் முன்னால் குதிரையில் வந்தார்கள். பழையபாணி ஃபெர்கூஸன் ரைஃபிள்கள் அவை. அந்த வீரர்களும் பிரிட்டிஷ் படைவீரர் களைப்போலச் சிவப்பு லினன் கோட்டும் காக்கி கால்சட்டையும் அணிந்திருந்தார்கள். அலைந்து திரியும் கூலிப்படையினர் என்று தெரிந்தது. அவர்களுக்குப் பின்னால் சுமை ஏற்றப்பட்ட கூண்டுவண்டிகளைப் பெரிய வெள்ளைக்காளைகள் தொடைச் சதை புடைக்க, தலைதாழ்த்தி, வாயில் நுரைச்சரடு வழிய இழுத்துவந்தன. கடையாணி அச்சில் உரசும் 'கிரீச்'சிடலும் வண்டிக்காரர்கள் சாட்டையைச் சுழற்றியபடி அதட்டும் கூச்சல்களும் கேட்டன. எட்டு வண்டிகள். எல்லாமே கரிய தேன்மெழுகு பூசப்பட்ட பனம்பாயால் வளைத்து கூரையிடப் பட்டவை. உள்ளே தானிய மூட்டைகள் இருக்கக்கூடும்.

பின்பக்கம் இருபது மறவர்கள் கைகளில் ஈட்டியுடன் வந்தார்கள். இடுப்பில் நீலநிறமான வேட்டியை வரிந்து உடுத்து மேலே பனைநாரிலான கச்சை அணிந்திருந்தனர். தோளில் பனைநார்க் குடுக்கையில் நீரும் உணவும். கனத்த தோதகத்தி மரத்தாலான ஈட்டியின் நுனிகள் கற்றாழைமுள் போலத் தீட்டப்பட்டிருந்தன. தேன்கூடு போலத் தாடி தொங்கும் முகங்கள். புதருக்குள் புறாமுட்டை கிடப்பது போலக் கண்கள். ஆமணக்கெண்ணை பூசிச் சீவி பின்னால் கட்டப்பட்ட கனமான குடுமிக்கட்டு.

அந்த வண்டி வரிசை அவர்களுக்கு வழிவிட்டு நின்றது. ஏய்டன் தாண்டிச்சென்றதும் முன்னால் வந்த பட்டாணிவீரன் பிரிட்டிஷ் பாணியில் ரைஃபிள் மீது அடித்து சல்யூட் செய்தான். குதிரை கால் மாற்றி 'ர்ர்ரீ . .' என்றது. அவர்களைப் பொருட்படுத்தாமல் வண்டிகள் முன்னால் சென்றன.

"யார் இவர்கள்?" என்றான் ஏய்டன்.

"வாலாஜா நவாபின் பழைய படைவீரர்கள். கொஞ்சபேர் இப்போது பிரிட்டிஷ் படைகளில் வேலை செய்கிறார்கள். மீதிப்பேர் இப்படி வணிகர்களுக்குக் காவல்கொடுத்து வாழ்கிறார்கள். பிரிட்டிஷ் படைகள் இவர்களை நட்பு சக்திகளாகவே நினைக்கின்றன" என்றான் ஜோசப்.

"கொள்ளைகள் நடக்கின்றனவா?"

"இத்தனை பசித்த மக்கள் இருக்கையில் கொள்ளைகள் நடந்தாகவேண்டும். ஆனால் அனேகமாக கொள்ளைகளே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இந்த மக்கள் நூற்றாண்டுகளாக எந்தவகை வன்முறைக்கும் பழக்கம் இல்லாதவர்கள். பெரும்பாலும் மண்ணில் விவசாயம் செய்து வாழ்ந்தவர்கள். ஆயுதங்கள் எதுவும் இவர்களுக்கு அறிமுக மில்லை. கூட்டமாகச் சேர்ந்து செயல்படுவதும் தெரியாது. இந்த மக்களில் பெரும்பகுதியினர் அவர்களின் வம்ச சரித்திரத்தி லேயே அனேகமாக முதல்முறையாக அவர்கள் வாழ்ந்த வயல்களையும் சேரிகளையும் விட்டு வெளியுலகுக்கு வருகிறார்கள். அவர்கள் இந்தப் படைவீரர்களையும் ஆயுதங் களையும் எல்லாம் கதைகளில்தான் கேள்விப்பட்டிருப்பார்கள்."

"அப்படியென்றால் ஏன் இத்தனை காவல்?"

ஜோசப் "நீங்களே பார்க்கலாம் சார்" என்றான்.

மேலும் வண்டிவரிசைகள் வந்துகொண்டிருந்தன.

"எல்லாமே உணவுதானா?"

"பெரும்பாலும் உணவுதான்." என்றான் ஜோசப். "தானியங்கள், பருப்புகள், எண்ணைவித்துக்கள். மற்ற பொருட்களெல்லாம் இப்போது அதிகம் வருவதில்லை. தெற்கே நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து கப்பல்கள் வழியாக

வரும் உணவால்தான் நகரம் வாழ்கிறது. இதெல்லாம் சின்ன அளவில் வணிகர்கள் கொண்டுவருவது. இவற்றை நகரத்துக்குள் கொண்டுபோய்விட்டால் சிலசமயம் எட்டுமடங்கு விலைக்கு விற்கமுடியும் என்கிறார்கள். எவ்வளவு போனாலும் அங்கே உணவு போதவில்லை"

அந்திவெளிச்சம் பரவ ஆரம்பித்தது. நிணம் பரவிய காட்டு ஓசைபோல சூரிய ஒளி ஊறி மரங்களுக்குள் வழிந்தது. ச்ாலையின் இருபக்கமும் காடுகள் குறைந்து புதர்வெளி தெரிய ஆரம்பித்தது. எதிரே வந்த வண்டிகளின் முன்னால் சட்டிகளில் துணித்திரிபோட்டு எரிக்கப்பட்ட எண்ணெய் விளக்குகளைத் தூக்கியபடி நடந்தார்கள். தீச்சுடர்கள் சிவப்பு மலரிதழ்கள் போல மங்கிய வெளிச்சத்தில் நெளிநெளிந்தன.

"உணவுக்கான எண்ணெய்யையா எரிக்கிறார்கள்?" என்றான் ஏய்டன்.

"இது புன்னைக்காய் எண்ணெய் சார். சாப்பிட முடியாது" ஜோசப் சொன்னான். "பகலில் இவ்வளவு தூரத்தை மாடுகள் தாண்டாது. அதனால்தான் இரவில் செல்கிறார்கள். விடியவிடிய சரக்கு வண்டிவரிசைகள் சென்று கொண்டிருக்கும்"

வண்டிவரிசைகள் தூரத்தில் செந்நிற விளக்கொளிகளின் சரமாகத் தெரிய ஆரம்பித்தன. காட்டுக்குள் இருட்டு பெருகி கனத்துக்கொண்டே வந்தது. பறவைகளின் குரல்கள் அழுத்த மாக ஒலிப்பதுபோல பிரமை எழுந்தது. இந்திய மாலை நேரங்களில் எழும் நீராவியும் வெந்த வாசனையும் வந்தன. கடற்பக்கமிருந்து வீசிய காற்றில் கொஞ்சம் குளிர் இருப்பதை அது காதுகளில் மோதிச்செல்லும்போது மட்டும் உணர முடிந்தது.

மெல்லிய ஓசையாகக் கேட்பது ஒரு பெருங்கூட்டத்தின் குரல் என எளிதில் ஏய்டன் அடையாளம் கண்டான். அவன் மனம் படபடக்க ஆரம்பித்தது. அப்போதுதான் ஒருமணி நேரத்துக்கு முன்னால் கண்ட உக்கிரமான காட்சியை மனம் மிக எளிதில் பின்னால் ஒதுக்கிவிட்டிருந்ததை அவன் உணர்ந்தான். மனம் எந்த வேசியைவிடவும் தளுக்கு கொண்டது. எந்த

மேடைமாந்த்ரீகனைவிடவும் கைஜாலம் கொண்டது. மேலே மேலே எண்ணங்களைப்போட்டு அதிலிருந்து நகர்த்திக் கொண்டு வந்திருக்கிறது. இப்போது அது ஒரு கனவுபோல, என்றோ நடந்த நினைவுபோல ஆகிவிட்டது. இந்த ஓசையில் அந்த நினைவு மீளும்போது அது வலிமை குறைந்து ஒரு நாவலில் படித்த சம்பவம் போல மாறிவிட்டிருக்கிறது.

ஓசைகள் வலுத்தபடியே வந்தன. சிறியதோர் மேட்டின் அருகே வண்டிப்பாதை நன்றாக வளைந்து மேலேறியது. வண்டிச்சக்கரங்களின் 'கிரீச்' சிடல்கள் உரக்க ஒலிக்க மாடுகள் தரைதொடும்படி தலைதாழ்த்தி இழுத்தன. ஏய்டன் சத்தம் கேட்டுக் கதவைத்திறந்து படியில் இறங்கி நின்றான். கீழே தூரத்தில் பெரும் சந்தைபோல திருவிழா போல மக்கள் கூட்டம். அவர்கள் நடுவே ஊடுருவி வந்துகொண்டிருந்த வண்டிகளை இருபக்கமும் சூழ்ந்துகொண்டு கைகளை நீட்டி ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள். சேற்றில் நடக்கும் செருப்புகளை மொய்த்துக்கொள்ளும் கரியபுழுக்கள் போல கைகளும் உடல்களும் நெளிந்தன.

வண்டிகளைச் சூழ்ந்துகொண்ட மறவர்கள் ஈட்டிகளைச் சுழற்றி சுழற்றி அவர்களை விரட்டினார்கள். பலசமயம் ஈட்டிகள் மனித உடல்களை வெட்டிக்கீறிச்செல்வதைக் காணமுடிந்தது. வெட்டுப்பட்டவர்கள் கீழே சரிய மற்றவர்கள் அவர்கள் மேல் மிதித்து ஏறிக்கொண்டு வண்டிகளைத் தொடர்ந்தார்கள். பட்டாணி வீரர்கள் திரும்பத்திரும்பத் துப்பாக்கிகளைக் குறிவைக்க அப்பகுதியில் மக்கள் விலகி வெற்றிடம் ஏற்பட்டது. அவர்கள் நகர்ந்ததும் கூச்சலிட்டபடி கூட்டம் பின் தொடர்ந்தது. மொத்தச் சாலையே கரிய புழுக்கூட்டங்கள் அடர்ந்து நெளியும் சிவந்த மாமிசத்துண்டு போலத் தெரிந்தது.

எதிரே வந்த வெள்ளை சார்ஜெண்ட் குதிரையை இழுத்துத் தயங்கி நின்றான். அவனைத்தொடர்ந்து வந்த பட்டாணி வீரர்கள் சற்று தாண்டிச்சென்று நின்றனர்.

"சார்ஜெண்ட் சிம்ப்ஸன் சர்" என்றான் சார்ஜெண்ட்.

"என்ன செய்கிறீர்கள்?"

"இங்கே எந்த ஒழுங்கையும் மேற்கொள்ளமுடியவில்லை சர். பார்த்தீர்களல்லவா? தெற்கே செங்கல்பட்டு, திண்டிவனம் வரைக்கும்கூட சாலைமுழுக்க இந்தக்கூட்டம்தான். மதராஸை நெருங்கும் எல்லாச் சாலைகளும் இதேபோலத்தான் இருக்கின்றன. ஆரம்பத்தில் வண்டிக்காரர்கள் இவர்களைச் சமாளிக்கக் கொஞ்சம் அரிசியையோ கிழங்குகளையோ வீசிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அது செவிவழியாகப்பரவி இந்தமாதிரி வந்து கூட ஆரம்பித்துவிட்டார்கள். இன்று இவர்களைச் சமாளிக்க ஒரே வழி வன்முறைதான். இந்த சாலைகளின் இருபக்கமும் லட்சக்கணக்கில் மக்கள் வந்துகூடிக் காத்துக்கிடந்து போகிறவர்களைப் பார்த்து அலறி அலறிச் சாகிறார்கள். ஒவ்வொரு நாளும் பல்லாயிரம் பிணங்களை எடுத்துப் புதைக்கிறோம். ஆனாலும் புதர்களுக்குள் பிணங்கள் அழுகிக்கிடந்து நோய் பரப்புகின்றன. இந்தச் சாலைகள் இன்று மிகமிக ஆபத்தானவை. இவற்றின் வழியாகச் சாதாரணமாகப் பயணம் செய்பவர்களே நோயில் சாகிறார்கள். இந்தச் சாலைகளைக் கொஞ்சநாளுக்கு நிரந்தரமாக மூடிவிடுவதுதான் சார் நல்லது. நமக்கு வேறுவழி இல்லை."

"சரி" என்றபின் ஏய்டன் கைகாட்டினான். வண்டி கிளம்பியது.

"இந்த மனிதர்கள் வேறு எங்கே செல்வார்கள்? இவர்களில் பெரும்பாலானவர்கள் தீண்டப்படாத மக்கள். நூற்றாண்டுகளாக மண்ணுடன் சேர்த்து பிணைக்கப்பட்டவர்கள். திடீரென்று அவர்களின் எஜமானர்கள் கூலி கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். நாட்கணக்கில் பட்டினி கிடந்தபின் மரணத்தருவாயில் கிளம்பி வெளியே வருகிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் கண்ணுக்குப் படுவது இந்த நெடுஞ்சாலைகள் மட்டும்தான். அவர்கள் இங்கே வண்டிகளை நம்பி வரவில்லை. அவர்கள் கண்ணுக்குப்படக் கூடிய அரசாங்கம் என்பது இந்தச்சாலையில் போகும் சீருடை அணிந்த பிரிட்டிஷ் படைவீரர்கள்தான். அந்த அரசாங்கத்திடம் தங்களைக் காப்பாற்றும்படி கோரத்தான் வருகிறார்கள்."

சட்டென்று ஜோசப்பின் குரல் உயர்ந்தது "அவர்கள் தங்கள் வயல்வெளிகளில் சாவதைவிட இங்கே சாவதுதான் முறையானது. இந்தச்சாலைகள்தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சாதனைகள். அதிகாரத்தின் வீட்டுமுற்றங்கள் இவை. இங்கேயே அவர்கள் செத்துக் குவிவதனால்தான் அரசாங்கம் இவர்களின் சாவை அறியவாவது செய்கிறது. இல்லாவிட்டால் இப்படி ஒரு சாதியே இந்தியாவில் இருக்கவில்லை என்று தலைப்பாகைக் காரர்கள் காகிதம் எழுதுவார்கள். பிரிட்டிஷ் அதிகாரிகள் அதன்மீது சாப்பா குத்தி கோப்புகளில் இணைப்பார்கள். கவர்னர் லண்டனுக்கு அதை அறிக்கையாக அனுப்புவார். இதோ குறைந்தபட்சம் பிரிட்டிஷ் அரசு அவர்களை அடக்கம் செய்யும் பொறுப்பையாவது ஏற்றுக்கொள்கிறது. இந்தக் கேடுகெட்ட பசித்த பறையர்களுக்கு எவ்வளவுபெரிய கௌரவம். உலகை ஆளும் விக்டோரியா மகாராணியாலேயே புதைக்கப்படுவதென்பது எவ்வளவு பெரிய நல்வாய்ப்பு. அந்தக் கல்லறைமேல் உலகைமீட்க வந்த மனிதகுமாரனின் ஒரு சிலுவையும் நாட்டப்படுமென்றால் ஆகா."

அக்கணத்தில் ஏய்டன் தன்னுள் ஒரு விபரீதமான ஆங்காரம் பொங்கிவருவதை உணர்ந்தான். சட்டென்று பிஸ்டலை எடுத்து அவனைச் சுட்டுத்தள்ளவேண்டுமென்று தோன்றியது. அதை அக்கணமே உணர்ந்து ஜோசப் சொன்னான் "நீங்கள் என்னைச் சுட்டுத்தள்ளலாம். நானும் என் ஜனங்கள் நடுவே செத்துக்கிடப்பேன். அவர்கள் போகும் அந்த நரகத்தில் எனக்கும் வசதியான இடம் கிடைக்கும். நீங்கள் அளித்த கிறித்தவ சொர்க்கத்திற்குப்போனால் அங்கும் நான் வெள்ளையர்களுக்குச் சேவைசெய்யவேண்டும்"

"வாயை மூடு" என்றான் ஏய்டன்.

"அதை எங்களிடம் சொல்லவேண்டியதில்லை சர். நூற்றாண்டுகளாக நாங்கள் அதைத்தான் ஒரு கலையாகப் பயின்றுவருகிறோம். அதுதான் எங்களுக்கு முக்தியை அளிக்கும் யோகம்" அவன் வண்டியைச் சுண்டினான் "ஹேய் ஹேய்"

பெரும் கூச்சலுடன் மக்கள் வண்டியைச் சூழ்ந்து கொண்டார்கள். "தொர. தொர. மகாராசா. தொர." என

அலறல்கள். அவை மனிதக்குரல்களே அல்ல. இருபக்க மிருந்தும் கரிய சாக்கடைக்கடல் எழுந்து வந்து வண்டிமேல் அலையடித்தது. பெரும்பாலும் நிர்வாண உடல்கள். அவற்றில் ஆண், பெண் பேதமில்லை. கிழவர், குழந்தைகள் என இல்லை. மனிதக்கருவாடுகள். ஏற்கனவே மட்க ஆரம்பித்திருந்த தசைகளின் உக்கிரமான நெடி குடலை எகிறச்செய்தது. செத்த விழிகள், செத்த வாய்கள். "தொர தொர மாராசாவே. தொர. மாராசா! தொர! தர்மராசாவே. தொர. தர்மம் செய்யுங்க ராசாவே. தொர. புள்ள சாவுது தொர. எட்டுபுள்ள செத்துப் போச்சு தொர."

ஒரு வெள்ளைக்கார வண்டி வந்திருக்கிறது என்ற செய்தி எப்படியோ பரவி இருபக்கமும் பல்லாயிரம்பேர் அழுத்த ஆரம்பித்தார்கள். "தொர!தொர!" என்ற கூச்சல். நாய்கள் தோண்டி இழுத்துப்போட்ட புதைந்து மட்கிய சடலங்கள். ஓ, ஏதோ ஒரு விசித்திர விதியால் இவை ஒன்றை ஒன்று தின்பதில்லை. ஆம், இவர்கள் என்னை உண்ணமாட்டார்கள் என்பதனால்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். "தொர! தொர!" பெண்கள் கைக்குழந்தைகளைத் தூக்கிக் காட்டினார்கள். உலர்ந்து மெலிந்து கருவாடுபோன்ற குழந்தைகள். கண்ணாடிக்கண்களும் வெள்ளை அரிசிப்பற்களும் கொண்ட, பிரக்ஞை அழிந்து பொம்மைபோல ஆன குழந்தைகள்.

"தொர. தொர. புள்ள சாவுது தொர. புள்ள சாவுது தொர!" திரும்பத்திரும்ப இந்த ஓலம். வெறிகொண்டவளாக குழந்தையை தூக்கிக் காட்டி எம்பி எம்பி குதிக்கிறாள். கரிய பேய்க்கோலம் கொண்ட பெண். வற்றி ஆடும் முலைகள். இருண்ட குழிக்குள் சாக்கடை துளி போலக் கண்கள். "தொர. புள்ள சாவுது தொர" ஏன், நீ சாகவில்லையா? ஆனால் அவள் கண்கள். அவளுக்கு இப்பிரபஞ்சமே செத்தாலும் பிரச்சினையில்லை. அவள் கையில் இருக்கும் அந்த சின்னஞ்சிறிய சதைத்துணுக்கு மட்டும் சாகக்கூடாது. அவளுடைய கைகள், அவள் முகம், அவள் பற்கள், அவள் கண்கள் எல்லாமே அதைமட்டுமே கூவின அதற்காகவே அவை இருந்தன "தொர தொர"

"ஓ. ஓ. ஓ.." என்று ஆண்ட்ரூ அரற்றிக்கொண்டிருந்தான் அவனுடைய உடல் ஜன்னிவந்ததுபோல நடுங்குவதை ஏய்டன் உணர்ந்தான். "வண்டியை எடு. நிறுத்தாதே. போ" என்று ஏய்டன் கத்தினான். ஆனால், வண்டியின் சக்கரங்களை கைகளால் அவர்கள் பற்றிக்கொண்டிருந்தார்கள். சட்டென்று கதவை வெளியே இருந்து யாரோ திறந்தார்கள். சாக்கடைக் குழம்பு உள்ளே பிதுக்கிப்பீரிடுவதுபோல கன்னக்கரிய சுள்ளிக்கைகளின் குவியல் உள்ளே வந்தது. மட்கியவிரல்கள் அவன் சப்பாத்துக்களைப்பற்றிக்கொண்டன. "தொர தொர. தொர.ராசாவே.தொர" புழுக்கள் போல குளிர்ந்த கைவிரல்கள் அவன் கால்கள் மேல் அப்பிக்கொண்டன. அவற்றில் எத்தனை கைவிரல்கள் ஏற்கனவே இறந்துபோனவை! ஓ.

"ஓட்டு ஓட்டு வண்டியை" என்றான் ஏய்டன்.

"சக்கரங்களை பிடித்திருக்கிறார்கள்"

"வண்டியை ஓட்டு"

ஆண்ட்ரூ சட்டென்று அந்தப்பெட்டியை அப்படியே தூக்கி திறந்து உள்ளிருந்து ரொட்டித்துண்டுகளை அள்ளி வெளியே போட்டான்.

ஜோசப் "வேண்டாம். வேண்டாம்" என்று கூச்சலிட்டான். ஆனால் ஆண்ட்ரூ பைத்தியம்போலிருந்தான். "ஏசுவுக்காக ஏசுவுக்காக. ஏசுவுக்காக" என்று உளறிக்கொண்டிருந்தான்.

ரொட்டி கீழே விழுந்ததும் அந்தப்பகுதியில் மானுட உடல்களினாலான கொந்தளிப்பு ஒன்று நிகழ்ந்தது. அதில் வண்டியே அலைக்கழிந்து பக்கவாட்டில் சரிந்து பின் நிமிர்ந்தது. உடல்களினாலான சுழல். அந்த ரொட்டித் தூள்களாக மாறி உடல்களில் மறைந்தது. பிதுங்கிய பேய்விழிகளுடன் ரொட்டியைத் தொட்ட கைகளை நக்கிக்கொண்டார்கள். வெறும் கையை விழுங்க முயல்பவர்கள் போல வாய்க்குள் செலுத்திக்கொண்டார்கள். சில கணங்களில் அந்த ஆவேசம் வெறியாகியது. அவர்கள் ஒருவரை ஒருவர் பிடித்துத் தள்ளினார்கள். வெறிகொண்ட கூச்சலுடன் பற்களாலும்

கைகளாலும் ஒருவரை ஒருவர் கிழித்தார்கள். பச்சைக்குருதியின் வீச்சம் எழுந்தது. சில கணங்களில் கரிய உடல்களில் வழியும் செங்குருதியை ஏய்டன் கண்டான். கொழுத்த ரத்தத் துளிகள் காற்றில் சிதறி வண்டியின் மரப்பரப்பில் தெறித்தன. அவனுடைய சப்பாத்தின் கரியதோல்பரப்பில் ஒரு துளி ரத்தம் ஒட்டியிருந்து, பின்பு மெல்லத் தயங்கி வழிந்தது.

பெரும் கூச்சலுடன் அப்பகுதியில் இருந்த மேலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் அவனுடைய வண்டியை நோக்கி வந்தார்கள். அங்கே அடியற்ற ஆழமுடைய ஒரு பள்ளம் வாய்திறந்து அந்த ஒட்டுமொத்த உடல்பரப்பையே அந்தப் புள்ளியை நோக்கி இழுப்பதுபோலிருந்தது.

“சர். நாம் இப்போதே போகவேண்டும். இவர்களை விரட்டுங்கள்” என்று ஜோசப் கூவினான்.

ஏய்டன் தன் வாளை உருவி வெளியே நீட்டிச் சுழற்றினான் “விலகு. விலகு.” என்று கூச்சலிட்டான்.

“துப்பாக்கியால் சுடுங்கள் சார்” என்றான் ஜோசப். மனித அலைகளில் வண்டி எம்பியது குலுங்கிச் சரிந்து அலைக் கழிந்தது.

ஏய்டன் பிஸ்டலை எடுத்து வானம் நோக்கிச் சுட்டான். ஒலி அதிர சுற்றிலும் எதிரொலி முழங்கியபடி திரும்பி வந்து சூழ்ந்துகொண்டது. வண்டியைச் சுற்றி நிகழ்ந்த கொந்தளிப்பு ஒருகணம் உறைந்தது. மரம் நீரில் விழுந்தது போல அந்த மக்கள்திரள் பிளந்தது. அதேகணம் ஏய்டன் சாட்டையால் குதிரையை ஓங்கி ஓங்கி அடித்து கூச்சலிட்டான். குதிரை தயங்கி பின்னால் வந்தது பின்பு இருகால்களையும் மேலே தூக்கி கனைத்தது. ஜோசப் வெறிகொண்டவனைப்போல அவற்றை அடித்தான். குதிரை உக்கிரமான கனைப்புடன் பாய்ந்து முன்னால் சென்றது. வண்டி பெரும் உலுக்கலுடன் முன்னால்செல்ல அது ஒரு பள்ளத்தில் குப்புற விழும் உணர்வை ஏய்டன் அடைந்தான். அவன் கம்பியைப்பிடித்துக் கொண்டான்.

அந்தப்பெண் “தொர. புள்ள தொர” என்று கூவியபடி குழந்தையை ஏய்டனை நோக்கி வீசினாள். தலைக்குமேல்

குழந்தை மடிந்த கரங்களுடன் பறந்து விலகிச்சென்ற வண்டிக்கு அப்பால் தரையில் விழுந்தது. அப்பகுதியை நோக்கி நெரிந்த மனித உடலின் அலைகளில் மறைந்தது.

ஏய்டனின் தலை கூண்டுக்கம்பிகளில் அறைந்தது. வண்டி சேற்றுக்குழிகளில் விழுந்தும் சேற்று மேடுகளில் ஏறியும் செல்வதுபோலிருந்தது. ஏய்டன் ஜன்னலருகே வாய்வைத்து "முட்டாள். சாலையில் ஓட்டு" என்று கூச்சலிட்டான்.

"சர். நான் சாலையில்தான் ஓட்டுகிறேன்"

வண்டி புயலில் அலைக்கழியும் படகுபோல அவனைத் தூக்கிப்போட்டது.

"பார்த்து ஓட்டு" என்று ஏய்டன் கத்தினான்.

"சர், நான் மனித உடல்கள் மீது வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கிறேன்"

"ஓ. ஜீஸஸ்" என்று ஆண்ட்ரூ எழுந்துவிட்டான்.

தன்னுடைய ஆசனவாய் பனிக்கட்டி பட்டதுபோல கூச உடல் செயலற்று மரத்துப்போக ஏய்டன் சில கணங்கள் அமர்ந்திருந்தான்.

"ஜீஸஸ்! ஜீஸஸ்!" என்று ஆண்ட்ரூ கதவைப்பிடித்தான். வெளியே குதிக்கமுயல்பவனைப்போல.

ஏய்டன் சட்டென்று அவன் கைகளைப்பிடித்தான். "முட்டாள். என்ன செய்யப்போகிறாய்?"

"நான் இந்தவண்டியில் வரமுடியாது."

"நீ கீழே இறங்கினால் சாவாய்"

"நான் சாகிறேன். சாகிறேன். இந்த வண்டியில் இருந்த பாவத்துக்காக நான் ஆயிரம் வருடம் நரகநெருப்பில் எரியவேண்டும். ஜீசஸ். ஜீஸஸ் மைலார்ட்"

"இதைவிடப் பெரிய நரகம் எதுவும் இனி இல்லை. உட்கார்"

ஆண்ட்ரூ அப்படியே இருக்கைக்கு இடைவெளியில் அமர்ந்து உடலைக்குறுக்கி ஒடுக்கிக்கொண்டான். முகம் பொத்தி அழுதான். கையிடுக்குகளில் கண்ணீர் ஊறி வழிந்தது.

ஏய்டன் அப்போதுதான் உணர்ந்தான், அவன் கண்களிலிருந்தும் கண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது. காலர் முழுக்க நனைந்து ஊறியிருந்தது. மார்பில், கோட்டில் கண்ணீரின் ஈரம். ஏசுவே, என் மீட்பரே எனக்குள் இத்தனை கண்ணீர் இன்னும் மிச்சமிருக்கிறதா என்ன?

வண்டி சமனமடைந்ததும் ஏய்டன் சன்னல் வழியாகப் பார்த்தான். இருட்டுக்குள் இருட்டாலானவை போல மனிதத் திரள்கள். கடைசி ஆற்றலையும் சேர்த்து உடலை இழுத்துக் கொண்டுவந்து சாலையோரமாகக் குவிந்திருந்தார்கள். சாலையைப்பற்றி அவர்களுக்கு ஒரு நுண்ணுணர்வு இருக்கிறது. இந்தச்சாலை மதராஸுக்குப் போகிறது. அங்கிருந்து லண்டனுக்கு ஒருவழி இருக்கிறது. இந்தச்சாலை அவர்களை உலகத்துடன் இணைக்கும் ஒரு சரடு. அவர்கள் வாழும் புராதனமான உலகை வந்து தொட்ட நவீன உலகின் ஒரு விரல்.

ஆனால், அது அவர்கள் வாழ்ந்த கருணையற்ற உலகை விடக் கருணையற்றது என்பதை அவர்களால் இன்னும் புரிந்துகொள்ளமுடியவில்லை. வாளால் கழுத்தைவெட்டும் ஆண்டை அல்ல அது. நுட்பமான குழாயை உடலில் செலுத்தி கடைசித்துளிக் குருதியையும் உறிஞ்சிக்குடிக்கும் ஆண்டை. ஆன்மாவையும் கலக்கி உண்ணும் மாயாவி. அவர்கள் நம்பி வாழ்ந்த அடித்தளத்தை முழுக்க நொறுக்கி அவர்களை மானுடக்குப்பைவெளியாக ஆக்கியது அதுதான். அதன் காலடியிலேயே கருணைக்காக யாசித்தபடி வந்து கிடக்கிறார்கள். முட்டாள்கள்.

ஆம், முட்டாள்கள்தான். வாழத்தெரியாதவன் முட்டாள். அவனுக்கு வாழ்க்கை கொடுக்கப்படக்கூடாது. அவர்கள் சாகவேண்டியதுதான். ஏன் இந்தக் கூட்டம் இவர்களுக்குமேலே உண்டு களைத்து அமர்ந்திருப்பவர்களைத் தாக்கக் கூடாது? கடித்து ரத்தம் குடிக்கக்கூடாது? தசைகளைப் பிய்த்துத் தின்னக்கூடாது? கெஞ்சிக்கெஞ்சி சாகிறார்கள். கெஞ்சுபவர் களைப்போல அருவெறுப்பூட்டுபவர்கள் வேறில்லை. ஓ, ஒரு பெரும் விஷமழை பெய்து இந்த ஒட்டுமொத்த மக்கள்திரளே செத்து அழிந்துவிடாதா? இப்படி ஒன்று இந்த மண்ணில்

நிகழவேயில்லை என்றாகிவிடாதா? 'ஓ ஜீஸஸ்! ஜீஸஸ்! என்னைக் காப்பாற்று!.

ஆனால் மண்மீது இந்த மானுடமே கைநீட்டி கெஞ்சிக்கொண்டிருக்கிறதே வானைநோக்கி மன்றாடிக் கொண்டே இருக்கிறதே நூற்றாண்டுகளாக. வெட்கமானமில்லாமல் கெஞ்சிக்கொண்டிருக்கிறது. கண்ணீர்விட்டு அரற்றிக்கொண்டிருக்கிறது. காப்பாற்று! என்னைக் காப்பாற்று. கடவுள் என்று ஒருவர் இருந்து அவர் குனிந்து கீழே பார்த்தால் அவரது கரிய சப்பாத்துக்களைத் தொட எம்பும் புழுக்கள் போன்ற கைவிரல்களைத்தானே பார்ப்பார். குமட்டி எழும் அருவெறுப்புடன் தன் ரதத்தை அந்த பெருந்திரள்மீது உருட்டிச் செல்வார். ஆனால், அவரது சப்பாத்தை அவர் பார்த்தாக வேண்டும். அதில் ஒட்டி உலர்ந்திருக்கும் குருதிச்சொட்டைக் கண்டு திகைக்கவேண்டியிருக்கும். ஜீஸஸ்! என் மனதைக் காப்பாற்று. நான் நிலையிழந்திருக்கிறேன். ஜீஸஸ்!.

"இன்னும் எவ்வளவு தூரம்?" என்றான் ஏய்டன்.

"சர், நள்ளிரவில் செங்கல்பட்டைச் சென்று சேரமுடியும். செங்கல்பட்டுக்கு அப்பால் இந்தவேகத்தில்கூட போக முடியாது. இன்னும் பலமடங்கு பஞ்சஅகதிகள் குவிந்து கிடக்கிறார்கள். அங்கெல்லாம் பிணங்களை எடுப்பதுகூட இல்லை"

"செங்கல்பட்டு வரை சென்றால் போதும். நான் செங்கல்பட்டு அதிகாரிகளைச் சந்தித்துவிட்டுத் திரும்ப வேண்டும்."

"விடியும்போது திரும்பிவிடலாம். மாலைக்குள் சென்னைக்குள் நுழையமுடியும் சார்"

"ம்" என்று ஏய்டன் கண்களைமூடிக்கொண்டான். வெளியே மனிதகுலமே செத்துக்கொண்டிருக்கும் ஓலம். ஏய்டன் கண்களை மூடி அந்த சத்தத்தைக் கேட்டுக்கொண் டிருந்தான். எதிரே வரும் சுமைவண்டிகளின் வெளிச்சங்கள் தாண்டித் தாண்டிச்சென்றன.

"இத்தனைபேர் இருக்கிறார்களே. இவர்களெல்லாம் எங்கிருந்து வருகிறார்கள்?"

"மழைக்காலத்தில் வளைகள் மூடும்போது வயலில் எலிகள் வெளியே வரும்சார். அப்போதுதான் அவ்வளவு எலிகள் வாழ்ந்துகொண்டிருப்பதே தெரியும். இந்த நாட்டில் நாங்கள் இத்தனைபேர் வாழ்வதே இப்போதுதான் வரலாற்றுக்குத் தெரிகிறது"

பின்பு மெல்ல ஒலி அடங்கியது. வெளியே பார்த்தான் சாலையோரங்களில் மனிதர்கள் கிடந்தார்கள். வண்டியின் விளக்கொளியில் வெள்ளம் வழிந்தபின் சுள்ளிக்குவியல்கள் போல மனிதக் கைகளும் கால்களும் தெரிந்தன.

"உயிருடன் இருக்கிறார்களா?"

"பெரிய வேறுபாடு இருக்க வாய்ப்பில்லை.".

சடலங்கள் நிறையக்கிடந்ததனால் மனிதர்கள் விலகிப் போயிருக்கலாம் என்று நினைத்துக்கொண்டான். விலக முடியாதவர்கள் சடலங்களுடன் சேர்ந்து கிடப்பார்கள். தாங்களும் சடலங்களாக ஆகிக்கொண்டிருப்பதை ஒவ்வொரு கணமும் உணர்ந்துகொண்டு. ஆன்மாவின் கடைசித்துடிப்பு. உயிர்வாழ்வதற்காக. அடுத்த கணத்தை பெருவெளியில் இருந்து ஈட்டிக்கொள்வதற்காக. ஆனால், இருத்தல் என்பது மரணத்தை விடக் குரூரமானது. இவர்களுக்கு இருத்தல் என்பது பசித்தல் தான். கொல்லும் பசி! எப்படி இருக்கும் அது? நாட்கணக்கில் பசித்தால் எப்படி உணர்வார்கள்?

"ஜோசப் நீ எத்தனை நாள் பசித்திருந்திக்கிறாய்?"

"மூன்றுநாட்கள் வரை சார். சிறுவயதில் நான் உணவைவிடப் பசியைத்தான் அதிகமாக அறிந்திருக்கிறேன்"

'எவ்வளவு கச்சிதமாகப் பேசுகிறான்' என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான்.

"முதல் மூன்று நாட்களுக்குப்பின்னால் பசிக்காது. வயிற்றில் அவ்வப்போது பெரிய ஒரு வலி வரும். சாட்டையால் அடிப்பதுபோல அல்லது சூட்டுக்கோலால் இழுப்பதுபோல. மற்றபடி எதுவுமே தெரியாது. பிரக்ஞை என்பதே இருக்காது. ஒருவாய் உணவு என்ற ஒரே நினைப்பாக மனம் மாறிவிடும். பார்த்தீர்களல்லவா? ஆன்மாவில் ஒரு சொல்கூட மிச்ச

மிருக்காது. சொந்தம், பந்தம், ரத்தம், கண்ணீர் ஒன்றுமே புரியாது. அன்னம் அன்னத்துக்காகத் தேடும் தவிப்பு மட்டும்தான். பார்த்தீர்களல்லவா? எவராவது இன்னொருவரைப்பற்றி எண்ணினார்களா? இந்த ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஒவ்வொருவரும் முழுமையான தனிமையில் இருக்கிறார்கள்."

சட்டென்று ஒரு திடுக்கிடலுடன் ஏய்டன் கம்பியைப் பிடித்தான். "ஆமாம், பல பெண்களிடம் குழந்தைகள்கூட இல்லை"

"கடைசிவரை கூடவே வருவது தாயின் பிள்ளைதான். ஆனால், அதுவும் ஒருகட்டத்தில் உதிர்ந்து விடுகிறது"

ஏய்டன் கண்களை மூடிக்கொண்டான். நெற்றிக்கு இரு பக்கமும் நரம்புகள் துடிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தான். தனிமை. தன்னந்தனிமை. அதை நீ என்னிடம் சொல்லவேண்டிய தில்லை. அதை என்னிடம் எவரும் சொல்லவேண்டியதில்லை. கடவுள் என்னைச்சூழ அதை நிறுத்தியிருக்கிறார். மரப் பெட்டிக்குள் ஷாம்பேய்ன் புட்டியை அசையாமல் கவ்வி நிறுத்தியிருக்கும் மரத்தூள் போன்றது அது. இந்த இருட்டும் அந்த மரத்தூள்போல என்னை இறுக்குகிறது. நான் காத்திருக்கிறேன். புளித்துப்புளித்து நொதித்து நொதித்து என் ஆன்மா காத்திருக்கிறது. 'ஏசுவே, என் மீட்பரே, நான் உன்னுடைய இனிய மது. உன்னைக் கொல்லும் போதை.'

கடவுள்! அது ஒரு வெறும் மனப்பழக்கம்தானா? சிறுவயதில் பெற்றோரால் கற்றுக்கொடுக்கப்படுவது. அவ்வளவுதானா? ஆனால் உலகமெங்கும் மக்கள் ஏதோ கடவுளை நம்புகிறார்கள். வலிக்கும்போதும் பசிக்கும்போதும் அவமதிக்கப்படும்போதும் சாகும்போதும் கடவுளே என்று கதறுகிறார்கள். அப்படியென்றால் இது ஒரு மானுடப்பழக்கம். கண்ணிமைப்பதுபோல, சொறிந்துகொள்வதுபோல. ஒரு உயிரியல் தேவை. அதற்கப்பால் ஒன்றுமில்லை. இல்லை கடவுள் இல்லையென்றால் இவை இன்னும் குரூரமான அர்த்த மின்மையை அடைகின்றன. கடவுள் இந்த ஆபத்தைக் குறைக்கும் தராசின் மறுதட்டிலுள்ள அபத்தம் மட்டுமே.

கடவுள். அப்படி ஒருவர் எங்கிருக்கிறார்? வானிலா? பசியற்ற, மரணமற்ற அந்தர வெளியில் என்றால் அவரிடம் எதைப்புரியவைப்பது. சாட்டை அடிபோல வலிக்குமாம். பசி சூட்டுகோல்போல எரிக்குமாம். அந்தச்சாட்டையின் கைப்பிடி அவர் கையிலா இருக்கிறது? அந்தச் சூட்டுக்கோல்தான் அவரது பெருங்கருணையா? ஆமாம் என்பார்கள் இந்துக்கள். ஆக்கல், காத்தல், அழித்தல் அவன் செயல் என்பார்கள். அவர்களின் தெய்வங்களில் ஒன்று பேரழிவின் நாயகன். அவனுடைய தொண்டையில் பிரபஞ்சத்தை அழிக்கும் விஷம் தேங்கி யிருக்கிறது. அதில் ஒரு துளி உருகிச்சொட்டிவிட்டதா இந்த சபிக்கப்பட்ட மண்ணில்? ஆக்கல், காத்தல், அழித்தல். முத்தொழில். மூன்று முகம். மூன்று வெறுமை. மூன்று அர்த்தமின்மைகள்.

Is it the Eternal Triune, is it He.

Who dares arrest the wheels of destiny.

And plunge me in the lowest Hell of Hells?

Will not the lightning's blast destroy my frame?,.

எங்கிருந்து வந்த வரி? என்னுள் விஷக்கசப்பாய் தேங்கிய ஷெல்லிதான். ஆம், அவன்தான். அவனால்தான் கடவுளுக்கு நிகராக நின்று அந்தக் கொடுங்கோலை இப்படி நிந்திக்க முடிந்தது. நிறமழிந்த வண்ணத்துப்பூச்சிபோல அர்த்தங்க ளெல்லாம் அழிந்து வெறும் உளறலாக என் முன் கிடக்கின்றன இவ்வரிகள். ஒரு வெறும் உயிர் போலத்துடித்தபடி. கடைசி மரணச்சிறகடிப்புடன். நரகத்திலும் கீழான நரகம். மரணத்திலும் கீழான மரணம். கீழ்மையை மேலே கொண்டுசெல்லும் அதிகீழ்மை. இங்கே நீ மனிதர்களைத் தள்ளிவிட்டிருக்கிறாய். உன் காலால் குப்பைக்கூளமென ஒதுக்கிக் குவித்திருக்கிறாய். வண்டிச்சக்கரம் அதிர்ந்தது. ஒரு உக்கிரமான வலிமுனகல். இருட்டுக்குள் ஏதோ மனிதஉடல். அதன் எலும்புகள் நொறுங்கி யிருக்கும். பேன்போல நசுங்கி உடைந்து அழிந்திருக்கும். அது தன் எஞ்சிய ஆற்றலால் கையையோ காலையோ இயக்கித் தவழ்ந்து சாலையைத் தேடி வந்திருக்கிறது. பசித்த தனித்த ஆதாமின் நுனிவிரலைத் தீண்டும் பிதாவின் நுனிவிரல் இந்தச்சாலை.

இந்நேரம் அந்த உயிர் பிரிந்திருக்கும். உடலில் இருந்து எழுந்து இருளில் மிதந்து கீழே பார்த்து நிற்கும். பிரிந்த ஆவிகள் ஒரு பெரிய படலம்போல இந்த இருண்ட வானை மூடியிருக்கின்றனவா? இந்த வண்டியின் சக்கரம் முழுக்க ரத்தம் சொட்டிக் கொண்டிருக்கும். நசுக்குவதற்குச் சக்கரம்போலச் சிறந்தது வேறில்லை. நசுக்கியபின் அது அங்கே தங்குவதில்லை. சென்றுகொண்டே இருக்கிறது. நசுக்குவதன்மூலமே அந்த நகர்தலை நிகழ்த்துகிறது. Wheels of destiny. ஓ, இந்த மூளை என் நரகம். ஷெல்லி அங்கே ரத்தம் சொட்டும் முள்சவுக்குடன் நிற்கும் நரகதேவன்

"வண்டியை நிறுத்துங்கள்" என்று ஆண்ட்ரூ சொன்னான். "தயவுசெய்து வண்டியை நிறுத்துங்கள்"

ஏய்டன் சன்னலைத் தட்டியதும் வண்டி நின்றது.

ஆண்ட்ரூ தன் பையை எடுத்துக்கொள்வதைக் கண்டதும் "இறங்கப் போகிறீர்களா?" என்றான் ஏய்டன்.

"ஆமாம்." ஆண்ட்ரூ சுட்டிக்காட்டினான். அவர்களின் வண்டிக்கு முன்னால் ஒரு மாட்டுவண்டி இருட்டுக்குள் சென்று கொண்டிருந்தது. "நான் அவர்களுடன் சேர்ந்து கொள்கிறேன்"

"ஏன்?"

"அந்த வண்டி நிறைய சடலங்கள் அவர்கள் சடலங்களை அடக்கம் செய்கிறார்கள்"

ஏய்டன் கவனித்தபோது வண்டியின் பின்விளிம்பில் நீட்டியும் தொங்கியும் தெரிந்த கைகால்களைப் பார்த்தான். "அவர்கள் அரசு ஊழியர்களாக இருப்பார்கள்."

"நான் அவர்களுடன் இருக்க விரும்புகிறேன்" என்றான் கதவைத் திறந்து இறங்கியபடி.

"நீ சாகநேரிடும். இந்தமண்ணே விஷமாகிவிட்டிருக்கிறது"

"நான் இப்போது விரும்புவதெல்லாம் சாவதை மட்டும்தான். இந்த ஒவ்வொரு சடலத்திடமும் நான் அதைச் சொல்லமுடியும். இதோபார் நானும்தான் சாகிறேன் என்று

அவற்றின் கண்களைப்பார்த்துச் சொல்வேன். அதை மட்டும் தான் நான் செய்யவிரும்புகிறேன்''

ஜோசப் "சர், அது உங்கள் ஸ்காட்டிஷ் சபையினரின் வண்டிதான். 'அவர்கள்தான் சடலங்களை நீக்கம் செய்கிறார்கள்.'' என்றான்.

"நான் இங்குதான் இருக்கப்போகிறேன். இத்தனை தூரம் ஜெபித்துக்கொண்டே வந்தேன். 'என் தேவனே, ஏன் இது? என் ஏசுவே' என்று என் மண்டையால் அவன் பாதங்களை அறைந்து கொண்டே வந்தேன். 'எதற்காக நீ இங்கே என்னைக்கொண்டு வந்தாய் என் தேவனே' என்று கதறினேன். நான் லண்டனில் இருந்து கிளம்பியதுமுதல் இக்கணம் வரை ஒரு தெளிவான திட்டம் என் கண்ணுக்குப்படுகிறது. அது எதற்காக என்று கேட்டேன். 'எனக்கு நீ பதில் சொல்லவில்லை என்றால் இந்த மண்ணிலேயே செத்துவிழுவேன்' என்று கதறினேன். அப்போதுதான் இந்த வண்டியைக் கண்டேன். இதற்காகத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். நான் வாழவேண்டிய மண் இது. நான்செய்யவேண்டிய பணி இது''

"நீ கல்கத்தாவில் பணிக்குச்சேரவேண்டும்-''

"அந்தக் காகிதங்களை அப்போதே தூக்கி வீசிவிட்டேன்''

"ஏசு உன்னுடன் இருக்கட்டும்'' என்றான் ஏய்டன் கதவைச்சாத்தியபடி.

"ஆம், அவர் என்றும் என்னுடன் இருப்பார். அவரது இச்சைகளை நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. அவரது திட்டங்களை நம்மால் மாற்றமுடியாது. நாம் செய்வதெல்லாம் அவருக்கு நெருக்கமாக இருப்பது மட்டும்தான். வருகிறேன்''

ஆண்ட்ரூ தன் பையைச் சுழற்றித் தோளில் மாட்டிக் கொண்டு இருட்டில் நடந்து புதைந்து மறைவதை ஏய்டன் பார்த்துக்கொண்டிருந்தான். சடலங்கள் குவிந்த பிரம்மாண்டமான ஒரு குழியில் அவன் தலைகுப்புற விழுந்து விழுந்து சென்றது போலிருந்தது.



# 8

ஏய்டன் வெளியே வருவதற்குள் துரைசாமி வண்டியைக் கழுவிமுடித்திருந்தான். ஒருபக்கம் அவன் துடைத்துக் கொண்டிருக்க மறுபக்கம் ஈரத்துளிகள் விளக்கொளியில் மின்ன வண்டி நின்றிருந்தது. படிகளில் இறங்கி வந்த ஏய்டன் ஒருகணம் செவ்வொளியில் அவற்றை ரத்தத்துளிகள் என்று எண்ணி துணுக்குற்றான். துரைசாமி துணியைக் கொண்டுசென்று வைத்துவிட்டு வந்து நின்றான். குதிரைகள் அவன் வந்ததை அறிந்து பெருமூச்சுவிட்டன. கறுப்புக்குதிரை கழுத்தைக் கொஞ்சமாகத்திருப்பி அவன் வாசனையை வாங்க முயன்றது. பின்கால்களைத் தூக்கிவைத்து வாலைச்சுழற்றியது.

துரைசாமி எடுத்துவைத்த பெட்டியில் ஏறி ஏய்டன் உள்ளே நுழைந்து இருக்கையில் அமர்ந்துகொண்டான். துரைசாமி வண்டியோட்டிகளுக்குரிய காக்கி நிற உடையும் சிவப்பு குறுக்குப்பட்டையும் வெள்ளைக்குஞ்சம் வைத்த சிவப்புநிறத் தலைப்பாகைவடிவ தொப்பியும் அணிந்திருந்தான். தன் சப்பாத்துகளையும் பெல்ட்டுகளையும் நன்றாகப் பாலீஷ் போட்டிருந்தான். இடுப்பிலிருந்த வாளுறைகூட நன்றாக மின்னியது. மௌனமாக இருக்கை பீடத்தில் ஏறி அமர்ந்து

கொண்டு சவுக்கை எடுத்துக்கொண்டான். அவனுடைய ஆணைக்காகக் காத்திருந்தான்.

சட்டென்று ஏய்டன் நினைத்துக்கொண்டான், 'வண்டியோட்டியின் இருக்கையில் ஜோசப் அமர்ந்ததனால்தான் துரைசாமி அதைக் கழுவினானா' என்று. 'அப்படித்தான் இருக்கும்' என்று ஒருகணமும் 'வண்டி முழுக்க இருந்த ரத்தவீச்சத்துடன் கோட்டைக்குச்செல்லமுடியாது என்று அவனுக்குத் தெரியாதா' என்று இன்னொரு கணமும் தோன்றியது. துரைசாமி எந்தச் சலனமும் இல்லாமல் காத்திருந்தான். ஏய்டன் கதவில் இருமுறை தட்டியதும் குதிரையை மெல்லத் தட்ட வண்டி மெல்லிய உலுக்கலுடன் முன்னகர்ந்தோடியது. கடற்காற்று அவன் மேல் வந்து அலையலையாக மோதி சிதறிச்செல்ல ஆரம்பித்தது.

தொப்பியை எடுத்து முழங்காலில் வைத்துக்கொண்டு தலையை நீவிக்கொண்டான். மடியில் இருந்த தோலுறை போட்ட காகிதக்கோப்பை எடுத்து விரித்துக் காகிதங்களை மேலும் ஒருமுறை பார்த்தான் படபடப்புடன் அதை மூடி விட்டுக் கண்களை மூடிக்கொண்டு பின்னால் சாய்ந்து கொண்டான். ஒரு இரவும் பகலும் பார்த்தவை முழுக்க வெகுவாகப் பின்னால் கிடந்தன. கனவு போல, இளமைப்பருவ நினைவுபோல, சரியாக நினைவுகூரமுடியாத ஏதோ புனைகதை போல்.

உண்மையில் மாலை அவன் திரும்பி வரும் வழியிலேயே அவற்றில் இருந்து வெளியே வர ஆரம்பித்துவிட்டான். செங்கல்பட்டு கலெக்டர் அலுவலகத்திலும் தாசில்தார் அலுவலகங்களிலும் டாணா கச்சேரியிலும் ஸ்காட்டிஷ் மிஷன் சர்ச்சிலும் கத்தோலிக்க மாதாகோயிலிலும் பகல் முழுக்க தகவல்களைத் திரட்டினான். களப்பணி ஆற்றும் எல்லா சிறு அதிகாரிகளிடமும் இரண்டுபக்க அளவில் அறிக்கைகள் கோரிப் பெற்றான். எழுத்தர்களிடம் முக்கியமான புள்ளி விவரங்களையும் ஆவணங்களையும் நகல் எடுக்கச் சொல்லி எடுத்துக்கொண்டான். அவனுடைய சொந்த அவதானிப்பு

களைச் சுருக்கமான குறிப்புகளாக எழுதிக்கொண்டான். நாற்பது பக்கங்களுக்குமேல் இருந்தன அவை.

வண்டியில் அவற்றை வரிசையாக கவனமாக வாசித்துக் கொண்டே வந்தான். அப்போது ஒருமுறை சிறு இடைவெளியுடன் வெளியே புதர்க்காடுகளைப் பார்த்தபோது ஒன்றை உணர்ந்தான். மனம் அடங்க ஆரம்பித்திருந்தது. அவன் கண்ணெதிரே கண்ட கொடூரமான கனவுவெளி வெறும் தகவல்களாக மாறிக் காகிதங்களில் பதிந்து கண்முன் இருந்தது. அந்தக் கனவு அவனுக்கு அப்பாற்பட்டது. அவனை ஒரு துரும்புபோல அடித்துச்செல்லும் பெருங்கடல் அலைவெளி அது. இந்தப்புள்ளிவிவரங்கள் அவன் கைகளுக்குள்ளும் மூளைக்குள்ளும் அடங்கக்கூடியவை. மீண்டும் மீண்டும் அவற்றை வாசித்து விதவிதமாக அடுக்கிக்கொண்டான். மாற்றி மாற்றி அடுக்க அடுக்க அந்தச் செயலே அதன் மீது அவனுடைய கட்டுப்பாட்டை அதிகரிப்பதாகத் தோன்றச்செய்தது. வெளியே அந்த மரணநிலம் வெகுதூரத்துக்கு விலகிச்சென்றது.

வந்ததுமே மேஜை முன் அமர்ந்து ஓர் அறிக்கையை எழுத ஆரம்பித்தான். எழுத எழுத அவன் மனம் ஒரு மறைமுகமான உவகையை அடைவதை உணர்ந்தான். எழுதுவதற்கான விஷயங்கள் முடிவில்லாமல் இருப்பதன் பிரமிப்பும், அது உருவாக்கிய எழுச்சியும் மெல்லமெல்ல ஆழ்மனதால் ரசிக்கப்பட்டன. பின்னர் தான் எழுதிக்கொண்டிருப்பது ஒரு வரலாற்று ஆவணத்தை என்ற எண்ணம் எழுந்தது. அது வரலாற்றையே தலைகீழாக மாற்றக்கூடும். நூற்றாண்டுகளுக்குப் பின்னர்கூட அதை மனிதர்கள் படிக்கக்கூடும். அவனுடைய பெயர் அதில் இருக்கும். 'காப்டன் ஏய்டன் பைர்ன்' ஆம், அது அவன்தான்.

மேலும் சிலவரிகளுக்குப்பின்னால் அவன் அந்த காட்சிகளை வரலாறாக ஆக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தான். மிகச்சரியான சொற்களுக்காக அவன் மூளை துழாவியது. கண்டடைந்ததும் பேருவகையுடன் தலைக்குமேல் தூக்கியபடி ஓடிவந்தது. அவன் வாழ்நாளில் எழுதியதிலேயே நேர்த்தியான உக்கிரமான வரிகளை எழுதிக்கொண்டிருந்தான்.

அந்தக் காட்சிகளை துல்லியமான விவரணை வழியாக மொழியில் நிகழச்செய்தான். தகவல்களைச் சீராக அடுக்கி தர்க்கபூர்வமான முடிவைநோக்கிச்சென்று ஈட்டிமுனை போன்ற சொற்றொடரில் முடித்து நிறுத்தினான். ஒளிமிக்க கூர்மையுடன் அந்த வரிகள் நீட்டி நின்றன. கூர்மையை வருடும் விரல் போல அவன் பிரக்ஞை மீண்டும் மீண்டும் அச்சொற் றொடர்களை வாசித்து ரசித்தது.

எழுதி முடித்ததும் அவன் நிறைவுடன் மெல்லக் கால்களை நீட்டி நாற்காலியில் சாய்ந்தான். வாசலில் டேவிட் நின்று கொண்டிருந்தான். "சர்?" என்றான். "டீ" என்றான் ஏய்டன்.

டேவிட் சென்று மீண்டபோது பொரித்த ரொட்டித் துண்டுகள் நிறைந்த ஒரு சிறு தட்டையும் கொண்டுவந்து அருகே வைத்தான். 'அவனுக்கு தன் தேவைகள் தெரியும்' என ஏய்டன் நினைத்தான். ரொட்டியைக் கண்டதும் பசி பொங்கி எழுந்தது. ரொட்டியைத் தின்று டீயைக் குடித்தான். பின்பு எழுதியதை படித்துப்பார்த்தான். வாசிக்க வாசிக்க அதிருப்தியில் மனம் சுருங்கிக்கொண்டே சென்றது. சொற்றொடர்கள் எல்லாமே எங்கோ ஓரிடத்தில் கசங்கியிருந்தன. விளிம்புகள் நெளிந்து ஒன்றுடனொன்று பொருந்தாமல் நின்றன. ஒவ்வொரு சொற்றொடராகத் திருத்தினான். வார்த்தைகளை மாற்றினான். சில பத்திகளையே வெட்டி, திருப்பி எழுதினான்.

மூன்றாவது பிரதியை எழுதியபின் அந்த வார்த்தைகள் வழியாகச் சென்றபோது அவை அவனிடமிருந்து வெகுவாக விலகி நின்றதை உணரமுடிந்தது. அந்த விலகலினாலேயே அவை கச்சிதமாக அமைந்திருந்தன. அப்போதும் நுட்பமான பிழைகள் கண்ணுக்குப்பட்டன. ஆனால் அதற்குமேலும் அந்த எழுத்துக்களை வாசிக்கமுடியவில்லை. அவை யாரோ எங்கோ எழுதியவைபோலச் சலிப்பூட்டின. தொடுபேனாவை நீரில் நன்றாகக் கழுவிப் பீங்கான் தாங்கியில் பொருத்தினான். 'மரிஸா இருந்திருந்தால் அதை அழகான கையெழுத்தில் பிரதியெடுக்கச் சொல்லலாம். இப்போதுகூட அவளை வரவழைக்கலாம். வேண்டாம். இந்த வரலாறு என்னுடைய சொந்தக்

கையெழுத்தில் இருக்கட்டும்'. நூற்றாண்டுகளுக்குப் பின்னால் மக்கள் காணப்போகும் அவனுடைய கையெழுத்து அது.

ஏய்டன் கண்களைமூடிக்கொண்டு கொஞ்சநேரம் அமர்ந்திருந்தான். அதுவரையிலான எல்லா அனுபவங்களும் ஒன்றுடன் ஒன்று கலந்து ஒரு பெரும் குவியலை அவன்மேல் கொட்டியது போல நினைவுக்கு மீண்டன. இரவெல்லாம் அவன் கண்டுகொண்டு போன மரணப்பிரவாகம் காலையில் இன்னொன்றாக மாறிவிட்டிருந்தது. காலைவெளிச்சத்தில் இருண்ட கரிய மனிதக்குவியல்கள் எந்த விதமான ஒழுங்குக்கும் கட்டுப்படாமல் அர்த்தமில்லாமல் அலைபாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். கூட்டம் கூட்டமாக அவர்கள் சென்றுகொண்டிருந்தார்கள். எதையும் பார்க்காமல் எதையும் கேட்காமல் தன்னிச்சையாக கால்களால் கொண்டுசெல்லப் படுபவர்களைப்போல.

வழி நெடுக எல்லா மரத்தடிகளிலும் அமர்ந்திருந் தார்கள். புதர்கள் நடுவே விழுந்து கிடந்தார்கள். காட்டுக்குள் பல இடங்களில் மிகப்பெரிய குழிகள் வெட்டப்பட்டு அவற்றில் ஆணும் பெண்ணுமாக வண்டிநிறைய சடலங்களைக் கொண்டு வந்துகொட்டி உப்புமூட்டைகளையும் சுண்ணாம்பையும் அவற்றின் மேல் பரப்பி மண்ணை அள்ளிக்கொட்டி மூடிக் கொண்டிருந்தார்கள். அதைப்பார்த்தபடி அந்தச் சடலங்களைப் போலவே இருந்த மனிதர்கள் செத்த மீன்களின் கண்களுடன் கூடி நின்றிருந்தார்கள்.

இளவெயில் ஏறியபோது அவன் செங்கல்பட்டு தாசில்தார் அலுவலகத்துக்குச் சென்று சேர்ந்தான். தலையாரியை அனுப்பி தாசில்தாரை வரச்சொன்னான். தாசில்தார் நீண்ட நாமம் போட்டிருந்த பிராமணர். மீசையற்ற மேலுதடு விசித்திரமாக வளைய இந்திய ஆங்கிலத்தில் உபச்சார வார்த்தைகளைச் சொல்லியபடி வந்தார். "வருவதாகத் தகவல் இல்லை. இன்ஸ்பெக்ஷன் பங்களாவில் இன்னொரு தாசில்தாரும் அவர் மனைவியும் தங்கியிருக்கிறார்கள். உடனே காலிசெய்யச் சொல்லிவிடுகிறேன். அங்கே குளித்து இளைப்பாற எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறேன்" என்றார்.

“தேவையில்லை. நான் உடனே போகவேண்டும்.” என்றான் ஏய்டன்.

அவர் முகம் மங்கியதென்றாலும் புன்னகை மாறாமல் “தேவையான எல்லாவற்றையும் அங்கேயே கொண்டு வரச்சொல்கிறேன்” என்றார்.

“பரவாயில்லை. நீங்கள் பஞ்சம் பற்றி எடுத்திருக்கும் எல்லாத் தகவல் அறிக்கைகளையும் நடவடிக்கைக் குறிப்புகளையும் நான் பார்க்கவேண்டும்”

“உடனே செய்கிறேன், சார்” என்றபடி அவர் ஃபைல்களை எடுத்து வைக்க ஆரம்பித்தார். அதற்குள் தலையாரி ஓடிச் சென்று எழுத்தர்கள் இருவரைக் கூட்டிவந்தான். இருவருமே அவசரமாக முகம் கழுவி நெற்றியில் மதச்சின்னங்கள் அணிந்திருந்தார்கள். வேட்டிக்குமேல் சாம்பல்நிறமான பித்தானில்லாத கோட்டு. உள்ளே அழுக்கான வெள்ளைச்சட்டை. பெரிய தலைப்பாகைத் தொப்பி. கையில் துணிப்பை. வந்ததுமே பதற்றத்துடன் “குட்மார்னிங் சார்” என்றபின் வேலைகளை ஆரம்பித்தார்கள்.

சற்று நேரத்தில் அவனுக்குப்புரிந்தது, பிரிட்டிஷ் நிர்வாக யந்திரம் அதன் ஆதார விதிகளின்படி பஞ்சத்தைக் கையாள கற்றுக்கொண்டுவிட்டது என்று. பஞ்சத்தின் ஒட்டுமொத்த விரிவையும், அதற்கான காரணங்களையும், அதை நிறுத்தும் வழிகளையும் அது முழுமையாகவே தன் கவனத்தில் இருந்து தவிர்த்துவிட்டிருந்தது. பஞ்சத்தைச் சாலைகளில் பெருகிச் செல்லும் மக்கள்திரள் மற்றும் சாலையோரங்களில் கிடக்கும் சடலங்கள் என்ற பிரச்சினையாக வகுத்துக்கொண்டிருந்தது. அந்தப்பிரச்சினையை ஆரம்ப திகைப்புக்குப்பின் சீராகக் கையாள ஆரம்பித்திருந்தது.

பெரும்பாலான சாலைகளில் ஐந்து பர்லாங்கு தூரத்திற்கு ஒரு சார்ஜண்ட் தலைமையில் ஆயுதமேந்திய பட்டாணிப்படை காவல் காத்தது. அதற்காக வாலாஜா நவாப்பின் முன்னாள் படைவீரர்கள் மாதம் எட்டணா சம்பளத்துக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள். மதுரையில் இருந்து

மறவர்கள் வரவழைக்கப்பட்டு இருபது மறவர்களுக்கு ஒரு பிரிட்டிஷ் டாணாக்காரனைத் தலைவனாக நியமித்துத் துணைப் படைகள் உருவாக்கப்பட்டிருந்தன. சாலைகள் செல்லும்வண்டிகள் அதற்கான அலுவலர்களிடம்வண்டியிலுள்ள பொருளின் மதிப்புக்கு ஏற்ப பணம் கட்டி ரசீது பெற்றுக் கொண்டால் பிரிடிஷ் அரசு அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும்.

பிணங்களை எடுத்து அடக்கம்செய்யத் தோட்டிகளைக் கொண்டு ஒரு படை அமைக்கப்பட்டிருந்தது. அதற்காக மாட்டுவண்டிகள் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தன. பிணங்களை எடுத்து வண்டியில் போடுவதும் குழிவரை கொண்டுவருவதும் மட்டும் தோட்டிகளின் வேலை. வண்டியை ஓட்டுவதும் குழி எடுப்பதும் எல்லாம் பிறர். ஒவ்வொரு குழுவுடனும் ஒரு கணக்குப்பிள்ளை இருப்பார். சடலத்துக்கு அரையணா வீதம் கூலி. அவை அந்தக்குழுவுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். கணக்குப்பிள்ளைகள் சிரஸ்ததாரால் கட்டுப்படுத்தப்பட்டார்கள். வண்டிகளிடமிருந்து பெறப்படும் கட்டணமே இந்தச் செலவுகளுக்குப் போதுமானதாக இருந்தது.

ஆவணங்களில் பிணங்களின் எண்ணிக்கையும் சாலைகளில் குவியும் மக்களின் பெருக்கமும் எளிய எண்களாக உருமாறிக் கரிய கடுக்காய் மை அடையாளங்களாகப் பருவடிவம் கொண்டு பதிந்திருந்தன. ஏய்டன் அவற்றைப்பார்த்தபோது புன்னகையுடன் எண்ணிக்கொண்டான். செங்கல்பட்டின் ஒரு கிராமச்சாலையில் கைவிடப்பட்டுப் பசித்துச்சாகும் குழந்தைகள் கணக்குப்பிள்ளைக்கு அரையணா கணக்கில் எண்களாகிறார்கள். சிரஸ்ததாரின் மொத்தக்கணக்கில் சிறிய எண்ணாகிறார்கள். தாசில்தாரின் மொத்தக்கணக்கில் ஒரு செலவினத்தில் ஒரு துளி. அவனுடைய அறிக்கையில் ஒரு வரி. கவர்னருக்கு ஒரு கண்ணோட்டல். கடவுளுக்கு? கடவுளுக்கு அது ஒரு கண நினைப்பாகக்கூட இருக்குமா என்ன?

'என் விசுவாசத்துடன் நான் மீண்டு சென்றால் என்னை ஏசு கைவிடவில்லை என்று பொருள்' என அவன் திரும்ப வண்டி ஏறும்போது நினைத்துக்கொண்டான். 'ஆண்ட்ருவை

ஏசு எதுவரை துணைநின்று காப்பார்? ஒரு கணத்தில் அவனுடைய விசுவாசம் அவனைக் கைவிடுமென்றால் அங்கேயே அவன் உடைந்து செத்து விழுவான். அதற்குள் அவன் நோயில் சாகவேண்டும். அவனுக்காக வேண்டிக்கொள்வதாக இருந்தால் அதைத்தான் வேண்டிக்கொள்ளவேண்டும்'.

ஆனால், 'விசுவாசம் என்பது வெளியே இல்லை' என்று தோன்றியது. 'சில வார்த்தைகள் வழியாக எவ்வளவு தூரம் நான் விலகி வந்திருக்கிறேன். அவனால் அது முடியாது. அவனைப் போன்றவர்கள் சொற்களால் ஆன்மாவை மறைத்துக்கொள்ளும் கலை அறியாதவர்கள். முதல் கணத்திலேயே இந்தப் பஞ்சத்தின் உண்மையான அர்த்தமென்ன என்பதை அவன் அறிந்துவிட்டான். நானோ அதை வார்த்தைகளால் எற்றி விளையாடிக் கொண்டிருக்கிறேன். தட்டித்தட்டி எனக்குப் பாந்தமான இடத்துக்குக் கொண்டு செல்கிறேன்'.

'மனிதன் எண்களையும் எழுத்துக்களையும் உருவாக்கிக் கொண்டதே இதற்காகத்தானா? கண்முன் பெருகிச்செல்லும் வாழ்க்கையில் இருந்து வசதியாக அன்னியப்படுத்திக்கொள்ள, அங்கே ஓர் அந்தரங்க உலகை உருவாக்கி அதில் குடியிருக்க'. மீண்டும் அந்த அறிக்கையையும் அதனுடன் அவன் இணைத் திருந்த ஆவணங்களையும் பார்த்தான். 'இல்லை, அது இல்லை. முதலில் நான் பார்த்தது பிரச்சினையின் முழு உருவத்தை. இப்போது அதை சாராம்சப்படுத்திவிட்டேன். அதைத்தான் நான் டியூக்கிடம் வைக்கமுடியும். அவர் புரிந்துகொண்டா ரென்றால் ஒருவேளை அங்கே நான் கண்ட மரணத்தாண்ட வத்தை என்னால் நிறுத்தமுடியும்.

நிறுத்த? ஆம் கண்டிப்பாக. மதராஸப்பட்டினத்தில் இருந்தும் நாகப்பட்டினத்தில் இருந்தும் விசாகப்பட்டினத்தில் இருந்தும் சென்றுகொண்டிருக்கும் தானிய ஏற்றுமதியை நிறுத்தினாலேபோதும் ஒருவாரத்தில் பஞ்சம் நின்றுவிடும். அதை அறியாத எந்த பிரிட்டிஷ் அதிகாரியும் இங்கில்லை. ஆனால் டியூக்கால் அதைச்செய்யமுடியுமா? உலகை வெல்ல பாலைநிலங்களில், பனிவெளிகளில், அடர்காடுகளில்

போரிட்டுக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ராணுவத்திற்கான உணவு அது. புல்வெளித்தீப் போலப் பரவிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நிறுத்த அவரால் முடியுமா? அவர் அந்த அலைகளில் மிதந்து செல்லும் ஒரு சிறிய துரும்பு. என்னைப்போல. வேறு எந்த அதிகாரியையும்போல'.

சோர்வு வந்து அவனைமூடிக்கொண்டது. 'ஏன் இந்த வீண்வேலை, திரும்பிவிடலாம்' என்று பட்டது. 'குறைந்தது இந்த அறிக்கையையாவது அளிக்காமலிருக்கலாம். இதை வாங்கி லேசாகப்புரட்டிக்கொண்டு ஒப்புக்கு எதையோ சொல்லப்போகிறார்கள். மரியாதையாக பாராட்டாக. கண்களுக்குள் எங்கோ சிரிப்பு இருக்கும். அதை இன்னொரு ஆங்கிலேயன் மட்டுமே உணரமுடியும். பிரிட்டிஷ்காரனின் புன்னகை என்பது உருக்கு யந்திரத்தின் ஒளி போன்றது. சிலசமயம் அது கில்லட்டின். ஆம். ஐரிஷ்காரன் அந்த ஆழம் வரை செல்லமுடியாது'.

வண்டி செயிண்ட் ஜார்ஜ் கோட்டை வெளிச்சுற்று மதிலை நெருங்கியது. உயரமற்ற கோட்டைச்சுவருக்குமேல் இருந்த நான்கு மேடைகளில் பீரங்கிகளின் அருகே சிறிய விளக்குகள் எரிந்தன. அங்கே நின்ற சிப்பாய்களின் மெல்லிய உருவவிளிம்புகள் புலப்பட்டன. கோட்டையின் வெளிவாசல் காவலில்லாமல் திறந்துதான் கிடந்தது. வெளிச்சமும் அதிகமில்லை. தொடர்ச்சியாக சிறிய திறந்த உல்லாசவண்டிகள் உள்ளே சென்றுகொண்டிருந்தன. ஒற்றைக்குதிரை ஃபீட்டன்களை இரட்டைத்தொப்பி அணிந்த ஆண்கள் வேகமாக ஓட்டிச்சென்றார்கள். சற்றுப் பெரிய ஃபீட்டன்களை வண்டியோட்டிகள் ஓட்ட முக்கோணத்தொப்பி வைத்த பிரிட்டிஷ் சீமாட்டிகள் பெரிய கவுன்களைக் காற்றுக்குப்பறக்காமல் கையால் பிடித்துக்கொண்டு பின்னால் அமர்ந்திருந்தார்கள். வண்டிகளின் அடியில் தொங்கிய மெழுகுவிளக்குகள் ஆடி ஆடி ஆரக்கால்களின் நிழல்களைப் பக்கவாட்டில் சுவர்களிலும் முற்றங்களிலும் நடனமிடச்செய்தன. வண்டியோட்டி எழுப்பிய மணியோசைகள் பெரிய மந்தை ஒன்று ஊர்திரும்பும் உணர்வை உருவாக்கின.

கோட்டைக்குள் இருபக்கமும் இந்தியபாணி வளைந்த ஓடுகள் வேய்ந்த உயரமில்லாத வீடுகள் வந்தன. அவற்றில் கீழ்நிலை காவல் அலுவலர்களும் பிற வெள்ளை ஊழியர்களும் வசித்தார்கள். கோட்டைக்குள் மிகச்சமீபமாக நிலக்கரிவாயு உற்பத்திசெய்யப்பட்டுச் செம்புக்குழாய்கள் மூலம் வினியோகிக்கப்பட்டு வாயுவிளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. எல்லா வீடுகளிலும் பளீரிடும் வெண்மஞ்சள் நிறத்தில் கண்ணாடிக் கோழிமுட்டைகள் போல விளக்குகள் எரிந்தன. அவற்றின் வெண்ணிற ஒளி கண்களைக்கூசுவது என ஏய்டன் நினைத்துக் கொள்வான். 'வாயுவிளக்குகள் வந்ததுமே இரவின் மென்மையும் ரகசியத்தன்மையும் இல்லாமலாகி விட்டது' என்று அவனுக்குத் தோன்றும்.

'Swiftly walk over the western wave, Spirit of Night!' ஷெல்லி விதந்தோதிய அந்த இரவு இப்போதில்லை. அதை வெள்ளையடித்து வெளிறச்செய்து விட்டார்கள். ஆனால் கோட்டைக்குள் இருந்த சிறிய சார்ஜண்டின் வீட்டில்கூட அந்த விளக்குதான் எரிகிறது. அவனுடைய ஊதியத்தில் கால்வாசியை அந்த வாயுவுக்கான கட்டணமே எடுத்துக்கொண்டுவிடும். ஆனால் அவன் அதை விடமுடியாது. அது அதிகாரத்தின் வெளிச்சம். சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் ஏவல் சூரியன்கள் அவை.

எல்லா வீட்டுத் திண்ணைகளிலும் சப்ராஸிகள் வெள்ளை ஆடைகளும் தலைப்பாகைகளுமாக நின்றிருந்தார்கள் முற்றங்களில் போடப்பட்ட நாற்காலிகளில் வேலைமுடிந்த ஊழியர்கள் சப்பாத்துகள் இல்லாமல் காக்கி அரைக்கால் சட்டையும் பருத்தி மேல்சட்டையும் அணிந்து தொப்பி இல்லாமல் ஓய்வாக அமர்ந்து குடித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் குடும்பத்துடன். சிலர் நண்பர்களுடன். சில நாய்கள் விடாமல் குரைத்துக் கொண்டிருந்தன. இருட்டுக்குள் நின்ற குதிரைகள் மூக்கு நுழைந்த பைகளில் இருந்து கொள் மென்றுகொண்டிருந்தன.

உள்கோட்டையின் வாசல் முகப்பில் இருபக்கமும் இரு பெரிய பாரஃபின் எண்ணை விளக்குகள் ஆளுயரமான ஜாடி

போன்ற கண்ணாடிக்கூண்டுக்குள் எரிந்து கொண்டிருந்தன. வட்டவடிவமான சிறிய திரிகளின் மீது உருவாகியிருந்த இளநீலநிற ஆசனத்தின்மேல் வெண்சுடர் சிறிய நடுக்கத்துடன் அமர்ந்திருந்தது. ஸ்னைடர் என்ஃபீல்ட் ரைபிள்களைக் கையில் வைத்திருந்த நான்கு வீரர்கள் வண்டியை நோக்கி வந்து சற்றுத் தள்ளி அசையாமல் நிற்க ஒரு சார்ஜண்ட் முன்னால் வந்தான். ஏய்டன் கதவைத் திறந்து இறங்கி நின்றான். அவனை அடையாளம் கண்டதும் சார்ஜண்ட் சல்யூட் அடித்தான். பின் சைகையால் வண்டியை உள்ளே போக அனுமதித்தான்.

உள்கோட்டைக்குள் அனேகமாக எல்லாக் கட்டிடங்களும் குறைந்தது இரண்டடுக்கு கொண்டவை. லண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட கரிய ஓடுகள் வேய்ந்த சாய்வான கூரைகளை உருண்ட தூண்களும் செங்கல்நிற சுவர்களும் ஏந்தி நின்றன. அலங்கார முகடு வளைந்த பெரிய சன்னல்களில் வண்ணக் கண்ணாடிகளுக்கு அப்பால் வெளிச்சம் தேங்கிக்கிடந்தது. ஜார்ஜ்நகர் முழுக்க நூற்றுக்கணக்கான சன்னல்கள் ஒளிசிந்தி வானை நிறைத்திருந்தன. கட்டிடங்களுக்கு மீதாக செயிண்ட் மேரீஸ் தேவாலயத்தின் கூம்புமுகடு எழுந்து நின்றது. இருண்ட வானப்பின்னணியில் அது தரையில் இருந்து அந்த ஒளியை வாங்கிச் சாம்பல்நிறமான மௌனமான வானைச் சுட்டிக்காட்டி நின்றது.

கற்பாளங்கள் வேய்ந்த சாலையின் இருபக்கமும் சிவந்த கல்லால் ஆன கட்டிடங்கள் வந்தன. அவனுடைய வண்டி சீராக உருண்டு சென்றது. குதிரைக்குளம்படிகள் கச்சிதமான தாளத்துடன் ஒலித்தன. கட்டிடங்களுக்கு முன் பக்கமிருந்த பெரிய முற்றங்களில் உயர்தர சாரட் வண்டிகள் நின்றிருந்தன. அவற்றருகே வண்டியோட்டிகள் குந்தி அமர்ந்திருக்க சற்று அப்பால் நீளமான லாயக்கொட்டடிகளில் குதிரைவால்கள் வரிசையாகச் சுழல்வது தெரிந்தது. வெட்டிவேர்த்தட்டி சுருட்டி வைக்கப்பட்டிருந்த திண்ணைகளில் வெள்ளை ஆடை மீது பொன்னிறப்பட்டை அணிந்து சிவப்புத் தலைப்பாகை அணிந்த சப்ராஸிகளும் வெண்ணிற ஆடை அணிந்த ஆர்டர்லிகளும் நின்றிருந்தனார்கள் சுவரோடு ஒட்டியவர்கள் போல வெள்ளைச்

சட்டையும் வெள்ளைத்தலைப்பாகையும் அணிந்த பங்காக் காரர்கள் குந்தியிருந்தார்கள். ஒரு வண்டி செல்வது அவர்களை திரும்பிக்கூடப் பார்க்கச்செய்யவில்லை.

கிளைவ்ஹவுஸின் உயரமான சன்னல்களில் வெட்டி வேர்த்தட்டிகள் சுருட்டி மேலேற்றப்பட்டு உள்ளிருந்து ஒளி பீரிட்டுக்கொண்டிருந்தது. வெள்ளைச்சுதைத் தூண்கள் தாங்கிய முகப்பில் இருபக்கமும் பெரிய வாயுவிளக்குகள் இரண்டு நிலாக்கள் போல சுடர முற்றத்தின் கல்பரப்பு அந்த ஒளியில் ஈரமாக விரிந்துகிடப்பதுபோலத் தோன்றியது. முற்றத்தில் நான்கு சாரட் வண்டிகள் கிடந்தன. பொன்னிறமான பிரம்மாண்டமான ஒரு நகை போலக் கிடந்ததுதான் 'கிரேஸ்டார்லிங்' என்று புகழ்பெற்ற ஆடம்பரவண்டி என்று ஏய்டன் ஊகித்துக்கொண்டான்.

அரசகுல விருந்துகளில் உணவுமேஜைமேல் அலங்கார மாக வைக்கப்படும் வைரங்கள் இழைக்கப்பட்ட பொற்பேழை போலிருந்தது அந்த வண்டி. பொன்னிறமான மெல்லிய கூரைக்குக் கீழே இருபக்கமும் திறக்கும் சாளரங்களில் இளஞ் சிவப்பு காஷ்மீரப்பட்டுத் திரைச்சீலைகள் அசைந்தன. இரு பக்கமும் இறங்கும் வசதிகொண்ட வாசல்கள். முன்சக்கரம் சற்றுச் சிறியது. பின்சக்கரம் பெரியது. சட்டைக்காலர்களுக்குள் வைக்கப்படும் கம்பிகளைப்போன்ற மிகமெல்லிய கம்பிகளால் ஆன மெல்லிய சக்கரங்கள். ஆடம்பரமே அகமும் புறமுமான ஒரு பிரிட்டிஷ் சீமாட்டி போன்று அது நின்றிருந்தது. அதன் வண்டியோட்டி அதனருகே அசையாமல் காவலுக்கு நின்றிருந்தான்.

ஒரு சேவகன் வந்து வணங்கியதும் ஏய்டன் வண்டி நின்றது. ஏய்டன் இறங்கிக்கொண்டான். கோப்பைக் கையில் இறுகப்பிடித்தான். வியர்த்த கை வழுக்கியது. பட்டுக்கைக் குட்டையால் கையையும் முகத்தையும் துடைத்தான். கோட்டைச் சரியாக இழுத்துவிட்டுக்கொண்டு கழுத்துக்குட்டையைச் சரியாக அமைத்துக்கொண்டான். தொப்பியை வைத்துச் சரி செய்தபடி கட்டிடம் நோக்கி நடந்தான். அவனுடைய வண்டியை ஒரு வீரன் வழிநடத்திப் பக்கவாட்டில் வெகுதொலைவில்

இருந்த லாயம் நோக்கிக் கொண்டுசென்றான். நெருங்க நெருங்க கிளைவ் ஹவுஸின் உயரம் அதிகரித்தபடியே சென்றது. அதன் பக்கவாட்டு விரிவுகள் அகன்றுசெல்ல முகப்பு மட்டுமே அவன்முன் நின்றது.

முற்றத்தில் நின்றவற்றில் இரண்டு வண்டிகள் அமெரிக்கத் தயாரிப்புகள். 'அப்போட் அண்ட் டௌனிங்' நிறுவனத்தின் கன்கார்ட் ஸ்டேஜ் கோச்சுகள். அவை பிரிட்டனிலேயே மிக விலைமதிப்புள்ளவை. அவற்றை இந்தியாவில் இந்த அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது ஆச்சரியமாக இருந்தது. அவற்றின் செந்நிறப் பரப்பில் கட்டிடத்தின் ஒளி உமிழும் சன்னல்வரிசை தொய்ந்த செம்முத்து மாலைபோல வளைந்து பிரதிபலித்தது. ஒரேயொரு விலை உயர்ந்த வைரத்தை டையின் கிளிப்பில் வைத்து நேர்த்தியான சூட் அணிந்திருக்கும் அமெரிக்கா கப்பல் நிறுவன முதலாளிகளைப்போல அவை தோன்றின.

வண்டிகளைத் தாண்டிச்செல்லும்போதுதான் அவன் கவனித்தான். நான்கு வண்டிகளில் மட்டும்தான் சென்னை கவர்னரின் கொடியடையாளம் இருந்தது. நான்குமே லண்டனில் செய்யப்பட்டவை. இரண்டு 'கிளாரன்ஸ்' வகை வண்டிகள். இரண்டு 'புரோம்' வகை வண்டிகள். மெருகிடப் பட்டுப் பளபளப்பாகப்பொலிந்தாலும் கூட அவை பழையவை. டியூக் அவரது குடும்பத்தில் பயன்படுத்தப்பட்ட வண்டிகளை இங்கே கொண்டுவந்து அதிலேயே பயணம் செய்கிறார் என்று ஏய்டன் ஊகித்தான். - இருபக்கமும் நின்ற இரண்டுவகை ஆடம்பர வண்டிகள் நடுவே பிடிவாதமாகத் தன் பழம் பெருமையைப் பிடித்துக்கொண்டு நிற்கும் பிரிட்டிஷ் கனவான் போல. அவன் புன்னகைத்தான். அப்போதே டியூக்கைப் புரிந்துகொள்ளமுடியும் என்று தோன்றியது.

அவன் படிகளில் ஏறிச்சென்றதும் நான்கு ஆர்டர்லிகள் அவனைநோக்கி வந்து வணங்கினார்கள். அவனுடைய நீள்கோட்டை ஒருவன் நளினமாகக் கழற்றித் தொப்பியையும் வாங்கிக்கொண்டான். இன்னொருவன் ஒரு பெரிய வெண்பீங்கான் கிண்ணத்தை நீட்டினான். அதில் சூடான ஆவி

பறக்கும் வாசனை நீரில் நனைத்த வெள்ளை டவல் இருந்தது. அதை எடுத்து அவன் மோவாயையும் நெற்றியையும் துடைத்துக்கொண்டான். அவர்கள் அவனைப் பெரிய காத்திருப்பு அறைக்குக் கூட்டிச்சென்றார்கள்.

சன்னல்களில் இளஞ்சிவப்பு அரேபிய மஸ்லின் திரைச் சீலைகள் கடற்காற்றில் பறந்துகொண்டிருக்க காற்றோட்டமாகத் திறந்திருந்தது காத்திருப்புக்கூடம். ரத்தச்சிவப்பான மொரோக்கோ தோலுறைபோடப்பட்ட பெரிய நாற்காலிகளில் ஏற்கனவே எட்டுபேர் காத்திருந்தார்கள். இருவர் சீமாட்டிகள். சுவரில் வரையப்பட்ட ஓவியம்போல நான்கு ஆர்டர்லிகள் அசையாமல் நின்றிருந்தனர். மேலே மிகப்பெரிய பனிக்கொத்து போலத் தொங்கிய கண்ணாடியாலான சாண்ட்லியர் விளக்கில் புதிதாகப்பொருத்தப்பட்ட வாயுக்குமிழ்விளக்குகள் சுடர் விட்டன. கீழே சுவர்களிலும் வாயுவிளக்குகள் ஒளியாலான குமிழிகளாகச் சுடர்விட்டன.

ஏய்டன் சீமாட்டிகளுக்கும் பின்னர் பிறருக்கும் முகமன் சொன்னபடி அமர்ந்துகொண்டான். அவர்கள் கச்சிதமான முகமலர்ச்சியுடன் மறுமுகமன் சொன்னாலும் அவனை அவர்கள் அங்கே விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஒரு சீமாட்டிக்கு ஐம்பது வயதுக்கும் மேலிருக்கும். புருவங்களை வளைவாக வரைந்திருந்தாள். கண்ணுக்குக்கீழும் உதடுகளைச்சுற்றியும் சருமம் வெண்பட்டுப் போலச் சுருங்கி யிருந்தது. தாடைக்குக் கீழே தசை பையாகத் தொங்கியது. துருத்திய உதடுகளில் சிவப்புச்சாயம். கூந்தலுக்கு மேலாக பெரிய லினன் விக் வைத்திருந்தாள். அதில் அவள் போட்டிருந்த பௌடரின் லவண்டர் வாசனை அறையில் நிறைந்திருந்தது. கழுத்துவரை பூட்டப்பட்ட சாம்பல்நிறமான அங்கி அணிந் திருந்தாள். கையில், கண்களுக்குக் கற்கள் பதிக்கப்பட்ட அரக்காலான கழுகுத்தலை முகப்புகொண்ட ஊன்றுகோல். அதை முழங்காலுக்குக் குறுக்காக வைத்திருந்தாள்.

மற்றவள் முப்பது வயதானவள். கொழுத்த மார்பில் தோள்களைத் திறந்து காட்டும் இளநீல கவுன் அணிந்து தலையில் ரிப்பன்களும் செயற்கை மலர்களும் கட்டப்பட்ட

பெரிய விளிம்புத்தொப்பி அணிந்திருந்தாள். இரு கைகளிலும் நீல வைரங்கள் ஒளிவிடும் கையணிகள். காதில் நீல வைரங்கள் சுடரும் தோடுகள். கழுத்தில் நீலவைரங்கள் பதிக்கப்பட்ட முத்துமாலை. இடுப்பில் கவுனுக்குமேல் கட்டியிருந்த அலங்கார தோல்பெல்ட்டில்கூட வைரங்கள் இருந்தன. ஆண்கள் ஆறுபேரும் ஒன்றுபோலச் சாம்பல்நிறமான சூட்டும் உள்கோட்டும் அணிந்து ஒரே முகபாவனையுடன் அசைவிலாது அமர்ந்திருந்தார்கள். ஒரே போல வலதுபக்கமாக சீவப்பட்ட சிவப்புத்தலைமயிர். உடைந்த கருங்கல்சில்லுகள் போன்ற கண்கள்.

முற்றிலும் அன்னியனாக உணரும் இடத்தில் மிகப் பெரிய பிரச்சினையே நம் உடல்தான் என்று ஏய்டன் நினைத்துக் கொண்டான். மனதை மறைத்துக்கொள்ள முடிகிறது. உடல் அப்பட்டமாக அந்த இடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அதை என்ன செய்வதென்ற தவிப்பு மனதை ஆட்டிப் படைக்கிறது. 'இதோ நான் முன்வைத்திருக்கும் என் உடல் ஒரு ஐரிஷ்காரனுடையது. ஒரு சாதாரண காப்டனுடையது. ஒரு மாலுமியின், போர்வீரனின் உடல் இது. அதிகாரத்தை என்றுமே அருவெறுத்த கவிதைவாசகனின் உடல் இது. நான் இதை எப்படி முன்வைப்பது? என் கைகளை என்ன செய்வேன்? என் கால்களை எப்படி வைப்பேன். என்னுடைய கண்களை எங்கே நிறுத்துவேன். என் உதடுகளை எப்படி அசையாமல் நிறுத்துவேன்?'

எவ்வளவு நேரம்? துளித்துளியாகக் காலம் ஒழுகிச் சென்றபடி இருந்தது. மூடிய பெரிய கதவு லண்டனில் இருந்து தருவித்ததாக இருக்கலாம். அதிலும் ரத்தச்சிவப்பான மொராக்கோத் தோலுறை போடப்பட்டிருந்தது. பொன்னாக மின்னிய வெண்கலப்பிடிகளில் விளக்குகள் சுடர்ப்புள்ளிகளாக இருந்தன. உள்ளே நிகழும் எதையும் ஒலிகளாக வெளியே அனுப்பாத கதவுகள். அறைக்குள் லண்டனில் பிரபலமான 'ப்ளென்ஹீம்' வாசனைத்திரவியத்தின் எலுமிச்சைப்பூ மணம் நிறைந்திருந்தது. முதலில் நாசிக்கு இனியதாகத் தோன்றிய அது மெல்ல மெல்லத் தலைவலியை உருவாக்கியது.

சட்டென்று கதவுகள் ஓசையே இல்லாமல் வெண்கலக்கீல்களில் மெல்லச்சுழன்று திறந்தன. அவற்றைத்திறந்த கறுப்பு வேலையாளின் கையுறை அணிந்த கைகள் மட்டும் தெரிந்தன. வெள்ளைக்கார ஆர்டர்லி வெளியே வந்து தலைதாழ்த்தி வணங்கி "மேன்மைதங்கிய டியூக் ஆஃப் பக்கிங்ஹாம். சென்னை ஆட்சியர்" என்று அறிவித்தான். அமர்ந்திருந்த அனைவரும் எழுந்தார்கள். அந்தப்பெண் இடையைக் கொஞ்சம் அதிகமாக ஒசிக்க ஆண்கள் மோவாயை முடிந்தவரை மேலே தூக்கிக் கைகளை நீட்டிப் பனிக்கட்டியில் நெடுங்காலமிருந்தவர்கள் போல உறைந்தார்கள்.

ஆர்டர்லி ஒல்லியான முகமும் கோடுபோல உதடுகளும் பழுப்புநிற வெள்ளாட்டுக்கண்களும் கொண்ட நடுவயதினன். முன்தலையில் சோப்பு நுரைபோல மெல்லிய தலைமயிர்ச்சீவல். கழுத்து ரத்தச்சிவப்பாக இருந்தது. முகத்தில் பௌடர் போட்டிருந்தான். உள்ளிருந்து கனத்த காலடி ஓசை கேட்டது. டியூக் தொய்ந்த தசைகள் கொண்ட பெரிய உடலுடன், அப்போதுதான் நெடுந்தூர குதிரைப்பயணத்தில் இருந்து இறங்கியது போன்ற நடையுடன் வந்தார்.

Richard Plantagenet Campbell Temple-Nugent-Brydges-Chandos-Grenville என்னும் மூன்றாவது பக்கிங்ஹாம்-சாண்டோஸ் டியூக்குக்குக் கணக்குப்படி ஐம்பத்தைந்து வயது. ஆனால், அவரது உடலும் தோற்றமும் அறுபதுக்குமேல் காட்டின. அடர்ந்த தாடி காய்ந்த மெல்லிய புல் போல முகத்தை வளைத்திருந்தது. மீசை மழிக்கப்பட்டிருந்த மேலுதடுக்கு மேலே ஒட்டிய நீண்ட மூக்குமீது சிறிய பருக்கள். நெற்றியில் ஆழமான வரிகள். சிவப்புச்சாயம் போடப்பட்ட விக் வைத்திருந்தார். அதில் போடப்பட்ட பவுடரில் இருந்து 'ஓரிஸ் வேர்த்' தைலத்தின் வாசனையும் அவரது 'ஹமாம்' குளியல் தைல வாசனையும் கலந்து வந்தது. அவர் அப்போது தான் தூங்கி எழுந்திருக்கவேண்டும்.

டியூக் உரக்கச்சிரித்தபடி "அன்பே. உன்னைப் பார்க்க எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது!" என்று செயற்கையாகக் கூவியபடி அந்த இளம்பெண்ணைக் கட்டிக்கொண்டார்.

அவளுடைய இரு கன்னங்களிலும் "எவ்வளவு அழகு. என்ன இனிமை!" என்று சொல்லிக்கொண்டே மிகச்சம்பிரதாயமாக முத்தமிட்டார்.

அவள் "ஓ ஓ" என்று மிக செயற்கையாக உணர்ச்சி வசப்பட்டு உடனே நாடகத்தனமாகக் கண்ணீர் மல்கி தலைகுனிந்து ஒரு வெண்பட்டுக் கைக்குட்டையால் கண்களைத் துடைத்தாள். "நன்றி பிரபு. நன்றி. இது என் வாழ்நாளில் மகத்தான நாள்" என்றாள்.

டியூக் "ஆமாம் அன்பே. மகத்தான நாள்" என்றபின் திரும்பி அந்தக்கிழவியிடம் "உங்கள் வரவு என்னை கௌரவிக்கிறது சீமாட்டி" என்றபின் அவள் கையை முத்தமிட்டார்.

அவள் வாயைக் குவித்து திறந்து "ஓ! என்ன மகத்துவம்! எவ்வளவு அதிருஷ்டம்!" என்று கூவினாள்.

"என்னுடைய அதிருஷ்டம்" என்று சொன்னபின் டியூக் அங்கிருந்த ஒவ்வொருவரிடமாக கைகுலுக்கினார். அவர்கள் இறுகிய கழுத்துகளுடன் கைநீட்டிச் சம்பிரதாயமாக மரியாதைச் சொற்களைச் சொன்னார்கள்.

ஏய்டன் அவர் பார்வைக்காக கணம் கணமாகக் காத்து நின்றான். டியூக் அவனைப் பொருட்படுத்தவில்லை. அவர் திரும்பி உள்ளே செல்ல ஒரு பிரிட்டிஷ் கனவானின் கட்டுப் படுத்தப்பட்ட உதடுகள் மூடுவதுபோலச் சிவந்த தோலுறையிட்ட கதவுகள் சத்தமில்லாமல் மூடிப்பொருந்திக் கொண்டன.

மீண்டும் அனைவரும் அமர்ந்துகொண்டார்கள். இப்போதுதான் இன்னும் குள்ளமாக இன்னும் சப்பையாக ஆகிவிட்டதுபோல ஏய்டன் உணர்ந்தான். அறைக்குள் இருந்த ஒவ்வொருவரும் அவனை மிக அசௌகரியமாக உடலால் உணர்ந்துகொண்டிருப்பதை அறிந்தான். டியூக் உள்ளே டீ சாப்பிடுகிறார் என்று நினைத்துக்கொண்டான்.

ஆர்டர்லி வெளியே வந்தான். முதலில் இருந்த நடுவயதான மனிதர் எழுந்து "சார்லி, என் காகிதங்கள் மாட்சிமை தங்கியவரின் கவனத்தில் இருக்கின்றன என்று நினைக்கிறேன்" என்றார்.

"உங்கள் காகிதங்களை முதலில் வைத்திருக்கிறேன்" என்றான் ஆர்டர்லி.

நடுவயதானவர் சூட்டையைச் சரிசெய்தபின் அமர்ந்து கொண்டார். அறையில் இருந்த அனைவருமே அழைக்கப்படு வதற்கான உடலசைவுகளில் இருந்தார்கள். அப்போது மறுபக்க கதவு திறந்தது. சிவந்த வாய் ஒன்று அதட்டுவதற்காகத் திறந்தது போல. உள்ளிருந்து உயரமான நீளமுகமும் ரோமானிய நாசியும் கொண்ட மனிதர் இயல்பான மிடுக்குடன் வந்தார் "சார்லி, டியூக் அமர்ந்துவிட்டார் என்று நினைக்கிறேன்" அவருக்குப் பின்னால் அவரது நிழல்போல ஒரு கரிய சேவகன் ஓசை யில்லாமல் வந்து நின்றான்.

சார்லி "எஸ் சர்" என்று பணிவுடன் சொன்னார்.

"நானும் சில நண்பர்களும் சந்திக்க வந்திருப்பதை அறிவி" என்றபின் அவர் தனக்குப்பின்னால் வந்து நின்ற சேவகனிடம் மெல்ல தலையசைத்தார். சேவகன் கதவைத் திறந்து சைகை காட்ட நான்கு பேர் உள்ளே வந்தார்கள். நால்வரும் இந்தியர்கள். அவர்களில் ஒருவர் மட்டும்தான் சூட் போட்டிருந் தார். மற்ற மூவருமே கச்சவேட்டி கட்டி மேலே சாம்பல்நிறமான கோட்டு அணிந்திருந்தார்கள். இந்தியவழக்கப்படி உள்ளே அணிந்த வெள்ளைச்சட்டை தெரிய, கோட்டைத் திறந்து போட்டிருந்தார்கள்.

சூட் போட்டிருந்தவர் ஒரு மாணவனைப் போலிருந்தார். மெலிந்த கரிய உடல். எல்லாவற்றையும் கணக்கெடுப்பது போன்ற ஆழ்ந்த நோக்குள்ள கண்கள். ஆங்கிலேயரைப்போலக் கிராப் செய்யப்பட்ட தலைமுடி. ஆனால் உள்ளே சிறிய குடுமி சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் என்பதை எவரும் ஊகிக்க முடியும். மீசை முளைக்கவில்லை. அதிகபட்சம் இருபத்தைந்து வயதிருக்கும்.

சூட் அணிந்தவரைத்தவிர பிறர் காதில் கடுக்கனும் கழுத்தில் பதக்கங்கள் தொங்கும் கனமான தங்கச்சங்கிலிகளும் அணிந்திருந்தனர். ஒருவர் வேலைப்பாடுகள் மிக்க காசி சரிகைக் குல்லாய் வைத்திருந்தார். மற்றவர்கள் கம்பளித்தொப்பிகள்.

கோட்டின் பையில் கடிகாரத்தை வைத்து கூடவே கைக்குட்டையைச் சுருட்டிச் செருகி வைத்திருந்தனர்.

சூட் அணிந்தவர் இறுக்கமாக நிற்க மற்ற மூவரும் அமர்ந் திருந்தவர்களை நேருக்குநேராகப் பார்த்து மதிப்பிட்டார்கள். இந்தியர்களுக்கே உரிய துழாவும் பார்வை. கண்களைச் சந்தித்தால்கூட அவர்கள் பார்வையை விலக்கிக்கொள்வதோ முகமன் சொல்வதோ இல்லை. அவர்கள் நால்வரும் வணிகர்கள் அல்லது குத்தகைதாரர்கள் என்று எவரும் ஊகிக்கமுடியும். அப்படியென்றால் அவர்களை அழைத்து வந்தவர் வில்லியம் ரஸ்ஸல். அவர்தான் அவன் கடிதத்தை வாங்கிக்கொண்டவர். ஆனால், அப்படி ஒருவன் அங்கிருப்பதாக அவர் உணர்ந்த தாகவே தெரியவில்லை. அவரை அவன் ஏதோ நிகழ்ச்சிகளில் தூரத்தில் பார்த்திருக்கிறான். அவர் அருகாமையில் இன்னும் வயதானவராகத் தெரிந்தார்.

ரஸ்ஸல் இந்தியர்களிடம் அமரும்படி சைகை காட்ட அவர்கள் சற்றுத் தயங்கியபடி அமர்ந்தனர். சூட் அணிந்த இளைஞன் ஏய்டனிடம் "மன்னிக்கவும்" என்று சொன்னபின் அருகே அமர்ந்துகொண்டான்.

ரஸ்ஸல் இளம்பெண்ணிடம் "மகிழ்ச்சியான சந்திப்பு" என்று சொல்லித் தலைவணங்கினார்.

அவள் "இனிமை மிகவும் இனிமை" என்று நாடகப் பாங்காகச் சொல்லித் தலைவணங்கினாள்.

முதிய பெண்மணி "நல்ல நாள் ரஸ்ஸல்" என்றாள்.

"ஆம். மிகவும்" என்றபின் ரஸ்ஸல் பிறருக்கு மெல்லிய சைகைகளாக வணக்கம் சொல்லிவிட்டு அமர்ந்தார்.

இந்தியர்கள் விதவிதமான நறுமணப்பொருட்களை அணிந்திருந்தார்கள். நெற்றிப்பொட்டில் அவர்கள் புனுகு வைப்பார்கள். செடிகளில் இருந்தும் காய்களில் இருந்தும் மரப்பட்டைகளில் இருந்தும் எடுக்கப்படும் பலவகையான நறுமணப் பொருட்களை ஒரேசமயம் பூசிக்கொள்வார்கள். உடைகளில் சுண்ணாம்பு வீச்சமும், தாழம்பூ வீச்சமும் கலந்து

அடிக்கும். ஒரு இந்திய பிரமுகர் நறுமணக்கடை ஒன்று நடந்துவருவதுபோலதான் அருகே வருவார். அறையின் வாசனைகள் எல்லாம் கலந்து குழைந்து மூச்சடைக்கச்செய்தன.

இந்தியர்களில் வயதானவர் தங்கத்தால் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுச் சிவந்த வைரக்கற்கள் பதிக்கப்பட்ட வெற்றிலைச் செல்லம் ஒன்றை வைத்திருந்தார். அதை அவர் அணைத்துப் பிடித்துக்கொண்டு ஒரு நாற்காலியில் காலைப் பரப்பிவைத்து அமர அவரது வேட்டி விலகி உள் தொடை தெரிந்தது. அவர் நெற்றியில் நீளமான சிவப்புக்கோடு. இன்னொருவர் நெற்றியில் வெண்ணிறமான பௌடர் பட்டைகள். அவரது கரிய நிறத்தில் அந்தப்பட்டை துல்லியமாக தெரிந்தது. அவரும் சிவப்புக் கல்லால் ஆன கடுக்கன் அணிந்திருந்தார். கோட்டில் தங்கச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட சுவிஸ் கடிகாரம். முன்பெல்லாம் இவர்கள் அரச சந்திப்புகளில் மதச்சின்னங்கள் அணிவதில்லை. இப்போது மாட்சிமை தங்கிய மகாராணியின் அனுமதி இருக்கிறது.

வெற்றிலைச்செல்லம் வைத்திருந்தவர் ஏதோ இசைத் துணுக்கை வாய்க்குள் முணுமுணுத்தார். அவரது கண்கள் சிறிதாக ஒளியுடன் இருந்தன. சுறுசுறுப்பான எலிபோல அவர் பார்வை அலைந்தது. சிறிய நாசி. மீசையற்ற மேலுதடுக்குக் கீழே சற்றே தொங்கிய கீழுதடு. சாதாரண இந்தியர்களைப்போல அவரும் வெற்றிலை மென்றுகொண்டே இருக்கும் வழக்கம் உடையவர் போலும். வாய் செக்கச்சிவப்பாக இருந்தது. அந்நால்வரில் அவர் மட்டுமே வெள்ளையாக இருந்தார். அவரது காதுகளில் சிவந்த வைரங்கள் இரு நெருப்புத்துளிகள் போல ஒளிவிடும் கடுக்கன்கள் இருந்தன.

கதவு திறந்தது. சார்லி ரஸ்ஸலிடம் "சர், உங்கள் சந்திப்பு" என்றார். ரஸ்ஸல் எழுந்து கோட்டை இழுத்து விட்டுக் கொண்டு சேவகனை நோக்கி கைநீட்டினார். அவன் ஒரு பெரிய தோல் உறையிட்ட கோப்புப்பெட்டியை அவரிடம் கொடுத்தான். ரஸ்ஸல் பிறநால்வரிடம் மோவாயால் சைகை செய்துவிட்டு உள்ளே சென்றார். அவர்கள் உடைகளைச் சரிசெய்தபடி,

தொப்பியைச் சரியாக வைத்தபடி, ஒருவரை ஒருவர் கொஞ்சம் இடித்து உந்தியபடி உள்ளே சென்றார்கள்.

காத்திருப்பு அறைக்குள் உருவாகிய இறுக்கத்தை ஏய்டன் உணர்ந்தான். உடல்களில் மெல்லிய சம்பந்தமில்லாத அசைவுகள் ஏற்பட்டன. வயதான வெள்ளையர் மெல்ல கனைத்து இருமினார். பெண்மணி ஒரு தந்தச் சில்லுகளாலான விசிறியால் மூக்கருகில் விசிறிக்கொண்டாள். இளம்பெண் ஒரு கையடக்கக் கண்ணாடியால் உதடுகளைச் சரிபார்த்தாள்.

நேரம் சென்றுகொண்டே இருந்தது. மெல்ல ஏய்டன் இலகுவானான். மனதில் அரும்பிய புன்னகையை உதடுகளுக்குள் கொண்டுவராமல் தடுத்துக்கொண்டான். கால்களை நீட்டிக்கொண்டு சுவர்களில் இருந்த இரண்டு ஓவியங்களைப் பார்த்தான். பெரிய பித்தளைச் சட்டமிடப்பட்ட கான்வாஸ்கள். ஒன்றில் பழைய மதராசப்பட்டினம் கடற்கரையின் தொலை தூரத்துக் காட்சி. கடலுக்குள் கப்பலில் இருந்து பார்த்து வரையப்பட்டது. அலைகள் நுரைபுரள அதன்மேல் பாய்மரக் கப்பல்கள் நின்றன. கடலை ஒட்டிக் கோட்டையின் சுவர்கள். உள்ளே கட்டிடங்கள் சாய்வான மாலையொளியில் தெரிய செயிண்ட் மேரிஸ் சர்ச்சின் ஊசிக்கோபுரமும் கொடிமரமும் மட்டும் மேலேழுந்து நின்றன. கோட்டைக்குப்பின்பக்கம் எரிமலைக்கூம்புகள் போல மலைகள். மரங்களற்ற பாறைக் குகைகள். ‘அவை உண்மையிலேயே அப்படித் தெரிகின்றனவா, இல்லை வெறும் கற்பனையா? தூரத்தில் செயிண்ட் தாமஸ் மவுண்ட்டின் ஆலயம் தெரிவதாக வரையப்பட்டிருந்தது. கடலில் அத்தனை தூரத்தில் அது தெரிய வாய்ப்பே இல்லை’.

இன்னொரு ஓவியம் ‘கடைசிவிருந்து’. இத்தாலிய அசல். பதினாறாம் நூற்றாண்டில் வரைந்து தள்ளப்பட்ட பலநூறு ஓவியங்களில் ஒன்று. ஏசுவின் கருஞ்சிவப்பு ஆடையின் நெளிவுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்திருந்தார் ஓவியர். இயேசு அப்பத்தைத் தூக்கிக் காட்டினார். அவர் முன் கோப்பையில் அவரது குருதி இருந்தது. சிலர் வணங்க, சிலர் மண்டியிட, சிலர் அஞ்சி விலக, அந்த ஓவியம் மொத்த

கான்வாஸையும் முகங்களால் நிறைத்திருந்தது. வரைந்தவரை அறியமுடியவில்லை.

கதவு திறந்ததை அவன் எதிரில் இருந்த முகங்களில் கண்டு திரும்பினான். "காப்டன் பைர்ன்" என்று சார்லஸ் மெல்லிய குரலில் சொல்லித் தலைவணங்கினான். உள்ளே அந்த வணிகர்கள் அவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைச் சட்டென்று ஏய்டன் நினைத்துக்கொண்டான். ஒருபோதும் பிரிட்டிஷ் அரசு விஷயங்கள் அன்னியர் முன் விவாதிக்கப் படுவதில்லை. அவன் குழப்பத்துடன் உள்ளே நுழைந்தான். நுழைந்ததும் தலைகுனிந்து முறைப்படி வணங்கினான்.

டியூக் அவரது விக்கை மேஜைமேல் ஒரு யானைத்தந்த கொக்கியில் மாட்டியிருந்தார். நன்றாக ஏறிய முன்வழுக்கையில் சில உதிரி மயிர்கள். பின்மயிர் நீளமாக வளர்ந்து தோள்வரை படர்ந்திருந்தது. விக்குடன் அவர் ஒரு சம்பிரதாயமான பிரிட்டிஷ் பிரபுவாகத் தோன்றினார். வழுக்கையுடன் கனிவான, மந்தமான தந்தையின் சாயலை அடைந்திருந்தார். ஒட்டுமொத்த மாக அவரது பாவனையில் ஓர் அஜீர்ணம் இருந்தது. அவர் முன் இருக்கைகளில் ரஸ்ஸலும் மற்றவர்களும் அமர்ந்திருந்தார்கள்.

அவன் வந்ததும் டியூக் மெல்ல முன்னகர்ந்து புன்னகை யுடன் "காப்டன் பைர்ன்?" என்றார்.

ஏய்டன் "ஆம்" என்றான்.

"நான் அயர்லாந்தில் பயணம் செய்திருக்கிறேன்"

அவர் அமர்வதற்காகக் கைகாட்டியதும் "நன்றி மேன்மை தங்கியவரே" என முணுமுணுத்தபடி ஏய்டன் அமர்ந்து கொண்டான். என்ன நடக்கப்போகிறது என்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று தெளிவாகப்புரிந்தது. அந்த அறையை அப்போது ரஸ்ஸல் முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

"நீ அனுப்பிய கோப்பைப் பார்த்தேன். என்ன நடந்தது என்று ரஸ்ஸல் விளக்கினார்" என்றார் டியூக்.

"ஆமாம், மேன்மைதங்கியவரே" என்றான் ஏய்டன். சொல்ல ஆரம்பிக்கலாமா என்ற சஞ்சலம் ஏற்பட்டது. ஆனால்

இன்னொரு தருணம் வரப்போவதில்லை. இது எப்படி முடிந்தாலும் அது அவன் பிழையும் அல்ல.

"அமெரிக்கர்கள் பொதுவாகத் தொழில்விஷயத்தில் நியாயமானவர்கள்" என்றார் டியூக்.

தனக்கான இடம் வந்துவிட்டதை ஏய்டன் உணர்ந்தான். "உண்மைதான் மாட்சிமை தங்கியவரே. ஆனால். இந்தியச்சூழல் இப்போது வேறுமாதிரியாக இருக்கிறது. நான் மாட்சிமை தங்கியவரின் சமூகத்திடம் தெரிவிக்கவிரும்பும் விஷயம் அதுதான். அதற்காகவே இந்தத் தருணத்தைக் கோரி அடையும் பாக்கியத்தைப் பெற்றேன்"

அரைக்கணம் டியூக் ரஸ்ஸலைப் பார்த்தார். பின்பு "சொல்" என்று சொல்லிவிட்டுப் பின்னால் சாய்ந்து கொண்டார். இருகைகளையும் விரல்கோத்து மடியில் வைத்தார். அவரால் அதிக நுணுக்கமான விஷயங்களைப் புரிந்துகொள்ளமுடியாது என்று ஏய்டனுக்குத் தெரிந்தது. ஆனால் கண்டிப்பாக நல்ல மனிதர். பெருந்தன்மையும் கருணையும் கொண்டவராக இருக்கவேண்டும். தற்பெருமையும் முன்கோபமும் கண்டிப்பாக இருக்கும்.

"மேன்மை தங்கியவரே, எந்த இடத்திலும் உழைப்பாளர் களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் நடுவே ஒரு பேரம் இருக்கிறது. அதுதான் கூலியைத் தீர்மானிக்கிறது. உழைப்பின் விதிகளையும் முடிவுசெய்கிறது. ஆனால், இங்கே அப்படி ஒரு பேரம் நிகழவே வாய்ப்பில்லை. ஏனென்றால் நம்முடைய இந்த ராஜதானி பஞ்சத்தால் அழிந்துகொண்டிருக்கிறது. மதராசப் பட்டினத்தைக் கீழே விழுந்து சருகில் கிடக்கும் ஆப்பிளைப் போல என்று சொல்லலாம். பளபளப்பாகக் கனிந்து சிவந்து தெரிகிறது. ஆனால், அதன் அடிப்பகுதி அழுகிப்போய் புழுக்களால் ஊடுருவப்பட்டிருக்கிறது"

ஏய்டன் தன் கோப்பைப் பிரித்து டியூக்கின் மேஜைமேல் வைத்தான். மிகப்பெரிய மேஜை. அதன்மேல் 'யூனியன் ஜாக்' சிறிய கொடி தந்தத்தாலான பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவன் வைத்த கோப்பை ரஸ்ஸல் எழுந்து டியூக்கை நோக்கித் தள்ளி வைத்தார். அவர் அதை எடுத்துக்கொண்டு பிரித்தார்.

“நான் நேற்று பகல் முதல் இன்று காலைவரை கண்ட பஞ்சத்தின் சித்திரிப்பை அதில் எழுதியிருக்கிறேன். நேரடிக் கள அறிக்கையும் களப்பணியாளர்களின் குறிப்புகளும் அதில் உள்ளன. நான் கண்டது மிகப்பெரிய மானுடஅழிவை. பிரிட்டிஷ் நீதியுணர்ச்சியைச் சோதனையிட கர்த்தர் உருவாக்கிய தருணம் இது என நான் நினைக்கிறேன்”

சட்டென்று டியூக்கின் கண்கள் வந்து தொட்டுவிட்டுச் சரிந்தன. ஏய்டன் மனம் அதிர்ந்தது. அவர் அச்சொற்களை எப்படி எடுத்துக்கொண்டார்? முகத்தையும் அகத்தையும் பல்லாயிரம் மைல் தூரத்துக்கு அகற்றிக்கொள்ளப் பழகிய பிரிட்டிஷ் பிரபுவிடம் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று அவன் உணர்ந்தான்.

டியூக் வாசித்துக்கொண்டிருந்தார். ஏய்டன் பதற்றத்துடன் அந்த அறையை ஆராய்ந்தான். தேக்கு மரத்தாலான பெரிய சன்னல்களில் அமைதியான நடனக்காரிகளைப்போல நெளிந்துகொண்டிருந்தன திரைச்சீலைகள். மேலே பிரம்மாண்டமான பங்கா அறைக்கு ஆசி அளிப்பதுபோல வருடி வருடி அசைந்தது. செந்நிறமான பட்டுப் பூக்குஞ்சலங்கள் தொங்கும் பங்கா. ஓசையே இல்லாமல் காற்றை அளைந்தது. சுவரில் டியூக்குக்குப் பின்னால் விக்டோரியா மகாராணியின் மிகப்பெரிய ஓவியம். தலையில் போட்ட அலங்கார துணிமீது மின்னும் சின்னஞ்சிறிய வைர மணிமுடி. உலகை ஆளும் சின்னம். அதைச்சூடியிருந்த கிழவி சந்தையில் கைவிடப்பட்ட மந்தபுத்தி போலிருந்தாள்.

டியூக் ஏறிட்டுப்பார்த்தார். மெல்லக் கோப்பை அருகே நகர்த்தி வைத்தார். ஏய்டன் மீண்டும் தயங்கினான். தருணத்தை விடுவதில்லை என்று மீண்டும் சொல்லிக்கொண்டான். “மாட்சிமை தங்கியவரே, இந்தத் தருணத்தை இங்குள்ள ஒவ்வொருவரும் தங்களுக்கானதாக நினைக்கிறார்கள். இந்த மக்களின் நிராதரவான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு லாபம் கொய்கிறார்கள். பஞ்சத்தில் மக்கள் தீப்பிடித்த வீட்டிலிருந்து எலிகள் வெளிவருவதைப்போல சாலைகளுக்கு

வருகிறார்கள். இவர்கள் தீப்பிடித்தவீட்டில் கொள்ளையடிப் பவர்கள் போலிருக்கிறார்கள்."

தன் உணர்ச்சிகள் மீறிச்செல்வதை ஏய்டன் உணர்ந்தான் "மாட்சிமை தங்கியவரே, நாம் சென்ற நூற்றாண்டிலேயே அடிமை வணிகத்தைத் தடை செய்துவிட்டோம். அந்தப் பெருமை நமது மணிமுடிக்கு உண்டு. ஆனால், இன்று இந்தப்பஞ்சத்தில் மக்கள் லட்சக்கணக்காகத் திரண்டுபோய் தங்களையே அடிமைகளாக விற்றுக்கொள்கிறார்கள். தங்கள் குடும்பங்களைக் கூவி விற்கிறார்கள். அவர்களைச் சில்லறை விலை கொடுத்து வாங்கி உலகம் முழுக்க உள்ள தோட்டங்களுக்குக் கூலிகளாகக் கொண்டு செல்கிறார்கள். போர்ச்சுக்கல்காரர்கள் அடிமைவணிகம் செய்தகாலத்தில்கூட மனிதர்களுக்கு இதைவிட எட்டுமடங்கு விலைமதிப்பு இருந்தது"

அத்துமீறிவிட்டேனா என்று ஒரு கணம் ஏய்டன் யோசித்தான். பின்பு தொடர்ந்தான் "உள்ளூரில் உள்ள ஒவ்வொரு முதலாளியும் அவர்களை அமர்த்தி ஒருவேளைச் சோற்றுக்கு நாள்முழுக்க வேலைவாங்குகிறார்கள். நம்முடைய காண்டிராக்டர்கள் கூடக் கட்டிடம் கட்டவும் சாலைகள் போட வும் இவர்களை அமர்த்திக் கொள்ளை லாபம் பார்க்கிறார்கள். இந்த மக்களின் ரத்தம் சந்தையில் அளந்து கூவி விற்கப்படுகிறது. ஐஸ்ஹவுஸ் விஷயத்தின் பின்னணியே இதுதான்"

சிலைபோல டியூக் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தார். "மாட்சிமை தங்கியவரே, இவர்கள் ஒவ்வொருவரும் மேன்மைதங்கிய மகாராணியின் குடிமக்கள். உங்களுடைய மக்கள். அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அவர்களின் நிலையைத் தாங்களே நேரில் சென்று பார்க்க வேண்டும். அறிக்கைகளில் வெறும் எழுத்துக்கள்தான் உள்ளன. நம் சாலைகளில் முழுக்க பிணங்கள் குவிகின்றன. அறிக்கைகளில் உள்ள ஒரு எழுத்துக்கு ஆயிரம் பிணங்கள் என்ற விகிதத்தில்"

டியூக் மெல்ல அசைந்தபோது நாற்காலி 'கிரீச்'சிட்டது. அவரது பார்வை ஒருமுறை ரஸ்ஸலைச் சென்று தொட்டு

மீண்டது. நேரம் முடியப்போகிறது என்று ஏய்டன் உணர்ந்தான். "மாட்சிமை தங்கியவரே, அதில் கடைசியாக நான் ஒரு சிபாரிசை முன்வைத்திருக்கிறேன். இந்தப்பஞ்சத்தைச் சமாளிக்க மிக எளிமையான ஒரே ஒரு நேரடி வழி உள்ளது. நாகப்பட்டினத்திலிருந்தும் விசாகப்பட்டினத்தில் இருந்தும் ஏற்றுமதியாகும் தானியங்களை ஆறுமாதகாலத்துக்கு நிறுத்தி வைப்பது. மேற்கொண்டு தானியங்கள் சேகரிப்பதில்லை என அறிவிப்பது. உடனே பதுக்கப்பட்டுள்ள எல்லா தானியங்களும் வெளியே வரும். ஒரு வாரத்தில் பஞ்சம் நின்றுவிடும்"

டியூக்கின் உதடுகள் மெல்லப்பிரிவதைக் கண்டதும் அவன் வேகமாகச் சொன்னான் "இது நம் கடமை மாட்சிமை தங்கிய வரே. மனிதர்களாகிய நம்முடைய ஆன்மாவில் இருக்கும் கிறிஸ்துவுக்காக நாம் இதைச் செய்தாகவேண்டும். ஆன்மாவை இழந்துவிட்டு உலகை வெல்வதனால் என்ன பயன் என்று நம் மீட்பர் கேட்டார். இத்தனை கோடி மக்களைப் பசியால் துடித்துச் சாகவிட்டுவிட்டு நாம் உலகையே வென்றால் அதில் பெருமை இல்லை. இழிவுதான். கிறிஸ்துவுக்கு முன் நாம் மனிதர்கள் என்று சென்று நிற்பதற்கான ஒரு தருணம் இது. மாட்சிமை தங்கியவரே "

டியூக்கின் உதடுகள் திறந்ததும் ஏய்டன் நிறுத்தினான்.

"உன் உணர்ச்சிகளை நான் முழுமையாகவே புரிந்து கொள்கிறேன் இளைஞனே" என்றார் டியூக். "நீ சொன்னது சரிதான். இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தில் நம்முடைய மொத்த நீதியுணர்வும் சோதிக்கப்படுகிறது" அரைக்கணம் ரஸ்ஸலைப் பார்த்துவிட்டு "ஆனால் நம்முடைய யதார்த்தமும் நம்மைச் சோதிக்கிறது. நம்மால் செய்யமுடிவதைத்தான் நாம் செய்ய முடியும். நம்முடைய யதார்த்தம் மதராஸையோ இந்தியாவையோ மட்டும் கருத்தில்கொள்வது அல்ல. நாம் உலகை முழுக்க கருத்தில்கொண்டு சிந்திக்கவேண்டியிருக்கிறது"

ஏய்டன் அக்கணத்தில் ஏதோ ஒரு சரடு அறுந்து அவனிருந்த உச்சியில் இருந்து 'ஜிவ்வ்' என்று அடியற்ற பாதாளத்தில் விழ ஆரம்பித்தான்.

“ஆனால் உன் சொற்கள் என் ஆன்மாவைத் தொட்டிருக் கின்றன. நான் இப்போது செய்யவேண்டியதைக் கண்டிப்பாகச் செய்வேன். அதற்கு உனது இந்த அறிக்கை ஒரு ஆதாரம். உனக்கு அதற்காக நான் நன்றி சொல்லவேண்டும்”

டியூக் எழுந்து நின்று கைநீட்டினார். வெண்பட்டு கையுறைபோட்ட சிறிய கைகளை மெல்லப் பற்றி குலுக்கிய போது ஏய்டன் நிமிர்ந்து அவரைப் பார்க்கவில்லை. அவன் தொண்டை அடைத்தது. ஒரு சின்ன உலுக்கலில் பனிசொட்டும் மரக்கிளைபோலக் கண்ணீர் விட ஆரம்பித்துவிடுவோம் என்று அவன் உணர்ந்தான்.

“உங்கள் நேர்மையான உணர்ச்சிகளும் அர்ப்பணிப்பும் என் கவனத்தில் உள்ளன காப்டன் பைர்ன்” என்று சொல்லி டியூக் லேசாகத் தலைவணங்கினார்.

எழுந்து குதிகால்களைக் கொட்டி விரைப்பாக வணங்கி விட்டு ரஸ்ஸலுக்கும் தலைவணங்கிவிட்டு ஏய்டன் வெளியே வந்தான். அவனுக்குப் பின்னால் அவனை ஒரு கழிவாக வெளியேதள்ளிவிட்டு சுருங்கி மூடும் சிவந்த குதம் போலக் கதவு ஓசையில்லாமல் பொருந்திக்கொண்டது. வெளியே அந்த வெள்ளையர் அவனைப் பார்க்காமல் உடலால் அவனைக் கவனித்தவர்களாக அமர்ந்திருந்தனர். மூத்த பெண்மணி தந்த விசிறியால் விசிறிக்கொண்டாள்.



மூன்றாவது பக்கிங்ஹாம் - சாண்டோஸ் டியூக்



# 9

கிளைவ்ஹவுஸின் வாசல்முகப்பு வரை வருவதற்குள் ஏய்டன் பலமுறை நின்றான். கால்கள், கைகள் எல்லாம் துணியாலானவை போலிருந்தன. அதுவரை அலைந்ததன் மொத்தக் களைப்பும் உடலில் கனத்தது. தன் உடலை ஆழமான ஒரு குழி என உணர்ந்தான். அதில் குடம் குடமாக மதுவைக் கொட்டிக்கொண்டே இருக்கவேண்டும். அந்த வெற்றிடத்தை என் கால்களால் சுமந்து செல்கிறேன். வெற்றிடமளவுக்கு எடைகொண்டது வேறு ஒன்றும் இல்லை.

அவனுடைய வண்டி வந்து இருளில் நின்றது. வண்டியில் ஏறி அமர்ந்ததும் துரைசாமி வண்டியைத் தட்டினான். மெல்லிய 'கிரீச்'சொலியுடன் வண்டி நகர்ந்தது. குதிரைக் குளம்புகள் பாறைமீது உதிரும் கொட்டைகள் போல ஒலியெழுப்பிச் சென்றன. இருண்ட கட்டிட இடுக்குகளில் அந்த ஒலி சிதறிச்சென்றது. கோட்டைக்கு மேல் வானம் சாம்பல் நிறமாகத் தெரிந்தது. கடலின் உள்வெளிச்சம் வானில் பிரதிபலிக்கிறதுபோலும்.

வானம் முழுக்க பறவைகள் கூட்டம் கூட்டமாகச் செல்வதை அப்போதுதான் ஏய்டன் கவனித்தான். கூர்ந்துப் பார்க்கப் பார்க்க அவை பெருகிக்கொண்டே செல்வதைக் கண்டான்.

"துரைசாமி, அதென்ன வானத்தில் அவ்வளவு பறவைகள்?" என்றான் ஏய்டன்.

துரைசாமி "சர்?" என்றான்.

"வானில் ஏன் அத்தனை பறவைகள்?"

"ஐப்பசி மாதம் -" என்றபின் நிறுத்தி "சார், இங்கே அக்டோபர் மாதம் முதல் பறவைகள் வானத்தில் தென்படும். தெற்கு நோக்கிப் பறந்துகொண்டே இருக்கும். சிலசமயம் பார்த்தால் வானமே மூடிவிட்டதுபோலப் போகும்"

"ஓ" என்றான் ஏய்டன்.

"நிறைய பறவைகள் சென்றால் அந்தவருடம் நல்ல விளைச்சல் உண்டு என்பார்கள்"

"அப்படியானால் வரும் வருடம் பஞ்சம் வராது இல்லையா?"

"பஞ்சத்துக்கும் விளைச்சலுக்கும் என்ன சம்பந்தம்? போனவருடம் முழுக்க நல்ல விளைச்சல்தான். கம்பும் கேழ்வரகும் மலை மலையாகக் குவிந்தன."

ஒவ்வொருவருக்கும் உண்மை தெரிந்துதான் இருக்கிறது என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான். பெருமூச்சு விட்டான்.

"சிலர் பஞ்சத்தில்தான் அறுவடையே செய்கிறார்கள். இன்றைக்கு உள்ளே பார்த்திருப்பீர்களே, பஞ்சத்தின் அதிபர்களை?"

"யார்?" என்றான் ஏய்டன். பின்பு "நான் அறிமுகம் செய்துகொள்ளவில்லை" என்றான்.

"வெளியே நின்ற வண்டிக்காரர்களிடம் பேசினேன் அவர்கள் சொன்னார்கள்" என்றான் துரைசாமி "அவர்களில் இரண்டுபேர் இலங்கையில் இருந்து வந்தவர்கள். ஒரு வயதான சீமாட்டி. அவள் பெயர் திருமதி கால்வின். அவளுடைய மருமகன் திருவாளர் கால்வின் நுவரேலியாவில் தோட்டங் களை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறார். மிச்சமிருந்தவர்கள்

மலாயாவில் இருந்து வந்தவர்கள். அந்த இளம்பெண்ணின் பெயர் சீமாட்டி கார்ன்வுட்"

ஏய்டன் புன்னகைசெய்தான். 'சீமாட்டி கார்ன்வுட், நன்றாகத்தான் இருக்கிறது'. அவளுடைய வைரங்களை நினைவுகூர்ந்தான். 'எத்தனை வைரங்கள் வழியாக எத்தனை பாவனைகள் வழியாக ஒரு விவசாயிமகள் சீமாட்டியாக ஆகவேண்டியிருக்கிறது. எத்தனை குருதி அதற்காக வீழ்த்தப்பட்டிருக்கும்'.

"அவளுடைய கணவன் திருவாளர் கார்ன்ஃபீல்ட் மலாயாவில் தோட்டங்கள் வைத்திருக்கிறார். அவருடைய தம்பியும் கூடவே வந்திருக்கிறார். இன்னொருவர் திருவாளர் ஜேக்கப்ஸன். அவரும் அவருடைய இரு நண்பர்களும்கூட மலாயாவில் தோட்டங்களை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயிரக்கணக்கில் வேலையாட்கள் தேவைப்படுகிறார்கள். நூறுபேரைக் கொண்டுபோனால் இருபதுபேர்தான் கடைசியில் உயிருடன் எஞ்சுவார்களாம். ஆகவே எவ்வளவுபேரைக் கொண்டுபோனாலும் போதவில்லை. காட்டைப் படிப்படியாக அழிக்கமுடியாது. அழிக்க அழிக்க காடு உருவாகிக்கொண்டே இருக்கும். ஒட்டுமொத்தமாக அழித்துத் தோட்டமாக்குவதுதான் ஒரே வழி. அதற்கு லட்சக்கணக்கில் மனிதர்கள் தேவைப்படுகிறார்களாம்"

துரைசாமி, ஏய்டன் அந்தப் பேச்சை ஊக்குவிக்கிறானா என்று கவனித்தபின் தொடர்ந்தான். "அங்கே மனிதர்கள் மிகவும் குறைவு. அவர்கள் காட்டுவேலைக்கு வருவதும் இல்லை. இங்கே இந்தப்பஞ்சத்தால் இப்போது வேண்டு மளவுக்கு ஆட்கள் கிடைக்கிறார்கள். ஆனால், அடுத்த வருடத்துடன் பஞ்சம் நின்றுவிட்டால் ஆட்கள் கிடைக்காம லாகிவிடும். அதற்குள் அதிகமானபேரைக் கொண்டுபோக வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் இங்குள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லையாம்."

"வரி கட்டியாகவேண்டும் இல்லையா?" என்றான் ஏய்டன்.

"வரி எவ்வளவு வேண்டுமானாலும் கட்டுவார்களாம். ஆனால் இவர்களின் நெருக்கடியைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு எல்லா அதிகாரிகளும் லஞ்சம் கேட்கிறார்கள். கொடுக்கக்கொடுக்க லஞ்சம் கூடியபடியே போகிறது. லஞ்சமாவது பரவாயில்லை, லஞ்சம் வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் செயற்கைத் தாமதங்கள்தான் இவர்களுக்குக் கஷ்டமாக இருக்கின்றன. அதை முறையீடு செய்யத்தான் வந்திருக்கிறார்கள்."

"அவர்கள் கோரிக்கை என்னவாம்?" என்றான் ஏய்டன். இந்த வண்டிக்காரர்கள் பிரிட்டிஷ் அரசின் வரலாற்றை வேறு எவரைவிடவும் தெளிவாக எழுதிவிடமுடியும் என்று நினைத்துக்கொண்டான்.

"அவர்களே கப்பல்களை வாடகைக்கு எடுத்து ஆட்களைக் கொண்டுசெல்ல அனுமதிக்கவேண்டும். கலெக்டர் தளத்தில் அவர்களுக்கு நேரடி அனுமதி அளிக்க வேண்டும். துறைமுக அதிகாரிகள் தலையிடக்கூடாது. அனேகமாக கவர்னர் ஒப்புக்கொள்வார். இந்தத் தோட்ட முதலாளிகளிடம் பணம் கொட்டிக்கிடக்கிறது. அவர்கள் வைத்திருக்கும் வண்டிகளைத் தொடவே எனக்குப் பயமாக இருக்கிறது" துரைசாமி சொன்னான் "திருவாளர் கார்ன்ஃபீல்டுக்குப் போக வேண்டிய ஒரு கப்பல் நிறைய கூலிகளை நாகப்பட்டினத்தில் நிறுத்திவிட்டாராம் ஓர் அதிகாரி. அவற்றில் சிலருக்கு வாந்தி பேதி இருக்கிறது, ஒரே கப்பலில் போனால் எல்லாருக்கும் நோய் வந்துவிடும் என்று வாதிட்டாராம். நோய்வந்து செத்தால் எடுத்துக் கடலில் போடப்போகிறார்கள். நஷ்டம் பணம் முடக்கும் திருவாளர் கார்ன்ஃபீல்டுக்குத்தானே?".

"ரஸ்ஸலைச் சந்திக்கவந்தார்களே அவர்கள் யார்?" என்றான் ஏய்டன்.

துரைசாமி அரைக்கணம் யோசித்தான். அவனை ஏய்டன் சோதனை செய்கிறானோ என்ற எண்ணம் அவன் மனதில் ஓடுவதை ஏய்டன் வாசித்தான். "அவர்கள் இந்தியப் பிரமுகர்கள். நான் பார்த்ததே இல்லை. எனக்கு அறிமுகம் செய்விக்கப்படவும் இல்லை"

"அந்த நாமம் தரித்த பிராமணர் முரஹரி அய்யங்கார். அவர் தொழிலால் வக்கீல். ஆனால் அவர்தான் இங்கிலாந்தில் உள்ள பெரும்பாலான வங்கிகளுக்கு உள்ளூரில் முதலீட்டு ஆலோசனை சொல்லக்கூடியவர். அவரது தந்தை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் துபாஷியாக இருந்தவர். அதற்கு முன் அவர்கள் தஞ்சாவூர் மன்னர்களுக்கு அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். மற்றவர்கள் மூவரும் காண்டிராக்டர்கள். அவர்களில் இளையவர் தடிகொண்டா நம்பெருமாள் செட்டி. அவருடைய அப்பா தடிகொண்டா ராமச்சந்திர செட்டி பெரிய இரும்பு வியாபாரி. மதராஸில் வந்திறங்கும் இரும்புச் சாமான் முழுக்க அவர் வழியாகத்தான் விற்கிறது."

"ஓ" என்றான் ஏய்டன்.

"இவர் இரும்புத்தொழிலுடன் கட்டுமானவேலைகளும் செய்யலாமென்று நினைக்கிறாராம். இங்கே மதராஸ் காலேஜில் படித்துவிட்டு இரண்டுவருடம் லண்டனுக்குப் போய் கட்டிடக்கலையும் படித்து வந்திருக்கிறார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குத்தகைகளை எடுக்கவிரும்புகிறார். மற்ற இரண்டுபேரில் குண்டாக இருந்தவர் பனுகண்டி நரசிம்மராவ். இன்னொருவர் சின்னூர் நமச்சிவாய முதலியார்"

ஏய்டன் பெருமூச்சுடன் சாய்ந்துகொண்டான். சட்டென்று சிரிப்பு வந்தது. டியூக்கிடம் அவனுடைய உணர்ச்சிகரமான நாடகப்பேருரை நிகழும்போது உள்ளேயும் வெளியேயும் இருந்தவர்கள் அவர்கள்தான். அவன் வெளியே வந்ததும் 'டியூக் என்ன சொல்லியிருப்பார்' என்று நினைத்தான். 'அவர் தூய பிரிட்டிஷ் ரத்தம் கொண்டவர். ஒன்றுமே சொல்லியிருக்க மாட்டார். ரஸ்ஸல் அவரிடம் ஏதாவது சொல்லியிருக்கலாம். ஆனால், ரஸ்ஸலும் சொல்லப் போவதில்லை. ஒருவேளை ரஸ்ஸல் மதுக்கோப்பையுடன் தன் அந்தரங்க நண்பர்களுடன் பேசும்போது கோணலாக வளையும் உதடுகளுடன் ஏதாவது சொல்லலாம். அவர்கள் "சுவாரசியமானது" என்று சொல்லிப் புன்னகைசெய்யலாம். டியூக் தன் நாட்குறிப்பில் மெல்லிய அங்கதத்துடன் இரண்டு வரி எழுதலாம்'.

'ஆனால், கண்டிப்பாக அந்த இந்தியர்கள் திரும்ப வண்டிகளில் ஏறும்போது சிரிக்க ஆரம்பிப்பார்கள். வீடுவரை சிரிப்பார்கள். மனைவிகளிடமும் ஆசைநாயகிகளிடமும் சொல்லிச் சிரிப்பார்கள். ஒருவேளை அவர்கள் வாழ்க்கை முழுக்க நினைத்திருக்கும் ஒரு நகைச்சுவையாக இருக்கும் அது'. அவனை அவர்கள் நேரில் சந்திக்க நேர்ந்தால் பணிவுக்கும் மரியாதைக்கும் உள்ளே கண்களில் சிரிப்பு உலோகமுள்முனையாக ஒளிவிடும்.

"தடிகொண்டா வாராங்கல் பக்கத்தில் உள்ள ஊர். அங்கிருந்து இங்கே கைவண்டி இழுத்து வியாபாரம் செய்யவந்தவர்தான் ராமச்சந்திர செட்டி. அவரிடம் இன்றைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள். துறைமுகமே அவரது கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. பார்த்தசாரதி கோயிலில் தினம் நூறு பிராமணர்களுக்கு அன்னதானம் செய்கிறார்" என்றான் துரைசாமி. "பிரிட்டிஷ் ஆட்சி வந்தபின்னர் பல செட்டிகள் மன்னர்களைவிடப் பெரியவர்களாக ஆகிவிட்டார்கள். நூறு படகு வைத்திருக்கும் செட்டிகள் நூற்றுக்கணக்கிலே இருக்கிறார்கள்"

ஏய்டன் தன் தலையைத் தூக்கம் கனத்து அழுத்துவதை உணர்ந்தான். வாழ்நாளில் அதுவரை அப்படி ஒரு தூக்கத்தை அறிந்ததில்லை. 'தூங்கி இரண்டு நாட்களாகின்றன' என்று நினைவுக்கு வந்தது. 'நான் ஏன் ஏமாற்றமடையவேண்டும்? என் கடமையைச் செய்துவிட்டேன். நான் மற்றவர்களைப்போல கண்ணைமூடிக் கொண்டிருக்கவில்லை, அதற்கான நியாயங்களை உருவாக்கிக் கொள்ளவில்லை. நான் வந்தது வாய்ப்பு என்று பிணம்தின்ன முன்னால் நிற்கவில்லை. என் மனசாட்சிக்கு முன்னால் நான் தூய்மையானவன். நான் ஏசுவை கடைசிநாளில் எதிர்கொள்ளமுடியும்'.

ஆனால் அந்தச் சொற்களை யாரிடம் சொல்கிறான், எவரைத் திருப்திப்படுத்த நினைக்கிறான் என்று கேட்டுக் கொண்டான். 'எவரையும் அல்ல. என்னைத்தான். என்னை மட்டும்தான். உண்மையா? உண்மையில் உன்னை நீ திருப்திப்

படுத்திக்கொண்டாயா?' ஏய்டன் அண்ணாந்து பார்த்தான். கூட்டம் கூட்டமாக மக்கள் பறந்து சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களின் வெள்ளை உடைகள் சிறகுகள் போல காற்றில் பறந்தன. பெண்கள் குழந்தைகளை இடுப்பில் வைத்திருந்தார்கள். வானம் முழுக்கப் பெரும் கூட்டம். அவர்கள் வானத்திற்கு அப்பால் எதையோ பார்த்துக் கைநீட்டியபடி பறந்து சென்றார்கள்.

வீட்டுக்கு வந்தபின் துரைசாமி சன்னலைத் தட்டியபோது ஏய்டன் விழித்துக்கொண்டான். அவன் எங்கிருக்கிறான் என்றே புரியவில்லை. பின்பு வாயைத் துடைத்துக்கொண்டு இறங்கினான். டேவிட் வந்து அவன் கோட்டையும் தொப்பியையும் வாங்கினான். சப்பாத்துக்களை அவனே கழற்றி வீசி விட்டு விழுந்துகொண்டே இருந்தான். இடுங்கலான இருண்ட கிணற்றின் உள்ளே அவனுடைய படுக்கை இருந்தது. மெத்தென்று அதில் சென்று விழுந்தான்.

ஏய்டன் விழித்துக்கொண்டபோது அறைக்குள் வெயில் விழுந்திருந்தது. அவன் படுக்கையில் எழுந்து அமர்ந்து கைகளை நீட்டிச் சோம்பல்முறித்தபோதுதான் சீருடையுடன் அப்படியே தூங்கிவிட்டிருப்பது தெரிந்தது. எழுந்து வெளியே வந்தான். வெளிச்சத்தில் கண்கள் கூசின. டேவிட் சுவர் ஓரமாக வந்து நின்றான். "டீ" என்றான் ஏய்டன். டேவிட் மேலும் நின்றான். "என்ன?"

"காத்தவராயன் வந்திருக்கிறார்" என்றான்.

"ஓ" என்றபின் "சரி" என்றான். அப்போது அவனுக்குக் காத்தவராயனைச் சந்திக்கப் பிடிக்கவில்லை. அனைத்தில் இருந்தும் விலகி தன்னுடைய பழைய வாழ்க்கைச்சுழலுக்குள் சென்று ஒதுங்கிவிடவேண்டுமென்ற எண்ணம்தான் ஏற்பட்டது.

முகத்தைக் கழுவி விட்டு நாற்காலியில் அமர்ந்து கொண்டான். டேவிட் கொண்டுவந்த டீயைக் குடித்தான். மேலும் கொஞ்சநேரம் அர்த்தமில்லாமல் எதையோ யோசித்துவிட்டு எழுந்து வெளியே வந்தான்.

காத்தவராயன் வெளியே வருகையாளர்களுக்கான நாற்காலியில் அமர்ந்து முற்றத்தில் நின்ற மரத்தில் எழுந்தும் அமர்ந்தும் 'கிச்.. கிச்..' என ஒலித்துக்கொண்டிருந்த தேன் சிட்டுகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். காலடி ஓசைகேட்டுத் திரும்பிப் புன்னகை செய்து "காலைவணக்கம் சார்" என்றான்.

"காலைவணக்கம்" என்றபடி ஏய்டன் அமர்ந்து கொண்டான்.

"அவசரமான செய்தி. ஆனால் நீங்கள் களைத்துத் தூங்குவதாகச் சொன்னார்கள். அதனால்தான் காத்திருந்தேன்"

"என்ன?" என்று ஏய்டன் மெல்லிய படபடப்புடன் கேட்டான்.

"அந்த இரண்டு ஐஸ்ஹவுஸ் தொழிலாளர்களின் சடலங்களும் கிடைத்திருக்கின்றன. அடித்துத் தூக்கி கடலில் வீசியிருக்கிறார்கள்".

"எங்கே?"

"இங்கிருந்து நான்குமைல் தள்ளி. எண்ணூர் அருகே. கடலில் இருந்து சடலங்கள் ஒதுங்கியிருக்கின்றன. ஒருவரை ஒருவர் இறுக்கமாகப் பிடித்திருக்கிறார்கள். ஆகவே இரண்டு சடலங்களும் சேர்ந்தே ஒதுங்கியிருக்கின்றன"

என்ன சொல்வதென்று தெரியாதவன் போல ஏய்டன் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"இப்படித்தான் நடந்திருக்கும் என்று நான் ஊகித்தேன். அவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. கடற்கரைச்சதுப்பில் புதைக்க நேரமில்லை. புதைத்தாலும் நாய்கள் தோண்டிவிடும். ஆகவே கடலில்தான் தூக்கிப்போடுவார்கள். உரியமுறையில் எடை கட்டி கடலில் போடாவிட்டால் சடலங்கள் ஒதுங்கும். அதற்கெல்லாம் அவர்களுக்கு அவகாசமில்லை. மேலும் மீனவர்கள்தான் அதையெல்லாம் சரியாகச் செய்வார்கள். ஆகவே நான் கடலோரமாக எங்கள் ஆட்களிடம் சொல்லி வைத்திருந்தேன்"

"நான் உடனே கிளம்புகிறேன்" என்ற ஏய்டன் எழுந்தான்.

"சடலங்களுக்கு இப்போதெல்லாம் எந்த மதிப்பும் இல்லை. ஆனால் இந்தச் சடலங்களை எவரும் அகற்றிவிட வேண்டாம் என்று நாலைந்துபேரைக் காவல் போட்டுவிட்டு வந்தேன்"

"ஐந்து நிமிடம்" என்று ஏய்டன் உள்ளே சென்றான். அவசரமாகக் குளித்து சீருடை அணிந்து வெண்ணெய் பூசப்பட்ட ரொட்டியும் பழச்சாறும் நின்றபடியே சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான்.

வெளியே குதிரை வந்து நின்றது. ஏய்டன் டேவிட்டிடம் "துரைசாமி எங்கே? வண்டி வேண்டும்" என்றான்.

"சார், துரைசாமி இரவே போய்விட்டான். வண்டி வேண்டுமென்றால் " என டேவிட் ஆரம்பித்தான்.

"நீங்கள் குதிரையில் வாருங்கள். நான் கூடவே வருகிறேன். எனக்கு ஓடுவது ஒன்றும் பிரச்சினையே இல்லை" என்றான் காத்தவராயன்.

ஏய்டன் குதிரையில் ஏறிக்கொண்டான். ஆனால் அவன் குதிரையை மெல்லிய நடையில் விட்டான்.

"அவர்கள் ஏன் கொலை செய்யப்படவேண்டும்? என்ன லாபம்?" என்றான் ஏய்டன்.

"ஒரு லாபமும் இல்லை. ஆனால் அவர்கள் மனம் வேறுவகையாக வேலைசெய்யும். ஏன் கொலைசெய்யக் கூடாது? என்ன நஷ்டம் என்று யோசிப்பார்கள். இந்த இருவரும் சிறிய அளவிலேனும் தொல்லைகளாகக் கூடும். ஆகவே கொல்வதுதான் நல்லது. சடலங்கள் கிடைத்தால்கூட அவை தீண்டப்படாதவர்களின் உடல்கள் என்று தெரிந்தால் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் இருக்கப்போவதில்லை. இந்த நாட்டில் அவர்கள் மிருகங்களாகவே கருதப்படுகிறார்கள். தஞ்சாவூரில் வெறுமே வேடிக்கை விளையாட்டுக்காகவே அவர்களைக் கொல்கிறார்கள். எருமையின் வாலில் ஒரு தீண்டாத சாதி பையனைக் கட்டி அந்த மிருகத்தை ஓடவிட்டு

அவன் இழுபட்டுச் சாவதைக் கண்டு ரசித்தார்கள் என்று ஒரு செய்தி வந்ததை அறிந்திருப்பீர்கள்".

ஏய்டன் ஏனோ அந்தப் பேச்சைத் தவிர்க்க விரும்பினான்.

"சார், நான் உங்களிடம் கோருவது ஒரே உதவியைத்தான். உங்கள் பிரச்சினைகளும் உங்கள் அதிகாரத்தின் அளவும் எனக்கு நன்றாகவே தெரியும். உங்களை எந்தச்சிக்கலிலும் மாட்டிவிட நான் விரும்பவில்லை. இந்தக்கொலையை விரிவாகத் துப்பறிந்து குற்றவாளிகளைப்பிடித்து தண்டிப்ப தெல்லாம் உங்களால் முடியாதென்று எனக்கு நன்றாகவே தெரியும்-"

ஏய்டன் கோபத்துடன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். காத்தவராயன் "சார், நான் உங்கள் நேர்மையை ஐயப்பட வில்லை. உங்கள் மனசாட்சிக்கு என்னைவிடச் சிறந்த சாட்சி யார் இருக்கிறார்கள்? நாங்கள் உங்களைப்போன்ற ஒருசில வெள்ளையர்களின் கருணையால்தான் எங்கள் எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய ஒரு சிறு நம்பிக்கையை வைத்திருக் கிறோம். நான் சொல்வது இந்த அரசாங்கத்தைப்பற்றி. பிரிட்டிஷ் ஆட்சி என்புதே அதிகாரிகளும் பண்ணை உரிமை யாளர்களும் குத்தகை தாரர்களும் சேர்ந்து அடிக்கும் ஒரு மாபெரும் கூட்டுக்கொள்ளை மட்டும்தானே?"

தன் மனதில் ஓடிய சித்திரத்தின் மீது அந்தச் சொற்கள் வந்து படிந்த விதம் ஏய்டனை அதிரச்செய்தது. அவன் திரும்பிப்பார்த்துவிட்டு அமைதியானான்.

"நீங்கள் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான் சார். அந்த இரு சடலங்களையும் ஐஸ்ஹவுஸுக்குக் கொண்டுசெல்ல வேண்டும். அங்கே ஊழியர்கள் இந்தச்சடலங்களைப்பார்த்து அடையாளம் காட்டுவதற்கான ஒரு அணிவகுப்பை நடத்த வேண்டும். அதன்பின் சடலங்களை இடுகாட்டுக்கு அனுப்பி விடுங்கள்"

ஏய்டன் புரியாமல் பார்த்தான்.

"நாங்கள் இந்த தேசத்தின் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைத் திட்டமிட்டிருக்கிறோம் சார்" என்றான் காத்தவராயன்.

"வேலைநிறுத்தமா, இந்தியாவிலா?" என்றான் ஏய்டன் திகைப்புடன்.

"ஆமாம். அதற்கு மிக வசதியான இலக்கு இந்த ஐஸ்ஹவுஸ்தான். இதைவிடப் பரிதாபகரமான நிலையில்தான் துறைமுக ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை எங்களால் ஒருங்கிணைக்கமுடியாது. அவர்களில் எல்லாச் சாதியினரும் எல்லா மொழியினரும் இருக்கிறார்கள். எண்ணிக்கை பிரம்மாண்டமானது. அதைவிட அவர்களை அமர்த்தியிருக்கும் இந்திய முதலாளிகள் எந்தக் கொடுமைக்கும் அஞ்சாதவர்கள். இந்த அமெரிக்கர்கள் கெட்டபேருக்குப் பயப்படுவார்கள். ஆகவே நேரடியாகக் கொடுமைகளைச் செய்ய இவர்கள் துணிய மாட்டார்கள். சார், இந்தியாவின் உயர்சாதியினரை விட மிகமிக மேலான மனசாட்சியும் பண்பாடும் கொண்டவர்கள் இந்த வெள்ளையர். இவர்களின் கருணையை நான் நம்புகிறேன்"

காத்தவராயன் தொடர்ந்தான் "இந்த விஷயத்துக்கு இவர்கள்தான் சரியான இலக்கு. ஏனென்றால் இவர்கள் பயப்படுவார்கள். இந்த விஷயங்களை இவர்கள் இந்த இடத்தில் அதிகம்பேருக்குத் தெரியாமல் முடித்துக்கொள்ளவே விரும்புவார்கள். அமெரிக்கா வரைக்கும் செய்தி போவதையோ அங்குள்ள செய்தித்தாள்களில் இது விவாதிக்கப்படுவதையோ விரும்ப மாட்டார்கள். எப்படியாவது ஒரு வார்த்தை ஏதேனும் அமெரிக்க இதழில் அல்லது பிரிட்டிஷ் இதழில் வெளிவந்தால் போதும். நமக்குச்சாதகமாக எல்லாவற்றையும் முடித்து விடலாம்."

"ஒரு வேலைநிறுத்தம் என்றால்." என ஏய்டன் ஆரம்பித்தான். அவனுக்குத் தெளிவாகச் சிந்திக்கமுடியவில்லை.

"கூலி உயர்வுக்காகவோ அல்லது மேலான வேலைச் சூழ்நிலைக்காகவோ இன்றைக்கு நாம் இந்த தொழிலாளர் களைத் திரட்டிப் போராடவைக்க முடியாது. ஏன், அடி உதை களுக்கு எதிராகக்கூட அவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள். அதெல்லாம் அவர்களுக்கு நூற்றாண்டுகளாகப் பழக்கம்தான்.

ஆனால் அவர்களில் ஒருவன் மனைவியுடன் கொன்று வீசப்பட்டிருப்பதைப் பார்த்தால் அந்தக் கணநேர வேகத்தில் அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். அந்த உணர்வெழுச்சியை நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். குற்றவாளி களைப் பிடித்துத் தண்டிக்கவேண்டும் என்றும் வேலைச்சூழலில் கடுமையான தண்டனைகள் அளிக்கப்படக்கூடாது என்றும் உயிர்வாழ்வதற்கான அடிப்படைக் கூலி தரப்படவேண்டும் என்றும் அவர்களைக்கொண்டு கோரவைக்கலாம்''

"நீங்கள் நினைப்பது தெரிகிறது'' என்று காத்தவராயன் தொடர்ந்தான். "இப்படிச் செய்வதனால் என்னபயன் என்று நினைக்கிறீர்கள். இந்தச் சின்னத் தொழில்நிறுவனத்தில் வெறும் முந்நூறு தொழிலாளர்களைப் போராடச்செய்தால் என்ன ஆகப்போகிறது என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான். இது கடலில் ஒரு துளிதான். எங்கள் மக்களை ஆடுமாடுகளைப் போலப் பிடித்துக் கப்பலேற்றிக் கொண்டு செல்கிறார்கள். ஒருவேளை உணவுக்காக இருபது மணிநேரம் வேலைவாங்கு கிறார்கள். ஆனால் இங்கிருந்துதான் நாம் தொடங்கமுடியும். இந்த மக்களும் எதிர்ப்பு தெரிவிக்க வாய்ப்புண்டு என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் அறியட்டும். அவ்வளவு சாதாரணமாக இவர்களை அடிமைக்கூலிகளாக ஆக்கமுடியாது என்று ஒரு சிறிய அச்சம் அரசாங்கத்துக்கு வரட்டும்''

ஏய்டனின் மனதை நுட்பமாகப் புரிந்துகொண்டு காத்தவராயன் தொடர்ந்தான் "ஆமாம் சார், "இங்குள்ள உயர்சாதிகள் கவலைப்படவே மாட்டார்கள். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் கவலைப்பட்டாகவேண்டும். ஏனென்றால் அங்கே பிரிட்டனில் இந்த அரசாங்கத்தின் அடித்தளமாக இருப்பது தொழிலாளர்கள்தான். அவர்கள் அங்கே நடத்தும் போராட்டங்களை அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கிறது. அவர்களை நினைத்துப் பயப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தச்செய்தி அவர்களிடம் போய்ச்சேர்ந்தால் அத்தனை சக்தி களும் ஒன்றுசேர்ந்துவிடும் என்று அவர்கள் அஞ்சுவார்கள்''

தன்னுடைய உணர்ச்சிகளில் மூழ்கிக் காத்தவராயன் சொல்லிக்கொண்டே சென்றான் "ஆமாம் சார், இப்படி ஒரு

போராட்டம் நிகழ்ந்தாலே நமக்கு வெற்றிதான். இது ஒரு பெரிய தொடக்கம். கோடானுகோடி பஞ்சப்பராரிகள் கொண்ட தேசத்தில் தொழிலாளர் போராட்டம் என்பது உலர்ந்த காட்டில் வீசப்பட்ட தீப்பொறி மாதிரி. அரசாங்கம் இந்தப் போராட்டம் பரவிவிடக்கூடாது என்று நினைக்கும். எங்கள் மக்களுக்கு மிகச்சிறிய அளவிலாவது உரிமையும் பாதுகாப்பும் கொடுக்கவேண்டும் என்று முயற்சி செய்யும். எது கிடைத்தாலும் லாபம்தான்"

ஏய்டன் தொண்டையைக் கனைத்தான். "நீ சொல்லும் போது சரியாகத்தான் இருக்கிறது. ஐஸ்ஹவுஸ் ஒரு சிறிய நிறுவனம். அதை அரசு பெரிதாக எடுத்துக்கொள்ளாது. அமெரிக்கர்கள் மீது ஒரு கசப்பும் பிரிட்டிஷாரிடம் உண்டு"

"எல்லாக் கணக்குகளும் சேர்ந்து வருகின்றன சார். ஒரு மூன்றுநாள் போராட்டம். அதுதான் என் திட்டம். அதற்குள் நான் எல்லாச் செய்தித்தாள்களுக்கும் செய்தி அனுப்பிவிடுவேன். சென்னையில் இரண்டு செய்தியாளர்கள் எனக்கு உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். மதராஸ் மெயில் நாளிதழ் கடந்த பல மாதங்களாகவே பஞ்சம் பற்றிய செய்திகளைப் போட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களின் உதவி நமக்கிருக்கும். போராட்டம் சமரசமானாலும் பிரிட்டிஷ் அரசு இதைப்பற்றி யோசிக்கும். தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதிலும் சம்பளம் கொடுப்பதிலும் சில நிபந்தனைகளையும் கண்காணிப்பையும் கொண்டுவரும். நான் டியூக் ஆஃப் பக்கிங்ஹாமை நம்புகிறேன். அவரது கருணையின் ஒரு சொட்டு எங்கள் மக்கள் மீது விழுந்தாலே போதும். ஏனென்றால் நூற்றாண்டுகளாகக் கருணை என்றால் என்னவென்றே என் மக்கள் அறிந்ததில்லை"

காத்தவராயன் சட்டென்று குரலைத் தாழ்த்தினான். "அத்துடன் இது ஒரு முக்கியமான தருணம். நகரத்தில் வந்து குவியும் லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கண்டு இங்குள்ள முதலாளிகளுக்கு நாக்கு ஊறுகிறது. இப்போது கிடைப்பதுபோல இத்தனை மலிவாக இனிமேல் மனித

உழைப்பு கிடைக்கப்போவதில்லை. ஆகவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தை வற்புறுத்தி சில பெரிய கட்டுமான வேலைகளைச் செய்யவைப்பார்கள். அவற்றை இலவசமாகவே எங்கள் மக்கள் கட்டிக்கொடுப்பார்கள். அந்தக் கொள்ளை லாபத்தில் மேலிருந்து கீழே வரை எல்லா பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் பங்குவாங்குவார்கள். பிரிட்டிஷ் அரசுக்கும் லாபம்தான். இத்தனை குறைந்த செலவில் அவர்கள் எந்தக் கட்டுமானத்தையும் இனிமேல் செய்துகொள்ள முடியாது. கோட்டைகள் கட்டலாம். சாலைகள் போடலாம். துறைமுகங்கள் உருவாக்கலாம். எல்லாருக்கும் லாபம்தான். எங்கள் மக்களின் ரத்தத்தைப் பங்குபோட்டு குடித்துக் கொழுக்கலாம்."

தூரத்தில் தெரிந்த துறைமுகத்தைச் சுட்டிக்காட்டி காத்தவராயன் சொன்னான் "நூறுவருடம் முன்னால் இதைப்போன்ற ஒரு பெரும் பஞ்சம் வந்தது. அப்போதுதான் மதராஸ் துறைமுகம் கட்டப்பட்டது. அதன் ஒவ்வொரு கல்லுக்கும் ஐந்து தொழிலாளர்களாவது செத்து விழுந்திருப்பார்கள். எங்கள் மக்களின் பச்சை ரத்தத்தைக் குழைத்துக் கட்டப்பட்டது அது. இந்தப்பஞ்சம் முடிவதற்குள் மதராஸை பிரம்மாண்டமாகக் கட்டி எழுப்பி விடுவார்கள்"

"நான் நேற்று கவர்னரைப் பார்த்தேன்" என்றான் ஏய்டன்.

"தெரியும்" என்றான் காத்தவராயன்.

"உங்கள் ஆள் இல்லாத இடம் இல்லை என்று எனக்கும் தெரியும்" என்றான் ஏய்டன். "நேற்று நான் கவர்னரைச் சந்திக்கும்போது வில்லியம் ரஸ்ஸல் நான்கு குத்தகைக்காரர்களைத்தான் கூட்டிவந்திருந்தார். ஒருவர் பெயர் விசித்திரமானது. தடிகொண்டா-"

"ஆமாம், தடிகொண்டா நம்பெருமாள் செட்டி. அவரது தந்தையிடம்தான் எங்கள் ஆட்கள் பல்லாயிரக்கணக்கில் சோற்று அடிமைகளாக வேலைசெய்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவரும் குத்தகைதாரராக ஆகப்போவதாகச் சொன்னார்கள். கடந்த ஒருமாதமாகவே குத்தகைதாரர்கள்

கவர்னரை மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ பெரும் கட்டுமானத் திட்டங்கள் இருக்கின்றன. பல்கலைக்கழக செனெட் ஹாலுக்கு நேற்று அடித்தளமிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் லண்டனில் இருந்து ஆணை வரவில்லை." என்றான் ஏய்டன்.

"இங்கே செய்யவேண்டிய வேலைகளும் நிறையவே உள்ளன. இந்தப் பெரிய நாட்டை நல்ல சாலைகள் இல்லாமல் இணைக்கமுடியாது" என்றான் ஏய்டன்.

"ஆமாம் சார். அந்தவேலைகள் நடக்கட்டும். அதனால் பிரிட்டிஷ் அரசுக்கு வசதி. முதலாளிகளுக்கு லாபம். ஆனால் எங்கள் மக்களுக்கும் அதனால் நன்மைதான்"

"எப்படி?" என்றான் ஏய்டன்.

"எங்கள் மக்கள் எப்படி விவசாயத்தில் இருந்து வெளியே வந்தாலும் அது அவர்களுக்கு நல்லதுதான். எந்த வேலை செய்தாலும் அவர்களுக்கு மீட்புதான். எங்கள் கிராமங்கள் இருண்டு தேங்கிக் கிடக்கின்றன. இந்தச்சாலைகள் வழியாக அன்னியமக்கள் கிராமங்களுக்குப் போகட்டும். வெளி உலகம் என்று ஒன்று இருக்கிறது என்று நம் மக்கள் புரிந்து கொள்ளட்டும். நான் போராடுவது அந்த மாற்றம் நிகழும் இந்தக் காலகட்டத்தில் என் மக்களுக்கு அவர்கள் உயிரோடிருப்பதற்கு அவசியமான உணவும் உடையும் மட்டும் கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான். மற்றவற்றை நாங்கள் பிறகு பார்த்துக் கொள்கிறோம்"

ஏய்டன் பெருமூச்சுவிட்டான். காலை வெயிலாக இருந்தாலும் வியர்த்து ஒழுகியது. கடற்காற்றில் கூட வியர்வை உலரவில்லை. கடற்கரையை ஒட்டித் தேங்கிக்கிடந்த பின்நீர்ப் பிடிப்புகளில் கூட்டம் கூட்டமாக நாரைகள் அமர்ந்திருந்தன. அவன் நேற்றுகண்ட கனவை நினைவுகூர்ந்தான். கனவுகளுக்கு மட்டும் அப்படி ஒரு பிரம்மாண்டம் எப்படிச் சாத்தியமாகிறது?

அவர்கள் எண்ணூரை அடைந்தபோது அங்கே மேலும் சிலர் கூடியிருந்தார்கள். மிகவும் தள்ளித் தனக்குச் சம்பந்தமே இல்லை என்பதுபோல ஒரு டாணாக்காரன் நின்றிருந்தான்.

பட்டாணிகளுக்குரிய தாடி. கையில் புராதனமான 'ஃபெர்குஸன் ரைஃபிள்' வைத்திருந்தான். ஏய்டனைக் கண்டதும் விரைப்பாக சல்யூட் அடித்தான்.

இரு சடலங்களும் இழுத்து மணலில் போடப்பட்டிருந்தன. கண்களையும் உதடுகளையும் மீன்கள் குதறியிருந்தன. பற்கள் ஈறுகளில் இருந்தே ஆரம்பித்து மிகநீளமாகத் தெரிந்தன. வயிறும் குதறப்பட்டிருந்தது. இரு உடல்களுமே நிர்வாணமாக இருந்தன. அவன் பார்த்த அதே ஆணும் பெண்ணும்தான். அவனுக்கு அந்தக் குழந்தைகள்தான் உடனே நினைவுக்கு வந்தார்கள்.

ஏய்டன் "புரட்டிப்போடு" என்றான்.

ஒருவன் சடலத்தைப் புரட்டிப்போட்டான். இரு சடலங்களிலும் பின்மண்டை ஆழமாக உடைபட்டிருந்தது. கனமாக இரும்புப்பொருளால் பின்னாலிருந்து அடித்துக் கபாலத்தை உடைத்திருக்கிறார்கள். அனேகமாகக் கடற்கரையில் வைத்து. அப்படியே தூக்கிக் கடலில் போட்டுவிட்டார்கள். மரணத் துடிப்பில் இரு உடல்களும் ஒன்றை ஒன்று இறுக்கமாகப் பிடித்துக் கொண்டன.

பெருமூச்சு விட்டபின் ஏய்டன் திரும்பி அங்கே தள்ளி நின்ற டாணாக்காரனிடம் "இந்தச்சடலத்தை ஐஸ்ஹவுஸுக்கு கொண்டுவா. எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம்" என்றான்.

"சர்" என்று அவன் சல்யூட் அடித்தான். அவனுக்குச் சரியாகப்புரியவில்லை என்று திகைத்த முகம் காட்டியது. இந்த சடலங்களுக்காக காப்டனே வந்ததே அவனுக்கு அதிர்ச்சியாக இருந்திருக்கலாம். அவன் வந்து சொல்லாவிட்டால் கண்டிப்பாகச் சடலங்களை உடனே இடுகாட்டுக்குக் கொண்டுசெல்லச் சொல்லியிருப்பான்.

காத்தவராயனிடம் "சடலத்தை நீயே கொண்டு வா. நான் தேவையான ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றபின் ஏய்டன் குதிரையை விரைவாகச் செலுத்திக் கடற்கரை ஓரமாகவே பாய்ந்து விரைந்தான்.

பக்கவாட்டில் கரைவளவுகளில் கடலின் வெண்ணுரை அலம்பிக்கொண்டே இருந்தது. கடலுக்குள் கட்டுமரங்களின் பாய்கள் புடைத்து உருண்டிருந்தன. எவ்வளவு தூரம். நெடுநாட்களாக ஓடாத குதிரை கால்களை வீசித் தாவித்தாவிச் சென்றது. சிறிய கற்கள் காற்றில் எம்பக் கடந்துசென்றது. அவன் குதிரை முதுகில் எடையைத் தாழ்த்தாமல் எம்பிநின்று காற்றில் பயணம் செய்து கொண்டிருந்தான்.

காதுகளில் அனல் வீச, மூச்சு இரைக்க அவன் தன்னுடைய அலுவலகம் வந்து சேர்ந்தான். துரைசாமி ஓடிவந்து சவுக்கை வாங்கிக்கொண்டதும் உள்ளே சென்று அமர்ந்தான். அவன் பின்னாலேயே நாராயணன் வந்து சல்யூட் செய்தான்.

"நாராயணன், நாம் ஒரு பிளட்டூனுடன் உடனே ஐஸ்ஹவுஸுக்குச் செல்லவேண்டும். போய் ஏற்பாடுகள் செய்"

நாராயணன் தயங்கினான்.

"என்ன?"

"ஐஸ்ஹவுஸ் விவகாரத்தை லெஃப்டினெண்ட் மக்கின்ஸி பார்த்துக்கொள்வார் என்று அவர் என்னிடம் சொன்னார்"

"இது என் ஆணை" என்றான் ஏய்டன். நாராயணன் கண்கள் மிகமெல்ல சுருங்கி விரிந்தன. அவன் என்ன நினைக்கிறான் என்று ஏய்டனுக்குப் புரியவில்லை.

"சர்" என்றான் நாராயணன். ஏய்டன் அந்தப்பணிவை கவனித்ததும் தன்னுள் தீவிரமான கோபத்தை உணர்ந்தான். இந்தச் சாதாரண ஹவில்தார் எனக்கு மறைமுகமாக ஆலோசனை சொல்கிறான். நான் ஐஸ்ஹவுஸ் விஷயத்தில் தலையிட வேண்டாம் என்கிறான். ஆனால் இது அவன் குரல் மட்டுமல்ல.

மக்கின்ஸிக்கு நாராயணன் உடனே ஆளனுப்புவான் என்று ஏய்டன் நினைத்துக்கொண்டான். ஐஸ்ஹவுஸ் விவகாரத்தை மக்கின்ஸியே கவனித்துக்கொள்ளவேண்டும் என்பது கண்டிப்பாக கர்னலின் ஆணைதான். சடலம் படகு வழியாக ஐஸ்ஹவுஸுக்கு வந்துசேர எவ்வளவு நேரமாகும்

என்று கணக்கிட்டபடி ஏய்டன் சாய்ந்து அமர்ந்திருந்தான். பின்பு நிகழ்ச்சிப் புத்தகத்தை எடுத்து அன்று கிடைத்த தகவல்களையும் குற்றப்புலனாய்வின் பகுதியாகச் செய்யப்போகும் அடையாள அணிவகுப்பையும் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு எழுதினான்.

சாம் 'டீ' கொண்டு வந்தான். அதைக் குடித்தபின் தொப்பியை எடுத்துக்கொண்டு ஏய்டன் வெளித்திண்ணைக்கு வந்தான். நாராயணன் வந்து சல்யூட் அடித்து "பிளட்டூன் ரெடி சர்" என்றான். கிளம்பச்சொல்லி சைகை காட்டியபின் ஏய்டன் தன்குதிரை அருகே சென்றான்.

துரைசாமி குதிரை அருகே நின்றிருந்தான். அவன் அருகே சென்றதும் துரைசாமியின் கண்வந்து தொட்டுச்சென்றது. ஒரு கணத்தில் அவனுக்குத் தெரிந்தது துரைசாமிக்கு எல்லாமே தெரியும். அப்படியென்றால் நாராயணனுக்கு, அங்கே உள்ள அத்தனைபேருக்கும் எல்லாமே தெரிந்திருக்கிறது.

ஏய்டன் குதிரைமேல் ஏறிக்கொண்டான். நாராயணனிடம் "இருபது குதிரைவீரர்கள் மட்டும் வரட்டும்" என்றான். நாராயணன் தலைவணங்கிவிட்டு விலகிச்சென்றான். அவன் குதிரைப்படைக்கு அளிக்கும் கட்டளைகள் தொலைவில் கேட்டன.

ஏய்டன் சாலையில் ஏறினான். குதிரையின் குளம்புகள் சரல்பாதையில் பட்டு கூழாங்கற்கள் நெரிபடும் ஒலி மட்டும் கேட்டது. அவனுக்குப்பின்னால் படைக்குதிரைகளின் இரும்பு லாடங்கள் கூழாங்கற்களில் ஒலிக்க ஒரு கனத்த எருமைக்கூட்டம் வருவதுபோல குதிரைப்படை வரும் ஒலி கேட்டது. ஏய்டன் திரும்பிப்பார்த்தான். எல்லாக் குதிரைகளுமே செம்பழுப்பு நிறமான 'கிரேட் மராத்தா' வகையைச்சேர்ந்தவை. சற்றே பெரிய காதுகள். கொஞ்சம் குட்டையான கால்களும் கழுத்துகளும். ஆனால், அவை வெயிலுக்கும், பட்டினிக்கும், தாகத்துக்கும், தூரத்துக்கும் அஞ்சாதவை. குளம்புகளின் ஒலி ஒரு கரிய பறவைக்கூட்டம்போல காற்றில் மிதந்து செல்வதாகத் தோன்றியது. சாலையோரத்துச் சுவர்களில் இருந்து எதிரொலியாக அது மீண்டுவந்தது. குத்தீட்டிகளின் நுனிமுட்களின்

ஒளிப்பிரதிபலிப்புகள் சுவர்களில் ஒளிப்புள்ளிகளாக வருடிச்சென்றன.

ஐஸ்ஹவுஸை நெருங்கும்போதே ஏய்டனுக்கு அங்குள்ளவர்களுக்குத் தகவல் சொல்லப்பட்டுவிட்டதென்று தெரிந்தது. அப்படிஎன்றால் அந்த ஊழியர்கள் அனைவருக்கும் கடுமையான மிரட்டல் விடப்பட்டிருக்கும். அதை மீறி எழ அவர்களால் முடியுமா? காத்தவராயனின் தூண்டுதல் அவர்களிடம் வேலைசெய்யுமா?

“காட்டில் லட்சக்கணக்காக புழுக்கள் உள்ளன, ஆனால் ஒவ்வொன்றும் தனித்தனியாகவே நெளிகின்றது” மலாயாக்காடுகளில் அவனுடைய படை ஒன்றை வழிநடத்திய கர்னல் மால்கம் சொல்லும் பொன்மொழி. கீழைநாட்டு மக்களைப் பற்றிய அவரது ஒட்டுமொத்தப்புரிதலும் அதுதான். ஆமாம், அவற்றின் அளவைக்கண்டு அஞ்சவேண்டியதில்லை. அவை நடைமுறையில் ஒரே ஒரு புழுவின் ஆற்றலை மட்டுமே கொண்டவை. ஆனால்,

ஆம், ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒருவரலாற்றுத் தருணம் உள்ளது. தங்களுக்குப் பழக்கமானவற்றைத், தங்களைக் கட்டியிருப்பவற்றை, தாங்கள் எதுவோ அதை மீறி உடைத்தெழுவதற்கு! அந்தத் தருணத்தை அடையாளம் கண்டுகொள்ளும் சமூகங்கள் உலக வரலாற்றில் சட்டென்று வெடிமருந்து போலப் பற்றிக்கொள்கின்றன. அவர்கள் வெல்வதற்கான முதல் எதிரி அவர்களேதான். அவர்கள் தங்களை வென்றுவிட்டார்களென்றால் பின்னர் உலகம் கண்முன் விரிந்து கிடக்கும். ஒரு பிரம்மாண்டமான சிவப்புக்கம்பளம்போல.

‘இந்த மக்களால் முடியுமா? முடிந்தாகவேண்டும். முடிந்தால் இது இந்திய வரலாற்றில் ஒரு மாபெரும் தொடக்கம். இந்த நாட்டை ஆயிரமாண்டுக்காலமாக மூழ்கடித்து வைத்திருக்கும் செயலின்மையில் இருந்து உதறி எழும் முதல் அசைவு. பெரும் தூக்கத்திற்குப்பின் நிகழும் முதல் இமையசைவு’. அவனுக்குச் சட்டென்று பெரும் பிரமிப்பு ஏற்பட்டது. ‘எப்பேர்பட்ட வரலாற்றுத்தருணம். இந்த மாபெரும் தேசத்தின்

முதல் வெகுஜன அரசியல் செயல்பாடு இது. இங்கே பிறக்கவிருக்கும் ஜனநாயகம் அதன் கருப்பைக்குள் செய்யும் முதல் உயிரசைவு!'.

ஆனால் அவனைத்தவிர எவருமே உணர்ந்திருக்க மாட்டார்கள். 'காத்தவராயனைப் போன்றவர்கள் நடைமுறை வாதிகள். அன்றாட யதார்த்தத்துக்கு அப்பால் பார்வையை விரித்துக்கொள்ளாதவர்கள். ஆகவேதான் அவர்கள் மிகை யான நம்பிக்கை எதையும் அடைவதில்லை. நம்பிக்கையிழப்பு நோக்கிச் செல்வதுமில்லை. ஆனால் நான் இந்தத் தருணத்தின் சாட்சி மட்டும் அல்ல இதில் பங்கெடுப்பவனும்கூட'. ஏய்டனுக்கு மனம் பொங்கியது. அவன் இன்றிரவு எழுதப் போகும் நாட்குறிப்பு ஒருவேளை இந்தத் தேசத்தின் நவீன ஜனநாயக வரலாற்றின் முதற்பெரும் ஆவணமாக இருக்கலாம்.

ஷெல்லி இத்தகைய தருணத்தை எப்படி எதிர்கொள் வான்? ஷெல்லி பிரெஞ்சுப்புரட்சியைப்பற்றி எழுதியிருக்கிறான். கொந்தளிப்புடன் ஆற்றாமையுடன். ஆனால், சட்டென்று எந்த வரியும் நினைவுக்கு வரவில்லை. செல்லும் வழி முழுக்க அவன் மனதின் நாநுனியால் நினைவின் எல்லா மூலைகளையும் துழாவினான். ஒருகட்டத்தில் எரிச்சலுற்று நிறுத்திக் கொண்டான்.

ஐஸ்ஹவுஸுக்குள் படை நுழையும்போது வாசலில் பார்மர் நின்றுகொண்டிருந்தார். இம்முறை அவரது தோரணை மாறிவிட்டிருந்தது. தன்னம்பிக்கையும் சிறு சலிப்பும் கலந்த முகத்துடன் கோட்டின் பைகளுக்குள் கைவிட்டுத் தோளைச் சற்றுச் சரித்து நின்றிருந்தவர் படையை நோக்கி வந்தார். "காலை வணக்கம் காப்டன். இந்தமுறை என்ன விவகாரம்?" என்றார்.

ஏய்டன் கைகாட்ட அவனுக்குப்பின்னால் குதிரைகள் தயங்கி பின்னகர்ந்தன. தேங்கும் குதிரைகளுக்குப் பின்னால் வந்த குதிரைகள் 'பர்ர்' என்றன. சிலகுதிரைகள் காதுகளை அடித்துக்கொண்டன. சில காலால் தரையைத் தட்டின. ஒரு குதிரை சிறுநீர் பெய்யும் நீரொலியும் வாசனையும் வந்தது.

"நான் உங்கள் ஊழியர்களை எல்லாம் சோதனையிட வேண்டும். அவர்களிடம் சில கேள்விகள் கேட்கவேண்டும்"

"இதோ பாருங்கள் ஆபீஸர், எங்களுக்கு நேற்றுதான் பெரிய அளவில் சரக்கு வந்து இறங்கியிருக்கிறது. வரும்நாட் களில் நிறைய வேலை இருக்கிறது. இது ஒத்திப்போடும் ரகத்திலான வேலை அல்ல.".

"வரச்சொல்லுங்கள் அவர்களை. அத்தனைபேரும் முற்றத்தில் அணிவகுத்தாகவேண்டும்" என்றான் ஏய்டன் திட்டவட்டமாக.

பார்மரின் முகத்தில் குழப்பம். அவர் அதை எதிர்பார்க்க வில்லை என்று தெரிந்தது. தயக்கமாக "எல்லாரையுமா?" என்றார்.

"ஆமாம்.உடனடியாக" என்றபடி ஏய்டன் சாட்டையைச் சுருட்டிப் பிடித்துக்கொண்டான்.

பார்மர் திரும்பி பின்னால் நின்ற நீலமேகத்திடம் மெல்லிய குரலில் பேசினார். நீலமேகம் தலையசைத்துவிட்டுச் செல்ல பார்மர் திரும்பி "இது சரியில்லை. நீங்கள் எங்களை வேட்டையாடுகிறீர்கள். எங்கள் தொழிலை அழிக்க முயல்கிறீர்கள். நான் இதை எங்கள் அரசிடம் கண்டிப்பாக முறையிடுவேன்"

"நான் சட்டபூர்வமாக மட்டுமே செயல்படுகிறேன்" என்றான் ஏய்டன்.

பார்மர் தலையைச் சலிப்பாக ஆட்டிவிட்டு விலகிச் சென்றார். ஏய்டன் கைகாட்டியபின் உள்ளே நுழைந்தான். குதிரைகள் இரண்டிரண்டாக உள்ளே நுழைந்து பரவி சுவரோரமாக வரிசையாகச் சீரான இடைவெளியில் நின்றன. காலை ஒளியில் அவற்றின் மாந்தளிர் உடல்களில் மென்ரோமப் பரப்பின் வளைவுகள் ஒளிவிட்டன. குஞ்சிரோமம் சிலிர்க்கச் சில குதிரைகள் குனிந்து தரையை முகர்ந்தன. பின்னால் குஞ்சவால்கள் சுழல அவை நிலைகொள்ளாமல் மண்ணை மிதித்துக் குதிரைவீரர்களால் மெல்ல அதட்டப்பட்டுச் சமனமடைந்து நின்றன. குதிரை வீரர்கள் குத்தீட்டிகளைச் செங்குத்தாகப் பிடித்துக் கொண்டார்கள். ஒரு ஈட்டிநுனி

திரும்பிய ஒளி ஏய்டனின் கண்ணைச் சிறு வெண்மின்னலாக கடந்துசென்றது.

கொஞ்சம் கொஞ்சமாகத் தொழிலாளர்கள் வந்து சேர ஆரம்பித்தார்கள். கடைசித்தீர்ப்பு நாளுக்காகக் கல்லறைகளில் இருந்து பாதிமட்கிய உடல்கள் எழுந்து வருவதுபோல. நைந்து புண்ணான ஈரத்தோல்கள். காட்டில் பூசணம் பூத்துக்கிடக்கும் பழைய மரங்கள் போல. ஏய்டன் ஒரு ஏமாற்றத்தை உணர்ந்தான். 'இவர்களா? இவர்களா? குரலெழுப்பப் போகிறார்கள். தனித்தனி உடலும் மனமும் கொண்டவர்களானாலும் தாங்கள் ஒரே வரலாற்று ஆளுமை என்று இவர்களுக்கா தோன்றப் போகிறது? இவர்கள் தங்களுக்கு என வயிறு அன்றி வேறு உறுப்பு இருப்பதையே அறிந்திருக்க மாட்டார்கள். தன்னுணர்வும் கௌரவமும் இவர்களால் ஒருபோதும் உணரப் பட்டிருக்காது. புழுக்கள். மனிதப் புழுக்கள். தனித்தனியாக நெளியும் உயிர்கள்'.

ஏமாற்றத்தின் உச்சியில் அவனுக்கு உடல் தளர்ந்து குதிரையில் அமரவே முடியாதென்று தோன்றியது. இறங்கி நின்றுகொண்டான். மூச்சை இழுத்து மெல்ல வெளிவிட்டான். கேவலப்படுவதை விட கௌரவமாகத் திரும்பிச் சென்று விடலாம். 'ஆம், அதுதான் நல்லது. திரும்பிவிடலாம். ஆனால் ஒருவேளை இந்தச் சேற்றுப்படுகைக்கு அடியில் கந்தகமலை ஒன்று இருந்தால்? ஒருவேளை இங்கே ஒரு மாபெரும் வரலாற்றுத்தருணம் ஒரேஒரு குரலுக்காகக் காத்து நிற்கும் என்றால்? இல்லை, ஒருபோதும் இல்லை. முட்டாள், இந்த முகங்களைப்பார். ஆன்மா செத்த இந்த கண்களைப்பார். பசி ஒரு சிதை. அதில் முதலில் எரிவது ஆன்மாதான். இவர்களுக்குள் இருப்பது அதன் சாம்பல் குவியல்மட்டுமே. இல்லை. நான் எதனாலோ இந்தக்கணம் வரை கொண்டுவரப்பட்டுவிட்டேன். இங்கே நிகழ்வனவற்றுக்கான முகாந்தரமாக நான் என்னையறியாமலே என்னை ஆக்கிக்கொண்டுவிட்டேன்'.

பார்மர் "அனைவரும் வந்துவிட்டார்கள் சார்" என்றார்.

"ம்" என்றான் ஏய்டன். 'காத்தவராயனும் அவன் ஆட்களும் எங்கே போனார்கள்?' குதிரைப் படைகளில் இருந்து சிறிய இருமல்களும் மூக்கு சிந்தப்படும் ஒலிகளும் கேட்டன. குதிரை ஒன்று 'பர்ர்' என்றபின் காதுகளை அடித்துக் கொண்டது. அது ஒரு கடற்பறவை எழுந்து செல்வதுபோல ஒலித்தது.

வெயிலில் ஈரச்சருமங்களில் இருந்து எழும் குமட்டும் வாடை வர ஆரம்பித்தது. அழுகிய மிருகத்தோல்களின் வாடை பழைய புண்களின் வாடை. 'இந்த மனிதர்களால் அதிகநேரம் வெயிலில் நிற்க முடியாது. ஒருவேளை சடலங்கள் வரும்போது இவர்கள் தங்கள் உடற் களைப்பாலேயே அக்கறை இழந்துவிடக்கூடும்'.

சத்தங்கள் கேட்டன. ஏய்டன் பெருமூச்சு விட்டான். வெளியே நான்குபேர் ஒரு தென்னைஓலைப்பொட்டலத்தை தூக்கிவந்தார்கள். சற்றுத் தள்ளி இன்னும் நான்குபேர் இன்னொரு பொட்டலத்தைத் தூக்கிவந்தார்கள். காத்தவராயன் அவர்களுடன் இல்லை. அவன் கடற்கரையில் படகிலேயே இருந்துவிட்டிருக்கவேண்டும். மிகச்சிறந்த முடிவு.

அருகே வர வர பொட்டலத்தின் நுனியில் களிமண்ணாலானவை போல இரு கால்கள் தெரிந்தன. அவை நடையில் ஆடின. ஏய்டன் திரும்பி அந்தத் தொழிலாளர்களைப் பார்த்தான். அவர்கள் கண்களில் எந்த அசைவும் இல்லை. முகங்கள் எப்போதுமே அவற்றில் இருக்கும் அதே அர்த்தமற்ற பிரமிப்பில் வெறித்தவை போலிருந்தன. பிணங்களிலும்கூட அதே பாவனையுடன்தான் இருக்கிறார்கள் இவர்கள்.

சடலங்களுக்குபின்னால் அந்த டாணாக்காரன் கையில் ரைஃபிளுடன் வந்தான். ஏய்டனைக் கண்டதும் விரைப்பாக சல்யூட் அடித்தான். ஏய்டன் "சடலங்களை அவிழ்த்து இங்கே கிடத்து" என்றான்.

அவன் திரும்பி ஆணையிட்டதும் பொட்டலங்களைத் தரையில் போட்டார்கள். அதைப் பிரித்துத் தென்னை ஓலையை விரித்து வைத்தார்கள். கடலில் பிடித்துவந்த பெரிய மீனை

விற்பனைக்கு வைப்பது போல. ஆண் குப்புறக்கிடந்தான். அதை திருப்பி போட்டார்கள். பியானோக்கட்டைகள் போன்ற மார்புஎலும்புகள். பள்ளமாக ஒட்டி உள்ளிழுத்துக் கொண்ட வயிறு. இடுப்பெலும்பு முண்டுகள் உருவாக்கிய பள்ளம். அதன் கீழே தொடைகள். தொடைகளில் கூட சதை என்பதே இல்லை.

ஏய்டன் "இந்தச்சடலங்களை உங்கள் யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டான்.

நாராயணன் அவன் கேட்டதை உள்ளூர் மொழியில் மொழிபெயர்த்துக் கூவினான்.

தொழிலாளர்கள் அமைதியாக நின்றார்கள். உடலசைவுகள்கூட இல்லை. கண்கள் அந்தப்பிணங்களைப் பார்த்து நிலைத்திருந்தன.

"இந்த ஆள் உங்களுடன் வேலை பார்த்தவரா? அடையாளம் காண முடிகிறதா?" என்றான் ஏய்டன்.

கண்களை விலக்கிக்கொள்ளும்போது அவர்களின் உடல்களும் கூடவே மெல்ல அசைந்தன. அந்த அசைவுகள் இணைந்து அந்தக்கூட்டமே மெல்லிய காற்றுபட்ட மரக்கூட்டம்போல அசைந்தது. அவர்கள் வழியாக ஒரு பொதுவான எண்ணம் ஓடிச்செல்வதைக் கண்ணால் பார்ப்பது போலிருந்தது அந்த அசைவு.

"இவனை அடையாளம் காட்டுபவனுக்கு எல்லாவகை யான பாதுகாப்பையும் பிரிட்டிஷ் அரசு வழங்கும்" என்றான் ஏய்டன். அது மொழியாக்கம் செய்யப்பட்டபோது அந்தக் கண்களை ஏய்டன் கூர்ந்து கவனித்தான். சந்தையில் அடுக்கப் பட்ட மீன்களின் கண்களைப்போல உறைந்த உயிரற்ற பார்வைகள். உச்சக்கட்டக் காற்றுவேகத்தில் பாய்மரம் கயிற்றை அறுப்பதைப்போல ஏய்டனுக்குள் ஒன்று அறுபட்டது. படகு அதிர்ந்து திசைகோணலாவதுபோல அவன் உடல் பொறுமை யின்றித் திரும்பியது. குதிரைச்சேணத்தை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டான். குதிரைப்படையைப் பார்த்தான். அவை தளிர்விட்ட புங்கமரங்கள்போல வரிசையாக நின்றிருந்தன.

'முட்டாள்களே. கேடுகெட்ட முட்டாள்களே. இதோ உங்களுக்காகவே இந்த குதிரைப்படையைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறேன். இத்தனை நூற்றாண்டுகாலம் உங்களை அடக்கியாண்ட, அடித்துத் துவைத்த, கொன்றுகுவித்த அதே குதிரைகள். இன்று உங்கள் பாதுகாவலுக்காக வந்து நின்றிருக்கின்றன. முட்டாள்களே, பாருங்கள். இவை உங்களுக்கான அரண். உங்களுடன் இருப்பது மாண்புமிக்க பிரிட்டிஷ் அரசின் வல்லமை. வாய்திறங்கள். பேசுங்கள்.

மிருகங்கள். ஆன்மா மட்கிப்போன வாழும் பிணங்கள். இதோ உங்களில் ஒருவன் உயிர்வாழ்வதற்காக மன்றாடிய ஒரே குற்றத்துக்காகக் குடும்பத்துடன் கொல்லப்பட்டுக் கிடக்கிறான். உங்களைப்போன்றவன். இல்லை, உங்களைவிட ஒருபடி மேலானவன். மன்றாடக்கூடிய துணிவையாவது அவன் அடைந்திருந்தான். கோழைகளே, மனிதப்புழுக்களே, என்ன செய்கிறீர்கள் நீங்கள்? ஒருவன் ஒரே ஒருவன் முன்வந்து குரல்கொடுக்கக்கூடாதா? அதற்காகச் செத்தாலும் என்ன? இப்படி வாழ்வதை விடவா சாவு பெரிதாகிவிட்டது?'

'என்ன நினைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று ஏய்டன் வியந்துகொண்டான். 'கல்லை நெருப்பிலிட்டுப் பற்றவைக்க முயல்கிறேன். எத்தனை ஊதினாலும் இது பற்றப்போவதில்லை. ஆம், இந்தக் கோழைத்தனத்துக்காகவே இவர்கள் ஆயிரமாண்டுகாலமாக மண்ணோடு மண்ணாக அழுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்தக் குற்றத்துக்கான தண்டனையாகவே பசியின் சூளையில் தலைமுறை தலைமுறையாக எரிந்துகொண்டிருக்கிறார்கள். அவமதிக்கப்படுகிறார்கள். கொன்று குவிக்கப்படுகிறார்கள். குப்பைகளாகச் செத்துக் குவிகிறார்கள்'.

ஒவ்வொரு கண்ணாகப் பார்த்தான் ஏய்டன். எல்லாக் கண்களும் ஒன்றுபோலிருந்தன. வியர்வை வழிந்து புருவங்கள் சொட்ட வெளிச்சத்துக்குக் கூசிச் சுருக்கப்பட்ட இமைகளுக்கு அப்பால் கூழாங்கல் விழிகள். அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். நீலமேகத்தின் கண்களில் ஒரு புன்னகை இருக்கிறதா? கங்காணிகளின் மீசைக்கு அடியில் புன்னகை நெளிகிறதா?

பார்மர் பணிவுடன் "அவர்களில் யாராவது யோசித்துச் சொல்வார்கள் என்றால் உடனே கூட்டிவருகிறேன் சார்" என்றார்.

ஏய்டன் அவர் கண்களைப் பார்த்தான். அவற்றில் துளிக் கூடச் சிரிப்பில்லை. ஆனால் அந்த ஒவ்வொரு வார்த்தையிலும் சிரிப்பு பூசப்பட்டிருந்தது.

சாட்டையைச் சுழற்றியபடி அந்தக்கூட்டத்தில் பாய்ந்து வெறியுடன் அடித்து வீசவேண்டும் என்று தோன்றியது. அந்தத் தோல்களும் சதைகளும் பிய்ந்துத் தெறிக்கவேண்டும். அந்த எலும்புகள் நரம்புகளை விட்டு அறுபட்டு விலகவேண்டும். கால்கள் தளர்வதை உணர்ந்தவனாக அவன் குதிரையைப் பிடித்தான். அது கால்களை முன்னால்தூக்கி வைத்து அவன் மீது பெருத்த தலையை உரசியது. அவன் சேணத்தைக் கையால் தட்டிவிட்டு ஏறப்போனான்.

அப்போது குரல் ஒலித்தது "சர்"

ஏய்டன் நின்றான். பார்மர் அதிர்ந்து போய் திரும்பினான்.

அது கருப்பன். அவனைப் பலமுறை பார்த்தும் அடையாளம் காணவில்லை என்பதை ஏய்டன் உணர்ந்தான்.

கருப்பன் "சர், எனக்குத் தெரியும். இவன் பெயர் சவரி. இங்கே வேலைசெய்தான். இது அவன் மனைவி. எங்கள் அனைவருக்கும் இவர்களைத் தெரியும்" என்றான்.

பார்மர் ஏதோ சொல்ல வாயெடுக்க "அவர்களை மிரட்டுகிறீர்களா?" என்றான் ஏய்டன்.

பார்மர் தூக்கிய கையை அரைக்கணம் அந்தரத்தில் நிறுத்திவிட்டு தழைத்துக் கொண்டார். "இல்லை. அவன் அடையாளம் தெரியாமல் பேசுகிறான். மற்ற எவருக்கும் இவர்களைத் தெரியவில்லையே" என்றார்.

"சர், எல்லாருக்கும் தெரியும். பயப்படுகிறார்கள். இங்கே இவர்கள் வேலைசெய்தார்கள். இவர்களை அடித்துத் துரத்தியதை நாங்கள் கண்டோம். இவர்கள் எவரால்

கொல்லப்பட்டார்கள் என்று எங்களுக்குத் தெரியும்'' என்றான் கருப்பன்.

ஏய்டன் தன் உடல் உவகையால் நடுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தான். 'கரும்பாறையின் ஓரம் நெருப்புக்குச் சிவக்கிறது. பற்றிக்கொள்ளப்போகிறது. இதோ- இல்லை இன்னும் இல்லை. இது காத்தவராயனின் ஆள். அவனால் பயிற்றுவிக்கப்பட்டவன். ஆனாலும்கூட ஒரு குரல் எழுந்திருக்கிறது. ஒரே ஒருகுரல். அதுவே போதும்'.

கருப்பன் திரும்பித் தன்னைச் சூழ்ந்திருந்தவர்களை நோக்கி உரக்க ஏதோ சொன்னான். சட்டென்று வலக்கையால் தன் மார்பை ஓங்கி படீரென்று அறைந்து ஆவேசமாகக் கூச்சலிட்டான். அவர்கள் அனைவரும் ஒரே கணம் ஒரே சாட்டையடியை வாங்கியவர்கள் போல அதிர்வதை ஏய்டன் கண்டான். கருப்பன் ஒரு சிம்பனியின் உச்சத்தை நடத்தும் இசைநடத்துநரைப்போல இரு கைகளையும் உயரத்தூக்கித் தொண்டை நரம்புகள் முடிச்சுகளுடன் புடைத்து அதிர உரக்கக் கூவினான். அது ஓர் அர்த்தமற்ற அழுகை போலத்தான் தோன்றியது. ஒரு சொல்கூட இல்லாத மானுட ஓலம்!.

சட்டென்று ஒட்டுமொத்தக் கூட்டமும் குரலெழுப்பியது. ஒரு பிரம்மாண்டமான மிருகம் போல அந்தக்கூட்டம் உறுமி கர்ஜித்தபடி வரிசை கலைந்து ஒன்றுகூடி இறுகி தன்னிச்சையான ஒரு வடிவத்தை அடைந்தது. உடலோடு உடல் ஒட்டி பலநூறு கைகளும் பலநூறு கால்களும் பலநூறு தலைகளும் கொண்ட உயிராக ஆகியது. கம்பளிப்புழுவின் முடிகள் போல நூற்றுக்கணக்கான கைகள் காற்றில் வீசின. நூற்றுக்கணக்கான கால்கள் மண்ணில் அசைந்தன. ஒற்றை உடலாக அது முன்னால் நகர்ந்து வந்தது. கணநேரத்தில் அங்கே முன்பு நின்றிருந்த தனியர்களின் திரள் ஒரே உணர்வும் ஒரே இலக்கும் கொண்ட ராணுவமாக மாறியதை ஏய்டன் கண்டான். ஆனால் கொந்தளிக்கும் ராணுவம். அது ஒரு பிரம்மாண்டமான உருக்கு யந்திரம் கடும்சூட்டில் உருகி வழிந்தபடியே வருவதுபோல முன்னால் வந்தது. ஒருகணம் ஏய்டனே தன் ஆன்மாவுக்குள் கடும்குளிர் போல வந்து தொட்ட பேரச்சத்தை உணர்ந்தான்.

அத்தனைபேரும் உச்சக்குரலில் தொண்டை தெறிக்கக் கூச்சலிட்டார்கள். கால்களால் நிலத்தை ஓங்கி மிதித்தார்கள். நெஞ்சிலும் மார்பிலும் மாறி மாறி அறைந்தார்கள். பலர் உணர்ச்சி மேலிடக் கதறிக் கூச்சலிட்டு அழுதார்கள். அழுதபடி சிலர் அப்படியே அமர்ந்துகொண்டார்கள். ஒவ்வொரு முகமும் ஒரு மகத்தான வெனீஷியன் ஓவியத்தில் வரையப்பட்டதுபோல அதன் அதிஉச்ச உணர்ச்சிகரத்தில் தெரிந்தது. அச்சம் விலகி ஒரு திகைப்பு ஏய்டனுக்குள் நிறைந்தது. 'என்ன நடந்துகொண்டிருக்கிறது? இதுதான் வரலாறா? பிரெஞ்சுப்புரட்சி இப்படித் தான் இருந்திருக்குமா? அதன் குருதியும், கண்ணீரும், களிவெறியும், கொலைவெறியும் இப்படித்தான் ஆரம்பித்திருக்குமா?'

ஏய்டனின் உடல் நடுநடுங்கியது. அவன் மனம் நிலையிழந்து எதைப் பார்ப்பது என்ன செய்வதென்றறியாமல் அலைக்கழிந்தது. குதிரை மட்டும் இல்லையேல் அவன் விழுந்துவிட்டிருப்பான். 'இந்தக்கணங்களை நான் விட்டுவிடக் கூடாது. என் எண்ணங்கள் என் கண்களை மறைக்கக்கூடாது. இதன் ஒவ்வொரு கணத்தையும் நான் பார்க்கவேண்டும். ஒவ்வொரு ஒலியையும் நான் கேட்கவேண்டும். என் புலன்களால் இக்கணத்தில் நான் முழுமையாக வாழவேண்டும். ஒருவேளை நான் பிறந்ததே இதற்காகத்தான். என் வாழ்க்கையின் உச்சத் தருணமே இதுதான். இந்தச் சிலமணிநேரம் என் இதுநாள் வரையிலான வாழ்க்கையைவிட நீளமானது'.

கங்காணிகள் முகத்தில் எழுந்த பெரும்பீதியை ஏய்டன் கண்டான். அலைகடலில் மூழ்கும் படகிலிருப்பவர்களின் கடைசி முகபாவனை. திறந்த வாய்கள், விழித்த கண்கள். அவர்களில் இருவர் மெல்லப் பின்னகர்ந்து வராந்தாவில் ஏறிக்கொண்டார்கள். அவர்களைப் பார்க்கையில் அந்தக் கூட்டத்தைப் பார்க்கமுடியவில்லை. அந்த ஆவேசத்தைக் கண்டு தன் படைகள் அவர்களின் ரைஃபிள்களுடன், மின்னும் கத்திகளுடன், சீருடைகளுடன் தங்களை அறியாமலேயே பின்னகர்வதை காணமுடியவில்லை. ஒவ்வொரு படைவீரனின் முகத்திலும் ஒவ்வொரு பாவனை. அச்சம், அவநம்பிக்கை,

பிரமை, அர்த்தமற்ற பரபரப்பு, முட்டாள்தனமான இளிப்பு. 'ஏசுவே, என் தேவனே, நான் எத்தனை முகங்களைப் பார்ப்பேன்! எவற்றை நினைவில் நிறுத்துவேன்!.'

எவருக்கும் அங்கே நிகழ்வதென்ன என்று புரியவில்லை. அவனுக்குத் தன் வீரர்களை நோக்கிக் கூச்சலிடவேண்டும் போலிருந்தது. டேய் இதோ நடந்துகொண்டிருக்கிறது வரலாறு. இந்திய ஜனநாயகத்தின் முதல் மக்கள் எழுச்சி. இந்திய தொழிலாளார்களின் முதல் போராட்டம்! நீங்கள் எல்லாரும் ஒரு மகத்தான நாடகத்தில் நடிக்கிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் வரலாற்றில் இருந்துகொண்டிருக்கிறீர்கள் முட்டாள்கள், அஞ்சி ஒதுங்குகிறார்கள். அபத்தமாக முட்டிமோதுகிறார்கள். இளிக்கிறார்கள். வரலாறு இந்தக் கீழ்மக்களைக்கொண்டா நடத்தப்படுகிறது? இவர்கள் வழியாகவா இறைவனின் திட்டம் ஓடிச்செல்கிறது! 'ஏசுவே, தேவனே!.'

பார்மர் நீலமேகத்தை நோக்கி, "முட்டாள், அவர்களிடம் சொல். அவர்களிடம் சொல்." என்று கைநீட்டி கூச்சலிட்டார்.

"மிஸ்டர் பார்மர், அவர்கள் வன்முறையில் ஈடுபடாத போது நீங்கள் வன்முறையில் ஈடுபட்டால் அதை அரசுக்கு எதிரான குற்றமாகவே பிரிட்டிஷ் சட்டம் பார்க்கும்." என்றான் ஏய்டன்.

"அவர்கள் கலவரம் செய்கிறார்கள். கலவரம் செய்கிறார்கள்" பார்மர் பீதியும் கோபமும் கொண்டு சிவந்த முகத்துடன் கத்தினார். அவர் முற்றிலும் நிலைகுலைந்து விட்டார் என்று தெரிந்தது. கைகளும் கால்களும் தாறுமாறாக அசைந்தன. ஓடப்போகிறவரைப்போலச் சுற்றுபவரைப்போல அவர் உடல் தத்தளித்தது. "பொறுக்கிகள். குற்றவாளிகள்!"

"இல்லை அவர்கள் ஜனநாயகமுறையில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள். அதற்கான உரிமையை மாட்சிமைதங்கிய மகாராணியின் மணிமுடி அவர்களுக்கு அளிக்கிறது" ஏய்டன் சொன்னான். "என்னுடைய பிளட்டூனில் பாதி இங்கே நிற்கும். அவர்கள் உங்களைத் தாக்குவார்கள் என்றால் எங்கள் படை உங்களைப் பாதுகாக்கும்"

பார்மர் கையை மட்டும் அசைத்தார். குரலே வெளிவரவில்லை. 'நரகத்துக்குப்போ பன்றியே. ஆனால் நீ அதிருஷ்டசாலி. உன் அசட்டு மூர்க்கத்தால் இதோ வரலாற்றில் இடம்பெற்றுவிட்டாய்'.

கருப்பன் ஓயாமல் கத்திக்கொண்டிருந்தான். இரு கைகளையும் விரித்து வேகமாக ஆட்டி ஆட்டிச் சொற்களைக் கொட்டிக் கொண்டே இருந்தான். முந்நூறுபேருக்குமேல் கொண்ட அந்தக்கூட்டத்தில் அனேகமாக அத்தனைபேரும் முடிந்த உச்சக்குரலில் கத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் சொல்வதை அத்தனைபேரும் கேட்டதுபோலத் தோன்றியது. அல்லது அத்தனைபேரும் அதைத்தான் சொல்கிறார்களா? சுவரோடு சேர்த்துத் துரத்தப்பட்ட காயம்பட்ட கருப்பு மிருகம் கடைசி உயிர்வெறியுடன் திரும்ப வந்துவிட்டது. அது அந்தக்கட்டிடத்தை அதன் சுற்றுச்சுவர்களைப் பெயர்த்து வீழ்த்திவிடும் என்று பட்டது.

கருப்பன் "அமருங்கள்" என்று கைகாட்டினான். கையை ஆட்டியபடி எம்பி எம்பிக் குதித்தான். ஒவ்வொருவராக அமர்ந்தார்கள். மெல்ல அத்தனைபேரும் அப்படியே ஐஸ்ஹவுஸின் வாசலை மூடி அமர்ந்துகொண்டார்கள். கருப்பன் அவர்கள் சத்தம்போடாமலிருக்கும்படி சைகை காட்டினான். ஆனால் அவர்கள் பிறந்ததுமுதல் தேக்கிவைத்த எல்லாவற்றையும் கத்திக்கொண்டிருந்தார்கள். வசைகளின், சாட்டையடிகளின், பசியின், மரணங்களின் முன் அடக்கிவைத்த அழுகையை முழுக்கக் கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவனை ஏய்டன் கூர்ந்து நோக்கினான். அவன் அங்கேயே இல்லை. இரு கைகளையும் வானுக்கு விரித்து அவன் ஓசையில்லாது கத்திக் கொண்டிருந்தான். கண்ணீர் வழிய உதடுகள் துடித்து நெளிய மன்றாடிக்கொண்டிருந்தான். மன்றாடுகிறானா, இல்லை வசைபாடுகிறானா கடவுளையா விதியையா இல்லை வரலாற்றையேதானா. அவன் என்னைத் திரும்பிப்பார்ப்பானானால் அந்தப்பார்வைமுன் பெரும் குற்றவாளியாகத் தண்டனை காத்து நான் நின்றாக வேண்டும்.

அவனுக்காக நான் என் கழுத்தைப் பயனெட்டால் வெட்டிக் கொண்டு இங்கே குருதிகொட்டிக் கீழே விழவேண்டும். 'ஏசுவே, இந்த ஒவ்வொரு மனிதர்களுக்காகவும் ஒரு சாம்ராஜ்யம் அழியவேண்டும்!.'

சட்டென்று தன்னுணர்வு கொண்டான் ஏய்டன். 'ஐஸ்ஹறவுஸின் புகார் கர்னலுக்குச் செல்வதற்குள் முறையாக அறிக்கையனுப்பவேண்டும்' என்று ஏய்டன் நினைத்துக் கொண்டான். நாராயணனிடம் படைகளை அங்கே நிறுத்தவும் பிணங்களை அடக்கம்செய்ய அனுப்பவும் உத்தரவு கொடுத்து விட்டு ஏய்டன் கிளம்பினான். மிச்சப்படை அவனுடன் வந்தது.

குதிரையில் செல்லும்போது உடம்பெல்லாம் கொதிப்பது போலிருந்தது. குதிரையைத் தட்டிவிட்டு கண்மண் தெரியாமல் காற்றைக்கிழித்துப் பாய்ந்தோடவேண்டும் போலிருந்தது. 'ஷெல்லி, ஷெல்லி ஷெல்லி, ஷெல்லி, ஷெல்லி! நான் உன்னைக் கண்டேன். உன்னுடைய இளமையும் கனவும் கிறுக்கும் ததும்பிய அழகியமுகத்தைக் காணும் பேறுபெற்றேன். ஷெல்லி, நானும் ஆசீர்வதிக்கப்பட்டவனானேன். ஷெல்லி! ஷெல்லி! ஷெல்லி ! ஷெல்லி! நான் இங்கே இருக்கிறேன். இந்த அன்னிய நாட்டு வெப்பக்கடற்கரையில். முழுத்தனிமையில். ஷெல்லி! ஷெல்லி! ஷெல்லி'.

> Stand ye calm and resolute.
> Like a forest close and mute.
> With folded arms and looks which are.
> Weapons of unvanquished war!.

'ஆம், அந்த தருணம்தான் அதுதான் இது. மௌனம் என இறுகிய வெற்றுக்கரங்களை ஆயுதமாகக் கொண்ட ராணுவம். மானுடவனம். ஷெல்லி, ஷெல்லி, இதோ நான் கண்டேன். எனக்குத் தரிசனம் தந்திருக்கிறது காலங்களை வென்று. கலாச்சாரங்களை ஆக்கிய மானுடத்தின் ஆன்மா'.

அந்த வரிகளை அவன் அகம் கூவியது. குதிரைக் குளம்பின் தாளத்தில் அவன் களநடைப்பாடலாக அந்த வரிகள் ஆயின. கையை நெஞ்சில் வைத்து வானை நோக்கி அண்ணாந்தபோது உள்ளம் பொங்கி கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது. அவன்

அதைத் துடைக்கவில்லை. கன்னங்களிலும் காலரிலும் மார்பிலும் வழியவிட்டுக்கொண்டு, உதடுகளை அழுத்தியபடி, இறுகி நெளியும் கழுத்துச்சதைகளுடன் விரைத்த உடலுடன் சென்றுகொண்டிருந்தான்.



# 10

ஏய்டன் தன் அலுவலகத்தில் அமர்ந்து குறிப்பை எழுதிக்கொண்டிருந்தபோது சாம் வந்து காத்தவராயன் வந்திருப்பதைச் சொன்னான். ஏய்டன் உள்ளே அனுமதிக்க ஆணையிட்டுவிட்டு வேகமாக எழுதினான். தொடுபேனா அவசரத்தில் மையைக் கக்கியது. ஒற்றுத் தாளால் துடைத்து துடைத்து எழுதிக் கொண்டிருந்தான்.

காத்தவராயன் வந்து “சர்” என்று சொன்னபோது நிமிர்ந்தான். காத்தவராயன் முகத்தில் மெல்லிய புன்னகை இருந்தது.

“ஒருவழியாகக் கல் பற்றிக்கொண்டுவிட்டது” என்றான் ஏய்டன்.

“ஆமாம். பற்றிக் கொள்ளும் என்று எனக்குத் தெரியும். என் ஜனங்களை நான் பலகாலமாகப் பார்த்துவருகிறேன். ஆனால் இத்தனைக் கட்டுப்பாட்டுடன் இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. அதைத்தான் அஞ்சிக் கொண்டிருந்தேன்” காத்தவராயன் சொன்னான்.

“என்ன செய்கிறார்கள்?” என்றான் ஏய்டன்.

“வாசலில் அமர்ந்திருக்கிறார்கள். இதற்குள் கடற்கரைச் சாலையில் இந்தப் போராட்டம் பற்றிய செய்தி பரவிவிட்டது.

மதராஸ் மெயிலின் செய்தியாளர் இன்னும்சற்றுநேரத்தில் வந்துவிடுவார். லண்டன் டெய்லி நியூஸில் இருந்து ஜான் கூப்பர் வந்துகொண்டிருக்கிறார். என் ஆள் ஒருவனை அனுப்பிக் கூட்டிவரச் சொல்லியிருக்கிறேன். நியூயார்க் டைம்ஸுக்குச் செய்தி அனுப்பும் கிறிஸ் போர்ட்டரைக் கூட்டிவர ஆளனுப்பியிருக்கிறேன்."

"புகைப்படம். ஒரே ஒருபுகைப்படமாவது வேண்டும்."

"அதையும் நான் போர்ட்டரிடம் சொன்னேன். அவரிடம் ஒரு காமிரா இருக்கிறது. ஆனால் காலி பிளேட்டுகள் இருக்குமா என்று தெரியவில்லை. மதராஸ் மெயில் கண்டிப்பாக புகைப்படக்காரருடன் வருவார்கள்."

தன் படையின் ஸ்டோரில் ஒரு ராணுவக் காமிரா இருந்ததை ஏய்டன் நினைவுகூர்ந்தான். கொலாடின் டிரைபிளேட் காமிரா. அதைத் தயார்செய்திருக்கலாம். எப்படி அது தோன்றாமல் போயிற்று. "காத்தவராயன், நான் இந்த அறிக்கையை எழுதி உடனடியாகக் கர்னலுக்குக் கொடுத்தனுப்பு கிறேன். இதில் அங்கே நடப்பது கலகம் அல்ல தொழிலாளர் போராட்டம் என்று எழுதியிருக்கிறேன். தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று முறையான பேச்சுவார்த்தைக்கு ஐஸ்ஹவுஸ் நிர்வாகம் தயாராகவேண்டும் என்று சொல்லி யிருக்கிறேன். பார்மரின் புகார் கர்னலை அடைவதற்குள் இது சென்றாகவேண்டும்"

"கடிதத்தைக் கர்னலுக்குக் கொடுத்தனுப்பிவிட்டு நீங்களே வில்லியம் ரஸ்ஸலைச் சந்திக்கலாம் சர்" என்றான் காத்தவராயன்.

"மீண்டுமா? நான் நேரம் பதிவுசெய்யவில்லையே?"

"இது அவசரம் அல்லவா? மேலும் ரஸ்ஸல் இதில் தனிப்பட்ட ஆர்வம் காட்ட வாய்ப்பிருக்கிறது"

"ஏன்?"

"நிலக்கரிச்சக்தியால் ஐஸ் தயாரிக்கும் இண்டர்நேஷனல் ஐஸ் கம்பெனியில் ரஸ்ஸலுக்கு ரகசியமாகப் பங்கிருக்கிறது என்று எல்லாருக்கும் தெரியும். உங்களை அவர் டியூக் வரைக்கும்

கூட்டிச்சென்றதன் காரணமே அதுதான். இப்போது டியூடரின் ஐஸைவிடச் செயற்கை ஐஸ் பலமடங்கு அதிகவிலை கொண்டது. இந்த ஊரின் நீரில் தயாரிக்கப்படும் ஐஸை விட வெள்ளையர் பாஸ்டனின் தூய ஏரிகளின் ஐஸைத்தான் விரும்புகிறார்கள். டியூடர் கம்பெனிக்கு எந்தப் பிரச்சினை வந்தாலும் ரஸ்ஸலுக்கும் இண்டர்நேஷனல் ஐஸ்கம்பெனிக்கும் லாபம்தான்''

ஏய்டன் தன் தொடுபேனாவை மேஜைமேல் வைத்தான். "காத்தவராயன், நான் எளிமையான படைவீரன். எனக்கு இந்த தந்திரங்களும் எதிர்தந்திரங்களும் எதுவும் புரியவில்லை. இந்த வலைப்பின்னல் எங்கே எவரால் ஆட்டுவிக்கப்படுகிறது என்று என் சிறுபுத்திக்கு எட்டாது. இதை நீங்கள் என்னிடம் விளக்கவேண்டியதேயில்லை''

"சரி சார்'' என்று காத்தவராயன் சிரித்தான். இந்தியர்களுக்குரிய துல்லியமான பற்கள். "நீங்கள் ரஸ்ஸலிடம் போய் இந்தப்போராட்டம் பற்றிச் சொல்லுங்கள். அவருக்கு ஐஸ்ஹவுஸில் ஒரு சிக்கல் நிகழ்வது பிடித்திருக்கும். அத்துடன் இந்த விவகாரம் பெரிதாகாமல் அப்படியே தீர்க்கப்படுவதையும் விரும்புவார். கர்னல் தலையிடுவதற்குள் அவர் தலையிட வேண்டும். நாளை மதியத்துக்குள் ஒரு முடிவுக்கு வருவார்கள் என்றால் நல்லதுதான். ஊதியத்தில் ஒரு சிறு உயர்வு, பாதுகாப்புக்கு ஓர் உத்தரவாதம், அதுபோதும். போராட்டம் வெற்றியாக முடியவேண்டும். என் மக்களுக்கு அவர்களும் போராடமுடியும் என்ற நம்பிக்கை வரவேண்டும். அவ்வளவு தான் என் நோக்கம்''

"பார்க்கிறேன். 'டீ' சாப்பிடுகிறீர்களா?''

டீ சாப்பிட்டபின் காத்தவராயன் கிளம்பிச்சென்றான். ஏய்டன் தன்னுடைய கடிதத்தை வேகமாக இன்னொரு பென்சிலால் கரித்தாள் வைத்து நகல் எடுத்தான். கரிநகலை தன் கோப்பில் வைத்துவிட்டு முதல் நகலை உறையில் போட்டு விலாசமிட்டு அரக்கு முத்திரை போட்டு கர்னலுக்குக் கொடுத்தனுப்பினான். தூதனிடம் "இந்தக்கடிதத்தை நான் கொடுத்தனுப்பியதாகக் கர்னலிடம் சொல்'' என்றான்.

தூதன் "எஸ் சர்'' என்றான்.

"நான் ஏன் நேரில்வரவில்லை என்று கர்னல் கேட்டால் நான் கவர்னரின் செயலரைச் சந்திக்கக் கோட்டைக்குச் சென்றிருப்பதாகச் சொல்." என்றபின் "இதோபார், அவர் கேட்பதற்காக நீ காத்திருக்கவேண்டியதில்லை. நீயே சொல்" என்றான்.

தூதன் குழம்பியிருந்தாலும் அதைக் காட்டாமல் "எஸ் ,சார்" என்றான்.

இன்னொரு நகலை தன் கையில் எடுத்துக்கொண்டு ஏய்டன் கிளம்பினான். குதிரையைத் தட்டியபோது அது வேகம்பிடிக்கவில்லை. வெயிலில் அது களைத்திருந்தது. சற்று தூரம் ஓடியதுமே அதன் ரோமப்பரப்பு முழுக்க வியர்வையின் ஆவி பரவியது. நாலைந்துமுறை கனைத்துக்கொண்டு வேகமெடுத்துப் பின் தளர்ந்தது. வெயில் அவன் கண்களைக் கூசச்செய்தது. காற்றுமட்டும் இல்லாவிட்டால் சில கணங்கள் கூட அந்தச்சாலையில் செல்லமுடியாதென்று நினைத்துக் கொண்டான்.

கோட்டையின் வெளிவாயிலில் ஏதோ பராமரிப்பு வேலைகள் நடந்துகொண்டிருந்தன. மூங்கில்சாரங்களில் உள்ளூர்க்கொத்தனார்கள் அமர்ந்திருந்தார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் மண்ணும் கல்லும் சுமந்துகொண்டிருந்தார்கள். அழுக்கான கோவணம் மட்டும் அணிந்தவர்கள் சற்று தூரத்தில் பார்க்கையில் முழுநிர்வாணமானவர்களாகத் தோன்றினார்கள். கோட்டைக்குள் வளைந்த ஓட்டுக்கூரைகொண்ட வீடுகள் செந்நிறமான லினன் விக் வைத்த பிரபுகுலக் கிழவர்கள்போலக் குனிந்து அமர்ந்திருந்தன. அங்குமிங்கும் தெரிந்த சப்ராஸி களைத்தவிர மனிதநடமாட்டமே இல்லை. இரண்டு ஃபீட்டன் வண்டிகள் கடந்துசென்றன. அவையும் வெயிலுக்கு நன்றாகவே திரையைத் தாழ்த்திவிட்டிருந்தன.

ரஸ்ஸல் விழித்திருப்பாரா என்ற சந்தேகம் வந்தது அவனுக்கு. கோட்டையில் இரவெல்லாம் அலுவலகம் இயங்கும். விருந்துகள் இருக்கும். பகலில் உயரதிகாரிகள் எவரும் அனேகமாக விழித்திருப்பதில்லை. ஆனால் அவசரம் என்றால்

ரஸ்ஸல் எழுந்திருக்கக் கூடும். அவன் ரஸ்ஸலைப் பார்க்க வந்திருக்கும் செய்தி கேட்டால் கர்னல் அவசரப்பட்டு எதையும் செய்யமாட்டார். அதிகபட்சம் ஒருநாள். அதுவரை அந்தத் தொழிலாளர்கள் தாங்கவேண்டும். எந்த முன்னேற்பாடும் இல்லாமல் தன்னிச்சையாகத் தொடங்கப்பட்ட போராட்டம். ஆனால் காத்தவராயனும் அவன் ஆட்களும் இருக்கிறார்கள்.

இரண்டாம் கோட்டைக்கு உள்ளே சென்றதும் ஏய்டன் திகைத்தான். முதலில் எங்கே எவரைச் சந்திக்கவேண்டும் என்று புரியவில்லை. கிளைவ் ஹவுஸில் இப்போது கடைநிலை எழுத்தர்களும் நிர்வாக அதிகாரிகளும் தவிர எவரும் இருக்க வாய்ப்பில்லை. ஆனாலும் அங்குதான் சென்றாகவேண்டும். நேற்று மாலையில் பார்த்த இடம்தானா என்று ஐயமேற்படும் படியாக இருந்தது கிளைவ் ஹவுஸ். கருங்கல்பாளங்க்ள் பரவிய பெரியமுற்றம் முற்றிலும் காலியாகக் கிடந்தது. அதன்மேல் வெயில் பொழிந்து அந்த வெப்பம் காதுகளையும் கண்க்ளையும் தாக்கியது.

எதிரே வந்த சேவகனிடம் குதிரையையும் சவுக்கையும் ஒப்படைத்துவிட்டு ஏய்டன் தயக்கமாகப் படிகளில் ஏறி ஓங்கிய உருண்ட தூண்கள் நடுவே திறந்திருந்த பெரிய வாயிலை நோக்கிச்சென்றான். வெட்டிவேர்த்தட்டிகள் எல்லாம் கீழிறக்கப்பட்டிருந்தன. அவற்றில் நீர் தெளிக்கும் ஊழியர்கள் வராந்தாவின் மறு எல்லையில் சிறிய மூங்கில் ஏணியுடன் வந்துகொண்டிருந்தார்கள். உள்ளே அறைகளும் கூடங்களு மெல்லாம் இருட்டாக இருந்தன. மெல்லியகுரலில் பேசும் ஒலிகள் கலந்து ஒரு முழக்கமாக எழ அந்தக் கட்டிடம் ஒரு பிரம்மாண்டமான தோல்வாத்தியம்போலத் தோன்றியது.

கண்பழகியபோது கூடத்தின் மேலே ஆடும் ஏராளமான பங்கா்க்களின் அசைவுகள்தான் கண்ணில் பட்டன. அவனைநோக்கி வந்த இளம் இந்திய அதிகாரி தலைவணங்கி "மதிப்புக்குரிய காப்டன் அவர்களே, நான் என்ன உதவிசெய்ய இயலும்?" என்றார்.

ஏய்டன் "நான் உடனடியாகச் செயலர் வில்லியம் ரஸ்ஸலைச் சந்திக்கவேண்டும்." என்றான்.

"அவர் ஒரு சந்திப்பில் இருக்கிறார்" என்றான் அவன்.

"நான் அவரை அவசர விஷயமாகச் சந்திக்க விரும்புகிறேன் என்று ஒரு குறிப்பு கொடுக்கமுடியுமா?"

"கண்டிப்பாக குறிப்பை நீங்களே எழுதியளித்தால் நல்லது"

அவன் அளித்த தாள்கீற்றில் ஏய்டன் வேகமாக நாலைந்து வரியை கிறுக்கிக் கொடுத்தான். அந்த இளம் அதிகாரி "வாருங்கள்" என்று அழைத்துக்கொண்டு முன்னால் நடந்தான். இவன் ஒரு பிரிட்டிஷ் கனவானுக்கான பயிற்சியில் இருக்கிறான் என ஏய்டன் நினைத்துக்கொண்டான். தூக்கிய மோவாய், பெண்மையின் மென்மைகொண்ட சலனங்கள்.

செயின்ட் மேரீஸ் சர்ச்சுக்கு போகும் வழியில் சர்ச்சின் பகுதியாக நீண்டிருந்த ஓட்டுக்கட்டிடத்திற்குள் அவன் நுழைந்தான்.

"செயலர் இங்கா இருக்கிறார்?"

"செயலரின் அலுவலகம் இங்குதான் இருக்கிறது. அவர் விரும்பினால் உங்களை அவரது அறைக்கு அனுப்புவார்"

அந்த நீண்ட அறை முழுக்க எழுத்தர்கள் அமர்ந்திருந் தனர். அவர்களில் ஏழெட்டுபேர் மட்டும் வெள்ளையர். மற்ற அனைவருமே உள்ளூர்க்காரர்கள். உயரமான தலைப்பாகைத் தொப்பியும் திறந்த கோட்டும் வேட்டியும் அணிந்தவர்கள். நெற்றியில் மதச்சின்னங்கள். சிலர் மிகப்பெரிய ஆங்கில 'வி' எழுத்தை சுண்ணாம்பால் வரைந்திருந்தார்கள். அவர்களின் கரிய நெற்றியில் அவை புடைத்துத் தெரிவதுபோலிருந்தன. அவை அவர்களுக்கு ஏதோ ஓர் அடையாளத்தை கௌரவத்தை அளிக்கின்றனபோலும். இந்த அடையாளமிட்டவர்கள் எல்லாரும் ஏதோ ஒருவகையில் உயர்ந்தவர்கள். அடையாளமே இல்லாதவர்கள் கூட்டம் கூட்டமாகப் பசித்துச் சாகிறார்கள்.

அதிகாரி திரும்பிவந்தான். "தங்களை விருந்தினர் அறையில் காத்திருக்கும்படி செயலர் சொன்னார்" என்றான்.

"அவசரம் என்று சொன்னேனே"

"தங்கள் குறிப்பு கொடுக்கப்பட்டுவிட்டது" அவன் மெல்லிய உதடுகளை இறுக்கமாக வைத்துக்கொண்டு இனிய புன்னகையுடன் சொன்னான்.

விருந்தினர் அறை கடலைநோக்கித் திறந்த பெரிய சன்னல்களுடன் இருந்தது. பித்தளைக்கம்பிகள் கொண்ட சன்னலில் திரைச்சீலைகள் இல்லை. அங்கிருந்து தொலைதூரம் வரை நெளிந்து விரிந்துகிடந்த வங்காளவிரிகுடா கண்ணுக்குப் பட்டது. நீலத்திரை மீது பாய்மரங்களை அவிழ்த்துச் சுருட்டிக் கொண்டு கப்பல்கள் அசைந்து அசைந்து நின்றன. அறைக்குள் உள்ளூர் ஈட்டிமரத்தாலான கனமான சாய்வுநாற்காலிகள் போடப்பட்டிருந்தன. பட்டுத்துணியால் உறையிடப்பட்ட மெத்தைகள் தைக்கப்பட்டவை. ஏய்டன் அமர்ந்து கொண்டான்.

மேஜைமேல் புதிய ரோஜாப்பூக்களுடன் பூஜாடிகள். கதவுகளில் நெளியும் இளஞ்சிவப்பு பட்டுத்திரைச்சீலைகள். அப்பால் ஒரு குட்டை மேஜைமேல் பித்தளையாலான கூம்புவடிவ மலர் ஒன்று ஒரு பெட்டிமேல் இருந்தது. ஏய்டன் அதைக்கூர்ந்து பார்த்தான். பின்பு நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

ஒரு இந்திய பட்லர் வந்து பணிவுடன் மென்மையான ஆங்கிலத்தில் "தாங்கள் என்ன அருந்துகிறீர்கள்?" என்று கேட்டான்.

"எதுவும் வேண்டாம்" என்றான் ஏய்டன். "அது என்ன?"

"அது போனாட்டோகிராஃப்" என்றான் பட்லர் அதனருகே சென்று அதன் கைப்பிடியை மெதுவாகச் சுழற்றினான். அதிலிருந்து பியானோவின் இசை ஒலிக்க ஆரம்பித்தது. பீத்தோவன்.

"முழுமையாகவே சிம்ஃபனி ஓடுமா?" என்றான் ஏய்டன் வியப்புடன்.

"மூன்று நிமிடங்கள்."

ஏய்டன் எழுந்துசென்று அதைப்பார்த்தான். ஒரு பித்தளைக் குழாயின்மீது மெல்லிய கீறல்களாகப் படிந்திருந்தது

இசை. அதில் தொட்டுக்கொண்டிருந்த மெல்லிய வெண்கல ஊசிகள், இன்னொரு தகடை அதிரச்செய்து இசையை எழுப்பின. மூன்றுநிமிடம். அபத்தமான இசை. ஒரு இசை அதன் இயல்பான ஒழுங்கை அடையவே இருபது நிமிடமாகும். இந்த மூன்று நிமிடத்தைக் கொண்டு என்ன செய்யப்போகிறார்கள்?

ஆனால் இந்த இசை நிரந்தரமானது. பெரும்கலைஞர்கள் நிகழ்த்திய இசையற்புதங்கள் காலத்தில் கரைந்து மறையும். இது இருந்துகொண்டிருக்கும். முதல்முறையாக இசை கல்வெட்டாக ஆகிறது. அழியாத இசை. அழியாதது என்றால் அது உண்மையில் இசைதானா? உறைந்து கல்லாகிவிட்டதென்றால் அது நுரைதானா?

வரலாறுக்கான மனிதனின் மோகம். நிலைத்திருப்பதற்கான ஆசை. பிரக்ஞை தொடங்கிய நிமிடம் முதல் மனிதன் ஆசைப்படுவது இதற்காகத்தான்போல. நிரந்தரமாக இருந்து கொண்டிருக்க. நீடிக்க. கடவுளே, இந்த கணம். இது என்றுமழியாத ஒரு வரலாற்றுத்தருணம். ஆனால் நான் இதோ என் நேரத்தை வீணடிக்கிறேன். ஒரு காகிதமும் பேனாவும் இருந்தால் இந்த நேரத்தில் நான் எழுதிக்கொண்டிருக்கலாம். எல்லாவற்றையும். எனக்கு இப்போது தோன்றும் ஒவ்வொரு எண்ணமும் வரலாறுதான்.

ஆனால் வரலாறென்பது என்ன? இதோ இந்தக் கருவி பீத்தோவனைப் பதிவு செய்யும். மொஸாத்தைப் பதிவுசெய்யும். பேரரசிகளின் உரைகளைப் பதிவுசெய்யும். ராஜதந்திர அறிக்கைகளைப் பதிவுசெய்யும். முதுகொடிந்து விழும் நிலக்கரித் தொழிலாளியின் முனகலை, எகிப்தியப் பாலைவனத்தில் எதற்கென்றறியாமல் பிரிட்டிஷ் ராணுவத்தில் குண்டடிபட்டுச் சரியும் ஐரிஷ்வீரனின் கடைசி அலறலை மலாயாவில் ஆங்கிலசாக்ஸனிக் வம்சத்தின் பேரரசை உருவாக்க வந்து மலேரியாவில் சாகும் வெள்ளைக்குழந்தையின் புலம்பலைப் பதிவுசெய்யுமா என்ன? அவற்றைப்பதிவுசெய்வது இலக்கியம் தான். மொழிதான். இல்லை மொழியில்லை, ஆன்மா. இந்த இயந்திரம் ஆன்மாவற்றது. தொழில்நுட்பமே ஆன்மா அற்றது.

எவ்வளவுநேரம்! என்னதான் நடக்கிறது? எதற்காக காத்திருக்கிறேன்? மதியம்சாப்பிடவில்லை என்ற நினைவு வந்தது. ஆனால் மனம் பரபரத்ததனால் அதுவரை பசி தெரியவில்லை. சும்மா இருந்தபோது பசி வயிற்றுக்குள் புரண்டு நெளிந்தது.

"செயலர் இன்னும்கூட சந்திப்பில்தான் இருக்கிறாரா?" என்றான் ஏய்டன்.

பட்லர் பணிவாக "ஆம். அவர் விடுபடும்போது தங்களை அழைப்பார்" என்றான்.

சாய்ந்து அமர்ந்துகொண்டு கடலையே பார்த்துக் கொண்டிருந்தான். கப்பல்களைக் கடல் மடியிலிட்டு மெல்லத் தாலாட்டுவதுபோலிருந்தது. கப்பல்களின் அசைவைப் பார்த்துக் கொண்டிருந்தான். எங்கோ பார்த்த அசைவு. எங்கே? எங்கே? ஆம், யானையின் அசைவு. யானைகள்தான் அப்படி மெல்ல ஊசலாடிக்கொண்டிருக்கும். யானையின் காதுகளாகப் பாய்மரங்களின் ஆட்டம். யானை என்னை நோக்கிச் சொல்கிறது, வேண்டாம்,வேண்டாம். என்ன வேண்டாம்? என்ன நினைத்துக்கொண்டிருக்கிறேன்? இந்தச்சிந்தனைகள் ஏன் இப்படிச் சிதறுகின்றன? நான் எவ்வளவுதூரம் வந்துவிட்டேன். வெறும் மூன்றுநாட்களில் நான் வேறு எவரோ ஆகிவிட்டேன்.

அவன் விழித்துக்கொண்டபோது அறைக்குள் ஒளி மாறுபட்டிருந்தது. எழுந்து "பட்லர்!" என்றான்.

பட்லர் வந்து நின்றதும் "என்னை அழைத்தார்களா?" என்றான்.

"இல்லை சர். சற்றுமுன் இன்னொரு சந்திப்பு தொடங்கிவிட்டது" என்றான் பட்லர்.

"நான் அவசரமாகப் போகவேண்டும். அங்கே மிக அவசரமான நடவடிக்கைகள் தேவையாகின்றன. நான் சொன்னதாகச் செயலருக்கு நினைவூட்டு"

"அதை அவர் விரும்புவதில்லை"

"நான் ஒரு குறிப்பு தருகிறேன். அவசரம்"

"அதை அவர் ஊக்குவிப்பதில்லை"

"எனக்குக் கீழ்ப்படி" என்றபின் ஏய்டன் இன்னொரு குறிப்பை எழுதினான். "அவசரம். எனக்காக அங்கே நடவடிக்கைகள் காத்திருக்கின்றன"

அதைக்கொடுத்தனுப்பிய பின் அவன் கூடத்துக்குள் நிலையழிந்து நடந்தான். தூங்கியிருக்கிறேன். ஒரு உக்கிரமான போர்க்களத்தில் தூங்குபவனைப்போல. எப்படி? ஆனால் நரம்புகளை எப்போதும் உச்ச இறுக்கத்தில் நிறுத்த முடியவில்லை. காலைமுதல் கொண்ட கொந்தளிப்பை நான் சமன் செய்துகொண்டிருக்கிறேன். இப்போது எல்லாம் தெளிவாக இருக்கிறது. சிந்தனையில் இன்னும் தர்க்கமும் ஒழுங்கும் கைகூடியிருக்கிறது.

ஏதோ ஒரு கருகல் வாசனை. எங்கோ ஏதோ தவறாக போய்க்கொண்டிருக்கிறது. இந்த தாமதம் திட்டமிட்டு உருவாக்கப்படுவது. நான் உடனே கிளம்பித் திரும்பிச் சென்றாக வேண்டும். அதுதான் நான் செய்யவேண்டியது. இப்போது என்னுடைய உதவி அந்த தொழிலாளர்களுக்குத் தேவை. ஆனால், நான் இங்கிருந்து போகமுடியாது. என்னுடைய கடமையும் பொறுப்பும் என்னைக் கிளம்ப அனுமதிக்காது. கிளம்பினால் என்ன?

ஆமாம், கிளம்பிச் செல்லத்தான் வேண்டும். இப்போது அதைச் செய்யலாம். பிறகு ஒரு சின்ன தகவல்குழப்பம் என்று சொல்லலாம். இந்த பட்லரை அதற்குக் காவுகொடுக்கலாம். இப்போது இங்கே முடங்கிக் கிடந்தால் ஒருவேளை நான் முந்நூறு உயிர்களைக் காவுகொடுப்பவனாவேன்'.

பட்லர் கதவைத் திறந்து "உங்களுக்கு அழைப்பு, காப்டன்" என்றான்.

ஒருகணம் திகைத்தபின் ஏய்டன் தன் காகித உறையை எடுத்துக்கொண்டான். உடைகளைச் சரிசெய்தபின் கிளம்பினான். அதிகவெளிச்சமில்லாத இடைநாழி வழியாக அவனை பட்லர் இட்டுச்சென்றான். கதவை மெல்லத்திறந்து உள்ளே செல்லும்படி பணிந்து கைகாட்டினான்.

உள்ளே சென்றதும் ஏய்டன் சற்றுத் திகைத்தான். அறைக்குள் நாற்பதுவயதான ஒரு வெள்ளையர் ரஸ்ஸலுடன்

பேசிக்கொண்டிருந்தார். சாதாரணமான அலங்காரங்கள் கொண்ட அறை. ஆனால் மிகப்பெரியது. உயர்ந்த மேல்கூரையும் கோட்டைவாசல்கள் போன்று வளைந்த முகடுகொண்ட சன்னல்களும் சுதைச்சுவர்களும் உடையது. அறைக்குள் ஒருமூலையில் எழுத்துமேஜையும் கோப்புகள் வைக்கும் அடுக்கும். மறுமூலையில் காகிதங்களும் பதிவேடுகளும் மண்டிய மேஜைக்கு அப்பால் ரஸ்ஸல் அமர்ந்திருந்தார்.

ஏய்டன் வணங்கியதும் ரஸ்ஸல் புன்னகையுடன் அமரும்படி சைகை காட்டினார். பின் அந்த வெள்ளையரிடம் "காப்டன் பைர்ன். சென்னை கடற்கரைக் காவல்படை" என்றார்.

அவர் எழுந்து கைநீட்டி "நான் ராபர்ட் ஃபெலோஸ் சிஷோம்" என்றார் "கட்டிடக்கலையில் ஈடுபட்டிருக்கிறேன். மதராஸ் செனெட் ஹாலை நான்தான் வடிவமைத்தேன்"

"வாழ்த்துக்கள்" என்றான் ஏய்டன். அமர்ந்தபடி ரஸ்ஸலைப்பார்த்தான். அவரை வைத்துக்கொண்டா ரஸ்ஸல் பேசப்போகிறார் என்று நினைத்துக்கொண்டான்.

"நாங்கள் இங்கே நிறைய அருமையான கட்டிடங்களைக் கட்டப்போகிறோம்" என்றார் ரஸ்ஸல். "முக்கியமான பல கட்டிடங்கள். நெடுங்காலமாகவே அவை தேவையாக இருந்தன. ஆனால் லண்டனில் இருந்து போதிய நிதி ஒதுக்கப் படவில்லை. போர்களுக்கான செலவுக்கே நிதி காணாம லாகிறது என்று சொன்னார்கள். இப்போதுதான் காலம் கனிந்திருக்கிறது. மிஸ்டர் சிஷோமின் வரைபடத்தை நீங்கள் பார்க்கவேண்டும் காப்டன். ஒரு பெரும்படைப்பு அது. வடிவம்பெற்று வரும்போது தென்னிந்தியாவின் மகத்தான கட்டிடங்களில் ஒன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை"

ரஸ்ஸல் ஒரு நீலநிற காகிதசுருளை அவனிடம் நீட்டினார். அவன் அதை வாங்கி விரித்துப்பார்த்தான்.

"வரைபடம் வாசிப்பதில் உங்களுக்குப் பயிற்சி இருக்கும். மலாயாவில் நீங்கள் பல பாலங்களை வடிவமைத்திருக்கிறீர்கள்" என்றார் ரஸ்ஸல்.

வரைபடத்தின் கோடுகள் எவையும் ஏய்டனுக்கு அர்த்தமாகவில்லை. அவன் வெறுமே பார்த்துக்கொண்டிருந் தான்.

"நெல்லையிலும் தென்காசியிலும் கூடச் சில நல்ல கட்டிடங்கள் நமக்குத்தேவையாகின்றன. குறிப்பாகத் தென்காசி யில் கோடைகால ஓய்வுமாளிகை ஒன்று வேண்டும். நான் உங்களுக்கு சிஷேமை அறிமுகம் செய்ததே அதற்காகத்தான். அவரது வடிவமைப்பு உதவி உங்களுக்குத் தேவையாக இருக்கலாம்"

"கண்டிப்பாக. நன்றி" என்றான் ஏய்டன்.

"காப்டனின் அறிக்கை ஒன்று நேற்றுக் கையில் கிடைத்தது. அதுதான் கடைசியாகப் பனியை உருக்கியது" என்றார் ரஸ்ஸல் சிஷேமிடம். "முடிவெடுக்க டியூக் தயங்கிக்கொண்டிருந்தார். நாட்டுக்கு அதிகச்செலவு வைத்துவிட்டார் என்று குற்றச்சாட்டு வருமோ என்று பயப்பட்டார். அவர் டியூக் ஆனதனாலேயே ஹவுஸ் ஆஃப் காமன்ஸை கனவில்கூட அஞ்சி நடுங்க வேண்டியிருக்கிறது. அவர் என்ன செய்தாலும் ஆடம்பரம் என்றும் ஊதாரித்தனம் என்றும் குற்றம் சாட்டுவார்கள். நேற்று காப்டனின் அறிக்கையைக் கண்டதும் அது ஒரு வலுவான காரணமாக அமைந்தது. இந்த நாட்டில் இன்று பல லட்சம் மக்கள் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் தகுதியுள்ள உழைப்பாளர்கள். அவர்களுக்கு உழைப்பதற்கான வாய்ப்பு கொடுப்பதே இப்போதைய தேவை. அதற்கு மிகச்சிறந்த வழி கட்டுமானப்பணிகள்தான். அதனால் அரசுக்கும் பெரிய லாபம். இப்போதுள்ள கூலிக்கு இனி எப்போதுமே ஆட்கள் கிடைக்க மாட்டார்கள். அந்த மக்களுக்கும் வேலைவாய்ப்பு. பஞ்சத்தைச் சமாளிக்க இதைவிடப் பெரிய வழி வேறு இல்லை."

"ஆமாம். இப்போதுதான் நாம் நம் பணிகளை ஆரம்பிக்கவேண்டும்" என்றார் சிஷேம்.

"மேலும் பஞ்சம் காரணமாக வேறு எங்கும் கட்டுமானப் பணிகள் இப்போது நடைபெறுவதுமில்லை. சுண்ணாம்பு

மண்ணைவிட மலிவாகக் கிடைக்கிறது என்கிறார்கள் குத்தகைக்காரர்கள்"

"ஆமாம். கல்கத்தாவிலும் மிகப்பெரிய கட்டுமான வேலைகள் நடக்கின்றன"

ரஸ்ஸல் அவனிடம் "உங்கள் அறிக்கைக்கு நன்றி காப்டன். அது தன் பணியைச் செவ்வனே செய்கிறது. இந்த ஏழைகளுக்கு அது வாழ்க்கை கொடுக்கப்போகிறது" என்றார். "சிஷேமை நீங்கள் பிற்பாடு தனியாகச் சந்தித்து உரை யாடலாம்."

"கண்டிப்பாக. அது மகிழ்ச்சியானது" என்றான் ஏய்டன், சிவந்த முகத்துடன். அவன் கை தலைமயிரை வருடிக் கொண்டது.

"நாம் மீண்டும் சந்திப்போம்" என்றபின் சிஷேம் எழுந்தார். "நான் கிளம்புகிறேன்" இருவரிடமும் கைகுலுக்கி "இனிய சந்திப்புக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். இது தொடர கடவுளைப் பிரார்த்திக்கிறேன்" எனக் கிளம்பிச் சென்றார்.

ஏய்டன், "சர், நான் முக்கியமான விஷயமாக வந்திருக்கிறேன். ஐஸ்ஹவுஸில் ஒரு வேலைநிறுத்தம் ஆரம்பித் திருக்கிறது"

ரஸ்ஸல் புருவம் சற்றே மடிய, "வேலைநிறுத்தமா?" என்றார்.

"ஆமாம்" என்றான் "நான் என் அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறேன்" காகித உறையை அவன் மேஜைக்குமேல் நீட்டினான்.

ஆனால் ரஸ்ஸல் அதை வாங்கி பிரிக்காமல் கையில் வைத்துக்கொண்டார். "இந்த நாட்டில் இதுவரை வேலை நிறுத்தங்கள் நடந்ததில்லை" அவரது விரல்கள் ஒன்றுடன் ஒன்று இறுக்கமாகப் பிணைந்திருந்தன. கூட்டு மல்யுத்தத்தில் தழுவிக்கொண்ட வீரர்களைப்போல.

"ஆமாம். இது முதல் வேலைநிறுத்தம். அந்தவகையில் மிகமிக முக்கியமானது. தாங்கள் நேரடியாகவே இதைக் கவனிக்க வேண்டும். இது வன்முறை நோக்கிச் செல்லக்கூடாது.

அதற்காக நான் அங்கே ஒரு படையைக் காவல் நிறுத்திவிட்டு உங்களிடம் தெரிவிக்க வந்தேன்''

"வன்முறைக்கான வாய்ப்புகள் உள்ளனவா?'' அவரது விரல்கள் எளிதாயின. சுட்டுவிரல் ஒரு தாளத்தை ஆரம்பித்தது.

"அவர்கள் தரப்பில் அனேகமாக இல்லை. அவர்கள் எளிய உழைப்பாளிகள். இந்த நாட்டின் தீண்டப்படாத சாதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களால் வன்முறையில் ஈடுபட முடியாது. ஆனால் அந்தப் போராட்டத்தை அடக்க நிர்வாகம் வன்முறையைக் கையில் எடுக்கலாம். ஒருவேளை '' சற்றே தயங்கியபின் ஏய்டன் சொன்னான் "ஒருவேளை நம்முடைய படைகள்கூட பொறுமை இழந்து வன்முறையை ஆரம்பிக்க லாம். அப்படி நம் தரப்பில் ஆரம்பிக்கப்பட்டால் அது மோசமான முன்னுதாரணமாக அமையும். வெடிமருந்துக் கிடங்கில் தீயை வீசி எறிவதற்குச் சமம் அது. இந்த நாடு பஞ்சத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் நேரம்.''

"ஆமாம். உண்மைதான்'' என்றார் ரஸ்ஸல். அப்போதும் அந்த உறையைப் பிரிக்கவில்லை.

"கர்னலுக்கு உங்கள் மதிப்புமிக்க வழிகாட்டல் கிடைக்க வேண்டும். நான் உங்கள் அனுமதியுடன் இந்தப் போராட்டத்தை வன்முறை இல்லாமல் பார்த்துக்கொள்கிறேன்'' ஏய்டன் சொன்னான். சரியான சொற்கள்தானா என நினைத்துக் கொண்டான்.

"ஆமாம். வன்முறை நிகழக்கூடாது'' என்றார் ரஸ்ஸல். "அதைத் தெளிவாக மக்கின்ஸிக்கு அறிவுறுத்திவிடுகிறேன்'' அவர் ஒரு காகித உறையை எடுத்தார் "கவர்னர் நேற்றிரவு விடுத்த ஆணையின்படி நீங்கள் திருநெல்வேலி நிலை ராணுவத்தின் தலைவராகப் பணி உயர்வு அளிக்கப்பட்டிருக் கிறீர்கள். உங்களுக்கு மேஜர் தகுதி விரைவில் அளிக்கப்படும். அதற்கான பரிந்துரை கவர்னரால் ராணுவத்துக்கு அனுப்பப் பட்டிருக்கிறது''

சிலகணங்கள் ஏய்டன் சொல்லிழந்து அமர்ந்திருந்தான். பின் எழுபவன் போல அசைந்து "சர்'' என்றான்.

"வாழ்த்துக்கள் "என்று சொல்லி உறையை நீட்டினார் ரஸ்ஸல். "உங்கள் அற்புதமான அறிக்கைக்கான வெகுமதி இது"

சிந்தையில் இருந்து கடைசிச்சொல்லும் உதிர்ந்துவிட்டது போல ஏய்டன் உணர்ந்தான்.

"நீங்கள் இந்த உத்தரவைப் பெற்றதுமே பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறீர்கள். மெக்கின்ஸி காப்டனாக பணி உயர்வு பெற்று முழுப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குப் பொறுப்பளிக்கும் கடிதம் சற்றுமுன் அனுப்பப்பட்டு விட்டது. நீங்கள் ஆவணங்களை அவரிடம் ஒப்படைக்கலாம். இப்போது ஒரு நிர்வாகச்சிக்கல் வந்திருப்பதனால் உடனடியாக அதை நீங்கள் செய்யவேண்டும்"

ஏய்டன் கையில் அந்த உறையுடன் அப்படியே அமர்ந்திருந்தான்.

ரஸ்ஸல் எழுந்தார் "மிக்க மகிழ்ச்சி. நாம் மீண்டும் சந்திப்போம். ஒருவேளை கோடைக்காலத்தை நான் தென்காசியில் கழிக்கக்கூடும். மாகி அதை விரும்புகிறாள்" என்று கைநீட்டினார்.

ஏய்டன் எழுந்து அவர் கையைக் குலுக்கிவிட்டுத் திரும்பி நடந்தான். கதவு திறந்து அவனை வெளியே விட்டது. கனவில் நடப்பதுபோல நடந்து வெளியேறினான். மாலை ஆராதனைக்காக செயின்ட் மேரீஸ் சர்ச்சில் மணி அடித்துக்கொண்டிருந்த ஒலியை மட்டும் கேட்டது அவன் பிரக்ஞை.

குதிரையில் ஏறிக்கொண்டதும்தான் அவனுடைய பிரக்ஞை சூடுபட்ட குதிரைபோல துடித்தெழுந்தது. எதுவும் தற்செயலல்ல. அவன் தாமதிக்க வைக்கப்பட்டது, அவனுடைய இடமாற்றம் எல்லாமே. குதிரையைச் சாட்டையால் அடித்துக் கொண்டே இருந்தான். ஒருகட்டத்தில் அது வெறிபிடித்தது போலச் சாலையில் பாய்ந்தோடியது. அதற்குப்பின்னால் தெறித்த கூழாங்கற்கள் அவன் முதுகிலேயே பட்டன. எதிரே வந்த இரு சப்ராஸிகள் பாய்ந்து பதறி விலகினார்கள்.

உடம்பு முழுக்க வெந்நீர் போல வியர்வை கொட்ட அவன் தன் அலுவலகத்தை அடைந்தான். உள்ளே சென்று நாற்காலி

யில் அமர்ந்த பின்னரும் மனம் வேகமிழக்காமல் பாய்ந்து கொண்டிருந்தது. கடிதத்தைக் கோப்பில் போட்டுவிட்டு சில நிமிடங்கள் அமர்ந்திருந்தான். கொந்தளித்த எண்ணங்கள் வந்த வேகத்தில் பறந்து மறையும் உடைகள் போல அகம் நிர்வாணமாக எஞ்சி வந்து சேர்ந்ததுபோல இருந்தது. பின்பு நீராழத்தில் இருந்து மீன்கள் எழுவதுபோல எண்ணங்கள் எழுந்து வந்தன.

முதல் நினைப்பே உடனே ஐஸ் ஹவுஸுக்குச் செல்ல வேண்டும் என்பதுதான். அவன் வெளியே வந்தான். சாம் பின்னால் வந்து "சர் டீ?" என்றான்.

"வேண்டாம். மாக் வந்தானா?"

"லெஃப்டினெண்ட் சாப் வந்துவிட்டு இப்போதுதான் கிளம்பிச்சென்றார்."

"அவன் வந்தால் ஐஸ்ஹவுஸுக்கு வரச்சொல்"

ஏய்டன் வெளியே வந்து தன் குதிரையை நோக்கிச் சென்றான். துரைசாமி அதன் வியர்வையை அழுத்தி துடைத்துக் கொண்டிருந்தான். அது சாதாரணமாக மூச்சுவிட ஆரம்பித்திருந்தாலும் மோவாயில் நுரை தொங்கியது.

துரைசாமி அவனைக்கண்டதும் "ரோஸி இருக்கிறாள் சார். இவள் இனி அதிகதூரம் ஓடமாட்டாள்" என்றான்.

ஏய்டன் தலையசைத்ததும் துரைசாமி ரோஸியைக் கொண்டு வந்தான். நீளமான கால்களும் கரிய திட்டுகள் கொண்ட வெண்கழுத்தும் கொண்ட குதிரை. அதன் ஒரு கண்ணைச்சுற்றி கருமைவட்டம். ஆகவே அதன் பார்வையில் ஓர் அன்னியத்தன்மை தெரிவதுபோலிருக்கும் அவனுக்கு. அதை அதிகமாக அவன் பயன்படுத்துவதில்லை. ஏய்டன் அதன் கழுத்தைத் தட்டியதும் அது எதிர்ப்பு தெரிவிப்பதுபோலச் சற்று முன்னால் நகர்ந்து கடிவாளத்தை இழுத்தது. குதிரைகள் ஓட்டுபவனின் அகத்தை எப்படியோ உணர்ந்துகொள்கின்றன.

ஏய்டன் அதன்மேல் ஏறிக்கொண்டான். மெல்ல அதைக் காலால் அணைந்து கிளப்பினான். ரோஸி அவன்மீதான விருப்பின்மையை உடலசைவுகளில் காட்டியது. அவன்

கால்களின் செய்திகளை ஒரு சில கணங்கள் கழித்தே வாங்கிக்கொண்டது. அவன் எரிச்சலைடைந்து குதிமுள்ளால் அதைக் குத்தினான். சட்டென்று உலுக்கலுடன் அது பாய்ந்த போது ஏய்டன் நிலைதடுமாறி விழப்போனான். சவுக்கால் அதை அடித்தான். சிதறி உருள்வதுபோல அது நிலைமறந்து வெறியுடன் ஓடியது.

ஐஸ்ஹவுஸ் அருகே நெருங்க நெருங்க அவன் நிதான மடைந்தான். குதிரையை இழுத்துப்பிடித்தான். கடல்மணலில் அவனுடன் இணையாக பறந்துவந்த நீண்ட குதிரைநிழல் மணலில் ஒரு ஈரம்போல விழுந்து கிடந்தது. கடல்மேல் முன்மாலையின் உருகிய வெள்ளிபோன்ற ஒளி தளதளத்துக் கொண்டிருந்தது.

ஐஸ்ஹவுஸுக்கு முன்னால் கடற்கரை மணலில் நூறுபேருக்குமேல் கூடி நின்றார்கள். அவர்கள் மீனவர்களல்ல என்று தெரிந்தது. இருவர் வெள்ளை உடை அணிந்தவர்கள். நெருங்கியதும் அதிலொருவன் காத்தவராயன் என்று ஏய்டன் கண்டான். காக்கி கோட்டும் தலைப்பாகையும் அணிந்த காத்தவராயன் நேராக அவனை நோக்கி வந்தான்.

ஏய்டன் குதிரையை நிறுத்தி "என்ன கூட்டம் இங்கே? இவர்களெல்லாம் யார்?" என்றான்.

காத்தவராயன் "இவர்கள் ஐஸ் கட்டிகளைச் சுமக்கும் தொழிலாளர்கள்" என்றான்.

"இல்லை. இவர்கள் "

"இவர்கள் வெவ்வேறு காலங்களில் ஐஸ் கட்டிகளைச் சுமந்திருக்கிறார்கள். இவர்களுக்கு இங்கே எந்த விதமான பதிவு களும் இல்லை. ஆனாலும் இவர்கள் ஐஸ்ஹவுஸ் தொழிலாளர்கள்தான்" என்றான் காத்தவராயன்.

"வன்முறை ஏற்படுவதை நான் விரும்ப மாட்டேன்"

"தெரியும். அது பிற எவரைவிடவும் எங்களுக்கு ஆபத்து. ஆனால் நாங்கள் இங்கே இருப்பது எங்கள் தோழர்களுக்குத் தைரியம் அளிக்கும்."

"என்ன நடக்கிறது உள்ளே?"

"எங்கள் தோழர்கள் அப்படியே அமர்ந்திருக்கிறார்கள். அவர்களை நாங்கள் சென்று பார்க்க உங்கள் ராணுவம் அனுமதிக்கவில்லை".

"வெயிலிலா? இவ்வளவு நேரமா?"

காத்தவராயன் புன்னகைசெய்தான்.

"சரி. நான் பார்க்கிறேன்" என்றான் ஏய்டன். சொல்லலாமா என்று தயங்கினான். முன்னால் அடிவைத்த குதிரை ஒரு வட்டம் சுற்றி வந்தது "காத்தவராயன்."

"சர்"

"ஒரு கெட்டசெய்தி. என்னை இடமாற்றம் செய்துவிட்டார்கள். தென்காசிக்கு"

காத்தவராயன் கண்கள் சுருங்கின. "அப்படியா?" என்றான்.

"உன் கணக்குகள் தவறு. ரஸ்ஸல் நீ நினைப்பதுபோல நினைக்கவில்லை. அவர் இந்தப் போராட்டத்தை அடக்கவே நினைக்கிறார். மாக் பொறுப்பேற்றுக்கொண்டால் அவன் என்ன செய்வான் என்று தெரியுமல்லவா?"

"ஆம்." ஏய்டன் பெருமூச்சுவிட்டான். "சர், இனிமேல் போராட்டத்தை நீட்டிப்பதில் பொருளில்லை. நீங்கள் உள்ளே சென்று நிர்வாகிகளிடம் பேசிப்பாருங்கள். ஒரு சிறு அடிப்படைச்சலுகை கிடைத்தால்கூடப் போதும். ஊதிய உயர்வுக்கான உறுதிமொழிகூட போதுமானது. முடித்துக் கொள்கிறோம்"

"சரி. நான் பார்க்கிறேன்" என்று ஏய்டன் குதிரையைக் கிளப்பினான். ஐஸ்ஹவுஸ் வாசலில் ரைஃபிள்களுடன் இரு காவலர் நின்றனர். அவனைக் கண்டதும் சல்யூட் அடித்தார்கள். அப்பால் அவனுடைய பிளட்டூனின் இருபது குதிரைகளும் கட்டிடங்களை ஒட்டி நின்றிருந்தன. அவற்றுக்கு மேல் நிழலுக்காகத் தென்னைக்கீற்றுக்கள் போடப்பட்டிருந்தன. சிலகுதிரைகள் தரையில் போடப்பட்ட வைக்கோலை கொஞ்சமாக அள்ளி வாயால் மென்று குழாய்போல எச்சில் ஒழுக நின்றுகொண்டிருந்தன. குதிரைவீரர்கள் கட்டிடத்

திண்ணைகளிலும் லாயத்திலுமாக வெவ்வேறு இடங்களில் அமர்ந்திருந்தனர். பலர் சப்பாத்துக்களைக் கழற்றிப் போட்டுவிட்டுச் சப்பணமிட்டிருந்தார்கள். அவனைக் கண்டதும் அனைவரும் எழுந்து நின்றார்கள். நாலைந்து குதிரைகள் திரும்பிப்பார்த்து அவனை அடையாளம் கண்டு மூச்சு சீறின. ஒரு உயரமான குதிரை தலையைச் சிலுப்பியபடி காலால் கல்தரையைத் தட்டியது.

ஐஸ்ஹவுஸின் வாசலில் ஒரு நாற்காலியில் நாராயணன் அமர்ந்திருந்தான். அவன் எழுந்து சல்யூட் வைத்தான். குதிரை வீரர்கள் அவசரமாக சப்பாத்துகளுக்குள் கால்களைத் திணித்துக் கொண்டு உடைகளை உள்ளே செருகிக்கொண்டு நொண்டியும் விந்தியும் குதிரைகளை நோக்கிச் சென்றார்கள்.

முற்றத்தில் அந்தத் தொழிலாளர்கள் அனைவரும் நிலத்தில் அமர்ந்திருந்தனர். சூரியன் அவர்களுக்குப்பின்னால் இருந்ததனால் அவர்கள் நிழல்கள் போலத் தெரிந்தனர். பார்வை தெளிந்ததும் ஏய்டன் அவர்களைக்கூர்ந்து பார்த்தான். முகங் களில் காலையில் இருந்த உணர்ச்சிவேகங்கள் இருக்கவில்லை. எல்லா முகங்களும் ஒரே பாவனையுடன் ஒரே முகத்தின் பிரதிகள் போலத் தெரிந்தன.

“இவர்களிடம் யாராவது பேசினார்களா?”

“ஆமாம் சார். எவருக்கும் இனிமேல் இங்கே வேலை இல்லை என்று சொன்னார்கள். கலைந்து போகாவிட்டால் எத்தனை நாளானாலும் வெயிலிலேயே இருக்க வேண்டியது தான் என்றார்கள். ஆனால் இவர்கள் அதைக்கேட்கவில்லை. அந்த குட்டையான இளைஞன்தான் தலைவன் போல. அவன் உறுதியாக இருக்கிறான்” என்றான் நாராயணன்.

“இவர்களுக்குக் குடிநீர் கொடுக்க ஏற்பாடு செய்” என்றான் ஏய்டன்.

“இங்கே வேறு வேலையாட்கள் இல்லை”

ஏய்டன் கோபத்தை அடக்கியபடி “வெளியே இவர்க ளுடைய நண்பர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் சொல். அவர்கள் கொடுப்பார்கள்” என்றான்.

பார்மர் பின்னால் அறையிலிருந்து வந்தபடி "இந்தச் சூழலில் அன்னியர் உள்ளே வருவதை நான் அனுமதிக்க முடியாது" என்றார்.

"இந்த மண் மாட்சிமை தங்கிய பேரரசியின் ஆட்சியின் கீழே இருக்கிறதென்றே நினைக்கிறேன்" என்றான் ஏய்டன். பார்மர் பார்வையை விலக்கினார். நாராயணனிடம் "ம்" என்றபின் பார்மரிடம் "நான் உங்களிடம் பேசவேண்டும்" என்றான் ஏய்டன்.

"பேசுவோம்"

"உள்ளே வாருங்கள்"

உள்ளறைக்குள் இருட்டாக இருந்தது. பார்மர் இரு நாற்காலிகளை இழுத்துப்போட்ட பின் கயிற்றை இழுத்து ஜன்னல்களின் கனத்த திரைகளை மேலே சுருட்டித்தூக்கினார். "அமருங்கள் காப்டன்"

ஏய்டன் அமர்ந்துகொண்டான். பார்மர் எதிரில் அமர்ந்தார்.

"மாட்சிமை தங்கிய பேரரசியின் ஆட்சிக்குள் இந்த பிரச்சினை எழுந்தது நிர்வாக மட்டத்தில் கவலைகளை உருவாக்கியிருக்கிறது" என்றான் ஏய்டன். "நான் இப்போதுதான் ஆளுநரின் செயலரிடம் பேசிவிட்டு வருகிறேன். அவர் இந்தப்பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும் என்று நினைக்கிறார். ஏனென்றால் இது பஞ்சகாலம். பஞ்சத்தை சமாளிக்க மாட்சிமை தங்கிய பேரரசியின் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கிறது. பெரிய கட்டுமானத் திட்டங்கள் வரப்போகின்றன. இந்நிலையில் இந்தப் போராட்டம் மிக மோசமான விளைவுகளை உருவாக்கும். இந்தச் செய்தி ஊடகங்களில் வருவது அரசுக்குச் சங்கடங்களை அளிக்கும் உடனே இந்த விஷயம் முடிக்கப்படவேண்டும்"

ஏய்டன் பார்மர் கண்களைக் கூர்ந்து நோக்கி "நாளை மறுநாள் 'மதராஸ்மெயில்' செய்தியை வெளியிடும். ஏற்கனவே அது பஞ்சம்பற்றிய கடுமையான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது இன்னும் ஒருமாதத்தில் அமெரிக்காவிலும் லண்டனிலும் செய்திவெளியாகும்" என்றான்

"நான் வெறும் அதிகாரி" என்றார் பார்மர். "என்னால் எந்த முடிவையும் எடுக்க முடியாது"

"உங்கள் மேலிடம் பாஸ்டனில் உள்ளது. அங்கிருந்து ஆணைபெற ஆறுமாதமாகும். நீங்கள் முடிவெடுக்கலாம். உங்கள் எல்லைக்குள் உள்ள எந்த நல்லமுடிவையும் உடனடியாக முன்வைக்கலாம்."

"மன்னிக்கவும். இங்கேயும் நான் அதிகாரமுள்ளவன் அல்ல. 'டியூடர் அண்ட் கம்பெனி'யின் இந்தியப்பிரிவின் கணிசமான பங்குகள் இங்கே மதராஸிலேயே வாங்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமையாளர்கள்தான் முடிவெடுக்க முடியும்"

"அப்படி என்றால் அவர்களிடமே முடிவெடுக்கச் சொல்லுங்கள்" என்றான் ஏய்டன் "ஒரு தீர்வை நீங்கள் முன்வையுங்கள். அவர்கள் அதை மறுக்கமாட்டார்கள்"

"உங்கள் பரிந்துரை என்ன?"

"இதோபாருங்கள் பார்மர் நீங்கள் ஓர் அமெரிக்கர். விடுதலைப்போர் நடந்த பாஸ்டனைச் சேர்ந்தவர். உங்களுக்கு மனித உரிமைகளை நான் சொல்லித்தர வேண்டியதில்லை. உங்கள் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். இந்த நிறுவனத்தில் நடப்பவை உங்களுக்கு நியாயமாகப் படுகின்றனவா?"

சிலகணங்கள் பார்மர் அமைதியாக இருந்தார். "இல்லை" என்றார். "நான் இந்த மக்களைப் புதிதாகப் பார்க்கிறேன். இதோ இவர்கள் இங்கே அமர்ந்திருப்பது. இது நானறிந்த அந்த உடல்கள் அல்ல. அவர்களின் ஆன்மாக்கள் மட்டும் திரண்டு வந்து ஒன்றாக என் முற்றத்தில் அமர்ந்திருக்கின்றன என்று தோன்றுகிறது. என்னால் அவர்களை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. நான் நேற்றுவரை அவமதித்த மக்கள் அல்ல இவர்கள்." பார்மர் இல்லை இல்லை என்பதுபோல தலையை ஆட்டினார். "நான் என்ன செய்கிறேன். இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறேன். காப்டன், ஒரு நாகரீக மனிதனாக என்னை ஒவ்வொரு நாளும் கூசிச்சுருங்கச்செய்கின்றன இவை"

எதையோ உதறுவதுபோல தலையை ஆட்டியபடி பார்மர் சொன்னார் "எனக்குக் கிறித்தவ நம்பிக்கை இல்லை. நான் நம்புவது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும்தான். அந்த நம்பிக்கைகள் மீது ஒவ்வொருநாளும் சேறு அள்ளிக் கொட்டப்படுவதைப் போல உணர்கிறேன். என் வாழ்க்கையில் மிகமிக மோசமான நாட்கள் இங்கே நான் செலவிடும் இந்த இரண்டு வருடங்கள். இந்த நரகத்தில். ஆன்மா இல்லாத இந்த வாழ்க்கையில்." அவரால் பேசமுடியவில்லை கையால் தலையை வருடிக்கொண்டார். மேலே பேசச் சொல்லிழந்து அமைதியானார்.

அவர் முகத்தில் தெரிந்த கொந்தளிப்பு ஏய்டனை ஆச்சரியப்படுத்தியது. "அப்படியென்றால்." என அவன் ஆரம்பித்தான்.

"காப்டன். நீங்கள் ஒன்று தெரிந்துகொள்ளவேண்டும். நான் இங்கே ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்க முடியாது. நாங்கள் வணிகர்கள். இங்கே எங்களுக்கிருப்பது ஒரே ஒரு சிறிய ஆலையும் அலுவலகமும்தான். ஆகவே இங்கே உள்ள சமூக அமைப்பைத்தான் நான் பயன்படுத்திக்கொள்ள முடியும்." பார்மர் சட்டென்று உதடுகள் மனவேகத்தில் கோணலாக, கைகளை ஆட்டி ஆவேசமாக பேச ஆரம்பித்தார் "காப்டன், டியூடர் ஆன்ட் கம்பெனி இங்கே வந்த ஆரம்ப காலத்தில் இங்கேயும் அமெரிக்காவின் தொழில்பண்பாட்டை உருவாக்க முயன்றார்கள். அதற்காக முழுமூச்சாக முயன்ற பலரை நான் சுட்டிக்காட்டுவேன். ஆனால் இங்குள்ள யதார்த்தங்கள் அதற்குச் சாதகமாக இருக்கவில்லை. இங்குள்ள சாதி என்ற விஷயத்தை எங்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. எங்களுக்குத்தேவை உடலுழைப்பாளர்களும் அவர்களை நிர்வாகம்செய்யும் ஆங்கிலமறிந்தவர்களும். இங்கே உடலுழைப்பாளர்களாக வருபவர்கள் தீண்டப்படாத மக்கள். ஆனால் நிர்வாகத்துக்கு உயர்சாதியினர் கண்டிப்பாக வேண்டும். அவர்கள்தான் இந்த நகரத்துக்குள் எல்லா இடங்களுக்கும் செல்லமுடியும். அவர்களுக்குத்தான் இந்த நகரின் விதிகளும் வழிகளும் தெரியும்"

"உண்மையில் இந்த யதார்த்தங்களைத் தெரிந்துகொள்ள எனக்கு ஒரு வருடம் ஆகியது" என்றார் பார்மர். "இங்கே ஒவ்வொன்றுக்கும் அதற்கான சாதி என்னும் மக்கள்கூட்டம் உள்ளது. அவர்கள் மட்டுமே அதைச்செய்ய முடியும். படகுகளைப் பரதவர் ஓட்டுவார்கள். ஆனால் சரக்குகளை உள்ளூருக்குள் கொண்டுசெல்ல அவர்களால் முடியாது. அதற்குக் கோமுட்டிச்செட்டிகள் தேவை. அவர்கள் இல்லாமல் நாங்கள் பனிக்கட்டிகளை உள்ளூருக்குள் வினியோகிக்கவே முடியாது. எங்களுக்கு வேண்டிய மரத்தூளை கொண்டு வருவதற்கே ஒரு தனிச்சாதி இருக்கிறது. இப்படிப் பல சாதிகளை ஒருங்கிணைத்துச் செல்ல பிராமணர்கள் வேண்டும். பிராமணர்களுக்கு ஆயுதம் மூலம் உதவிசெய்ய ரெட்டிகள் வேண்டும். ஆமாம், இங்கே தொழில்செய்யவேண்டுமென்றால் இங்கே உள்ள சமூக அமைப்பை அப்படியே நாங்களும் எடுத்துக்கொள்ளவேண்டும். வேறுவழியில்லாமல் என் முன்னோடிகள் அதைச்செய்தார்கள்"

"உண்மைதான். பிரிட்டிஷாரும் அதையே செய்ய வேண்டியிருந்தது"

"அதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் இந்த நாட்டில் வெளியே பார்க்கும் அதே அடிமைத்தனமும் ஈவிரக்கமற்ற சுரண்டலும்தான் இங்கே எங்கள் நிறுவனத்திலும் இருக்கிறது. இங்கே உள்ள எல்லா நிர்வாகிகளும் கங்காணிகளும் ரெட்டி, நாயுடு என்ற இரு சாதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நீங்கள் நினைப்பதுபோல மூர்க்கர்களோ கொடுமைக்காரர்களோ அல்ல. மிகமிக புத்திசாலிகள். 'டியுடர் ஆண்ட் கம்பெனி' உலகமெங்கும் நஷ்டத்துடன் இழுத்துக்கொண்டிருந்தபோது இங்கே அது லாபகரமாக ஓடியதற்குக் காரணம் அவர்களின் நிர்வாகத்திறன்தான். அவர்களை நான் கூர்ந்து கவனித்து வருகிறேன். அடிப்படையில் நல்லவர்கள். எளிமையானவர்கள். உபசரிக்கும்பண்புள்ளவர்கள். அவர்களின் மதம் இங்குள்ள கடவுள்களில் ஒன்றை நம்புகிறது. அந்தக்கடவுள் கருணையே வடிவானவர் என்கிறார்கள். பூமியில் தீமை அதிகரிக்கும்போது அவர் மனிதனாக பிறப்பார் என நம்புகிறார்கள். ஒவ்வொரு

நாளும் அவரை வணங்காமல் அவர்கள் காலையில் உணவு உண்பதில்லை. அவர்களின் பக்திப்பாடல்கள் மிக உருக்க மானவை. ஆனால்"

பார்மரின் முகம் வெறுப்பில் சுளித்தது "இந்த மக்களுக்கு இங்குள்ள தீண்டப்படாதமக்கள் மீதிருக்கும் அருவருவெறுப்பையும் வெறுப்பையும் நீங்கள் கற்பனைசெய்ய முடியாது. இவர்களில் ஒரு பரமபக்தன் எந்தவிதமான மனசாட்சிப்பிரச்சினையும் இல்லாமல் ஆயிரம் தீண்டப்படாத குழந்தைகளைச் சாக வைப்பான். இங்கே உள்ள தொழிலாளர்களுக்கு இன்னும் கொஞ்சம் வசதிகள் கொடுக்க இன்னும் சற்றுக் கூலி கொடுக்க 'டியூடர் ஆண்ட் கம்பெனி' எப்போதும் தயாராகவே இருக்கிறது. ஆனால், இவர்கள் விடமாட்டார்கள். இப்போது கொடுக்கப்படும் கூலியே அதிகம் என்று இவர்கள் வாதிடுகிறார்கள். ஒருபோதும் பணம் கொடுக்கப்படக்கூடாது என்று சொல்கிறார்கள். கொடுக்கப்படும் எந்தச் சலுகையும் இங்கே உள்ள சமநிலையைக் குலைத்துவிடும். இன்றைய சூழலில் இந்த உயர்சாதியினர் இல்லாவிட்டால் நாங்கள் செயல்படவே முடியாது"

'என்ன சொல்வதென்றே தெரியாமல்' ஏய்டன் அமர்ந்திருந்தான்.

"நான் ஓர் அமெரிக்கன். இங்கே என் ஆலையில் நடப்பது பாஸ்டனில் எங்காவது அச்சில் வெளிவருமென்றால் நான் என் நெற்றிப்பொட்டில் துப்பாக்கியை வைக்க வேண்டியதுதான். நான் கற்றகல்விக்கு இங்கே நான் செய்வதைப்போல அவமானம் ஏதுமில்லை. என் சகோதரர்கள் என்னை நினைக்கவே அருவெறுப்பார்கள்." பார்மர் முகம் சிவந்து தடுமாறினார். "மன்னியுங்கள்" என்று கைக்குட்டையால் முகத்தைப் பொத்தித் துடைத்தார். கண்ணீர் அவரை மீறி வழிந்தது. குனிந்து கண்ணையும் மூக்கையும் அழுத்தித் துடைத்தபடியே இருந்தார்.

"மிஸ்டர் பார்மர்" என்று ஏய்டன் மெல்லிய குரலில் சொன்னான். "ஆனால் இது ஒரு நல்வாய்ப்பு இல்லையா? இப்போது நீங்கள் இந்த மக்களுக்குச் சம்பளம் சற்றுக் கூட்டிக் கொடுக்கலாம். வேலைச்சூழலைக் கொஞ்சம் மேம்படுத்தலாம்.

இந்தப் போராட்டத்தால் வேறு வழி இல்லாமல் இதைச் செய்கிறேன் என்று உயர்சாதியினரிடம் சொல்லுங்கள்."

"ஆம். அது ஒரு வழிதான்" மூக்கைத் துடைத்தபின் பார்மர் ஏறிட்டார்.

"இந்தக்கொலையை விசாரிக்கச் சொல்லி ஒரு கடிதத்தை எனக்குக் கொடுக்கலாம். போராட்டத்தை முடிக்கச்சொல்லி நானே அவர்களிடம் சொல்கிறேன். இப்படி ஒரு போராட்டம் நடந்ததனாலேயே இனிமேல் இந்தக் கண்காணிப்பாளர்கள் நேரடியாக அடிக்கத் தயங்குவார்கள்."

"ஆமாம். ஆனால்"

"நீங்கள் முடிவெடுங்கள்" என்றான் ஏய்டன் "மிஸ்டர் பார்மர் ஒருவேளை வரலாறு இங்கே உங்களை அனுப்பியதே இதற்காகத்தானோ என்னவோ. நீங்கள் கற்ற கல்வியின் பயன் இதாக இருக்கலாம். இந்தியாவின் முதல் தொழிலாளர் போராட்டத்தை நீங்கள் எதிர்கொள்கிறீர்கள். அதைச் சமரசமாக முடித்துவையுங்கள். இது ஒரு நம்பிக்கையூட்டும் தொடக்கமாக இருக்கட்டும். உங்கள் காலகட்டத்தில் இது நடந்தால் இதைப்பற்றி நீங்கள் எப்போதும் பெருமை கொள்ளலாம்"

"என் அதிகாரம் எதுவரை என்று தெரியவில்லை."

"மிஸ்டர் பார்மர், நீங்கள் ஒருமுடிவை எடுத்தால் அதை நிராகரிக்க முடியுமா என்ன?"

"நான் எழுத்து பூர்வமாக நடவடிக்கை எடுத்தால் அதை அவர்கள் சட்டபூர்வமாக ஒன்றும் செய்ய முடியாது. ஆனால்", "அதைச்செய்யுங்கள். அதன்மூலம் நீங்கள் எந்தச்சிக்கலில் மாட்டினாலும் உங்கள் ஆன்மா உங்களுடன் இருக்கும்"

"நான் என்ன செய்வது?"

"வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு நேரடியாக அறிவிப்பதுபோல ஒரு கடிதத்தை எழுதுங்கள். அதில் இந்தச் சலுகைகளை அறிவித்து வேலைக்குத் திரும்பும் படி சொல்லுங்கள். அதை முறையான அலுவலகக் கடிதமாக

இங்கே வெளியிடுங்கள். வேலைநிறுத்தம் நின்றுவிடும். அதன்பின் நடப்பதைப் பேசிக்கொள்வோம்."

பார்மர் சிலகணங்களுக்குச் சிந்தனை நிறைந்த கண்களுடன் பார்த்தார். பின்பு எழுந்துகொண்டு "ஆம். அதுதான் நல்லது" என்றார். சட்டென்று முகம் மலர்ந்து "நன்றி. இது ஒரு புதிய வாசல்போலத் தெரிகிறது. இங்கிருந்து செல்லும்போது நான் நிறைவாக நினைத்துக்கொள்ள ஒரு விஷயம் மிச்சமிருக்கும்" என்றார்.

"எழுதுங்கள்" என்றபடி ஏய்டன் எழுந்துகொண்டான். பார்மர் உள்ளே சென்றார்.

"மிஸ்டர் பார்மர்" என்றான் ஏய்டன். அவர் நின்றதும் "நான் உங்களுக்கு ஒரு அடி கடனாக வைத்திருக்கிறேன். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் அதை திருப்பித்தரலாம்" என்றான்.

பார்மர் "ஓ" என்று சிரித்தார்.

"மன்னியுங்கள். நான் உங்களை இப்படிப் புரிந்து கொண்டிருக்கவில்லை"

"அதனாலென்ன. உண்மையில் நானே கூட என்னை இப்போதுதான் இப்படிப் புரிந்துகொண்டிருக்கிறேன்"

ஏய்டன் வெளியே நடந்தபோது உடம்பெங்கும் களைப்பை உணர்ந்தான். இனிமையான நிறைவான களைப்பு. அப்போது தோன்றியதெல்லாம் 'அங்கேயே ஏதேனும் சாய்வு நாற்காலியில் படுத்துச் சற்றுக் கண்ணயரவேண்டும்' என்றுதான்.







# 11

ஐஸ்ஹவுஸின் வாசலுக்கு ஏய்டன் வந்தபோது நாராயணன் ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டான். ஏய்டன் அதில் காலைநீட்டி அமர்ந்துகொண்டான். கூடியிருந்த ஊழியர்களுக்குக் காத்தவராயனும் நண்பர்களும் தண்ணீர் கொடுப்பதைக் கண்டான். குத்தீட்டிகளைக் குதிரைவிலாவில் கிடையாகத் தொங்கவிட்டு குதிரை அருகே கடிவாளம் பற்றி நின்றபடி அவனுடைய வீரர்களும் அதை வாங்கிக் குடித்தார்கள். அதை ஒரு பெரிய பானையில் இருந்து அவர்கள் ஊற்றும்போதுதான் அது தண்ணீர் அல்ல புளித்தகாடி என்று தெரிந்தது. புளித்தகாடியை நேரடியாகவே குடிப்பது இந்தியவழக்கம் என அவன் அறிந்திருந்தான். உலகம் முழுக்கவே கோடைநாடுகளில் மதுவை விடப் புளித்தகாடி விரும்பப் படுகிறது. மதுவேகூட ஒருவகைப் புளித்தகாடியாக இருக்கிறது.

மாலை அந்திச்சிவப்பை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. குருதிகலந்த ஓடைநீர் போல ஒரு செம்மஞ்சள் சிவப்புடன் ஒளி பெருகி முற்றமெங்கும் வழிந்துகிடந்தது. குதிரைகளின் நிழல்கள் சுவர்களில் விழுந்திருந்தன. அந்நிழல் களிலும் செம்மை கலந்திருப்பது போலிருந்தது. கடலில் இருந்து கரைக்குத்திரும்பும் பறவைகளின் நிழல்கள் முற்றத்தின் ஒளியில் மெல்லிய அலையதிர்வு போலக்

கடந்துசென்றன. கடலின் முழக்கம் அதிகரித்திருப்பதுபோலத் தோன்றியது. குதிரைவால் களையும் வீரர்களின் உடைகளையும் மரங்களின் இலைகளை யும் அசைத்தபடி கடந்துசென்ற காற்றில் குளிர்ந்த நீர்த் துளிகளை உணர முடிந்தது.

ஏய்டன் அந்தக் கரிய மனிதர்களைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். 'எதை நம்பி அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்? அவர்களின் அடித்தளம் தகர்ந்துவிட்டது. அவன் இப்போது காப்டன் அல்ல என்று நாராயணனுக்குத் தெரியாது. மக்கின்ஸிக்குத் தெரியாது. இன்னும் சில மணிநேரத்தில் தெரிந்துவிடும். அதற்குள் இதெல்லாம் முடிந்துவிடவேண்டும். இல்லையேல் இந்த நிகழ்ச்சிகள் செல்லும் திசையே வேறு. பார்மரின் கடிதத்தை அறிவிப்பில் ஒட்டியபின் உடனடியாக இவர்களைக் கலைந்து செல்லச் சொல்லிவிடவேண்டும். வெள்ளைநகரில் இருந்தே இவர்கள் விலகிவிடவேண்டும்'.

ஏய்டன் "அவனைக் கூப்பிடு" என்று காத்தவராயனைச் சுட்டிக்காட்டினான். நாராயணன் ஆளனுப்பியதும் காத்தவராயன் கைகளைத் துடைத்தபடி வந்து கீழே நின்றான். நாராயணனிடம் விலகும்படி ஏய்டன் கைகை காட்டினான். பின்பு மெல்லிய குரலில் சொன்னான் "அனேகமாக எல்லாம் நல்லபடியாக முடிகிறது"

"நன்றி சார்" என்றான் காத்தவராயன்.

"பார்மர் ஒரு சிறு கூலி உயர்வு அளிப்பார். நோயுற்ற வர்களுக்கு சிகிழ்ச்சைக்கான உதவி அளிக்க ஏற்பாடு செய்வார். அந்த இருவரும் தன் ஊழியர்கள்தான் என்று அடையாளம் காணப்பட்டதை ஒப்புக்கொண்டு அந்த கொலையைப்பற்றி ஒரு விசாரணை நடத்த எனக்குப் புகார் செய்வார்.".

"போதும் சார். நான் எதிர்பார்த்ததைவிடப் பலமடங்கு மேல்."

"அதற்கு நீ பார்மரின் மனசாட்சிக்கு நன்றி சொல்ல வேண்டும். அவரைப் பற்றி நான் நினைத்ததெல்லாமே பிழை"

"நான் என்றுமே வெள்ளை மனசாட்சியை நம்புகிறவன் சார்"

ஏய்டன் பெருமூச்சு விட்டான். காத்தவராயனின் இனிய முகத்தைப்பார்க்க ஒருவிதமான துயரம் வந்து அவனுக்குள் நிறைந்தது. 'தென்னமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் இந்த வெள்ளை இனம் செய்த பேரழிவுகளை இந்தநாட்டின் சாதிவெறியர்கள் அவர்களின் உச்சக்கட்டக் கீழ்மையிலும்கூடச் செய்யத்துணியமாட்டார்கள் என்பதை அவனுக்குச் சொல்லிப் புரியவைக்கமுடியுமா? உலகின் மொத்த மக்கள் தொகையில் கால்வாசிப்பேரை இந்த ஒரே நூற்றாண்டில் போரிலும் பஞ்சங்களிலும் கொன்றழித்திருக்கிறது வெள்ளை இனம். ஆனால் வரலாறு அப்படித்தான் செல்கிறது. நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் உறுப்பினனாகிய நான் இதோ ஒடுக்குமுறையாளன் வேடமிட்டு வந்து அமர்ந்திருக்கிறேன்'.

அவன் கண்களைப்பார்த்து அவனுடைய எண்ணம் ஓடும் திக்கைக் காத்தவராயன் புரிந்துகொண்டான். "சர், எல்லா அதிகார அமைப்பையும்போல வெள்ளையர்களின் அரசும் கொடுமையானதுதான். ஆனால் சராசரி வெள்ளையர்கள் மனிதாபிமானத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். மனிதசமத்துவம் என்ற கருத்துக்குள் வந்துவிட்டார்கள். இங்கே எங்கள் மக்கள் இன்னமும் அப்படிச் சில கருத்துக்கள் உருவாகியிருப்பதே தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்"

ஏய்டன் விவாதிக்க விரும்பவில்லை "பார்மர் எழுதி முடித்ததும் கடிதத்தை அறிவிப்புப் பலகையில் போடச் சொல்கிறேன். உடனே எல்லாரும் கலைந்துவிட வேண்டும். என் பதவிக்காலம் முடிந்தது என்பது எந்த நிமிடமும் வெளியே தெரியலாம். அதற்குள் இவை எல்லாம் சுமுகமாக முடிய வேண்டும். உன் ஆட்களிடம் சொல்லி வை"

"கண்டிப்பாக, சார்" என்றான் காத்தவராயன். தலைவணங்கி விலகிச் சென்றான்.

ஏய்டன் அவர்கள் அனைவரிடமும் ஒரு நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் உருவாவதைக் கண்டான். 'போராடும்போது

மட்டுமே மனிதனுக்குள் எழும் வீரியம் ஒன்றுண்டு. மனிதனை நிரந்தரமாகச் சூழ்ந்துள்ள பெரும் தனிமை அப்போது விலகிச்செல்கிறது. அவன் தன்னைப் போன்றவர்களுடன் இணைகிறான். அவன் கைகால்கள் அதிகரித்தபடியே செல்கின்றன. அவன் உடல் பேருருவம் கொள்கிறது. அவன் கடவுளுக்கு நிகராகிறான். போர்க்களங்களில் இருக்கும் பேரின்பம் என்பது அதுதான். உலகமெங்கும் போர்வீரன் என்ற ஆளுமையை உருவாக்கி நிலைநிறுத்துவது போர்க் களத்தில் நிகழும் அந்த மாபெரும் சுய கண்டடைதல். மரணம் முன்னால் இருப்பதை அறிந்தும் மனிதன் போர்க்களத்துக்குச் செல்வது அதனால்தான். அந்த ருசியைக் கண்டபின் மனிதனால் அதை ஒருபோதும் மறக்கமுடியாது. அவன் அதன்பின் அடங்க மாட்டான். இதோ ஒரு பிரம்மாண்டமான நதி அதன் முதல் ஊற்றில் இருந்து வழிய ஆரம்பித்திருக்கிறது. ஆம்'.

வண்டியின் மணியோசை கேட்டது. ஃபீட்டன் வண்டி ஒன்று வாசலில் வந்து மணியடித்தபடி தயங்க வீரர்கள் வழிவிட்டார்கள். அது உள்ளே வந்து சற்று திரும்பியது. குதிரை கால்களை மாற்றி வைத்துப் பின்னால் நகர வண்டி ஓரடி பின்னகர்ந்தது. வண்டிக்காரன் கடிவாளத்தைப்பிடித்தபடி பாய்ந்து இறங்கி குதிரையைத் தட்டி அமைதிப்படுத்தினான். பின் கடிவாளத்தைக் கொக்கியில் மாட்டிவிட்டுக் கதவை ஓடிப்போய்த் திறந்தான். வண்டிக்கு முன் இருந்து ஒரு சிறு ஏணியை எடுத்து வைத்தான்.

உள்ளிருந்து வந்தவரை ஏய்டன் உடனே அடையாளம் கண்டான். ரஸ்ஸலைச் சந்திக்க வந்த முரஹரி அய்யங்கார்தான். ஏய்டனைக் கண்டதும் துல்லியமான செவ்வியல் ஆங்கில உச்சரிப்பில் "இங்கே தங்களை எதிர்பார்க்கவில்லை காப்டன். நல்லதிருஷ்டம் இது. சந்தித்தமைக்கு மகிழ்ச்சி" என்று கை நீட்டியபடி வந்தார். ரஸ்ஸலின் அறையில் கண்ட அதே உடை அதே வைரங்கள் பதித்த தங்கத்தாலான வெற்றிலைச்செல்லம். நெற்றியில் அதே சிவந்தகோடு. வசீகரமாகச் சிரித்துக்கொண்டு "நான் உங்களை அலுவலகத்தில் வந்து சந்திக்க நினைத்திருந்தேன்" என்றார்.

"சந்திக்க நேர்ந்ததில் மகிழ்ச்சி" என்றான் ஏய்டன். 'அவர் எதற்கு வந்திருக்கிறார்' என்பது அவனுக்குப் புரியவில்லை.

அவர் நாற்காலியைக்காட்டி "அமரலாமே" என்றார். "இங்கே நாம் சந்திப்பதுகூட நல்லதுதான்"

ஏய்டன் அமர்ந்துகொண்டான். அவரைக் கூர்ந்து பார்த்தான். அவர் மேலே பேசுவார் என எதிர்பார்த்தான்.

"நான் 'டியூடர் ஆண்ட் கம்பெனி'யின் பங்குகளை வைத்திருக்கிறேன். பங்குகளை வைத்திருக்கும் வேறு எட்டு பேருக்கு நான்தான் வக்கீல், ஆடிட்டர் எல்லாமே. 'டியூடர் ஆண்ட் கம்பெனி'யின் கணக்குவழக்குகளை நான்தான் கவனித்துக்கொள்கிறேன்" என்றார் முரஹரி அய்யங்கார். "சொல்லப்போனால் இந்தக்கம்பெனியின் கதை முடிந்து விட்டது. எத்தனைநாள் இது நீடிக்கும் என்பதே சந்தேகம். பலநாடுகளில் 'டியூடர் அண்ட் கம்பெனி' பனிக்கட்டி வணிகத்தை நிறுத்திவிட்டார்கள். புதிய தொழில்நுட்பம் வந்துவிட்டது. இங்கே இது இன்னும் ஓடுவதற்குக் காரணம் நியூஇங்கிலாந்தின் தண்ணீருக்குத் தனி ருசி உண்டு என்ற மூடநம்பிக்கைதான்" சிரித்தபடி வெற்றிலைச் செல்லத்தை வருடினார் "நான் எல்லாப் பனிக்கட்டியையும் ருசித்திருக் கிறேன். அப்படி எந்தத் தனி ருசியும் இல்லை"

ஏய்டன் மெல்ல என்ன நடக்கிறதென்று புரிந்து கொண்டான். அந்த பங்குதாரர்களில் ரஸ்ஸல் ஒருவரா என்று மட்டும் அவன் அறிய விரும்பினான்.

"'டியூடர் அண்ட் கம்பெனி' இன்றுவரை கலெக்டர்கள் மற்றும் மகாராஜாக்களுக்குத்தான் பனிக்கட்டி விற்றிருக்கிறது. இந்தவருடம் முதல் மதராஸில் சில்லறை வணிகம் ஆரம்பிக்க லாமா என்று யோசிக்கிறோம். பிரிட்டிஷ் படைவீரர்களும் உள்ளூர் ஆங்கில இந்தியர்களும் வாங்குவார்கள். பொருளா தாரப் பிரச்சினைகளை மேலும் கொஞ்சநாள் தள்ளிப்போட லாம்." அப்போதுதான் பார்ப்பது போல அவர் தொழிலாளர் களைப் பார்த்தார் "என்ன இது?"

ஏய்டன் பதில் சொல்லவில்லை. உள்ளிருந்து பார்மர் மெல்ல வெளிவந்தார்.

"மாலைவணக்கம் மிஸ்டர் பார்மர். களைத்திருக்கிறீர்கள்" என்றார் அய்யங்கார்.

"ஆமாம். மாலைவணக்கம்" என்றார் பார்மர்.

"என்ன இது? நான் இந்த அளவுக்கு கேள்விப்படவில்லையே"

"தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்கிறார்கள்" என்றார் பார்மர்.

"வேலை - நிறுத்தமா? அப்படி என்றால்?" அவரது கனத்த புருவங்கள் இணைந்துகொண்டன.

பார்மர், "அவர்கள் வேலைசெய்ய மறுக்கிறார்கள்" என்றார்.

"சரி, வேலை செய்யத் தயாராக இருப்பவர்களைக் கொண்டு வேலையைத் தொடர்வதுதானே? மற்றவர்கள் போகட்டும்"

பார்மர் பேசாமல் நின்றார். ஏய்டன் சற்று எரிச்சலுடன் "மிஸ்டர் அய்யங்கார், வேலைநிறுத்தம் என்றால் வேலை செய்யாமலிருப்பது மட்டும் அல்ல. அவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக இந்த ஆலையை நிறுத்தியிருக்கிறார்கள்"

"அவர்கள் வேலையை நிறுத்தட்டும். ஆலையை நிறுத்த அவர்களுக்கென்ன உரிமை? இது அராஜகம். சட்ட விரோதம்"

ஆச்சரியமாக அந்தக் கோபம் ஏய்டனை உள்ளூர புன்னகை செய்யவைத்தது. அவர் கோபப்படுவாரென்றே அவன் நினைக்கவில்லை. மேலும் நிதானம் கொண்டவனாக "மிஸ்டர் அய்யங்கார், நீங்கள் பேசிக்கொண்டிருப்பது உங்கள் சொந்த நிலத்தைப்பற்றியல்ல. இது ஒரு தொழில் மையம். இங்கே அவர்களுக்கும் சில உரிமைகள் உள்ளன. அவர்களை நீங்கள் மதித்துப்பேசியாக வேண்டும்"

அய்யங்கார் அவனைச் சில கணங்கள் கூர்ந்து பார்த்தார். "இதில் உங்கள் ஆர்வம் என்ன?"

"வன்முறை இல்லாத ஒரு தீர்வு. அவ்வளவுதான்" என்றார் ஏய்டன், நிதானமாக.

"உங்கள் அக்கறையைப் பாராட்டுகிறேன். நான் என் நிர்வாகியிடம் அதைப்பற்றி விவாதிக்கிறேன்" என்றார் அய்யங்கார்.

பார்மர் விலகவிடக் கூடாதென்று கணநேரத்தில் ஏய்டன் முடிவெடுத்தான். "மிஸ்டர் அய்யங்கார். நிர்வாகி ஏற்கனவே முடிவை எடுத்து என்னிடம் சொல்லிவிட்டார். கடித வடிவில் அது தயாராகிவிட்டது. இப்போது அதை அறிவிக்கப்போகிறோம். இன்னும் சிலநிமிடங்களில் போராட்டம் முடியப்போகிறது"

முரஹரி அய்யங்காரின் கண்கள் இடுங்கின. "என்ன மிஸ்டர் பார்மர்?"

பார்மர் சற்றே வெளிறினார். அவரால் சொற்களை வெளிக்கொணர முடியவில்லை.

ஏய்டன் இடைபுகுந்தான் "மிஸ்டர் பார்மர் சில சலுகைகளை அறிவித்திருக்கிறார். தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார். மிஸ்டர் பார்மர் அந்தக்கடிதத்தின் ஒரு நகலை நீங்கள் உங்கள் பங்குதாரருக்கும் கொடுக்கலாம்"

பார்மர் "இப்போதைக்கு இதுவே மிகச்சிறந்த தீர்வு. ஆகவே நான் இந்த முடிவை எடுத்தேன்" என்றார்.

"அதை நான் வரவேற்கிறேன். ஆனால் பங்குதாரர்களின் தரப்பையும் நீங்கள் கணக்கிலெடுக்கவேண்டும்"

"இது அன்றாட நிர்வாக முடிவு. இதில் பங்குதாரர்கள் தலையிடும் வழக்கம் இல்லை" பார்மரின் குரல் மெலிதாக ஒலித்தது.

"இல்லை மிஸ்டர் பார்மர் இல்லை. துரதிருஷ்டவசமாக இது ஒரு பொருளதார முடிவு" என்றார் முரஹரி அய்யங்கார் "அந்தக் கடிதத்தை நீங்கள் இன்னும் வெளியிடவில்லை அல்லவா?"

"நான். இதோ-"

"வெளியிட்டாலும்கூட அதை நான் ரத்துசெய்ய முடியும்"

ஏய்டன் தன் உடல் பதற ஆரம்பிப்பதை உணர்ந்தான். "மிஸ்டர் அய்யங்கார், இதிலுள்ளவை மிக எளிய சலுகைகள். இதனால் பெரிய பொருளாதார இழப்பேதும் வரப்போவதில்லை" தன் குரலில் இருந்த கெஞ்சலை அவனே வெறுத்தான்.

"அதை நான் கணக்குகளை வைத்துக்கொண்டு அல்லவா முடிவெடுக்கவேண்டும்?" மீண்டும் அதே வசீகரச் சிரிப்பு.

"இது முன்னரே கொடுப்பதாக இருந்த சலுகைகள்தான். உண்மையில்." என்றார் பார்மர்.

"எப்போது இவர்கள் நம்மை மிரட்ட ஆரம்பித்தார்களோ அப்போதே இவர்கள் இதைப்பெறும் தகுதியை இழந்துவிட்டார்கள். இவ்வகை மிரட்டல்களுக்கு அஞ்சி நாம் விட்டுக்கொடுத்தால் இங்கே வாழமுடியாது. இந்தக் கீழ்மக்களுக்கு நாம் அஞ்சினால் அதன்பின் நாமெல்லாம் தகப்பனுக்குப் பிள்ளைகள் இல்லை."

ஏய்டன் தன் கோபம் கைவிரல்களைத் துடிக்கவைப்பதை உணர்ந்தான். "இது ஒரு தொகையே இல்லை மிஸ்டர் அய்யங்கார்"

"காப்டன், இது வியாபாரம். வியாபாரம் என்பது துளித்துளியாகச் செயல்படும் கடல் என்பார்கள். ஒரு செம்புநாணயத்தை நீங்கள் மதிக்கமாட்டீர்கள். சப்பாத்துக் காலால் தாண்டிச்செல்வீர்கள். நான் நின்று எடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டு முன்னால் செல்வேன். ஒரு செம்புக்காசைக்கூட நான் அதை ஈட்டாதவர்களுக்குக் கொடுக்க மாட்டேன். ஆகவேதான் நான் வியாபாரம் செய்கிறேன்." முரஹரி

அய்யங்கார் புன்னகைசெய்தார். "உங்களைப்போன்ற போர்வீரருக்குப்புரியும் தர்க்கத்தைச் சொல்கிறேனே. ஒரு போரைத் தோற்கடித்த ஒற்றைலாடம் போன்றது ஒவ்வொரு செம்புநாணயமும். மன்னிக்க வேண்டும்." என்றபின் அவர் எழுந்தார்.

அவர் உள்ளே செல்ல பார்மர் தொடர்ந்து சென்றார். தொலைவில் நின்று அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்த காத்தவராயன் அருகே வந்தான். "என்ன சொல்கிறார்?" என்றான்.

ஏய்டன் "மிகவும் துரதிருஷ்டவசமான விஷயம்" என்றான். "மிகக் கடினமான மனிதர். நான் அவரைக் கொஞ்சம் மிரட்டிப் பார்க்கிறேன்"

"அவருக்கு நீங்கள் இப்போது காப்டன் அல்ல என்று தெரியும்" என்றான் காத்தவராயன். "அதைத்தெரிந்து கொண்டு தான் வந்திருக்கிறார்"

"என்ன செய்வது?"

"எங்களுக்கு ஏதேனும் ஒரு சலுகை போதும். ஒரு வாக்குறுதிகூட போதும். முறையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீங்கள் அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சொல்லுங்கள். நாங்கள் கலைந்து செல்கிறோம்"

"நான் முயற்சி செய்கிறேன். அது முடியும் என்றுதான் நினைக்கிறேன். நீங்கள் மாக்கையும் எங்கள் ராணுவத்தையும் எதிர்கொள்ளும் நிலை வரக்கூடாது".

காத்தவராயன் தலையசைத்தான். முகம் கவலையும் பதற்றமுமாக இருந்தது.

ஏய்டன் நிலைகொள்ளாமல் தன் சப்பாத்துகளால் தரையைத் தட்டிக்கொண்டே இருந்தான். என்னசெய்வதென்று யோசித்தபோது சிறிய வாசல்வழியாக வெளியேற முயன்று முட்டிமோதி இறுகி நின்றுவிடும் பன்றிக்குட்டிகளைப்போல பலசிந்தனைகள் கிளம்பி செயலிழந்து நின்றன. நேரம் மலைப்பாம்புபோல மெல்ல நெளிந்து சென்றது.

உள்ளே நாற்காலிகள் அசையும் ஒலி. கனைப்பும் பேச்சொலியும். பின்பு பார்மர் வெளியே வந்தார். அவரது முகத்தைக் கண்டதும் ஏய்டன் எல்லாவற்றையும் புரிந்து கொண்டான்.

"என்ன மிஸ்டர் பார்மர்?" என்றான் தாழ்ந்த குரலில்.

"நடைமுறையில் இப்போது இந்தக் கட்டிடமேகூட அவருக்குச் சொந்தமானது" என்றார் பார்மர் சுருக்கமாக.

ஏய்டன் என்ன சொல்வதென்று அறியாமல் அப்படியே பார்த்தான். முரஹரி அய்யங்கார் உள்ளிருந்து கைகளில் ஒரு பெரிய கோப்புடன் வருவதைக் கண்டான். அவர் தன் இடது கண்ணில் ஒற்றைக்கண்ணாடியை மாட்டி அந்தக் கோப்பை வாசித்துக்கொண்டே வந்தார்.

அவர் வந்து நின்றபடி தன் வண்டிக்காரனை கைநீட்டி அழைத்தார். அவர் தமிழில் சொன்னதை அவன் உள்ளிருந்து ஒரு பெரிய கட்டு கோப்புகளைத் தலைமேல் தூக்கிக் கொண்டு சென்று ஃபீட்டனில் வைத்தபோது ஏய்டன் புரிந்து கொண்டான்.

முரஹரி அய்யங்கார் வந்து அவன் முன் அமர்ந்தார். கோப்புகளை அருகே இருந்த முக்காலிமீது வைத்து அவனைநோக்கி சீரான பற்களைக் காட்டி புன்னகைசெய்தார்.

"நான் முடிவை மிஸ்டர் பார்மரிடம் சொல்லிவிட்டேன். இந்தக் கட்டிடம் என் ஆளுகைக்குக் கீழே இருக்கிறது. என் சொந்த இடத்தில் என் விருப்பம் இல்லாமல் இவர்கள் இருக்கிறார்கள்."

ஏய்டன் சொல்ல வந்ததை அவர் கையைக் காட்டித் தடுத்தார் "அவர்கள் என் வேலையாட்கள் இல்லை. அதை நான் அறிவித்துவிட்டேன். என்னுடைய இடத்தில் இருந்து இவர்களை உடனடியாக அகற்றித்தரவேண்டும் என்று நான் உங்களுக்கு அதிகாரப்பூர்வமாக ஒரு புகார்மனு கொடுக் கிறேன்"

"மிஸ்டர் அய்யங்கார்"

"என்னுடைய சொத்தையும் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டியது மாட்சிமை தங்கிய பேரரசியின் அதிகாரத்தின் பொறுப்பு. நீங்கள் முடிவெடுக்கலாம். இல்லாவிட்டால் உங்களுக்கு மேலே இருப்பவர்கள் முடிவெடுக்கலாம்" முரஹரி அய்யங்கார் புன்னகையுடன் ஒரு காகிதத்தை அவனிடம் நீட்டினார் "எனக்காக மிஸ்டர் பார்மர் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார். இதை நீங்கள் பெற்றுக்கொண்டதற்கான ரசீது எனக்குத் தேவை"

"மிஸ்டர் அய்யங்கார். நான் இதை வாங்கிக் கொள்கிறேன். இதற்கான ரசீதை உங்களுக்கு அளிக்கிறேன். ஆனால் இதற்கான அவசியமே இல்லை. நான் இவர்களை இப்போதே கலைந்துபோகச்சொல்கிறேன். ஒரே ஒரு விஷயம் மட்டும் செய்தால் போதும். இங்கே இவர்களுடன் பணியாற்றிய ஒரு தொழிலாளர் இறந்திருக்கிறார். அந்தத் தொழிலாளரின் கொலையை பிரிட்டிஷ் அரசு விசாரிக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கையை நீங்கள் எழுதிக்கொடுங்கள். விசாரிக்கிறேன் என்று நான் அதில் ஒரு குறிப்பு எழுதுகிறேன். அதை இங்கே அறிவிக்கிறேன். அவர்கள் கலைவார்கள்"

"கொல்லப்பட்டவர்கள் என்னுடைய தொழிலாளர்கள் அல்ல"

"மிஸ்டர் அய்யங்கார், இது ஒரு மோசமான பிடிவாதம். சரி, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று நான் சொல்கிறேன். நீங்கள் அதை ஆமோதித்துப் பேசாமல் நின்றால் போதும்"

"காப்டன், சட்டபூர்வமாகச் சொல்கிறேன். செத்தவர்கள் என் ஊழியர்கள் அல்ல. நடைமுறைரீதியாகச் சொல்கிறேன். ஒரு தீண்டப்படாத தொழிலாளி கொல்லப்பட்டதற்கு விசாரணை வரும் என்றால் என்னுடைய நிர்வாக ஊழியர்கள் மனம் தளர்வார்கள். அவர்களின் தன்னம்பிக்கையும் ஊக்கமும் இல்லாமலாகும். அவர்களால் அதன்பின் இந்தக் கும்பலைக் கட்டுப்படுத்தமுடியாது. நான் இன்று ஏராளமான ஊழியர்களைக்கொண்டு பெரிய வேலைகளைச் செய்ய வேண்டிய

நிலையில் இருக்கிறேன். இச்சூழலில் என் நிர்வாகிகளின் கட்டுப்பாடு தளர்வதை நான் விரும்பவில்லை"

ஏய்டன் சொல்ல வருவதைக் கையால் தடுத்து முரஹரி அய்யங்கார் சொன்னார் "கவனியுங்கள் காப்டன், அச்சத்தால் மட்டும்தான் இந்த பெரும் கூட்டத்தை நாங்கள் ஆட்சி செய்கிறோம். அந்த அச்சம் அகன்றால் நாங்கள் இதன்மேல் அமர்ந்திருக்கமுடியாது. இதோ இந்த எதிர்ப்பு சாதாரண விஷயம் அல்ல. மேல்சாதியையும் அரசாங்கத்தையும் எதிர்க்க முடியும் என்று இவர்கள் முதல்முறையாகக் கற்றுக்கொண் டிருக்கிறார்கள். இது வனவிலங்குக்கு முதல் ரத்தருசியைக் காட்டுவதுபோல. இதை இப்படியே விட்டால் பின் எவராலும் கட்டுப்படுத்த முடியாது. இது உடனடியாக நசுக்கப்பட வேண்டும்."

அவரது முகம் தீ பிரதிபலிக்கும் பித்தளைப்பாத்திரம் போலச் சிவந்திருப்பதை ஏய்டன் கண்டான். அவனால் எதுவும் சொல்லமுடியவில்லை.

சட்டென்று காத்தவராயன் தன் கைகளைக் கூப்பியபடி முன்னகர்ந்தான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் மெல்லிய கசிவாக இறங்கியது. தமிழில் கெஞ்சலாக ஏதோ சொன்னான். முரஹரி அய்யங்கார் அப்போதுதான் அவனைக் கவனித்தார். "நீ யார்?" என்றார்.

"இவர்களின் தலைவன்" என்றான் ஏய்டன்.

"ஓ நீதானா அது?" அய்யங்கார் அருவெறுப்புடன் சட்டென்று பின்னால் நகர்ந்தார். அவனை நேரிடையாகப் பார்க்காமல் சுவரைப் பார்த்துக்கொண்டு கூச்சலிட்டார் "டேய், எப்படி நீ இந்தத் திண்ணைமேல் ஏறினாய்? எப்படி நீ என் முகத்தைப் பார்த்துப் பேசினாய்? வெள்ளை உடையணிந்தால் உன் சாதியை நீ மறக்கலாம். நான் மறக்க முடியாது. போ. கீழே போ."

"தயவுசெய்து. தயவுசெய்து எங்களை மனிதர்களாகப் பாருங்கள். நாங்கள் செத்து அழிந்துகொண்டிருக்கிறோம்" அது

காத்தவராயனின் குரல்தானா என்றே ஏய்டனுக்கு வியப்பாக இருந்தது. ஒரு மனிதன் இன்னொருவன் முன் அந்த அளவு சிறுமையும் தாழ்மையும் கொண்டு நிற்பதை அவன் கண்டதே இல்லை.

"டேய் நாராயணா, என்ன செய்கிறாய் நீ? இவனெல்லாம் என்னைப் பார்த்துப்பேசி என்னை அசுத்தமாக்க நீயா அனுமதித்தாய்? டேய், இவன் எப்படி இந்த வளாகத்துக்குள் தலைப்பாகையுடன் நுழைந்தான்?" என்று முரஹரி அய்யங்கார் உடல்பதற உடைந்த குரலில் கூச்சலிட்டார். நாராயணன் ஏய்டனை நோக்கியபின் தயங்கினான்.

"நான் அவனை அனுமதித்தேன் மிஸ்டர் அய்யங்கார். அவன் அவனுடைய மக்களின் பிரதிநிதி. மாட்சிமை தங்கிய மகாராணியின் பிரஜைகள்தான் அவர்களும்" என்றான் ஏய்டன்.

"நீங்கள்தான் இந்த நீசர்களை வளர்த்துவிட்டீர்கள். இந்தச் சேற்றுப்புழுக்களைச் சாலையில் கொண்டுவந்து பரப்பினீர்கள். ஆனால் கடவுளுக்கு ஒரு நீதி இருக்கிறது. அதனால்தான் இந்தப்புழுக்களைக் கொன்றே அழிக்கிறார். இந்தக் கோடை முடியும்போது இந்த மண்ணில் இந்த நீசர்கள் எவ்வளவு தேவையோ அவ்வளவு மட்டும் எஞ்சியிருப்பார்கள். பிரிட்டிஷ் மகாராணியைவிடக் கடவுள் பெரியவர். அரசாணையை விடக் கடவுளின் ஆணை பெரியது. பார்க்க வேண்டுமா? போய்ப்பாருங்கள். செங்கல்பட்டிலும் காஞ்சீபுரத்திலும் சென்று பாருங்கள். இந்த நீசர்கள் குப்பைக்குவியல் போலச் செத்துக்கிடப்பதைப் பாருங்கள். கடவுள் யாரென்று தெரியும்"

பித்தனைப்போல வெறி மிளிரும் கண்களுடன் ஏய்டனை அவர் உற்றுப் பார்த்தார். "அவர்களெல்லாம் போரில் செத்தவர்கள். கடவுளுடன் போர் செய்தார்கள் அவர்கள். கடவுள் உருவாக்கிய சட்டங்களை மீறினார்கள். இதோ நிற்கிறானே இந்த ஆள் இவன் அணிந்திருக்கும் இந்த வெள்ளை உடைக்காகவே இவன் கூட்டத்தைக் கடவுள் கொன்றழிப்பார். இவன் பிராமணனாகிய என் முன் தலைப்பாகையுடன்

நின்றதற்காகவே இவர்கள் லட்சம்பேரைக் கடவுள் மண்ணோடு மண்ணாக நசுக்கித் தேய்ப்பார். கடவுளுக்குத் தெரியும். கடல் எங்கே நிற்கவேண்டும் என்று கரையிட்ட கடவுளுக்கு மனிதர்கள் எங்கே நிற்கவேண்டு மென்று தெரியும். ஆமாம்.''

காத்தவராயன் ஈரமான கண்களுடன் முரஹரி அய்யங்கார் முகத்தைப் பார்த்தான். ஏளனத்தில் உதடுகள் மெல்ல வளைய, திடமான மெல்லிய குரலில் சொன்னான் "சர், கடவுள் இருக்கிறார் என்றுதான் நானும் நினைக்கிறேன். இல்லாவிட்டால் மாடுதின்பவர்கள் உங்களுக்கு எஜமானர் களாக வந்திருக்க மாட்டார்கள். உங்கள் பெண்களை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு அறைக்கு வெளியே நீங்கள் கூழைக்கும்பிடு போட்டு நின்றிருக்க மாட்டீர்கள்''

முரஹரி அய்யங்கார் அவர்மேல் மாபெரும் பனிச்சரிவு ஒன்று கொட்டியதுபோல உறைந்து விரைத்து வெளுத்து நின்றார். சட்டென்று அவர் கையில் இருந்த வெற்றிலைச் செல்லம் மட்டும் ஓடும் குதிரைவண்டியில் இருப்பதுபோல நடுநடுங்க ஆரம்பித்தது. மெல்ல நாற்காலியின் கையை ஒரு கையால் பிடித்தார். முகம் ஒருபக்கமாக இழுத்துக்கொண்டு அசைந்தது. அவருக்குப் பக்கவாதம் ஏதும் வந்துவிட்டதோ என்று ஏய்டன் ஒரு கணம் அஞ்சினான். அவர் அப்படியே அமர்ந்துகொண்டார். வெற்றிலைச் செல்லத்தை மார்போடு அணைத்துக்கொண்டார்.

காத்தவராயன் வேகமாக நடந்து முற்றத்தில் இறங்கி வாசல் வழியாக வெளியே சென்றான். செல்லும்போதே தன் ஆட்களிடம் வெளியே வந்துவிடும்படி கையைக் காட்டி கூத்தியபடியே சென்றான்.

முரஹரி அய்யங்கார் கிசுகிசுப்பாக "பிடி. பிடி அவனை'' என்றார். அவரால் பேசமுடியவில்லை.

நாராயணன் ஏய்டனைப் பார்த்தபடி பேசாமல் நின்றான். ஏய்டன் அவர்களை மாறிமாறிப் பார்த்தான். நாராயணனின்

பார்வை ஈட்டிநுனியை அவன்மேல் சாய்த்து வைத்தது போலிருந்தது.

முரஹரி அய்யங்கார், "இது குற்றமில்லையா? அவன் என்னை அவமதித்தது குற்றமில்லையா?" என்றார். அப்போதும் அவர் மீண்டிருக்கவில்லை. அவர் குரல் கம்மியது. தொண்டையைச் செருமி மூச்சிரைக்கச் சிதைந்த குரலில் சொன்னார் "என்னை அவன் அவமதித்தான். அந்த நீசன்." சட்டென்று அவர் விசும்பினார்.

"அவனை நீங்கள் முதலில் அவமதித்தீர்கள்." என்றான் ஏய்டன்.

முரஹரி அய்யங்கார் பற்களை இறுகக் கடித்து முறுகிய தாடையுடன் அந்தக் கூட்டத்தையே பார்த்தார். அவரது தலை மட்டும் குளிரில் ஆடுவது போல ஆடிக்கொண்டிருந்தது. பின்பு அவர் மெல்ல தளர்ந்தார். நாற்காலியின் கைகளைப் பிடித்திருந்த பிடியை விட்டு முகத்தை வருடிக்கொண்டார். முகத்தில் மிக அருவெறுப்பான எதுவோ படிந்துவிட்டதுபோல வருடினார். தேய்த்தார்.

பின்பு பெருமூச்சுடன் மீண்டார். கால்களை இலகுவாக்கி நீட்டிக்கொண்டார். அதன்பின் அவர் பேசியபோது குரல் தெளிவாக இருந்தது. "காப்டன். நீங்கள் நான் அளித்த கடிதத்துக்கு ரசீது அளிக்கவில்லை" என்றார்.

ஏய்டன் "அதை நாராயணனிடம் கொடுங்கள். நார், அவருக்கு ஒரு ரசீது கொடு" என்றான்.

நாராயணனின் கண்கள் சட்டென்று ஏய்டனின் தவிர்க்கும் கண்களைத் துழாவி ஒரு கணத்தில் சட்டென்று சந்தித்தன. சில்லென்ற ஒரு புரிதலை ஏய்டன் அடைந்தான். அவன் இப்போது பணியில் இல்லை என்பது நாராயணனுக்குத் தெரிந்து விட்டது.

நாராயணன் உடனே ஒரு காகிதத்தில் நான்கு வரியில் ரசீது எழுதி முரஹரி அய்யங்காரிடம் கொடுத்தான். முரஹரி அய்யங்கார் அதை வாங்கிக் கோப்பில் வைத்தபின் "நல்லது

காப்டன், நீங்கள் இப்போது செய்யப்போவதென்ன என்று நான் அறிந்தாகவேண்டும்'' என்றான்.

"நான் இவர்களிடம் பேசுகிறேன். இவர்கள் கலைய ஆணையிடுகிறேன்'' என்றபின் ஏய்டன் எழுந்தான். அவனுக்குச் சோர்வு உடல்முழுக்கக் கனத்தது. இந்த நாடகத்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடித்துவிட விரும்பினான்.

முற்றம் முழுக்க அரையிருள் படிந்திருந்தது. எல்லா முகங்களும் நிழல்களாகத் தெரிய, வெண்சுவர்கள் மட்டும் மேடுபள்ளங்களும் விரிசல்களும் கூடத் தெளிவாகத் தெரியும்படி துல்லியம் கொண்டிருந்தன. வானத்தில் அடர்சிவப்புத் தீற்றல்கள் அணைந்துகொண்டிருக்கும் சூளைபோலத் தெரிந்தன. முற்றத்தின் செங்கல்பரப்பின் சிவப்பு மேலும் அழுத்தம் கொண்டுவிட்டிருந்தது. மின்னும் கண்கள் இருளுக்குள் அவனைப் பார்த்தன. கடற்காற்றில் சில உடைகள் படபடத்தன. மௌனத்தில் கடலோசை வந்து மோதி நிறைந்தது.

ஏய்டன் இரு கைகளையும் தட்டினான். அந்த ஒலி பட்டு அனைத்து உடல்களும் மெல்லிய விதிர்ப்புடன் அசைவது போலத் தெரிந்தது. அமைதியான குளத்தில் விழுந்த கல்போல. மறுகணம் நீரில் இருந்து பெரிய மீன்கள் கொப்பளித்தெழுவது வீரர்கள் அனைவரும் சட்டென்று எம்பி குதிரைமேல் ஆரோகணித்தனர். இரண்டாள் உயரமான குத்தீட்டிகளைச் செங்குத்தாக பிடித்துக்கொண்டார்கள். அவற்றின் உலோக முள் நுனிகள் மாலைவெயிலின் சிவந்த ஒளிப்புள்ளிகளைச் சூடியிருந்தன. அந்த அசைவுகள் அமர்ந்திருந்த தொழிலாளர் உடல்களில் பிரதிபலித்தன. உடல்கள் அதிர்ந்துகொண்டிருப்பது போலப் பட்டது. அந்த உடல்கள் ஒரு சேற்றுநீர்ப் படலம்போல, உள்ளே ஒருபயங்கர மிருகம் மூழ்கிக் காத்திருப்பதுபோல.

வாசலருகே காத்தவராயன் நின்று பல்லைக் கிட்டித்தபடி திரும்பத் திரும்ப எதையோ சொல்லிக் கொண்டிருந்தான். அவர்களை அழைக்கிறான் என்று தோன்றியது. கருப்பனை கூப்பிடுகிறானா?

ஏய்டன் உரக்க "எல்லாரும் கவனியுங்கள். நான் இந்தவழக்கை முறையாக விசாரிப்பதாக இருக்கிறேன். குற்றவாளிகள் ஒருவாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப் படுவார்கள். அனைவரும் உடனடியாகக் கலைந்து செல்லுங்கள்" என்றான். நாராயணன் அதைத் தமிழில் சொன்னான்.

மொத்தக்கூட்டமும் எந்த எதிர்வினையும் இல்லாமல் கருங்கல்லால் ஆன முந்நூறு சிலைகள் போல அமர்ந்திருப் பதை ஏய்டன் கண்டான். அவனுக்குள் ஆழத்தில் ஒரு துணுக்குறல் நிகழ்ந்தது. "நான் உங்கள் தலைவரிடம் பேசி விட்டேன். அவரும் ஒத்துக்கொண்டுவிட்டார். அவரிடம் நீங்கள் கேட்கலாம். எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள் கிறோம். நீங்கள் உடனே கலைந்துசெல்லவேண்டும்" என்றான்.

அப்போதும் எந்த அசைவும் ஏற்படவில்லை. அத்தனை கண்களும் வெண்சிப்பிகள் போல அவனைப் பார்த்து நிலைத்திருந்தன. அவன் சொற்கள் மாலையிருட்டுபரவிய காற்றில் அலைந்து உதிர்ந்தன.

ஏய்டன் குரல் தழைந்தது "கவனியுங்கள். நானும் உங்கள் தலைவரும் பேசிவிட்டோம். அவர் உங்களிடம் கலைந்து போகும்படி சொல்கிறார்"

காத்தவராயன் கைகளை வீசித் தமிழில் உரக்க கூவினான். கூட்டம் அவனையும் அன்னியனைப் பார்ப்பது போலப் பார்த்தபடி அசையாமல் அமர்ந்திருந்தது.

ஏய்டன் குரல் அதிகாரத் தோரணையை இழந்தது "நான் உங்களுக்காகப் பேசக்கூடியவன். அது உங்களுக்கே தெரியும். இப்போது நிலைமை நம் கட்டுப்பாட்டில் இல்லை. இதற்குமேல் நீங்கள் போராட முடியாது. போதும். நடவடிக்கை இருக்கும் என்று நான் உறுதி சொல்கிறேன். குற்றவாளிகளைப் பிடித்துத் தண்டிப்போம்"

காத்தவராயன் தமிழில் ஏதோ சொல்லி உரக்க ஆணை யிட்டான். கருப்பன் ஒரு கணம் அவனைப்பார்த்தபின் தரையில் அமர்ந்தபடியே உரத்த குரலில் காத்தவராயனிடம் நிறுத்தச்

சொல்லி கத்தினான். காத்தவராயன் திகைத்த கண்களுடன் அப்படியே நின்றான்.

கருப்பன் ஏய்டனை நோக்கிச் சொன்னான் "சர், குற்றவாளிகளைத் தேட வேண்டியதில்லை. அவர்கள் அதோ உங்களுக்கு வலப்பக்கம் நின்றிருக்கிறார்கள். நீலமேகம், வரதராஜு. இருவரும்தான் கொலைசெய்தவர்கள். பிடியுங்கள்"

ஏய்டன் திணறினான். கூட்டம் முழுக்க ஒரு பெரும் வனவிலங்கின் உறுமல் போன்று ஒலி எழுந்தது. ஏய்டன் கையைத் தூக்கி "நான் விசாரிக்கிறேன். ஆதாரம் கிடைத்ததும் கைதுசெய்கிறேன்" என்றான்.

"என்ன ஆதாரம்? கோடரியால் அவர்களின் பின் மண்டையில் அடித்துக்கொல்வதைக் கண்ணால் கண்ட இரண்டுபேர் போதுமா?" என்றபடி கருப்பன் எழுந்தான். "இதோ இந்த இரண்டுபேரும்தான் கண்ணால் கண்ட சாட்சிகள்." இரண்டுபேரைச் சுட்டிக்காட்டினான். "சுடலையும் கண்ணுச்சாமியும் கண்டிருக்கிறார்கள். போதுமா?"

ஏய்டன் சிலகணங்கள் பேசாமல் நின்றான். பின்பு சட்டென்று தலைக்கேறிய சினத்துடன் "இனிமேல் உங்களிடம் பேச்சு இல்லை. உடனே கலைந்து செல்லுங்கள். உடனே" என்று உடைந்த குரலில் கூச்சலிட்டான்.

"முடியாது சார். எங்களுக்கு நீதி வேண்டும்" என்றான் கருப்பன். "கலைந்து செல்லும்படி எங்கள் தலைவரும் சொல்லிவிட்டார். ஆனால் நாங்கள் நீதி கிடைக்காமல் கலைய மாட்டோம்"

"கலைந்து போங்கள். கலைந்து போங்கள்" என்று ஏய்டன் கூச்சலிட்டான்.

கருப்பன் தலையை அசைத்தபடி அமர்ந்துகொண்டான். மொத்த கூட்டமும் பெரிய முரசின் கார்வை போல முழங்கியது. அந்தச் சொல்லற்ற ஒலி திட்டவட்டமாக அனைவரிடமும் பேசியது.

"நான் தாக்குதலுக்கு ஆணையிடுவேன். தாக்கச் சொல்வேன். கலைந்து செல்லுங்கள்" ஏய்டன் கைகளை வீசியபடி கூவினான். அவனுடைய குரலில் இருந்த வேகம் அவனுக்கே ஆச்சரியமளித்தது. ஆனால் அவர்கள் அவன் கண்களையே கூர்ந்து நோக்கியபடி இறுகி அமர்ந்திருந்தார்கள்.

செயலற்ற கோபம் உடலெங்கும் துடிக்க அந்தக் கல்லுடல்திரளை ஏய்டன் பார்த்தான். 'ஆம், இது வேறு. நான் என் சைகைகளுக்குக் கட்டுப்படும் வீட்டுமிருகம் என இதை நினைத்தேன். இது நமக்கு இன்னும் என்னவென்றே தெரியாத தோர் பேராற்றல். முதல் தளை மட்டும் அறுந்துவிட்டால் எதற்கும் அடங்காமல் பேருருவம் கொண்டு எழும் விசை இது. இதை என்னைவிட நன்றாக முரஹரி அய்யங்கார் அறிந்திருக் கிறார். அவரது அச்சமும் பதற்றமும் அதனால்தான். ஆம் அவருடைய ஆன்மாவுக்குத் தெரியும் இது என்ன என்று. ஏன் என் ஆன்மாவுக்கே தெரிந்திருக்கும். அவர் இதை அஞ்சுவதும் நான் இதைக் கெஞ்சுவதும் ஒரே காரணத்தால்தான். ச்சே என்ன எண்ணம் இது! நான் அஞ்சவில்லை. நான் புயல்கொந்தளிப் பையும் எரிமலைக் குமுறலையும் காதலிப்பவன். நான் ஷெல்லி. முட்டாள், நீ ஷெல்லியைக் கொண்டு உன் மனசாட்சி மீது மண்ணை அள்ளிப்போட்டுக்கொண்டிருக்கிறாய். ஷெல்லி உனக்கு ஒரு புளித்து நுரைத்த மது மட்டுமே. என்ன நினைப்புகள்! நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் இங்கே?. கடவுளே, இந்த பிரம்மாண்டமான உயிர்க்குவையை நான் இப்போது என்னசெய்வேன்? எப்படி இதை இங்கிருந்து அகற்றுவேன். இதற்கு என் சொற்கள் புரியவில்லை. சட்டென்று இது ஒரு கரும்பாறையாக மாறிவிட்டதுபோல. என்ன செய்வேன். இதன் உக்கிரமான கரியமௌனத்தை என்ன செய்வேன்! என் தலையை இதன்மேல் அறைந்து உடைக்கவா. கடவுளே நான் என்ன சிந்திக்கிறேன்'.

சூட்டுக்கோல் தீற்றிச்சென்றதுபோல ஒரு நினைப்பு அவனுள் ஓடி அவனைத் துடிக்கச்செய்தது. 'இந்தக் கூட்டத்தின் கண்களுக்கு இந்த கிழட்டு பிராமணனும் நானும் ஒன்றுதான். இந்த இந்திய சாதியமைப்பும் பிரிட்டிஷ் அதிகாரமும்

ஒன்றுதான். இந்த கொலைமிருகம் கிழித்துக் குதறி உண்ணும் போது எங்கள் அனைவரின் தசைக்கும் குருதிக்கும் ஒரே சுவைதான், எரிச்சலும் ஆத்திரமும் கொண்டு அவன் உடம்பு விதிர்த்தது. வாளை உருவியபடி அந்தக்கூட்டத்தில் புகுந்து மூர்க்கமாக அந்தத்தசைகளை வெட்டித்தள்ள வேண்டும்போல உணர்ந்தான். 'ஏசுவே, மீட்பரே, நான் என்ன நினைக்கிறேன். இது நான்தானா?'

தன்னுள் கொந்தளித்தோடும் எண்ணங்களின் விசை தாளாமல் ஏய்டன் தள்ளாடினான். அந்த வேகத்தில் காலம் இழுபட்டு விரிந்துவிட்டது. கண்முன் பெருகிக்கிடந்த முகங்கள் மிகமிக மெல்ல இமைத்தன, உதடுகள் மிக மெல்லச் சுருங்கி விரிந்து ஏதோ ஒலிகளை எழுப்பின. தலைகள் மிக மெல்லத் திரும்பின. அப்பால் நின்ற மரங்களில் காற்றுபட்ட இலைகள் கனவுபோல மெல்ல மெல்ல அசைந்தன. குதிரைகளின் காதுகளும் குஞ்சிரோமங்களும் நீருக்குள் அசைபவை போல மெல்ல அசைந்தன. 'என்ன இது? ஏசுவே இது என்ன? இது நானறியாதது. இது இந்த உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பேராற்றல். இது மன்னர்களின் அந்தரங்கமான கொடுங்கனவுகளில் மட்டும் கண்விழிக்கும் ராட்சதன். தூங்கும் ராணுவங்கள் மீது மெல்லப் பரவி மூடும் கருநிழல். உலகின் ஏதோ பாதாளத் துளையில் இருந்து ஊறிக்கிளம்பி எங்கும் பரவ ஆரம்பித்திருக்கும் கொடும் விஷம். மதமிளகிய யானையுடன் உரையாட முயலும் பாகன் போல நான் இதோ நின்று கொண்டிருக்கிறேன். நான் நன்கறிந்த பழகிய மிருகம் அதனுள் இருந்து விலகிச்சென்று இன்னொன்று வந்து குடியேறியிருப்பதைச் சிறிய கண்கள் வழியாகக் காண்கிறேன். காதுகளும், கால்களும், துதிக்கையும் எல்லாம் அப்படியே இருக்க ஆன்மா மட்டும் இன்னொரு மிருகத்துக்குரியவையாக ஆகிவிட்டதைக் காண்கிறேன். ஆனாலும் நம்பிக்கையுடன் பேசிக்கொண்டிருக்கிறேன்'.

"தயவுசெய்து கலைந்து செல்லுங்கள். நான் விண்ணப்பிக்கிறேன். உங்கள் நலன்களை நான் கவனித்துக் கொள்கிறேன். தயவுசெய்து." தன்னுடைய குரலை ஏய்டன் வெகுதொலைவில்

கேட்டான். என்னவென்று தெரியாத ஓர் மர்ம உலோகம் போல உறுதியும் குளுமையுமாகத் தன்முன் நின்ற அந்தக்கூட்டத்திடம் கெஞ்சிக்கொண்டிருக்கும் அவனை அவனே வெகுதொலைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தான். "தயவுசெய்து. உங்கள் தலைவரும் நானும் பேசிக்கொள்கிறோம். கலைந்து செல்லுங்கள்." நுழைவாயிலுக்கு அப்பாலிருந்து காத்தவராயன் இரு கைகளையும் வீசி தமிழில் ஏதோ சொல்லிக்கொண் டிருந்தான். கூட்டத்தில் இருந்து கலைந்த மெல்லிய குரல்கள் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தன.

ஒரு சில கணங்களுக்கு முழுமையாக தோற்கடிக்கப்பட்டு ஒரு சிற்றுயிராக உணர்ந்தபடி செயலற்று அங்கே நின்றான் ஏய்டன். பின்னர் அவனுள் பீரிட்டு வந்த வேகத்தை அவன் தன் வாழ்நாள் முழுக்க கணம் கணமாக, சொல் சொல்லாக ஆராய்ந்ததுண்டு. ஒருபோதும் அதைப்புரிந்து கொண்ட தில்லை. அவனுடைய அறிதலின்கணம். இல்லை அறிய முடியாமையைச் சந்திக்கும் உச்சத்தருணம். அறியவே முடியா தென அறிவதே உச்ச அறிவா என்ன? அது ஒருவகை ஆங்காரம். கட்டுக்கடங்காத ஒரு வெறி. ஏன்? ஏன் அது அக்கணம் எழுந்தது? அது அகங்காரம் சீண்டப்பட்டதன் விளைவா? மிதிபட்ட பாம்பு போல. சூடுபட்ட குதிரைபோல . அவனுள் உறையும் வெள்ளையனின் ஆணவம்தானா அது? அந்தக் கறுப்புமக்கள் முன் தோற்றுநிற்கும் கணத்தில் பல்லாயிரமாண்டுக்காலம் தோல்நிறத்துக்காக அகங்காரம் கொண்ட அவன் மூதாதை யரின் ஆவிகள் எல்லாம் அவனுள் ஒருங்குகூடினவா?

'இல்லை. அதில்லை. அந்தக்கணத்தில் எழுந்தது எந்தப் போர்வீரனுக்குள்ளும் உள்ள இயல்பான தன்னகங்காரம்தான். எதிர்ப்பைச் சந்திக்கும்போது சீறி எழுவது அவனுள் உள்ள பயிற்றுவிக்கப்பட்ட ராணுவமனம். அது ஓர் ஆயுதம். கைகளில் கிடைக்கும் எல்லா ஆயுதங்களும் அந்த அக ஆயுதத்தின் புறவெளிப்பாடுகள் மட்டுமே. என் மனம் ராணுவப் பயிற்சியால் வடித்துக் கூர்தீட்டப்பட்டு விட்டிருந்தது. நான் ஒரு கூச்சிதமான துப்பாக்கி. விசையில் கைபட்டதும் வெடித்தேயாக

வேண்டியவன். ஆம், நான் அதுதான். அங்கே உலகின் எந்தப் படைவீரன் நின்றிருந்தாலும் அதைத்தான் செய்வான். ஆமாம்'.

'இல்லை, நான் அதைச்செய்யவில்லை. என் உடல் செய்தது. என் உடல்செய்வதை என் அகம் திகைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. இல்லை. என் உடலல்ல. என் கை. என் கை அதைச்செய்தது. அதை மட்டும் ஏதோ இருண்ட தேவதைகள் எடுத்துக்கொண்டுவிட்டன. அது என்னுடைய கை அல்ல. அது மானுடத்தைச் சுழற்றும் கருணையற்ற விதிகளின் கை. அது கடவுளின் சாத்தானின் அல்லது அவர்களைத் தீராமோதலில் வைத்திருக்கும் இன்னொரு பெருவிதியின் கை. இல்லை. என் கை என்னசெய்தது? நான் ஒன்றுமே செய்யவில்லை. நான் செய்தவை வேறு. நிகழ்ந்தவை வேறு. நான் அங்கே இல்லை. அதற்கும் எனக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இல்லை. அதில்லை. ஓ! கர்த்தரே மீட்பரே, இந்த மனிதனுக்குள் உறைவதென்ன என்று எப்போதாவது அவன் அறிந்துகொள்ள முடியுமா?'

என்ன நடந்தது என்று மறுகணம் முதல் துணுக்குறலுடன் எண்ணிக்கொண்டான் ஏய்டன். உள்ளூர பொங்கி எழுந்த ஒரு மூர்க்கமான வேகத்தில் அவன் ஒரு அடிமுன்னால் வைத்து கையை மேலே தூக்கினான். அக்கணத்தில் அவன் தொண்டையி லிருந்தே வெடித்தெழுவதுபோல நாராயணனின் குரல் கேட்டது. "கம்பெனி சார்ஜ்!"

'நானா? நானா கூவினேன். ஏசுவே, அது என் குரலல்ல. ஏசுவே! இல்லை. இல்லை. வேண்டாம். இல்லை. ! நானில்லை அது'. அக்கணத்தில் அவன் இரண்டாகப் பிளந்து பிரிந்தான். ஒருவன் அவனுள் ஓடும் எண்ணங்களை அள்ளிப்பிடிக்கப் பரிதவித்தான். இன்னொருவன் கண்முன் ஒரு கொடுங்கனவு போல நிகழ்ந்துகொண்டிருப்பவற்றில் விழிபிரமித்துச் சொல்லிழந்து நின்றிருந்தான்.

குதிரைகள் கடிவாளம் இழுபட்டு முன்கால்களைத் தூக்கின. பின்பு கனைத்தபடி முன்னால் பாய்ந்து அந்தக் கூட்டத்தின் கரியதலைகளுக்கு மேல் குளம்புகள் பெரிய கற்கள் போல சிதறித்தெறித்துப்பறக்கப் பாய்ந்து சென்றன. மனிதச் சதைமீது

மனிதஎலும்புகள் மீது மனித ஓலங்கள்மீது மனிதக்கண்ணீர்மீது அவை பாய்ந்துசுழன்றன. வீரர்கள் உரக்க அலறியபடி, ஈட்டித்தண்டுகளால் சுழற்றிச்சுழற்றி அடித்தபடி, குதிரைகளில் சுற்றிச்சுற்றிப் பாய்ந்தனர். சட்டென்று ஏய்டன் அந்த வீச்சத்தை உணர்ந்தான். குருதியின் பச்சைவாசனை. அந்த அரை இருளில் சிதறித்தெறிக்கும் ரத்தத் துளிகளை அவனால் உணரமுடிந்தது. குதிரைக்கால்களில் இருந்தும் ஈட்டித்தண்டுகளில் இருந்தும் வீசப்பட்டு அவை காற்றில் பறந்து சுவர்களில் அறைபட்டுத் தயங்கிக் கசிந்து கீழிறங்கி வழிந்தன.

ஏய்டன் அலறியபடி எழுந்து நாராயணனின் சட்டையைப் பிடித்தான் "வேண்டாம். நிறுத்தச்சொல். வேண்டாம். முட்டாள்." கண்முன் நிகழ்ந்த அந்த மிருகமனித உடல்களின் கொந்தளிப்பை நோக்கி கைகளை வீசியபடி அவன் குதித்தான். தொண்டை நரம்பு புடைக்க வாய் கிழிபடுமளவு திறந்து கூச்சலிட்டான். "வேண்டாம்! வேண்டாம். நிறுத்துங்கள். வேண்டாம்" நாராயணன் பியூகிளை எடுத்து ஊதினான். அந்த இடத்துக்கு சம்பந்தமில்லாத ஒரு குருட்டுப் பறவை வேறெதையோ கண்டு வேறெதையோ எண்ணிப் பாடுவதுபோல பியூகிள் அதன் கூரிய இசைவரியை ஒலித்தது. குதிரைகள் கடிவாளம் இழுபட்டு நின்றன. வேகம் மட்டுப்படாமல் அவை தத்தளித்து முன்னும்பின்னும் கால்வைத்தன. ஓரிரு குதிரைகள் கனைத்தன.

குதிரைக்குளம்புகளுக்குக் கீழே மிதிபட்ட சேறுபோல கரியமனித உடல்கள். மிதிபட்டவை. மிதிபடுவதற்காகவே கடவுளால் படைக்கப்பட்டவை. இந்த பூமிமீது குரூரமான ஆபாசமான நாடகமொன்றை நடத்தி வேடிக்கை பார்க்கும் அந்தக்கொடூரனின் கண்முன் அவை குவிந்து கிடந்தன. கைகளும் கால்களும் நெளிவுகளுமாக. சதையும் ரத்தமும் மலமும் மூத்திரமுமாக. 'போதுமா? இதோ உன் முன் கிடக்கிறது. பார்த்துச் சிரி கேடுகெட்டவனே. அள்ளி அள்ளித்தின்னு பழிகாரனே. உன்னால் நானும் படைக்கப்பட்டேன் என்பதற்காக நான் என் கழுத்தை அறுத்துக்கொள்வேன்'. ஏய்டன் தன் உடைவாளை உருவினான். ஆனால் அது பெரும்கனமாக

இருந்தது. அதை இழுத்த வேகத்தில் அவன் முன்னால் சரிந்து விழுந்தான். இருட்டு பசையாக இருந்தது. ஒரு பிரம்மாண்டமான சிலந்திவலையாக இருந்தது. பசையில் அழுந்தி, வலையை அறுத்து அவன் மூழ்கி மூழ்கி முன்னால் சென்று கொண்டிருந்தான்.



# 12

ஏய்டன் கண்விழித்தபோது சில கணங்கள் இருட்டைத்தான் பார்த்தான். தூரத்திலிருந்து ஒரு சாரட் வண்டியின் விளக்கு அவனை நெருங்கி நெருங்கி வந்தது. ஆனால் வண்டியின் சக்கரஓசையும் மணியோசையும் தூரத்திலேயே நின்றுவிட்டன. ஒரு கணத்தில் எல்லா நினைவுகளும் ஒட்டுமொத்தமாக அவன்மேல் பெய்ய அவன் திடுக்கிட்டு எழுந்தமர்ந்தான். தன் உடம்பு நடுங்கிக் கொண் டிருப்பதை உணர்ந்தான். 'காய்ச்சல் வந்திருக்கிறதா? இல்லை'. ஆனால், உடம்பு அதன்போக்கில் நடுங்கிக்கொண்டிருந்தது. கைகளைக் கால்சட்டையின் பைக்குள் விட்டுக்கொண்டான். 'சீருடைகளுடன் தூங்கியிருக்கிறேன். தூங்கினேனா? அது சாரட் விளக்கு அல்ல. கூரையிலிருந்து கம்பியில் தொங்கும் விளக்குதான். வெளியே படைகளின் ஓசை. வண்டிகளின் சக்கர ஓசை. இது என் அலுவலகம்'.

ஏய்டன் எழுந்துகொண்டான். கால்கள் பலமிழந்து நிற்கமுடியாமல் தள்ளாடிச் சுவரைப்பற்றிக்கொண்டான். சிலகணங்கள் கண்களை மூடித் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டபின் கண்களைத் திறந்தான். உருகும் பாரஃபின் மணம். அந்தரங்கமான வாசனை அது. எழுத்துக்களின், புத்தகங்களின், கவிதையின் வாசனை. இப்போது இடமும் சூழலும் துல்லியமாக மனதுக்குள் வந்தன. எண்ணங்களின் ஒழுங்கு சீராகியது. என்ன

வலி? நெற்றி புடைத்திருந்தது. தொட்டபோது ஊமைவலி தெரிந்தது. கால்சட்டைக்குள் இருந்து வெளியே வந்து கிடந்த சட்டையை ஒழுங்குசெய்தபடி மெதுவாக நடந்தான்.

அவனுடைய அலுவலக அறையில் மேஜைமேல் ஒரு பாரஃபின் முட்டைவிளக்கு எரிந்தது. கூரையிலிருந்து பெரிய பாரஃபின் விளக்கு தொங்கியது. அதன் அடிப்பகுதி நிழல் தரையில் ஒரு பெரிய தொட்டிநீர் போல விழுந்துகிடக்க அந்த செவ்வொளியின் சுவரில் தூண்களின் நிழல்கள் விழுந்து மடிந்திருந்தன. அவன் தன் நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஒருகணம் கண்மூடி அமர்ந்திருந்தான். வண்ணங்கள் ஒரு மஞ்சள்பரப்பில் வழிந்துகொண்டே இருந்தன. சிவப்பும் நீலமும். குமிழிகள் வெடித்தன. 'ஓசையில்லாமல் வழிந்து கொண்டே இருப்பது எது? என் ரத்தம்? என் அகம்?'

பக்கத்தில் சலனம் அறிந்து கண்களைத்திறந்தான். சாம்.

"டீ சர்?"

"விஸ்கி" என்றான் ஏய்டன். பின்பு "டீ போதும்" என்றான். சாம் திரும்பியதும் "இப்போது மணி என்ன?" என்றான்.

"நள்ளிரவு ஒருமணி தாண்டிவிட்டது சார்"

"ஓ" என்றான். உடனே நினைவுகூர்ந்ததுபோலத் தன்னுடைய பையில் இருந்து கடிகாரத்தை எடுத்து அதில் நேரம்பார்த்தான். மணி ஒன்றரை. 'என்ன நடந்தது?' மீண்டும் ஒரு நினைவலை வந்து அவனை அறைந்து சிதறடித்தது. அப்படியே எழுந்துவிட்டான். "சாம். எங்கே நாராயணன்? நாராயணன் எங்கே?"

"புதிய காப்டன் வந்திருந்தார். நீங்கள் எழுந்ததும் சொல்லி அனுப்பச் சொன்னார்" என்றான் சாம்.

"என்னுடைய தொப்பி எங்கே?" ஒரு ஏப்பம் வந்தது. அப்போதுதான் தனக்கு விஸ்கி புகட்டப்பட்டிருப்பதை ஏய்டன் உணர்ந்தான். "என் தொப்பி எங்கே? எங்கே என் தொப்பி?" என்று கூவியபடி அவன் நாற்காலியைத் தள்ளிவிட்டு எழுந்தான்.

சாம் தொப்பியைக் கொண்டுவந்து வைத்தான். அதை எடுத்தபடி அவன் கிளம்பும்போது மாக் படி ஏறி உள்ளே

வருவதைக் கண்டான். நின்றபோது கட்டிடம் படகுபோல அலைபாய்ந்தது.

மாக் சிரித்தபடி "காலைவணக்கம் காப்டன். நான் லெப். கர்னலைப் பார்க்க போயிருந்தேன். உங்கள் பதவி உயர்வை அவர்தான் சொன்னார். வாழ்த்துக்கள்"

ஏய்டன் தள்ளாடியபடி மேஜையை பற்றிக்கொண்டு திரும்ப வந்து நாற்காலியில் அமர்ந்துகொண்டான். மாக் வந்து அவன் முன் அமர்ந்தான். "எப்படி இருக்கிறீர்கள்? ஜமேதார் மாடசாமி ஒரு நல்ல வைத்தியன். ஒன்றுமில்லை என்று அவன்தான் சொன்னான்"

"மாக், என்ன ஆயிற்று? அங்கே என்ன நடந்தது? அவர்கள் "

"யாரும் இறக்கவில்லை" என்றான் மாக் "நிறைய பேருக்குக் காயம். ஆனால் எல்லாரும் உயிருடன் இருக்கிறார்கள்"

"பொய். பொய்! நானே பார்த்தேன்" என்றபடி ஏய்டன் எழ முயன்றான்.

"இறந்திருந்தால் நீங்கள் அல்லவா அதற்குப் பொறுப்பு காப்டன்? நீங்களே ஏன் உங்களுக்குச் சிக்கலை உருவாக்கிக் கொள்கிறீர்கள்?"

"நான் இல்லை. நான் ஆணையிடவில்லை" ஏய்டன் தளர்ந்து திரும்பி அமர்ந்துகொண்டான்.

"நான் நாராயணனிடம் விரிவாக விசாரித்தேன். குதிரைப்படையின் நான்கு வீரர்களிடமும் கேட்டேன். நீங்கள் தாக்கும்படி சைகை செய்தீர்கள்"

"இல்லை. நான் கையைத் தூக்கினேன்" ஏய்டன் தன்குரலையே அருவருப்பாக உணர்ந்தான்.

"அது தாக்குவதற்கான சைகை."

"இல்லை. நான் சைகை செய்யவில்லை. நான் எந்த சைகையும் காட்டவில்லை" ஏய்டன் வீறிட்டான்.

"காப்டன், காப்டன் கூவமுடியாதபடி காயம்பட்டிருக்கும்போது கட்டளையிடுவதற்கான சைகை அது. அதை நீங்கள் தெளிவாகவே செய்திருக்கிறீர்கள். இருபது முப்பது சாட்சிகள் இருக்கிறார்கள்" என்றான் மாக், தன் தொப்பியை எடுத்து மேஜைமேல் வைத்தபடி "சட்டம் சாட்சிகளை மட்டுமே பர்ர்க்கும் காப்டன்" என்றான்.

ஏய்டன் பிரமித்துப்போய் அமர்ந்திருந்தான்.

"அத்துடன் இன்னொரு விஷயம். உண்மையிலேயே நீங்கள் ஆணையிடவில்லை என்றாலும் அதை நிரூபிக்க முடியாது. நம்முடைய ராணுவம் என்பது இங்குள்ள உயர் சாதியினரின் கும்பல். அவர்கள் ஒன்றைத்தான் சொல்வார்கள்"

ஏய்டன் தளர்ந்து நாற்காலியில் தொய்ந்தான். தளர்ந்த குரலில் "மாக், ஒன்று மட்டும் கேட்கிறேன். உண்மையில் எத்தனைபேர் செத்தார்கள்?"

"எவரும் சாகவில்லை. உண்மை" மாக் புன்னகை செய்தான் "உண்மை என்றால் என்ன காப்டன்? பல உண்மைகள் உண்டு. இது என்னுடைய உண்மை. எவருமே சாகவில்லை. இதை நீங்கள் முழுமனத்துடன் நம்பித்தான் ஆகவேண்டும்" தன்னுடைய பெரிய கைகளை மேஜை மேல் வைத்துச் சாய்ந்து "நம்பவில்லை என்றால் பலர் செத்தார்கள் என்று அர்த்தம். அதற்கான பொறுப்பை நீங்கள் ஏற்றாக வேண்டும். பிரிட்டிஷ் அதிகாரிகள் தங்கள் நீதியையும் மனிதாபிமானத்தையும் நிரூபிப்பதற்காகத் தாராளமாக ஒரு இரிஷ்காரனைப் பலிகொடுப்பார்கள்"

"என்ன ஆயிற்று? மாக்" ஏய்டன் தன் தலையைப் பிடித்துக் கொண்டான் "ஓ. ஜீஸஸ்!"

"அதிகாரப்பூர்வ உண்மை இதுதான். அங்கே எதுவுமே நடக்கவில்லை. போராட்டமும் நடக்கவில்லை, அது ஒடுக்கப்படவுமில்லை. ஐஸ்ஹவுஸ் வழக்கம்போல நடந்துகொண்டிருக்கிறது. இப்போது நீங்கள் அங்கே போய்ப் பார்த்தால் ஒன்றும் தெரியாது. கடல்காற்றில் கடைசித்துளி ரத்தம்கூட உலர்ந்துபோய்விட்டது. நாளைக்காலை ஐஸ்ஹவுஸ் வழக்கம்போல விடியும். வழக்கம்போலச் செயல்படும்."

எந்த நினைப்பும் இல்லாமல் ஏய்டன் அப்படியே விழித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"அப்படியே மறந்துவிடுங்கள் காப்டன். நாம் போர்க் களங்களை அப்படித்தானே மறக்கிறோம். மரணத்தைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? இந்த நோயும் புழுதியும் படிந்த நாட்டுக்கு நாம் கிளம்பி வந்தபோதே மரணம் கூடவந்து விட்டது. ஆகவே எந்தமரணமும் நமக்கு ஒரு பொருட்டல்ல. நம்முடைய சொந்த மரணம். நம் குழந்தைகளின் மரணம். எங்கும் மரணம்தான் நிறைந்திருக்கிறது" மாக் புன்னகை செய்தான். "லண்டனில் இருந்து கிளம்பியதுமுதல் நான் போர்க் களங்களையும் கொள்ளை நோய்களையும்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னுடன் வந்த எல்லாருமே செத்து விட்டார்கள். நான் ஒரு வசதியான வரியை உருவாக்கிக் கொண்டேன். நல்லவேளை நான் சாகவில்லை. அவ்வளவுதான். எந்த மரணத்தைக் கண்டாலும் நான் அதைத்தான் நினைத்துக் கொள்வேன். மனம் முழுக்க தென்றல் வீசும். நான் சாகவில்லை. அவர்கள் செத்தார்கள், இவர்கள் செத்தார்கள், நான் இருக்கிறேன். எவ்வளவு அற்புதமான உண்மை அது. எனக்கு இன்னும் இந்த மண்ணும் வானமும் இருக்கிறது. எனக்கு இன்னும் பொழுதுகள் விடியும். எவ்வளவு மகத்தான உணர்வு இல்லையா?"

சிரித்தபடி மாக் மேஜைமேலிருந்த தொப்பியை எடுத்தான் "நாளை மறுநாள் நீங்கள் கிளம்புவதற்கான ஆணை வந்துவிடும். புதிய ஊர், புதிய மக்கள். தென்காசி கலெக்டர் கேளிக்கை களுக்குப் புகழ்பெற்றவர். அங்கே உள்ளூர் ஜமீன்தார்களின் கட்டுப்பாட்டில் அருமையான வேட்டைக்காடுகள் உள்ளன. பிளாண்டர்களின் பெண்களும் மனைவியரும் அழகானவர்கள் ஆரோக்கியத்தை மீட்டெடுங்கள். புதிய வாழ்க்கையைத் தொடங்குங்கள்"

"ஆலோசனைக்கு நன்றி"

"நான் கிளம்புகிறேன். நம்முடைய படைவீரர்களில் இன்று பணியாற்றிய அனைவருக்கும் சிறு ஊதியத்துடன் நான்குநாள் விடுமுறை கொடுத்திருக்கிறேன். பட்டுவாடா

முடிந்ததா என்று பார்க்கவேண்டும்.'' தொப்பியை வைத்தபடி மாக் கிளம்பினான்.

ஏய்டன் அவன் செல்வதையே நோக்கி அமர்ந்திருந்தான். சற்றே தொய்ந்த இடது தோளில் கைத்துப்பாக்கியின் வார். ஒடுங்கிய வயிற்றுக்குமேல் தளர்வாக கட்டப்பட்ட பெல்ட். இறுகிய தசைகளும் புடைத்த ரத்தக்குழாய்களும் காய்ந்த புல் போன்ற சிவந்த மயிர்பரவலும் கொண்ட நீண்ட கைகள். 'மாக் ஒரு உதாரண பிரிட்டிஷ் படைவீரன். சஞ்சலங்களும் கேள்வி களும் அற்றவன். எந்தத் தருணத்திலும் பிரிட்டிஷ் நீதி பற்றி நிர்வாகத்திறன் பற்றி நம்பிக்கை இழக்காதவன். பிரிட்டிஷ் இனம் உலகை ஆளவேண்டியது என்பதில் சந்தேகமற்றவன். அதற்கான வழிமுறைகள் பற்றிக் குழப்பம் அடையாதவன். ஆம், அவன்தான் சரியாக வார்க்கப்பட்ட துப்பாக்கி. நோயும் போரும் அவனைக் கொல்லவில்லை என்றால் இந்தச் சேவையில் சாத்தியமான உச்சங்களில் இருந்து ஒய்வுபெற்றுப் பல லட்சம் பெறுமான முள்ள உடைமைகளும் சேமிப்புப் பத்திரங்களுமாக இங்கிலாந்துக்குக் கப்பலேறப் போகிறவன். அவன் குழந்தைகள் லண்டனின் உயர்ந்த கல்விநிலையங்களில் படிப்பார்கள். நாகரீக மனிதர்களாக அடுத்த நூற்றாண்டுக்குள் நுழைவார்கள். அவர்களின் வரவேற்பறைகளில் அவர்களின் தந்தை கொண்டு வந்த தந்தங்களும், வெண்கலக்கலவைச் சிலைகளும், மயிற்பீலி களும் அலங்கரிக்கும். அவர்களின் வாசிப்பறைகளில் ஷேக்ஸ்பியரும், கதேயும் தொங்குவார்கள். அவர்களின் பெண்குழந்தைகள் தங்கள் தளிர்விரல்களால் மொஸாத்தையும் பீத்தோவனையும் வாசிப்பார்கள். திரைச்சீலைகள் காலை வெயிலில் ஒளிவிடும். மலர்களின் மணமும் புல்மீது வெயில்படும் வாசனையும் வீசும். அவர்களின் செந்நிறக் கூந்தல் களில் காலையொளி பொறகம்பிச்சுருள்களை உருவாக்கும். நாகரீகத்தின் பொன்னொளிர் சிகரம். மானுடம் ஆயிரமாயிர மாண்டுகளாகத் தேடித் தேடிச் சென்று கொண்டிருக்கும் இலட்சிய வாழ்க்கை. ஆம்.

முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டவனின் அமைதி. எவ்வளவு பரிபூர்ணமானது அது. அவனுடன் பேச கடவுளும்

சாத்தானும் இல்லை. அவனுடைய தனிமைபோலப் பிறிதொன் றில்லை. அவனுடைய சொற்கள் போல ஒலியோ பொருளோ இல்லாமல் வெறும் அலைகளாக ஆழத்துக்குச் சென்று படிபவை ஏதுமில்லை'.

நெடுநேரம் கழித்து அவன் மீண்டான். பெருமூச்சுடன் அசைந்தபோது அவனை மீட்டது சாம் கொண்டு வைத்த சூடான 'டீ' என்று தெரிந்தது. அதைக் குடித்தபோது சகதிப் படலமாக எண்ணங்கள் ஆழத்தில் படிந்தன. அகம் தெளிந்து தெளிந்து வந்தது. 'நான் என்ன செய்யவேண்டும்? என்ன செய்ய முடியும்? செய்வதற்கு ஒன்றே ஒன்றுதான் மிச்சமிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகளை அறிக்கையிடுவது. ஆம் என்ன நடந்தது என்பதை முழுமையாகத் தெரிவிப்பது. அரசுக்கு, செய்தித்தாள்களுக்கு, வெளியுலகுக்கு. அதை நான் மட்டுமே செய்யமுடியும். அதன் பொருட்டு முதலில் தண்டிக்கப்படுபவன் நானாகவே இருப்பேன். ஆனால் அது என் கடமை. அதற்காக நான் சிறையி லடைக்கப்பட்டேன் என்றால் என்னுடைய பிராயச்சித்தம் அது. அதன்பொருட்டு நான் துப்பாக்கி அணி முன் கண்கட்டி நிறுத்தப்படுவேன் என்றால் அதுவே என் முழுமை'.

அவன் வேகமாகக் காகிதங்களை எடுத்தான். கை விரல்களைச் சொடக்குப்போட்டபடி மைக்கூட்டை எடுத்து அதில் மைவில்லையைப் போட்டு நீரூற்றினான். அதை இருமுறை குலுக்கியபின் தொடுபேனாவை எடுத்து மையில் ஊறச்செய்து உதறினான். பேனாவுக்கு வெகுதூரத்தில் கிடந்தன சொற்கள். ஆனால் அவை அங்கே எவரோ எழுதி வைத்தவை போலக் கிடந்தன. ஒரு மைதானத்தில் பரப்பப்பட்ட கருங்கல் சின்னங்கள் போல வரிசையாகப்பரவிக் கருமையாகக் கனத்து அசைவற்றுக் காத்துக்கிடந்தன.

ஏதோ எண்ணம் வந்து அவன் தன்னுடைய கோப்புகளை எடுத்துப்பார்த்தான். தவிட்டுநிறமான தோல் உறையிடப்பட்ட மெல்லிய பலகையினாலான பெரிய கோப்பைக் கையில் எடுக்கும்போதே ஒரு மெல்லிய பதற்றம் இருந்தது. எடுத்துப் பிரித்ததுமே புரிந்தது. அவன் ஐஸ்ஹவுஸ் பற்றி எழுதிய குறிப்புகள் எதுவும் அதில் இல்லை. இருந்தாலும் அவன் மாற்றி

மாற்றித் தேடினான். ஆமாம் உண்மையில் ஐஸ்ஹவுஸ் பற்றிய குறிப்புகள், கடிதங்கள் எவையுமே இல்லை.

'எப்படி ஆழ்மனம் இதையெல்லாம் முன்னரே அறிகிறது என்று அவன் ஒருகணம் அயர்ந்தான். 'எப்படி அக்கணத்தில் தெரிந்தது அது நிகழ்ந்திருக்கும் என்று. நான் இதோ இதைச் செய்யும் நானல்லவா? நான் வேறுவேடங்களிலும் இந்த நாடகத்தில் ஆடிக்கொண்டிருக்கிறேனா? இல்லை, நான் தவறாகத் தேடுகிறேன். கைமறதியாக வேறு கோப்பில் வைத்திருப்பேன்'.

அவன் எல்லாக் கோப்புகளையும் எடுத்து பிரித்துப்போட்டுத் தேடினான். மற்ற காகிதங்கள் எல்லாமே அப்படியே இருந்தன. சட்டென்று மூச்சுத்திணறல் எழுமளவுக்குக் கொப்பளித்தேறிய கோபத்தை அடக்க நெற்றியைப்பற்றிக்கொண்டு சிலகணங்கள் இருந்தான். "சாம்! சாம்!" பின்பு எழுந்தபோது சாம் வந்து நிற்பதைக் கண்டான். அவன் நீராவிப்படலத்துக்கு அப்பால் நிற்பதுபோலிருந்தது. தன் கண்கள் மங்குகின்றனவா?

"சர்?"

"மாக் இங்கே காகிதங்களை எடுத்தாரா?"

சாம் பேசாமல் ஆனால் பார்வையைச் சற்றும் விலக்காமல் நின்றான்.

"போ" என்றான் ஏய்டன். சாம் திரும்பிச்சென்றதும் கடைசி ஆற்றலையும் இழந்து ஏய்டன் பின்னால் சரிந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டான். எண்ணங்கள் கலைந்து பறந்து மழையில் ஊறிய காகிதங்கள் போல மெல்லக் கீழிறங்கிப் படிந்தன. என்னென்னவோ எண்ணங்கள். அப்பா, அம்மா, அயர்லாந்தின் ஏரிகள், ஆப்ரிக்காவின் அழுக்கான நகரம், மலாயா கொசுக்கள், மஞ்சள் பெண்களின் தழைமணம் கொண்ட முலைகள், வெளிறிய தோலுக்குள் எலும்புகள் அசையும் மெலிந்த தோள்கள், சிவந்த பருக்கள் கொண்ட கன்னங்கள், அவர்களின் பூனைமொழி முனகல்கள், பீரங்கிகள், வெடிமருந்து, குதிரைச்சாணத்தின் நெடி, சூடான குருதி நெடி. பச்சைக் குருதிக்குத்தான் என்ன ஒரு வாசனை. அதேபோன்ற

தோர் வாசனை நெருப்புக்கும் உண்டு. பிடிவாதமான வாசனை. விட்டுப்போகாத வாசனை.

"சாம்! சாம், முட்டாளே. சாம்!"

"சர்" என்றான் சாம்.

"விஸ்கி"

பாலைவனத்தில் அலைந்தவன் குடிக்கும் நீர் போல அவன் குடித்துக்கொண்டே இருந்தான். 'இப்போது மாக் மீண்டும் வருவான். நான் அவன் முன் கேலிக்கூத்தாகி விடக்கூடாது. போதும். இல்லை, இந்த ஒரு கோப்பை. ஆம், இதுதான் குடியின் மந்திரம். இன்னும் ஒரு கோப்பை. இன்னும். இதைக்கொண்டு நான் எதை நிரப்புகிறேன்? இதை ஊற்றி ஊற்றி எதைக்கரைத்துக் கொள்கிறேன்?'

What is Freedom? Ye can tell.
That which slavery is too well,.
For its very name has grown.
To an echo of your own!.

'ஷெல்லி. இந்தவரிகளை எல்லாம் எப்போது வாசித்தேன்? இவற்றை ஒருபோதும் மனப்பாடம் செய்ததில்லை. எப்போது முதன்முதலாக இந்தக் கவிதையை வாசித்தேன்? The Masque of Anarchy. அராஜகத்தின் தாண்டவம். ஒரு குளிரான டிசம்பர் இரவில். லண்டனில் அன்று கடும் பனிப்பொழிவு. தெருவோரங்களில் பனிமணல் குவிந்து கிடந்தது. வண்டிச் சக்கரங்கள் அரைத்துச்சென்று உருவான தடம் உறைந்தகுருதியுடன் சீழ்கட்டிய சாட்டைக்காயம் போல நீண்டு கிடந்தது. கூரை விளிம்புகளில் இலையற்ற கிளைகளில் எல்லாம் பனி பழுத்துத் தொங்கியது. கூரிய கட்டிடக் கூம்புகளில் பனி கோக்கப்பட்டிருந்தது. தூரத்து சர்ச் தேவாலய மணியோசை பனிவெளிக்கு அப்பால் எங்கோ ஒலித்தது. வானம் நிறமற்ற ஒளியற்ற சாம்பல்நிறத் தகடாக நகர்மேல் மிக அருகே இறங்கி வந்து பரந்திருந்தது.

அன்று நான் மதியம் ஒரு காய்ந்துபோன ரொட்டியைக் கொழுப்பு பூசி உண்டேன். பன்றிக்கொழுப்பு மரத்துண்டு

போலிருந்தது. அதைத் தீயில் காட்டியபோதுகூட உருகாமல் மெல்ல நெகிழ்ந்து நாற்றமடித்தது. பன்றிவாயின் நாற்றம். ரொட்டிமீது அதை அழுத்திவைத்து சேர்த்துக் கடித்து மென்றேன். என் வாயில் உருகியது நாறும் பன்றி. கணப்பிலேயே நீரை கொதிக்கச்செய்து அதில் எஞ்சிய சீனத் தேயிலை துகள்களைப் போட்டுக் குடித்தேன். கணப்பருகே அமர்ந் திருந்தேன். நெருப்பையே பார்த்துக் கொண்டிருந்தேன். எத்தனை ஆயிரமாண்டுகளாக பெய்கிறது இந்தப்பனி. ஆனால் நெருப்பு இன்னுமிருக்கிறது. இதோ என் கண்முன். அதை என்றோ மனிதன் வானத்து மின்னலில் இருந்து எடுத்துக் கொண்டான். சுள்ளியில் இருந்து சுள்ளிக்குக் கடத்தினான். மழைக்கும் புயலுக்கும் பொத்திக் காத்தான். இன்றுவரை அழியாமல் கொண்டுவந்து சேர்த்திருக்கிறான். இனியும் இருக்கும் அது. என்றுமிருக்கும். இந்நகரைக் கோபுரம் மேலிருந்து பார்க்கும் ஒருவர் இது பனிமூடி குளிர்ந்து உறைந்துவிட்டதென எண்ணக்கூடும். இதனுள் வெப்பமென எதுவும் இல்லை என பிரமைகொள்ளக்கூடும். ஆனால் இங்கே நூறு நூறாயிரம் கணப்புகளில் நெருப்பு செந்தழல் விட்டு எரிந்து கொண் டிருக்கிறது. இந்தப் பனி உண்மை. இதனுள் எரியும் நெருப்பு இன்னமும் உண்மை'.

பைரனின் 'பிரமிட்யூஸ்' கவிதையைக் கையில் வைத்திருந்தான். அதை வைத்துவிட்டு எழுந்து புத்தகங்கள் வைத்திருந்த பெட்டியில் ஷெல்லியின் நூலுக்காகத் தேடினான். **Triumphant where it dares defy** என்ற பைரனின் வரியை ஒரு மந்திரவேகத்தில் அவன் சொல்லிக்கொண்டிருப்பதை உணர்ந்தான். வேடிக்கைதான், பைரனைப் புலம்பியபடி ஷெல்லி. ஷெல்லியின் எந்தக் கவிதையைத் தேடுகிறான் என்று அவனுக்கே தெரிந்திருக்கவில்லை. ஆனால், நூல் கையில் கிடைத்ததும் அவனுக்குத் தெரிந்தது, அதுதான் என்று. 1832ல் எட்வர்ட் மோக்ஸோன் பிரசுரித்த நூல். லே ஹண்ட் எழுதிய உக்கிரமான முன்னுரையுடன் கூடியது. ஷெல்லி அந்தக் கவிதையை 1819லேயே எழுதிவிட்டான். மாஞ்செஸ்டரின் செயிண்ட் பிட்டர்ஸ் ஃபீல்டில் பிரிட்டிஷ் அரசு பொதுமக்கள் மீது ராணுவத்தை ஏவிவிட்டு நடத்திய படுகொலைகளுக்கு

அவனுடைய எதிர்வினை அது. ஆனால் அது ஷெல்லியின் மரணத்துக்குப் பின்னரே வெளியிடப்பட்டது. அந்த நூலை அவன் தெருவிலிருந்து வாங்கினான். பழுப்படைந்து ஈரமூறிக் காய்ந்த அதன் அட்டையில் ஷெல்லியின் முழுப்பெயர். அவன் அந்த பெயரை மெல்லத் தடவிக்கொண்டான். நூலைத் திறக்காமல் அந்தப் பெயரைப் பார்த்துக்கொண்டே அமர்ந்திருந்தான்.

அன்றிரவு நூற்றுக்கணக்கானமுறை அக்கவிதையை வாசித்தான். காதலியை முத்தமிட்டு முத்தமிட்டு சலிக்காத காதலன்போல. அந்தக் குளிர்ந்த இரவில் தூக்கமும் விழிப்பும் முயங்க, இருத்தலும் இன்மையும் மயங்க அவன் மிதந்து கொண்டிருந்தான். 'Rise like Lions after slumber! துயில்கலைந் தெழும் சிம்மங்களென எழுக. ஆ. ! சொல்லை எரியச்செய்வ தெப்படி! கூழாங்கற்களை வைரங்களாக்கும் வித்தைதான் என்ன? ஷெல்லி நீ சிங்கங்கள் எழுவதை எப்படிப் பார்த்தாய்? நான் பார்த்தேன். சௌராஷ்டிரத்தின் புல்வெளியில் என்னைக் கண்டு பிடரிமயிர் குலைய, மார்புத்தசைகள் தொங்கியசைய, மீசை சிலிர்க்க, ஓர் ஆண்சிங்கம் மெல்ல எழுந்தது. மிகமெல்ல. இந்த உலகமே அதற்காகக் காத்திருக்கிறது என்பதுபோல. எழுந்தபின் செய்வதெல்லாம் ஏற்கனவே வகுக்கப்பட்டுவிட்டது என்பது போல. நிற்பதன் வல்லமையை யானையில் பார்க்கலாம். பாய்வதன் வல்லமையைப் புலியில் பார்க்கலாம். எழுவதன் வல்லமை சிங்கத்தில் மட்டுமே. ஷெல்லி, எங்கே பார்த்தாய் நீ சிங்கத்தை? நீ பார்த்த சிங்கம் செம்பிடரி சிலிர்க்க கிழக்கு வானில் எழுந்ததா என்ன?'

ஏய்டன் சட்டையைக் கழற்றிப் பின்னால் தள்ளிவிட்டு மேலே ஆடும் பங்காவையே பார்த்திருந்தான். நெற்றியில் கழுத்தில் வியர்வை கொதித்து வழிந்தது. பங்கா ஆடும்போது கட்டிடமே ஆடியது. 'What is Freedom? Ye can tell that which slavery is too well. ஆம். ஷெல்லி அதுதான். இந்தக்கணம் அந்த வரிதான். What is Freedom? மீண்டும் மீண்டும் அந்த வரிதான். அது பிடிவாதமான குளவிபோலச் சுற்றிச்சுற்றி வந்து கொட்டு கிறது. ஒவ்வொரு கொட்டிலும் என் தசைகள் விஷமேற்றுத்

துடிக்கின்றன. What is Freedom? What is Freedom? What is Freedom? ஷெல்லி நகர்ந்து போ. போய்விடு. அவன் அந்த வரியைக் கையால் வீசி வீசி அடித்தான். பலகையுறையிட்ட கோப்பால் அடித்தான். "போ. போ" என்று குழறினான். What is Freedom?' சட்டென்று எடை தாளாமல் முறியும் பனிப்பாளம் போல அவன் இதயம் நொறுங்கியது. பொலபொலவென சிதறல்கள் உதிர்ந்தன. அவன் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். நெடுநேரம் அழுது உதிர்ந்தபடியே இருந்தபின் கண்ணீர் வழியத் தூங்கிப்போனான்.

பின்பு விழித்து எழுந்து இருட்டுக்குள் ஒளிவிட்ட விளக்கைப் பார்த்தான். வேகமாக எழுந்துசென்று மரத்தொட்டியில் நீரை நிரப்பி முகத்தை அதற்குள் விட்டுக்கொண்டான். கண்களைத் திறந்து வைத்து உள்ளே எழுந்து வந்த கொப்புளங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். மூச்சு முட்டியதும் எழுந்து நீர் வழியும் முகத்தைக் கையால் அழுத்தித் துடைத்தான். சாராயநெடி கொண்ட ஏப்பம் வந்தபடி இருந்தது. நேராகச் சென்று தன்னுடைய தொப்பியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

அப்போதும் இருட்டாகத்தான் இருந்தது. விடியற்காலையில் செறிவடையும் இருட்டு அது. இரவுப்பறவைகளின் ஒலிகள் கூட இல்லை. கடல்மட்டும் ஓங்காரமிட்டுக்கொண்டிருந்தது. கடலிருந்த திசையில் வானில் மெல்லிய வெளிச்சம் மேகங்களின் கீழ்விளிம்புகளைக் கத்தி நுனிபோல ஒளிரச்செய்தது. அவன் முற்றத்தில் நடந்தபோது வேப்பமரத்தில் இருந்த பறவைகள் கலைந்து ஒலியெழுப்பின. அப்பால் திண்ணையில் படுத்திருந்த துரைசாமி கண்விழித்து அவனைப் பார்த்தபின் எழுந்து ஓடி வந்தான். அவன் குதிரையை நோக்கிச்செல்வதைக் கண்டதும் உள்ளே சென்று சேணத்துடனும் கடிவாளத்துடனும் வந்தான்.

குதிரை அம்மணமாக நின்றுகொண்டிருந்தது. முன்காலை லேசாகத் தூக்கித் தலையை நன்றாகத் தாழ்த்தித் தூங்கிக் கொண்டிருந்தது துரைசாமியின் சத்தத்தால் விழித்துக்கொண்டு விலா விலும் முதுகிலும் சருமம் சிலிர்க்க கால்மாற்றிக் கொண்டது. பின் அவனை மோப்பம் பிடித்து "பர்ர்" என்றது.

ஏய்டன் அதன் கழுத்தைத் தட்டினான். அது பெரிய தலையை அவன் விலாவில் வைத்து உரசியது. அதன்மேல் கொசு வராமலிருக்க புல்லெண்ணை போட்டு நீவியிருந்தார்கள். எண்ணை ஆவி எழுந்த அதன் சருமம் அந்த அதிகாலைக்குளிரில் வெதுவெதுப் பாக இருந்தது. குதிரை காதுகளை முன்னால் குவித்து அவன் சட்டையின் விளிம்பைக் கடித்தது. அவன் விலக அதன் நீலம்படிந்த நா பிரியமான குழந்தையின் ஒற்றைவிரல் போல நீண்டு வளைந்து வந்தது. அவன் அதன் முகவாயில் தட்டினான். அது மீண்டும் அவன் சட்டையைக் கடிக்க முயன்றது.

துரைசாமி சேணம் போட்டு இறுக்கினான். கடிவாளத்தைக் குதிரையின் வாயில் செலுத்தி இறுக்கிக் கொக்கிகளை மாட்டினான். கடிவாளம் மாட்டியதும் அதுவரை குதிரையில் இருந்த குழந்தைத்தனம் அகன்று அது விரைப் படைந்தது. முன்காலால் தரையைப் பொறுமை யில்லாமல் தட்டி வாலைச்சுழற்றியது. ஏய்டன் அதன்மேல் ஏறிக் கொண்டான். அது பெருமூச்சுவிட்டுக் கழுத்தைத் தூக்கியது. அவன் அதன் குஞ்சிமயிர்களை வருடினான்.

துரைசாமி "சர், துணைக்கு" என்றான். ஏய்டன் வேணாம் என்று தலையசைத்துவிட்டுக் குதிரையைச் செலுத்தினான். கடற்கரைச்சாலைக்கு வரும்வரை எங்கே செல்கிறோம் என்ற உணர்வே அவனுள் இருக்கவில்லை. குதிரை இயல்பாகவே வழக்கமான பாதையில் சென்றது. ஏய்டன் கடலையே பார்த்துக்கொண்டிருந்தான். இருண்ட உலோகப்பரப்பு போல ஆங்காங்கே மட்டும் கடல் பளபளத்துத் தெரிந்தது. கரைமீது அதன் வெண்ணுரை பரவி பரவிச்செல்லும் அசைவு தொலை தூரம் வரை. பிரம்மாண்டமான ஒரு திரைச்சீலை காற்றில் சலசலத்தாடுவது போல. அவன் எங்கே சென்றுகொண் டிருக்கிறான் என்று நினைவுக்கு வந்தது. அவன் வீடு இந்நேரம் குளிர்ந்து காலியான அறைகளுடன் கிடக்கும். ஆளில்லாத பெரிய அறைகளில் கடற்காற்று சுற்றி வரும். அனாதையாக, இலக்கில்லாததாக, கனத்ததாக.

அவன் குதிரையை அணைந்து நிறுத்தினான். பின் அதைத் திருப்பித் தட்டி ஓடவிட்டான். அது செத்த பாம்பு போல

சலனமற்றுக்கிடந்த சாலை வழியாக ஓடியது. பக்கவாட்டில் தோப்புகளில் இருந்து நாய்கள் குரைத்தபடி பின்னால் வந்து தங்கள் எல்லை வந்ததும் நின்றுகொண்டன. சங்கிலி போல ஒன்றில் இருந்து ஒன்றாகக் கொளுத்திக்கொண்டு நூற்றுக் கணக்கான நாய்கள் எங்கெங்கோ குரைத்துக் கொண்டிருந்தன. தென்னை மரங்களில் இருந்து பறவைகள் கலைந்தெழுந்து இருட்டில் கரைந்தபடி சிறகடித்துச் சுற்றிவந்தன. இரவில் அந்தப்பகுதிகளின் வாசனை துல்லியமாகத் தெரிந்தது. ஊறிப்புளித்த சேறு. பின்னர் வைக்கோல் மட்கிய சாணி. இந்த மக்களுக்கு சாணி ஒரு நாற்றமே அல்ல. சாணிவாடை அடிக்காத இடமே இந்தியாவில் இல்லை.

அவன் ராயபுரத்தை அடைந்து செயிண்ட் பீட்டர்ஸ் சர்ச்சை நோக்கிச் சென்றான். கோயிலின் உயரமில்லாத செங்கல் கோபுர முகடுமீது கல்லால் ஆன சிலுவை எழுந்து நின்றது. செங்குத்தாக எழும் ஒரு வினாவும் அதற்குப்பதிலாக அமைந்த கிடைமட்டக் கோடுமாக. அவன் சிலுவையைப் பார்த்தபடி சற்று நேரம் நின்றான். அவன் ஃபாதர் பிரண்ணனைப் பார்க்க அங்கே வரவில்லை என உணர்ந்தான். அவரைப்போன்றவர்கள் நேரடியானவர்கள். அவர்களுக்குச் சிக்கல்கள் இல்லை. சிக்கல்கள் அவர்களுக்குப் புரிவதுமில்லை. பெருமூச்சுடன் அவன் குதிரையைத் தட்டினான். அவன் யாரைப்பார்க்க வந்திருக்கிறான் என்று அவனுக்குப் புரிந்திருந்தது.

எங்கோ எப்போதோ ஒருமுறை மரிஸா அவளுடைய வீட்டைப்பற்றிச் சொல்லியிருந்தாள். அந்த ஒவ்வொரு சொல்லும் துல்லியமாக நினைவில் மீண்டு வந்தது, அப்போதிருந்த அவளுடைய முகத்துடன். ஒரு பழையபாணி கட்டிடத்தை ஒட்டித் திரும்பினான். தண்ணீர் ஓடும் ஒரு சிறிய ஓடைக்கு அப்பால் இருந்த அந்தத் தெரு சிறிய வளைவு ஓட்டுக் கட்டிடங்களால் ஆனதாக இருந்தது. ஆனால் வீட்டுச்சுவர்கள் வெள்ளைபூசப்பட்டுச் சன்னல்களில் திரைச்சீலைகளுடன் இருந்தன. முற்றங்களில் கோலம் இல்லை. நாய்களும் இல்லை. முக்கியமாக சாணி வாசனை இல்லை. பதிலுக்குத் தரமற்ற

வாசனைத் திரவியத்தின் மெல்லிய வாடை காற்றில் மிதந்தது. அந்த வாடை அவனுக்குப் பிடிப்பதில்லை. மரிக்கொழுந்து வாசனை. அவன் மரிஸாவிடம் அதைத் தவிர்க்கும்படி சொல்லியிருந்தான்.

அவனுடைய குதிரை மெல்லக் கனத்த குளம்படிகளுடன் சென்றது. இருட்டிலிருந்து சுவர்கள் அந்த ஒலியை திருப்பி வீசின. எங்கோ ஒரு குழந்தை வீரிட்டழ அதன் அம்மா குழறலாக அதைத் தட்டித் தூங்கச்செய்தாள். நாலைந்து இருமல் ஒலிகள். ஒரு திண்ணையில் கிடந்த கிழம் எழுந்து தலைதூக்கி அவனைப் பார்த்தது. "யாரது?" எனக் குழறிய ஆங்கிலத்தில் கேட்டது. பல திண்ணைகளில் வண்ணம் தீட்டிய புல்லால் ஆன தட்டிகள் தொங்கின. அவற்றுக்கு அப்பால் தூங்குபவர்களின் மூச்சு ஒலித்தது. நாலைந்து வீடுகள் பெரியவை. சுதைச்சுவர்களுக்கு மேல் மரத்தாலான மச்சு அமர்ந்திருக்க, பெரிய மரத்தூண்கள். வாசல்களில் காவலர்கள் போல நின்றிருந்தன. அவற்றுக்கு முன்னால் விடியற்காற்றில் திரைச்சீலைகள் ஆடும் ஃபீட்டன்கள் நின்றன. குதிரைகள் சற்றுத் தள்ளி மூன்றுகால் களில் தலைதொங்கித் தூங்கி நின்றன. வண்டிகளுக்கு அடியில் வெறும்தரையில் சணல்சாக்கை விரித்து வண்டியோட்டிகள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

ஏய்டன் அவள் வீட்டருகே நின்றான். 'இதுதான்'. அங்கிருந்த எல்லா வீடுகளும் ஏறத்தாழ ஒன்றுபோலிருந்தன. ஆனாலும் அவனுக்குத் தெரிந்தது 'அது அவள் வீடுதான் என'. பின்பு 'அது ஏன்' என்று புரிந்துகொண்டான். 'அந்தப் பவளமல்லி மரம் பற்றி அவள் சொல்லியிருந்தாள்'. தரையில் அதன் வெள்ளை மலர்கள் உதிர்ந்து வட்டமாகப் பரவிக்கிடந்தன. பூப்போட்ட வெள்ளைத்துணி ஒன்று விழுந்து கிடப்பது போல. மரம் ஓர் இளம்பெண்ணாகத் தன் பாவாடையை விரித்துச்சுழற்றி அமர்ந்திருப்பதுபோல.

ஏய்டன் வீட்டுமுகப்பில் நின்றான். 'கதவைத்தட்டுவதா? அவள் இப்போது வீட்டில் இருப்பாள் என என்ன உறுதி? அவளுடைய தொழிலே இரவில்தான். அவள் இல்லாம லிருக்கவே வாய்ப்பு அதிகம். அவளுடைய அம்மா இருக்கலாம்.

வெள்ளைச்சிப்பாய் ஒருவனுக்குக் குழந்தை பெற்ற அவள் அக்கா இருக்கலாம். இரு தம்பிகள்கூட அவளுக்கு உண்டு. அவர்களில் ஒருவன் கப்பலில் இருந்து திரும்பியிருக்கலாம்'. ஆனால் அவர்கள் எவரும் அவனை எதிர்கொள்ளப் போவ தில்லை. அவனுடைய அதிகாரத்துக்கு முன்னால் அவர்கள் வெறும் பூச்சிகள். அவன் வெண்ணையை வெட்டிச்செல்லும் பழுக்கச்சிவந்த கத்திபோல அவர்களைத் தாண்டிச் செல்லமுடியும். ஆனால். அவர்களின் பார்வைகள். மரிஸாவின் முன் அவன் ஒருபோதும் வழக்கமான வெள்ளைப்போர் வீரனாக இருந்ததில்லை. 'மரிஸா. மரிஸா. நான் இப்போது தனிமையில் இருக்கிறேன். கனக்கும் சொற்களுடன் இருக்கிறேன். உன்னுடன் நான் பேசவேண்டும். மரிஸா'.

'எதற்காக அவளைத் தேடி இங்கே வந்திருக்கிறேன்? வேறெதற்கு? பேசத்தான். பேசிப்பேசி நான் என்னை நிரபராதி என்றும் நியாயவான் என்றும் நிரூபிக்க விரும்புகிறேன். அவள்தான் எனக்கு இலகுவான இலக்கு. என் சொற்கள் பரிசீலிக்கப்படாமல் பெற்றுக்கொள்ளப்படும் இடம். இல்லை, அதில்லை. அவள் என்னுடைய ஆழத்தில் நான் பொருட் படுத்தும் ஓர் உயிர். என் அந்தரங்கக்குரல் சென்றுசேரும் என நான் எண்ணும் ஓர் இடம். நான் என் ஆணவத்தையும் பாவனைகளையும் களைந்துவிட்டு நிர்வாணமாக நிற்கும் ஒரு சன்னிதி. இல்லை, அதெல்லாமில்லை. நான் அவளை அணைக்க விரும்புகிறேன். என் வெற்று உடலுடன் அவளுடைய வெற்று உடலை இறுக்கிக்கொண்டு கிடக்க விரும்புகிறேன். என்னுடைய தனிமையை அவள் உடலுடன் பொருந்திக்கொள்வதன் வழியாக இழக்க விரும்புகிறேன். அவளை இறுக்கி நொறுக்கி அவள் முனகும் அர்த்தமற்ற சொல்லைக் கேட்க விரும்புகிறேன். அந்தச்சொல் அவள் உதடுகளையோ என் செவிகளையோ தொடாமல் அவளுள் இருந்து என்னுள் புகும். அப்போது நான் தனிமையற்றவனாவேன். பின் அவளுடைய சிறிய முலைகள் நடுவே முகம்பொத்தி வீழ்ந்துகிடப்பேன். அப்போதும். தோற்கடிக்கப்பட்டவனாக, இழிவுபடுத்தப்பட்டவனாக, மிச்சமேதுமில்லாதவனாகத்தான் இருப்பேன். ஆனால் துணையோடிருப்பேன். ஆமாம், அதற்காகத்தான்'.

ஆனால் அவனால் அந்தக் கதவைத்தட்ட முடியவில்லை. அந்தச் சிறிய ஓட்டுவீடு இரு சிறிய சன்னல்களை விரியத்திறந்து வாசலை இறுகமூடி அவனைப் பார்த்துக்கொண்டிருந்தது. காற்றில் அதன் திரைச்சீலைகள் ஆடும்போது அதன் கண்கள் அசைவதுபோலத் தோன்றியது. நூறுமுறை அவன் தன் கற்பனையில் இறங்கி அந்தக் கதவைத்தட்டினான். ஆனால் குதிரையிலிருந்து இறங்காமல் அப்படியே நின்று கொண்டிருந்தான். 'திரும்பிவிட்டாலென்ன? ஆனால் திரும்பும்போது என்னுள் நிறையும் ஏமாற்றத்தை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. அந்த வெறுமையில் நான் உடைந்து நொறுங்கிக் கீழே விழுந்துவிடுவேன். ஆம், அவளைச் சந்திக்காமல் நான் செல்ல முடியாது. விரித்த கரங்களுடன் அவள் என்னை அழைக்கும் போது அஞ்சிய குழந்தைபோல நான் ஓடிச்செல்வேன். அவள் முன் என்னுடைய எல்லாவற்றையும் காணிக்கை வைப்பேன். ஆமாம், அதற்காகத்தான் வந்திருக்கிறேன். கடவுளே, எவ்வளவு தெளிவாக இருக்கிறது! நான் வந்தது அதற்காகத்தான். எப்போதும் அந்த எண்ணம் என்னுள் இருந்தது. ஆனால் அதை எனக்கு நானே மறைத்துக்கொண்டிருந்தேன். மரிஸா. மரிஸா'.

ஓசையே இல்லாமல் அவன் இதயம் வீரிட்டது. நெஞ்சு சிதறக் கதறியது. 'மரிஸா மரிஸா'. அந்த நுண்ஒலியைக் கேட்டவள்போல அவள் சன்னல் திரைச்சீலையை மெல்ல விலக்கி எட்டிப்பார்த்தாள். ஏய்டன் "மரிஸா!" என்றான். அவன் குரல் கட்டியிருந்தது. அக்கணம் வரை நெஞ்சில் ஓடிய அத்தனை சொற்களையும் பலமுறை கூவியிருந்தாலும் தொண்டை அப்படி கம்மியிருக்காது. "மரிஸா"

ஏய்டன் குதிரையில் இருந்து இறங்கி அவள் வீட்டுப் படிகளை ஏறினான். அவள் உள்ளே தாழை விலக்கும் ஒலி கேட்டது. அவன் முன்னால் வாசலை அடைத்துக்கொண்டு அவள் நின்றாள். அப்பால் பின்பக்கச் சுவரில் கண்ணாடிக் குமிழுக்குள் மெழுகுவத்திச்சுடர் அசையாமல் நின்ற விளக்கு செவ்வொளி பரப்பி ஒட்டியிருந்தது. சுவர் ஒளியைச் செவ்வெண்ணிறப்பரப்பாக மின்னியது. மரிஸா சிதறடித்தபடி செவ்வெண்ணிறப்பரப்பாக மின்னியது. மரிஸா

மேலே ஆண்கள் அணியும் பழைய சட்டை. கூந்தல் கலைந்து நின்ற பிசிறுகளில் ஒளி உருவாக்கிய செம்புக்கம்பிகள் ஆடின. கன்னத்துப் பிசிர்மயிர்களில், கழுத்தின் மென்சரும வளைவில், கன்னங்களின் மெல்லிய கதுப்பில் பொன்பூசப்பட்டிருந்தது.

"என்ன?" என்று அவள் கேட்டாள். அடைத்த கனமான குரலில் வேறு எவளோ போலிருந்தாள்.

"மரிஸா. இது நான்."

"தெரிகிறது. இந்நேரத்தில் என்ன விஷயம்?"

"நான். நான் உன்னைத் தேடிவந்தேன் மரிஸா. உன் வீட்டைக் கண்டுபிடித்து." 'என்ன பேசிக்கொண்டிருக்கிறேன்? அவள் உடலில் இருந்து புதுவகை வாசனை வந்தது. 'அவள் எப்போதும் பூசும் வாசனைத்திரவியமல்ல. இது அவளுக்கே உரிய நெடி. வியர்த்த சருமத்தின் மணம்'. அது அவனை இளம் காளையைப் புதுமழையின் மண்வாசனை போலக் கிளர்ச்சியுற வைத்தது. அவன் கைநீட்டியபடி "மரிஸா. நான் உன்னைப் பார்க்க விரும்பினேன்" என்றான்.

"என் வீட்டில் நான் யாரையும் பார்ப்பதில்லை" என்று அவள் சொன்னாள். "இங்கே என் குடும்பம் இருக்கிறது". அவன் கண்களை நேரடியாக சந்தித்தாள். ஆனால் முற்றிலும் அன்னியமான பார்வை.

"நான் உன்னிடம் ஒன்று சொல்ல விரும்பினேன். நான் " அவன் மூச்சை இழுத்து விட்டான். "என்னைத் தென்காசிக்கு மாற்றிவிட்டார்கள். நான் நாளையே கிளம்பவேண்டியிருக்கும். கிளம்பும்போது ... நான் ... அதாவது. மரிஸா, நான் உன்னை முறைப்படி திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்"

காற்றில் விளக்குச்சுடர் திடுக்கிடுவதுபோல அவள் கண்களில் ஓர் அசைவு வந்து சென்றது.

"நான் அதைப்பற்றி உன் அம்மாவிடம் பேசுகிறேன். ஃபாதர் பிரண்ணனிடம் பேசுகிறேன். முறையாக நான் உன்னைத் திருமணம் செய்து கூட்டிச் செல்கிறேன். நீ என்னுடன் வரவேண்டும். நான் தனியாக அங்கே போகமுடியாது. உன்னை விட்டுவிட்டுப் போக என்னால் முடியாது. நீ என்னுடன்

வரவேண்டும். என்னைப்புரிந்துகொள்ளக் கூடியவள் நீ ஒருத்திதான். நான் இன்றுவரை தனியாகவே இருந்திருக்கிறேன். என் மனதை எங்கும் பங்கிட்டதில்லை. உன்னுடன் மட்டும்தான் மரிஸா. நீ வந்தாகவேண்டும். உனக்கு நான் என்னுடைய எல்லாவற்றையும் அளிக்கிறேன். என் பட்டம், பதவி, அந்தஸ்து எல்லாவற்றையும். இந்த கேடுகெட்ட மண்ணை உதறி என்றாவது நான் அயர்லாந்துக்குச் செல்வேன் என்றால் நீயும் என்னுடன் வரவேண்டும். என் அம்மாவையும் அப்பாவையும் பார்க்க. அவர்களிடம் உன்னை என் குழந்தைகளின் அம்மா என்று அறிமுகம் செய்வேன். அயர்லாந்து இந்த மண்ணில் ஒரு சொர்க்கம். அங்கே ஏரிகள். மலைகள்." என்ன பேசிக்கொண்டிருக்கிறேன் என்ற பிரமிப்புடன் அவன் பேச்சை நிறுத்தினான். 'அத்தனைச் சொற்களையும் சொன்னோமா இல்லை அவை எனக்குள் மட்டும் ஓடிக்கொண்டிருந்தனவா?'

"எதற்காகத் தென்காசிக்கு மாற்றம்?" என்று அவள் கூரிய கத்தியால் வயிற்றுத்தசையை நெடுகக் கீறுவதுபோலக் கேட்டாள்.

"என்னை அவர்கள் மேஜராக ஆக்கியிருக்கிறார்கள். நான் அப்பகுதியின் காவல்துறைத் தலைவனாகச் செல்கிறேன்"

"பதவி உயர்வு - இல்லையா?"

உடனே அவள் என்ன புரிந்துகொண்டாள் என அவன் அகம் அறிந்தது. அதை மறுக்க அவன் வாயெடுப்பதற்குள் அவள் தொடர்ந்தாள் "நேற்றுமாலை நீங்கள் செய்த வீரச்செயலுக்குப் பரிசு இல்லையா?"

"மரிஸா!"

"இல்லை, இங்கே இனிமேலும் இருந்தால் ஆபத்து என்று அனுப்புகிறார்களா?"

"மரிஸா நீ என்னைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் உடைந்து போயிருக்கிறேன்"

"குற்றவுணர்ச்சியைத் தீர்க்க இங்கே வருகிறீர்களா? இது தேவாலயமில்லை. இங்கே நான் பாவமன்னிப்பு கேட்பதுமில்லை." அவள் வாசலைச் சாத்தப்போனாள்.

“மரிஸா” என அவன் கதவைப்பிடித்தான்.

“ச்சீ கையை எடு மிருகமே. என்றைக்கு நீ என் மக்கள் மீது காலைவைத்து மிதித்து இறங்குவதைக் கண்டேனோ அன்றே நான் உன்னைப் புரிந்துகொண்டேன். போ வெளியே”

“நில்லு. ஏய் நில்லு.” என்று பல்லைக்கடித்து உறுமியபடி ஏய்டன் முன்னால் நகர்ந்து அவள் கையை ஒருகையால் பிடித்தான். அவளை அப்படியே தள்ளிக் கதவைத் திறந்தான். “நான் திரும்பிப்போக வரவில்லை. நான் உன்னை ”

“ஓ” என்றாள் அவள். அந்த ‘ஓ’ அவள் மாந்தளிர்நிற உதடுகளிலும் உருவானது. “அதற்காக வந்தாய் என்றால் அதைச் செய்துவிட்டு போ. போகும்போது எனக்கான ஊதியத்தை அருகே போட்டுவிட்டு போ. அந்த பாவப்பணத்தைக் கொண்டு சென்று தேவாலயத்தின் பஞ்சநிதியில் போடுகிறேன்”

அவன் தளர்ந்து பிடியை விட்டான். ஓசையே இல்லாமல் “மரிஸா” என்றான்.

“அதன்பின் நன்றாக சவர்க்காரம் தேய்த்து குளிப்பேன். அவ்வளவுதான். உனக்கும் எனக்குமான உறவு ஒரு நல்ல குளியலில் தீரக்கூடியதுதான்”

ஏய்டன் பின்னால் நகர்ந்தான்.

சட்டென்று அவள் பின்னகர்ந்து கதவைப் படாரென்று வீசி அறைந்து மூடினாள். அவன் குதிரை திடுக்கிட்டு இரண்டடி பின்னால் வைத்தது. அவன் அங்கேயே நின்றிருந்தான். காலமில்லாத வெளியில். எண்ணங்களில்லாத வெளியில்.

பின் தளர்ந்து தொய்ந்த கால்களுடன் படியிறங்கிக் குதிரையைப் பற்றிக்கொண்டான். போர்க்களத்தில் காயம் பட்டுக் குருதியிழந்தவனைப்போலக் குதிரைமேல் தொற்றித் தழுவி இருமுறை நழுவி ஏறிக்கொண்டான். கடிவாளத்தைப் பிடித்தபடி குதிரைமீது குனிந்து அமர்ந்திருந்தான். சடலத்தைச் சேணத்தில் அமரச்செய்து கால்களைக் கட்டிவிட்டதுபோல குதிரையின் அசைவில் சம்பந்தமில்லாமல் இருபக்கமும் ஆடியபடி அமர்ந்திருந்தான். குதிரை அவன் எந்த ஆணையும்

கொடுக்காமலேயே திரும்பிச்சென்றது. ஓடையை மிக மெல்லக் காலெடுத்து வைத்துத் தாண்டியது.

இருண்ட சாலைகள் வழியாக அவன் சென்றுகொண்டே இருந்தான். ஒரு பெரிய எறும்புப் புற்றுக்குள் தலைகுப்புற விழுந்தது போலிருந்தது. கிளைகிளையாக விரிந்துசெல்லும் சாலைகள். குறுக்குச்சாலைகள். ஊடுவழிகள். சந்துகள். அவன் குதிரையின் கடிவாளத்தைப்பிடித்து இழுத்துத் திருப்பினான். மூர்க்கமாக அதை உதைத்து ஓடச்செய்தான். குதிரை பெரிதாகக் கனைத்து வால் சுழற்றியபடி இருண்ட சாலையில் குளம்பொலி அதிர 'தடதட'த்தோடியது. 'துடைப்பத்தில் ஏறி நரகம் வழியாக பறந்துசெல்லும் சூனியக்காரி நான். நரகத்தின் இருண்ட பாதைகள். இல்லை. இது சேற்றில்வாழும் நாற்றமடிக்கும் மிருகமொன்றின் குடல். குடல்பாதைகள். குடல்சுழிப்புகள். குடல்மலம்'.

மூச்சிரைத்தபடி அவன் குதிரையை நிறுத்தினான். குதிரையின் மூச்சும் அவன் மூச்சும் கலந்து ஒலித்தது. ஓட்டத்தில் வெறிகண்ட குதிரை மேலும் பாய விரும்பித் ததும்பியது. 'என் காதுகள் ஏன் இப்படி அடைத்திருக்கின்றன?' ஆம், காதுகள் அடைத்திருந்தன. கடலின் அடியாழம்போலச் செவிப்பறைமேல் உச்சகட்ட அழுத்தம். ஓசையே இல்லாமல் காற்று சென்றது. காற்று அல்ல அது. மழை. மழையல்ல ஏதோ திரவம். குதிரையின் எச்சில்போலக் கொழகொழத்த வெம்மையான திரவம். அது வானில் இருந்து கொட்டிக் கொண்டிருந்தது. பிரசவ வலி எடுத்து நீர் கொட்டும் ஒரு பசுவின் அடியில் நின்றிருக்கிறேனா? இல்லை மழைதான். அந்த திரவத்தின் வாசனை பழக்கமானதாக இருந்தது. மிகமிகப் பழக்கமான வாசனை. ஆம். ஆனால்,

சட்டென்று சாலையின் மறுபக்கம் இருண்ட சந்தில் இருந்து ஒரு பெருங்கூட்டம் சாலையில் ஏறியது. அழுக்குத் துணிக் கூட்டங்கள் நதி நீரோட்டத்தில் மிதந்துவருவது போல அது நெருங்கி வந்தது. ஓசையே இல்லாமல். பெருங்கூட்டம். எறும்புப் புற்றின் வாய்போல அந்தத் துளையிலிருந்து மனிதர்கள் கிளம்பி வந்துகொண்டே இருந்தார்கள். அந்தக்

கூட்டம் அவனை மெல்லத் தாண்டிச்சென்றது. அவர்கள் எவருமே நடந்து செல்லவில்லை. காற்றில், இருட்டில், குளிரில் மிதந்து ஒழுகிச்சென்றார்கள். அத்தனைபேரும் முக்கால் நிர்வாணிகள். இடுப்பை மறைக்கும் கந்தல் துண்டுகளன்றி ஆடைகள் இல்லை. எலும்புக்கூடு போன்ற உடல்கள். ஆம், அத்தனைபேரும் முன்னரே செத்துப்போனவர்கள். பாதிமட்கிய முக்கால்வாசி மட்கிய சடலங்கள். அது ஏதோ புனித ஊர்வலம். அனைவரும் ஒரே போலக் கைகளைக் குலுக்கி ஆட்டி ஏதோ செய்து கொண்டு சீராக நடந்துசென்றனர். எவரும் அவனைப் பார்க்கவில்லை. அவர்களின் பற்களின் வெண்மையை அவன் கண்டான். ஈரத்துளிபோல மின்னும் கண்களைக் கண்டான். பெரிய கண்களை விழித்துப் பார்த்தபடி தாயின் இடுப்பிலும் தந்தையர் தோள்களிலும் அமர்ந்திருந்த கைக்குழந்தைகளின் உள்ளங்கால்களின் வெளிறலைக் கண்டான்.

ஆம், அவர்களில் பலர் அவனறிந்தவர்கள். எங்கே? அதோ அந்தக்கிழவன் அவனிடம் பேசியிருக்கிறான். ஏதோ ஒரு சொல். என்ன சொன்னான்? அவனுடைய மொழியிலா? ஆங்கிலத்திலா? இல்லை. 'அவன் எப்படி பேசமுடியும்? அவனை நான் ஓர் ஆலமரத்தடியில் கண்டேன். அவன் வயிற்றிலிருந்து குடல் கிளம்பி புதர்களில் இழுபட்டு நெடுந் தூரம் சென்றிருந்தது. ஏற்கனவே அழுகிக் கருப்பான குடல். அதை ஒரு நாய் கடித்து இழுத்தபோது அவன் மெல்ல அசைந்தான். படுத்திருப்பதன் அசௌகரியத்தை உணர்ந்தது போல. உதடுகள் இல்லாத வாயில் நீளமான பற்கள். பிய்ந்த மூக்கு. ஆனால் அவன் கண்கள் விழித்திருந்தன. அப்போது தான் அவன் ஏதோ சொன்னான். "தொரை!" இல்லை. அதில்லை. "பசி!" இல்லை. அதில்லை. வேறு ஏதோ. இதோ இவனை நான் அறிவேன். இவனை. எத்தனை பேர்! எத்தனை ஆயிரம்! எத்தனை லட்சம். இந்த நகரின் இருளில் இத்தனை லட்சம் பேர் உலவிக் கொண்டிருக்கிறார்களா? இந்த வீடுகளுக்குள் குழந்தைகளை அணைத்துக்கொண்டு உறங்கிக்கொண்டிருப்பார்கள். மெத்தை களில் குளிருக்குப் போர்த்தியபடி தூங்குவார்கள். இதோ திண்ணைகளில் சாக்குப்பைகளைப் போர்த்திக்கொண்டு

படுத்திருக்கிறார்கள். எவருமறியாமல் இங்கே ஒரு மாபெரும் ஊர்வலம் நிகழ்கிறது. விக்டோரியா பேரரசியின் பதவி ஏற்பு விழா வைபவத்தை விடப்பெரிய ஊர்வலம். எந்த வாட்டிகன் நிகழ்ச்சியை விடவும் பிரம்மாண்டமான ஊர்வலம். எவ்வளவு நேரம்! இங்கே நான் நாட்கணக்காக நின்றுகொண்டிருக்கிறேனா? சாலையை நிறைத்து உடலோடு உடல் ஒட்டிச் சென்றுகொண்டே இருந்தார்கள். பிரம்மாண்டமான கரியசாக்கடை ஆறு ஒன்று இருளுக்குள் செல்வது போல. கருமேகக் கூட்டம் போல அவ்வளவு அமைதியாக, அவ்வளவு இலகுவாகச் சென்று கொண்டே இருந்தார்கள். 'எங்கே செல்கிறார்கள்? இந்நகரின் இன்னொரு மூலைக்கா? எதற்காக? நகர் முழுக்க இந்த ஊர்வலம் இரவெல்லாம் நடந்துகொண்டிருக்கிறதா? அர்த்தமில்லாத சடங்கு. ஆனால் எந்தச் சடங்குதான் அர்த்தமுள்ளது?'.

'ஆ, இவனையும் நான் அறிவேன். இவன் முகம் எனக்கு நன்றாகத்தெரியும், அவன் திரும்பி ஏய்டனைப் பார்த்தான். பெரிய கண்களில் சட்டென்று ஒளி வந்தது. வெண்பற்கள் பளீரிட அவன் புன்னகை செய்தான். அவன் பார்வையில் ஏய்டன் பேரச்சத்துடன் பின்னால் நகர நினைத்தான். ஆனால் குதிரை கல்லால் ஆனதுபோல உறைந்து அசைவிழந்து நின்றது. அவன் அதை உதைத்தான். சாட்டையால் அடித்தான். ஆனால், கல்குதிரை அதை உணரவில்லை. இல்லை, அவன் உடலே அதைச் செய்யாமல் உறைந்திருந்தது. அவனுடைய பிரக்ஞை மட்டும்தான் அங்கிருந்தது. உடலற்ற பருவடிவற்ற ஒரு தூய இருப்பாக அது இருளில் மிதந்துக்கிடந்தது. நீரில் கிடக்கும் ஒரு துளி எண்ணெய்போல. தன்னைத் தனித்தறிய முடிந்ததனாலேயே இருப்புகொண்டதாக. அவன் நெருங்கி வந்தான். மிக நெருங்கி. அவனுடைய சுருள்முடி வளையங்களைப் பூனைமீசையைத் துல்லியமாகக் காணுமளவுக்கு அருகே. 'என் தேவனே, என் மீட்பரே.'

கருப்பன் சொன்னான் "It is me" கனத்த கார்வை கொண்ட ஆக்ஸ்போர்ட் ஆங்கிலம் அவனுடைய ஆசிரியர் ஜான் ஸ்டுவர்ட் கூப்பர் போல. 'ஆம் அதே குரல். அவரேதான்

ஆனால், அவர் எப்படி?' கருப்பன் மீண்டும் "Look, It is me!" என்று சொன்னான். "நீயா? நீ எப்படி?" என்று ஏய்டன் கேட்டான். மேலும் விரிந்தகன்ற புன்னகையுடன் கருப்பன் சொன்னான். 'இல்லை கவிதை ஒப்பித்தான். துல்லியமான ஆக்ஸ்போர்ட் நாடகப்பாணியில்'.

"Last came Anarchy: he rode.
On a white horse, splashed with blood;.
He was pale even to the lips,.
Like Death in the Apocalypse"

"ஷெல்லி! ஷெல்லி! நான் உன்னைச்சுடுவேன்!" என்று கூவியபடி ஏய்டன் பாய்ந்தெழுந்தான் தன் படுக்கையில் அமர்ந்துகொண்டு கடற்காற்றில் அலையடித்த திரைச்சீலை களைக் கண்டான். உடம்பு குளிரில் நடுநடுங்கிக் கொண் டிருந்தது. நீரில் விழுந்து எழுந்தது போல. அவனுடைய சீருடையைத்தான் அணிந்திருந்தான். இடுப்பில் இருந்த பெல்ட் மட்டும் கழட்டப்பட்டு அருகே முக்காலியில் இருந்தது. கடும் தாகம். பாலைநிலத்தில் பலநூறு மைல் அலைந்தது போல. 'தண்ணீர் எங்கே? அது மிகத்தொலைவில் ஒரு முக்காலியில் மண்கூஜாவில் கோப்பை கவிழ்க்கப்பட்டு அமர்ந்திருந்தது. அவ்வளவு தூரமா? சாம்! டேவிட்!' ஆனால் குரலே எழவில்லை. அவ்வளவுதாகம். மிதமிஞ்சிய சாராயம் உடலில் உள்ள மொத்த தண்ணீரையும் வெளியே தள்ளிவிடுகிறது.

அவன் எழப்போனான். 'யாரது அங்கே? ஏய், என்ன செய்கிறாய்? யார் நீ? அந்த கூஜாவை எடு. முட்டாளே அந்த கூஜாவை எடுக்கச் சொன்னேன் உன்னிடம். என்ன செய்கிறாய் அங்கே?' அவன் கையை ஊன்ற முயன்று அனிச்சையாக இருளில் துழாவியபோது பெல்ட் கையில் தட்டுப்பட்டது. அதன் மெல்லிய தோலுறையில் ரிவால்வர் கனமாகக் கிடந்தது, காளையின் விதைப்பைபோல. கூஜா அங்கே இருக்கிறது. நிலவொளி விழுந்த சன்னலருகே. 'ஆ!'.

ஏய்டன் துப்பாக்கியை எடுத்து தன் முன்நெற்றியில் வைத்துச் சுட்டுக்கொண்டான்.



# 13

மருத்துவமனையின் வெள்ளைச் சுவர்களைப் பார்த்தபடி ஏய்டன் விழித்துக்கொண்டான். அது நான்காவது விழிப்பு. மூன்றுமுறையும் அவன் பார்த்த அதே அறைதான். மேலே வெள்ளைநிறம் பூசப்பட்ட பனம்பாய்த்தட்டி அடிக்கப்பட்ட சாய்வான ஓட்டுக்கூரை. அதிலிருந்து தொங்கிய பனையோலையிலான சிறிய பங்கா. வெள்ளைத்திரைச் சீலைகள் நெளியும் இரு சன்னல்கள். கையுயரத்தில் அழுக்கு படிந்த திரைச்சீலை மெல்ல விரிசலிட அப்பால் ஒளிபரவிய முற்றத்தைக் காட்டும் ஒரு வாசல். சுவரில் ஏசுவின் படம் "எனது ரத்தம் சகலபாவங்களையும் நீக்கி உன்னைச் சுத்திகரிக்கும்" மூலையில் முக்காலி மீதிருக்கும் வளையத்தில் பெரிய மரத்தொட்டி.

அவன் நடுவே கட்டிலில் படுத்திருந்தான். சென்றமுறை அவன் வாயை உலர்ந்த தோல்கீற்றுப்போல உணரச்செய்த மரப்பும் குமட்டலும் இப்போது இல்லை. கண்ணைமூடினால் விழுந்துகொண்டே இருக்கும் உணர்வு இல்லை. ஆனால் நெற்றியில் இருந்த கனத்தகட்டுக்குள் கடுமையான குத்தல் வலி இருந்தது. புருவத்தை அசைக்கும்போது கத்தியால் கிழித்துச் செல்வது போலத் தலை உளைந்தது.

அவன் மெல்லத் தலையை அசைத்தபோது கழுத்தும் வலித்தது. தலையை அசைக்காமல் வைத்திருந்தமையால் தசைகள் இறுகிவிட்டிருந்தன போலும். எழமுடியுமா என்று பார்த்தான். உடலை அசைக்கமுடிந்தது. கைகளை ஊன்றி மெல்லத் தலையைத் தூக்கினான். வலியால் மெல்ல முனகினான்.

அந்த ஒலிகேட்டு வாசல்வழியாக இந்தியத் தாதி ஓடி வந்தாள். மெலிந்த கரங்கள் கொண்ட இளம்பெண். மாநிறமான வட்டமுகத்தில் உருண்ட பெரிய கண்களும் சிறிய குவிந்த உதடுகளும் கொண்டவள். முகத்தில் பொம்மை பிடுங்கப் பட்ட குழந்தைபோல ஒரு பாவனை எப்போதுமிருந்தது. அவள் ஏதோ சொன்னபடி அவன் தோளைப் பிடித்தாள். அவள் மீண்டும் சொன்னபோதுதான் ஆங்கிலத்தில் சொல்கிறாள் என்றே புரிந்தது. "இல்லை. நீங்கள் அசையக்கூடாது. தயவுசெய்து அசையாதீர்கள்"

"நெடுநேரமாக அசையாமல் கிடக்கிறேன்" என்றான். அந்தப்பெண்ணை முன்பு கண்விழித்தபோதும் ஒருமுறை பார்த்திருந்தான். அவள் வெள்ளைச்சீருடையில் ஒரு கீழைநாட்டுக் குருவி போலிருந்தாள்.

"நான் உங்களைப் புரட்டிப் போடுகிறேன்" என்று அவள் அவனைப் பிடித்தாள்.

"வேண்டாம். பரவாயில்லை" என்று ஏய்டன் கண்களை மூடினான்.

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"என் தலை சுழல்கிறது"

"அபின் கொடுத்திருந்தோம். ".

"ஓ" என்றான் ஏய்டன் "உன் பெயர் என்ன?"

"எலிஸா"

"நீ ஆங்கில இந்தியப் பெண்ணா?"

அவளது கண்கள் அனிச்சையாகத் தழைந்தன. அழப் போகும் குழந்தையின் பாவனையுடன் "ம்" என்றாள்.

"எலிஸா. நான் இங்கே வந்து எத்தனை நாட்களாகின்றன?"

"நான்கு. வரும்போது அபாயகட்டத்தில் இருந்தீர்கள். நிறைய ரத்தம் போய்விட்டிருந்தது. பிழைப்பது கஷ்டம் என்று டாக்டர் ஃப்ளெட்சர் சொன்னார்"

"என் உடலில் குண்டு இருந்ததா?"

"இல்லை. குண்டு உங்கள் நெற்றியைக் கிழித்து தலைமயிரில் ஒருபகுதியை வழித்துக்கொண்டு சென்றிருந்தது. நான் பார்த்தேன். எனக்கே பயமாக இருந்தது. வெள்ளையாக மண்டைஓடு தெரிந்தது. ஆனால் டாக்டர் ஃப்ளெட்சர் சொன்னார் மண்டை ஓட்டை குண்டு ஒன்றுமே செய்யவில்லை என்று. மண்டை ஓடு குண்டைவிட கடினமானதாம்." ஒற்றைச் சொற்களாக ஏகப்பட்ட சைகைகளுடன் அவள் பேசினாள்.

ஏய்டன் புன்னகைத்தான் "பரவாயில்லை. நீ ஒரு நல்ல மருத்துவ நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டாய். இனிமேல் யாராவது குடியில் கைநடுங்கி மண்டைஓட்டை வழித்துக்கொண்டு வந்து நின்றால் நீயே மருத்துவம் பார்க்கலாம்"

அவள் முகம் கூம்பி "மன்னிக்கவும்" என்றாள்.

"ஓ. என்ன இது? நான் வேடிக்கையாகச் சொன்னேன். எலிஸா. நீ இனிமையான பெண்"

"நன்றி சர்" என்று முகம் சிவந்து தலைகுனிந்தாள்.

"நான் இன்னும் எத்தனைநாள் இங்கே இருக்க வேண்டும்?"

"இன்னும் இரண்டு நாட்களில் இங்கே இருந்து போய் விடலாம். இரண்டு வாரத்தில் புண் சரியாகிவிடும். காயம் ஆழமில்லை. அது சீழ்கட்டுகிறதா என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் இரண்டுமணி நேரத் துக்கு ஒருமுறை காய்ச்சல் பார்க்கிறேன். நல்லவேளை, காய்ச்சல் இல்லை"

"நீ தாதியாக ஆகி எத்தனை மாதமாகிறது?"

"எட்டு" என்றாள்.

"நினைத்தேன்" என்று அவன் கண்களை மூடிப் புன்னகை செய்தான்.

"நான் உங்களுக்குக் கொஞ்சம் 'டீ' கொண்டுவரவா? நீங்கள் திரவ உணவு நிறையவே சாப்பிடலாம். 'டீ' உற்சாகத்தை அளிக்கும்"

"கொண்டுவா. நன்றி"

உண்மையிலேயே 'டீ' அவனுக்கு உற்சாகத்தை அளித்தது. "மரிஸா" என்றான்.

"சர்"

"மன்னித்துவிடு. எலிசா. எலிசா அந்தத் தலையணையை என் பின்னால் வை" அவன் எழுந்தமர அவள் தலையணையைப் பின்னால் வைத்தாள்.

"வலி எப்படி இருக்கிறது?"

"இருக்கிறது. நான் எழுந்து நடக்கலாமா?".

"நடக்கலாம். ஆனால் அபின் சாப்பிட்டிருப்பதனால் உங்களால் சமநிலை கொள்ள முடியாது"

"ஆமாம்" என்றபடி அவன் கண்களை மூடினான்.

"வாசிப்பதற்கு பைபிள் வேண்டுமா?"

"என்ன?"

"பைபிள்?"

"வேண்டாம்"

"சிறிய புத்தகம் சார்"

"வேண்டாமென்று சொன்னேன் உன்னிடம்" என்று அவன் உரக்கக் கத்தினான்.

"மன்னிக்கவும் சர்"

"பரவாயில்லை." அவன் புன்னகை செய்தான். பைபிளைத்தவிர வேறெதையாவது மனிதர்கள் வாசிப்பார்கள் என்று இந்தக் குழந்தைக்குத் தெரிந்திருக்குமா என்று நினைத்துக் கொண்டான்.

எலிஸா "மன்னிக்கவும். தேவை என்றால் கூப்பிடுங்கள். நான் வெளியேதான் இருப்பேன்" என்றபின் வெளியே சென்றாள்.

வெளியே காகங்களின் குரல் கேட்டுக்கொண்டிருந்தது. கடலோசை கேட்பதை வைத்து அது அனேகமாகக் கோட்டை அருகே உள்ள படைமுகாம் ஆஸ்பத்திரி என்று அவன் ஊகித்தான். கண்களை மூடியபோது அலையலையாக ரத்தம் இமைகளுக்குள் பரவிச்செல்வது தெரிந்தது.

அவன் தூங்கியிருக்கக் கூடும். எலிஸா வந்தபின் திரும்பும் ஒலி கேட்டுக் கண்விழித்தான். "என்ன?" என்றான்.

"இல்லை. நீங்கள் தூங்குவது தெரியாமல் ..."

"விழித்துக்கொண்டேன். சொல். என்ன?"

"இரண்டுநாட்களாகவே ஒருவர் உங்களைப் பார்க்க விரும்பி வந்துகொண்டிருக்கிறார். இப்போதும் வந்திருக்கிறார். தூங்குகிறீர்களா என்று பார்க்கும்படி சொன்னார்"

"யார்? ஃபாதர் பிரண்ணனா?"

"அவர் நேற்று வந்துவிட்டுப்போனார்". "இவர் ..." என்று தயங்கி "இவர் பெயர் காத்தவராயன்"

"ஓ" என்றான் ஏய்டன். கண்களை இறுகமூடியபோது தலையை அழுத்திக் கவ்வியது வலி. வலியின் அதிர்வை ஒவ்வொரு கணமாக உணர்ந்தபின் மெல்லக் கண்களைத் திறந்தான். "உள்ளே அனுப்பு" என்றான்.

அவள் "சரி" என்றபின் வெளியே சென்றாள். ஏய்டன் படபடக்கும் மனதுடன் அந்த வாசல் திரைச்சீலையையே பார்த்துக் கொண்டிருந்தான். 'இல்லை, நான் இனிமேல் எவரிடமும் எதையும் விளக்கவோ நியாயப்படுத்தவோ

போவதில்லை. இனி என்னிடம் சொற்கள் இல்லை. இதோ இந்தத் தற்கொலைமுயற்சி மூலம் நான் என்னைத் திட்டவட்டமாக வரையறை செய்துகொண்டுவிட்டேன். அதுதான் நான். அப்படியே ஆகட்டும். நான் என்னைப்பற்றிச் சொல்ல இனி இடமே இல்லை'.

திரைச்சீலையை விலக்கிக்கொண்டு காத்தவராயன் உள்ளே வந்தான். அதே வெள்ளைவேட்டி சட்டை, காக்கி கோட்டு, தலைப்பாகை. மீசையற்றமுகத்தில் ஒளிரும் சிறு கண்கள். "காலைவணக்கம் சார்." ஆனால் அவன் முகம் முற்றிலும் மாறியிருந்தது. தாடை சற்று கோணலானதுபோல. அல்லது தலைப்பாகையைக் கோணலாகக் கட்டியதுபோல.

"காலை வணக்கம். வா" என்றான் ஏய்டன். 'ஏன் இத்தனை பதற்றமடைகிறேன்? இவனைக் கண்டு அஞ்சுகிறேனா?' ஆனால் அவன் கண்களைச் சந்திக்க ஏய்டனால் முடியவில்லை. பார்வையை வெண்திரைச்சீலை அசையும் சுவரை நோக்கித் திருப்பிக் கொண்டான்.

காத்தவராயன் வந்து அருகே முக்காலியில் அமர்ந்தபின் ஒரு சிறிய பொட்டலத்தை அருகே வைத்தான். "இவை இனிப்பு நார்த்தங்காய் பழங்கள். நீங்கள் விரும்புவீர்களோ தெரியாது. ஆனால், இது எங்களூர் வழக்கம்"

ஏய்டன் அக்கணமே மனம் மலர்ந்தான். புன்னகையுடன் "நன்றி. அயர்லாந்தில் எலுமிச்சையை நலம்தரும் பழமாகக் கருதுவார்கள். எலுமிச்சை பூக்கள் எலுமிச்சை நறுமணப் பொருள் எல்லாமே அப்படித்தான்" என்றான். "மிக்க நன்றி"

"சார், நான் நேரடியாகவே சொல்லிவிடுகிறேன். நீங்கள் செய்துகொண்டது மாபெரும் முட்டாள்தனம். நீங்கள் இறந்திருந்தால் வாழ்க்கை முழுக்கத் தாளமுடியாத குற்றவுணர்ச்சியை நோக்கி என்னைத் தள்ளிவிட்டிருப்பீர்கள். இப்போதுகூட எங்களுக்கு அந்தக் குற்றவுணர்ச்சி இருக்கிறது"

ஏய்டன் அவனுடைய தெளிந்த கண்களைப் பார்த்தான். "நான், அன்று -" என ஆரம்பித்தான்.

"நீங்கள் அன்று ஆணையிடவில்லை சார். அது எனக்கு உறுதியாகத் தெரியும். உங்களால் அது முடியாது. நீங்கள் நிலைகுலைந்து போனீர்கள். எப்படி எதிர்வினையாற்றுவ தென்று தெரியாமல் கொந்தளித்தீர்கள். அதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஏனென்றால் நானும் அப்படித் தான் கொதித்துக் கொண்டிருந்தேன்". காத்தவராயன் அவன் கண்களைக் கூர்ந்து நோக்கிச் சொன்னான். "அது அவர்கள் திட்டமிட்டுச்செய்தது. சந்தேகமே இல்லை. அந்த ஹவில்தார் உங்கள் நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். அங்கே நின்ற ஒவ்வொரு குதிரைவீரனும் அதைப் பயன்படுத்திக் கொண்டான்"

"இல்லை. அதை அப்படி நினைக்க வேண்டியதில்லை. ஒரு புரிதல் பிழையாக இருக்கலாம். அது "

"சார், உங்களைவிட நான் இவர்களை நன்றாக அறிவேன். அங்கே வரும்போதே முரஹரி அய்யங்கார் அவர்களை அப்புறப்படுத்தத் தேவையான படகுகளைக் கொண்டுவரச் சொல்லியிருந்தார். அவர் வருவதற்கு முன்னரே அவர் வருவார் என்று ஹவில்தார் நாராயணன் அறிந்திருந்தான். அந்தக் குதிரை வீரர்கள் அனைவரும் அதற்காகக் காத்துநின்றிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரே எண்ணத்துடன் இருந்தார்கள். அவர்களுக்குள் மிகச்சரியான மன ஒற்றுமை இருந்தது. ஒருவர் கண்ணை ஒருவர் பார்த்தாலே எல்லா எண்ணங்களும் கைமாறப் பட்டுவிடும். அந்தச் சூழலில் நீங்களும் மிஸ்டர் பார்மரும் மட்டும்தான் அன்னியமாக இருந்தீர்கள்."

"நீ மிகையாகக் கற்பனை செய்கிறாய். அது ஒரு தற்செயலாகக்கூட இருக்கலாம்"

"சர். அது தற்செயல் அல்ல. அது மிகச்சரியான ஒரு சந்தர்ப்பம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் அந்தக் கணத்தில் புரிந்துகொண்டு ஒட்டுமொத்தமாக அத்தனைபேரும் முன்னெடுத்தார்கள் என்றால் அனைவருமே அதற்காகக் காத்திருந்தார்கள் என்றுதான் அர்த்தம். அவர்கள் தங்கள் மொத்தப் புலன்களாலும் அதை எதிர்ப்பார்த்து ஊசிமுனையில்

நின்றிருந்தார்கள். அந்தத் தாக்குதல் நிகழும்போது நான் ஒரு கணம் முரஹரி அய்யங்காரின் முகத்தைப் பார்த்தேன். நீங்கள் அதைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் ஒருபோதும் உங்கள் கொடுங்கனவுகளில் இருந்து அந்த முகம் விலகியிருக்காது."

ஏய்டன் பிரமித்த விழிகளுடன் பார்த்து நின்றான்.

"சார், அன்று அந்த தாக்குதலை நடத்திய அத்தனை முகங்களும் ஒன்றுபோலத்தான் இருந்தன. கொடூரமான வெறி கொந்தளிக்கும் முகங்கள். உச்சக்கட்டக் கூச்சலில் அப்படியே நிலைத்துவிட்ட பாவனைகள். ஆனால் அவரது முகம். அது வேறுமாதிரி இருந்தது சார். அது ஒரு உச்சகட்ட பரவசத்தில் இருந்தது. ஒவ்வொரு காட்சியையும் கண்ணாலும் காதாலும் அள்ளிஅள்ளிப்பருகி வெறி தீர்ப்பதுபோல. பிறகு நான் நினைத்துக்கொண்டேன். அங்கே நூற்றுக்கணக்கான உடல்கள் பின்னிப்பிணையும் ஒரு காமக்களியாட்டம் நடந்தால் அதைப்பார்க்கும் முகம் அப்படித்தானிருக்கும் என."

காத்தவராயன் அந்த உவமையால் இறுக்கம் தளர்ந்து, மெல்லப் புன்னகை புரிந்தான். கசப்பு நிறைந்த புன்னகை. "நான் அப்படி ஒரு முகத்தை நினைவுகூர்கிறேன். நான் இளவயதைக் கழித்த நீலகிரிக் காடுகளில் பழங்குடிகள் சிலர் வருடாந்தரத் திருவிழா ஒன்றில் மதுஅருந்திவிட்டு அப்படி ஒரு கூட்டுப் புணர்ச்சியில் ஈடுபடுவார்கள். அதைக்கேள்விப்பட்டு நானும் என் நண்பனும் ரகசியமாகச் சென்று புதர்களிடையே ஒளிந்திருந்து பார்த்தோம். அந்தத் திருவிழா முற்றத்தில் அவர்கள் மூட்டியிருந்த தீயின் சிவப்பு ஒளியில் காட்டுமதுவில் தன்னிலைமறந்த ஆணும்பெண்ணும் பிணைந்து கொண்டிருந்தார்கள். ஆனால் நான் திடுக்கிட்டது அதை பார்த்தபடி தீயருகே கம்புடன் அமர்ந்திருந்த ஒரு படுகிழவனின் முகத்தைக் கண்டு. தீயைவிட உக்கிரமான ஒன்று அந்த முகத்தில் எரிந்துகொண்டிருந்தது. பிறகு எவ்வளவோ முறை அதைப்பற்றி யோசித்திருக்கிறேன். அங்கே மண்ணில் புரண்ட ஒவ்வொரு மனித ஜீவனைவிடவும் அவன் காமம் பெரிது என்று. ஏனென்றால் அது இயலாதவனின் காமம்"

"நீ எப்போதுமே என்னை அச்சுறுத்துகிறாய்" என்றான் ஏய்டன். சிலகணங்கள் கண்களைமூடிக்கொண்டான். நெற்றி வலித்தது. பின்பு "அங்கே யாரும் இறக்கவில்லைதானே?"

"அதைப்பற்றி என்ன?" என்றான் காத்தவராயன்.

"என்ன சொல்கிறாய்? எத்தனைபேர் இறந்தார்கள்?"

"சார், எத்தனைபேர் இறந்தாலென்ன? தக்காணத்தில் மட்டும் இந்தவருடம் இதுவரை ஒன்றரை கோடிப்பேர் இறந்திருப்பதாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் தொழிலாளர் பிரதிநிதிகள் சத்தம்போட்டபோது அரசுத்தரப்பில் என்ன சொல்லப்பட்டது தெரியுமா?" காத்தவராயன் புன்னகை செய்தான். அதே கசப்புமண்டிய புன்னகை. "இந்தியர்கள் முயல்களைப்போல. அவர்கள் மிக எளிதாகப்பெற்றுப்பெருகிவிடுவார்கள். 1770களின் பெரும்பஞ்சங்களில் அவர்களின் மக்கள்தொகை ஐந்திலொரு பங்கு அழிந்தது. இப்போது இத்தனைபேர் எப்படி வந்தார்கள்? அப்படிச் சொன்னவர் நிதித்துறைச் செயலர் பால் ஆண்டர்ஸன். அமைச்சர் ஒருபடி மேலே சென்று இந்தப் பஞ்சங்கள் அவசியமானவை என்று வாதிட்டார். மக்கள் தொகை மிக்க இந்தியாபோன்ற நாடுகளில் இயற்கையே இந்த வழிமுறையைக் கடைப்பிடிக்கிறது என்று அவர் மால்தூஸையும் டார்வினையும் மேற்கோள் காட்டினார். இந்தப் பஞ்சங்களால் உழைக்கமுடியாதவர்களும் நோயாளிகளும் கீழ்நிலை மக்களும்தான் சாகிறார்கள். அவர்கள் சாவதனால் மிச்சமாகும் உணவுமூலம் இதைவிடப் பெரும்பஞ்சங்கள் தவிர்க்கப்படுகின்றன. உழைக்கக்கூடியவர்களும் உபயோகமானவர்களும் சாகாமல் எஞ்சுகிறார்கள். என்னதான் சொல்லுங்கள். பிரிட்டிஷ் நாடாளுமன்ற உரைகள் சுவாரசியமானவை. எல்லாவற்றையும் அவர்களால் தர்க்கபூர்வமாக முன்வைக்க முடிகிறது. ஒருவேளை நாளை உருவாகிவரும் புதிய ஜனநாயக உலகுக்கே பிரிட்டிஷ் நாடாளுமன்ற உரைகள் முன்னுதாரணமாக அமையக்கூடும்"

"வெள்ளைத்தோலின் நியாய உணர்ச்சி" என்றான் ஏய்டன் கிண்டலாக.

"ஆமாம் சார். அங்கே 'ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்' என்று அமைப்பாவது இருக்கிறது. அவர்கள் எங்கோ யாரோ கறுப்பர்கள் சாவதற்கு எதிராகக் கண்ணீர் மல்க எழுந்து நின்று கத்துகிறார்கள். பிறந்தது முதல் பசியையே அறியாத பிரபுக்கள். சிலர் பிரபுக்கள் சபையில் பைபிளைத்தூக்கிக்காட்டி கண்ணீருடன் எங்களுக்காக மன்றாடுகிறார்கள். எங்களுக்காகக் குரலெழுப்ப நாலைந்து நாக்குகளாவது இருப்பது அங்கே தான். நாளையும் நாங்கள் நம்பியிருக்க அங்கேதான் இதயங்கள் உள்ளன. வெள்ளைத்தோல் மூடிய இதயங்கள்."

"அந்த நம்பிக்கை உன்னைக் கூட்டிச்செல்கிறது. ஆனால் எனக்கு நம்பிக்கை இல்லை. எனக்கு இன்று இந்த மானுட இனம் மீதே நம்பிக்கை இல்லை" என்றான் ஏய்டன் "கருப்பனுக்கு என்ன ஆயிற்று? இருக்கிறானா?"

"சர், கோடிக்கணக்கானபேர் இருக்கிறார்களா இல்லையா என்றே தெரியவில்லை"

"நீ நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை"

"நீங்கள் கேட்ட எல்லா கேள்விக்கும் இதுதான் பதில். நாங்கள் சடலங்களைக் கணக்கிடும் நிலையில் இல்லை. அதை நீங்கள் செய்யுங்கள். நாங்கள் வாழ்பவர்களைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறோம். சாவைப்பற்றி நாங்கள் யோசித்தால் எஞ்சியவர்களும் செத்து அழிவோம். நாங்கள் வாழ்க்கையைப் பற்றி மட்டும் யோசிக்கிறோம். எங்கள் வாழ்க்கையை, எங்கள் சந்ததிகளின் வாழ்க்கையை. எங்களைத் துரத்திவரும் சாவை நாங்கள் அப்படித்தான் வெற்றிகொள்ள முடியும்."

ஏய்டன் பெருமூச்சு விட்டான்.

"அதனால் ஐஸ்ஹவுஸில் நடந்த போராட்டத்தைப்பற்றி மட்டுமே நாங்கள் பேசுகிறோம். அதன் அழிவுகளைப்பற்றி அல்ல. அழிவே நிகழவில்லை. நிகழ்ந்தால் அது எப்போதும் நிகழும் அழிவுகளில் ஒரு சிறுதுளிதான். நாங்கள் போராடி

யிருக்கிறோம். எங்களால் போராட முடிகிறது. இப்போதைக்கு அதுதான் எங்களுக்கு முக்கியம். நாங்கள் தொடங்கி யிருக்கிறோம். இந்த மண்ணில் இன்னும் நூறு ஆண்டுக்காலம் நடக்கப்போகும் பெரும் போராட்டங்களின் முதல் அசைவு நிகழ்ந்திருக்கிறது. அது எங்களுக்குப்போதும்." அவன் சொற் களுக்குத் தொடர்பற்றதுபோல முகம் இறுக்கமாக இருந்தது. "ஆகவேதான் ஐஸ்ஹவுஸில் நேற்றுக் காலை நிகழ்ந்ததைக்கூட எங்கள் ஆட்கள் எவரிடமும் சொல்லக்கூடாது என்று ஆணையிட்டேன்."

"என்ன?" என்றான் ஏய்டன், அவனுக்கு மூச்சுத் திணறுவது போலிருந்தது.

"ஐஸ்ஹவுஸில் முழுக்க முழுக்க புதிய ஊழியர்களைப் பணியில் அமர்த்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுபவ மில்லை. போராட்டம் காரணமாக ஐஸ்கட்டி அடியில் உருகி அந்த பொருக்குப்பனி மீது அமர்ந்திருக்கிறது. மர உறையை உடைத்து உப்புமரத்தூள் கலவையை விலக்கி அதை மீட்கும் போது ஒருவன் அதைச் சாதாரணமாகத் தள்ளிவிட்டான். அவன் அதை மிகக்கனமான கற்பாறை என்று நினைத் திருப்பான். ஆனால் அது நீரில் மிதப்பதுபோல வேகமாகச் சறுக்கிச்சென்று எதிர்ச்சுவரில் மோதியது. அங்கே நின்ற நான்கு ஊழியர்களைச் சுவரோடு சேர்த்து நசுக்கிக் கூழாக்கிவிட்டது"

அவன் சொல்வதற்குள் அந்தக்காட்சியை ஏய்டன் கற்பனையில் கண்டுவிட்டான். 'வெண்பனிப்பாறை கிரீச்சிடும் ஒலியுடன் வழுக்கிச்சென்று பலகைப்பாளங்களை முறிக்கிறது. வேலையாட்கள் அலறுகிறார்கள். மதம்கொண்டெழுந்த யானையைப்போல'.

அதே வரியைக் காத்தவராயன் சொன்னான் "உயிர்தப்பிய ஒருவன் சொன்னான். அந்தப் பனிக்கட்டி முனைகள் மழுங்கிப் போய் ஒரு பிரம்மாண்டமான வெள்ளையானை போலிருந்த தாம். பிளிறியபடி மத்தகம் குனிந்து தாக்கவரும் யானை போலவே அது வந்தது. மத்தகத்தால் அவர்களைச் சுவரோடு சேர்த்து நசுக்கியது. அவர்களின் உடல்கள் உடையும் ஒலி

கேட்டதாம். ரத்தம் அப்பகுதி முழுக்க சிதறித்தெறித்ததாம். மத்தகம் முழுக்க ரத்தம் வழிய நிற்கும் யானை போல பனிக்கட்டி நின்றது என்றார்கள். அதை அணுகவே எல்லாரும் பயந்தார்களாம். சடலங்களை அப்படியே விட்டுவிட்டு அலறியபடி வெளியே ஓடியிருக்கிறார்கள். அது திரும்பிவந்து மறுபக்கத்தில் தாக்கும் என்று கூச்சலிட்டிருக்கிறார்கள். என்னிடம் சொல்லும் போதுகூட அவன் நடுங்கிக் கொண்டிருந்தான். அந்தப் பனிக்கட்டிக்குள் ஏதோ கொடூர ஆவி இருக்கிறது என்று சொன்னான். அவர்கள் எல்லாரும் அதை நம்புகிறார்கள்''

ஏய்டன் அதற்குமேல் கேட்க விரும்பவில்லை. அவன் கண்களைமூடிக் கொண்டான்.

"நீங்கள் இன்னும் சிலநாட்களில் தென்காசிக்குச் செல்லக்கூடும் என்றார்கள். நான் மீண்டும் உங்களைப் பார்க்க முடியாமல் போகலாம். அதனால்தான் வந்தேன்'' ஏய்டன் அவன் கைகளை மெல்லத் தொட்டான் "நன்றி சார். எங்கள் அத்தனைபேர் சார்பிலும் அதைச் சொல்கிறேன். நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கு உங்களைப்பற்றிச் சொல்வோம்.''

ஏய்டன் மெல்ல உடல் விதிர்த்தான். அவன் கண்கள் கலங்கின. நடுங்கும் கைகளால் அவன் காத்தவராயன் கைகளைப்பற்றிக் கொண்டான்.

"உங்களைப் போன்றவர்களை நம்பித்தான் முன்னால் செல்கிறோம் சார். குகைபோலப் போய்க்கொண்டே இருக்கிறது இந்தப்பாதை. மறுமுனையில் ஒளி இருக்கிறதென்ற நம்பிக்கையை உங்களில் சிலர்தான் கொடுக்கிறீர்கள்''

சட்டென்று ஏய்டன் அதைக் கண்டுபிடித்தான். "காத்தவராயன், உங்கள் முகம் ஏன் இப்படி இருக்கிறது என்று இதுவரை யோசித்துக் கொண்டிருந்தேன். இப்போது தெரிகிறது, அதில் உங்கள் மதச்சின்னம் இல்லை''

"அதை நான் துறந்துவிட்டேன்'' என்று காத்தவராயன் நிதானமாகச் சொன்னான். கண்கள் இயல்பாக இருந்தன.

"எதை. அந்த சின்னத்தையா? ஏன்?''

"அந்த மதத்தை. அந்தக் கடவுளை. அந்த அடையாளங்கள் அனைத்தையும்"

"ஓ" என்றான் ஏய்டன் அர்த்தமில்லாமல். விசித்திரமான ஒரு நடுக்கம் அவனுள் ஓடிக்கொண்டிருந்தது.

"நான் உறுதியான வைணவனாக இருந்தேன். வைணவத்தைக் கற்றிருக்கிறேன். வைணவ ஆசாரங்கள் எதையும் விட்டுவைத்ததில்லை. ஆனால், எங்கள் சாதியினரை வைணவ ஆலயங்களுக்குள் அவர்கள் அனுமதித்ததில்லை. ஒரு நாள் நிலைமை மாறும். நெற்றியில் நாமத்தைப் போட்டுக்கொண்டு மலரும் பழங்களும் நிறைந்த தட்டுடன் என் சந்ததிகள் அந்த ஆலயங்களுக்குள் செல்வார்கள் என்று நம்பியிருந்தேன். ஆனால்." அவன் கண்களில் ஈட்டிமுனை திரும்புவதுபோல ஒளி மாறுபட்டது. "நான் பார்த்தது ஒரே ஒரு விஷ்ணு கோயிலைத்தான். ராயலசீமாவில் கைவிடப்பட்டு கிடந்த இடிந்த விஷ்ணுகோயில் ஒன்றுக்குள் நுழைந்து பார்த்திருக் கிறேன். கூப்பிய கைகளுடன் கண்ணில் கண்ணீருடன் அந்தக் கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தேன். கால்தூக்கி எழுந்து பற்களைக்காட்டி சீறி நின்ற கல்குதிரைகள். அவற்றின் மீது ஓங்கிய ஆயுதங்களுடன் வெறிகொண்டு விழித்து நின்ற கல்வீரர்கள். விதவிதமான வெறிப்புகள். உள்ளே இருண்ட கருவறைக்குள் மல்லாந்துக் கிடந்த விஷ்ணுவின் கரிய திருமேனியைத் தொட்டு வணங்கினேன்."

அவன் என்ன சொல்கிறான் என்று ஏய்டனுக்குப் புரியவில்லை. காத்தவராயன் சொன்னான் "சார், அன்று ஐஸ்ஹவுஸில் நடந்த தாக்குதல் எனக்கு ஒரு விசித்திரமான பிரமையைக் கொடுத்தது. உங்கள் குதிரைப்படையைப் பார்க்கை யில் எனக்கு அந்தக்கோயில் அப்படியே உயிர்கொண்டு கிளம்பிவந்தது போலிருந்தது. அந்தக்குதிரைகள் கனத்த கல்குளம்புகளுடன் எங்கள் மீது பாய்ந்தன. அந்த ஆயுதங்கள் எங்களை அடித்துக்கிழித்தன. அதன் நடுவே அந்தப் பள்ளிக் கொண்ட முகம். அதிலிருந்த நாமம். அது உக்கிரமான பரவசத் துடன் சிதறித் தெறிக்கும் எங்கள் ரத்தத்தைப் பார்த்துக்

கொண்டிருந்தது. அதன் நாவில் எச்சில் ஊறிக்கொண்டிருந்தது. நான் அந்தத் தெய்வத்தைப் பார்த்துவிட்டேன் சார், அது என்ன என்று தெரிந்து கொண்டேன்''

ஏய்டன் கடற்காற்றில் அதிரும் காகிதம்போல நடுங்கிக் கொண்டிருந்தான். அதைக் காத்தவராயன் கவனிக்கவில்லை. "நான் அப்போதே என் நெற்றியின் அடையாளத்தை அழித்து விட்டேன். ரத்தமும் நிணமும் வழிய என்னை வெட்டி விலக்கிக் கொண்டேன். இனி எனக்கு மதமும் தெய்வமும் இல்லை. ஆமாம், அப்படித்தான் நான் மூன்றுநாட்கள் நினைத்திருந்தேன். மூன்றுநாட்கள் நான் தெய்வமில்லாத இருட்டில் வாழ்ந்தேன். சார், தெய்வமில்லாத இடத்தில் நம்பிக்கைகள் எவையும் உயிருடன் எஞ்சுவதில்லை. இந்த இருண்ட நாட்களில் நம்பிக்கை இல்லாமலாவதென்பது அபாயகரமானது. விஷப்பாம்புகள் நெளியும் காட்டின் இருட்டில் கைவிளக்கு அணைந்து விடுவது போல. என்னைச் சுற்றிப் பாம்புகள் நெளிய ஆரம்பித்தன''

"அப்போதுதான் எனக்கு நாம் அன்று சென்ற அந்த ஏரிச்சதுப்பு நினைவுக்கு வந்தது. புதுப்பேட்டை. அங்கே ஏதோ ஒன்று என் ஆழத்தில் விழுந்தது. அப்போது அது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. மதிப்புமிக்க ஒன்று என எண்ணி அதை எடுத்து என் ஆன்மாவில் வைத்துக்கொண்டேன். அதைத் துழாவி மீண்டும் எடுத்தேன். அது ஒரு சொல். உங்களுக்கு நினைவிருக்கும்''

ஏய்டன் தலையசைத்தான். காத்தவராயன் தொடர்ந் தான் "புண்ணியம் என்ற சொல். அதை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அதன் அர்த்தம் என்னை முழுக்க எட்டியதில்லை. நான் அந்தக் கிழவியைத் தேடிச்சென்றேன். அவளுக்கு ஒன்றும் தெரியாது. அவளுடைய உள்ளே இருந்து அவளது ஆயிரம் வருட மூதாதையரின் ஆன்மா பேசிக்கொண் டிருக்கிறது என்று நினைத்தேன். அவளிடம் கேட்டேன், அன்று நீ ஏன் அப்படிச் செய்தாய் என்று. பசியில் சாகும்போதும் ஏன் விருந்தினருக்கு உணவளிக்கப் பின்னால் ஓடிவந்தாய் என்று. அவள் அடுத்த மகத்தான வார்த்தையைச் சொன்னாள். சார் அவள் என்னிடம் அது அவளுடைய தர்மம் என்றாள்''

"கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்றான் காத்தவராயன் உள்வேகத்தால் கிசுகிசுப்பாக ஆன குரலில்.

ஏய்டன் 'இல்லை' என்று தலையசைத்தான்.

"அது பௌத்தமதத்தின் சொல். என் தந்தையின் சேமிப்பில் இருந்த அவர்களின் நூல் ஒன்றை நான் வாசித்திருக்கிறேன். அவர்கள் 'கருணை' என்கிறார்கள். 'புண்ணியம்' என்கிறார்கள். அப்படி நூறுநூறாயிரம் சொற்களில் சொல்பவை அனைத்தையும் தொகுத்து 'தர்மம்' என்கிறார்கள். ததாகதர் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னால் அருளிய ஞானத்தின் விதை அது. இந்நாட்டில் எங்களைப்போலவே அந்த ஞானமும் தோற்கடிக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்பட்டுவிட்டது. நான் இன்னும் அந்தச் சொல்லைப் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் கைவிளக்கென வைத்துக் கொள்ள எனக்குச் சில சொற்கள் இன்று கிடைத்திருக்கின்றன. நம்பிக் காலடி எடுத்துவைக்க ஒரு பாதை தெரிகிறது."

ஏய்டன் அச்சொற்களைக் கேட்டபடி சன்னல்திரைச் சீலையையே பார்த்துக்கொண்டு இருந்தான். காத்தவராயன் தன் உணர்ச்சிகளைத் தானே அளவிடுபவன் போல அமைதியாக அமர்ந்திருந்தான். காற்றில் திரைச்சீலை மட்டும் படபடத்தது. சுறுசுறுப்பான சின்னப்பெண் ஒருத்தி அறைக்குள் வந்து குதித்தாடிச் செல்வதுபோல. பின் காத்தவராயன் அசைந்தான். எழுந்து "நான் விடைபெறுகிறேன் சார். பிறிதொரு நாள் சந்திப்போம்" என்றான்.

அவன் செல்வதை ஏய்டன் கண்டான். வெகுநேரமாக காத்தவராயன் சென்றுகொண்டே இருந்தான். ஏய்டன் அவனை அழைக்க, பேச எண்ணினான். அதைத் தவிர்த்தான். மீண்டும் மீண்டும். "சர்?" என்று காத்தவராயன் திரும்பிய போதுதான் 'தான் கூப்பிட்டிருப்பதை' ஏய்டன் உணர்ந்தான்.

"அழைத்தீர்களா?

"ஆம். நான் ஒன்று உன்னிடம் சொல்லவேண்டும்"

"சர்"

"நீ சொன்னாயல்லவா உன் நம்பிக்கை அழிந்ததைப் பற்றி?"

காத்தவராயன் இமைக்காமல் பார்த்தான்.

"நான் ஏன் சுட்டுக்கொண்டேன் தெரியுமா?"

காத்தவராயன் கண்களுக்குள் தூரத்தில் ஒரு சன்னல் திறப்பதன் கருவிழிப் பிரதிபலிப்பு போலச் சிறு சலனம் மட்டும் தெரிந்தது.

"நான் என் கபாலத்தைப் பிளந்து அவன் காலடியில் போடமுயன்றேன்"

காத்தவராயன் எந்த எதிர்வினையையும் காட்டவில்லை. அவன் தாடை மட்டும் இறுகி மீண்டது. ஏய்டன் பார்த்துக் கொண்டே இருந்தான். மீண்டும் தாடை இறுகியது. கழுத்துத் தசை ஒன்று இழுபட்டு தளர்ந்தது. பின்பு அவன் திரும்பித் திரையைக் கையால் விலக்கி வெளியே சென்று மறைந்தான். வெண்திரை நிலைகொள்ளாமல் அசைந்தபடியே இருந்தது.



# 14

"வெள்ளையானையா? என்றாள் திருமதி கார்ட்டர். "உண்மையாகவா? வெள்ளையானைகூட உண்டா என்ன?"

"நான் பர்மாவில் ஒரு வெள்ளையானையைப் பார்த்திருக்கிறேன்" என்றார் கலெக்டர். மெல்லக் கனத்த உடலை உலுக்கி ஏப்பம் விட்டார். "முதலில் நான் அந்த யானைமேல் ஏதோ மாவுகொட்டிவிட்டது என்றுதான் நினைத்தேன். பிறகுதான் தெரிந்தது. அதன் துதிக்கை சிவப்பாக இருந்தது."

"ஓ! "என்று திருமதி பிரவுன் செயற்கையாக வியந்தாள். "நான் எப்படி ஆசைப்படுகிறேன் தெரியுமா அப்படி ஒன்றைப் பார்க்க. அற்புதம்!"

"நீ வெண்பன்றியைப் பார்த்திருக்கிறாய்தானே?" என்றார் மாவட்ட நீதிபதி. "அதைப்போலப் பத்து மடங்கு கற்பனை செய்து கொள்." அவர் கையைத் தூக்கினார் "இல்லை இருபது மடங்கு. ஒருவேளை அதற்கு மேலே கூட"

ஸ்ரீனிவாச அய்யங்கார் "எங்கள் மதத்தில் வெள்ளை யானை என்றால் மிகவும் புனிதமானது. அதை நாங்கள் ஐராவதம் என்று சொல்லுவோம். இந்திரனின் வாகனம் அது" என்றார்.

"என்ன பெயர்?" என்று கேட்டபடி காப்டன் சாம் தன் சிறிய தோலுறைபோட்ட குறிப்பேட்டைத் திறந்து சிறிய பென்சிலை உள்ளிருந்து எடுத்தான். "என்ன பெயர்?"

அய்யங்கார் ஆங்கில எழுத்துக்களில் அந்த பெயரைச் சொன்னார். "ஏ. ஐ. ஆர்."

"இங்கே இந்தியாவில் வெள்ளையானை இருக்கிறதா?" என்று செல்வி ஜேன் செல்லம் கொஞ்சுவது போலக் கேட்டுக் கொண்டு காப்டனின் தோளில் உரசிச் சாய்ந்து கொண்டாள். அவளுடைய திறந்த தோள்களில் இருந்து வெண்ணிறமான கவுன் நாகரீகமாகச் சற்றே இறங்கியிருந்தது. முலைகளின் இடைவெளி நன்றாகச் சிவந்திருந்தது.

"இந்தியாவில் இல்லை என்று நினைக்கிறேன்" என்றார் ஸ்ரீனிவாச அய்யங்கார்.

மாவட்ட நீதிபதி "காடுகளில் இருக்கும். இந்தியாவின் காடுகள் மிக அடர்த்தியானவை" என்றார்.

"திருவிதாங்கூர் மகாராஜாவிடம் ஒரு வெள்ளையானை இருந்ததாக என் அப்பா சொல்லியிருக்கிறார்" என்று தீத்தாரப்ப முதலி சொன்னார்."எங்கள் குடும்பம்தான் மகாராஜாவின் காடுகளில் மரங்களை வெட்டும் குத்தகையை எடுத்திருந்தது. ஒரு வெள்ளையானை கண்டிப்பாக இருந்தது. அதை மகாராஜா அனந்தபத்மநாபசாமி கோயிலுக்குத் தானம் செய்தார். துரதிருஷ்டவசமாக அது அதிக நாள் உயிர்வாழ வில்லை. அதற்குக் கண்ணிலும் ஏதோ பிரச்சினை இருந்தது. ஆனால் அது இருந்தபோது மகாராஜா தினமும் அதை வணங்கி வந்தார்"

"அதை முன்பக்கம் வணங்குவார்களா இல்லை பின்பக்கமா?" என்றாள் கலெக்டரின் மனைவி. எல்லாரும் சிரித்தார்கள். கலெக்டரின் மனைவி அவளுடைய காபிக் கொட்டைகள் போன்ற பற்களைக் காட்டிச் சிரித்துக்கொண்டு "ஏனென்றால் இவர்கள் பசுக்களைப் பின்பக்கம்தான் வணங்குகிறார்கள்"

"யானைகளையும் பின்பக்கம் வணங்கலாம். துதிக்கையால் பிடிக்க வராது அல்லவா?" என்றாள் திருமதி கார்ட்டர்.

ஏய்டன் புழுக்கத்துடன் கோட்டுப்பித்தான்களைக் கழற்றிக்கொண்டான். பங்கா மிக மெதுவாக ஆடிக்கொண்டிருந்தது. கூடம் முழுக்க புகையிலைப்புகை பரவியிருந்தது. மேலும் சன்னல்களைத் திறக்கச் சொல்லலாம் என்று நினைத்தான். ஆனால் அதைச் சொல்லவும் சோம்பலாக இருந்தது. அவனுடைய மனமும் எண்ணங்களும் எல்லாமே நனைந்து ஊறிக் கனத்து ஒட்டிக்கிடந்தன.

மதுப்புட்டிகள் பரப்பப்பட்ட பெரிய தட்டத்துடன் வயதான கறுப்புப் பட்லர் சத்தமில்லாமல் சுற்றிவந்தான். ஏய்டன் கையசைத்து அவனை அழைத்தான். அவன் மௌனமாக வந்து தட்டைக் காட்ட நீலநிறமான புட்டியை ஏய்டன் எடுத்துக்கொண்டான்.

திருமதி கார்ட்டர் சிரித்தபடி "ஓ" என்றாள். "ஒருமுறை கூட நீங்கள் பட்லர் ஏமாற்றமடையும்படி விட்டதில்லை மேஜர் பைர்ன்" என்றாள்.

"அவரது தலைக்காயம் ஆறும் வரை அவர் அதிகமாக குடிக்காமலிருப்பதே நல்லது" என்று செல்வி ஜேன் சொன்னாள்.

"இல்லை. அதனால் ஒன்றுமில்லை. மட்டுமல்ல. அது அவரது வலியைக்குறைத்து அவரை எளிதாகத் தூங்கச் செய்யும்" என்றார் ஒற்றைக்கண்ணாடியின் வளைந்த தடம் விழுந்த இடதுகண்ணும் இடப்பக்கமாக வாரிய செம்பட்டைத் தலைமுடியும் கொண்ட நீளமுகத்தவரான டாக்டர் சிம்ஸன் "நான் அவரது காயத்தைப் பார்த்தேன். சிறிய காயம்தான். ஆனால் அதிக பரப்பளவுள்ளது"

"நான் நேற்றுத் திருமதி விக்ஃபீல்டிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவள் சொன்னாள். புதிய மேஜர் குடிப்பதற்காக விசேஷப்பயிற்சி எடுத்திருக்கிறார் என்று. அவர் மாலுமிபோலக் குடிக்கிறார் என்று சொன்னால் அது அபவாதமாகிவிடுமாம்.

அவர் ஏழெட்டுமொழிகள் சேர்ந்து குடிப்பதுபோலக் குடிக்கிறாராம்" திருமதி கார்ட்டர் சொன்னாள்.

அனைவரும் சிரித்தார்கள். ஏய்டன் மெல்ல புன்னகை செய்தான்.

"என்னதான் சொன்னாலும் நீங்கள் வந்து எட்டுநாட்க ளாகின்றன. இன்னும் தேவாலயத்துக்குப் போகவில்லை என்றால் அது தவறு" திருமதி பிரவுன் பச்சைத்தவளையின் தாண்ட போலத் தொங்கிய தாடை அசைய சொன்னாள். "நாமெல்லாம் கிறித்தவர்கள். இயேசு கிறிஸ்துவின் ரத்தத்தையும் மாமிசத்தையும் ருசித்தவர்கள்"

"அதற்கு முன் பாவத்தின் கனியை ருசித்தவர்கள்" என்றார் டாக்டர் சிம்சன்.

திருமதி பிரவுன் புரியாமல் அவரைப்பார்த்தாள். டாக்டர் சிம்சன் "நாம் பாவத்தின் கனிகளைத் தொடர்ந்து தின்கிறோம். பாவத்தின் பழச்சாறைக் குடிக்கிறோம். அதைச் சமன் செய்வ தற்காக ஏசுவின் மாமிசத்தையும் ரத்தத்தையும் குடிக்கிறோம். ஹலேலூயா" என்றார்.

திருமதி பிரவுன் "ஹலேலூயா! தேவனைத் துதியுங்கள்" என்று சொன்னாள்.

"ஓ. அவரும் சர்ச்சுக்குப் போகாதவர். அவர் ஷெல்லி படிக்கிறார்" என்று மாவட்ட நீதிபதி சொன்னார். "அவர் என்னைத் தினமும் வந்து பார்த்து ஷெல்லியின் மதத்துக்கு ஞானஸ்நானம் செய்துவைக்க முயற்சி செய்தார்"

"பிறகு?" என்றாள் செல்வி ஜேன் கிளுகிளுப்பாகச் சிரித்தபடி

"நான் அவர் வந்ததுமே உயர்தர மதுவை மேஜைமேல் வைத்துவிடுவேன். அதுதான் என்னைக் காப்பாற்றிய புனித ரத்தம்! ஹோ ஹோ ஹோ"

அத்தனைபேரும் உரக்கச்சிரித்தார்கள்.

திருமதி பிரவுன் "இந்த ஷெல்லி. அவன் ஒரு அந்திக்கிறிஸ்து என்கிறார்கள். அந்திக்கிறிஸ்து அழகானவன்,

அவன் சொற்கள் மிகவும் இனிமையானவை என்று சொல்லப்பட்டிருக்கிறது" என்றாள்.

டாக்டர் சிம்ஸன் "ஆமாம் அத்துடன் அவன் கிறிஸ்துவின் சகோதரன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் கிறிஸ்துவைப் போலவே இருப்பான். கிறிஸ்துவைப் போலப் பேசுவான். கிறிஸ்துவைப்போலவே மரிப்பான். தெரியுமா, ஷெல்லியும் முப்பது வயதிலேயே இறந்துபோனான். அவனுடைய ஒளிமிக்க இளமையான முகத்தைப் பார்க்கையில் எனக்கு ஏசுதான் நினைவுக்கு வருகிறார். அவன் முகத்தில் சிலுவையில் தொங்கும் மீட்பனின் புனிதமான பெருந்துயரம் இருக்கிறது. யாராவது ஒரு நல்ல ஓவியன் ஷெல்லியின் முகத்தை ஏசுவின் முகமாக உருவகித்து ஒரு சிலுவைப்பாடு ஓவியத்தை வரைந்தால் அந்த ஓவியம் உலகப்புகழ் பெறும். ஆமாம்" என்றார்.

"தெய்வநிந்தனை" என்றாள் திருமதி பிரவுன். "ஆமாம். கிறித்தவர்களாகிய நாம் " ஏப்பம் வந்து அவளால் முடிக்க முடியவில்லை.

"செல்வி ஜேன், ஏசுவின் முகம் என்று நாம் நினைக்கும் இந்த ரோமானிய முகம் ஏசு இறந்துபோய் இருநூறாண்டு களுக்குப்பின் ரோமாபுரிச் சக்கரவர்த்தி கான்ஸ்டண்டைனால் உருவாக்கப்பட்டது தெரியுமா?" என்றார் டாக்டர் சிம்ஸன். "கான்ஸ்டண்டைன் அதற்காக ஒரு நிபுணர்குழுவை அமைத்தார். ஓவியர்கள் இறையியலாளார்கள் மற்றும் ராஜதந்திரிகள் அடங்கிய சபை. அந்த சபை கடைசியில் முடிவுசெய்தது. கான்ஸ்டண்டைனின் இளவயது முகம்தான் பொருத்தமானது, பயனுள்ளது என்று. நாம் இப்போது வணங்கும் இந்த முகம் ரோமச்சக்கரவர்த்தியின் முகம். மெல்லிய நீண்ட இத்தாலிய முகம், சிறிய உதடுகள், நீலக்கண்கள்."

"அது நம் மீட்பரின் முகம்." என்றாள் திருமதி பிரவுன் ஏதும் புரியாமல். "அவர் ஏழைகளைக் காக்கச் சிலுவையில் இறந்தார். அவரது புனித ரத்தத்தின் ஒரு துளியையாவது அருந்தாமல் மனிதர்களுக்குப் பாவமீட்பு இல்லை"

"உண்மை. ஏசுவைத் துதிப்போம்" என்றான் காப்டன் சாம், பின் ஒரு மிடறு அருந்திக்கொண்டான்.

"அப்படியென்றால் ஏசு எப்படி இருந்திருப்பார்?" என்று மாவட்ட நீதிபதி கேட்டார்.

"ஏசு ஒரு யூதர். அந்த வரலாற்றை எவரும் மறைக்க முடியாது. ஐரோப்பாவில் வந்துகுடியேறி இனக்கலப்படைந்த யூதர்களைப் பார்க்காதீர்கள். ஆசியா மைனரில் உள்ள அசல் யூதர்களைப் பாருங்கள். அவர்கள் ஆபிரகாம் மற்றும் தாவீதின் வழிவந்தவர்கள். அவர்கள் பாலைவனத்தில் சுட்டெரிக்கும் வெயிலில் தலைமுறை தலைமுறையாக வாழும் மக்கள். அவர்கள் இன்றுகூட எப்படி இருக்கிறார்கள்? சுருட்டைத் தலைமுடி, கரிய தோல், கருமையான பெரிய கண்கள், பெரிய உணர்ச்சிகரமான வாய்."

"ஓ. அப்படி இல்லை. ஓ" என்றாள் திருமதி பிரவுன் "நமது மீட்பர் ஏசு. அவரை நாம் மைக்கேலஞ்சலோ ஓவியங்களில் காண்கிறோம்"

"ஆம். போப்பாண்டவர்கள் வரையச்செய்த பல்லாயிரம் ஓவியங்கள் வழியாக ஏசு வெள்ளையராக ஆக்கப்பட்டார். அவர் உண்மையில் ஒரு கறுப்பர்" டாக்டர் சிம்ஸன் முன்னால் குனிந்தார் "அவர் எப்படி இருந்திருப்பார் தெரியுமா? இதோ ஈசல்களைப்போல பஞ்சத்தில் சாகிறார்களே இந்த கரிய மக்களைப்போல! ஆமாம்"

"முட்டாள்தனம்!" என்றார் மாவட்ட நீதிபதி "இவர்கள் தீண்டப்படாத மக்கள்"

"கனம்தங்கிய மாவட்ட நீதிபதி அவர்களே, ஏசு பிறக்கையில் யூதர்களும் தீண்டப்படாத இனம்தான். ஏன் இப்போதுகூட"

"நாம் ஏசுவின் ரத்தத்தைப்பருகி ஆன்மாவை தூய்மை செய்துகொண்டவர்கள்." என்று அப்பால் இருந்து ஒரு வெள்ளையர் கத்தினார். "ஏசுவைத் துதிப்போம்"

டாக்டர் தன் மதுக்கிண்ணத்தைத் தூக்கிக் காட்டினார். "நான் ஷெல்லியின் புனித ரத்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறேன்"

அந்த வெள்ளையர் 'ஹோ ஹோ' என்று உரக்கச் சிரிக்க டாக்டர் சிரித்தபடி கண்ணடித்தார்.

திருமதி பிரவுன் "மது நம்மை மதநிந்தனை செய்ய வைக்கிறது. இந்த நாசமாய்ப்போன தேசத்தின் கிறுக்கு பிடிக்கச் செய்யும் வெயில்வேறு."

"ஃபாதர் சைமன் கோடைக்காலத்தில் ஓர் இளைஞனை கூடவே வைத்துக் கொள்கிறார். அவன் அவர்மேல் அரைமணி நேரத்துக்கு ஒருமுறை ஒரு பானையில் இருந்து குளிர்நீரை மொண்டு ஊற்றிக்கொண்டே இருப்பான்"

"ஆ! அவன் அவரது ஆன்மாவைக் குளிரச்செய்கிறான். அஹ்ஹஹ்ஹஹா!" என்று கார்ட்டர் சொல்லி வெடித்துச் சிரித்தான். அனைவரும் சிரித்தார்கள்.

"ஆனால் மேஜர் பைர்ன், நீங்கள் சர்ச்சுக்கு போகாததில் ஃபாதர் சைமனுக்கு மிகவும் வருத்தம்" திருமதி பிரவுன் சொன்னாள். "என்னிடம் புகார் சொன்னார். நான் சொன்னேன், அவர் ஒருவேளை இங்கே ஒரு பெண்ணைக் கண்டுபிடிக்கக்கூடும், அப்போது தேடிவந்துதானே ஆகவேண்டும் என்று"

எட் கார்ட்டர் தன் கோப்பையைத் தூக்கி "மேஜர் பைர்ன் கண்டுபிடிக்கபோகும் சிமாட்டிக்காக" என்று சொன்னான். "ஆமாம்", "ஆமாம்", "ஓ", "அற்புதம்", "உண்மையிலேயே" என்று விதவிதமாகக்கூச்சலிட்டுக்கொண்டு அவர்கள் கோப்பைகளை முட்டிக்கொண்டார்கள். போதைச்சிரிப்புகள், போதைக்குழறல்கள்.

டாக்டர் சிம்ஸன் "உண்மையில் வெள்ளையானை என ஒன்று கிடையாது" என்று ஆரம்பித்தார் "அது ஒரு தோல் குறைபாடு. அந்த யானை ஒரு 'அல்பினோ'. அதற்கு உயிரணுக்கள் இருக்காது. மயில்களிலும்கூட அப்படி 'அல்பினோக்கள்' உண்டு"

"வெள்ளையானை நரகத்துக்குப் போகட்டும்" என்று சொல்லி எட் கார்ட்டர் உரக்கச்சிரித்தான். "நாசமாய்ப்போன

வெள்ளையானைகளுக்காக" என்று சொல்லி அவன் கோப்பையை மீண்டும் நிறைத்து மேலே தூக்கினான். கூட்டம் சிரித்தது. டாக்டர் சிம்ஸன் தன் பைப்பைப் பற்றவைத்துக் கொண்டார். உடனே கலெக்டரின் மனைவி தன் தங்கத்தாலான சிகரெட் டப்பாவை எடுத்துத் திறந்து தங்கநிறத் தாளில் சுருட்டப்பட்ட சிகரெட் ஒன்றை எடுத்தாள். காப்டன் அதை பவ்யமாகப் பற்றவைத்தான்.

இரவு நெடுநேரமாகியிருக்கவேண்டும். கூடம் முழுக்க விருந்தினர் பலர் சிறு குழுக்களாக அமர்ந்து குடித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் சீட்டாடினார்கள். சிலர் புகை பிடித்தபடி சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். பெரும்பாலான வெள்ளையர்கள் மலைகளில் எஸ்டேட்டுகளை அமைத்துக்கொண்டிருந்த பிளாண்டர்கள். ஒருவர் திருநெல்வேலியில் இருந்து வந்த மிஷனரி. இந்தியர்கள் அனைவருமே குத்தகைதாரர்கள் அல்லது வக்கீல்கள். வெள்ளையர்கள் தங்கள் கோட்டுகளைச் கழற்றி நாற்காலி கைகளில் மாட்டிக்கொண்டு கையில்லாத ஜாக்கெட்டுடன் அமர்ந்திருந்தார்கள். ஆனால் இந்தியர்கள் எல்லாருமே முழுக்கோட்டின் கைகளைக்கூடப் பித்தான் அவிழ்க்காமல் விரைப்பாக அமர்ந்திருந்தார்கள். வெள்ளையர் பேசும் சொற்களைக் கண்களை இடுக்கிக்கொண்டு கூர்ந்து கவனித்தார்கள். அப்போதுதான் அவர்களுக்குப் புரிகிறது என்று தெரிந்தது. பிறர் சிரித்தபோது அவர்கள் ஒரு கணம் கழித்து சேர்ந்துகொண்டார்கள். அவர்களின் வாய் மட்டும் சிரிக்க கண்கள் சங்கடமாக அலைபாய்ந்தன.

ஏய்டன் கோப்பையைக் காலிசெய்துவிட்டு எழுந்தான். சட்டையை இழுத்துவிட்டபடி மெல்ல நடந்தான். சிறிய தள்ளாட்டமிருந்தது. வழியில் அமர்ந்திருந்த ஒரு வயதான வெள்ளையர் "மாலைவணக்கம் மேஜர் பைர்ன். என்னுடன் ஒருகோப்பை ஷாம்பேய்ன் அருந்துங்கள்" என்றார். "கண்டிப்பாக." என்று சொன்னபடி ஏய்டன் கடந்துசென்றான்.

கம்பிகள் இல்லாத பெரிய சன்னலுக்கு வெளியே தூரத்தில் இருண்ட வானுக்குக் கீழே இருட்டாலானவைபோல

மலைகள் தெரிந்தன. கிறுக்கல்போல வானில் கோடிழுத்துக் கீழே கருமையைப் பூசிவிட்டதுபோல. அவன் மலைகளில் வெள்ளைநிறமான எதையோ கவனித்தான். ஒரு பிரம்மாண்டமான மரமா? இல்லை புகை. ஆமாம் அது அருவி. வெள்ளை நிறமான அருவி ஒன்றின்மீது ஒன்றாக இறங்கிக்கொண்டிருந்தது. வானில் ஓர் ஒற்றை நட்சத்திரம் மட்டும் நின்றது.

ஏய்டன் சுருட்டைப்பற்றவைத்துக்கொண்டான். அதன் காட்டமான புகையை உள்ளே இழுத்து நுரையீரலை நிரப்பி மெல்ல வெளியே ஊதினான். திருமதி கார்ட்டர் கையில் கோப்பையுடன் அவனருகே வந்தாள். "சிலர் தனியாகத்தான் புகைபிடிப்பார்கள். இல்லையா?" என்றாள்.

"ஆமாம்" என்று ஏய்டன் புன்னகை செய்தான்.

"எனக்குச் சுருட்டு வாசனை பிடிக்கும்." என்றாள். "போர்ச்சுக்கீசிய வணிகர்கள் கொண்டுவரும் சுருட்டுகளுக்குத் தனி வாசனை உண்டு. அந்த மண்ணின் வாசனை. நீங்கள் தென்னமெரிக்கா சென்றிருக்கிறீர்களா?"

"இல்லை" என்றான் ஏய்டன்.

"வெயில்தான் அங்கும் ஆனால் அங்கே மண்மீது வெயிலடிக்கும்போது புகையிலை வாசனை வரும். இங்கே பசுவின்சாணிவாடை" என்றாள்.

ஏய்டன் புன்னகைசெய்தான். 'இவள் என்னை இழுக்க முனைகிறாளா' என்று எண்ணிக்கொண்டான்.

"நான் நீங்கள் சொன்னதைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்" என்றாள் திருமதி கார்ட்டர் "அதற்கு என்ன அர்த்தம்?"

"எதற்கு?"

"நான் நீங்கள் ஏன் சர்ச்சுக்கு வரவில்லை என்று கேட்டேன்."

"ஆமாம்"

"நீங்கள் சொன்னீர்கள். உங்களுடைய ஏசுவை ஒரு வெள்ளையானை மிதித்துக் கொன்றுவிட்டது என்று"

"அப்படியா சொன்னேன்?"

"ஆமாம். நான் அதை ஷெல்லியின் கவிதை என்று நினைத்தேன். நீங்கள் கவித்துவமாகத்தான் ஏதோ சொன்னீர்கள் இல்லையா?"

"ஆமாம்" என்றான் ஏய்டன் "மது உயர்ந்த கவித்துவத்தை அளிக்கிறது"

"கண்டிப்பாக" என்று திருமதி கார்ட்டர் சிரித்தாள். அவளுடைய இரண்டு பற்கள் வரிசைமாறி இருந்தன. "உங்களுக்கு ஷெல்லியின் கவிதை பிடிக்குமா?" என்றாள்.

"இல்லை" என்றான் ஏய்டன்.

"ஏன்? இளைஞர்களுக்கெல்லாம் அவரது கவிதைதானே பிடித்திருக்கிறது?"

"நான் இளைஞன் இல்லை"

"ஓ. நீங்கள் அதைச் சொல்லக்கூடாது." என்று அவள் சிரித்தாள். "நீங்கள் இளமையானவர். உண்மையிலேயே. நீங்கள் எமிலியை சந்திக்கவேண்டும். என்னுடைய தங்கை. இங்கே மிஷனரி பள்ளியில் பணியாற்றுகிறாள். இனிமையானவள்"

"கண்டிப்பாக"

"நீங்கள் ஏன் வரும் ஞாயிற்றுக்கிழமை எங்கள் வீட்டில் உணவருந்தக்கூடாது? இங்கே மலையில் கிடைக்கும் பன்றிக் குட்டிகள் உண்மையிலேயே சுவையானவை"

"பார்க்கிறேன்"

சுருட்டுக்கட்டையைப் புகைத்தொட்டியில் போட்டுவிட்டு ஏய்டன் நடந்தான். அவள் அவனுடன் நடந்தபடி, "எமிலி ஷெல்லியின் பக்தை. எனக்கும் ஒருகாலத்தில் ஷெல்லிதான் மிகவும் பிடித்த கவிஞன். 'வெர்ட்ஸ்வர்த்'தை நான் வெறுத்தேன். ஆனால் இங்கே இந்தக் கடவுள் கைவிட்ட வெப்பநாட்டுக்கு வந்தபின் அவரது வர்ணனைகள் எனக்குக் கடவுளைப்பற்றிச் சொல்வது போல ஒலிக்கின்றன. 'தனித்த அறுவடைப்பெண்' வாசித்துவிட்டு ஒருநாள் நான் அழுதேன்" என்றாள்.

மீண்டும் ஏய்டன் வந்து அமர்ந்துகொண்டான்.

தீத்தாரப்ப முதலி "கண்டிப்பாக அது மிகப்பெரிய திட்டம். எல்லாருக்கும் லாபகரமானது. குறிப்பாக இந்தக் காலகட்டத்தில் ஏராளமான மனித உழைப்பு குறைந்த கூலிக்குக் கிடைக்கும்போது அதைவிட லாபகரமான ஒன்று கண்டிப்பாக இல்லை" என்றார்.

ஏய்டன் "என்ன?" என்றான்.

"நேற்று முன்தினம் கவர்னரின் முக்கியமான அறிவிக்கை வெளிவந்திருக்கிறது. மதராசப்பட்டினத்தில் ஒரு பெரிய கால்வாய் வெட்டப்போகிறார்கள். அடையாற்றை அப்படியே கூவத்துடன் இணைக்கிறார்கள். மொத்தம் எட்டு கிலோ மிட்டர் தூரம். அதை புலிக்காட் ஏரியுடன் இணைக்கிறார்கள்" கார்ட்டர் சொன்னார்.

"இல்லை. அந்த ஏரியின் பெயர் வேறு ஏதோ" என்றார் டாக்டர் சிம்ஸன்.

"அந்த ஏரி அதற்கு மேலே உள்ள ஏரிகளுடன் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளது. அப்படியே விசாகப்பட்டினம் வரை ஒரு நீர்வழிப்பாதை உருவாகும். ஐநூறுமைல்வரை அந்த நீர்வழிப்பாதை போகும் என்கிறார்கள்"

"ஐநூறு மைலா. அது அதிகம் என்று நினைக்கிறேன்" என்றார் டாக்டர்.

"அதனால் என்ன லாபம்? அப்பால் கடல் அதைவிட விரிவாக கிடக்கிறதே" என்றான் காப்டன் "கடல்வழியாகப் பெரும் கப்பல்களே போகமுடியுமே?"

"லாபமா? லாபம் என்றா கேட்கிறாய்?" என்று மாவட்ட நீதிபதி முன்னால் குனிந்தார். "லாபம் டியூக் ஆஃப் பக்கிங்ஹாமுக்கு. அவரது அப்பா சேர்த்துவைத்த பெரும் கடன்கள் எல்லாம் அடையும். அவர் ஊருக்குத்திரும்பிப் பெரும் செல்வத்துடன் பிரபுக்கள் சபையில் அமரமுடியும். ஏன் பணம்செலவிட்டுத் தேர்தலில் போட்டியிட்டு அமைச்சராகக்கூட ஆகமுடியும். இந்தக் கால்வாய்த்திட்டத்தின் செலவு எவ்வளவு தெரியுமா? முப்பது லட்சம். ஆமாம்"

"முப்பது லட்சமா? அந்தப்பணத்துக்குச் சென்னப் பட்டினத்தையே விற்றுவிடலாமே" என்றார் கார்ட்டர்.

"வாங்க ஆளிருந்தால் ரஸ்ஸல் விற்றும் விடுவார்" என்றார் மாவட்ட நீதிபதி "அதில் டியூக்குக்கு ஐந்துலட்சமாவது மிஞ்சும். ஐந்து லட்சம்! ஆமாம்"

"நானென்றால் அந்தப்பணத்துடன் அமெரிக்காவுக்கு ஓடிப்போய்விடுவேன்" என்றான் காப்டன்.

"அசட்டுத்தனம்" என்றார் மாவட்ட நீதிபதி."அவர் அரசியலுக்குத்தான் போவார். அமைச்சராவார். கண்டிப்பாக"

"அமைச்சராவதற்கு எப்படியும் நூறு பெருவிருந்து களாவது தேவைப்படும். ஒரு விருந்து நடத்தும் செலவில் நாம் இங்கே ஒரு மாகாணத்தையே விலைக்கு வாங்கலாம்." என்றான் கார்ட்டர்.

"சிஷோம் மதராஸப்பட்டினத்தில் இருபது கட்டிடங்களைக் கட்டப்போகிறார். அவற்றுக்கு எப்படியும் இருபதுலட்சம் ஆகிவிடும் என்கிறார்கள்."

"இந்தப்பஞ்சம் ஆரம்பித்ததும்தான் சென்டிரல் ரயில் நிலையத்தைக் கட்டினார்கள். லாயம் போல நீளமான கட்டிடம். எனக்கு அதைப்பார்த்தால் குமட்டும்" என்றாள் திருமதி கார்ட்டர்.

கையில் புகையும் சுருட்டுடன் தலைகளுக்கு மேல் எட்டிப் பார்த்துத் திருவாளர் பிரவுன் புன்னகைசெய்தார். "இந்தக் கால்வாய் எல்லாம் ஒரு கட்டுமானமே இல்லை நண்பர்களே. சென்னப்பட்டினம் துறைமுகத்தை விரிவாக்கிக் கட்டப் போகிறார்கள். அதற்கு எண்பது லட்சம் செலவு என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்"

சில நிமிடங்கள் மேஜைக்குச் சுற்றும் அமைதி நிலவியது.

திருமதி கார்ட்டர் "என் மீட்பரே!" என்று நெஞ்சில் கைவைத்தார்.

"டியூக்கின் விசுவாசத்துக்கும் சேவைக்கும் பரிசாக இந்த மதராஸ்ராஜதானியின் ஆளுநர் பதவியை அளித்திருக்

கிறார்கள். இன்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே பர்மாவின் ஜெனரலாக இருப்பதும் மதராஸ் ஆளுநராக இருப்பதும்தான் மிகமிக லாபகரமானவை. டியூக்குக்கு மூன்று வருடங்கள் கொடுத்திருக்கிறார்கள்" மாவட்ட நீதிபதி சொன்னார்.

கலெக்டரின் மனைவி "அவர் எப்போதும் அதிருஷ்டசாலி" என்றாள்.

"சீமாட்டியே, மாட்சிமை தங்கிய பேரரசியின் ஆட்சியில் பிரபுக்கள் என்றுமே அதிருஷ்டசாலிகள்" என்றார் பிரவுன்.

"ரஸ்ஸல்! இதில் ரஸ்ஸலின் பங்கென்ன?" என்றார் கார்ட்டர்.

"அவர்தான் ஈரலையும் இதயத்தையும் உண்ணப் போகிறவர்." மாவட்ட நீதிபதி சிரித்தார். "அவர்தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்தவர். இவ்வளவுபெரிய செலவைச்செய்ய டியூக் தயங்கினார். ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் குடைந்து விடுவார்கள் என்று நினைத்தார். ரஸ்ஸல் ஏதோ காப்டனை அனுப்பி பஞ்சத்தைப்பற்றி ஒரு உருக்கமான அறிக்கையை எழுதி வாங்கினாராம். அதை டியூக்குக்குக் காட்டி அவர் மனதை மாற்றினாராம். இப்போது இந்த பிரம்மாண்டமான திட்டங்களெல்லாம் எதற்காக வருகின்றன என்கிறார்கள் தெரியுமா? பஞ்சத்தால் சாகும் கருப்பு மனிதர்களுக்கு உணவு கொடுப்பதற்காகவாம். ஆமாம், பஞ்ச நிவாரண நடவடிக்கை! பஞ்ச நிவாரணத்தையே இவ்வளவு லாபகரமாக அமைத்த ரஸ்ஸல் லண்டனில் இருக்க வேண்டியவர் என்கிறார்கள்"

ஏய்டன் மீண்டும் ஒரு கோப்பை நிறைய மதுவை ஊற்றி குடித்தான். மூக்குவரைக்கும் மது ஏறிவிட்டதுபோல. சற்று எக்கியபோதே மூக்கில் மது காரமாக வழிந்தது. கைக்குட்டையால் மூக்கை அழுத்திப் பிழிந்தான். மூக்குச்சதை எரிந்தது.

திருமதி கார்ட்டர் தன் கோப்பையை நிரப்பப் புட்டியை எடுத்தாள். அதில் மிச்சம் ஏதும் எஞ்சவில்லை. அவள் "பட்லர்" என்றாள்.

இளம் கறுப்புப்பட்லர் வந்து பணிந்தான். அவள் கோப்பையைக் காட்டினாள். அவன் மெல்ல அதை நிரப்பி

னான். பின்பு கம்பளி உறை போடப்பட்ட மென்மரத்தாலான பனிக்கட்டிப் பெட்டியைத் திறந்தான். உள்ளே பனி உருகிய நீர்தான் இருந்தது.

"மன்னிக்கவும் சீமாட்டியே. நான் உடனே கொண்டு வருகிறேன்" என்று அவன் விலகிச்சென்றான்.

"அவர்கள் அந்தக் கால்வாய்க்கு அவர் பெயரையே வைப்பார்கள். 'பக்கிங்ஹாம் கால்வாய்'. கம்பீரமாக ஒலிக்க வில்லை? அதைக்கேட்டு டியூக் இளித்துக்கொண்டே அமர்ந் திருப்பார். அவருக்கு எலும்புகளையும் தோலையும் கொடுத்து விட்டு அவர்கள் இதயத்தையும் ஈரலையும் உண்பார்கள்"

திருமதி கார்ட்டர் ஏய்டனிடம் "இந்தப் பனிக்கட்டி அமெரிக்காவில் நியூஇங்கிலாந்தில் இருந்து வருகிறது என்றார்கள். பாஸ்டனில் இருந்து." என்றாள்.

"ஆமாம்" என்றான் ஏய்டன். அவனுக்கு உக்கிரமான ஒரு ஏப்பம் வந்தது. மூக்குவழியாக மீண்டும் மது சொட்டியது. அவன் கைக்குட்டையே ஈரமாகச் சொட்டியது.

டாக்டர் சிம்ஸன் "டியூடர் அண்ட் கம்பெனியை மூடப்போகிறார்கள் என்றார்களே?" என்றார்.

ஸ்ரீனிவாச அய்யங்கார் "மூடத்தான் வேண்டும். முரஹரி அய்யங்கார் அதில் கண் வைத்துவிட்டார். மெல்ல அதை திவாலாக்கி அந்தக் கட்டிடத்தை ஏலத்தில் எடுத்துச் சொந்தமாக்கிக் கொள்வார். அவர் மலைப்பாம்பு போல. மெல்ல மெல்லத்தான் விழுங்குவார். மலைப்பாம்பு இரையை விழுங்குவதைப் பார்த்திருக்கிறீர்களா?" என்றான்.

"இல்லை" என்றாள் செல்வி ஜேன்.

"சொக்கம்பட்டி ஜமீன்தார் நிறைய மலைப்பாம்புகளை வளர்க்கிறார். நான் ஒருமுறை கூட்டிச்சென்று காட்டுகிறேன்" என்றான் காப்டன் சாம்.

"மலைப்பாம்பு இரையை விழுங்குவதைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். அந்த இரை அதுவே கஷ்டப்பட்டு

திமிறி தன்னை உள்ளே செலுத்திக் கொள்வதாகவும் மலைப்பாம்பு விழிபிதுங்குவதாகவும் தோன்றும்"

"நியூ இங்கிலாந்தின் ஏரிகள் மிகமிகச் சுத்தமானவை என்கிறார்கள்" என்றாள் திருமதி கார்ட்டர். "அந்த நீருக்குத் தனிச்சுவை உண்டு என்கிறார்கள். எனக்கு அப்படித் தெரிய வில்லை. ஆனால் அந்தப் பனிக்கட்டியை மதுவில் போட்டுக் கொள்ளும்போது ஒரு பரவசம் வருகிறது. எட்டாயிரம் மைல்களுக்கு அப்பால் அமெரிக்காவிலிருந்து அது வந்திருக்கிறது என்று நினைக்கும்போது.வால்டன்ஏரி.வால்டன் ஏரியை நினைத்தாலே உடம்பு குளிர்வது போலிருக்கும்"

டாக்டர் சிம்ஸன் ஏய்டனைப் பார்த்தார். "வால்டன் என்னும்போது உங்களுக்கு ஏதாவது மணியோசை கேட்கிறதா இளம் நண்பரே?"

"இல்லை" என்றான் ஏய்டன்.

"ரால்ஃப் வால்டோ எமர்ஸன். அது எமர்சனின் சொந்த ஏரி. அவரது சிந்தனைகள் அந்த ஏரியைப்போல. மிகமிகத் தூய்மையானவை. கனவுகள் நிறைந்தவை. அவரது சொற்கள் என் மனதில் வசந்தகால இளவெயிலை நிறைக்கின்றன. அவரது நண்பர் டேவித் தோரோ. அவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். துரதிருஷ்டவசமாக நம் இங்கிலாந்தின் இதழ்கள் அவர்களைப்பற்றி எதுவும் எழுதுவதில்லை. பிரிட்டனில் இருந்து இரண்டாயிரம் மைல் தொலைவில் அங்கே அமெரிக்காவில் மெல்லமெல்லப் பனி உருகிக்கொண்டிருக்கிறது" டாக்டர் சிம்சன் சொன்னார்.

திருமதி கார்ட்டர் ஒன்றும் புரியாமல் "ஆமாம், அவர்களுக்கு மார்ச்சில்தான் வசந்தம்" என்றாள்.

சிறிய முகச்சுளிப்புடன் அவளைப் பார்த்துவிட்டு டாக்டர் சிம்ஸன் தொடர்ந்தார்." "இந்த உலகம் முழுக்க இதுவரை ஒரு பெரும் உறைபனிக்காலம் பரவியிருந்தது. சிந்தனைகள் உறைந்து நின்றுவிட்டன. கனவுகள் உறைந்து நின்றுவிட்டன. இலட்சியங்கள் உறைந்து கல்லாகிவிட்டிருந்தன." அவர் தன் விரலை ஆட்டி தீவிரமான முகத்துடன் சொன்னார் "உறைபனி

யின் உள்ளே இளம்சூரியன் உதிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? பனிக்கட்டித் துண்டுகள் போடப்பட்ட கண்ணாடிபாத்திரத்திற் குள் ஒரு துளி ரத்தம் விழுந்து பரவுவது போலிருக்கும்"

ஏய்டன் அவரையே பார்த்தான். அவர் போதையில் மெல்ல ஆடிக்கொண்டிருந்தார். கனத்த இமைகள் எழுந்து எழுந்து சரிந்தன "வசந்தம் வரும் அழகு. என்னுடைய ஊர். அங்கே பனித்துருவல்களும் பனிப்பாளங்களும் மூடிய காடுகளுக்கு அப்பால் மெல்ல மெல்லச் சூரியன் ஒளிகொண்டு எழுவான். பனி உருகிக் கசிந்து சொட்டி வழியும். உருகிய பனியின் கூரிய விளிம்புகள் வாள்நுனி போலிருக்கும். சல்லிக் கிளைகளைக் கவ்வியிருந்த வெள்ளிமுத்துக்கள் ஒவ்வொன்றாக பிடியை விட்டு மண்ணில் உதிரும். பின்பு பாளங்கள் பெயர்ந்து கண்ணாடி ஒலியுடன் உடைந்து சரியும். மெல்லிய சல்லிக் கிளைகள் ஆசுவாசம் கொண்டு மேலே எழும். உறைந்து கறுத்த மரப்பட்டைகளுக்குள் உயிரின் ஓட்டம் வேகம்பிடிக்கும். கிளைகளின் நுனிகளில் பாசிபடர்ந்ததுபோலப் பச்சைநிறம் தென்படும். ஓரிருநாட்கள்தான். மரங்கள் முழுக்க பசுந்தளிர் வந்திருக்கும். தரை முழுக்க பசும்புற்கள் எழுந்திருக்கும். பாறை யிடுக்குகளில் இருந்து சிற்றோடைகள் சூரியஒளியே திரவமாகி வழிவது போல நெளிந்து குலுங்கி ஓடும். ஆ, வசந்தம்." அவர் கையை மேலே தூக்கினார் "வசந்தம்! "வசந்தம்! ஆம், வசந்தம்."

திருமதி கார்ட்டர் கிச்சுகிச்சு மூட்டப்பட்டவளைப் போல சிரித்தாள். டாக்டர் சிம்ஸன் அவளை வெறித்துப்பார்த்தார்.

"சிரிக்கக்கூடாது. சிரிக்கக்கூடிய விஷயம் இல்லை இது" என்றார் டாக்டர் சிம்ஸன். "வசந்தம் வந்துகொண்டிருக்கிறது. பாஸ்டனில் இருந்து உலகமெங்கும் சூரியனின் வெம்மை படர்கிறது. பனி உருகுகிறது. இளவெயில். மனிதாபிமானத்தின், கருணையின், சமத்துவத்தின், நீதியின் இளவெயில். அடிமை களின் ரத்தத்தால் கட்டப்பட்ட இருண்ட மாளிகைகள் எல்லாம் அடித்தளம் நொறுங்கிச்சரிகின்றன. வேறு ஓர் உலகம் வருகிறது. புத்தம்புதிய உலகம். நம் குழந்தைகளின் உலகம். அறிவியலும் மெய்யியலும் ஒன்றேயான பொன்னுலகம்."

திருமதி கார்ட்டர் வாயைப்பொத்திச் சிரித்தபடி ஏய்டனின் தோள்மேல் சாய்ந்தாள். அவளுடைய கனத்த முலைகள் அவன் தோளில் அழுந்தின. டாக்டர் சிம்ஸன் அவளை உறுத்துப்பார்த்தார்.

பட்லர் கம்பளிக் குடுவையுடன் வந்தான். ஸ்ரீனிவாச அய்யங்கார் "இங்கே. சீக்கிரம். எவ்வளவு நேரமாக காத்திருக்கிறார்கள் இவர்கள்" என்றார்.

பட்லர் "மன்னிக்கவேண்டும்" என்று சொன்னபடி குடுவையைத் திறந்து மரக்கிடுக்கியால் பனிக்கட்டி உடைசல்களை அள்ளி அள்ளிக் கோப்பைகளில் போட்டான். மெல்லிய மணியோசையுடன் அவை கண்ணாடிக் கிண்ணங்களில் விழுந்தன. ஏய்டன் தன்னுடைய கோப்பையை எடுத்தான். மறுகையால் மதுக்குப்பியை எடுத்தபோது கவனித்தான். ஒருகணம் உடல் அதிர்ந்தது. கண்களைக் கொட்டி மீண்டும் கவனித்தான். அந்த பனிக்கட்டிச் சில்லுகளுக்குள் மெல்லிய சிவந்த தீற்றல்கள் இருந்தன. சிவந்த சின்னஞ்சிறிய மலரிதழ்கள் போல.

"ஓ நோ" என்றான் அவன் உரக்க. "வேண்டாம்! வேண்டாம்!" நடுங்கும் கையை மேலே தூக்கினான்.

அத்தனைபேரும் திரும்பிப் பார்த்தார்கள். எல்லா கைகளிலும் கோப்பைகள் இருந்தன.

"என்ன? என்ன மேஜர்?" என்றார் கார்ட்டர். அதற்குள் ஏய்டன் குமட்டி அதிர்ந்தபடி மேஜையில் குப்புறக் கவிழ்ந்தான். கைக்குட்டையால் வாயை அழுத்திக்கொண்டான்.

மாவட்ட நீதிபதி "கடவுளுக்கு நன்றி, ஒருவழியாக அவருக்கு போதை ஏற ஆரம்பித்துவிட்டது" என்றார்.

ஏய்டன் நிமிர்ந்து பார்த்தான். "ஓ!" என்றான். தளர்ந்து தளர்ந்து சரியும் இமைகளைத் தூக்கி நீர்ப்படலம் மறைத்த கண்களால் கூர்ந்து பார்த்தான். ஆம், அத்தனை கிண்ணங்களிலும் பனிக்கட்டிகளில் செங்குருதியின் தீற்றல் இருந்தது. கடைசிக்கோப்பை வரை அது தெளிவாகத் தெரிந்தது. 'கனவில்லை, பிரமை இல்லை'.

கார்ட்டர் மதுவையும் சோடாவையும் ஊற்றி கோப்பையைக் கையில் எடுத்தான். கோப்பைகளில் பொன்னிற மது சுழன்றது. பொன்னும் குருதியும். ஆம்.

காப்டன் சாம் "உலகை ஆளும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் துக்காக!" என்று கோப்பையைத் தூக்கினான். கண்ணாடிகள் முட்டிச் சிரித்தன. அவர்கள் மதுவை விழுங்கும் ஒலிகள் கேட்டன.

டாக்டர் சிம்ஸன் "ஆம். இளஞ்சூரியன். ரத்தம்போலச் சிவந்த சூரியன்!" என்றார். ஒற்றை விரலைத் தூக்கிக் காட்டினார்.

திருமதி கார்ட்டர் "அன்பே. உனக்கு இனிய இரவு இது" என்று தன் கோப்பையை எடுத்துக்கொண்டாள். ஏய்டன் பார்த்தான். அவனுடைய கோப்பையில் மது பனிக்கட்டியை மேலே சற்று மேலே தூக்கி பின்பு கரைத்து உள்ளிழுத்துக் கொண்டிருந்தது.

"உனது மது அன்பே" என்று திருமதி கார்ட்டர் எடுத்து நீட்டினாள்.

'ஆம், இது என் கோப்பை'. ஏய்டன் அதை எடுத்தான். கண்ணை மூடிக்கொண்டு ஒரே மூச்சில் இழுத்து விழுங்கினான்.

முற்றும்



உலகவரலாற்றின் மாபெரும் பஞ்சங்களில்
ஒன்றால் இந்தியாவின் கால்வாசிப்பேர்
செத்தொழிந்த காலம்.
ஏகாதிபத்தியத்தால் அம்மக்கள்
அழித்தொழிக்கப்பட்டார்கள்.
மறு பக்கம் நம்முடைய நீதியுணர்ச்சியும்
அவர்களைக் கைவிட்டதென்பதும்
வரலாறே. நாம் அத்தனைபேரும் ஏதோ
ஒருவகையில் அந்த அழிவுக்குக்
கூட்டுப்பொறுப்பேற்றாக வேண்டும்.

இந்நாவல் ஒருவகையில் அனைவரையும்
அந்தக் கூண்டில் நிறுத்துகிறது.
எங்கே நம் நீதியுணர்ச்சியை நாம் இழந்தோம்
என இன்றாவது மறுபரிசீலனை
செய்துகொள்ள வேண்டும்.

- ஜெயமோகன்



Fiction

ISBN 819042547-1
9788190425476

எழுத்து

₹ 400/- US $ 20